இளையோர் உளவியல்

கார்ல் சி. காரிசன்

1657

தமிழாக்கம்

தி. இரா. அரங்கராசன்

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை—61

இளையோர் உளவியல்-II

(PSYCHOLOGY OF ADOLESCENCE-II)

ஆசிரியர்

கார்ல் சி. காரிசன்,

கல்வித்துறைப் பேராசிரியர், ஜியார்ஜியா பல்கலைக் கழகம்.

தமிழாக்கம்

தி. இரா. அரங்கராசன், எம்.ஏ.,

உளவியல் விரிவுரையாளர்,

அரசினர் கலைக் கல்லூரி, கோவை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—February 1965.

B.T.P. No. 61

Psychology of Adolescence - II

Karl C. Garrison

Translation :

T. R. Rangarajan

© Bureau of ~~Tamil P~~

Price Rs. 9-00

Original English Language Edition
Published by Prentice-Hall, Inc.
Englewood Cliffs, N. J.
Copyright 1956,
In the United States of America
by Prentice-Hall, Inc.

Printed by
Paari Achakam,
127, Broadway, Madras-1.

அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றுன **இளையோர் உளவியல் - II** என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 61 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 96 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ் அன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்

குறிப்பு

இந் நூலுள் காணப்படும் வளர்ச்சியைக் காட்டும் வரைபடங்கள் யாவும் அமெரிக்கத் தரங்களை அடிப்படையாகக் கொண்டவை. மூல நூலுள் காணப்படும் நிழற்படங்கள் விடப்பட்டுள்ளன.

பொருளடக்கம்

அத்தியாயம் *பக்கம்*

பகுதி IV

12. இல்லத்தில் இளையோன் **455**

இல்லச் செல்வாக்குகள்—இல்லச் சிக்கல்கள்—விடுதலை பெறுதல்: முதிர்ச்சியை நோக்கி வளர்ச்சி—அதிகாரச் சுருக்கம்—சிந்தனைக்குரிய பிரச்சினைகள்—தெரிவுசெய் நூற்பட்டியல்.

13. இளையோனும் அவனுடைய ஒப்பார்களும் **500**

இளையோனின் ஒப்பார் உறவுகள்—மாற்றுப் பால் அக்கறைகளும் செயல்களும் — இளையோர்களின் பால் வாழ்க்கை—அதிகாரச் சுருக்கமும் கருத்துரைகளும்—சிந்தனைக்குரிய பிரச்சினைகள்—தெரிவுசெய் நூற்பட்டியல்.

14. சமுதாயத்தில் இளையோன் **548**

சமுதாயம்: அதன் அமைப்பு, அதனுடைய நிறுவனம், அது இளையோன்மீது கொள்ளும் செல்வாக்கு—இளையோனின் ஓய்வுநேரச் செயல்கள்—இளையோர்களுக்கான சமுதாயத் திட்டம்—அதிகாரச் சுருக்கம்—சிந்தனைக்குரிய பிரச்சினைகள்—தெரிவுசெய் நூற்பட்டியல்.

15. பள்ளியில் இளையோன் **587**

அறிமுகம்: பிரச்சினைகளும் நோக்கங்களும்—தேவைகளும் குறிக்கோள்களும்—இளையோர்களின் பள்ளிப் பிரச்சினைகள்—தனியாள் வரலாறுகள்—அதிகாரச் சுருக்கமும் கல்விக் கருதுகோள்களும்—சிந்தனைக்குரிய பிரச்சினைகள்—தெரிவுசெய் நூற்பட்டியல்.

அத்தியாயம் *பக்கம்*

16. கல்வி, தொழில் வழிகாட்டல் **628**

கல்வியில் வழிகாட்டுதல்—தொழில் அவாக்களும் வாய்ப்புகளும்—தொழில் தேவைகளும் மனப்பான்மைகளும்—தொழில் வழிகாட்டுதல்—அதிகாரச் சுருக்கம்—சிந்தனைக்குரிய பிரச்சினைகள்—தெரிவுசெய் நூற்பட்டியல்.

17. இளமையில் குற்ற நடத்தை **686**

வரையறைகளும் விளக்கங்களும்—பாலும் இளமையில் குற்ற நடத்தையும்—நுண்ணறிவும் குற்ற நடத்தையும்—தவறான பொருத்தப்பாடுகளும் குற்ற நடத்தையும்—இல்லமும் இளங் குற்ற நடத்தையும்—சுற்றுப்புற நிலைகள்—பள்ளியும் குற்ற நடத்தையும்—அதிகாரச் சுருக்கவுரை—சிந்தனைக்குரிய பிரச்சினைகள்—தெரிவுசெய் நூற்பட்டியல்.

பகுதி V

18. இளையோர் பருவத்திலிருந்து முதிர்ச்சியடைதல் **730**

முதிர்ச்சியை நோக்கி வளர்ச்சி—இளையோர்களும் தொழில் உலகமும்—இளைஞர்களும் திருமணமும்—நிலையான வாழ்க்கை மெய்யுணர்வை வளர்த்துக் கொள்ளுதல்—அதிகாரச் சுருக்கமும் உணர்த்துபவையும்—சிந்தனைக்குரிய பிரச்சினைகள்—தெரிவுசெய் நூற்பட்டியல்.

கலைச்சொல் அகராதி **780**

ஆசிரியர் பட்டியல் **783**

பொருள் பட்டியல் **792**

இளையோர் உளவியல்

(பாகம் II)

‘இம்மை உலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர்’

—அகம் : 66.

இரண்டாம் பாகம்

பகுதி IV

12. இல்லத்தில் இளையோன்

'எல்லா இன்பக் குடும்பங்களும் ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன; ஒவ்வொரு மகிழ்ச்சியற்ற குடும்பமும் அதனுடைய தனித்த வழியிலேயே மகிழ்ச்சியற்று இருக்கின்றது.' —(டால்ஸ்டாய்)

இல்லச் செல்வாக்குகள்

இளையோர் பருவம் எனும் இம் முக்கிய பருவம் முழுவதிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டு, அது உடலியல் வகையிலும், உடலமைப்பு வகையிலும், உளவியல் வகையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி, குழந்தையை முதியோனை நிலை மாற்றுகின்றது. இவ் வளர்ச்சியின் தன்மையும் பரப்பும் முன்னைய அதிகாரங்களில் விளக்கப்பட்டுள்ளன. இதே சமயத்தில் தனியன் முதிர்ச்சியை அடையும்பொழுது, சில சமயங்களில் மிக அதிகமான உடல் வலிவுடனும், சில சமயங்களில் அதிகப்படியான விரிவடைந்த மனத்திறனுடனும், மேலும் சில சமயங்களில் அவர்கள் குறிக்கோள்கள் ஆகியவற்றின் தொடர்பிலுள்ள சமூக மையமான தன்மை கொண்டதாகவும் ஓர் உந்து தோன்றுகின்றது. இவ்வுந்து, குழந்தைப்பருவ காலத்தில் மிகவும் இயல்பானதாய்க் காணப்படுகின்ற இல்லக் கட்டுப்பாட்டினைப்பற்றிக் கவலை கொள்ளாது, உண்மை நிலையை அடைய முயல்கின்றது. குழந்தைப்பருவ காலத்திய ஓரளவு கீழ்ப்படிதலான குடும்ப உறவினின்று முழுதும் பிரிந்து செல்ல விரும்புகின்ற ஓர் உந்து இருக்கின்றது. முதியோர் வாழ்க்கைக்கு ஏற்ப, தன்னுடைய செயலும் சிந்தனையும் அதிகமான சுதந்திரத்துடன் விளங்கி, தனது திட்டங்களும் எதிர்காலமும் முதியோர் வாழ்க்கைக்குச் செல்லவேண்டும் என்ற உந்துவினால்

தனியன் செயலாற்றுகிறன்.[1] குடும்ப உறவுகளிலிருந்து இவ்வாறு பிரிந்திருத்தல் கட்டாயமாக உடல் பிரிவையும் கொண்டிருக்க வேண்டும் என்பதன்று. ஆனல், அது மனவெழுச்சிப் பிரிவினைக் குறிக்கிறது. வேறுவிதமாகக் கூறினல், இவ்வுறவுகளை ஒதுக்குதல், தனியன் தான் விரும்புகின்றவற்றையும் முதியோர் வாழ்க்கையில் சுதந்திரமாக ஆசைப்படுவதையும் பெறுவதற்குத் தடையாக இருக்கும் என்று கருதுவதனுல்தான் ஏற்படுகின்றது. இவ்வாறன ஒரு செய்முறையைக் குடும்ப ஆதிக்கத்திலிருந்து வெளிச்செல்லுதல் அல்லது உளவியல் மாற்றம் (ஒரு வழக்கத்திலிருந்து மற்றொரு வழக்கத்திற்குச் செல்லுதல்) அல்லது சுதந்திரம் அடைதல் என்று குறிப்பிடப்படுகின்றது.

இடையே இருக்கின்றவன் எப்பொழுதும் சிக்கலான சூழ்நிலையில் இருப்பான். பெற்றோர்கள் குழந்தை வளர்கின்றது என்று உணர மறுப்பதாலும், அது துரித வேகத்தில் முதிர்ச்சியடைகின்றது என்பதை உணர மறுப்பதாலும், குழந்தை இப் பருவ காலத்தில் சுதந்திரமாய் இருக்க விரும்புவதாலும் இப் பிரச்சினை சிக்கலுள்ள பிரச்சினையாக மாறிவிட்டது. ஒருபக்கம் இளையோன், அடைக்கலம் தருகின்ற இல்லத்தின் தனித்த தடைகளினின்று விடுதலைபெற ஆசைப்படுகின்றன். ஆனல், மறுபக்கம் இல்லம் அவன் ஆசைப்படுகின்ற ஆதரவையும் தற்காப்பினையும் அளிக்கின்றது. அவன் தீரச் செயல்களை விரும்புகின்றன். கிளர்ச்சி தருகின்ற கேளிக்கைகளில் ஈடுபடவும் விரும்புகின்றன். இருப்பினும், பிரச்சினைகள் தோன்றுகின்றபோது ஆதரவிற்கும் தற்காப்பிற்குமுள்ள தேவையினை உணர்கின்றன். இவ்வாறு முற்றிலும் மாறுபட்ட உந்துகள் குழப்பமான சூழ்நிலையை உருவாக்கிப் பெரும்பாலும் இளையோனை இரட்டை வேடம் போடும்படி செய்கின்றன.

துவக்க இல்லச் செல்வாக்குகளின் முக்கியத்துவம்

இளையோன் நடத்தையில் இல்லம் கொள்கின்ற செல்வாக்கு அநேகமாக பள்ளிக்குச் செல்லுமுன் உள்ள ஆண்டுகளில் தோன்றுகின்ற பழக்கங்களுடன் நெருங்கிய தொடர்புள்ளதாகும். இக்காலத்தில்தான் இல்லச் செல்வாக்குகள் உச்ச நிலையில் இருக்கின்றன. அடிக்கடி, பிற்காலத்தில் உருவாகின்ற பழக்கங்கள், முன்னர் உருவான பழக்கங்களுடன் ஒரே வழி மரபு கொண்டில்லாதிருத்தலைக் காணலாம். ஆனல், முன்னர் தோன்றிய பழக்கங்களின் செல்வாக்கினைக் குறைத்து மதிப்பிடலாகாது. பழக்கங்கள், பழக்கங்களின் அடிப்படையில்தான் உண்டாகின்றன. ஆதலின், முன்னர் தோன்ற

[1] J. M. Murray, 'The Conscience During Adolescence, Mental Hygiene, Vol. 22, 1938, pp. 400-408.

கின்ற பழக்கங்கள் அதனுடைய உருவத்தில் சிலவற்றைப் பின்னர் தோன்றுகின்றவைக்கு அளிக்கும். இப் போக்கினை ரோஷன்ஹீம் (Rosenheim) என்பவர் அளிக்கின்ற விளக்கமான பதின்மூன்று வயதுச் சிறுவனது வரலாற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம்.[2] அச்சிறுவன் அவனுடைய துவக்ககால வாழ்க்கை ஆண்டு களில் பெற்றோர் அன்பின்றி வாழ்ந்து வந்தான். இதன் காரணமாக அவன் மற்றவர்களிடம் அன்பு காட்டக் கற்றுக் கொள்ளவே இல்லை. ஆதலின், அவன் வயதுடைய சிறுவர் சிறுமி யருடன் நன்றாகப் பழக இயலவில்லை. குணப்படுத்தக்கூடிய மருத் துவமுறை வழிகாட்டலும் சில நல்ல விளைவுகளை உண்டாக்கின. ஆனால், அவனுடைய துவக்க இல்லச் சூழ்நிலையின் செல்வாக்கு நிலையாக இருந்து ஓரளவு பரவியிருந்தது. இச் செல்வாக்கு, அச் சிறுவன் சமூகத் துலங்கலில் குறைபாடு உடையவனாக இருந்ததில் குறிப்பாகக் காணப்பட்டது. இதனால், அவன் மற்றவர்களுடன் இசைவான சமூகத் தொடர்புகளை ஏற்படுத்துவதில் தோல்வி அடைந்தான். மேலும், அவன் குறிக்கோள்களிலும் நல்ல நடத் தைத் தரங்களிலும் உறுதியாக இருக்கவில்லை.

துவக்க இல்லச் செல்வாக்குகளைப்பற்றிய ஆய்வுகள் இளை யோர்களது சொந்த சமூகப் பொருத்தப்பாடுகளின் தொடர்பில், சில குறிப்பிடும்படியான சான்றுகளைக் கீழ்க்கண்ட கூற்றிற்கு அளித்துள்ளன. திருப்தியான பொருத்தப்பாடுகள், பெற்றோர் களின் கல்வி, குடும்பத்தின் அளவு, சமூகப் பொருளாதார நிலை ஆகியவற்றுடன் குறைந்த அளவு தொடர்பு கொண்டுள்ளது. ஆனால், அடிப்படை மனிதத் தேவைகளான பாசம், தற்காப்பு, அந்தஸ்து, வாழ் தொடர்பு ஆகியவற்றுடன் அதிகமான தொடர்பு கொண்டுள்ளது. ஓரளவு அகவயமான 14 வயது ஜூனியர் உயர் நிலைப் பள்ளிச் சிறுமியின் வரலாறு இசைவான இல்லச் சூழ்நிலை மனப்பான்மைகளும் அக்கறைகளும் வளர்ச்சியுறுவதற்குக் கொண் டுள்ள செல்வாக்கினைக் காட்டுகின்றது. ஆண்டர்சன் (Anderson) என்பவரால் விளக்கப்பட்ட D என்பவளுடைய வரலாறு 9 ஆவது படி வத்திலுள்ள 122 நு.ஈ., கொண்ட ஒரு பெண்ணின் வரலாறு ஆகும்.

இச் சிறுமியை, அவளது உடன் படிப்போர்கள் தானாகவே வேலைகளைத் தன்னுள்ளேயே செய்துகொள்ள விரும்புகின்றவள் என்று எண்ணினார்கள். அச் சிறுமி தன்னருகே எல்லா நேரங்களி லும் நிறைய ஆட்களை வைத்துக்கொண்டிருக்க விரும்புவதில்லை

[2] F. Rosenheim, 'Character Structure of a Rejected Child,' American Journal of Orthopsychiatry, 1942, Vol. 12, pp. 486-495.

என்றும் எண்ணினார்கள். அச் சிறுமி தான் செய்கின்றவற்றில் அக்கறை கொண்டும் இன்பமாயும் இருந்தாள் என்றும் நினைத்தார்கள். அவள் இசைவானவள், உடன் ஒத்துழைப்பவள், வகுப்பில் தானாக ஒப்பிக்க முன் வருபவள், தன்னைப்பற்றி உறுதியான எண்ணம் கொண்டவள், ஆசிரியருக்கு எந்தவிதமான தொல்லையையும் தராதவள், பொறுப்பினை ஏற்க என்றும் மறுக்காதவள், அமைதியாக வேலையைச் செய்ய விரும்புபவள், என்றும் மனவெழுச்சிச் சமநிலையை இழக்காதவள், தான் தவறாகச் செய்து விடுவோம் என்று அஞ்சி அதிக வாய்ப்புகளை எடுக்காதவள், நாணமுடையவள், அறியாதவர்கள் முன்னிலையில் எதையும் சொல்லத் தயங்குபவள் என்றெல்லாம் அவளைப்பற்றி உடன் படிப்போர் கருதினார்கள்.

'D' மிகவும் சமநிலை உள்ள ஒரு சிறுமியாகத் தோன்றினாள். (சேர்ந்து உரையாடலின்போது) அவள் எளிதாகப் பேசினாள். அடிக்கடி புன்முறுவல் பூத்தாள். தன் நிலை உணர்ந்தவளாகக் காணப்பட்டாள்.

'D' யினுடைய முக்கிய அக்கறை இசையிலிருந்தது. அவள் விளையாட்டுகளைக்காட்டிலும் கற்றலுக்கும் பியானோ (Piano) பாடல்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்தாள். அவள் நடனமாட விரும்பவில்லை. அவள் விரும்பிய நண்பர்கள், 'சுறுசுறுப்பானவர்களாகவும்,' 'விளை இயலானவர்களாகவும்', 'வெளியே அதிகம் செல்லாதவர்களாகவும்' இருந்தனர். அவள் அதிகமான நண்பர்களைக் கொண்டிருப்பதாக எண்ணினாலும் மேலும் அதிக நண்பர்களைப் பெற விரும்பினாள். அவளுடைய பெற்றோர்கள் அவளுடைய நண்பர்களை ஏற்றுக் கொண்டனர். அவர்களை இல்லத்திற்கு அழைத்து வரவும் பெற்றோர்கள் ஊக்கமளித்தனர்.

D அவளுடைய பள்ளியைப் பல வழிகளில் விரும்புகின்றாள். ஆனால், அவளைப் பெரும்பாலும் அதிகமான வீட்டு வேலை (home work) செய்யும்படிச் சொல்கின்றார்கள் என்று கூறினாள். சென்ற ஆண்டு அவளை, அவளது வகுப்பின் தலைவியாகத் தேர்ந்தெடுத்தனர். வகுப்பு நடவடிக்கைகளில் இவ்வாண்டு அவளுக்கு மிகவும் அதிகமான பொறுப்பு தரப்பட்டது.

D-யினுடைய குடும்ப உறவுகள் இசைவானதாய்த் தோன்றின. அவள் சிறுவயது குழந்தையாக இருந்தபோது தவறான நடத்தைக்காகத் திட்டுப் பெற்றிருந்தாலும், உரிமை பறிக்கப்பட்டு இருந்தாலும், அவ்வாறான நிகழ்ச்சி நடந்து பலகாலம் கடந்துவிட்டது. இப்பொழுதெல்லாம் அவளுடைய பெற்றோர்களைச் சினமூட்டுவதேயில்லை. அவள், அவளது தாயாருக்கு தந்தையைக்காட்டிலும் அதிக விருப்பத்தைத் தருகின்றாள். ஏனெனில், அவளுடைய தாயார் அவளாருகே

எப்போதும் இருக்கின்றாள். தந்தையைக்காட்டிலும் அதிக அன்பு கொண்டிருக்கிறாள். கேட்கின்றபோதெல்லாம் பணம் தருகின்றாள். D-க்கு இல்லத்தில் மூன்று மூத்த சகோதரிகள் இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் சீட்டு விளையாடுகின்றார்கள் அல்லது தாயாருடன் சில வேலைகளைச் செய்கின்றார்கள். பல ஆண்டுகளுக்கு முன்னால் குடும்பம் முழுவதும் ஐரோப்பாவிற்குச் சென்றது. சில சமயங்களில் D-ன் சகோதரிகள் அவளிடம், அவள் என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றிச் சற்று அதிகமாகவே குறிப்பிடுவதாக D கருதினாள். ஆனால், அச் சமயங்களில் எல்லாம் அவளுடைய தாயார் இடைமறித்து அந் நிலைகளைச் சரியாக்கினாள். ஏனெனில், அவளால் 'இரு பக்கங்களையும் பார்க்க முடிகிறது'. மொத்தமாகச் சொன்னால், அவளது பெற்றோர்கள் அவள்மீது அதிகமான தடைகளை விதிக்கவில்லை என அவள் கருதினாள். பெற்றோர்கள் அளிக்கின்ற தரங்கள் பொதுவாகச் சரியானவையாகவே இருக்கின்றன.[3]

பெற்றோர் நடத்தையில் சிலவகைகள்

ஒரு குழந்தையின்மீது பெற்றோர் கொள்ளும் மனப்பான்மைகள் குழந்தைகளைப்பற்றி அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள், புரிந்து கொள்ளுதல்கள் ஆகியவற்றைப் பிரதிபலிப்பதோடு, அவர்களுடைய மனநிறைவுகள், மனமுறிவுகள், உணர்வுகள் ஆகியவற்றையும் பிரதிபலிக்கின்றன. அவர்களுடைய எண்ணங்களும் நம்பிக்கைகளும், அவர்களுடைய மனவெழுச்சி வெளிக்காட்டுதல்களுடன் இணைந்து பல்வேறுதரப்பட்ட பெற்றோர் நடத்தைகளை அளிக்கின்றன. இதனைப் பெற்றோர் குழந்தைகள் ஆகியோரின் இடைவினையில் உற்று நோக்கலாம். ஓர் ஆய்வில் ஃபெல்ஸ் பெற்றோர் நடத்தை அளவிடுகள் (Fels Parent Behaviour Scales) பெற்றோர் நடத்தையின் தரங்களைப் பெறுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.[4] இத் தரங்கள் மிகவும் எச்சரிக்கையான புள்ளியியல் ஆய்விற்கு ஆட்படுத்தப் பட்டது. இடை, உடன் தொடர்புகளின் அட்டவணைமூலமாகத் தொடர்புள்ள மாறிகளின் சேர்த்து பெறப்பட்டது. பல நிலைகளில்

[3] J. P. Anderson, 'A Study of the Relationships Between Certain Aspects of Parental Behavior and Attitudes and the Behavior of Junior High School Pupils,' Teachers College, Columbia University, Contributions to Education, No. 809, 1940.

[4] A. L. Baldwin, J. Kalhorn, and F. H. Breese, 'Patterns of Parent Behavior,' Psychological Monographs, 1945, Vol. 58, No. 3. The descriptions presented to these types of behavior are based on this study. (Permission of the Psychological Monographs and the American Psychological Association.)

இவ்வறிகுறித் தொகுப்புகளை (syndromes) இணைத்து ஒரு தனித்த, பெரிய அறிகுறித் தொகுப்பாக ஆக்கப்பட்டது. இப் புள்ளியியல் ஆய்வில் கிடைக்கப்பெற்ற மூன்று மத்திய அறிகுறித் தொகுப்புகளுக்கும் முறையே, (1) இல்லத்தில் ஜனநாயகம், (2) குழந்தையை ஏற்றுக் கொள்ளுதல், (3) சலுகை அளித்தல் எனப் பெயரிடப் பட்டன. குறுகிய முக்கியத்துவம் வாய்ந்த அறிகுறித் தொகுப்புகளாவன கடுமையாக நடத்துதல், குற்றங்கூறுதல், அறிவுக்கூர்மை, அவசரப்படுத்துதல், சொந்தப் பொருத்தப்பாடு. இம் மூன்று முக்கிய மாறிகளின் இணைப்பு அடிப்படையில் எட்டுவகைகள் குறிக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

தீவிரமாக விலக்குதல்.	சலுகை கொடுத்து ஏற்றுக் கொள்ளுதல்.
அமைதியாக விலக்குதல்.	தற்செயலாகச் சலுகை தந்து ஏற்றுக் கொள்ளுதல்.
தற்செயலாக யதேச்சாதிகாரியாக இருத்தல்.	சலுகை தருதலையும் ஜனநாயக முறையையும் கொள்ளுதல்.
தற்செயலாகச் சலுகை தருதல்.	ஜனநாயகவாதியாக ஏற்றுக் கொள்ளுதல்.

விலக்கும் வகைகள்

அமைதியான முறையில் விலக்குதல் அல்லது தற்செயலாக விலக்குதல் பெற்றோர்களது சுறுசுறுப்பான வாழ்க்கையினால் ஏற்படலாம், அல்லது மெக்கேன் (McKane) இல்லத்தில் ஏற்பட்டவாறு முழுமையான விலக்குதலினாலும் ஏற்படலாம்.[5] திருமதி மெக்கேன் மிகவும் தன்னலம் உள்ளவளாகவும், தன்முனைப்புள்ளவளாகவும் இருந்தாள். அவள் மற்றவர்களைப்பற்றியும் நிகழ்ச்சிகளைப்பற்றியும், அவளுடைய சொந்தத் திருப்திக்கு எந்த அளவு உதவுகின்றனர் என்பதைப் பொறுத்தே மதிப்பிட்டாள். அவள் குழந்தை பெறுதலையும் வளர்த்தலையும் வழக்கமான நிகழ்ச்சியாகக் கருதினாள் என்றாலும், அடிப்படையில் குழந்தைகளால் வெறுப்பே அடைந்தாள். பேட்டி (Betty) என்ற அவளது ஆறுமாதக் குழந்தையைப்பற்றி அவள் குறிப்பிடுகையில்: 'நான் உட்கார்ந்து பிடித்துக்கொள்ள வெறுக்கின்றேன்; குழந்தைகளைப் பிடித்துக்கொள்ள எனக்கு விருப்பமில்லை' என்று கூறினாள்.

[5] A. L. Baldwin, J. Kalhorn, and F. H. Breese, op. cit., pp. 22-24. The case of Betty is adapted from this study.

திருமதி மெக்கேனுக்குக் குழந்தை என்றால் அமைதியாகவும் குறும்பில்லாததாகவும் இருக்கவேண்டும். அவளுடைய விருப்பத்தை பேட்டிமீது செலுத்தினாள். பேட்டி, அவளது விருப்பத்திற்கு ஏற்றவாறு மிகவும் உறுதியான தரங்களைக்கொண்ட நடத்தையினை வளர்க்கவேண்டும் என்று கூறினாள். இவ்வாறு கடுமையாகவும் கொடுமையாகவும் தண்டனை அளித்தல், உடனடியாகத் தொல்லை அளிப்பதைக் குறைத்து பேட்டியினிடமிருந்து சிக்கல்களையும் குறைத்தது. பேட்டியின் தாயார் பேட்டிக்கு மனமுறிவு ஏற்படும் வகையிலும் துன்பமுறும் வகையிலும் நடந்துகொண்டாள். பேட்டி கதவருகே செல்லும்போது, அவள் தாய், 'நீ திரைக் கதவினை (screen door) திறந்து வைத்து வந்துவிடுவாய் என்று நான் நினைக்கின்றேன்' என்று கூறுவாள். பேட்டி ஐஸ்கிரீம் சாப்பிடும்பொழுது, 'நீ உன்னுடைய உடையில் கொட்டிக்கொள்வாய் என்று நினைக்கின்றேன்' என்று கூறுவாள். அவளது நடத்தை குழந்தையின்மீது கொண்டுள்ள விரோத மனப்பான்மையையும் சினம் கொள்கின்ற தன்மையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

திருமதி மெக்கேன் குழந்தையிடத்துக் கடுமையாக விரோத மனப்பான்மை கொண்டிருந்ததோடு, ஒரு நிலையான மனப்பான்மையையும் கொண்டிருக்கவில்லை. ஒரு சமயத்தில் கடுமையான தண்டனை தரவல்ல செய்கை, மற்றொருநாள் கவனத்திற்குக்கூட வருவதில்லை. இது பெருமளவு திருமதி மெக்கேனின் மனப்போக்கினையே பெரிதும் பொறுத்திருந்தது. திருமதி மெக்கேனின் சொந்த, அமைதியான மனப்போக்கு, சில சமயங்களில் அவளது குழந்தைகளை வெளிப்புறத் தீங்குகளினின்று பாதுகாக்க முனைகின்றது. இது அவளுடைய சுயநலத்தன்மைக்கு ஒரு சான்றாகும். அவளுடைய கணவனிடம், அவனை விட்டுவிட்டுக் குழந்தைகளுடன் சென்று விடுவதாகப் பயமுறுத்துவதன்மூலம் ஆதிக்கம் செலுத்திவந்தாள்.

பேட்டி ஆறு வயதினை அடைந்தபோது திருமதி மெக்கேனது நிலையில்லா மனப்போக்கு மிகவும் அதிகரித்து, தொடர்ச்சியான அக்கறையின்மையும் இசைவில்லாத நடத்தையும் காணப்பட்டன. வெறுப்பும் கடுமையான சிக்கலும் மாறிமாறித் தோன்றின. இக்காலத்திலிருந்து தாயார் குழந்தையிடம் அதிகமான ஒதுக்குதலையும் விரோத மனப்பான்மையையும் கொண்டிருந்தாள் என்று தரப்படுத்தப்பட்டது. பேட்டி இதற்குக் கொடுத்த எதிர்வினையெல்லாம் பின் வாங்குதலும் முதியோர் கட்டுப்பாட்டைக் கீழ்ப்படிவான தன்மையில் இணங்காது எதிர்த்து நின்றதுமேயாகும். பள்ளியில் அவள், வெளிப்பார்வைக்குக் கீழ்ப்படிகின்ற தன்மை கொண்டிருந்ததைக் குறை காண முடியாவிட்டாலும், வினை செய்யவேண்டிய அல்லது துலங்கல் தரவேண்டிய நிகழ்ச்சிக்கெல்லாம் 'எனக்குத் தெரியாது' என்று

உடனடியாக பதிலளித்தாள். அவளுடைய ஆசிரியர்களால் அவளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களால் அவளுடைய பின் வாங்குகின்ற தன்மை, கீழ்ப்படிதலான எதிர்த்து நிற்கின்ற தன்மை ஆகியவற்றை மாற்ற முடியவில்லை.

பெற்றோர் நடத்தையில் தற்செயலான வகைகள்

சில பெற்றோர்களது நடத்தையினை விலக்குதல் வகையைச் சார்ந்ததாகவோ ஏற்றுக்கொள்கின்ற வகையைச் சார்ந்ததாகவோ கருதவியலாது. அவ்வாறான பெற்றோர்கள் குழந்தையை ஒரு சமயத்தில் ஏற்றுக்கொள்ளவும் மற்றொரு சமயத்தில் விலக்கவும் செய்கின்றனர். சில பெற்றோர்கள் தற்செயல் வகையைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் குழந்தையிடத்தே கொள்கின்ற மன வெழுச்சி உறவு செறிவு குறைவானதாகவும் தற்செயலானதாகவும் இருக்கின்றது. இரண்டு பொதுவகைகளை இத் தற்செயல் நடத்தையில் வரிசைப்படுத்தலாம்: (1) தற்செயலாக யதேச்சாதிகாரம் கொள்பவர். (2) தற்செயலாகச் சலுகை தருபவர்.

தற்செயலாக யதேச்சாதிகாரம் கொள்கின்றவர் சாதாரணமாக யதேச்சாதிகாரமுள்ள இல்லங்களிலுள்ள பெற்றோர்கள்போன்று அவ்வளவு உணர்ச்சியற்றவராகவோ திறமைவாய்ந்த யதேச்சாதிகாரியாகவோ இல்லை. இருப்பினும், ஒரு தீவிரமான யதேச்சாதிகார இல்லம் அதனுடைய தன்மையால் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்குமிடையே உணர்ச்சியுள்ள உறவினைத் தடுக்கின்றது. பெற்றோரின் அதிகாரம் குழந்தையினுடையதைக்காட்டிலும் எல்லாக் காலங்களிலும் எல்லாப் பரப்புகளிலும் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. இருப்பினும், தற்செயலான யதேச்சாதிகாரப் பெற்றோர் எல்லா நேரங்களிலும் மிகவும் தீவிரமான கடைப்பிடித்தலைக் கொண்டிருக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்துவதில்லை. ஜனநாயக இல்லத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இவ்வில்லங்கள் குழப்பமுடையவைகளாகவும், தவறான பொருத்தப்பாடுடையவைகளாகவும், தடைவிதிக்கின்றவாறும், செயலற்றும், அறிவுக் கூர்மையற்றும், விரோத மனப்பான்மை கொண்டும் இருக்கின்றன. இவ்வாறு தடைவிதிக்கின்ற செல்வாக்குகள் குழந்தைகளின் அறிவியல் வளர்ச்சியினைச் சுருக்குகின்றன. இவ்வாறு சில இயல்புகளான பிறிதின் சார்பற்ற தன்மை, தொடக்கம், அறிவார்வம், வன்திறமை ஆகியனவின் வளர்வதைத் தடுக்கின்றன.

தற்செயலாகச் சலுகை அளிப்பவரின் நடத்தையைத் தீர்மானிப்பதற்கு, செறிவான தொடர்ந்திருக்கின்ற ஊக்குவித்தல் ஏதுமில்லை.

அவ்வாருன பெற்ருேர்கள் குழந்தைகளிடத்துச் சலுகை அளிப்பதன் காரணம், அதை எளிதான வழி என்று நினைப்பதே. அவ்வாருன வகை, பால்டுவினுலும் (Baldwin) மற்றவர்களாலும், ராபர்ட்ஸ் (Roberts) என்பவர் வீட்டு வரலாற்றைக்கொண்டு விளக்கப்பட்டுள்ளது.[6]

திருமதி ராபர்ட்ஸ் அவளுடைய குழந்தையான ஏவிலினுக்கு (Evelyn) அளித்த கையாளு முறை, எந்த ஒரு குழந்தை வளர்ப்பு மெய்யுணர்வின் துணைகொண்டும் தரப்படவில்லை. அவள் ஒருசமயம் வந்து காண்போரிடம் கூறியதுபோன்று, அவளுடைய தாயார் எப்பொழுதும் தடை விதித்துக்கொண்டே இருந்ததால், அவள் தன்னுடைய குழந்தைகளிடத்து ஒரு நண்பருக விளங்கப் போவதாகக் கூறினுள். ராபர்ட்ஸ் குடும்பம் ஏவிலினின் சூழ்நிலையிலுள்ள தொல்லைகளைத் தவிர்ப்பதற்கு எந்தவிதமான முயற்சியையும் கொள்ளவில்லை அல்லது ஏவிலினுடைய ஆசைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றி வைப்பதற்காக மாருக நடப்பதில்லை. அவர்களுடைய செளகரியத்திற்கு ஏற்றவாறுதான் நிறைவேற்றி வைக்கிருர்கள். ஒவ்வொருவருடன் கொள்கின்ற உறவு நன்மை பயக்கத்தக்கதாகவும் உளவியல் அடிப்படையில் ஆரோக்கியமாகவும் இருந்தன. ஏவிலினைப் பொறுத்தவற்றிலெல்லாம் வழக்கப்படி தானுக இயங்க விரும்புகின்றனர். ஏவிலின் தாயாரின் வேண்டுகோளான, அவளுடைய துணிகளைக் கழற்றிவைக்க வேண்டுமென்பது புறக்கணிக்கப்பட்டால், அதைப்பற்றி மேலும் ஒன்றும் சொல்வதுமில்லை, செய்வதுமில்லை. அவர்கள் அனுமதி அளிக்காத செயல்களை ஏவிலின் செய்தால் அதைத் தடுப்பதில்லை. அச்செயலினுல் ஏவிலின் இன்பம் பெறுகின்ருள் என்ருல் பேசாது இருந்துவிடுகின்றனர். இல்லத்திற்கு வெளியே ஏவிலின் ஓரளவு பயந்த தன்மைகொண்டு இருந்தாள். ஆனுல், அதே சமயத்தில், சில சமயங்களில் மிகவும் வெளிப்படையான வலுத்தாக்கலையும் கொண்டு இருந்தாள். அவள் குழந்தைகளிடத்து ஏற்படுத்துகின்ற தொடர்பில் கையாளப்படுகின்ற முறைகள் இவைகளே ஆகும். பள்ளிக்கு முன்னுள்ள நடத்தை, படிவப்பள்ளியிலும் தொடர்ந்தது. அவள் மற்றக் குழந்தைகளுடன் கொள்கின்ற உறவு நிலையற்று இருந்தது. அவளது பள்ளிப் பொருத்தப்பாடுகளை அது மிகவும் தீவிரமான சிக்கல் வாய்ந்ததாக ஆக்கிவிடும். அவள் முன்னிளையோர் பருவத்திற்கும் இளையோர் ஆண்டுகளுக்கும் வளர்கின்றபோது ஒப்பார் அனுமதி மிகவும் அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளதாயிருப்பதஞல், அவளது நடத்தை மிகவும் சிக்கலானதாகிவிடும்.

Ibid., pp. 31-32.

ஏற்றுக்கொள்ளும் வகைகள்

ஏற்றுக்கொள்கின்ற இல்லங்களை மூன்று வகைகளாகப் பிரிக்க லாம். (1) சலுகை தரும் அறிகுறித் தொகுப்பை ஏற்றுக்கொள்ளக் கூடியதும் ஜனநாயக முறையை ஏற்றுக்கொள்ள முடியாததுமான சலுகைதரும் இல்லங்கள். (2) ஜனநாயக அறிகுறித் தொகுப்பை ஏற்றுக்கொள்ளக் கூடியதும் சலுகை தருதலை ஏற்றுக்கொள்ள முடியாததுமான ஜனநாயக இல்லங்கள். (3) சலுகை தரும் அறிகுறித் தொகுப்பையும் ஜனநாயக அறிகுறித் தொகுப்பையும் ஏற்றுக் கொள்ளுகின்ற இல்லங்களான ஜனநாயக சலுகை தரும் இல்லங் கள். ஜனநாயக இல்லத்தின் பொதுவானதன்மை, குடும்பத்திலுள்ள குறிப்பிட்ட உறுப்பினர்களது அதிகமான கவனம் இல்லாமலே நல்ல பொருத்தப்பாடு ஏற்படுவதாகும். இங்குள்ள கொள்கை சுதந்திர வகையினைச் சார்ந்ததாகும். பெற்றோர்கள் ஒவ்வொருவரது தனித்த தன்மையினையும் மதிக்கின்றார்கள். குடும்பத்திலுள்ள குழந்தைகளை யும் மதிக்கிறார்கள். ஜனநாயகப் பெற்றோர்கள் மனவெழுச்சியின் அடிப்படையில் புறவயமாக இருக்கின்றார்கள். ஆனால், பாசத்திலும் ஏற்படுத்துகின்ற தொடர்பிலும் சராசரிக்கு மேலாக இருக்கின்றார்கள். நெருங்கிய தொடர்பு, சலுகை அளிக்கும் குடும்பத்தில் நல்லதாகவே கருதப்பட்டாலும், குழந்தையை மையமாகக் கொண்டிருத்தல் எப் பொழுதும் இருக்கிறது. ஜனநாயக—சலுகை அளிக்கும் இல்லம் இவ்விரு நிலைகளையும் இணைக்கிறது. அது உணர்ச்சியற்ற புறவய மான மனப்பான்மைக்கும் சலுகை காட்டுதலுக்குமிடையே ஒரு சரா சரியை உண்டாக்குகிறது. ஆனால், இவை தெளிவாகப் பிரிக்கக் கூடிய வகைகளல்ல என்பதை வலியுறுத்தல் வேண்டும். ஏற்றுக் கொள்ளும் இல்லங்களில் இந் நிலைகளின் பல அளவுகளையும் எல்லாச் சேர்க்கை விகிதங்களையும் பார்க்கலாம்.

பால்டுவினாலும் மற்றவர்களாலும் விளக்கப்பட்ட ஜேம்சன் (Jamson) இல்லம் ஏற்றுக்கொள்ளும்-ஜனநாயக குழுவைச் சார்ந்த தாகும்.[7] ஆனால், இதனை விஞ்ஞான-ஜனநாயக இல்லம் என்று குறிக்கின்றனர். ஏனெனில், பெற்றோர்கள் இல்லத்திற்கு வெளியே யுள்ள பிரச்சினைகளை உணர்ச்சியற்ற விஞ்ஞான முறையினால் தீர்க் கின்றனர். அதே சமயத்தில், மனிதத் தொடர்புகளின் மெய்யுணர் வைக் குடும்பத்திலுள்ள பல்வேறு உறுப்பினர்கள்பற்றிய திட்டமிடு தலிலும், கொள்கை உருவாக்குவதிலும் பயன்படுத்துகின்றனர். ஜன நாயகத்தைக் கடைப்பிடிக்கும்பொழுது குழந்தைகளின் வயதிற்கும் திறனிற்கும் ஏற்றவாறு பொருத்தி அமைக்கப்படுகின்றது. டேல் (Dale) 5 வயதாக இருக்கின்றபொழுது உணவுப்பட்டியல், அவனது

[7] Ibid., pp. 46-48.

விளையாட்டு வாழ்க்கை, அவனுடைய அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளின் தொடர்புகளிலுள்ள பொருள்களைப்பற்றிக் கருத்துத் தெரிவித்தான். அவனுடைய விருப்பங்களை, முதியோர் நுட்பமாகத் தடை செய்யவில்லை. ஆனாலும், அவனிடத்துச் சில முடிவுகள் முதியோர்களால்தான் எடுக்கப்படவேண்டும் என்று விளக்கப்பட்டது. நேரிடையாகத் தொடர்பு கொள்ளுதல் எனும் கொள்கை, தனித்த பிரச்சினைகளை நேர்மையாகவும் ஒளிவு மறைவின்றியும் அணுகுகின்ற வினைமுறையின் பகுதியாகும். டேலுடைய பள்ளி வயது பொருத்தப்பாடுகளை ஜனநாயக முறையில் தீர்க்கக் குடும்பக்குழு முறை (family council method) பயன்படுத்தப்பட்டது. திருமதி ஜேம்சன் டேலிடம் பாசத்துடனும் உணர்ச்சியுடனும் அணுகுவதற்கு விஞ்ஞான அடிப்படையிலேயே தகுதி அற்றவள் என்று தோன்றுகிறது. 3 வயதில் அவனை ஒரு பூனை தன் நகத்தால் பிறாண்டியபோது, அவனுடைய தாயாரிடமிருந்து அவன் தனித்த கவனத்தையோ பரிவையோ பெறவில்லை. பெற்றோர், குழந்தை உறவுகளில் தோழமைப்பண்பே அறிவியல் நிலையில் சிறப்பானதாகக் கருதப்படுகிறதேயன்றி, தடவிக் கொடுத்தல்களாலோ அணைத்தல்களாலோ அல்ல.

திருமதி ஜேம்சன், சுற்றுப்புறத்திலுள்ள மற்றக் குழந்தைகளைக் காட்டிலும் டேல் சிறந்து விளங்கவேண்டுமென்று விரும்பினாள். ஆதலின், அவள் கையாண்ட முறை ஓரளவு அவளுடைய ஆசையினால் ஊக்குவிக்கப்பட்டதாகும். அவன் சோதனை செய்வதற்கும், கண்டுபிடிப்பதற்கும், உட்காட்சியைப் பயன்படுத்துவதற்கும் போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டது. சிறு குழந்தையாய் இருக்கும்பொழுதே ஒவ்வாதனவற்றைப் பார்த்து நடக்கும்படி அவன் தூண்டப்பட்டான். திறனாய்வு செய்யும்படியும், புரியாதனவற்றை கேள்விகள் கேட்டு அதன்மூலம் தெரிந்துகொள்ளவேண்டும் என்றும் அவனுக்குக் கற்பிக்கப்பட்டது. அவனுடைய பேச்சிலும் மொழி வளர்ச்சியிலும் வயதுக்கு மீறிய அறிவுள்ளவனாக இருந்தான். கற்பனையில் அவனது வளமுள்ள தன்மையும், விளையாட்டில் பிறரைச் சாராத வகையில் புதியனவாய்க் கூறலும், அவனது படிவப்பள்ளிக் குழுவிலுள்ள மற்றக் குழந்தைகளின்முன் நிமிர்ந்து நிற்கச் செய்தது. யுத்தகால செயல்களில் அக்கறைகொண்டு, அவனால் சிறு வயதிலேயே அமெரிக்க நாட்டு ஆகாய விமான மாதிரிகளை அடையாளம் காண முடிந்தது.

அவனுடைய வயதுக்கு மீறிய அறிவைக்காட்டிலும், அவனுடைய கூச்சமற்ற வலுத்தாக்குதல் சமூகத்தில் மிகவும் கடுமையாக இருந்தது. அவன் யாரைக் கண்டும் அச்சம்கொள்ள மறுத்தான். யாருக்கும் விட்டுக் கொடுப்பதுமில்லை; விட்டுக் கொடுக்கும்படி கேட்பதுமில்லை. அவன், அவனுடைய ஆசிரியர்களை உதைப்பான், அடிப்பான், கடிப்பான். அவனுடைய உறவினர்களிடத்தும் வழியில் செல்

பவர்களிடத்தும் மிகுந்த கோப உணர்வுடன் இச் செயல்களைச் செய்வான். எதிர்ப்பு வலுத்தாக்குதல் ஆகியவை, அவனுடைய தற்காப்பின்மையினாலும், அவனுடைய தாயாரிடமிருந்து மனவெழுச்சி உணர்வினைப் பெறுததனாலும், எதையும் அனுமதிக்கின்ற வகையிலிருந்த ஜேம்சன் இல்லச் சூழ்நிலையினாலும் பிறந்திருக்கலாம். அவன் பள்ளியிலே நுழைந்து, அவனுடைய பள்ளித் தோழர்களுடன் கொண்ட தொடர்புகள் அவனுடைய நடத்தையில் முன்னேற்றத்தைத் தந்தன. அவன் இளையோர் பருவத்திற்கு வளர்கின்றபொழுது சமூக அமைதியை மேலும் அதிகமாக விரும்புவான். ஆதலால், அச் சமயம் அவனுடைய நடத்தையில் மாறுதல் ஏற்பட்டு சுதந்திரத்திற்கும் குழுவுடன் ஒன்றி இருத்தலுக்கும் ஓர் உண்மையான சமநிலை ஏற்படும்.

குடும்ப அதிகார வகைகள்

இல்லத்தில் காணப்படுகின்ற அதிகாரவகை குடும்பத்தினுடைய செயல்களைக் கட்டுப்படுத்துகின்ற சக்தியினைக் குறிக்கின்றது.[8] இக் கட்டுப்பாட்டைப் பல வகைகளில் கையாளலாம். பெற்றோர்கள் இருவர்தான் இருப்பார்கள் என்றாலும் மூன்று பொதுப் பிரிவுகளைக் கொண்ட பெற்றோர் கட்டுப்பாடு இருக்கிறது. அதிகாரம் தாயிடமிருக்கலாம் அல்லது தந்தையிடமிருக்கலாம் அல்லது இருவர்களிடத்தும் ஏதாவது ஒரு வகையில் பிரிந்தும் இருக்கலாம். இங்கர்சால் (Ingersoll) என்பவர் 37 இல்லங்களைச் செறிவாக ஆய்வு செய்ததில் அட்டவணை 12—1-ல் உள்ள முக்கிய வகைகள் காணப்பட்டன. இவ் வகைகளைப்பற்றிய சுருக்கமான விளக்கம் பெற்றோர்களது பங்கினைப் பற்றியும் அதிகார வகைகளைப்பற்றியும் தெளிவாக அறிந்து கொள்வதற்கு உதவும்.[9]

தாய் நடத்துகின்ற குடும்பத்தில், குடும்பக் கொள்கைபற்றிய குடும்ப முடிவுகளை எல்லோருமே இணைந்து தாயின் தலைமையில் செய்கிறார்கள். குடும்பத்தில் உணர்ச்சியும் பாசமும் இருக்கின்றன. குழந்தைகள் தாயாரிடம் அதிகமான பரிவினைக் காட்டுகின்றனர். தாயார் வலிவுள்ள ஆளுமையைப் பெற்றிருப்பதாகக் கருதப்படுகிறது. பெற்றோர்கள் குழந்தைகளை குடும்பத்தினைப்பற்றிய முக்கிய பொருள்கள் தொடர்பில் கொள்கையினையும் திட்டத்தினையும் அமைப்பதில் எல்லோரும் இணைந்து பங்குபெற வழிவகுக்கின்றனர்.

[8] H. L. Ingersoll, 'A Study of Transmission of Authority Patterns in the Family,' Genetic Psychology Monographs, 1946, Vol. 38, pp. 225-302.

[9] Ibid., pp. 287-293. The descriptions here presented are adapted from this source.

அட்டவணை 12—1

பல்வேறு அதிகார வகைகள் (இங்கர்சால் அளித்தது.)

தாயார் கையில் அதிகாரம்—யதேச்சாதிகார வகையைச் சார்ந்த அதிகாரம்

தாயார் நடத்துகின்ற—ஜனநாயக வகையைச் சார்ந்த அதிகாரம்

சமநிலைக் கட்டுப்பாடு:

சம உரிமை—ஜனநாயக வகையைச் சார்ந்த அதிகாரம்

சம உரிமை—சலுகை அளிக்கும் வகையைச் சார்ந்த அதிகாரம்

சம உரிமை—கட்டுப்பாடற்ற வகையைச் சார்ந்த அதிகாரம்

சம உரிமை—மாறுபட்ட வகையைச் சார்ந்த அதிகாரம்

தந்தை கையில் அதிகாரம்—யதேச்சாதிகார வகையைச் சார்ந்த அதிகாரம்

தந்தை கையில் அதிகாரம்—மாதிரி யதேச்சாதிகார வகையைச் சார்ந்த அதிகாரம்

தந்தை நடத்துகின்ற—ஜனநாயக வகையைச் சார்ந்த அதிகாரம்

சமஉரிமைக் கட்டுபாடு உள்ள வகையில் பெற்றோர்கள் ஒரு முழுமையான அதிகாரத் திட்டத்தினைக் குடும்ப வாழ்க்கை எனும் பொது மெய்யுணர்வின் அடிப்படையில் அமைக்கின்றனர். இம் மெய்யுணர்வு கல்லூரிக் கல்விபெற்ற பெற்றோர்களிடம் அடிக்கடி காணப்படுகின்றது. ஆனல், எல்லாக் குழுவினரிடமும் அது மாறுபட்ட விகிதங்களில் காணப்படலாம். இல்லத்திலும் குடும்ப வாழ்க்கையிலும் உள்ள பல்வேறு பகுதிகளின்மீது கொள்ளும் அதிகாரம் சமநிலைக் குடும்பத்தில் பெருமளவு இணையாகப் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. சில பகுதிகளில்மட்டுமே ஓர் அங்கத்தினர் மற்றோர் அங்கத்தினரைக் காட்டிலும் அதிகமாகத் திறனுடையவராக இருந்தார். சமநிலை ஜனநாயக வகை அதிகாரம் அவர்களது குழந்தைகளைத் துவக்க நிலையில் சார்ந்திருக்கின்ற தன்மையினின்றும் மாறி, குடும்பக் குழுவில் பொறுப்பினையும் தனித்தன்மையினையும் பெறுமாறு வழி காட்டுகின்றது குழந்தைகள் தங்கள்மீது நம்பிக்கை கொள்ளுமாறும்; முதியோர் பருவத்தை அடையும்போது பெற்றோர்களிடமிருந்து சுதந்திரம் பெறுதலுக்கும் ஆதரிக்கப்படுகின்றனர். சுதந்திரமாக வளர்வதற்கும் தங்களைப்பற்றிய முடிவுகளை செய்வதற்குரிய திறனையும் பெற ஆதரிக்கப்

படுகின்றனர். சமநிலை வகையைச் சேர்ந்த அதிகாரம், மற்ற வகைகளின் குழந்தையிடத்துச் சலுகை காட்டுதல், குழந்தைகளைக் கவனிக்காதிருத்தல், ஒரே நிலையான நடத்தையைக் கொள்ளாமை ஆகியவற்றிற்கு நிலை மாறலாம்.

தந்தை நடத்துகின்ற குடும்பத்தில் அதிகாரத்தின் இயல்பு ஜனநாயக வகையைச் சார்ந்ததாக உள்ளது. கணவனின் தலைமையை அடிப்படை ஏற்றுக்கொண்டு குடும்பத்தின் கோட்பாடு வெளிப்படையாக ஒன்று சேர்க்கப்படுகிறது. இக்கூட்டுக் கோட்பாடுகளுக்கு ஏற்றவாறும் கணவன் எதிர்பார்க்கின்ற வகையிலும் மனைவி குடும்பத்தை நிர்வகித்தும், குழந்தைகளைப் பேணியும் வருகிறாள். குடும்பத்தில் பாச உறவு ஏற்படுகின்றது. மனைவி கணவனைக்காட்டிலும் உரிமையான மனவெழுச்சித் தற்காப்பினைக் கொண்டவளாய் இருக்கின்றாள். தந்தை அதிகார வகையில் பல்வேறு நிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன. தந்தை கையில் இருக்கின்ற அதிகாரம் உச்சவரம்பில் யதேச்சாதிகாரத்தன்மை கொண்டதாய் விடுகின்றது. தந்தை ஆதிக்கம் செலுத்துகின்ற இல்லத்தில் அதனுடைய உச்சவரம்பில் மிகவும் கடுமையான வகையைச்சார்ந்த கணவன்-தந்தை கட்டுப்பாட்டு நிலையை அடைகின்றது. கணவன் குடும்பத்தின் தலைவனாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறான். அவன் குடும்பத்தின் கொள்கையை அமைக்கின்றான். முக்கியத் திட்டங்களையும் முடிவுகளையும் அவனே செய்கின்றான். கணவன் மனைவியிடையே தோன்றுகின்ற சிக்கல்கள் பெரும்பாலும் தீர்க்காமலே தங்கிவிடுகின்றன. ஏனெனில், கணவன் அவன் வழியையே வலியுறுத்துவான். தந்தை என்ற நிலையில், இக்கணவன் யதேச்சாதிகாரியாகவும், ஒழுங்கற்றும், வருமுன் கூற இயலாதவனாகவும் விளங்குகின்றான்.

கட்டுப்பாடற்ற குடும்பங்களில், தந்தை குழந்தைகளின் வளர்ப்பினைத் தாயார் கையிலேயே விட்டுவிடுவார். தாயார் குழந்தையின் நடத்தையைத் திட்டமிட்ட சரங்களினால் அமைப்பார். ஆனால், தந்தையாவது தாயாராவது இவ்விதிகளையும் முறைகளையும் அமுலுக்குக் கொண்டுவருவதில்லை. குழந்தைகள் தங்களது இச்சைபோல் காரியங்களைச் செய்வார்கள். அதன் காரணமாகவும் குழந்தைகள் பெற்றோர்களிடத்துக் கொஞ்சமும் மதிப்போ கவலையோ இல்லாது இருப்பார்கள். இவ் வில்லங்களில் குடும்பத்தன்மை என்பது மிகக் குறைந்த அளவிலேயே இருக்கின்றது. பாசம் தற்செயலாக ஏற்படுகின்ற ஒன்றாகவும் உள்ளது. ஒவ்வொருவரும் அவரவர் வழிச் செல்லுவார்கள். கணவனோ மனைவியோ மற்றவர்களது தேவைகளுக்குப் பொருந்துமாறு விட்டுக்கொடுப்பதில்லை. ஆனால், தங்களுக்கும் மற்றவர்களுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளை ஏற்றுக்கொள்கின்றனர்.

குடும்ப அமைப்பு வகையின் செல்வாக்கு

அதிகாரம் 9-ல் குடும்ப அமைப்பு வகை ஆளுமை வளர்ச்சியிலும் வளர்கின்ற குழந்தை, இளையோர் ஆகியோரின் அமைப்பிலும் செல்வாக்குக் கொண்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பெற்றோர் அதிகார வகைகளின் உறவுகளைப்பற்றியதும் ஆளுமைப் பொருத்தப்பாடுகள் பற்றியதுமான குறிப்புகள் வாஷிங்டன் மாகாணத்தைச் சார்ந்த 4,310 சீனியர் உயர்நிலைப்பள்ளி மாணவர்களிடமிருந்து பெறப்பட்டன.[10] இவ்வாய்வில், கேள்விநிரலும் 250 பிரச்சினைகளைக் கொண்ட கோடிட்டுச் சரிபார்க்கின்ற பட்டியலும் குறிப்புகளைப்பெற பயன்படுத்தப்பட்டன. பிரச்சினைகள் ஏழு பொருத்தப்பாட்டுப் பரப்புகளாகத் தொடுக்கப்பட்டன. ஜனநாயக, நடுத்தர, யதேச்சாதிகார வகைகளைச்சார்ந்த இல்லங்களிலிருந்து வருகின்ற சிறுவர் சிறுமியர்கள் கோடிட்டுச் சரிபார்த்த பிரச்சினைகளின் எண்ணிக்கைகளுக்கிடையே ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. பிரச்சினைப் பரப்புகளாகச் சேர்க்கப்பட்டவை: சொந்த, சமூகச் சிறுவன் சிறுமி தொடர்புகள், பள்ளி, தொழில், அற ஒழுக்கம், சமயம் ஆகியவற்றின் தொடர்பிலுள்ள பிரச்சினைகளாகும். ஏழு பரப்புகளிலும் யதேச்சாதிகார இல்லங்களிலிருந்து வருகின்ற இளைஞர்கள் பெரும்பாலான பிரச்சினைகளைக் கோடிட்டுச் சரிபார்த்தனர். சில பரப்புகளில் மற்றப் பரப்புகளைக் காட்டிலும் அதிகமான மாறுபாடுகள் இருந்தன.

அதிகமான மாறுபாடுகளைக் கொண்டிருந்த இரு பிரச்சினைகள், ‘குடும்பத்தில் சண்டையிடுதல்,’ ‘பெற்றோர்களிடம் சிறப்பான பொருத்தப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளுதல்’ ஆகியவைகளேயாகும். ‘வீட்டைவிட்டுப் போகின்ற ஆசை’யை, ஜனநாயக, நடுத்தர இல்லங்களிலிருந்து வருகின்ற சிறுவர் சிறுமியரைக் காட்டிலும் அதிகமாக யதேச்சாதிகார குடும்பங்களிலிருந்து வருவோர் கொண்டிருந்தனர். அட்டவணை 12—2-ல் காட்டப்பட்டுள்ள பால் மாறுதல்கள் சுவையாயிருக்கின்றன. எந்த ஒரு தனித்த குழுவைக்காட்டிலும், நகரத்தில் இருந்து வருகின்ற யதேச்சாதிகாரக் குடும்பங்களிலிருந்துவரும் சிறுமியர்கள் இப்பிரச்சினையை அதிகமாகக் கொண்டிருந்தனர். இது நகரத்திலுள்ள யதேச்சாதிகார இல்லச் சிறுமிக்கு அதிகமான அளவு தற்காப்பினைத் தருகின்ற காரணத்தினால் தோன்றுகின்றது என்பதில் ஐயமில்லை. கிராமப்பகுதிகளில் வாழ்கின்ற சிறுமியர்கள், சிறுவர்களது சமூக வாழ்விலுள்ள கட்டுப்பாட்டின் அறிகுறியாக ‘மற்றவர்கள் செய்கின்றவற்றை நான் செய்வதற்கு வாய்ப்

[10] P. H. Landis and C. L. Stone, ‘The Relationship of Parental Authority Patterns to Teenage Adjustments’, State College of Washington, Rural Sociology Series on Youth, Bulletin No. 538, 1952.

அட்டவணை 12—2

ஜனநாயக, நடுத்தர, யதேச்சாதிகார குடும்பங்களில் வாழ்கின்ற பதின்வயதினர் வரிசைப்படுத்திய குடும்பப் பிரச்சினைகள். [லேன்டிஸ், ஸ்டோன் அளித்தது]

பிரச்சினை	பால்	குடும்பத்தின் அமைப்பு: ஜனநாயகம்	நடுத்தரம்	யதேச்சாதிகாரம்
குடும்பத்தில் சண்டை	சிறுவர்கள்	9·9	11·8	27·8
	சிறுமியர்கள்	12·7	16·2	37·0
காரைப் பயன்படுத்துவதற்கு அனுமதி.	சிறுவர்கள்	22·3	25·0	34·8
	சிறுமியர்கள்	11·7	14·3	11·4
பெற்றோர்களுடன் நல்ல வகையில் பொருந்தியமைதல்.	சிறுவர்கள்	5·7	10·6	17·2
	சிறுமியர்கள்	8·4	10·8	24·2
என்னுடைய பிரச்சினைகளைத் தாயார் அறிந்து கொள்ளுமாறு செய்தல்	சிறுவர்கள்	4·2	5·7	10·6
	சிறுமியர்கள்	6·5	12·1	26·3
என்னுடைய பிரச்சினைகளைத் தந்தை அறிந்து கொள்ளுமாறு செய்தல்	சிறுவர்கள்	10·4	10·9	17·7
	சிறுமியர்கள்	12·5	16·0	20·6
பொருள்களை வாங்குவதற்காக நான் வேலைக்குச் செல்லவேண்டியதாயுள்ளது.	சிறுவர்கள்	12·0	21·6	27·0
	சிறுமியர்கள்	8·2	11·3	18·8
ஒழுங்காகச் செலவுப் பணம் பெற்றோர் அளிப்பதில்லை.	சிறுவர்கள்	5·7	8·2	16·9
	சிறுமியர்கள்	8 6	12·6	21·2
செலவழிப்பதற்கு அதிகம் பணம் இல்லை.	சிறுவர்கள்	6·8	7·9	11·4
	சிறுமியர்கள்	4·7	7·1	15·0
எனக்குத் தனியறை இல்லை.	சிறுவர்கள்	6·2	6·0	11·4
	சிறுமியர்கள்	11·4	12·2	15·6
குழந்தை போன்று வீட்டில் நடத்துகின்றார்கள்.	சிறுவர்கள்	4·8	6·1	11·6
	சிறுமியர்கள்	5·0	7·2	14·4
என் நண்பர்கள் என்னுடைய கருத்துகளை நையாண்டி செய்கின்றனர்.	சிறுவர்கள்	3·1	4·5	9·3
	சிறுமியர்கள்	2·2	3·1	14·3
என் நண்பர்களை வீட்டுக்கு அழைத்துவர இயலவில்லை.	சிறுவர்கள்	2·3	3·5	8·3
	சிறுமியர்கள்	3·1	4·9	18·8

பிரீல்லை" என்ற பிரச்சினைக்குக் கோடிட்டுச் சரிபார்த்த சதவீதம் விளங்குகின்றது. இது அட்டவணை 12—3-ல் காட்டப்பட்டுள்ளது. ஜனநாயக இல்லங்களிலிருந்து வருகின்ற விவசாயச் சிறுவர் சிறுமியர்கள், இதனை யதேச்சாதிகார இல்லங்களிலிருந்து வந்த நகரச் சிறுவர் சிறுமியர்களைப்போன்று அதிகமாகக் குறியிடவில்லை.

இவ்வாய்வின் முடிவுகள், அதனையொத்த ஆய்வு முடிவுகளின் ஆதரவுடன், யதேச்சாதிகார இல்லங்களிலிருந்து வருகின்ற இளையோர்களைக் காட்டிலும் ஜனநாயக இல்லங்களிலிருந்து வருபவர்கள் குறைவான பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகளை கொண்டிருந்தனர் என்று குறிப்பிடுகின்றன. ஜனநாயக இல்லத்திலுள்ள இளையோர்கள், அவர்களுடைய பெற்றோர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்கின்றனர்; குறைவான மனமுறிவு உணர்ச்சிகளையே கொள்கின்றனர். மேலும், ஜனநாயகக் குடும்பங்களிலிருந்து வரும் சிறுவர்கள் சிறுமியர்கள், சமூகத்தில் பங்குபெறுவதற்குத் தடைகள், கட்டுப்பாடு ஆகியவையின்றி வழிகாட்டுதல்மூலம் சமூக வளர்ச்சி பெறுவதற்குரிய இன்பமான நிலையைப் பெற்றிருக்கின்றனர். ஜனநாயக இல்லம் யதேச்சாதிகார இல்லத்தைவிட, அதிகாரங்களுக்குப் பதிலாகக் கூட்டுறவைப் பயன்படுத்தி, தனியன், இளையோன் சுதந்திரத்தை அடைந்து வளர்ச்சியுறுவதற்கு உதவுவதால், சிறந்ததெனக் கருதப்படலாம்.

அட்டவணை 12—3

பதின்வயதினர் 'மற்றவர்கள் செய்கின்றவற்றை நான் செய்வதற்குரிய வாய்ப்பு இல்லை' (சமூக இயல்பில்) என்ற பிரச்சினைக்குக் கோடிட்டுச் சரிபார்த்த சதவீதம். [லேண்டிஸ் ஸ்டோன் அளிப்பது.]

குடும்ப அமைப்பு வகை	விவசாயம்	சிறு நகரம்	பெரிய நகரம்	மொத்தம்
		(சிறுவர்கள்)		
ஜனநாயக ...	5·2	3·6	3·1	3·8
நடுத்தர ...	5·4	5·5	3·4	4·5
யதேச்சாதிகார ...	14·2	7·4	5·5	8·6
		(சிறுமியர்கள்)		
ஜனநாயக ...	3·2	5·2	2·3	3·3
நடுத்தர ...	7·6	3·9	4·2	4·9
யதேச்சாதிகார ...	12·9	9·9	6·9	9·2

இல்லச் சிக்கல்கள்

பெற்றோர் மனப்பான்மைகள்

பெற்றோர்கள் அவர்களது மகன்களையும் மகள்களையும் நடத்துகின்ற வகையில் பரவலான மாறுதல்கள் இருக்கின்றன என்று முன்னரே குறிப்பிடப் பட்டுள்ளது. சில பெற்றோர்கள் தங்களது குழந்தைகளைச் சிறு குழந்தைகளாகப் பாவித்து நடத்துகின்றனர். ஆனால், வேறு சில பெற்றோர்கள் அவர்களிடம் மிகவும் கடுமையான ஆதிக்கம் செலுத்துகின்றனர். சில பெற்றோர்கள் தங்களது இளையோர் மகனோ மகளோ மாற்றுப் பாலாருடன் அடிக்கடி தொடர்புகள் வைத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகின்ற போக்கினைக் கொண்டிருக்கின்றனர். இதனை இல்லத்தில் நடக்கின்ற விருந்துகள், கூடாரத் தங்குதல்கள், பொழுதுபோக்குகள், ஆண் பெண் ஒன்றாகப் படிக்கின்ற பள்ளிகள் வகுப்புகள் ஆகியவற்றில் காணலாம். இது சில சமயங்களில் முன்னிளையோன் போதிய வயதினை அடைவதற்கு முன்னரே வயதான இளையோர்களின் செய்கைகளான நாளிடல், நடனங்களுக்குப் போதல், இரவில் அதிக நேரம் வீட்டிற்கு வெளியே தங்குதல் போன்ற சமூகச் செயல்களைப் பின்பற்றுதல் மூலமாக ஈடுபடச் செய்யும். ஆனால், இச்சமூகச் செயல்களில் ஈடுபடுவதற்குரிய முதிர்ச்சியோ, முன் அனுபவமோ பெற்றிருப்பதில்லை. ஆனால், இது இளையோர்கள் மாற்றுப்பால் உறுப்பினர்களுடன் தொடர்புகள் கொள்ளாமல் எப்பொழுதும் காப்பாற்றப்பட வேண்டும் என்று பொருள்படவில்லை. இதன் தொடர்பில் பெற்றோர்கள் இளையோரிடம் ஏற்படும் உடலியல் மாறுதல்களுடன் தோன்றுகின்ற பால் உந்துவின் தன்மையைப் பற்றி நன்றாக அறிந்திருக்க வேண்டும். அவர்கள் வளர்ச்சியினை ஓர் தொடர்ச்சியாகவும் படிப்படியாகவும் நிகழ்கின்ற நிகழ்ச்சி என்றும், ஒவ்வொரு பருவமும் அடுத்த பருவத்திற்குத் தனியனைத் தயார் செய்கின்றது என்றும் உணர வேண்டும்.

நாடு முழுவதையும் பிரதிபலிக்கின்ற வகையில் 10,000 உயர்நிலைப் பள்ளி இளைஞர்களைக் கொண்டு நடத்திய மதிப்பீட்டில், பெற்றோர்கள் இளையோர்களது பிரச்சினைகளைப்பற்றி எவ்வாறு புரிந்துகொண்டுள்ளார்கள் என்று நினைக்கின்றீர்கள் என்று கேட்கப்பட்டது.[11] உயர் நிலைப் பள்ளி இளைஞர்களிடம், நீ பதின்வயதுச் சிறுவர் சிறுமியரது பிரச்சினைகளைப்பற்றி அவர்களது பெற்றோர்கள் இந்நாளில் புரிந்துகொள்கின்றனர் என்று நினைக்கிறாயா?

[11] The survey was conducted by the Purdue University Opinion Poll during the year 1948.

இல்லையா ? என்று கேட்கப்பட்ட கேள்விக்குக் கீழ்க்கண்டவாறு பதில் பெறப்பட்டது.

ஆம்	...	35 சதவீதம்
இல்லை	...	56 சதவீதம்
தெரியவில்லை	...	9 சதவீதம்

உயர்நிலைப் பள்ளி மாணவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே பதின்வயதினரின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்கின்றனர் என்று நம்பினர்; சரிபாதியினருக்குமேல் அவ்வாறு புரிந்து கொள்ளவில்லை என்று குறிப்பிட்டனர். ஒருவேளை ஒவ்வொரு தலை முறையும் தங்களைச் சரிவரப் புரிந்துகொள்வதில்லை என்று உணர் கின்றனர் போலும்! இவ்வாறான மனப்பான்மை, இசைவான பெற் றோர், இளையோர் உறவுகளை ஏற்படுத்துவதற்குத் தடையாக இருக்கின்றது.

முடிவுகளை மேலும் பகுத்தாய்ந்ததில், வேறு எந்தப் படிவ நிலை யைக்காட்டிலும் அதிகமான அளவு ஜூனியர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களில் அதிக சதவீதத்தினர், பெற்றோர்கள் தங்களது பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளவில்லை எனக் கூறினார்கள். குறிப்பிடும் படியான பால் மாறுபாடுகள் காணப்படவில்லை. சிறுவர்களில் 58 சதவீதத்தினரும், சிறுமியர்களில் 55 சதவீதத்தினரும் 'இல்லை' என்று பதிலளித்தனர். மேலும், உயர்ந்த வருமானம் உள்ள இல் லங்களிலிருந்து வரும் மாணவர்களின் துலங்கல்களுக்கும், சராசரி நிலைக்குக் கீழான வருமானமுள்ள இல்லங்களிலிருந்து வருபவர் களின் துலங்கல்களுக்குமிடையே குறிப்பிடும்படியான மாறு பாடுகளில்லை.

இவ்வாறு புரிந்துகொள்ளாமல் இருப்பதற்குரிய காரணம், ஓர ளவு இளையோர் நடத்தையைப் பற்றிப் பெற்றோர்களும் இளையோர் களும் கொண்டிருக்கின்ற மனப்பான்மைகளினால் விளைவதாகும். இதன் அடிப்படையில் நடந்த ஓர் ஆய்வு, பெற்றோர்களையும் இளை யோர்களையும், பெற்றோர் குழந்தை உறவுகளைப் பற்றிய மூன்று துலங்கல்களைக் கோடிட்டுச் சரிபார்க்கும்படி கூறப்பட்டது. முடிவு கள் அட்டவணை 12—4-ல் அளிக்கப்பட்டுள்ளன.[12] அவை குழந்தை களும் பெற்றோர்களும் பாதிக்கு மேற்பட்ட நிலைகளில் ஒத்தி ருக்கவில்லை என்று காட்டுகின்றன. ஸ்டாட் (Stott) நடத்திய ஆய்வுகள், வயதான பெற்றோர்கள் வயதில் குறைந்த பெற்றோர் களைக்காட்டிலும் இளையோர்களிடத்தில் அதிகமான கட்டுப்

[12] C. C. Hackett, 'Use of an Opinion Polling Technique in a Study of Parent - Child Relationship,' Purdue University, Studies in Higher Education, No. 75, 1950.

பாட்டினைக் கொண்டிருந்தார்கள் என்று கூறுகின்றன.[18] தாயார்களும் தந்தையர்களும் ஒரே அளவு மதிப்பீட்டினைத்தான் சராசரியில் கொண்டுள்ளனர். ஆய்வு செய்யப்பட்டதில், துணைக்குழுக்களில், நகரத் தாயார்கள் இசைவான மனப்பான்மைகளை அதிகமாகவும், நகரத் தந்தையர்கள் இசைவான மனப்பான்மைகளைக் குறைந்த அளவிலும் கொண்டிருந்தனர். குழந்தைகள் தன்னம்பிக்கை கொள்

அட்டவணை 12—4

சில 'கருத்து' இனங்களில் பெற்றோர்களும் குழந்தைகளும் முழுமையாக ஒத்திருந்ததன் சதவீதம். [ஹேக்கட் (Hackett) தந்தது.]

இனம்	உண்மையான சிக்கல்: தாயாரும் குழந்தைகளும்	உண்மையான சிக்கல்: தந்தையும் குழந்தைகளும்
தொழிலைத் தீர்மானித்தல்	57	47
குழந்தைகள் இருக்குமிடத்தையறிதல் ...	55	49
சொந்தப் பிரச்சினைகளைத் தீர்த்தல் ...	54	47
உடைகளைத் தேர்ந்தெடுத்தல் ...	51	39
அன்பு பாராட்ட எல்லோருக்குமுள்ள உரிமை	42	43
காரணங்கள் மட்டும் தருதல்	45	51
பிரச்சினைகளைப்பற்றிப் பேசுதல் ...	40	30
நாளிடல்களைப்பற்றி விவாதித்தல் ...	56	52
இல்லத்தில் தங்கக் கட்டாயப்படுத்தப்படுதல்	46	39
சாட்டையால் அடித்தல் அல்லது அறைதல்	53	52
தவறுகளிலிருந்து காப்பாற்றுதல் ...	48	45
காரை ஓட்டுதல்	32	29
திட்டுதல் அல்லது பிரசங்கம் செய்தல் ...	46	48
பால்பற்றிப் பேசுதல்	61	58
நண்பர்களைத் தேர்ந்தெடுத்தல் ...	47	53
தொடர்ந்து நாளிடலுக்குரிய உரிமை ...	37	46
சிகரெட் குடிக்க அனுமதி	29	47

[18] L. H. Stott, 'Parental Attitudes of Farm, Town, and City Parents in Relation to Certain Personality Adjustments in Their Children,' Journal of Social Psychology, 1940, Vol. 11, pp. 325-339.

வதைப்பற்றித் தந்தையர் கொண்டிருந்த மனப்பான்மைகள் குறிப்பிடும்படியாக இல்லை. ஆனால், இளையோரது இல்ல வாழ்க்கை பற்றிய பாராட்டுதல்களின் தொடர்பில்மட்டுமே இது உண்மையாக இல்லை. ஆதலின், கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்பட்டது. 'பெற்றோர் ஆதிக்கத்திலிருந்து உயர்நிலைப் பள்ளிக் குழந்தைகளுக்கு அதிகமான சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று உணர்கின்ற பெற்றோர்கள் இருக்கின்ற இல்லச் சூழ்நிலையில், தன்னம்பிக்கையின் வளர்ச்சி அதிகமான விகிதத்தில் ஏற்படுகின்றது. (தன்னம்பிக்கை என்பது சொந்தப் பிரச்சினைகளிலும் தொல்லைகளிலும் நானாக முடிவெடுத்தலேயாகும்.)'

அட்டவணை 12—5

348 சிறுவர்களும், 382 சிறுமியரும் அவர்களது பெற்றோர்களுடன் கொண்ட கருத்து வேற்றுமைக்குரிய ஏதுக்கள். [ஃபோல்சம் (Folsom) தந்தது]

கருத்து வேற்றுமைக்குரிய ஏது	சிறுவர் சதவீதம்	சிறுமியர் சதவீதம்
காரைப் பயன்படுத்துதல்	35·6	29·6
நண்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சிறுவர் அல்லது சிறுமியர்	25·0	27·0
பணம் செலவழித்தல்	37·4	28·8
வாரத்தில் பள்ளி நாட்களின் இரவுகளில் வெளியே செல்லுமளவு	45·1	47·6
பள்ளியில் பெறும் தரங்கள்	40·2	31·2
இரவில் வீட்டிற்கு வரும் நேரம் ...	45·4	42·7
இல்லக் கடமைகள் (உலை ஊதுதல், சமைத்தல் போன்றவை)	19·0	26·4
சார்ந்திருக்கும் குழுக்கள் அல்லது சங்கங்கள்	5·5	10·5
கோயிலும் ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்குச் செல்லுதலும்	19·0	18·6
கோயிலுக்குச் செல்லுதலும் ஞாயிற்றுக் கிழமைப் பள்ளிக்குச் செல்லுதலும் தவிர, ஞாயிற்றுக்கிழமைக்குரிய சமயப் பழக்கங்களைக் கடைப்பிடித்தல்	15·2	18·9
உடை உடுத்தும் வகை	14·4	24·6
விருந்துகளுக்குத் துணையில்லாமல் செல்லுதல்	15·8	27·5
கருத்து மாற்றத்திற்குரிய மற்றக் காரணங்கள்	9·5	8·4
கருத்து மாற்றமே யில்லை	2·0	2·1

பெற்றோர்களுடன் கொள்ளும் சிக்கல்கள்

பெற்றோர்களுக்கும் இளையோர்களுக்குமிடையே ஏற்படுகின்ற கருத்து மாறுதல்களுக்குரிய காரணங்கள், இல்லக் கட்டுப்பாட்டின் தொடர்பிலுள்ள பிரச்சினைகளையும் இளையோர்களது அதிகமான விருப்பங்களையும் மேலும் புரிந்துகொள்ள உதவுகின்றன. அட்டவணை 12—5ல் உள்ள குறிப்புகளின்படி, சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் உள்ள தொல்லையின் முக்கிய ஏது, வெளியே செல்லுதலும் இரவில் அதிகநேரம் தங்குதலுமே ஆகும்.[14] இது இரண்டு மாறுபட்ட தரங்களுக்கிடையே ஏற்படும் சிக்கல் அல்லது பொருத்தப்பாட்டுப் பிரச்சினையாகும். பெற்றோர்களது விருப்பங்கள் ஒரு தரத்தையும், இளையோர்களது நண்பர்களின் மனப்பான்மை வேறொரு தரத்தையும் கொள்ளுவதால் இப்பிரச்சினை உருவாகின்றது. இவ்வாய்வில் கூறப் படுகின்ற பால் மாறுதல்கள் சிறுவர்கள் காரைப் பயன்படுத்துதல், பணம் செலவழித்தல், பள்ளியில் பெறும் தரங்கள் ஆகிய பிரச்சினை களில் சிறுமியர்களைக் காட்டிலும் அதிகமாய் இருந்தனர் என்பதைக் காட்டுகின்றன. சிறுமியர்களுக்கு இல்ல வேலைகள், குழுக்கள் அல் லது சங்கங்கள் உடை உடுத்தும் வகை, விருந்துகளின் தன்மை ஆகிய பிரச்சினைகள் சிறுவர்களின் பிரச்சினைகளைக் காட்டிலும் அதிக மான அளவு கருத்து மாற்றத்தைத் தந்தது.

இதிலிருந்து எல்லாப் பெற்றோர்களும் ஆதிக்கம் செலுத்தும் வகையினர் என்றும், குழந்தைகள் சுதந்திரமடைவதற்காக ஒரு போராட்டத்தினைக் கைக்கொள்ளல்வேண்டும் என்றும் முடிவு செய்யக் கூடாது. பெரும்பாலான இல்லங்களில் பெற்றோர்கள் ஏதாவது ஒரு காரணத்தினால் குழந்தைகள் வளர்கின்றார்கள் என்றும், அதிகமான அளவு வளர்ச்சி அடைந்ததும் அவர்களை வேறுவிதமாக நடத்த வேண்டும் என்றும் உணர்கின்றனர். தனிக் குழந்தையின் வளர்ச்சி முறை, பரந்த தொடர்புகளுடனும் அதிகமாகப் பெற்ற அறிவுடனும் ஒன்றுசேர்ந்து, சுதந்திரம் அடைவதற்குரிய தேவைகளை உண்டாக்கி, அதை அடைவதை நோக்கிச் செல்லும் முடிவுகளைப் பெறுகின்றது. மேலும், ஒருவர் அடைகின்ற சுதந்திரத்தின் அளவில் ஒரு வரம்பு இருக்கவேண்டும் என்று குறிப்பிடவேண்டியது அவசியமாகும். பல முதியோர்கள் முழுமையான தன்னம்பிக்கையை அதிகமாகக் கொண் டிருப்பதால் மற்றவர்களுடன் எதைக்குறித்தும் கருத்துத் தெரிவிக்கும் படி கேட்பதேயில்லை. இவ்வாறு தவிர்த்திருக்கக்கூடிய தவறுகளைக் கூட அதிகமான சுதந்திரத்தின் காரணமாகத் தவிர்க்காமல் அதிக மான துன்பத்திற்குள்ளாகின்றனர். பெற்றோர் குழந்தையின் ஆலோசகராகி, தேவையான சமயத்திலும் தொல்லையாய் உள்ள

[14] Reprinted by permission from 'The Family', by J. K. Folsom, Published by John Wiley and Sons, inc.

சூழ்நிலையிலும் குற்றம் கூறுதலைத் தவிர்த்து உதவிசெய்ய முன் வருவாரேயானல், குழந்தை பகுத்தறிவு முறையில் உதவியையும் புத்திமதியையும் நாடுவதற்குரிய முக்கியத்துவத்தை உணருவான். சிறுவன் அல்லது சிறுமியை இதில் ஊக்குவித்தாலும், பெற்றேர் கருத்துத் தெரிவித்தலையும் வழிகாட்டலையும் தந்தாலும், வளர்கின்ற இளையோன்தான் உண்மையில் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் அல்லது தொல்லையினின்று விடுபடும் முறையில் பொருந்தி அமைய வேண்டும் என்பதனை உணரவேண்டும்.

இளையோர் சிக்கல்களைப்பற்றி மிகவும் சுவையானதும் அதிகப் பயனுடையதுமான ஆய்வினை ப்ளாக் (Block) என்பவர் நடத்தினர். அவர், இளையோர்கள் தங்களுடைய பெற்றேர்களிடம் (இவ்வாய் வில் தாய்மார்கள்) கொண்ட சிக்கல்கள், பல நிலைகளில் அத்தொல்லை களுக்குரிய காரணங்களைத் தங்களுடைய வாழ்க்கையிலேயே கொண்டிருந்ததைக் கண்டார். ஐந்தாண்டுக் காலத்தில், 528 ஜூனியர் சீனியர் உயர் நிலைப் பள்ளிச் சிறுவர் சிறுமியர், நேரடி உரை யாடல்மூலம் ஆய்வு செய்யப்பட்டனர். மாணவர்கள் குறித்த 50 பிரச்சினைகள்கொண்ட பட்டியலை ஆய்வு செய்தனர். அட்டவணைகள் 12—6-ம், 12—7-ம் அடிக்கடி சந்தித்த பிரச்சினைகளையும் அவற்றை அறிவிக்கின்ற சிறுவர் சிறுமியர்களின் சதவீதத்தையும் அளிக் கின்றன.[15]

ப்ளாக்கினுடைய ஆய்வின் முடிவுகள், அதிகமான சிக்கல்கள், சொந்தத் தோற்றங்கள், பழக்கங்கள், நடத்தை ஒழுக்கங்கள் ஆகிய வற்றில் மற்றப் பிரச்சினைகளைக் காட்டிலும் அதிகமான மாறுதல்கள் சிந்தனையில் தோன்றுவதனுல் பிணைகின்றன என்று குறிப்பிடுகின்றன. தொழில், சமூகம், பொழுதுபோக்கு, கல்வித் தேர்ந்தெடுத்தல்கள் ஆகியவற்றில் கொள்கின்ற கருத்து வேற்றுமையினுலும் சிக்கல்கள் பிணைகின்றன. இளையோர் சிறுவர்களால் அடிக்கடி கோடிட்டுச் சரிபார்க்கப்பட்ட 8 இனங்கள், சிறுமியர்கள் முதலில் கோடிட்டுச் சரிபார்த்த 20 இனங்களில் இடம்பெற்றன. இது சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் பொதுவான பிரச்சினைகள் இருக்கின்றன என்று காட்டுகின்றது. இருப்பினும், சிறுமியர்களால் உணரப்பட்ட சில பிரச்சினைகள் சிறுவர்களால் உணரப்படவில்லை. இதேபோன்று சிறுவர்களது பிரச்சினைகளில் சிலவற்றைச் சிறுமியர்கள் உணரவில்லை. அட்டவணைகள் 12—6, 12—7-லுள்ள இனங்களை நன்கு பகுத் தாய்ந்தால் அவ்வாறுன பிரச்சினைகளின் தன்மையைக் காணலாம். 7ஆவது படிவத்திலுள்ள சிறுமிகள் சிக்கல்களில் பெரும் சதவிதத்

[15] V. L. Block, 'Conflicts of Adolescents with Their Mothers,' Journal of Abnormal and Social Psychology, 1937, Vol. 32, pp. 192-206.

அட்டவணை 12—6

இளையோர் சிறுவர்கள் தங்களுடைய தாயார்களுடன் கொள்ளுகின்ற உறவுகளை வெகுவாகப் பாதிக்கின்ற ஏதுக்கள் என்று அடிக்கடி குறிப்பிட்ட 20 இனங்கள் (பிளாக் அளித்தது.)

	சதவீதம்
நான் காரைப் பயன்படுத்த அனுமதிதர மறுக்கின்றனர் ...	85·7
நான் வெறுக்கின்ற உணவுப் பொருள்களை எனக்கு நல்லது என்று கூறி உண்ணுமாறு வற்புறுத்துகின்றனர் ...	82·4
மற்றவர்களைப் போன்று அதிகமான பள்ளி மதிப்பீடுகளைப் பெருவிடில் திட்டுகின்றனர்	82·4
நான் பணத்தை எவ்வாறு செலவழிக்கிறேன் என்று சரியாகச் சொல்லும்படி வற்புறுத்துகிருர்கள் ...	80·0
உணவு உண்ணும்போது, மேசையில் அனுசரிக்கவேண்டிய நடத்தைப் பழக்கங்களைக் கொடுத்துத் தொந்தரை செய்கின்ருர்கள்	74·8
என்னுடைய சொந்த நடத்தைப் பழக்கங்கள் பற்றியும், பழக்கங்கள் பற்றியும் தொந்தரை செய்கின்ருர்கள் ...	68·5
நான் கடைப்பிடித்தற்குரிய மாதிரியாக என் சகோதரனையோ அல்லது சகோதரியையோ காட்டுகிருர்கள்	66·9
இரவில் சிறுவர்களுடன் காரில் செல்லுவதைத் தடுக்கின்றனர்	65·7
நான் அக்கறை கொண்டுள்ள தொழிலினைப் பின்பற்ற அனுமதி தர மறுக்கின்றனர்	64·5
என்னுடைய கைகள் அல்லது கழுத்து அல்லது விரல் நகங்கள் சுத்தமாயில்லை என்று குற்றம் சாட்டுகின்றனர்	55·7
செலவுப் பணத்தை ஒழுங்காக அளிப்பதில்லை ...	54·1
என்னுடைய பெண் தோழிகளை நையாண்டி செய்கின்றனர்	51·3
மற்றவர்களிடம் என்னைப்பற்றித் தற்புகழ்ச்சியாகப் பேசுகிருர்கள்	50·1
என்னுடைய நண்பர்களிடம் நான் ஒரு நல்ல பையன் எனக் கூறி, என்னைச் சங்கடத்திற்குள்ளாக்குகின்றனர்	49·8
பகலில் சிறுவர்களுடன் காரில் செல்லத் தடைசெய்கின்றனர்	49·0
என் தாயார் விரும்புகின்ற என் நண்பர்களைப்பற்றி வெகுவாக அனுவசியமாகப் புகழ்கின்ருர்	34·3
என்னிடம் குழந்தையிடம் பேசுவதுபோல் பேசுகிருர்கள்	33·4
பள்ளியில் நான் விரும்பும் பாடங்களைப் படிக்க அனுமதிதர மறுக்கின்றனர்	32·9
நான் தாயாருக்கு 'நல்ல பிள்ளை'யாக இருக்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்படுகிறேன்	32·2

திலுக் கொண்டிருந்தனர். 8ஆவது படிவத்திலுள்ள சிறுவர்கள் சிக்கல் களில் பெரும் சதவீதத்தினைக் கொண்டிருந்தனர். பெற்றோர்கள் அவ்வாறான நிலைகளின் ஏதுக்களை உணர்ந்திருந்தால் அவர்களால் சிக்கலுக்கும் வாதத்திற்கும் பதிலாக வழிகாட்டலையும் புரிந்து கொள்ளுதலையும் அளிக்க இயலும்.'

குறிப்பாக இளையோர்களில் சிறு வயதினர்கள், சமூகத்தினுடைய காப்பு மரபுகளின் பொருளினை உணர்வதில் தொல்லை யனுபவிக் கின்றனர். ஏதாவது ஓர் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியது கடமை என்று உணர்த்தப்பட்டால் ஒழுக்கத்துணிவின் வளர்ச்சியில் எந்தவிதமான பயன் மதிப்பும் ஏற்படாது. ஆனல், அதற்குப் பதி லாகச் சிக்கலும் ஏமாற்றமும்தான் ஏற்படும். பட்டர்பீல்ட் (Butter-field) என்பவர் குறிப்பிடுவதுபோன்று :

'இளையோர்கள் தங்களது ஆண், பெண் நண்பர்களிடம் தங் களது அந்தஸ்தினை உண்டாக்குவதற்கும் விரிவாக்குவதற்கும் முயல் கின்றபொழுது, அவர்களிடம் அவற்றினைப் பெறுவதற்குத் தடையா யிருக்கின்ற எவற்றையும் கண்டு சினங்கொள்வார்கள். இளைஞர்களது நட்புகள் மிகவும் மதிப்புவாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன. அதனைக் குறைவாக்குகின்ற பொருளற்ற சமூகப் பழக்கங்களின்மீது இளைஞன் எதிர்த்து நிற்கின்ற மனப்பான்மையைக் கொள்கின்றான்.'[16]

பெற்றோர்களுக்கும் இளையோர்களுக்குமிடையே தோன்றுகின்ற மனக்கசப்புகளுக்குரிய ஏதுக்கள் இரவில் வெளியே போகின்ற நேரத் தைப்பற்றிய சிக்கல்களேயாகும். லிண்ட்ஸ் அறிக்கையில் (Lynds Report) பங்குகொண்டு, அவர்களது கேள்விநிரலுக்குப் பதில் அளித்த உயர்நிலைப் பள்ளிகளின் உயர்ந்த படிவங்களிலிருந்த 348 சிறுவர் களில் 45 சதவீதத்தினரும், 382 சிறுமியர்களில் 43 சதவீதத்தினரும், இரவில் வெளியே சென்று திரும்பி வருகின்ற நேரத்தைப்பற்றி அவர் களுடைய பெற்றோர்களுடன் தொல்லைகள் கொண்டிருப்பதாய்க் கூறினர்.[17] இவற்றின் காரணங்களின் அடிப்படை, பெற்றோர்கள் கொண்டுள்ள தரத்திற்கும் குழந்தைகள் பழகுகின்ற சமூகக் குழுவின் தரத்திற்கும் இடையேயுள்ள மாறுபாட்டில்தான் இருக்கின்றது. இத் தொல்லையினைச் சந்திக்கின்ற பெற்றோர்கள் பெரும்பாலும் திட்டுவதி லும் குறைகாண்பதிலும்தான் அடைக்கலம் கொள்கின்றனர். பெற் றோர்கள் தங்களது குழந்தைகள் ஏன் இல்லத்திற்குச் சீக்கிரமே வர வேண்டும் என்று சரியான காரணங்களைத் தர மறுக்கின்றனர். அல் லது குழந்தைகள் தங்களது சமூக வாழ்க்கையின் தேவைகளைப்

[16] O. M. Butterfield, 'Love Problems of Adolescence', New York: Emerson Books, Inc., 1939, p. 33.

[17] R. Lynd and H. Lynd 'Middletown in Transition,' New York: Harcourt, Brace and Co., 1937.

அட்டவணை 12—7

இளையோர் சிறுமிகள் தங்களுடைய தாயாருடன் கொள்ளுகின்ற உறவுகளை வெகுவாகப் பாதிக்கின்ற ஏதுக்கள் என்று அடிக்கடி குறிப்பிட்ட 20 இனங்கள் [பிளாக் அளித்தது.]

	சதவீதம்
சிறுவர்களுடன் இரவில் காரில் செல்லுவதற்குத் தடை விதிக்கின்றனர்	87·4
மற்றவர்களுடைய பள்ளி மதிப்பெண்கள் போன்று என்னுடைய பள்ளி மதிப்பெண்கள் இல்லையென்றால் திட்டுகிறார்கள்	85·9
நான் விரும்பாத உணவுப்பொருள்களை எனக்கு நல்லவை என்ற காரணத்தினால் உண்ணும்படி வற்புறுத்துகின்றார்கள்	83·8
நான் எங்கு சென்றாலும், என்னுடன் என் தங்கையையாவது தம்பியையாவது அழைத்துச் செல்லும்படி வற்புறுத்துகின்றனர்	82·3
நான் பணத்தை எதற்காகச் செலவழித்தேன் என்று சரியாகக் கூறும்படி வற்புறுத்துகிறார்கள்	81·2
தாயார் அவளுடைய நேரத்தை எல்லாம் பிரிட்ஜ் (Bridge) சீட்டாட்ட விருந்துகளிலேயே செலவழிக்கிறாளேயன்றி வீட்டில் தங்குவதில்லை.	78·0
என்னுடைய சகோதரியையோ அல்லது சகோதரனையோ நான் கடைப்பிடிக்க வேண்டிய மாதிரியாகக் கூறுகின்றனர்	75·8
காரைப் பயன்படுத்த அனுமதிதர மறுக்கின்றனர் ...	70·8
என்னுடைய சொந்த நடத்தைப் பழக்கங்கள் பற்றியும், பழக்கங்கள் பற்றியும் குறைகூறுகின்றனர் ...	70·0
என்னுடைய தாயாரால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற எனது நண்பர்களுடன்தான் நான் வெளியில் செல்லவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்	69·7
எந்த ஒரு சிறு நிகழ்ச்சியைப்பற்றியும் அதிகமாகத் தொந்தரை செய்கின்றார்கள்	66·4
சிறுவர்களுடன் பகலில் காரில் செல்லுவதற்குத் தடை விதிக்கின்றனர்	66·4

	சதவீதம்
என்னுடைய ஆண் நண்பர்களைப்பற்றி நையாண்டி செய்கிறார்கள்	65·7
நான் உதட்டுச்சாயம் பூசிக்கொள்வதைப்பற்றி அனுவசியமாகத் தொல்லை கொடுக்கின்றனர்	64·6
உணவு உண்ணும் மேஜைப் பழக்கங்களைப்பற்றித் தொந்தரை செய்கின்றனர்	63·0
என்னுடைய உடல் ஆரோக்கியத்தைப்பற்றி அதிகமாகக் கவலை கொள்கின்றனர்	58·8
நான் நடனம் ஆடுவதற்குச் செல்லுவதை விரும்புவதில்லை	58·8
நான் தாயாருக்கு 'நல்ல பிள்ளை'யாக இருக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறேன்	57·8
நான் பள்ளிப் பாடங்களில் விரும்புகின்றவற்றைப் படிக்க அனுமதிப்பதில்லை	56·1
நான் விரும்புகின்ற ஆடைகளை வாங்க அனுமதியளிப்பதில்லை	55·6

பூர்த்தி செய்யக்கூடியதும் அதே சமயத்தில் இல்லத்திற்கு இரவில் சீக்கிரமே வரக்கூடிய நேரத்தினையும் அளிக்கக்கூடிய ஒரு சாத்தியக்கூறான திட்டத்தைத்தந்து, அதன்படி கீழ்ப்படிவதற்கு அவர்களை ஊக்குவிக்கப் பெற்றோர்கள் தவறிவிடுகின்றனர். பெரும்பாலான இளைஞர்கள் தங்களிடம் ஒரு நியாயமான திட்டத்தைத் தந்தால், அது தங்களுடைய நன்மைக்காகவே தரப்பட்டுள்ளது என்று உணர்ந்து ஒத்துழைக்கவே விரும்புவார்கள். சான்றாக, தேசீய காசநோய்ச் சங்கம் (National Tuberculosis Association), நல்ல ஆரோக்கியத்திற்குத் தேவையான தூக்க அளவின் முக்கியத்துவத்தை விளக்கி ஒரு சிறந்த அறிக்கையை எல்லோருக்கும் வழங்கியிருக்கின்றது. இவ்வாறான பயனுள்ள குறைகாணாத பொருள்கள் பெற்றோர் அதிகாரத்தைக் காட்டிலும் சிறப்பான பயன்களை விளைவிக்கும். அவை இளையோர் சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்குமிடையே அதிகமான சுதந்திரத்தையும் தன்னடக்கத்தையும் வளர்த்துக் கொள்வதற்கு மிகவும் உதவும்.

இல்லப் பொருத்தப்பாடுகள்

பெல் பொருட் பட்டியில் (Bell Inventory) பகுத்தாய்வுக்குரிய ஓர் இனமான 'இல்லப் பொத்தப்பாடு' சிறுவர்களுக்கும் சிறுமியருக்குமிடையேயுள்ள கீழ்க்கண்ட குறிப்பிடும்படியான மாறுபாடுகளை அளித்தது:

'உயர்நிலைப் பள்ளிச் சிறுவர் உயர்நிலைப் பள்ளிச் சிறுமியரைக் காட்டிலும் அடிக்கடி இல்லத்தைவிட்டு ஓடிவிடவேண்டும் என்று ஆசை கொண்டனர். உயர்நிலைப் பள்ளிச் சிறுமியர்கள் சிறுவர்களைக் காட்டிலும் அதிகமாகக் கீழ்க்கண்ட இல்ல நிலைகளில் எரிச்சல் கொண்டனர்: பெற்றோர்களது சொந்தப் பழக்கங்கள், பெற்றோர்களிடையே ஒருதலைப்பட்ச மனப்பான்மை, பெற்றோர்களிடம் அச்சம், பெற்றோர்மீது அன்பும் வெறுப்பும் மாறிமாறித் தோன்றுதல், மூர்க்கமான மனப்போக்குகள் கொண்ட பெற்றோர்கள், அவர்களது தோற்றத்தினைக் குறைகாண்கின்ற பெற்றோர்கள்.' [18]

ஸ்டாட் என்பவர் (Stott), கிராமப் பகுதியைச் சார்ந்த நெப்ராஸ்கா (Nebraska) உயர்நிலைப் பள்ளிச் சிறுவர் சிறுமியரைப்பற்றி ஆய்வு நடத்தினார்.[19] ஆளுமை அளவுகளின் உதவியாலும் இல்ல வாழ்க்கைக் கேள்வி நிரல் மூலமாகவும், அவர் இல்ல வாழ்க்கையிலுள்ள ஆளுமைப் பொருத்தப்பாடுகளிலுள்ள சில ஏதுக்களின் விளைவுகளான குறிப்புகளைச் சேகரித்தார்

இல்ல வாழ்க்கை நிலைகளில் நல்ல பொருத்தப்பாடுடைய சிறுவர் சிறுமியருக்கிடையேயும், கீழான பொருத்தப்பாடுடைய சிறுவர் சிறுமியருக்கிடையேயுமுள்ள உள்ள மாறுதல்கள் படம் 12—1-ல்(பொருத்தப்பாட்டுச் சோதனையின், சோதனை அளவிடுகளின் அடிப்படையில்) அளிக்கப்பட்டுள்ளன. இல்ல இனங்களில் நேர்நிலையாகத் தரப்படுத்தப்பட்ட வெற்றிகரமான விவசாயக் குடும்ப வாழ்க்கையின் இயல்புகள், சிறுவர்களின் சொந்தப் பொருத்தப்பாடுகளின் மூலமாக அவற்றின் முக்கியத்துவத்திற் கேற்றவாறு வரிசைப்படுத்தப்பட்டன: (1) பெற்றோர்கள் அவர்களது குழந்தைகளின் நண்பர்களை இல்லத்திற்கு வரவேற்கின்ற மனப்பான்மை. (2) அண்மையில் தண்டனை ஏதும் தரப்படவில்லை. (3) தாயார் மிகக்குறைந்த அளவே மன உரமில்லாத தன்மையைக் கொண்டிருந்தார்கள். (4) குடும்பத்திலுள்ளோருடன் எல்லோருமாக ஒன்று சேர்ந்து குடும்பக் குழுவாக மகிழ்ச்சிகரமாக அடிக்கடி விளையாட்டுகள் விளையாடுதல், கதைகள் சொல்லுதல் அல்லது பாடுதல், வாத்தியங்கள்

[18] H. M. Bell, 'The Theory and Practice of Personal Counseling,' Stanford, Calif.: The Stanford University Press, 1939.

[19]. L. H. Stott, 'The Relation of Certain Factors in Farm Family Life to Personality Development in Adolescents,' Agriculture Experiment Station Research Bulletin, No. 106, 1938, pp. 40-41. The critical ratios listed in figure 12—1 represent the difference between the two scores divided by the standard error of that difference. Critical ratios of less than 2·00 are regarded as statistically insignificant.



படம் 12-1 திறனாய்வு விகிதங்கள்

A. தாயார் இல்லத்திற்கு வெளியில் வேலை செய்கிறார்கள்.
B. தாயார் நோய்வாய்ப்பட்டிருத்தல்.
C. தந்தை நோய்வாய்ப்பட்டிருத்தல்.
D. தாயாரிடமுள்ள மன உரமில்லாத தன்மையின் அளவு.
E. தந்தையிடமுள்ள மன உரமில்லாத தன்மையின் அளவு.
F. தாயார் செய்கின்ற சிலவற்றை நான் விரும்புவதில்லை.
G. தந்தை செய்கின்ற சிலவற்றை நான் விரும்புவதில்லை.
H. முன்னைய வாரத்தில் நான் தண்டனைக்குள்ளானேன்.
I. தாயாருடன் மகிழ்ச்சியினையும் தொல்லைகளையும் பகிர்ந்துகொள்ளு கிறேன்.
J. தந்தையுடன் மகிழ்ச்சியினையும் . தொல்லைகளையும் பகிர்ந்து கொள்ளுகிறேன்.
K. தாயாரை முத்தமிடல்.
L. ஒழுங்கான நேரங்களில் எல்லோருடனும் சேர்ந்து உண்ணுதல்.
M. குடும்பக் குழுவுடன் இடங்களுக்குச் செல்லுதல.
N. இல்லத்தில் எல்லோரும் உடனிருந்து இன்பம் அனுபவித்தல்.
O. பெற்றோர்கள் குழந்தைகளின் நண்பர்களை இல்லத்தில் வரவேற் கின்றனர்.

வாசித்தல் ஆகியவற்றில் ஈடுபடுதல். (5) தாயார் மிகவும் குறைந்த அளவே நோய்வாய்ப்பட்டிருந்தார். சிறுமியரது பொருத்தப்பாடுகள் மூலமாக வெற்றிகரமான குடும்ப வாழ்க்கையின் இனங்கள் என்று காணப்பட்ட இயல்புகள்: (1) அண்மையில் தண்டனை எதுவும் அளிக்கப்படவில்லை, (2) தந்தையுடன் நம்பிக்கைக்கு உகந்த உறவு கொண்டிருத்தல், (3) பெற்றோர்கள் சிறுமியின் நண்பர்கள் இல்லத்திற்கு வருதலை வரவேற்கின்ற மனப்பான்மை கொண்டிருத்தல், (4) இல்லத்திற்கு வெளியேயுள்ள வேலையில் தாயார் குறைந்த அளவே பங்கு கொண்டுள்ளார்.

பெற்றோரிடம் கொள்ளும் சிக்கல்கள் புதியனவல்ல என்றாலும் அதிகமான சமூக, பொருளாதார மாறுதல்களை உண்டாக்கும் பொழுது பெற்றோர் தலைமுறைக்கும் இளையோர் தலைமுறைக்கும் இடையே ஏற்படுகின்ற சிக்கல்கள் அதிகமாயிருக்கும் முன்னரே இல்லத்தில் ஏற்படுகின்ற தவறான பொருத்தப்பாடுகள் பல என்றும், அவை பல்வேறுபட்டவை யென்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவைகள் யாவும் ஆய்வு செய்யப்பட்டு அவைகளை மாற்றுவதற்கு நன்றாகத் திட்டமிடப்பட்ட கூட்டுறவுத் திட்டத்தின்மூலம் முயற்சிகள் எடுக்கப்பட்டபொழுது, நல்ல முடிவுகள் பெறப்பட்டன.

விடுதலை பெறுதல் எனும் பணி கீழ்க்கண்ட கூற்றிலுள்ளதைக் காட்டிலும் உண்மையில் மிகவும் கடினமானதாகும்: 'குழந்தை முதிர்ச்சியை நோக்கி வளரும்பொழுது அதிகமான சுதந்திரத்தைப் பெறல்வேண்டும்'.

குழந்தையையும் இளையோரையும் வழிகாட்டுதலும் உணரச்செய்தலும் கீழ்க்கண்ட ஏதுக்களால் மிகவும் சிக்கலானவையாகிவிட்டன:

1. அதிகாரத்தை விட்டுக்கொடுக்கும் தியாகம் பெற்றோர்களிடமிருக்கவேண்டும்.

2. குழந்தையையும் இளையோனையும் பொறுப்புள்ள பழக்கங்களைக் கொள்ளுமாறு வழிகாட்டி வளர்ச்சியடையச் செய்வதில் பெற்றோர்கள் அடைந்த தோல்வி.

3. சிறு குடும்பங்களாக இருப்பதனால் அதிகமான கவனமும் பாசமும் ஒவ்வொரு குழந்தையிடமும் கொள்ளப்படுகின்றது.

4. இல்லத்தினை அதிக காலம் பொருளாதாரத் தற்காப்புக்காகச் சார்ந்திருத்தல்.

5. பெற்றோர் கட்டுப்பாட்டின் மாறாத மனப்பான்மைகளும் பழக்கங்களும்.

6. இளையோன் மாறுபட்ட பற்றுறுதிகளைக் கொண்டிருத்தல்.[20]

[20] See C. E. Meyers, 'Emancipation of the Adolescent from Parental Control', The Nervous Child, 1946, Vol. 5, pp. 251-262.

விடுதலை பெறுதல்: முதிர்ச்சியை நோக்கி வளர்ச்சி

இளையோர் விடுதலை பெறுதலை மதிப்பிடுதல்

ஒரு குறிப்பிட்ட இளையோன் எந்த அளவு விடுதலை பெற்றிருக்கிறான் என்று மதிப்பிடுதலே இத்தலைப்பில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆய்வாகும். டிமாக் (Dimock) என்பவர், விடுதலை பெறுதலைப் பற்றிச் சில சுவையான ஆய்வுகளை நடத்தி, ஒருவர் பெறுகின்ற விடுதலையை அளக்கக்கூடிய வினாமுறையை அளித்திருக்கின்றார்.[21] அவர் முதலில் சுதந்திரம், சார்ந்திருத்தல் ஆகிய இயல்புகளைக் கொண்ட பல நூற்றுக்கணக்கான நடத்தை இனங்களின் பட்டியலைத் தயார் செய்தார். இப்பட்டியலைத் தயார்செய்து முடித்தபின்னர், 100 நீதிபதிகளிடம் அது அளிக்கப்பட்டது. அந்நீதிபதிகள் உளவியா

அட்டவணை 12—8

விடுதலைபெறும் அளவீட்டு இனங்களின் மாதிரிகள்

(டிமாக் அளித்தது)

	சிறுவனின் E. F. P. அளவீடு		
இனம்	நான் என்ன செய்கிறேன்	நான் என்ன செய்ய நினைக்கிறேன்	என் பெற்றோர்கள் நான் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள்
எல்லாப் பொருள்கள் பற்றியும் நானே தீர்மானிக்கிறேன்	உண்டு இல்லை ?	உண்டு இல்லை ?	உண்டு இல்லை ?
ஒவ்வொரு செய்தியைப்பற்றியும் தந்தை அல்லது தாய் தீர்மானிக்கின்றவற்றையே ஏற்றுக்கொள்கிறேன்	உண்டு இல்லை ?	உண்டு இல்லை ?	உண்டு இல்லை ?
நான் விரும்புகிற வகையில் என் செலவுப் பணத்தைச் செலவழிக்கிறேன்	உண்டு இல்லை ?	உண்டு இல்லை ?	உண்டு இல்லை ?
என் துணிகளை நானே தேர்ந்தெடுத்து வாங்குகிறேன்	உண்டு இல்லை ?	உண்டு இல்லை ?	உண்டு இல்லை ?

[21] H. S. Dimock, 'Rediscovering the Adolescent' New York: Association Press, 1937, p. 145.

லராகவோ, கல்விப்பணியில் ஈடுபட்டுள்ளோராகவோ, சமூகவியலா ராகவோ, பெற்றோர்களாகவோ இருந்தனர். இந்நீதிபதிகள் ஒவ்வோர் இனத்தையும் மதிப்பிட்டு 120 முக்கிய இனங்களைக் கடைசிச் சோதனையில் சேர்த்தனர். இவ் E. F. P. அளவீட்டின் மூலமாக அளக்கப்பட்ட சுதந்திரஅளவின் மாதிரி, அட்டவணை 12—8-ல் அளிக்கப்பட்டுள்ளது.

தானுக விளக்குகின்ற இவ் அளவீட்டிலிருந்து டிமாக் (Dimock) விடுதலை பெறுதலைத் தீர்மானிக்கின்ற ஏதுக்களை ஆராய்ந்தார். விடுதலை பெறுதலுக்கும் உண்மை வயதுக்குமிடையே ·14 மட்டுமே உடன் தொடர்பு இருந்ததால், உண்மை வயது விகித அடிப்படையில் குறைந்த அளவே முக்கியத்துவம் கொண்டிருப்பதாக அறிந்தார். உடலியல்புகளான உயரம், பருமன் ஆகியவை முக்கியத்துவம் கொண்டவைகளாய் இருந்தன.

குழந்தைகள் திரைப்படத்திற்குப் போகின்ற அளவினைப் பகுத்தாய்ந்ததில் விடுதலை பெறுதலுக்கு அது சான்றளித்தது. பக்கம் 161-ல் உள்ள படம் 7—1-ல் காட்டப்பெற்றபடி குழந்தை பெரியவனுக வளரும்பொழுது குடும்பத்திலுள்ள உறுப்பினர்களுடன் திரைப் படத்திற்குச் செல்வது குறைந்து நண்பர்களுடன் திரைப்படத்திற்குச் செல்வது அதிகமாகின்றது. எல்லா வயது நிலைகளிலும் சிறுவர்களது அதிகமான சுதந்திரத்திற்குரிய சான்றினை இங்கு அறியலாம்.

டிமாக்கின் E. F. P. அளவீட்டினை ஜான் ஜோன்ஸுக்கு அளிக்கப்பட்டு அதன்மூலம் விடுதலைபெறுதலின் அளவினை உணர முற்பட்டதில் அவன் இன்னமும் உளவியல் அடிப்படையில் குழந்தைக்குரிய வழக்கத்திலிருந்து மாறுபடாமல் இருந்தான். அவனுடைய நடத்தையின் சில இயல்புகள் எவ்வாறு இருக்கும் என்பதை நாம் காண முடிந்தது. முதலில் ஜான் இடைவிடாது மற்றவர்களிடமிருந்து புத்திமதியையும் உதவியையும் நாடிக்கொண்டே யிருப்பான். ஏனெனில், அவனுல் சுதந்திரமாக செயலுறவோ அல்லது சிந்திக்கவோ இயலாது. தாயார் அவனருகிலேயே எப்பொழுதும் இருந்ததனுல், அவனுடைய கஷ்டமான வேலைகளிலிருந்தும், சிக்கலான முடிவுகளிலிருந்தும் அவனைக் காப்பாற்றியிருப்பாள். பள்ளியில் உதவியும், மேற்பார்வையுள்ள படிப்பும் ஜானுடைய உடன்படிப்போரது நிலையிலிருக்க ஜானுக்குக் கட்டாயத் தேவைகளாய் இருந்தன. அவனுடைய ஆசிரியர்கள், அச்சடிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள்கொண்ட அறிக்கையை, ஒவ்வொரு நிலையையும் ஒருவர் விளக்காது அவனுல் புரிந்துகொள்ள முடியாது என்பதனை உணர்ந்திருந்தனர். மேலும், ஜான் வீட்டைவிட்டு யாரையாவது பார்க்கச் சென்றுல், அவனுக்கு வீட்டு நினைவு (nostalgia) காரணமாக அவதியுற்றுப் பசியினையிழந்து தூக்கமின்றித் தொல்லைப்படுவான். ஒருவேளை இச்சிறுவன் சுதந்திர

மடைவதற்கு மிகவும் ஆசைப்பட்டு, அதனை அடைவதற்குரிய வழியினை அறியாது உள்ளான்போலும்! அவன் பெற்றோரிடம் கொண்டிருக்கின்ற பற்றுதலை மறைப்பதற்காக, அதிகமான ஈடுசெய்தல்களான அதிகம் குடித்தல் அல்லது தூய்மையற்ற செயல்களில் ஈடுபடுதல் ஆகியவற்றைச் செய்கிறான். இவ்வாறான நடத்தை வகைகள் அவனுடைய சுதந்திரத்தைக் காட்டுகின்ற போக்கிடங்களாக இருந்தன. ஆனால், அவனுடைய எதிர்காலத்தைப்பற்றி எண்ணும்பொழுது, அவனுடைய நிலையில்லாத் தன்மையையும் வழக்கத்தை மாற்றிக்கொள்ளாத மகிழ்ச்சியற்ற நிலையையும்கொண்ட தனியனைக் காண்கிறோம். அவனுடைய முதலாளியிடம் அவனால் நன்றாக நடந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில், அவன் தனது முதலாளியினுடைய திடீரெனத் தோன்றும் எண்ணங்களுக்கு ஒத்துச் செல்வதற்காக அதிகமான பரிவினை எதிர்பார்க்கின்றான். இவ்வாறான நிலையினால் பல திருமணங்கள் முறிந்திருக்கின்றன. ஒரே குழந்தை என்ற காரணத்தினால் அதிகமான பற்றார்வங் கொண்டுள்ள தாயிடம், எப்பொழுதும் அக்குழந்தை உதவியையும் புத்திமதியையும் நாடலாம். ஆனால், குழந்தையைக் கெடுப்பது தாயார்தான் என்பது கட்டாயமல்ல. இதனை விளக்குகின்ற வகையில் இந்நூலாசிரியர் கவனத்திற்கு வந்த ஒரு வரலாறு அமைகின்றது.

'ஜேன் என்னும் அனாதைக் குழந்தை, அனாதை இல்லத்திற்கு வெளியே, தன்னுடைய மூத்த சகோதரியினால் வளர்க்கப்பட்டாள். மூத்த சகோதரி, ஜேனுடைய துணிகள், கல்வி, காதல் அனுபவங்கள் ஆகிய அனைத்திற்கும் முழுப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டாள். திருமணத்திற்குப்பின்னர்கூட, ஜேன் அவளுடைய பொருள்கள்பற்றித் தன்னுடைய மூத்த சகோதரியிடம் ஆலோசனை பெற்றாள். பல்வேறு பட்ட சூழ்நிலைகளினால், கடைசியாக ஜேன், தன்னுடைய மூத்த சகோதரி வாழ்ந்த ஊருக்கு வெகு அருகிலுள்ள ஓர் ஊரில் வந்து வசித்தாள். அவளுடைய மூத்த சகோதரியுடன் தினமும் தொலைபேசி மூலம் பேசுவாள். ஒவ்வொரு வாரமும் ஜேன் தனது மூத்த சகோதரியைப் பார்க்க முயன்றாள். இதனால் பல சமூகப் பிரச்சினைகள் தோன்றிக் கடைசியில் அவளுடைய மூத்த சகோதரியின் முழுக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தாள். அவளிடம் எப்பொழுதுமிருந்த குழந்தைத்தனத்தின் காரணமாக, மூத்த சகோதரியின் முழு ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டிருந்ததால், அவளுடைய குடும்ப வாழ்வு முறிந்தது.

சுதந்திரத்தினை நிலைநாட்டுவதில் உள்ள கொள்கைகள்

இளையோனுக்கு வெளிச்செல்லுகின்ற தன்மையைக் கற்றுக் கொள்ளுதல் என்பது உரிமை துறத்தல் எனும் கலையாகும். அவன் குழந்தைப் பருவப் பழக்கங்களான கண்மூடித்தனமாகக் கீழ்ப்படிதல்,

சார்ந்திருத்தல்; ஆதரவினைப் பெற ஆசை ஆகியவற்றைக் களைந்து எறிகின்ற பணியினைக் கொள்ளவேண்டிய அவசியத்திற்குள்ளாகிறான். அவனுடைய விடுதலைபெறுதலானது, முழுமையான மேற்பார்வையி னின்று சுதந்திரத்தைப் பெறுதலாக மிகக் குறுகிய காலத்தில் ஏற்படக் கூடாது; ஏற்படவும் முடியாது. அதைக்காட்டிலும் அது படிப்படியாக இருக்கவேண்டும்; பெற்றோர்களால் குழந்தைப் பருவத்திலிருந்து துவக்கப்பட்டு, திட்டமிட்ட கல்வியின் மூலமாகத் தானாக முன்னிற் கின்ற தன்மையையும் பொறுப்பினையும் பெறக் கற்றுக்கொண்டு, விடுதலை பெறுதலைப் படிப்படியாக வளர்க்கவேண்டும். இளையோன் புதிய உந்துகளுக்கும் பழைய பழக்கங்களுக்குமிடையே அகப்பட் டுள்ளதைக் கண்டு, பரிவுள்ள புரிந்துகொள்ளுதலையும் கவனமாகக் கையாள்கின்ற வகையினையும் கைக்கொள்ள வேண்டிய தேவை யினைப் பெற்றோர் உணருதல் வேண்டும்.

ஒரு வளருகின்ற குழந்தை, சமூகத்தில் போதிய நடத்தையும் பொறுப்புமுள்ள இளைஞனாக வளர்வதற்கு எந்த இசைவான முறை களைப் பின்பற்றவேண்டும்? இது ஓர் எளிதான கேள்வியன்று. இதற் குப் பதிலளிப்பதற்குத் தனித்த பதிலும் இல்லை. சுதந்திரம் அடை வதற்குரிய பழக்கங்கள் குழந்தைப் பருவத்திலிருந்து துவங்கவேண் டும் என்று முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வளர்ச்சி யடையும்பொழுது, பொறுப்புகளையும் உரிமைகளையும் அதிகமாக அளிக்கவேண்டும். வளர்கின்ற குழந்தைக்குச் செலவிடுவதற்கு அதிகமான பணம் தேவையாயிருக்கும்; வயது முதிரும்பொழுது, இதனை அதிகப்படுத்தலாம். மேலும், இளையோன் தன் நண்பர்களைத் தேர்ந் தெடுப்பதற்கு அதிகமான சுதந்திரமளிக்கப்படவேண்டும். பெற் றோர்கள், குறிக்கோள்களில் துவக்கப் பயிற்சி அளிப்பதன்மூலம் சிறப் பாகச் செயலுறலாம். குழந்தை தேர்ந்தெடுத்துள்ள இசைவான நண்பர்களுக்குப் போதிய வாய்ப்பினையும் உற்சாகமூட்டுதலையும் அளிப்பதன்மூலம், அவ்வுணர்வை ஏற்படுத்துவதற்கு ஆக்கமளிக்க லாம். இளையோன் தனது துணிகளை வாங்குவதற்கும், கிறிஸ்து மஸ் பண்டிகைக்கு வேண்டியவற்றை வாங்குவதற்கும் அதிகமான சுதந்திரத்தை வேண்டுகிறான். குடும்பச் செலவுத் திட்டத்தின் காரணமாக இளையோனுக்குத் தேவைப்படுகின்ற செலவுப் பணத் திற்கு வரம்பு விதிக்கப்படலாம். இருப்பினும், பணம் எவ்வாறு செல விழிக்கப்பட்டது என்பதை மிகவும் அதிகமாக மேற்பார்வை செய் தால், முனைப்புகளும் மனமுறிவுகளும் ஏற்படுகின்றன. தேவைப்படு கின்ற பொழுது பணம் தருவதைக் காட்டிலும், வாரச்செலவுப் பணம் தருகின்ற நல்ல பழக்கத்தின் பயனையே இது அழித்துவிடும். ராபர்ட் ஃபிராஸ்டு (Robert Frost) என்பவர் இக்கருத்தினைக் கீழ்க்கண்டவாறு கூறினார்:

பணம் செலவழிந்ததைப்பற்றிக் கேட்கவேண்டாம்;
செலவு செய்தவனைப் பணம் எங்குச் சென்றது என்று
சிந்திக்கவைக்கவேண்டாம்;

செலவு செய்தவன் எப்பொழுதும் நினைப்பதில்லை;

ஒவ்வொரு பைசாவும் எவ்வாறு செலவழிந்ததென்று
நினைவில் நிறுத்துவதில்லை அல்லது கண்டுபிடிப்ப
தில்லை.[22]

இன்றைய நாளின் இளையோன் முன்னைய தலைமுறையைச் சார்ந்த இளையோர்களைக் காட்டிலும் அதிகமான அளவு பணம் செலவழிக்க வேண்டிய தேவையைக் கொண்டுள்ளான். எஸ்தர் பிரீவி (Esther Prevey) என்பவர் நடத்திய ஆய்வில், சிறுவர்களுக்குப் பணத்தை வைத்துக்கொள்வதில் பெற்றோர்கள் பயிற்சியையும், தங்களது அனுபவத்தையும் அளிப்பதாகவும், சிறுமியர்களுக்கு அவ்வாறான பயிற்சி கொடுப்பதில்லை என்றும் குறிப்பிட்டார்.[23] பல்வேறு ஆய்வு செய்யப்பட்ட பெற்றோர் பழக்கங்களில், இம்மாறுதல் காணப்பட்டது. ஆனால், இப் பால் மாறுபாடு, பணத்தைச் சம்பாதிப்பதில் உள்ள அனுபவங்களில் காணப்படுகிறது. குடும்பத்தில் நடைபெறுகின்ற குடும்பப் பொருளாதார அந்தஸ்து, செலவுகள், பணம் சம்பந்தமான திட்டங்கள் ஆகியவைகளைப்பற்றிய விவாதங்களில், சிறுவர்களுக்கே சிறுமியர்களைக் காட்டிலும் அதிகமான பங்கு தரப்படுகின்றது. பிற்காலத்தில் பணத்தை வைத்துக்கொள்கின்ற பழக்கங்களைப்பற்றிய ஆய்வுகள், பெற்றோர்கள் பணத்தைப் பயன்படுத்துகின்ற வகையில் குழந்தைகளுக்குப் பயிற்சியளிப்பதற்கும், துவக்க முதியோர் பருவகாலத்தில் பொருளாதாரச் செயல்களை வெற்றிகரமாகக் கையாள்கின்ற திறனுக்கும் முக்கிய நேர்நிலைத் தொடர்புகள் உள்ளனவாய் அறிவிக்கின்றன.

பெற்றோர்கள் தங்களுடைய குறிக்கோள்களையும், வாழ்க்கைப் பழக்க நடத்தைகளையும் குழந்தைகளிடத்துத் திணிக்க முயலுவதோடல்லாது, அவர்கள் தங்களது குழந்தைகள் கடைப்பிடிக்க வேண்டிய தொழில் திட்டங்கள் என்று சிலவற்றை அளித்து, அவற்றைக் கடைப்பிடிக்குமாறு கட்டாயப்படுத்துகின்றனர். சில சமயங்களில் அவ்வாறான திட்டங்கள், பெற்றோர்களது சொந்தக் குறைபாடு

[22] From 'Complete Poems of Robert Frost'. Copyright, 1930, 1949 by Henry Holt and Co. Copyright, 1936, 1948 by Robert Frost. By permission of the publishers.

[23] E. E. Prevey, 'A Quantitative Study of Family Practices in the Use of Money', Journal of Educational Psychology, 1945, Vol. 36, pp. 411-428.

களையும், அவர்களுடைய எண்ணங்கள் அல்லது சில சமயங்களில் எந்தவிதமான அளவியல் அடிப்படையுமில்லாது கொண்டிருக்கின்ற சில கருத்துகளையும் கொண்டிருப்பனவாய் இருக்கின்றன. இளையோனது தொழில் திட்டங்கள் யாவும் இளையோனாலேயே உண்டாக்கப்பட்டனவாய் இருக்கவேண்டும். ஆனால், அவன் தொடர்பு கொண்டுள்ளவரின் புரிந்துகொள்ளுதல், அறிவு ஆகியவற்றிலிருந்து செய்தியினையும் கருத்தேற்றத்தையும் பெற்று, அதன்மூலமாகத் தேர்ந்தெடுக்கலாம். பெற்றோர்கள் ஒருவேளை (பல நிலைகளில் அவ்வாறே செய்கின்றார்கள்), தங்களது குழந்தைகள் பள்ளியில் என்ன படிக்க வேண்டும் என்பதுபற்றிக் கருத்துக்கொண்டிருக்கின்றனர். பலர் தங்களது குழந்தைகளை அவ்வாறான பள்ளிப் பாடங்களைப் படிக்கும்படி கட்டாயப்படுத்துகின்றனர். ஆனால், அப்பாடங்களை அவர்களது குழந்தைகளால் படிக்கவியலுமா என்று அறிந்துகொள்ள முயல்வதில்லை. இவ்வாறான செய்திகளிலெல்லாம் பெற்றோர்கள் ஆலோசகர்களாகத்தான் இருக்கவியலும். அவர்களுடைய ஆலோசனை, மனவெழுச்சிகள், உணர்ச்சிகள் ஆகியவற்றின் அடிப்படையில் இல்லாது, அறிவினையும் புரிந்துகொள்ளுதலையும் அடிப்படையாகக் கொண்டு நேர்மையையும் உண்மையையும் பயன்படுத்தித் தரப்படுமானால், அவைகள் பயனுடையவையாயிருக்கும். கீழ்க்கண்ட வரலாற்றினைக் கருதவும்:

மாரிஸ் (Morris) எனும் பதினைந்து வயது சிறுவன், பள்ளிக்கு ஒழுங்காகச் செல்லாது ஊர்சுற்றிக்கொண்டிருந்தான். இரண்டு மாதங்களாக அவன் அவ்வாறு ஊர்சுற்றிக்கொண்டு வந்தான். அதன்பின்னர்தான் அச்செய்கை கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு இரண்டு மாதங்கள் வெற்றிகரமாகப் பள்ளிக்குச் செல்லாமல் ஊர் சுற்றியபோது, போதிய அளவு பொய் பேசல், தபால்களைத் திருடுதல், பொய்க்கையெழுத்து இடப்பட்ட தர அறிக்கைக் கடிதம் எழுதல், பொதுவாக ஏமாற்றுதல் ஆகியவைகளைச் செய்தான். இதற்கு முன்னர் மாரிஸ் ஒரு திருப்திகரமான மகனாகவும் மாணவனாகவும் இருந்தான். அவனுடைய வீட்டில் அவனது பெற்றோர்களுடன், தாத்தா, பாட்டி, மாமன்மார், அத்தைகள் ஆகியோர் இருந்தனர். அவன் தன்னுடைய பெற்றோர்களுக்கு ஒரே குழந்தையாக இருந்தான். அவன் குடும்பத்திடம் பாசமுடையவனாகவும், கீழ்ப்படிதலுள்ள குழந்தையாகவும், முதியோர்களை மதிப்பவனாகவும், குறிப்பாகப் பெற்றோர்களிடம் மிக நெருங்கிய தொடர்புடையவனாகவும் இருந்தான். பெற்றோர்கள் அவனிடம் மிகவும் நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருந்தனர். அவனுக்கு நண்பர்கள் இருந்தனர். மற்றச் சிறுவர்கள் அவனை, அவனது குழந்தைப் பருவம் முழுவதிலுமே நன்றாக விரும்பினர். ஆனால், அவன் தன்னுடைய தோழர்களைக் காட்டிலும் அதிகமான அமைதியான மனத்தைக் கொண்டவனாக இருந்தான். அவனுடைய சொந்த விருப்

பத்தின் காரணமாகவே அவனுடைய ஓய்வு நேரத்தை யெல்லாம் வாசிப்பதிலும், முதியோர் நிலையிலுள்ள உறவினருடன் பொழுது போக்குச் செயல்களில் ஈடுபடுவதிலும் கழித்தான். அவனுடைய பெற்றோர்கள் அவனை நன்ருகப் புரிந்துகொண்டுள்ளதாகவும், அவனுடைய முழு நம்பிக்கையையும் பெற்றிருப்பதாகவும் நம்பினர். ஆனல், உண்மையில் ஊர்சுற்றலுக்குமுன் ஏற்பட்ட ஒரு சிறிய நிகழ்ச்சியே, அச்சிறுவனுக்கும் அவனது பெற்றோர்களுக்குமிடையே அவர்கள் அறியாமலே ஏற்பட்ட ஒரு சிக்கலுக்குக் காரணமாக விளங்கியது.

மாரிஸ் தன்னுடைய பதினன்கு வயதில் பாண்டு (Band) இசையில் அக்கறை காட்டத் துவங்கி டிரம்பெட் (Trumpet) எனும் வாத்தியத்தை வாசிக்கக் கற்றுக்கொள்ள விரும்பினன். அவனுடைய பெற்றோர்கள் அவன் அவ்விசைத்திறனைப் பெற்றிருந்தான் என்று உணர்ந்திருந்தாலும், அவ்வாத்தியத்தை வாங்கவும், இசைவகுப்புகளுக்கு அவன் செல்லத் தேவையான பணமும் இருந்தாலும், அவர்கள், மாரிஸ் அவ்வாத்தியத்தைக் கற்றுக்கொண்டால் ஓர் இசைக் குழுவில் சேர விரும்புவான் என்று அஞ்சினர்கள். அவ்வாறு அவன் இசைக்குழுவில் சேர்ந்தால், அதுவே அவனுடைய வாழ்க்கையின் மையமாக அமைந்துவிடும். அதன் பின்னர் அவன் பெற்றோர்களுடன் அதிகமாகப் பழகமாட்டான் என்று எண்ணினர்கள். ஆதலின், அதற்கு அனுமதி மறுத்தனர். அவர்கள் அவனுடைய விருப்பத்திற்குப் பதிலாக அவன் தன்னுடைய ஓய்வு நேரம் முழுவதும் படிப்பதற்குச் செலுத்த வேண்டும் என்று காரணங் கற்பித்தார்கள். பின்னர் அவர்களுடைய இக்காரணத்திற்கு மாருக, அருகிலுள்ள மருந்துக் கடையில் ஓய்வுநேர வேலையினை ஏற்றுக்கொள்வதற்கு ஓரளவு ஆதரவளித்தனர்.

மாரிஸ் பதினைந்து வயதினை அடைந்தபொழுது, அவனுடைய மிகவும் விருப்பமான மாமன் ஒருவர் இறந்த துயரத்திற்கு உள்ளானன். அம்மாமன் அவனுடைய தனித்த அக்கறைகளுக்கு ஆதரவு அளித்ததோடல்லாமல், பெற்றோர்களது எதிர்ப்பினைச் சமாளிக்க அவருடைய உதவியே அவனை நாடி வந்தது. இவ்விழப்பின் காரணமாக எச்செயலும் பயனுள்ளதாய் அவனுக்குத் தோன்றவில்லை. அடுத்த பள்ளிப் பருவத்தில் அவனுடைய தோழன் ஒருவன், பள்ளிக்கூடத்திற்குச் செல்லாமல் ஒரு புகழ் வாய்ந்த இசைக்குழு வாத்தியம் வாசிப்பதைக் கேட்கலாம் என யோசனை கூறினன். மாரிஸ் இதற்குப் பின்னர் தொடர்ச்சியாகப் பள்ளிக்குச் செல்லாமல் ஊர்சுற்றினன். இசைத்தட்டுகளைக் கேட்பதிலும், நாடகக் கொட்டகைகளுக்குச் செல்வதிலுமே தன்னுடைய நேரத்தைக் கழித்தான். ஆனல், இவ்வாறு செய்யும்பொழுதெல்லாம், தான் செய்வது சரியா என்ற சிக்கலிலேயே அவன் இருந்தான். ஆதலின், அவனது

ஏமாற்ற வேலை கண்டுபிடிக்கப்பட்டபின், அது அவனுக்கு ஓரளவு நிம்மதியை அளித்தது.[24]

காதலியைத் தேர்ந்தெடுப்பதிலும், கடைசியாக ஒரு துணையைத் தேர்ந்தெடுப்பதிலும் பெற்றோர்கள் பெரும்பாலும் அவர்களுடைய குழந்தைகளுடன் ஒத்திருப்பதில்லை. சிறுவன் அல்லது சிறுமி மிகவும் கவனமாக அறிவைப் பயன்படுத்தித் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது உண்மையென்றாலும், பெற்றோர்களால் இளைஞர்களுக்காகத் தேர்ந்தெடுத்தல் இயலாது. மேலும், பெற்றோர் கொள்ளும் பங்கு ஓர் ஆலோசகர் கொள்ளும் பங்கு போன்றே இருக்கவேண்டும். இளையோன் சந்திக்கின்ற பிரச்சினைகளையும் பல்வேறு தொல்லைகளையும் தீர்ப்பதற்கு எப்பொழுதும் உதவுகின்ற ஆலோசகர்களாகவும், விருப்பு வெறுப்பின்றி இதனைச் செய்ய விரும்புபவர்களாகவும் இருந்தால்தான், பெற்றோருடைய ஆலோசனையால் பயன் விளையும். இளையோர்கள் தங்களுடைய துணையைத் தேர்ந்தெடுப்பதிலும், அவர்களுடைய கருத்தேற்றங்களையும் உதவியையும் வரவேற்பார்கள். ஆனால், அவ்வுதவி, இளையோன் தேர்ந்தெடுத்தவரிடம் அதிகமான இசைவினையும் இன்பத்தினையும் பெறுவதற்கு உதவி செய்கின்ற ஆசையினால் உந்தப்பட்டும், நேர்மை, உண்மை ஆகிய உணர்வுகளின் அடிப்படையிலும் அளிக்கப்படல் வேண்டும்.

ஆதலின், வளர் பருவச் சிறுவர் சிறுமியரைப் பள்ளிகளிலும், கோயில்களிலும், இல்லங்களிலும் வழிகாட்டுவதற்கு, இணைக்கப்பட்ட, திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி தேவையாய் இருக்கின்றது. பல பெற்றோர்கள், சிக்கல்கள் இருக்கின்றன என்பதை அறியாது இருக்கின்றனர். அவர்கள் அவற்றை அறிந்துள்ளபொழுது, பலரது நிலைகளில் அவர்கள் அச்சிக்கல்களுக்குரிய ஏதுக்களை அறியாமலிருக்கின்றனர். இல்லச் சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற பெற்றோர் நரம்புத் தளர்ச்சி, குடும்ப ஒதுக்குதல், குழந்தைப் பருவ மகிழ்ச்சியற்ற தன்மை ஆகியவைகளை விலக்குவதற்கு, அத்தொல்லைகளை உண்டாக்குகின்ற ஏதுக்களை ஆய்வு செய்தல்வேண்டும். பிளாக் (Block) என்பவர் நடத்திய ஆய்வில் இதுவே குறிக்கோளாக இருந்தது. இவ்வாய்வின் முடிவாக, ஒரு திட்டம் அமைக்கப்பட்டு, அதனுடைய பயனும் நிரூபிக்கப்பட்டது. அத்திட்டத்தின் முக்கிய இயல்புகளை பிளாக் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார் :

[24] N. R. Ingraham, 'Health Problems of the Adolescent Period', The Annals of the American Academy of Political and Social Science, November 1944, P. 131.

குழந்தைகளிடமும் அவர்களது தாயார்களுடனும் நடத்திய நேரடி உரையாடல்களில் ஒப்புமை ஆய்வின் மூலமாக அறிந்தது என்ன வெனில், ஒரே தன்மையான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்ற பல நிகழ்ச்சிகள் அவைகளின் காரணங்களில் மிகவும் மாறுபட்டிருக் கின்றன என்பதேயாகும். 7ஆவது படிவத்திலுள்ள சிறுமியர்களில் 69·3 சதவிதத்தினர், அவர்களது தாயார்கள், உடை உடுத்துகின்ற வகையைப்பற்றியும், எவற்றை உடுத்துகின்றார்கள் என்பதுபற்றியும் தொந்தரை செய்கின்றனர் என்று குறிப்பிட்டனர். அதனை ஒன்றுகப் பகுத்தாய்ந்ததில், இத்தொந்தரை வெவ்வேறு குழந்தைகளுக்கு வெவ்வேறு விதமாக இருப்பதாகக் காணப்பட்டது. எந்த இரு பிரச் சினைகளும் ஒரே தன்மையனவாய் இருப்பதில்லையாதலின், இல்ல மும் பள்ளியும் ஒருவகையான நடத்தை வகையைக் கொண்டிருக் கின்ற குழந்தையை நடத்துகின்ற முறையை அதே வகையான நடத்தை வகையைக் கொண்டிருக்கின்ற குழந்தைக்கு அளிக்கும் போது நேர்மாருக இருக்கவேண்டியிருக்கும் என்பதனை உணரவேண் டும். ஒவ்வொரு குழந்தையையும் அவர்களுடைய தனிப்பட்ட உடல், மனவெழுச்சி அமைப்பின் தொடர்பிலும், அவர்களது சூழ்நிலைச் செல்வாக்குகளின் தொடர்பிலும் அவர்களது பெற்றோர் களும் ஆசிரியர்களும் ஆய்வு செய்தல்வேண்டும்.

நேரடி உரையாடல்களைப் பகுத்தாய்ந்ததில், பெற்றோர்கள், இளையோர்களது பிரச்சினைகளைச் சிறப்பாகப் புரிந்துகொள்வதற்கும், அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சிறுவர் சிறுமியர்களுக்கு உதவு கின்ற முயற்சியினைச் செய்வதற்கும் தேவையும் ஆசையும் கொள்ள வேண்டும் என்பது புலனாயிற்று. பெற்றோர் விவாதக் குழுக்கள், ஆசிரியர்—பெற்றோர் சந்திப்புகள், பெற்றோர்களுக்கும் ஆலோசகர் களுக்குமிடையே நேரடி உரையாடல்கள், பெற்றோர்கள் குழந்தை கள் ஆகியோரின் நேரடி உரையாடல்கள்-ஆகியவை இல்லத்திற்கும் பள்ளிக்குமிடையே நெருங்கிய கூட்டுறவு உறவினை அமைக்க உதவும். ஆசிரியர்கள் மாணவர்களைத் தெளிவாகப் புரிந்துகொள் வதற்கும், அவர்களுடைய முறைகளை ஒவ்வொரு குழந்தையின் தேவைகளுக்கும் ஏற்றவாறு பொருத்தி அமைப்பதற்கும் சாத்திய மாயிற்று. நிறுவனங்களை நடத்துபவர்களும் மேற்பார்வையாளர் களும் பள்ளியில் உள்ள பாடத்திட்டத்தினையும், பாடத்திட்டத்திற்குப் புறத்தே உள்ளவற்றில் அக்கறையுடையனவாக இருந்தவற்றையும், அவர்களுக்குக் கடினமாக இருந்தவற்றையும் குழந்தைகளிடத்துச் சிறப்பாக நுண்ணறிவுடன் பகிர்ந்தளிக்க முடிந்தது. குழுவின் தேவைகளுக்கு ஏற்றவாறு பாடத்திட்டத்தினை மாற்றியமைக்கவும் முடிந்தது. பல குழந்தைகளால் உயர்நிலைப் பள்ளி தருகின்ற வாய்ப்பு களைப் பயன்படுத்துவதற்கும் முடிந்தது; இசைவில்லாத

மனப்போக்குகளைக் கொண்டவர்களைச் சீக்கிரமே கண்டு பிடிக்கவும் முடிந்தது; அவர்களில் பலரது நிலைகளில் வழிகாட்டல் தரப்பட்டு, அவர்களுடைய மனப்பான்மைகளை மாற்றிச் சமூகம் ஏற்றுக்கொள்கின்ற நடத்தையாகவும் மாற்ற முடிந்தது. பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒன்றாக இணைந்து குழந்தைகளுக்கு மிகவும் ஏற்ற சமநிலையை அளிப்பதற்கும், திருப்திகரமாயும் இணையாயுமிருக்கின்ற அனுபவங்களை வரையறுப்பதற்கும், விளக்கிப் பொருள் கூறுவதற்கும், திட்டமிடுவதற்கும் அது சாத்தியமானதாய் இருந்தது. இதன் முடிவாக, இல்லம், பள்ளி, சமுதாயம் ஆகியவை ஒன்றுசேர்ந்து ஒரு மெய்யுணர்வுத் திட்டத்தை அமைக்காமலும், பல்வேறு வகைகளான நடத்தை முறைகளைக் கையாண்டு குழந்தைகளை இணைக்காமலுமிருப்பதைக் குறைக்கவும் முடிகின்றது.[25]

அதிகாரச் சுருக்கம்

இளையோர் பருவம்பற்றிய விவாதங்களில் அளிக்கப்பட்டுள்ள வளர்ச்சிபற்றிய கருதுகோள்களின்படி, இளையோன் அவனுக்கு முன்னே நடந்த யாவற்றினுடைய விளைவாகவும் இருக்கிறான் என்பது பெறப்படும். எந்த இளையோனும் தனது குழந்தைப் பருவத்தை மீறி வளர்வதில்லை. அவன் உடலிலும் மனத்திலும் மனவெழுச்சியிலும் வளர்ச்சியடைகின்றான். ஆனால், அவன் தன்னுடைய முன்னைய ஆண்டுகளின் செல்வாக்கினின்று எப்பொழுதும் தப்புவதில்லை. ஆனால், இது உண்மையில் நன்றேயாகும். ஏனெனில், இத்துவக்க ஆண்டுகள் முதியோர் வாழ்க்கைக்கு ஆரம்பப் பருவங்களாக விளங்குகின்றன. அவை இளையோனுக்கு அடிப்படைத் தேவையாகும். அவையே அவனை வாழப்போகின்ற சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் உறுப்பினனாக உருவாக்குவதற்கு உதவுகின்றன. சில சமயங்களில் இப்பயிற்சி முறை இசைவில்லாத ஒன்றாயும் இருக்கும். சில சமயங்களில் அவை குறைபாடுடையனவாய் விளங்க, இக்குழந்தைப் பருவப் பண்புக்கூறுகளை முதியோர் பருவத்திற்குக் குழந்தை கொண்டுசெல்கிறது. 'போதிய அளவு முதிர்ச்சியடையாத தனியன் சுயநலமுடையவனாகவும், அடங்காத தான்தோன்றியாகவும், வெடுவெடுப்பானவனாகவும், எளிதில் மனவெழுச்சி கொள்பவனாகவும் ஆகின்றான். சுருங்கக் கூறின், சமுதாயம் ஏற்றுக்கொள்ளாத நடத்தையைக் கொள்கின்றான்'.[26]

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளையும் இளையோர்களையும் நடத்துகின்ற விதத்தில் முக்கியமான மாறுதல்களைக் காணலாம்.

[25] V. L. Block op. cit., pp. 204-205.

[26] C. S. Bluemel, 'The Troubled Mind. Baltimore: The Williams and Wilkins Company, 1938, p. 468.

இருப்பினும், இல்லத்தில் அதிகமான ஜனநாயகப் பழக்கங்களைக் கைக்கொள்ளுகின்ற போக்குக் காணப்படுகிறது. இதனால் அங்குக் கட்டுப்பாடுகள் இல்லை என்பது பொருளல்ல. ஆனால், கட்டுப் பாடுகள் குடும்பக் குழுவினாலோ, குடும்பத்திலுள்ள எல்லா உறுப் பினர்களது இடைத்தொடர்பின் மூலமாகவோ விதிக்கப்படுகின்றன என்பதே பொருளாகும். ஜனநாயகக் கட்டுப்பாடுகளைப் பழக்கப்படுத் தும்பொழுது, இளையோர்களிடத்துச் சிறந்த சொந்த சமூகப் பொருத் தப்பாடுகள் தோன்றுகின்றன.

குழந்தை, பெற்றோர்கள் ஆகியோரிடையே தோன்றுகின்ற சிக்க லுக்குரிய காரணங்கள் பலவாகும். ஆனால், பெற்றோர்கள் குழந்தை வளர்கின்றது என்பதனை உணரத் தவறுவது பொதுவான உற்று நோக்கலாகக் காணப்படுகின்றது. பெற்றோர்கள் தங்களுடைய நடத்தை வகையையும், நடக்கின்ற வழிகளையும் குழந்தைமீது திணிக் கின்ற போக்கும் பொதுவாகக் காணப்படுகின்றது. குழந்தை, செல் வத்தின் காரணமாக சுயநலமுடையதாகவும் அடங்காத் தான் தோன்றியாகவும் ஆகலாம். மிகவும் கண்டிப்பான தந்தையின் மகள், அவரது கட்டுப்பாட்டின் காரணமாக எந்தவிதமான பொறுப்பின்றியும் வளர்வாள். செல்வங் கொடுக்கின்ற அத்தை அல்லது பாட்டியின் அதிகச் சலுகை காரணமாக ஒரு குழந்தை கெட்டுவிடலாம். இல் லத்தினுடைய சமூக வகை, குழந்தையின் சமூக மனவெழுச்சி வளர்ச்சியினை வெகுவாகப் பாதிக்கலாம். அடக்கியாள்கின்ற, மோச மான மனப்போக்கினையுடைய தந்தை, குழந்தையினை நோயுற்றதாக வும் கீழ்ப்படுத்தியும் வைக்கிறார். மாறிமாறி நிகழ்கின்ற, ஒரே தன்மை யில்லாத அதிகாரமும் தண்டனையும், வளர்கின்ற குழந்தைக்குத் தடு மாற்ற நிலையை உண்டாக்கும். இக்குழந்தைப் பருவ வகைகள் நிலை யாக நின்று முதியோர் வாழ்க்கைக்கும் தொடர்ந்து வரலாம். புளூமெல் (Bluemel) என்பவர் கீழ்க்கண்ட சான்றுகளைத் தந்து, அவ் வாறான குழந்தைப் பருவ மனவெழுச்சி வகைகளை விளக்குகின்றார்:

ஹெட்டி (Hettie) என்னும் சிறிய பெண் அடிக்கடி தன்னுடைய சகோதரியுடன் சண்டையிட்டாள். அவள் இரு குழந்தைகளில் சிறியவளாகவும் இளையவளாகவும் இருந்ததால், அவளால் ஏதாயினும் புண்படும்படி வார்த்தைகளைப் பயன்படுத்தவே முடிந்தது. இதில் அவள் தேர்ச்சி பெற்றவளாக மாறிவிட்டாள். ஆனால், துரதிருஷ்ட வசமாக அவள் இவ்வாறான துலங்கல் வகையினை முதியோர் வாழ்க் கையிலும் கடைப்பிடித்தாள். அடிக்கடி அவளுடைய குத்தலான வார்த்தைகளின் மூலமாக மற்றவர்களது மனத்தைப் புண்படுத்தி னாள். அவளை அறிந்தவர்கள், அவள் மிகவும் துடுக்காகவும் மேலெழுந்தவாறும் பேசுபவள் என்று கருதினார்கள். ஆதலின், அவ ளுக்கு நீண்ட நாட்கள் நிலைத்திருக்கின்ற நட்புக் கிடைக்கவில்லை.

ஜெப்ரி (Jeffrey) குழந்தையாக இருந்தபொழுது, அவனும் அவனுடைய தாயாரும் உணவு உண்ணும்போது அடிக்கடி சண்டையிட்டனர். அவன் குறைவான பருமனைக் கொண்டிருந்ததனால், அவனுடைய தாயார் அவன்முன் வைத்திருக்கும் உணவுப் பொருள்கள் அனைத்தையும் அவன் உண்ணவேண்டும் என்று வற்புறுத்தினாள். இந்நிகழ்ச்சியில் அவளுடைய மனப்பான்மையெல்லாம், அவளது மகன் பதில் பேசாது கீழ்ப்படியவேண்டும் என்பதாகவே இருந்தது. சிறுவன் இவ்வாறு பிடிவாதமான மனப்பான்மையைக் கடைப்பிடித்து, ஒவ்வொருவரும் மற்றவரது விருப்பத்துக்குப் புறம்பான செய்கையைக் கடைப்பிடித்ததால், ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் அவர்கள் பேசாது இருப்பார்கள். சிறுவன், முதியோர் வாழ்க்கையிலும் இவ்வாறான அமைதியான மறுப்பைக் கடைப்பிடிக்கும் வழியினைக் கடைப்பிடித்தான்.

பென்னி (Benny) என்பவன் அவனுடைய விதவைத் தாயாரது கெட்டழிந்த மகனாகவே வாழ்ந்து வந்தான். அவளது ஆசையெல்லாம், அவனுடைய ஒவ்வொரு விருப்பத்தையும் பூர்த்தி செய்து வைத்து, அவனுடைய வாழ்க்கையை எளிதாக்கவேண்டும் என்பதாகவே இருந்தது. அச்சிறுவன் ஏதாவது தொல்லையைச் சந்தித்தால், உடன் அவன் தனது தாயாரிடம் ஓடி முறையிடுவான். ஏனெனில், அவனது தாயார் இவனுடைய பங்கை ஏற்றுக்கொண்டு ஆதரவளிப்பாள் என்பது அவனுக்குத் தெரியும். அவளால் அவனது தொல்லையைத் தீர்க்கமுடியாவிட்டால், அவனுக்குத் தின்பண்டமோ அல்லது புதிய பொம்மையையோ வாங்கித்தந்து, அவனுடைய தொல்லைகளிலிருந்து அவனுடைய கவனத்தைத் திருப்புவாள். பென்னி இன்னமும் அவனுடைய தாயை அடைக்கலம் அடையுமிடமாகவே கருதி வருகின்றான். பெரிய ஆளாக மாறிய பின்னரும், பென்னி, அதே மனப்பான்மையைக் கடைப்பிடித்து வந்தான். அவனுடைய திருமணத் தொல்லைகளை அவன் தன்னுடைய தாயாரிடம் சொல்லுவான். அவள் அதைத் தீர்த்துவைக்க முயல்வாள். தன்னுடைய பொருளாதாரச் சிக்கல்களையும் அவளிடம் கூறுவான். அவள் அவனுடைய கடன்களைத் தீர்த்துவைப்பாள். ஆனால், அவனுடைய கடன்கள் அவளால் சமாளிக்க முடியாத அளவு பெருகிவிட்டதால், அவனை நொடித்துப் போய்விட்டவனாக (திவால்) (bankruptcy) ஆகும்படி அவள் கூறினாள். இவ்வாறு அவன் பொறுப்பிலிருந்து தப்பிச் செல்ல வாய்ப்பினைத் தொடர்ந்து அவள் அளித்துவந்தாள்.[27]

[27] Ibid, p. 468.

சிந்தனைக்குரிய பிரச்சினைகள்

1. 'விடுதலை பெறுதல்' என்று இவ்வதிகாரத்தில் பயன்படுத்தப் பட்ட சொல்லின் பொருளாக நீ உணர்வது என்ன? அது பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகளுடன் கொண்டுள்ள தொடர்பு யாது?

2. அதிருஷ்டமற்ற, இசைவில்லாத குடும்ப நிலைகளின் காரணமாகத் தவறான ஆளுமைப் பொருத்தப்பாட்டினைக் கொள்கின்ற நிலையினை விளக்குக.

3. சகோதர சகோதரிகளிடம் எவ்வாறு தொல்லைகள் தோன்றுகின்றன என்று காட்டுக. இதனை நீ அறிந்தவர்களைச் சான்றாகக் கொண்டு விளக்குக.

4. இவ்வதிகாரத்தில் 10,000 உயர்நிலைப் பள்ளி மாணவர்களைக்கொண்டு, ஒரு கேள்விமூலம் ஆய்வு செய்யப்பட்ட பர்டு பல்கலைக்கழகத் தேர்வின் முடிவுகளுக்குரிய காரணங்கள் என்ன?

5. நல்ல பொருத்தப்பாடுடைய இன்பமாயுள்ள சில இளையோர்களைப்பற்றிக் கருதுக. அவர்களுடைய இல்லற வாழ்க்கையிலுள்ள சில தனித்த இயல்புகள் யாவை?

6. திருப்திகரமான பொருத்தப்பாடுகள் இளையோர்களிடையே ஏற்படுவதற்குரிய தனித்த, முக்கியக் காரணமாகப் 'பெற்றோர்களது மனப்பான்மை' கருதப்படுகின்றது. ஆனால், நீ எம்மனப்பான்மைகளை இசைவானவையாய்க் கருதுகின்றாய்?

7. ஒதுக்கப்பட்ட குழந்தை அளிக்கின்ற ஒதுக்கல் அறிகுறிகளை விளக்குகின்ற பட்டியலைத் தருக. ஒதுக்குகின்ற பெற்றோர்கள் அளிக்கும் அறிகுறிகளையும் விளக்குக.

8. நீ இளையோனாக இருந்தபொழுது அனுபவித்த இல்லச் சிக்கல்கள் யாவை? உன்னுடைய தற்பொழுதைய சமூகப் பொருத்தப்பாடுகளிலும் சுதந்திரத்திலும் அவை என்ன செல்வாக்குகள் கொண்டுள்ளன?

9. சுதந்திரம் அடைதலுக்கு அல்லது விடுதலை பெறுதலுக்கு அடிப்படைகளாக இருக்கின்ற 10 இனங்களை வரிசைப்படுத்துக. சுதந்திரம் அடைகின்ற அளவிற்கு இவ்வினங்களையே அளப்பதற்குரிய இனங்களாகப் பயன்படுத்தி, நீ அறிந்துள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இளையோர் சிறுவர் சிறுமியர்களது விடுதலைபெறும் அளவினை ஆய்க.

தெரிவுசெய் நூற்பட்டியல்

1. Bossard, J., 'Parent and Child: Studies in Family Behaviour'. Philadelphia: University of Pennsylvania Press, 1953.

2. ———, and E. S. Boll, 'Ritual in Family Living'. Philadelphia: University of Pennsylvania Press, 1950, Chapters 2—5, 8—9.

3. Cole, L., 'Psychology of Adolescence' (Fourth Edition). New York: Rinehart and Co., Inc., 1954, Chap. 10.

4. Cruze, W. W., 'Adolescent Psychology and Development.' New York: The Ronald Press Co., 1953, Chap. 10.

5. Dimock, H. S., 'Rediscovering the Adolescent'. New York: Association Press, 1937, Chap. 7.

6. Fleege, U. H., 'Self-Revelation of the Adolescent Boy'. Milwaukee: Bruce Publishing Co., 1945, Chaps. 3, 4, 5 and 6.

7. Fleming, C. M., 'Adolescence.' New York: International Universities Press, Inc., 1949, Chap, 8.

8. Frank, L. K., 'The Adolescent and the Family Forty-third Yearbook of the National Society for the Study of Education,' Part I, Chicago: Department of Education, University of Chicago, 1944, Chap. 13.

9. Horrocks, J. E., 'The Psychology of Adolescence.' Boston: Houghton Mifflin Co., 1951, Chap. 2.

10. Kuhlen, R. G., 'The Psychology of Adolescent Development,' New York: Harper & Bros., 1952, Chap. 12.

11. Levy, D. M., 'Maternal Overprotection. New York: Columbia University Press, 1943.

12. Malm, M., and O. G. Jamison, 'Adolescence'. New York: MacGraw-Hill Book Co., 1952.

13. Myers, C. E., 'Emancipation of the Adolescent from Parental Control,' The Nervous Child, 1946, Vol. 5, pp. 251-262.

14. Pierce, W. C., 'Youth comes of Age'. New York: McGraw-Hill Book Co., 1948.

15. Symonds, P. M., 'The Dynamics of Parent-Child Relationships'. New York : Bureau of Publications, Teachers College, Columbia University, 1949.

16. Seidman, J. M., 'The Adolescent: A Book of Readings.' New York: The Dryden Press, 1954, Chap. 16.

17. Wattenberg, W. W., 'The Adolescent Years', New York : Harcourt, Brace and Co., 1955, Chaps. 9, 10, and 22.

13. இளையோனும் அவனுடைய ஒப்பார்களும்

முன்னைய அதிகாரத்தில், இளையோர் பருவத்தின் துவக்கத்தில், சிறுவர்களும் சிறுமியரும் இல்லத்தினின்று பிரிந்து செல்கின்ற போக்கினையும், ஒப்பார்களுடைய உறவை நாடுகின்ற தன்மையையும் கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்பெற்றது. இளையோர்களின் முக்கியத் தேவைகளில் ஒப்பார் ஒப்புதலும் ஒன்ருகும். இவ்வதிகாரம் முழுவதிலும் ஒப்பார் தொடர்புகளின் முக்கியத்துவம்பற்றியும், இளையோர் நட்பின் தன்மைகுறித்தும், நாளிடங்கள் பால்பற்றிய பிரச்சினைகள் பற்றியும், இளையோர் பருவத்தில் ஒப்பார் நடவடிக்கைகளின் தொடர்பிலுள்ள பிரச்சினைகள்பற்றியும் விவாதிக்கப்படும்.

இளையோனின் ஒப்பார் உறவுகள்

ஒப்பார் உறவுகளின் முக்கியத்துவம்

குழந்தையின் நடத்தையை நாம் விளக்குவதற்கு அவன் தொடர்பு கொண்டுள்ள குடும்பத்தின் அடிப்படையிலும், மற்றத் திட்டமாக அமைக்கப்பட்ட நிறுவனங்களின் அடிப்படையிலுமே விளக்குகின்ற போக்கினைக் கொண்டுள்ளோம். இவ்வாறு சிறுவர் சிறுமியர்கள் ஒவ்வொருவருடனும் கொள்கின்ற தினசரி நடவடிக்கை அனுபவங்களின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுகின்ருேம். கரோலின் டிரயான் (Caroline Tryon) என்பவர், இளையோர் பருவத்தில் சொந்த சமூகப் பிரச்சினைகள் தோன்றும்பொழுது, ஒப்பார் உறவுகளின் முக்கியத்துவத்தைப்பற்றி வலியுறுத்தியுள்ளார். அவர் கூறுவதாவது:

'சிறுவர் சிறுமியர், தங்களுடைய குழந்தைப் பருவத்தின் பிற்பகுதியிலும் பூப்படையும்பொழுதும், பின்னிளையோர் பருவத்திலும் சந்திக்கின்ற முக்கிய வளர்ச்சிக்குரிய பணிகளை ஆராய்ந்தால், அவைகளில் பலவற்றைத் திருப்திகரமாக ஒப்பார் குழுக்களின் மூலம்தான்

பெறவியலும் என்பது தெள்ளெனத் தெரிகின்றது. இக்குழுவில்தான் செயலின் மூலமாக நமது பண்பாட்டின் சமூக முறைகளைக் கற்றுக் கொள்கின்றனர். செயலின் மூலமாகவும், செயல் மறுதலையின் மூல மாகவும் பால்பங்கினை அறிந்துகொள்கின்றனர். அவர்கள் போட்டி, கூட்டுறவு, சமூகத்திறன்கள், பயன் மதிப்புகள், நோக்கங்கள் ஆகிய வைகளையும் பொதுவாழ்வில் பங்கு கொள்வதன்மூலம் கற்றுக் கொள்கின்றனர்.'[1]

அதிகாரம் 9-ல் ஒப்பார்களுடன் கொள்கின்ற திருப்திகரமான உறவுகள், மற்ற வளர்ச்சிப் பணிகளைத் திருப்திகரமாக அடைவதுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்பெற்றது. சிறுவர் சிறுமியர் குழந்தைப் பருவத்திலும், முன்னிளையோர் பருவத் திலும் பெறும் சமூக உறவுகள், இளையோர் பருவத்தில் நல்ல ஒப்பார் உறவுகளை அடைவதற்கு மிகவும் முக்கியமானவையாகும். அதே சம யத்தில் நல்ல ஒப்பார் உறவுகள், இளையோர் பருவத்திலும் முதியோர் பருவத்திலும் நல்ல, சொந்த, சமூகப் பொருத்தப்பாடுகளை அடைவ தற்கு முக்கியமாகும்.

இளையோர்களின் ஒப்பார் பண்பாடு

உளவியல் சமூகவியல் ஆய்வுகள், நமது சமூகத்தில் சிறுவர் களும் சிறுமியர்களும் ஒரு துணைப்பண்பாட்டினைக் கொண்டிருக்கின் றனர் என்று காட்டுகின்றன. இளையோர் குழுக்களில் உள்ள பண் பாடு முதியோர் சமூகங்களிலுள்ள பண்பாட்டிற்கு ஒத்திருக்கின்ற தென்றாலும், மனவெழுச்சிகளிலும் சார்ந்திருக்கின்ற தன்மையிலும் சமூக அனுமதி இளையோர்களுக்குத் தேவைப்படுகிறது. உரிமை உறவிலும் மாறுதல்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. இக்குழுக் கள் தங்களுக்கென்று சொந்தத் தரங்களையும், பயன் மதிப்புகளையும், நோக்கங்களையும், முதியோர்களது தலையீடுகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்வதில் தனித்த முறைகளையும் கொண்டுள்ளன. இவை அவர்களுடைய புரியா மொழியிலும், (jargon), உடை உடுத் தும் முறையிலும், சில நடத்தை வகைகளிலும் வெளிப்படுத்தப்படு கின்றன. மார்ஜரி ஜோன்ஸ் (Marjarie Jones) என்பவரால், அமெரிக்காவில் சிட்டல் (Seattle) என்னும் பகுதியில், இளையோர் களது புரியா மொழியினைப்பற்றி நடத்தப்பட்ட ஆய்வில், இளையோர் பண்பாட்டின் தன்மையைப்பற்றிச் சிறப்பான சான்றுகள் கிடைத் துள்ளன.

[1] C. M. Tryon, 'The Adolescent Peer Culture,' Forty-third Yearbook of the National Society for the Study of Education. Part 1, 1944, Chap. 12.

'உண்மையான இளையோர் சிறுவனுக' (Real George) இருப்பதற்குக் கீழ்க்கண்ட வார்த்தைகளைப் பேசும்போது பயன்படுத்த வேண்டும்:

ரென்கி (Rinky): அதிகமாகக் கவனம் செலுத்தப்பட்டு உடை உடுத்துகின்றவரை, அதிகமான முக அலங்காரம் செய்பவரை, ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைப்படி நடக்காதவரை, சீட்டலில் வாழ்ந்த இளையோர்கள் இவ்வாறு புனைபெயரிட்டு அழைப்பர்.

அழகாக அழகாக (Lorely-Lorely): 'ஒரு பொம்மை' அல்லது 'அழகு இராணி'யை அழகாக இருக்கின்ருள் என்று குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தும் சொல். 'மிகச் சிறந்த அழகுள்ளவள்' என்று குறிப்பிடுவதற்காக இச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

கோவேறு கழுதை, பன்றி, காக்கை அல்லது நாய் (Mulie, Pig, Crow or Dog): அழகாக அழகாக என்பதற்கு நேர் மாறுக உள்ளதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

உலோகத்தால் ஆன பணம் சேர்க்கும் பெட்டி (Pig-Pot): உடன்பிறந்த சகோதரனுக்கு அளிக்கப்படும் பணம்.

ஒட்டிக்கொண்டான் (Socked): மேற்கண்ட நாளிடலில் ஒட்டிக்கொண்டவனைக் குறிக்கின்றது.

ஸ்பூக் (Spook): அயலார், அடுத்த ஊரிலிருந்து வந்துள்ளவர்.

டிஸ் (Dis): குடிப்பழக்கத்திலுைம், சிகரட்டு குடிப்பதனுலும் அதிகம் செலவு செய்பவன்.

இறுக்கமாகப் பிடித்துள்ளது (Hanging tough): யாராவது 'எப்படி செய்திகளெல்லாம்' என்று வினவினுல், அவனுடைய செய்திகள் நல்ல நிலைமையில் இல்லையெனில், இவ்வாறு பதிலளிப்பான்.

அதைப் பிடிக்கலாம் (Let's hit that): கட்டாயமாக வர வேண்டும் என்பதற்காகக் கூறுவது.

அப்பனே, நான் அதை அப்படியே சாப்பிடுகிறேன் (Man, I really eat that): மிகவும் பிடித்திருக்கின்றது என்பதற்காகக் கூறுவது.

கிண்டு (Dig): இது மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்ற சொல்லாகும். இதற்கு, 'கவனமாக இரு' என்றும், 'அதை நான் விரும்புகிறேன்' என்றும், 'அதை நான் விரும்பவில்லை' என்றும் பொருள்.

இவ்வாறான புரியா மொழி இளையோர் குழுவை முதியோர்களிடமிருந்து தனித்துவைக்கத் துணைபுரிகின்றது. இளையோர் குழுக்களில் முதியோர்கள் இடம்பெறாமல் செய்யவும் இது உதவுகின்றது. இளையோர்களிடத்துப் பல பற்றுமரபுகள் தோன்றி, அவர்களுடைய பண்பாட்டின் தன்மையையும், அவர்களது காலங்களின் தன்மையையும் அவை விளக்குகின்றன. ஐயோவா பதின்வயதினரிடம் காணப்படுகின்ற பற்றுமரபுகள்பற்றி 'இளைஞரது படப்பிடிப்பு' எனும் கட்டுரையில் கூறப்படுகின்றது.

'ஒரு சிறுமியர் குழுவினர் பள்ளியில் காலையில் நட்புக்கு அறிகுறியாகத் தங்களுடைய காலணிகளில் ஒன்றைப் பண்டமாற்றுச் செய்து கொள்கின்றனர். ஒரு குழுவினர் புகைவண்டிப் பாதைப் பொறியாளர் அணிகின்ற தொப்பிகளை உடற் பயிற்சிக்குச் செல்லும்பொழுதும், நாளிடல் நடன நிகழ்ச்சிக்குச் செல்லும்பொழுதும் அணிகின்றனர். ஒரு கூடைப்பந்துக் குழுவினர் காலுறைகளை அணியும்பொழுது, அவற்றில் பிரகாசமான சிவப்பு நிறமான காலுறைகளை விளையாட்டுக் காலுறைகளுக்குமேல் அணிந்தனர். சில இளையோர்களும் சிறுமியரும் வெள்ளைக் காலுறைகளை அணிந்துகொண்டதுடன், சட்டையின் முன்கைப் பகுதியில் வகுப்பின் பட்டியல் எண்ணையும் தைத்து வைத்துக்கொண்டனர்.[2]

இளையோர்கள், குழுத்தரங்களைச் சார்ந்த சில செயல்களையும் குறிக்கோள்களையும், அவர்களுடைய பெற்றோர்களிடம், 'மற்றப் பையன்கள் இவ்வாறே நடக்கின்றனர்' என்று காரணங்காட்டி மெய்ப்பிக்க முயல்கின்றனர். இளையோர்கள் முதியோர்களைத் தங்களது குழுக்களினின்று நீக்க, மறைமுகமாக அவர்களிடம் புரியாத மொழியையும் வட்டார வழக்குகளையும் பயன்படுத்தி, அவர்களிடம் 'இவை சிறுவர்களுக்கு மட்டுமே உரியவை' என்று குறிப்பிடுவர். வளர்ச்சிக் கால வாழ்க்கையில், இளையோன் பல ஆண்டுகளுக்கு ஒரே குழுவில் இடம்பெறுகிறான். அவனைக்காட்டிலும் இளையோர்கள், குழுவில் புதிய உறுப்பினர்களாகத் தொடர்ச்சியாக அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். வயது முதிர்ந்தவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காகக் குழுவிலிருந்து பிரிந்து செல்கின்றனர்.

திருப்திகரமான பங்கினை அடைதல்

குழந்தை வளர்கின்றபொழுது ஒப்பாரின் அனுமதியுள்ள திருப்திகரமான பங்கினைப் பெறுதலே முக்கியப் பணியாக அமைந்துள்ளது.

[2] 'Iowa Teen-agers Step Out', Ladies' Home Journal, August, 1949, p. 43 (Copyright 1949 by The Curtis Publishing Company).

அவன் குழந்தைப் பருவத்திலிருந்து இளையோர் பருவத்திற்குச் செல்லும்பொழுது, இது மேலும் முக்கியமாகிறது. தற்காப்பற்ற குழந்தையும், ஒதுக்கப்பட்ட குழந்தையும் சமூக வளர்ச்சியை மிகவும் துன்பமான காரியமாகக் காண்கின்றனர். இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பல பொருத்தப்பாட்டு வினைமுறைகளை இவர்கள் முயன்று பார்ப்பார்கள். இளையோன் திருப்திகரமான பங்கினை அடைவதில் தோல்வியுடைந்தால், அது அவனுக்குச் சிக்கலான பிரச்சினையாகின்றது. குழந்தையின் ஒப்பார் தொடர்பிலுள்ள பல முக்கியக் கண்டுபிடிப்புகளை அதனைப்பற்றிய ஆய்வுகள் புலப்படுத்துகின்றன:

1. குழந்தை ஒப்பார்களின் அனுமதியை வேண்டுகின்றது.

2. தனியன் இளையோர் பருவத்திற்கு வளரும்பொழுது, ஒப்பார் அனுமதி விசித அமைப்பில் அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றான்.

3. முன்னிளையோர்களும் இளையோர்களும், அவர்களுடைய ஒப்பார்களை அல்லது அவர்களைக்காட்டிலும் சற்று வயதில் முதிர்ந்தவர்களைப் பின்பற்ற முயல்கின்றனர்.

4. முன்னிளையோர் பருவத்தில் நல்ல ஒப்பார் தொடர்புகளைப் பெறுதல், இளையோர் பருவத்திலும் பின்னிளையோர் பருவத்திலும் நல்ல ஒப்பார் தொடர்புகளைப் பெறுவதற்குச் சிறந்த உறுதியாகும்.

5. துவக்க இளையோர் பருவத்துடன் தன்னல உட்குழுக்கள் தோன்றுதல் வருகின்றது. இத் தன்னல உட்குழுக்கள் இளையோர்களது சில தேவைகளைத் திருப்திப்படுத்துவதில் முக்கியப் பங்கினை வகிக்கின்றன.

சராசரி இளையோனது வாழ்க்கையில், அவன் ஒப்பார்களுடன் புகழ்பெற விரும்புகின்ற விருப்பம் இல்லாத பருவமே இல்லை எனக் கூறலாம். இவ்விருப்பம் பதின் ஆண்டுகளில் வாழ்க்கையின் எந்தப் பருவத்தைக் காட்டிலும் அதிகச் செறிவு கொண்டுள்ளதாய் விளங்குகின்றது. பர்டு பல்கலைக்கழக மக்கள் கருத்துத் தேர்வும், நாட்டிலுள்ள 10,000 உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடத்து நடத்திய மதிப்பீடும், பதின் வயதினர்கள் புகழுடையக் கொள்கின்ற விருப்பத்தின் தன்மையையும் அளவினையும் தருகின்றன. சிறுமியர்கள் சிறுவர்களைக்காட்டிலும் புகழுடைய அதிகமான ஆர்வத்தைக் காட்டினர். இம் மாறுபாடு சமூகப் பழக்க விதிகளுக்கு மிகவும் நெருங்கிய தொடர்புகொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை. இச் சமூகப் பழக்க விதிகள், சிறுமியர்கள் நண்பர்களைக் கொள்வதில் தடைகள் பல விதிக்கின்றன. சூ என்கிற சிறுமி ஜிம் என்பவன்மீது நாட்டங்கொண்டு அவனுடன் நாளிட விரும்புவாள். ஆனால், விதிப்படி ஜிம் அவளை நாளிடும்வரை அவள் காத்திருக்கவேண்டும். இருப்பினும், சிறுமியர்கள், சிறுவர்

கவுது கவனத்தைக் கவர்வதற்கும், நாளிடல்களைப் பெறுவதற்கும் அவர்கள் வினைமுறைகளைக் கற்றுக்கொள்கின்றனர். இவ் வினைமுறைகளைக் கற்றுக்கொள்வதனால், சிறுமியர்கள் நாட்டங்கொண்டிருப்பவர்களாகக் காட்டிக்கொள்ளமாட்டார்கள். சிறுவர், சிறுமியரைப்பற்றிய முடிவுகள் கீழ்க்கண்டவாறு இருந்தன:[3]

சிறுவர்களில் 50 சதவீதத்தினரும், சிறுமியர்களில் 60 சதவீதத்தினரும், 'என்னை எல்லோரும் அதிகமாக விரும்பவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்' என்ற இனத்தைக் கோடிட்டுச் சரிபார்த்தனர்.

சிறுவர்களில் 30 சதவீதத்தினரும், சிறுமியர்களில் 47 சதவீதத்தினரும், 'நான் இன்னும் அதிகமான புகழுடன் இருக்க விரும்புகின்றேன்' என்ற இனத்தைக் கோடிட்டுச் சரிபார்த்தனர்.

சிறுவர்களில் 45 சதவீதத்தினரும், சிறுமியர்களில் 56 சதவீதத்தினரும், புதிய நண்பர்களைத் தேர்ந்தெடுக்கக் கொள்கின்ற ஆவலுக்குக் கோடிட்டுச் சரிபார்த்தனர்.

சிறப்பான சமூகப் பொருத்தப்பாடுகளை அடைவதற்கு உதவி பெறவேண்டிய தேவையை இளைஞர்களில் பலர் உணர்ந்தனர். உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பள்ளிக் குழுவுக்கு (Panel) உதவி நாடி எழுதும்பொழுது, தங்களுடைய கூச்சத்தை எவ்வாறு தவிர்ப்பது என்பதுபற்றியும், நன்றாக மற்றவர்களுடன் உரையாடுவது எவ்வாறு என்பதுகுறித்தும், இக்கட்டான தன்மையுடைய சமூகத் தொடர்புகளை எவ்வாறு கையாள்வது என்பதுகுறித்தும் எழுதினார்கள். இவ்வுதவிகளின் காரணமாகச் சிறுமியர்கள் சிறுவர்களைக் காட்டிலும் உரையாடல் திறனில் அதிக மனவுறவினைப் பெற்றனர். ஆனால், சிறுமியர்கள் தன்னம்பிக்கையைப் பெறுவதில், சிறுவர்களைக் காட்டிலும் அதிக அக்கறை காட்டினர். தனியன்களது தனித்த சமூகத் திறன்கள் மற்றவர்களுடன் நன்றாகப் பழகுவதற்கு உதவி செய்கின்றது என்பது சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் பிரச்சினையாய் அமையவில்லை. பதினறு சதவீதத்தினர் சரியாக மற்றவர்களுடன் அறிமுகம் பெறுவதற்கு உதவியை நாடினர். பத்தொன்பது சதவீதத்தினர் இன்னமும் திறனுடன் மற்றவர்களுடன் பழகக் கற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டனர். 20 சதவீதத்தினர் முக்கிய நிகழ்ச்சிகளில் (கல்லூரி விழா, பட்டமளிப்பு விழா) எவ்வாறு செயலுற வேண்டும் என்பதுபற்றி அறிய விரும்பினர். எட்டு சதவீதத்தினர் மட்டுமே, சமூக நடத்தையில் இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் குறைவான வலுத்தாக்குதல் நடத்தை கொள்ளவேண்டும் என்று உணர்ந்தனர்.

[3] These results of the Purdue University Opinion Pole are adapted from the Atlanta Journal for July 4, 1949.

இளையோர் நட்புகள்

இளையோர்களது பெண்நட்புகளில் சமூகத் தொடர்புகள் இருத்தலும், ஒருவருக்கொருவர் தங்களது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளுதலுமே முக்கியமான மாறுதலுக்குட்படுகின்றவைகளாக ரீடர் என்பவரும், இங்கிலீஷ் என்பவரும் (Reader and English) கண்டனர்.[4] ஒரே தன்மையான அக்கறைகளையும் விருப்பங்களையும் கொண்ட சிறுமியர்கள் ஒருவருக்கொருவர் தங்களது தேவைகளைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்துகொள்ள சாத்தியமாக இருப்பவர்களாகத் தோன்றுகின்றனர். கலிஃபோர்னியாவில் நடந்த இளையோர்கள் பற்றிய வளர்ச்சி ஆய்வுகளில் பெற்ற முடிவுகள், இதற்கு ஒத்திருந்தன.[5] 'எவ்விதமான தன்மையுடையவர்களுடன் நீ அதிகமாக இருக்க விரும்புகின்றாய்?' என்ற கேள்விக்குத் துலங்கல்கள் பெறப்பட்டன. ஆய்வு செய்யப்பட்ட எல்லா நிலைகளிலும், சிறுவர் சிறுமியர்களில் பெரும்பான்மையோர் அவர்களுடைய வயதுக்குச் சரியான குழுக்களிடமே இருக்க விரும்புவதாகக் குறிப்பிட்டனர். ஆனால், அட்டவணை 18-1-ல் அளிக்கப்பட்டுள்ள முடிவுகள், பல இளையோர் சிறுமியர்கள் (9,10,11,12ஆவது படிவங்களில் இருந்த சிறுமியர்) தங்களைக் காட்டிலும் சற்றே அதிகமான வயதுடையவர்களுடன் இருக்க விருப்பம் தெரிவித்ததாகக் காட்டுகின்றன. இது அப் படிவ நிலைகளிலுள்ள சிறுமியர்கள் அதே நிலைகளில் இருந்த சிறுவர்களைக் காட்டிலும் அதிகமான உடலியல் முதிர்ச்சியைக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றது என்பதில் ஐயமில்லை.

தாம்ஸன் என்பவரும், ஹாராக்ஸ் என்பவரும் (Thompson and Horrocks) கிராமிய இளையோர் சிறுவர் சிறுமியரது நட்பு மாற்றங்களைப்பற்றி ஓர் ஆய்வு நடத்தினார்கள்.[6] இவ்வாய்வில் இரண்டு வார காலத்திற்குக் கிராமப் பகுதிகளில் வாழ்கின்ற 421 சிறுவர்களும், 484 சிறுமியர்களும் ஆய்வு செய்யப்பெற்றனர். அவர்கள் 10 வயதிலிருந்து 17 வயதிற்குள் நட்புகள் வலுவடைவதில் கூடுதல் இருப்பதாகக் கண்டனர். சிறுவர் சிறுமியர்களுக்கிடையே, நட்பு மாற்றங்களில், குறிப்பிடும்படியான மாறுதல் காணப்பெறவில்லை. இவ்வாறு

[4] N. Reader and H. B. English, 'Personality Factors in Adolescent Friendships'. Journal of Consulting Psychology, 1947, Vol. 11, pp. 212-220.

[5] C. M. Tryon, 'U. C. Inventory I: Social and Emotional Adjustment'. Revised form for presentation of cumulative record of an individual with group norms for a seven year period, 1939. Forms are presented for both boys and girls.

[6] G. G. Thompson and J. E. Horrocks, 'A Study of the Friendship Fluctuations of Rural Boys and Girls,' Journal of Genetic Psychology, 1946, Vol. 69, pp. 189-198.

நட்பு, இளையோர் ஆண்டுகளில் கூடுதலான நிலையான தன்மை கொண்டிருப்பது, முன்னர் ஹால் (Hall) என்பவராலும் மற்றவர்களாலும் கொள்ளப்பட்ட கற்பிதமான இளையோர் பருவம் என்பது குமுறல்களும் அழுத்தங்களும் கொண்ட பருவம் என்பதையும், நிலையில்லாத பருவம் என்பதையும் ஆதரிப்பதற்குரிய சான்றுகள் இல்லை.

ஜே. இ. ஹாராக்ஸ் என்பவரும், ஜி. ஜி. தாம்சன் என்பவரும் (J. E. Horrocks and G. G. Thompson) நகர, கிராம இளையோர் சிறுமியரை ஒப்பிட்டு, நட்பு மாற்றங்களைப்பற்றி ஆய்வு நடத்தினார்கள்.[7] இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்ட 969 ஆட்படுவோர்கள், நியூயார்க்கு பகுதியிலுள்ள இரண்டு நகரங்களிலிருந்தும், பென்சில்வேனியா பகுதியில் ஒரு நகரத்திலிருந்தும் எடுக்கப்பட்டார்கள்.



படம் 13-1.

உண்மை வயதிற்கும், சிறுவர் சிறுமியர் இரு சமயங்களில் இரண்டு வார இடைவெளிக்குப் பின்னரும், ஒரே தனியனைத் தங்களுடைய சிறந்த நண்பனாகத் தேர்ந்தெடுத்த சதவீதத்திற்கும் இடையே உள்ள உறவு (ஹாராக்ஸ், தாம்ஸன் தந்தது).

[7] J. E. Horrocks and G. G. Thompson, 'A Study of the Friendship Fluctuations of Urban Boys and Girls,' Journal of Genetic Psychology, 1947, Vol. 70, pp. 53-63.

அட்டவணை 13—1

'எந்தவிதமான தன்மையுடையவர்களுடன் நீ அதிகமாக இருக்க விரும்புகின்றாய்' என்ற கேள்விக்கு இளையோர்கள் தந்த துலங்கல்கள்.

	5HL6	6HL7	7HL8	8HL9	9HL10	10HL11	11HL12
				சிறுவர்கள்			
வளர்ந்தவர்கள்	1	1	1	3	0	0	0
என்னைவிடக் குறைந்த வயதுடையவர்கள்	0	3	7	1	1	1	1
என் வயதினர்கள்	86	80	89	87	89	85	95
என்னைவிடச் சற்றே அதிகமான வயதினை உடையவர்கள்	7	14	4	10	10	17	17
எனக்கு நண்பர்கள் அவசியமில்லை	6	1	0	1	1	0	0
				சிறுமியர்கள்			
வளர்ந்தவர்கள்	4	6	1	1	1	0	0
என்னைவிடக் குறைந்த வயதுடையவர்கள்	3	1	1	1	0	0	0
என் வயதினர்கள்	82	85	94	78	69	62	56
என்னைவிடச் சற்றே அதிகமான வயதினை உடையவர்கள் ...	8	8	6	25	36	42	50
எனக்கு நண்பர்கள் அவசியமில்லை	8	3	1	1	1	0	1

தேர்ந்தெடுக்கப்பட்ட இத் தனியன்கள், 6 வயதிலிருந்து 12 வயது வரை இருந்தார்கள்.

சிறுமியர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, அவர்கள் அனைவரும் ஏறத்தாழ சராசரி சமூகப் பொருளாதார அந்தஸ்தினைச் சேர்ந்திருப்பவர்களாய்த் தேர்ந்தெடுக்க முயற்சி எடுக்கப் பெற்றது. இதேபோன்று முன்னர் நடந்த ஆய்வில், கிராம இளை

யோர்கள், இவ்வாறான பொருளாதார நிலையைச் சார்ந்தவர்களாக இருக்க முயற்சி எடுக்கப்பெற்றது. நட்பு மாற்றங்களில் கிராமச் சிறுவர்களையும் நகரச் சிறுவர்களையும் ஒப்பிட்டபொழுது, கிராம இளையோர்களைக் காட்டிலும் நகர இளையோர்களது நட்பு சிறிது அதிகமாக நிலைத்திருப்பதாகக் காணப்பெற்றது. ஆனால், இம் மாற்றம் புள்ளியியல் அடிப்படையில் குறிப்பிடத்தக்கவாறு இல்லை. படம் 13-1 உண்மை வயதிற்கும், சிறுவர்கள் சிறுமியர்கள் ஒரே தனியாளைத் தங்களது சிறந்த நண்பர்களாகத் தேர்ந்தெடுப்பதற்குமிடையே உள்ள உறவினைக் காட்டுகிறது. சிறுவர்களும் சிறுமியரும் நட்பு நிலைபெறுவதை நோக்கித் தொடர்ச்சியாகப் போகின்ற போக்கினைக் கொண்டிருக்கின்றனர். இப்போக்கு சிறுமியரிடம் அதிகமாகக் காணப்படுகிறது.

சிறுவர்கள் ஜனநாயகத் தன்மையில் அதிகமான தொடர்புகொண்டிருக்கின்றனர் என்பதில் ஐயமில்லை. இது சிறுமியர்கள் சிறு 'தன்னல உட்குழுக்களை' (cliques) உருவாக்குவதற்கும், தனித்த நண்பரைத் தேர்ந்தெடுப்பதற்கும் கொண்டிருக்கின்ற போக்கினைக் காட்டுகின்றது. இக் குறிப்புகள் மேலும் குறிப்பிடுவது என்னவெனில், வளர்கின்றவர்கள் அதிகமாக நிலைத்திருக்கின்ற நட்புகளை நாடுகின்றார்கள் என்பதேயாகும்.

இளையோர்களின் தன்னல உட்குழுக்கள்

குழுக்களும் தன்னல உட்குழுக்களும் இளையோன் வயதின் இயல்பான தன்மைகளாகும். 14ஆவது வயது இளையோர்-பெண்ணை எங்கு சென்றிருந்தாய் என்று கேட்டால், அவள், 'நான் என்னுடைய குழுவுடன் தெருவழியே சென்றிருந்தேன்' என்று பதிலளிக்கலாம்; இங்கு அவள் தன்னுடைய சிறு குழுவினைக் குறிக்கின்றாள். அக் குழு அடக்கமான சிறு பகுதியாகும். எல்மெடௌன் இளைஞர்கள் (Elmtown's youth) எவ்வாறு நண்பர்களை உருவாக்குகின்றனர் என்பது பற்றி நடந்த ஆய்வு, இப் பிரச்சினையைப்பற்றிய மிகவும் பயனுள்ள செய்தியினைத் தருகிறது.[8] இவ்வாய்வு இளையோர்களது சமூக நடத்தை, அவர்களுடைய குடும்பங்கள் சமூக அமைப்பில் பெற்றிருக்கின்ற அந்தஸ்துடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்ற கற்பிதத்தைப் பரிசோதிப்பதற்காக நடத்தப்பட்டது. அமெரிக்க நடு மேற்குப் பகுதியைச் சார்ந்த 10,000 குடியேற்ற மக்கள் ஐந்து வகுப்புகளாகப் பிரிந்திருந்தனர். ஆய்வு செய்யப்பட்ட குழுவில் 369 சிறுவர், சிறுமியர் இருந்தனர். அவர்கள் 13 வயதிலிருந்து 19-வரை இருந்தனர். இது பதின்வயதுக் குழுவின் குறுக்குவெட்டுப் பகுதியாக

[8] A. B. Hollingshead, 'Elmtown's Youth.' New York: John Wiley and Sons, 1949.

இருந்தது. ஒருவருடைய ஒப்பார்களாலான இத் தன்னல உட்குழு, அதன் உறுப்பினர்களின் செயல்களில் மிகுந்த செல்வாக்குக் கொண்டிருந்தது. ஹோலிங்ஸ்ஹெட் குறிப்பிடுகின்றார்:

'இளையோர் குழுக்களின் சமூக அழுத்தம் மிக அதிகமான திறமையுடன் பணிபுரிகின்றது. முதியோர், இளையோர் ஆகியோரது சமூக உலகங்கள் அனுமதிக்கின்ற சமூக அமைப்பின்மூலமாக அதிகமான திறமையுடன் நட்புகளைப் பெறுகின்றன. பற்றார்வமுடைய பெற்றோர்களது நம்பிக்கைகள், அச்சங்கள், அறிவுரைகள் ஆகியவற்றைக் காட்டிலும், இளையோர் குழுக்களது சமூக அழுத்தம் இளையோர்களிடம் அதிகமான செல்வாக்குக் கொண்டுள்ளது.'[9]

இருபக்கச் செயல்முறை பெற்றோர்களினூலும் ஒப்பாரினூலும் தன்னல உட்குழுவில் செயலுறுவது, ஜாய்ஸ் ஜென்சன் (Joyce Jenson) (மூன்றும் வகுப்பைச் சார்ந்தவள்) என்பவள் தன்னுடைய தன்னல உட்குழுவுடன் கொண்ட உறவிலும், குறிப்பாகத் தன்னுடைய தோழியான கிளாடிஸ் ஜான்சன் (Gladys Johnson) (மூன்றும் வகுப்பைச் சார்ந்தவள்) என்பவளிடம் கொண்டிருந்த உறவிலும் காணப்பெற்றது.

'நாங்கள் ஒவ்வொருவரும் மற்றவரிடத்து அதிகமான செல்வாக்குக் கொண்டிருக்கிறோம். அவள் என் பெற்றோர்கள் என்னிடம் கொண்டிருக்கின்ற செல்வாக்கின் அளவினையே கொண்டுள்ளாள். நான் அவர்கள் சொல்கின்றவற்றைக் கேட்கிறேன். நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில், அவர்கள் கூறுகின்ற அனைத்தையும் என்னுல் கேட்க முடியவில்லை. நான் விரும்புகிற சில சிறுமியர்களுடன் வெளியே போவதைப் பெற்றோர்கள் தடுத்ததால், நான் அவர்களை ஏமாற்ற வேண்டியதாய் இருந்தது. பல பெற்றோர்கள், அவர்களுடைய குழந்தைகள் சிலருடன் விளையாடுவதை விரும்புவதில்லை. அதைப்பற்றி புத்திமதி கூறும்பொழுது, சில சிறுவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்; சிலர் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனுல், என்னுடைய பெற்றோர்கள் என்னிடம் கூறும்பொழுது, நான் கேட்பேன்.

என்னுடைய பெற்றோர்கள் எனக்கு நல்ல புத்திமதியே தருவார்கள் என்பதை நான் உணர்கின்றேன். ஆனுல், சில சமயங்களில் அவர்கள் குழந்தைகள் என்ன விரும்புவார்கள் என்பதைப் புரிந்துகொள்வதில்லை. அவர்கள் இருபது ஆண்டுகளுக்கு முன்னுல் எப்படி நடந்துகொண்டார்களோ, அப்படி நான் நடக்கவேண்டும் என்று எண்ணுகின்றார்கள். என் பெற்றோர்கள், குறிப்பாக என் தாயார்,

[9] Reprinted by permission from 'Elmtown's Youth' by A. B. Hollingshead, published by John Wiley & Sons, Inc., 1949, p. 208. The case of Joyce Jenson is also reprinted from the Elmtown study.

நான் என்ன செய்யவேண்டும் என்பதில் செல்வாக்குக் கொண்டாள்; ஆனால், கிளாடிஸ் என்னிடம் அதே அளவு அல்லது அதற்கு அதிக மான செல்வாக்குக் கொண்டாள்.

பாலின் டிரயான் (Pauline Tryon) (நான்காம் வகுப்பைச் சார்ந் தவள்) என்பவளும், அவளுடைய நண்பர்களும் எங்களுடன் சேர்ந்து இருக்க விரும்புகின்றனர். ஆனால், நாங்கள் மறுத்துவிட்டோம். ஏனெனில், அவர்கள் இரவெல்லாம் ஊர்சுற்றுகின்றனர். பள்ளிக்குச் செல்லாமலும் ஊர்சுற்றுவார்கள். நீல முக்கோணம் (Blue Triangle) எனும் ஹோட்டலில் அதிக நேரம் தங்கி, நேரத்தைச் செலவழிப் பார்கள்.

நாங்கள் சிலருடன் சேர்ந்து செல்ல விரும்புகின்றோம். ஆனால், அவர்கள் நாங்கள் உடன்வருவதை விரும்புவதில்லை. கிளாடிஸும், நானும் குக்கி பார்னட் (Cookie Barnett) (இரண்டாம் வகுப்பைச் சார்ந்தவள்) என்பவளுடனும், அவளுடைய நண்பர்களுடனும் வெளிச் செல்ல விரும்புகின்றோம். அல்லது G. W. G. என்பவளுடனும், அவ ளுடைய நண்பர்களுடனும் வெளிச்செல்ல விரும்புகின்றோம். ஆனால், நாங்கள் அவர்களது விருந்துகளில் அல்லது நடனங்களில் கலந்து கொண்டாலோ அல்லது அவர்கள் நாளிடுபவர்களை நாங்கள் நாளிட் டாலோ, எங்களை இழிவுபடுத்திப் பேசுகின்றார்கள்.'

எல்ம்டௌன் இளைஞர்பற்றிய ஆய்வில், 1,258 தன்னல உட்குழு இணைப்புகளைப் பகுத்தாய்வு செய்ததில், அவற்றில் ஐந்தில் மூன்று, ஒரே வகுப்பு நிலையைச் சார்ந்த சிறுவர் சிறுமியரிடத்து இருப்பதாகக் காணப்பெற்றன. அவற்றில் ஐந்தில் இரண்டு, அடுத்த வகுப்புகளைச் சேர்ந்த இளையோரிடத்து இருப்பதாகக் காணப்பெற்றன. 25-ல் ஒன்றுமட்டும், இரண்டு வகுப்பு இடைவெளியுள்ள இளையோரிடத்து இருப்பதாகக் காணப்பெற்றது. நெருங்கிய இணைப்புகளைப்பற்றிய ஆய்வு, 49-லிருந்து 70 சதவீதம் தன்னல உட்குழு இணைப்புகள், சம மான வகுப்புகள் கொண்டவரிடத்தே காணப்படுவதாகக் கண்டனர். மேலும், முதல் வகுப்பினைச் சார்ந்த சிறுவன் அல்லது சிறுமி, தன்னு டைய வகுப்புக் கோட்டைத் தாண்டிச் சென்றால் (மூன்றில் ஒரு பகுதியினர் அவ்வாறு செல்கின்றனர்), அவர்கள் இரண்டாம் வகுப் பைச் சார்ந்த ஒருவரிடமே செல்கின்றனர். இதேபோன்று இரண் டாவது வகுப்பைச் சார்ந்த சிறுவன் அல்லது சிறுமி, வகுப்புக் கோட் டைத் தாண்டிச் சென்றால், அவர்கள் முதல் வகுப்பிற்கோ மூன்றாவது வகுப்பிற்கோ செல்கின்றனர். இவ்வாறு பார்க்கும்பொழுது, முதல் வகுப்பும் ஐந்தாவது வகுப்பும், நெருங்கிய சொந்த நேரடித் தொடர்புகளைப் பொறுத்தவரை, மிகவும் அதிகமான மாற்றங்களைக் கொண்டிருப்பதாக அறிகின்றோம்.

தனித்து இருப்பவர்கள் (Isolates)

இவ் வயதுநிலையில், சிறுவர் சிறுமியரிடத்து, சில 'தனித்து இருப்' பவர்களைக் காணலாம். இச் சிறுவர் சிறுமியர் ஏதோ காரணத்தினால் குழுவிலுள்ள உறுப்பினர்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொள்வதில்லை. வைசன்பேக்கர் (Wisenbaker) என்பவர் நடத்திய ஆய்வில், 9ஆவது படிவ 66 சிறுமியர்கள், அவர்களுடைய நண்பர்களில் முதல் நான்கு சிறப்பான நண்பர்களை வரிசைப்படுத்தித் தரும்படி கேட்கப் பட்டனர்.[10] அவ்வாய்வின் முடிவுகளில் சில, படம் 13-2-ல் அளிக்கப் பட்டுள்ள சமூகப் படத்தில் தரப்பட்டுள்ளன. இம் முடிவுகள், உயர் நிலைப் பள்ளிச் சிறுமியர்களது குழுவில் ஒருவர் என்ன இருக்கும் என்று எதிர்பார்க்கின்றாரோ, அவற்றிற்கு மாதிரியாக விளங்குகின்றன.



படம் 13·2

நெருங்கிய தொடர்புள்ள தன்னல உட்குழுக்கள் காணப்பெற்றன. சமூகப் படம், சில சிறுமியர்களை யாரும் தேர்ந்தெடுக்கவில்லை என்

[10] M. A. Wisenbaker, 'A Study of the Factors Related to Social Isolation among High School Girls with Implications that Social Adjustment may be Improved,' Master's Thesis, University of Georgia, 1952, p. 32.

பதையும், சில சிறுமியர்களை ஒருவர்மட்டுமே தேர்ந்தெடுப்பதையும் காட்டுகின்றது. தனித்து இருப்பவர்களைப்பற்றிய ஆய்வு, அவர்களை அறிந்துகொள்வதற்குரிய தனித்த வகை ஏதும் இல்லை எனக் காட்டுகின்றது. வைசன்பேக்கரின் ஆய்வில் உள்ள தனித்திருப்பவர்கள், பல்வேறுபட்ட வகுப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதில்லை; சமூகச் செயல்களில் பட்டறிவும் தன்னம்பிக்கையும் இல்லாது இருந்தனர். தனித்து இல்லாதவர்கள், மனவெழுச்சி நிலையில் அதிகமான நிலைத்த தன்மை கொண்டவர்களாயும், பள்ளிக்குச் செல்லாதிருந்த நாட்கள் குறைவாயும், அதிகமான பல்வேறுபட்ட அக்கறைகளைக் கொண்டவர்களாயும், மற்றவர்களுடன் இருப்பதில் அதிகமான அக்கறை கொண்டவர்களாயும், மற்றவர்களுடன் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்பவர்களாயும், அதிகமான அளவில் வகுப்புக்கு வெளியே உள்ள செயல்களில் பங்கு கொள்பவர்களாயும், உயர்ந்த பண்பாட்டுத் தரங்கள்கொண்ட இல்லத்திலிருந்து வருபவர்களாயும் இருந்தனர்.

ஏற்றுக்கொள்ளுதலின் தொடர்பில் உள்ள பண்புக்கூறுகள்

நட்புகள் ஏற்படுவதற்கு நெருங்கிய தொடர்புள்ள பிரச்சினை, குழுவில் புகழுடைய விரும்புதலாகும். இளையோர் சிறுவர்களிடத்தும் சிறுமியரிடத்தும், புகழுடைய விரும்புகின்ற ஆசை மிகவும் வலிவுள்ளதாய் இருக்கின்றது. மேலும், சமூகத்தில் ஏற்றுக்கொள்ள உதவுகின்ற ஏதுக்கள் வயதுடன் மாறுதலுக்கு உட்படுகின்றன. குஹ்லன் என்பவராலும், லீ என்பவராலும் (Kuhlen and Lee) 6, 9, 12-ஆவது படிவநிலைகளில் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளுகின்ற அளவினை நிர்ணயம் செய்வதற்கு ஓர் ஆய்வு நடத்தப்பட்டது.[11] நியூயார்க்கின் மத்தியப் பகுதியில் உள்ள பள்ளிகளிலிருந்து 700 குழந்தைகளிடமிருந்து குறிப்புகள் பெறப்பட்டன. ஒரு பண்பினை அதிகமாக ஏற்றுக்கொள்ளும் குழுவின் சதவீதத்திற்கும், குறைவாக ஏற்றுக்கொள்ளும் குழுவின் சதவீதத்திற்கும் இடையேயுள்ள மாறுதல், அப்பண்பின் தரத்தினைத் தீர்மானிக்கின்றது. இத் தரங்கள் அட்டவணை 13-2-ல் தரப்பட்டுள்ளன. பல்வேறு பண்புக்கூறுகள் விகித அடிப்படையில் முக்கியத்துவம் கொண்டிருப்பதால், ஒத்து இருத்தல், 6, 9, 12ஆவது படிவங்களின் அட்டவணையில் தரப்பட்டுள்ள பட்டியலில் வெளிப்படையாகக் காணப்படுகின்றது. சிறுவர்களும் சிறுமியர்களும் கொண்டிருந்த முக்கிய மாற்றம், அவர்கள் பார்வைக்கு நல்ல தோற்றமுடையவர்களாய் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் முக்கியத்துவம் குறைந்தும், சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பண்புக்கூறுகளின் முக்கியத்துவத்தில் வளர்ச்சிபெற்றும் காணப்பெற்றதேயாகும்.

[11] R. H. Kuhlen and B. J. Lee, 'Personality Characteristics and Social Acceptability in Adolescence,' Journal of Educational Psychology, 1943, Vol. 34, pp. 321-340.

அட்டவணை 13—2

ஏற்றுக்கொள்ளுதலுடன் அதிகமான தொடர்புகொண்ட பண்புக்கூறுகள் (குஹ்லன், லீ தந்தவை).

ஆறுவது படிவம்	ஒன்பதாவது படிவம்	பன்னிரண்டாவது படிவம்
	(சிறுவர்கள்)	
மகிழ்ச்சிகரமாய்	புகழுடன்	நட்புடன்
ஆர்வத்துடன்	ஆர்வத்துடன்	விளையாட்டுகளைத் துவக்கிவைத்தல்
நட்புடன்	நட்புடன்	ஆர்வத்துடன்
புகழுடன்	துன்பமான காரியங்களைச் செய்தல்	மகிழ்ச்சிகரமாய்
பார்வைக்கு அழகாய்	மகிழ்ச்சிகரமாய்	புகழுடன்
	(சிறுமியர்கள்)	
நட்புடன்	புகழுடன்	புகழுடன்
ஆர்வத்துடன்	மகிழ்ச்சிகரமாய்	நட்புடன்
பார்வைக்கு அழகாய்	நட்புடன்	ஆர்வத்துடன்
புகழுடன்	ஆர்வத்துடன்	சமூகத்தில் நன்றாய்ப் பழகுதல்
விளையாட்டுகளைத் துவக்கிவைத்தல்	விளையாட்டுகளைத் துவக்கிவைத்தல்	நகைச்சுவையை அனுமதித்தல்

முன்னைய அதிகாரம் ஒன்றில், தனியனது சமூக வளர்ச்சியில், வகுப்பு அந்தஸ்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது. நம்பிக்கைகள், மனப்பான்மைகள், அறவொழுக்கங்கள், பயன் மதிப்புகள் ஆகியவை வகுப்பு அந்தஸ்துடன் மாறுபடுவதாக உற்றுநோக்கப்பட்டது. மரபுவழி வந்த உயர்நிலைப் பள்ளி, மாணவர்களிடம் நடுத்தர வகுப்பின் நடத்தை வகைகளும், பயன் மதிப்புகளும் உண்டாகுமாறு செயலுறுகின்றது. சமுதாயத்தில் நிறுவப்பட்டுள்ள திருச்சபையும், நடுத்தர வகுப்புத்தரங்களையே நிலைநிறுத்த முனைகின்றது. இதன் காரணமாக அவர்கள் பெரும்பாலும் கீழ்வகுப்புக் குழந்தைகளது வாழ்க்கை நிலைகளை அடையத் தவறிவிடுகிறார்கள். போப் (Pope) என்பவர் வெவ்வேறான சமூகப் பொருளாதாரப் பின்னணிகளிலிருந்து வந்த 12 வயதுக் குழந்தைகளது ஒப்பார் பண்பாட்டு அந்தஸ்துப் பயன் மதிப்புகளில் சில சுவைமிக்க மாறுதல்களைக் கண்

அட்டவணை 13—3

அந்தஸ்துப்பயன் மதிப்புகளில் உள்ள சமூகப் பொருளாதார மாறுபாடுகள் (போப் தந்தது).

கீழான வகுப்பிலிருந்து வரும் சிறுவர்கள் ஏற்றுக்கொள்ளும் நடத்தை :	*உயர்ந்த வகுப்பிலிருந்து வரும் சிறுவர்கள் ஏற்றுக்கொள்ளும் நடத்தை :*
சண்டையிடுதல்	சிறுமியருடன் வெளியே செல்லுதல்
உடல்வலிவினால் குழு ஆதிக்கம் செலுத்துதல்	நகைச்சுவையைப் புரிந்துகொள்கின்ற திறன்
தீரமாகச் செயலுறுதல், தலைமை	வகுப்பு அறைக் கட்டுப்பாடு
அமைதியற்ற நடத்தை	ஆர்வமுற்றிருப்பதில் அமைதியான தன்மை
கீழான வகுப்பிலிருந்து வரும் சிறுமியர்கள் ஏற்றுக்கொள்ளும் நடத்தை :	*உயர்ந்த வகுப்பிலிருந்து வரும் சிறுமியர் ஏற்றுக்கொள்ளும் நடத்தை :*
சண்டையிடும் ஆண் போன்ற சிறுமி (Tomboy)	சிறுவர்களுடன் வெளியே செல்லுதல்
நேரடி வலுத்தாக்குதல் (சண்டையிடுதல்)	நகைச்சுவையைப் புரிந்துகொள்ளும் திறன்
சிறுவர்களுடன் உடன்செல்லும் ஒப்பார்களை ஆண்களைப் போன்ற சிறுமியர் எனக் கருதுதல்	சுத்தமாயும் அமைதியாயும் இருத்தல்
	வகுப்பில் நன்றாக நடந்துகொள்ளுதல்
	வயதான நண்பர்கள் கொண்டிருத்தல்
	சிறுவர்களுடன் வெளிச்செல்லுகின்ற சிறுமியர்கள் புகழுடையவர்களாகக் கருதப்படுதல் ; பெண்தன்மையுடையவராகவும் கருதப்படுதல்

டார்.[12] அவைகளில் சில அட்டவணை 13-3-ல் அளிக்கப்பட்டுள்ளன. சண்டையிடுதல், உடல்வலிவினால் ஆதிக்கம் செலுத்துதல், சத்தமிடுதல் ஆகியவை கீழான சமூகப் பொருளாதார வகுப்பிலிருந்து வந்த 12-வயதுச் சிறுவர்களுக்கு மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியனவாக இருக்கின்றன. ஆனால், உயர்ந்த சமூகப் பொருளாதார அந்தஸ்திலிருந்து வருபவர்கள் இவற்றை ஏற்றுக்கொள்வதில்லை.

சமூக அனுமதிபெற ஆவல்

பால், தன்னைப்பற்றிய கருத்துகள் போன்றவை, தனியனது வளர்ச்சியிலும் முதிர்ச்சியிலும் முக்கியப்பங்கினைக்கொண்டிருக்கின்றன. இதன் வழியாகத்தான் குழுவால், பழக்க வகைகளிலும், நடத்தை வகைகளிலும், அக்கறைகளிலும் ஓர் ஒழுங்கான தன்மை வகிக்க முடிகின்றது. பொதுமக்கள் கருத்தின் சக்தியினால், இளையோன் உடனடியாகச் சமூகக் குழுவின் பழக்கவழக்கங்களையும் தரங்களையும் ஏற்றுக்கொள்கின்றான். பொதுமக்கள் கருத்தின் காரணமாக வாழ்க்கையில் அவனுடைய நிலையின் முன்னேற்றத்தை நாடி, அதன் வெற்றியில் பெருமையும் கொள்கின்றான். சமூக அனுமதி பெறுவதற்கான ஆவல், துவக்க நிலையிலுள்ள முக்கிய உயிரியல் அமைப்புகளான பால், பசி ஆகியவற்றின் ஊக்கிகளுடன் இணைத்துக்கொள்கின்றது. தனியனது இயற்கையான போக்குகள் அவற்றைப் பெறுவதற்காக மாற்றியமைக்கப்படுகின்றன. தனியனது வாழ்க்கையில் இந்த ஆவல் செயலுறுகின்றது என்ற உண்மையே, அவன் சமூகக் குழுவில் முழு உறுப்பினன் ஆகிவிட்டதற்குச் சான்றாக அமைகின்றது.

'சமூக இணைப்பின் உயர்ந்த வகைகளில், ஆதிக்கம் தனி மனிதனது கைகளிலிருந்து மாறி, அது சட்டம், பழக்கங்கள், மரபுகள், சமூக அனுமதிகள் ஆகியவைகளாகப் பிரதிபலிக்கின்றது....பல சமூக நிறுவனங்களில் ஆதிக்கம் செலுத்துகின்ற மனிதனது கருத்து, பழக்கம், அல்லது சக்தி ஆகியவற்றின் அதிகாரங்களில் வரம்பு உள்ளது.'[13] இவ்வரம்புகளை நாம் ஆய்வு செய்யத் துவங்குவோமானால், நாம் ஒரே சீராக அமைந்த ஒரு பொதுச் சக்தியினைக் காண்போம். குழந்தை முதிர்ச்சி அடைந்து, தனித்த மனிதனாக இல்லாது, மேலும் மேலும் ஒரு சமூக உறுப்பினனாக ஆகும்பொழுது, குழுவினுடைய பங்கின் சக்தியும் கருத்தின் சக்தியும் அதிக வலிவுள்ளவையாகின்றன.

[12] B. Pope, 'Socio-economic Contrasts in Children's Peer Culture Prestige Values,' Genetic Psychology Monographs, 1953, Vol. 48, pp. 157-220.

[13] M. A. May, 'The Adult in the Community', The Foundations of Experimental Psychology (C. Murchison, ed.). Worcester, Mass.; Clark University Press, 1929, p. 782.

இது சமூக உணர்வின் வளர்ச்சியில் மிகவும் தெளிவாகக் காணப்படுகின்றது. குழுவிலுள்ள இளையோர்கள் ஒரே சீராக இருப்பார்களானால், பழக்கவழக்கங்கள், விதிகள் ஆகியவை மேலும் முக்கியமான பங்கினைக்கொண்டு செயற்படும். ஒரே சீராக இருத்தல் என்பது தொடர்பு கொள்ளுகின்ற தன்மை, அக்கறைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றில் ஒப்புமை, குறிப்பாக இனவியல்புகளில் ஒப்புமை கொண்டிருத்தல் ஆகியவற்றைப் பொறுத்துள்ளது. இவ்வாறான ஒரே சீரான தன்மை உள்ளபொழுது, கட்டுப்பாடும் சமூக இணைப்பும் மிகவும் எளிமையாக விளைகின்றன. கல்வித் திட்டத்தினை உருவாக்குகின்றவர்கள் இவ்வுண்மையைக் கவனிக்கவேண்டும். இளையோர்களின் குழு நிகழ்ச்சிகள், சங்க நிகழ்ச்சிகள் ஆகியவற்றை அமைப்போரும் இந்த உண்மையை உணர்தல் வேண்டும்.

மேலும், சமூக அனுமதிக்கான ஆவலை இளையோனது வாழ்க்கையிலுள்ள சிக்கலான பொருத்தப்பாடுகளின் தொடர்பில் கருதவேண்டும். இதற்குச் சான்றாக நாம் ஓர் உயர்நிலைப் பள்ளியில் தேறிப் பட்டம்பெற இருக்கின்ற 'ஓர் அழகான பெண் பட்டதாரியை'* எண்ணுவோம். அவள் ஒரு குறிப்பிட்ட பட்டமளிப்பு உடையைப் பெற விரும்புகின்றாள் என்றும் எண்ணிக்கொள்ளுவோம். மற்றும், பல ஆபரணங்கள், புதிய உடைகள் ஆகியவற்றை அணிந்து பொதுவான ஒரு நடையலங்காரத்தை மனத்தில் கொண்டிருக்கின்றாள் என்று எண்ணுவோம். இது அவள் மனத்தில் இருந்துகொண்டேயிருக்கும். அவளுடைய நண்பர்கள் அப்படிப்பட்ட ஓர் உடையையே அனுமதிப்பார்கள் என்று கற்பனை செய்துகொள்கிறாள். ஜாக் என்பவனின் கவனத்தைக் கவர்வதற்கு இவ்வாடையலங்காரத்தினால் தான் இயலும் என்றும் கற்பனை செய்துகொள்கிறாள். ஆதலின், இவ்வாடையலங்காரத்தைப் பெரிதும் விரும்புவாள். ஆனால், அவளுடைய குடும்பத்தின் பொருளாதார நிலையின் காரணமாக அவளால் அவ்வுடைகளை வாங்கமுடியாமல் இருந்தால், அவள் அந்த உடையைத் தவிர்க்கவேண்டும் அல்லது அவற்றை வாங்குவதற்கு இதுவரை அறியாத ஒரு வழியைக் காணவேண்டும். ஆதலின், இளையோர்களும் முன்னிளையோர்களும் தங்களது நண்பர்களின் அனுமதியைப் பெறுவதற்குச் சில தவறான வழிகளைப் பயன்படுத்த முனைவார்கள். தான் விரும்புகின்ற மாணவன் முன்பு, பால் கவர்ச்சியுடன் தோன்றுவதற்காகப் பல்வேறு முறைகளைக் கையாள முன்வருகின்ற ஒரு சிறுமியை இங்கு நாம் காண்கிறோம். உடுத்துகின்ற உடை அழகாக

* அமெரிக்காவில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்ததுமே, பட்டமளிக்கின்றனர். அதற்கான விழாதான் 'பட்டமளிப்பு நடனம்' (Graduate Dance) என்பது. இவ்விழாவினை ஒவ்வோர் இளையோர் சிறுவனும் சிறுமியும் தங்கள் வாழ்வில் மறக்க முடியாத நாளாகக் கருதுகின்றனர்.

இருந்தால், அவள் கவர்ச்சியுடன் தோன்றுவதற்கு அது உதவி செய்யும். ஜாக் அவ்வாறான உடையிலே நாட்டங் கொண்டிருப்பதை அவள் கண்டிருக்கின்றாள். ஆதலின், அவள் திரைப்படங்களுக்குச் செல்லாமலிருந்து, மற்றக் கேளிக்கைகளைத் தவிர்த்து, உணவையும் குறைத்து, அவள் தேவை என்று உணர்கின்ற அவ்வாடையை வாங்க முயலுவாள். மேலும், சமூக அனுமதியைப் பெறுவதற்காகச் சிறு குற்றங்களிலும் அல்லது தவறான செயல்களிலும் ஈடுபடுவார்கள். உயர்நிலைப் பள்ளியின் சராசரிச் சிறுமி, சிக்கலான தன்மை வாய்ந்த மனத்தைக்கொண்டு அதனைச் சில காதல் போக்குகளினைச் சுற்றி வளர்த்துக்கொள்வாள். இவை ஆண்பாலர் அனுமதியினால் அல்லது அனுமதியின்மையினால் மிகவும் சக்தி வாய்ந்தவையாக மாறுகின்றன.

இளையோர் வயதானது மிகவும் செறிவான தன்னுணர்வு வாய்ந்த பருவமாகும். இதன் காரணமாக அவனுடைய சொந்தத் தோற்றத்தின் தொடர்பிலுள்ள இளையோர் தேவைகள், கருத்துகள், ஆசைகள் ஆகியவற்றிற்கு அதிகமான மதிப்பினை அளிக்கவேண்டும். மற்றச் சிறுமியர்கள் நகத்திற்குச் சாயம் தடவினால் அல்லது புது மாதிரியான தலையலங்காரத்தைக் கைக்கொண்டால், தாயாரின் கருத்துப்படி அவ்வாறான அலங்காரங்கள் நன்றாக இல்லை யென்றாலும், தாயார் இவ்வாறான அலங்காரங்களை அனுமதிப்பதே புத்தியுள்ள செய்கையாகும். இவ்வாறு செய்வதனால், அவள் தன்னுடைய ஒப்பார்களிடம் அதிகமான தன்னுணர்வைப் பெற்றவளாகின்றாள். ஆனால், இதனால், அவளுடைய தாய்க்கு, "அவளுடைய சொந்தத் தர அடிப்படைகளில், மகளுடைய தலையலங்காரம் எப்படி இருக்க வேண்டும் என்று கூறுவதற்கு உரிமை இல்லை என்பது பொருளன்று. இருப்பினும், பெற்றோர்களும் ஆசிரியர்களும், தரங்களைக் கொள்வதற்கும், அதனைக் கட்டாயமாகச் சுமத்துவதற்குமிடையே மாறுபாடு உள்ளது என்பதனை உணரவேண்டும். மேலும், அவர்கள் நல்ல வாழ்க்கை மெய்யுணர்வின் அடிப்படையில் தங்களுடைய தரங்களைச் சோதித்துப் பார்க்க வேண்டும்.

மாற்றுப் பால் அக்கறைகளும் செயல்களும்

மாற்றுப் பால் உணர்வு

மாற்றுப் பால் உணர்வு என்பது, மாற்றுப் பால் உறுப்பினர்கள் மீது கொள்ளும் அக்கறையாகும். குஹ்லன் என்பவராலும், லீ என்பவராலும் நடத்தப்பட்ட ஆய்வு, வயது அதிகமாகும்பொழுது மாற்றுப் பால் உறவுகள் அதிகமாவது குறித்துக் குறிப்பிடுகின்றது.[14]

[14] Op. cit., p. 326.

அவர்களுடைய கண்டுபிடிப்புகள், பல படிவநிலைகளிலுள்ள பல மாணவர்கள் சமூகச் செயல்களிலும் நிகழ்ச்சிகளிலும் தோழர்களைத் தேர்ந்தெடுப்பதன் அடிப்படையிலிருந்தன. அக் கண்டுபிடிப்புகள் அட்டவணை 13-4-ல் குறிப்பிடப்பட்டுள்ளன. 6ஆவது படிவத்திலுள்ளவர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்குக் குறைவானவர், மாற்றுப் பால் உறுப்பினர்களையே தங்களது தோழர்களாகத் தேர்ந்தெடுத்திருந்தனர். பன்னிரண்டாவது படிவத்தினரில் மூன்றில் இரண்டு பகுதியினரும் அவ்வாறே மாற்றுப் பால் உறுப்பினர்களையே தங்களது தோழர்களாகத் தேர்ந்தெடுத்திருந்தனர். சிறுவர்களும் சிறுமியர்களும் மாற்றுப் பால் உறுப்பினர்களைத் தோழர்களாகத் தேர்ந்தெடுக்கின்ற குறிப்பிடும்படியான போக்கு, 6ஆவது படிவத்திலிருந்து 12ஆவது படிவத்திற்குச் செல்லும்பொழுது காணப்படுகின்றது. அதிகமான மாற்றம் 6ஆவது படிவத்திலிருந்து 9ஆவது படிவத்திற்குச் செல்லும்பொழுது ஏற்படுகின்றது.

அட்டவணை 13—4

இளையோர் பருவத்தில் ஏற்படும் சமூக உறவுகளில் மாறுதல்கள்: பல்வேறு செயல்களில், பல படிவநிலைகளில் உள்ள சிறுவர் சிறுமியர் மாற்றுப் பால் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்ற சதவீதமும், மாற்றுப் பாலாரால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சதவீதமும் (குஹ்லன், லீ அளித்தது).

	படிவம் 6	படிவம் 9	படிவம் 12
சிறுமியர்களைத் தேர்ந்தெடுக்கின்ற சிறுவர்களின் சதவீதம்	45·0	72·5	75·0
சிறுவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற சிறுமியர்களின் சதவீதம்	39·2	59·7	68·0
சிறுமியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர்களின் சதவீதம்	31·2	49·1	65·8
சிறுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுமியர்களின் சதவீதம்	30·8	52·4	59·7

இளையோர்களிடத்து மாற்றுப் பால் தொடர்புகொண்ட பல்வேறு விதமான எதிர்வினை வகைகள் இருக்கின்றன. முழுக் குழு எதிர்வினைகளையும் புதுமையாக்குவது கடினமாகும். இருப்பினும், ஒவ்வொரு தனியனிடத்தும் பால்-உந்து இருப்பதனாலும், வாழ்க்

க்கையின் துவக்க காலத்தின் பருவத்திலேயே அது வேலைசெய்யத் துவங்கிவிடுவதாலும், இளையோர்களுடைய எதிர்வினையிலுள்ள மாறுதல்கள் பால்-உந்து இருப்பதனால்மட்டும் ஏற்படுவதில்லை. ஆனால், இம் மாறுதல்கள், பெரும்பாலும் அவ் உந்து ஒவ்வொருவரிடத்தும் வெவ்வேறு விதமாகச் செயலுறுவதன் காரணமாகவே தோன்றுகின்றன.

மாற்றுப் பால் உணர்வை மாற்றுப் பாலாரிடத்து ஏற்படுத்திக் கொள்கின்ற சமூகத் தொடர்புகளின் காரணமாகவே சரிவர உருவாக்கிக்கொள்ள இயலும். இத் தொடர்புகளில் இரு சூழ்நிலைத் தேவைகள் கட்டாயமாகும். முதலில், மாற்றுப் பால் உறுப்பினர்கள் போதிய எண்ணிக்கையிலும், ஏற்ற வயதிலும் கவர்ச்சிகரமான சொந்தக் குணங்களைக் கொண்டிருக்கவேண்டும். இரண்டாவதாக, தனியனது வழிகாட்டலிலும், நல்வாழ்விலும் அக்கறை கொண்டுள்ள பெற்றோரும் மற்றோரும் இதனை ஆதரிக்கின்ற மனப்பான்மை கொண்டிருக்கவேண்டும். இக் கட்டாயத் தேவைகள் இல்லையென்றால், குழந்தை இளையோனாக வளரும்போது மறைக்கப்பட்ட இழிவான மனப்பான்மைகளை, அன்னோர் பால் செய்திகளில் கொண்டிருப்பார்கள். இவை இளையோர்களிடத்து நிலைபெற்று அவர்களுடைய வளர்ச்சியைத் தடைசெய்யலாம்.

மிருகங்கள் சிலவற்றில் பூப்பு மாறுதல்கள் ஏற்பட்டு, அதனால் முதன்மையான இரண்டாந்தரப் பால் குணவியல்புகளிலும் மாறுதல் ஏற்பட்டு, பால் உறுப்புகள் வளர்ச்சியுறும்போது, தனித்த நடத்தைக் குணவியல்புகள் புதியனவாகத் தோன்றுவதாகக் கண்டறியப்பட்டது. இது, குறிப்பாக உயர்வகை உயிர்களிடத்துப் பூப்பு மாறுதல்கள் ஏற்படுமுன்னரே பால் விளையாட்டுகள் (sexual play) தோன்றுவதாகக் கூறுகின்றது. எப்படியிருப்பினும், பூப்புப் போக்கு நெருங்கும்பொழுது, பால்-உந்து அதிகமான செயல் தன்மையைக் கொண்டிருப்பதாகக் கூறலாம். அதற்குப் பின்பு முதிர்ச்சியின் காரணமாகவும், பால் தொடர்புகளின்மூலமாகவும், பால் அனுபவங்களின் காரணமாகவும் பால்-உந்து வளர்ச்சியுற்று வலுவடைகின்றது. பால்-உந்து வளர்ச்சியின் காரணமாக அதிகச் சரிவான வலுவினைப் பெற்றிருப்பதனால், அதிகமான பால்-செயல்களிலும், பால்-விளையாட்டுகளிலும் இளையோர்கள் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம். பால்-உந்து பழுத்த நிலையை அடைகின்றது. மிருகத்தனமான மனிதன், எல்லாக் காரியங்களிலும் முன்னிற்பதைக் காணலாம். இதற்கு மாறாக, நாகரிகமடைந்த சமுதாயத்தில் பல இளையோர்கள், இந் நிலை தோன்றுகின்றபோது, பள்ளியில் இருக்கின்றார்கள். ஆதலின், அவர்களுக்குப் பொருளாதாரத் தற்காப்பும் சுதந்திரமும் இன்னமும் கனவாகவே இருக்கின்றன. ஆதலின், 14 அல்லது

15 வயது சிறுவர் சிறுமியர் அவர்களது குடும்பத்தினரை ஆதரிப்பதற்காக வேலைதேடிச் செல்லமாட்டார்கள். மேலும், பழக்கவழக்கங்களும் சட்டங்களும் அவர்கள் அவ்வாறு செய்ய அனுமதிப்பதில்லை. ஆதலின், பால்-உந்து தோன்றுகின்ற காரணத்தினால், இப்பருவத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எதுவும் ஏற்படுவதில்லை.

நாளிடல் தோன்றுகின்ற காலம்

இளையோர்களுக்குரிய வளர்ச்சிப் பணிகளில், மாற்றுப் பாலார்களிடம் கொள்கின்ற திருப்திகரமான உறவுகளைப் பெறுவது ஒன்றாகக் கருதப்படுகின்றது. அவன் அல்லது அவள் முதல் நாளிடலைப் பெறுகின்றபோது, பெற்றோர்கள் தங்களுடைய மகன் அல்லது மகள் வளர்வதை உணரத் தொடங்குகின்றார்கள். பல சிறுவர்களும் சிறுமியர்களும் அளித்த சான்றுகளின்மூலமாக அவர்களுடைய முதல் நாளிடல்கள், மனைப்புற விருந்துகளிலும், திரைப்படங்களுக்குச் செல்லுவதிலும், திருச்சபை நடவடிக்கைகளிலும் இருப்பதாக அறிந்தனர். முதல் நாளிடல், பெற்றோர்களது புத்திமதியாலும், ஒப்பார்களது நையாண்டியாலும் சிக்கலான தன்மையைப் பெறுகின்றது. இளைஞர்கள் இவ்வாறான நிலையின் காரணமாக மிகவும் ஏமாற்றமடைந்து, மேலும் நாளிடுவதைத் தவிர்ப்பார்கள். முதல் நாளிடல் என்பது, மாற்றுப் பால் உறுப்பினர்கள் கொண்ட தன்னல உட்குழு உறுப்பினர்களது கூட்டுறவின் காரணமாக நிகழ்கின்ற தொன்றாகும். பெற்றோர்களும் ஆசிரியர்களும் குழந்தைப் பருவத்திலிருந்து இளையோர் பருவத்திற்கு நிலைமாறும்பொழுது, தனியன் கொள்கின்ற முக்கிய நிகழ்ச்சியென இதனை உணர்தல் வேண்டும். இம் முதல் நாளிடல்களில் தோன்றுகின்ற பொதுவான இயல்புகளாவன: கூச்சங்கொள்ளுதல், தவறு செய்துவிடுவோமோ எனும் அச்சம், மற்றவர் தவறாக எடுத்துக்கொள்கின்ற வகையில் பேசிவிடுவோமோ எனும் அச்சம், அதிகமான எச்சரிக்கையுடன் இருத்தல் ஆகியவைகளாகும்.

மிகவும் தீரமான இளைஞர்கள், அவர்களுடைய 12 ஆவது வயதிலேயே நாளிடத் துவங்கிவிடுகின்றார்கள். இது பொதுவாக மனைப்புற விருந்துகளிலும், குடும்பங்கள் ஒன்றுசேரும்பொழுதும், பெரும்பாலும் பெற்றோர்கள் உடனிருக்கும்பொழுதே பொதுவாக நிகழ்கின்றது. பதினான்கு வயதிலிருந்துதான் பொதுவாகத் தெளிவான நாளிடல் நிகழ்ச்சி துவங்குகின்றது. இதற்குப்பிறகு நாளிடல் பழக்கங்கள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. 16 வயதினைத் தனியன் அடையும்பொழுது, அது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சியாகின்றது. பதினான்கு ஆண்டிலிருந்து பதினாறு ஆண்டுக்குள் இளையோர்கள் தங்களது நாளிடல்களில் மாற்றுப் பாலாருடன் தனித்தும், தான்

நாளிட்ட சிறுமி அல்லது சிறுவனுடன் தனித்தும் முதியோர்போன்று இருக்கின்ற நிலையை அடைந்துவிடுகின்றனர். எல்ம்டௌன் ஆய்வில், இளையோர் அறிக்கைளின்படி, சிறுவர்களில் 43 சதவீதத்தினரும், சிறுமியரில் 58 சதவீதத்தினரும் அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்கு வருமுன்னரே 'முதல் நாளிடலை' அனுபவித்துவிட்டதாகக் குறிப்பிட்டனர்.

இளையோர் பருவத்தில் நாளிடல்

உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் நாளிடுகின்ற அளவு, பழக்க வழக்கங்கள், வாழ்க்கை நிலைகள், சமூகப் பின்னணிகள், தனித்த வயதுக் குழுவின் குறிப்பிட்ட அக்கறைகள் ஆகியவற்றைப் பொறுத்து இருக்கின்றது. கல்லூரியில், நுழைவு ஆண்டு மாணவர்களைக் காட்டிலும் நான்காவது ஆண்டு மாணவர்கள் அதிகமாக நாளிடுகின்றனர். அவர்களுடைய நாளிடல்களில் மிகக் குறைவான சமயங்களிலேயே மற்றவர்கள் உடன் வருகிறார்கள். இது, அவர்களுடைய அதிகமான சமூக, உடல் முதிர்ச்சியைக் காட்டுவதோடல்லாது, அவர்களுடைய பெற்றோர்கள், தாங்கள் வளர்த்துவிட்டதனால் மாற்றுப் பால் உறுப்பினர்களுடன் மிகவும் தடையின்றிப் பழக அனுமதியளிக்கின்றனர் என்பதையும் காட்டுகின்றது. பன்கி (Punke) என்பவர் கிழக்கத்திய நாடுகளான வடக்குக் கரோலினா, பென்சில்வேனியாவிலிருந்து மேற்கத்திய நாடுகளான கலிபோர்னியா, வாஷிங்டன்வரை 9 நாடுகளில் இளைஞர்களை ஆய்வு நடத்தி ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.[15] நாளிடல்கள் நிகழ்கின்ற விரைவினைக் குறிக்கின்ற செய்திகள் அட்டவணை 13-5-ல் அளிக்கப்பட்டுள்ளன.

இக்குறிப்புகளின்படி, நுழைவு ஆண்டினரிடம் பால் மாறுதல்கள் காணப்படவில்லை. சிறுமியர்கள் சிறுவர்களைக் காட்டிலும் விரைவாகவே முதிர்ச்சியடைகின்றனர் என்றாலும், சிறுமியரது சமூக வாழ்க்கையில் பெற்றோர் கொள்கின்ற கட்டுப்பாட்டின் காரணமாகவே சிறுமியர்கள் சிறுவர்களைக் காட்டிலும் அதிகமான நாளிடல்களைக் கொள்ளவில்லை.

நான்காம் ஆண்டில் இருக்கின்ற சிறுமியர்கள், இக்குறிப்புகளின்படி, சிறுவர்களைக் காட்டிலும் அதிகமாக நாளிடுகின்றனர். இதற்குப் பல காரணங்கள் தரப்படலாம். ஆனால், இச்சிறுமியர்களில் பலர்

[15] H. H. Punke, 'Dating Practices of High School Youth,' The Bulletin of the National Association of Secondary School Principals, January 1944, Vol. 28, No. 119.

பள்ளிப் படிப்பை முடித்த வயதானவர்களை நாளிடுவதும் ஒரு காரணமாகலாம். சிறுவர்களைக் காட்டிலும் விரைவிலேயே சிறுமியர்கள் திருமணம் செய்துகொள்வது இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

அட்டவணை 13–5

உயர்நிலைப் பள்ளி மாணவர்களது நாளிடல்களின் நிகழ்விரைவு. தனித்த நாளிடலுக்கு எதிராக இரண்டு நாளிடல்கள். மாணவரின் பால், படிவ அடிப்படையில் அளிக்கப்பட்டுள்ளன (பன்கி அளித்தது).

மாணவரது படிவமும் பாலும்	ஒரு மாதத்தில் கொள்கின்ற நாளிடல்களின் நிகழ்விரைவு எண்ணிக்கை					தனித்த நாளிடலுக்கு எதிராக இரண்டு நாளிடல்கள்	
	துலிவிக்கின்ற எண்ணிக்கை	ஒரு மாதத்தில் கொள்கின்ற நாளிடல் எண்ணிக்கையின் சதவீதப் பகிர்வு: ஒன்றுமில்லை	1-4	5-10	பத்துக்கு அதிகமான	துலிவிக்கின்ற எண்ணிக்கை	இரண்டு நாளிடல்களின் சதவீதம்
கல்லூரி நுழைவு ஆண்டினர் :							
சிறுவர்	1276	53·8	20·6	16·0	9·6	623	45·4
சிறுமியர்	1490	53·0	21·3	17·0	8·7	814	81·0
கல்லூரிக்கடைசி ஆண்டினர் :							
சிறுவர்	1408	21·6	29·5	28·9	20·0	1094	55·6
சிறுமியர்	1454	13·6	19·4	33·1	33·9	1412	80·6

பன்கி (Punke)யின் ஆய்வில், மாணவர்களிடம் அவர்கள் அடிக்கடி செயலுறுகின்ற மூன்று வகையான செயல்களையும், அவர்கள் விரும்புகின்ற மூன்று வகையான செயல்களையும் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. இக்கேள்விகளுக்கு ஜியார்ஜியா, கலிபோர்னியா நாட்டிலுள்ள இளையோர் தந்த பதில்கள் வரிசைப்படுத்தப்பட்டன. அவர்கள் அதிகமாகச் செயலுற்ற செயல்களுக்கும், அவர்கள் முன்னுரிமை அளிக்கின்ற செயல்களுக்கும் அதிக மாறுபாடு இருக்கவில்லை. இவ்விரண்டு பட்டியல்களில் முன்னின்ற மூன்று இனங்

களாவன: கடனமாடுதல், திரைப்படங்களுக்குச் செல்லுதல், காரில் சுற்றுதல். பன்கி மேலும் குறிப்பிடுவதாவது:

'கலிஃபோர்னியாவில் இருபாலாரைச் சார்ந்த நுழைவு ஆண்டினரும் நான்காவது ஆண்டினரும் செய்கின்ற செயல்களில், திரைப்படத்திற்குச் செல்லுவதற்கே முதலிடம் அளித்தனர். ஆனால், ஜியார் ஜியா இளையோர் சிறுவர் காரில் சுற்றுதலுக்கு முதலிடமும், சிறுமியர் திரைப்படத்திற்குப் போவதற்கு முதலிடமும் அளித்தனர்.



படம் 13-3

எல்ம்டௌன் சிறுவர் சிறுமியர்கள் வகுப்பிலுள்ளோருடனும், பிற வகுப்புகளுக்கிடையேயும் நாளிடுகின்ற வகைகள் (ஹாலிங்ஸ் ஹெட் தந்தது).

கலிஃபோர்னியாவில் உள்ள இரண்டு பாலாருக்கும் இரண்டு படிவத்தினருக்கும் அவர்கள் செயல்களில் காரில் ஊர்சுற்றுதல் முதலிடத்தையும், நடனமாடுதல் இரண்டாமிடத்தையும், திரைப்படங்களுக்குச் செல்லுதல் மூன்றுமிடத்தையும் கொண்டிருந்தது. ஜியார்ஜியாவில் நுழைவு ஆண்டிலுள்ள இருபாலாரும் நடனமாடுவதற்கு முதலிடத்தையும், நான்காவது ஆண்டிலுள்ள இருபாலாரும் நடனமாடுவதற்குக் கடைசி இடத்தையும் அளித்தனர். இரண்டு நாட்டிலுமுள்ள இரண்டு படிவநிலேச் சிறுவர்களும் தங்களது நாளிடல்களில் கீழ்க்கண்ட விளையாட்டு நடவடிக்கையில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டனர்: டென்னிஸ், நீந்துதல், பந்து எறிதல் (bowling), சறுக்குதல், கால்நடையாகச் செல்லுதல். இருபாலாரைச் சேர்ந்தவர்களும், இரண்டு படிவத்தைச் சேர்ந்தவர்களும், இரண்டு நாட்டிலும் நாளிடல் செயல்களில் ஈடுபடும்பொழுது, பொதுவாக விளையாட்டுச் செயல்களில் ஈடுபடுவதைக் காட்டிலும் அதிகமாக விளையாட்டுகளில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டனர். ஜியார்ஜியாவிலுள்ள இளைஞர்கள் கலிஃபோர்னியா இளைஞர்களைக்காட்டிலும் குறிப்பிடத்தக்கவாறு அதிகமாக நாளிடல்களிலும், சமயச் செயல்களிலும் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டனர். ஜியார்ஜியா இளைஞர்களில் நான்காவது ஆண்டைச் சார்ந்த இருபாலாரும் நுழைவு ஆண்டு இருபாலாரைக் காட்டிலும் அதிகமாக நாளிடல் செயல்களிலும் சமயச் செயல்களிலும் ஈடுபட்டனர்.'[16]

வகுப்புக்குள்ளேயும் வகுப்புகளுக்கிடையேயும் நாளிடுகின்ற வகைகள் குழு வகைகளுக்கு மிகவும் நெருங்கிய இணையான தொடர்பினைக் கொண்டிருக்கின்றன.[17] எல்ம்டௌன் இளைஞர்களில் 2-ஆம் வகுப்பினைச் சார்ந்தவர்கள் 5ஆம் வகுப்பு உறுப்பினர்களுடன் நாளிடல்கள் கொண்டடோராகக் காணப்படவில்லை. இந்த நிலையில் வகுப்புகளுக்கிடையேயுள்ள சமூகத் தொலைவு (social distance) மிக அதிகமாக இருந்தது. இதற்கு மாறாக, நாளிடல்களில் 61 சதவீதம் ஒரே வகுப்புக்குள்ளேயே நடைபெற்றது. அடுத்த வகுப்புடன் 35 சதவீத நாளிடல்கள் நடைபெற்றன. இரண்டு வகுப்பு வித்தியாசத்தில் 4 சதவீத நாளிடல்களே நடைபெற்றன. படம் 13-3 ஒரு வகுப்பு மற்ற வகுப்புகளுடன் கொண்டுள்ள உறவினைத் தெளிவாகக் காட்டுகிறது. இப்பட்டியல் சிறுவன், சிறுமியைக்காட்டிலும் கீழ்வகுப்பிலுள்ளோரிடம் நாளிடுகின்ற விருப்பத்தை அதிகமாகக் கொண்டுள்ளதாகக் காட்டுகிறது. மேலும், சிறுவன் தான் நாளிடுவதற்கான முதற் படியைத்

[16] Ibid., pp. 51-52.

[17] Op. cit., pp. 231-232. Figure 13-3 is reprinted by permission from 'Elmtown's Youth' by A. B. Hollingshead, Published by John Wiley & Sons, Inc., 1949.

துவக்குகின்றுறுதலின், அவ்வாறு செய்வதற்கு வாய்ப்பு இருந்கின்றது. சிறுவன் சிறுமியைக் காட்டிலும் அதிகமாகக் கீழ்வகுப்பிலுள்ளோரை நாளிடுவதற்குப் பல ஏதுக்கள் காரணமாகின்றன. எல்ம்டௌன் சிறுவன் தன்னுடைய வகுப்புக்கு மாறுன வகுப்பில் நாளிடும்பொழுது, மூன்றில் இரண்டு நிலைகளில் கீழ்வகுப்பிலுள்ளோரையே நாளிடுவான். எல்ம்டௌன் சிறுமி தன்னுடைய வகுப்புக்கு மாறுன வகுப்புடன் நாளிடும்பொழுது, மூன்றில் இரண்டு நிலைகளில் தன் வகுப்பைக் காட்டிலும் உயர்ந்த வகுப்பிலுள்ளோரையே நாளிடுவாள்

அமெரிக்க நாட்டின் எல்லாப் பகுதியையும் சார்ந்த 2,500 உயர் நிலைப் பள்ளி மாணவர்களைக்கொண்டு பதின் வயதினர்கள் நாளிடல் வழக்கங்களைக் கொண்டுள்ள மனப்பான்மைகளைத் தீர்மானிக்க ஓர் ஆய்வு நடத்தப்பட்டது.[18] ஒரு நாளிடலை உண்டாக்குவதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முக்கியமாகக் கருதப்படுகின்ற 25 இனங்களைத் தர அடிப்படையில் வரிசைப்படுத்துமாறு மாணவர்களிடம் கேட்கப்பட்டது. தரவரிசையில் அவர்கள் உயர்ந்தனவாகக் கருதி வரிசைப்படுத்திய ஏழு இனங்களாவன:

உடல்நிலையிலும் மனநிலையிலும் தகுதியுடையவரா

நம்பத்தகுந்தவரா, பொறுப்புடையவரா

சொந்தத் தோற்றத்திலும் பழக்க வகைகளிலும் பெருமை கொள்பவரா

பேச்சிலும் பழக்க வகைகளிலும் சுத்தமானவரா

இனிமையான தன்மையும் நகைச்சுவையும் கொண்டவரா

என்னையும் மற்றவர்களையும் பற்றிக் கவலைகொள்பவரா

வயதுக்கேற்ற நடத்தை கொண்டவரா அல்லது குழந்தைத்தனம் கொண்டவரா

சிறுமியர்களும் சிறுவர்களும் பல்வேறு இயைபுகளைத் தரப்படுத்தியதில் நெருங்கிய ஒற்றுமை இருந்தாலும், சில இனங்களில் மாறுபாடுகளும் இருந்தன. ஆண்கள் சமைக்கும் திறனை முக்கியமாகக் கருதினர். பெண்கள் பொருளாதார நிலையினை முக்கியமாகக் கருதினர் இத்துடன் ஆண்கள் சொந்தத் தோற்றத்திற்கு அதிகமான முக்கியத்துவத்தையும், பெண்கள் நெருங்கிப் பழகுதல், பெற்றோர்

[18] H. T. Christensen, 'Dating Behaviour as Evaluated by High School Students,' American Journal of Sociology, 1951-52, Vol. 57, pp. 580-586. University of Chicago Press (Copyright 1951-52 by the University of Chicago).

அனுமதி, மற்றவர்களைப்பற்றி அக்கறை கொள்ளுதல் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவத்தையும் அளித்தனர். இசைவில்லாத நடத்தை என்று வரிசைப்படுத்தியவற்றில், சில முக்கியச் சுவையான மாறுபாடுகள் இருந்தன. ஆண்கள் பொதுவாகக் குறைவான தடைகளுடனும், அக்கறையின்றியும், சிந்திக்காமலும், மரியாதையின்றியும், பால்-உந்துவினால் உந்தப்பட்டவர்களாகவும், சத்தமிடுபவர்களாகவும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர். இதற்கு மாருகப் பெண்கள் இயற்கையாக இல்லாமலும், சிணுங்குகிறவர்களாகவும், பணத்தில் கண்ணுள்ளவர்களாகவும், துலங்கலற்றவர்களாகவும், குழந்தைத்தனமானவர்களாகவும், துள்ளுகின்றவர்களாகவும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர்.

சிறுவர்கள், சிறுமியர்கள் இருபாலருமே நாளிடல் நிகழ்ச்சிகளில், வேண்டிய அளவு இல்லாத உணர்வுகளைப் பொதுவாக அனுபவித்தனர். இவ்வாறு ஒவ்வொரு பாலாரிலும் அதிகமான சதவீதத்தினர், மாற்றுப் பாலார் நாளிடல்களை உண்டாக்குவதில் அதிக ஆர்வம் காட்டவேண்டும் என்ற பற்ருர்வம் கொண்டுள்ளனர். அட்டவணை 13—6-ல் அளிக்கப்பட்டுள்ள குறிப்புகள், சிறுவர் சிறுமியர்களில பெரும்பான்மையினர் நாளிடல்கள் செலவுகளில் பாதியைச் சிறுமி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சில சமயங்களில் கூறப்படுகின்ற கருத்தை ஆதரிப்பதில்லை என்று காட்டுகின்றன. இருப்பினும், சிறுமியர்களைக் காட்டிலும் அதிகமான சிறுவர்களே 'டச்சு நாளிடலைக்'* கொள்ள விரும்புகின்றனர். சிறுவர்களைக் காட்டிலும் அதிகமான சிறுமியர்களே அறவொழுக்கத்தில் வெவ்வேருன தரங்களைக் கொள்ள விரும்புகின்றனர் என்பது வேடிக்கையாய் இருக்கின்றது. பெண்கள் அவர்களுடைய பாலாரைப்பற்றி ஆண்களைக் காட்டிலும் அதிகமாகக் குற்றங் காண்கின்றனர் என்ற கருத்தினை இந்த ஆய்வும், மற்ற ஆய்வுகளும் ஆதரிக்கின்றன. நாளிடல்களில் தழுவுதல், முகத்துடன் முகம் சேர்த்துக் கொஞ்சுதல் ஆகியவைகளைப் பற்றிய கேள்விகளுக்குத் தந்த பதில்கள், பாலுக்கு ஏற்றவாறும், அவர்களுடைய நெருங்கிய உறவுகளுக்கு ஏற்றவாறும் மாறுபட்டு இருந்தன.

சிறுவர்களைக் காட்டிலும் சிறுமியர்களில் ஒரு சிறு பங்கினர் முதல் நாளிடலில் முத்தமிடலாம் எனக் குறிப்பிட்டனர். கத்தோலிக்க உயர்நிலைப் பள்ளிச் சிறுமியர்களிடமிருந்து சகோதரி கினோபர்

* *டச்சு நாளிடல்: அவரவர்கள் தங்களது செலவுகளை ஏற்றுக் கொள்ளுதலே டச்சு நாளிடலாகும். செலவுகளைச் சமமாக ஆணும் பெண்ணும் பகிர்ந்துகொள்வதையும் டச்சு நாளிடல் என்று கூறுவார்கள்.*

அட்டவணை 13—6

நாளிடல்களைப்பற்றிக் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு உயர் நிலைப் பள்ளிச் சிறுவர்களும் சிறுமியர்களும் தந்த பதில்களின் ஒப்புமை (கிரிஸ்டென்சன் தந்தது).

	ஆம் என்று பதிலளித்த சதவீதம்		இல்லை என்று பதிலளித்த சதவீதம்		பதிலளிக்காத, தெரியாது என்று கூறிய சதவீதம்	
	சிறுவர்	சிறுமியர்	சிறுவர்	சிறுமியர்	சிறுவர்	சிறுமியர்
நாளிடல்களைக் கேட்பதில் சிறுவர்கள் போன்றே சிறுமியர்கள் எல்லோரையும் சகஜமாகக் கேட்பது நல்லது என நினைக்கின்றீர்களா?	48	27	33	54	19	19
சிறுமியர்கள் நாளிடல்களின் செலவுப் பணத்தில் பாதியை ஏற்றுக் கொள்வது நல்லது என நினைக்கிறீர்களா?	29	21	53	55	18	24
'முதல் நாளிடலின்' போது முத்தமிடுதல் சரியானதா?	51	33	26	44	23	23
முதல் முத்தமிடுதல் திருமணமான பின்புதான் நடக்கவேண்டுமா?	3	8	87	93	10	4
நெருங்கித் தழுவுதல்கள் திருமணமானபின்புதான் நடக்கவேண்டுமா?	31	66	89	16	80	18
தவறான பாலொழுக்க நடத்தை சிறுவர்களைக் காட்டிலும் சிறுமியர்களுக்குத் தவறானதா?	27	36	42	32	31	32

(Knoebber) [19] அவர்கள் பெற்ற முடிவுகளையும், கத்தோலிக்க

[19] Sister M. Knoebber, 'Self-Revelation of the Adolescent Girl'. Milwaukee: Bruce Publishing Co., 1936, p. 110.

உயர்நிலைப் பள்ளிச் சிறுவர்களிடமிருந்து ஃப்ளீஜ் (Fleege) [20] அவர்கள் பெற்ற முடிவுகளையும் ஒப்பிட்ட பொழுது, இது தெளிவாகக் காணப்பட்டது. தழுவுதலும், முகத்தை முகத்துடன் சேர்த்தலும் பாவமான காரியமா என்று வினவியதற்குச் சிறுமியர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் 'ஆம்' என்று பதில் அளித்தனர். இக் கேள்விக்குச் சிறுவர்களில் ஐந்து சதவீதத்தினர்மட்டுமே 'ஆம்' என்று பதில் அளித்தனர். பொதுவாக அதிகமான நெருங்கிய பழக்கம் கொள்ளும் போது, இரு பாலாரும் அதனை நாளிடலாக ஏற்றுக்கொள்ளவில்லை.

இளையோர்களின் பால் வாழ்க்கை

பூப்படைந்தபின்னர்தான் பால் - உந்துவின் வெளிக்காட்டல் பிரச்சினையானது ஒரு புதிய அமைப்புள்ள பிரச்சினையாகத் தோன்றுகிறது என்ற தவருன கருத்து ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுவந்தது. குழந்தை பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும், சமூகப் பழக்க வழக்கங்களினுலும் வழிகாட்டப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டுச் சில கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகின்றுன். ஆதலின், பால்-உந்துவின் தொடர்பிலுள்ள பல்வேறு உடல் அல்லது உணர்வு இன்பங்களின் வெளிக்காட்டுதல் வரம்புக்குள்ளாகிறது. நேரடியான, மறைமுகமான இக் கட்டுப்பாடுகள், பால் - உந்துவின் தொடர்பிலுள்ள பல்வேறு குழந்தைப் பருவ, குழந்தைத்தனமான நடத்தை வகைகளைக் கட்டுப்படுத்துகின்றன. இது இளையோர் பருவத்தில் தோன்றுகின்ற சிக்கல்தன்மை வாய்ந்த பால் - உந்துவினின்று மாறுபட்டுள்ளது. இவ்வாறு இளையோர் பருவத்தில் இவ் உந்துவானது, இயற்கையாக மாற்றுப் பால் உணர்வுகளை நோக்கிச் செல்லுகின்றது. உயிரியல் அடிப்படையில் இனப்பெருக்கத்திற்கு இந்நடத்தை துணைசெய்கிறது. கின்சே (Kinsey) என்பவரும், அவருக்குத் துணை புரிந்தவர்களும் பால் நடத்தையில் உள்ள போக்குகள்பற்றி நடத்திய ஆய்வுகள், ஆண்கள் பெண்களிடத்துப் பால்-உந்து கொள்ளுகின்ற முக்கியத்துவத்தினையும் வலிவினையும் உணர்த்துகின்றன. [21] இளையோர் ஆண்டுகளில் பால்-உந்துகளின் வளர்ச்சி, கட்டுப்பாடு, செல்லுகின்ற வழி ஆகியவை பிரச்சினைகளை அளிக்கின்றன. இளையோர்களுடைய பயிற்சி, வழிகாட்டுதல் ஆகியவற்றில் அக்கறை கொண்டுள்ள சமூக சக்திகள் எல்லாவற்றிற்கும் இப் பிரச்சினைகள் அறைகூவல் விடுக்கின்றன.

[20] U. H. Fleege, 'Self-Revelation of the Adolescent Boy.' Milwaukee: Bruce Publishing Co., 1944, p. 294.

[21] A. C. Kinsey, et al., 'Sexual Behaviour in the Human Male.' Philadelphia: W. B. Saunders, 1948;———, 'Sexual Behaviour in the Human Female.' Philadelphia: W. B Saunders, 1953.

மாற்றுப் பாலார்முன் தன் நிலையை உறுதிசெய்தல்

இளையோர் சிறுவர்களிடத்தும், பால் முதிர்ச்சி பெறுகின்ற ஆண்மிருகங்களிடத்தும் மாற்றுப் பாலார் முன்னிலையில் தன் நிலையை உறுதிசெய்கின்ற தன்மை காணப்படுகிறது. மிருகங்கள் மாற்றுப் பாலுடன் இணைகின்ற சமயத்தில், அதிகமான அளவு சத்து சேமித்துவைக்கப்பட்டு, சில தனித்த தூண்டுதல்களுக்குத் தருகின்ற துலங்கல்களாக இணைசேர்கின்ற காலங்களில் வெளிப்படுத்தப்படு கின்றது. சில குறிப்பிட்ட இனங்களில், குறிப்பாக இரை தேடு கின்ற பறவைகளிடம், அவைகளின் இரு பால்களிலும் இச் செழிப் பான தன்மை காணப்படுகின்றது. இது பொதுவாக அருமையாகப் பறக்கின்ற வினைமுறைகளின்மூலமாகவும், ஒன்றையொன்று சுற்றி வட்டமிடுவதன்மூலமாகவும், செயற்கையான வழிகளில் குரல் ஒலி எழுப்புவதன்மூலமாகவும் வெளிக்காட்டப்படுகின்றது. ஆண் பெண் ணிற்குமுன்னால் தன் பெருமையைக் காட்டிக்கொள்வது சிறப்பான காட்சியாகும். இவ்வினைமுறைகளினால் ஓர் இன்பமான உணர்வு விளைகின்றது என்பதில் ஐயமில்லை. உடல் முளைப்புகள் பொதுவாக வெளியாவதாலும், மறிவினை இணைப்புகளாலும், உடல் அமைப்பு களின் முதிர்ச்சியினாலும் வளர்ச்சியினாலும் இவை ஏற்படுகின்றன.

டார்வின் (Darwin) ஆண்மயில்களும், வான்கோழிகளும் எவ் வாறு அவைகளின் பெண்ணினங்களுக்கு முன்னால் தங்கள் அழகான தோகைகளையும், வால்களையும் தூக்கி ஆடுகின்றன என்று அழ காக எடுத்துக்காட்டியுள்ளார்.[22] டார்வின் மேலும் குறிப்பிடும் பொழுது, ஆங்கஸ்வான் கோழி, தன்னுடைய வெளிக்காட்டுதல் களுக்குப் பெண்ணினம் எவ்வாறு துலங்கல்களைத் தருகின்றது என மிகவும் எச்சரிக்கையுடன் உற்றுநோக்குகிறது என்று கூறுகிறார். இதனை ஆணினத்தினுடைய பெருமையின் காரணமாக விளைகின்றது என்று விளக்குவதைக்காட்டிலும், அப் பெருமை பட்டறிவினால் வளர்ச்சியடைந்துள்ளது என்றும், உயிரியல் அமைப்பு வளர்ச்சி யடைந்து பயன்பெறுகின்ற நிலையை அடைவதால் ஏற்படுகிறது என்றும் விளக்கலாம். பல்வேறு மிருகங்களின் வகைகளில் இவ்வாறு இணைதலானது, பால்-செயல்களுக்குத் துணையானதாகும். அதிகமாகப் பெற்றிருக்கின்ற சத்தின் விளைவாக விளையாட்டுப் பயிற்சி தோன்றி, அது தன் பாலாரிடத்தும், மாற்றுப் பாலாரிடத்தும் கைக்கொள்ளப் படுகிறது.

மனித இனத்திடம் தன் நிலையை உறுதி செய்கின்ற மனப்போக் கினையும் காணலாம். தீரச்செயல்களைக் கொள்கின்ற உணர்வினை

[22] C. Darwin, 'Expression of the Emotions in Man and Animals.' New York: Appleton-Century-Crofts, Inc., 1873.

யும், அதிகமாகச் செயற்படுவதையும், வலிமையையும், திறனே இடையருது வெளிக்காட்டுகின்ற தன்மையையும் கொண்ட இளே யோனே உற்றுநோக்கினுல், அவனுடைய நிலே டார்வினுடைய வான் கோழியின் நிலேமைக்கொப்பானதாக இருப்பதைக் காணலாம். இதே போன்று மனித இனத்தின் பெண்ணேப்பற்றியும் கூறலாம். அவளு டைய பெண்தன்மையான பழக்கநிலேகளும், அவளுடைய கூச்சம், அவள் இடைவிடாது மற்றவர்களேவிடச் சிறப்பாக இருக்க எடுக் கின்ற முயற்சி ஆகிய யாவும் இம் மனப்போக்கின் வெளிக்காட்டு தலே ஆகும். சாதாரண முதியோன் நிலேயை அடைவதற்கு இளே யோன், இளேயோர் பருவத்தைக் கடந்து செல்லவேண்டும். இவன் கடந்து செல்லவேண்டிய இளேயோர் பருவத்தில், தன்னேச் சுற்றிப் பரந்துள்ள குழந்தைப் பருவ, குழந்தைத்தனமான பால்-உந்துவின் வெளிக்காட்டுதல்களும், பால் உணர்வின் காரணமாக மாற்றுப் பால் உறுப்பினரிடத்துக் காட்டுகின்ற மாற்றுப் பால் உணர்வுகளும் இருக்கின்றன.

உயிரியல் மாணவர்களும், குழந்தை உளவியல் மாணவர் களும், ஆண்பெண்ணினுடைய இரண்டாந்தரப் பால் குணவியல்பு கள் சில, உடலுக்குள்ளிருக்கின்ற சுரப்பிகளே, குறிப்பாகப் பால் சுரப்பிகளேப் பொறுத்து இருப்பதாகக் காட்டியுள்ளனர். பாலினுல் தூண்டப்படும்போது, பொதுவான உளமாறுதல்களும், மனவெழுச்சி நிலேயும், முழு உயிரியின் நடத்தையும், பொதுவான அமைதியின்மை யும் காணப்படுகிறது. மார்ஸ்டன் (Marston) என்பவர் இந்த நிலே யில் குருதி அழுத்தம் (blood pressure) பொதுவாகக் குறைந்திருப் பதாகக் கூறுகின்ருர். தானியங்கு நரம்புமண்டலத்தின் சேக்ரல் (sacral) பகுதி வழக்கத்திற்கு அதிகமாக இயங்குகின்றபோது, அதிகமான அளவில் குருதியும், மற்றவைகளும் சுரப்பிகளிலிருந்து சுரக்கின்றன. இது நேரடியாகப் பால் மனவெழுச்சியுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. ஆனுல், இத் தொடர்பு பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லே. இம்மாறுதல்கள் உடலின் உள்ளுறுப்பு களின் மாறுதல்களினுலும், சுரப்பிகளின் மாறுதல்களினுலும் ஏற்படு கின்றனவென்ருலும், உயிரியின் எல்லா நடத்தைகளேயும் பாதிக் கின்றன.

பால்களின் உறுப்பினர்கள் எல்லோருமே மாற்றுப் பாலாருக்குக் கவர்ச்சிகரமாகத் தோற்றமளிப்பதில்லே. ஒருவரே எல்லோராலும் சமமான அளவில் விரும்பப்படுவதுமில்லே. அழகு, நல்ல பழக்க நிலேகள், 'பெண்மைத் தன்மையான குணங்கள்,' ஆரோக்கியம், கல்வி, ஆளுமை ஆகியவைகள் சிறுமியர்களிடத்து இருப்பதையே விரும்புவதாகச் சிறுவர்கள் கூறினர். பெண்மைத் தன்மையான நல்ல பார்வைகள் என்று குறிப்பிடப்படுவனவெல்லாம் பால் கவர்ச்

சிக்கு மிகவும் அவசியமானவையாகும். ஆனால், அவைகளின் மதிப்பீடு, தலைமுறைக்குத் தலைமுறை மாறுபட்ட இனங்களின் அடிப்படைகளில் இருக்கும். பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில், உடலில் வளைவுகளைச் (curves) சிறப்பாகக்கொண்டவர்கள் சிறந்த அழகு படைத்தவர்களாகக் கருதப்பட்டனர். ஆனால், இருபத்தைந்து முப்பது ஆண்டுகளுக்குப் பின்னால், வளைவுகள் மதிப்புகளை இழந்துவிட்டன, முடிவுகள் எடுப்பதற்குப் பழங்கால நாகரிக வகைகளை ஆய்வுசெய்தல் வேண்டும். இன்று நாகரிகம் என்று கருதப்படுவனவற்றை முன்னைய நூற்றாண்டின் நாகரிகத்துடன் ஒப்பிட வேண்டும். பழங்காலப் பெண்கள் பால் கவர்ச்சி உண்மையிலேயே பெற்றிருந்தனர். அவர்களை எல்லோரும் விரும்பினார்கள். ஆனால், இன்று ஒரு சிறுமி அவளுடைய ஆடையலங்காரங்களுடனும், பழக்க வகைகளுடனும் தோற்றத்தால்மட்டுமே, அவளை எல்லோரும் அறிவார்வத்துடன் பார்க்கின்றனர்.

இந்த உண்மைகளிலிருந்து அறியப்படுகின்ற பொதுமை என்னவெனில், உடைகளிலும், பழக்க வகைகளிலும், அக்கறை வகைகளிலும், முக அலங்கார வகைகளிலும், மொழியிலும், சிகையலங்காரங்களிலும் உள்ள இன்றைய நாகரிக முறைகள் இன்று வாழ்கின்றவர்களுக்குமட்டுமே பால் கவர்ச்சி உடையனவாய் இருக்கின்றன. இதே நாகரிக வகைகள் பிற்காலத்தில் கைக்கொள்ளப்பட்டால், அதைப் பின்பற்றுபவர்கள் நகைப்புக்கிடமாவார்கள். இன்றைய தாய் தன்னுடைய மகளை உடை, பழக்கவகைகள், அக்கறைகள் ஆகியவற்றில் தன்னைப் பின்பற்றும்படி வற்புறுத்தினால், அவள் உண்மையை உணரத் தவறுகின்றாள் அல்லது உலக வழக்கின்படி வாழ மறுக்கின்றாள் என்பதே பொருளாகும். உண்மைகளைச் சரிவர உணர்ந்தால், உடைகள், தோற்றம், பழக்க வகைகள்போன்ற விவாதத்திற்குரிய பொருள்களின் உண்மைப் பயன் மதிப்பை அறியமுடியும்.

இளையோர் சிறுவன் அல்லது சிறுமி புதுமையான அல்லது மறைக்கப்படுகின்ற பொருள்களுக்கு எளிதில் துலங்குவார்கள் என்ற உண்மையைப் புறக்கணிக்கக்கூடாது. ஏனெனில், நடத்தையை ஊக்குவிப்பதில் அறிவார்வமும், தன்னிலையை உறுதி செய்தலும் முக்கியப் பங்கினைக் கொண்டிருக்கின்றன. ஒரு தனியனை நன்றாக அறிந்திருந்தால், அத்தனியன்மீது கொள்கின்ற பால் கவர்ச்சி குறைவாகவே இருக்கும். சமுதாயத்தில் புதிதாக வந்துள்ள பெண், வேறு விதமான பால் கவர்ச்சியைக் கொண்டிருந்தால், அவள் மற்றவர்களைக்காட்டிலும் முன்னிலையில் இருக்கின்றாள். குறிப்பாக இளையோர் பருவத்தில், பால் இயல்புகளில் மாறியிருக்கின்ற தன்மை ஒருமுக்கிய இயல்பாகும். நாகரிக வகைகளில் மாறுதல்கள் புதுமை வாய்ந்த

வையாக இருப்பதையும் காணலாம். இதற்கு மாறாகத் தன்னிலையை உறுதிசெய்கின்ற தன்மை, பால் வாழ்க்கையில் நெருங்கிய தொடர்பு கொண்டு, பல தடைகளை எதிர்த்துக் காதல் புரிவதில் முன்னிற்கின்றது. இவ்வாறு தடையும், தன்னிலையை உறுதிசெய்தலும் ஒன்றாக நடத்தையில் இருப்பதைப் பெற்றோர்கள் கவனிக்காது இருத்தலாகாது. இவ்விரியல்புகளின் இணைப்பினால், பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே காதல், திருமணம் ஆகியவற்றில் தொல்லைகள் ஏற்படுகின்றன.

இளையோர் பெருந்திணைகள் (Adolescent crushes)

இளையோர் பெருந்திணைகள் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றைப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அதிகமான அச்சத்துடனும் பற்றார்வத்துடனும் அணுகுதல் கூடாது. இவற்றில் சில, ஒரேபால் உறுப்பினர்களுடன் நெருங்கிய நீண்ட காலத் தொடர்புகளும் கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு முக்கியக் கவனம் செலுத்தவேண்டும். இத்தொடர்ச்சியான பெருந்திணைகளின் இசைவில்லாத இயல்பு, தனியன்களின் சாதாரண ஆரோக்கிய வளர்ச்சியான மாற்றுப் பால் உறுப்பினர்களுடன் சமூகத் தொடர்புகள் கொள்வதைத் தவிர்க்கின்றது. இப்பருவ வாழ்க்கையில், மாற்றுப் பால் உறுப்பினர்களுடன் சமூகத் தொடர்பு கொள்ளுதல் மிக அவசியமாகும். இப்பெருந்திணைகள், பெரும்பாலும் சிறுமியர்களிடத்துச் சிறுவர்களைக் காட்டிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. சில சமயங்களில் இப்பெருந்திணை வெவ்வேறு வயதுநிலைகளில் உள்ள தனியன்களிடத்து ஏற்படலாம். ஆலிஸ் (Alice) என்பவளுடைய வரலாறு இதற்குச் சான்றாக விளங்குகின்றது.

ஆலிஸ் நுண்ணறிவும் கவர்ச்சியுமுடைய பதினாறு வயதான இளம் பெண்ணாவாள். அவள் அதிகாரத்தை எதிர்க்கின்ற மனப்பான்மையைக் கொண்டுள்ளதால், அவளுடைய பெற்றோர்கள் மிகவும் கவலைப்பட்டனர். அவள் மற்றவர்கள் தருகின்ற கருத்துகளை வெகுவாக எதிர்த்தாள். பொதுவாக வாழ்க்கையில் அதிகமாகக் குற்றங் காண்பவளாக இருந்தாள். அவள் தனித்து வாழ்கின்ற வாழ்க்கையைக் கைக்கொண்டதால், இளஞ் சிறுவர் சிறுமியர்களிடத்து அதிகத் தொடர்புகள் கொண்டிருக்கவில்லை. திடீரென அவள் ஒரு பெண்மீது அதிகமான கவர்ச்சி கொண்டிருந்தாள். அப்பெண் அவளைக் காட்டிலும் சற்று முதிர்ந்தவளாகவும், ஆலிஸைக் காட்டிலும் கீழான சமூகப் பண்பாட்டுநிலையிலிருந்து வந்தவளாகவும் இருந்தாள். ஆலிஸின் கவனிப்புகளினாலும், அழைப்புகளினாலும், கடிதங்களினாலும், பரிசுகளினாலும் அப் பெண் மிகவும் மகிழ்ச்சியுற்று,

ஆலிஸ் அவளிடம் நெருங்கி இருந்தவாறே அவளும் நெருங்கிப் பழகினாள்.

ஆலிஸின் பெற்றோர்கள் இப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்கு முதலில் நையாண்டி செய்தும் திட்டியும், பின்னால் பயமுறுத்தல்கள், தண்டனைகள், உரிமை மறுத்தல்கள் ஆகியவற்றைக் கடைப்பிடித்தும், எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை.

பின்னர் ஆலிஸின் பெற்றோர்கள், அவள் விரும்பிய பெண் துன்புறுத்தப்படுவாள் அல்லது தூற்றப்படுவாள் என்று ஆலிஸுக்கு உணர்த்தினார்கள். ஆனால், அவளது குடும்பம், ஆலிஸின் மனத்திலேயே இப் பொருந்தாக் காமத்தினால் பல்வேறு சிக்கல்கள் இருந்ததை உணரவில்லை. அவள் தன்னுடைய தொடர்புகளை விரிவாக்கிக்கொண்டு சிறுவர் சிறுமியர்களைத் தன்னுடைய நண்பர்களாக ஆக்கிக்கொள்ளவே மிக ஆவலாய் இருந்ததால், அவள் வளர்க்கப்பட்ட சூழ்நிலைகளினாலும், அவளிடமிருந்த உள்ளார்ந்த கூச்சத்தினாலும், தன்னம்பிக்கை இல்லாத தன்மையினாலும், பெற்றோர்கள் அவள் இளைஞர்களைச் சந்தித்து நல்ல நட்புறவுகளை வளர்ப்பதற்குத் தனித்த முயற்சி செய்ய வேண்டியது அவசியமாய் இருந்தது. ஆலிஸினுடைய பிரச்சினையின் மனவெழுச்சித் தன்மையை உணர்ந்து, அவளுடைய பெற்றோர்கள், இத் தனித்த முயற்சி எடுப்பதற்கு மனமுவந்து முயற்சிகள் மேற்கொண்டனர்.[23]

ஆலிஸினுடைய வரலாற்றில் கண்டதுபோல் பெருந்திணையை முறிக்க முயற்சிகள் எடுத்தால், அதனை எதிர்ப்பதன்மூலமாகவும், கிளர்ச்சி செய்வதன்மூலமாகவும் இளையோர் தவிர்க்க முயல்வார்கள். பெருந்திணையில் ஈடுபடுபவர்கள், ஒருவர்மீதொருவர் மிக அதிகமான பற்றுறுதி கொண்டிருப்பார்கள்.

குடும்பத்திலிருந்தும், நண்பர்களிடமிருந்தும் வருகின்ற திறனாய்வுகளை எதிர்ப்புகள்மூலம் இளையோர் தவிர்க்க முயல்கின்றனர். முடிவில் இச்செறிவான பெருந்திணைகள் தாமாக மறைகின்றன. பரந்த தொடர்புகளும் அனுபவங்களுமே இப் பிரச்சினைகளைச் சிறப்பாகத் தவிர்ப்பதற்குரிய வழியாகும்.

தழுவுதல் (Petting)

நாளிடல், தொடர்ந்து ஒருவரே நாளிடல், தழுவுதல் ஆகியவற்றின் தொடர்புகளிலுள்ள பிரச்சினைகள் புதியன அல்ல. ஆனால், இவை யாவும் முன்னைய நாட்களைக் காட்டிலும் இப்பொழுது அதிக

[23] 'Guiding the Adolescent.' Children's Bureau, Federal Security Agency, Publication 225, 1946, p. 73.

மாகக் காணப்படுகின்றன என்பது உண்மையேயாகும். தழுவுதல் என்பது நாளிடல் கொள்ளும் 'நல்லவர்களிடமே' அதிகமாகப் பயன்படுவதைக் காணலாம். இது, தழுவுதல் மிகவும் அதிகமாகப் பழக்கத்தில் உள்ளதனுல் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தை என்றே ஆகிறது. இப்பொழுதெல்லாம் இத் தழுவுதல் தனித்த தனிமையான இடத்திலோ அல்லது குடும்ப அறையிலோமட்டும் நடைபெறுவதில்லை. காரில், கடற்கரையில், பள்ளித் தாழ்வாரங்களில், மற்றப் பொது இடங்களில் எல்லாம் இளையோர்கள் தோன்றும்போது, தழுவுதலைக் காணலாம். இளையோர்கள் எல்லோர் முன்னிலையிலும், பெற்ருேர் முன்னிலையிலும் ஓரளவு தழுவுதலைக் கைக்கொள்ளுகின்ற சுதந்திரத்தைப் பெற்றிருப்பதானது, தற்கால இளையோர் பால் என்னும் பொருள்பற்றித் தடையுள்ள உணர்வுகளையும் மறைக்கப்பட்ட உணர்வுகளையும் கொண்டிருக்கவில்லை என்பதனை அறிவுறுத்துகின்றது. பால்களின் பங்குகளைப்பற்றியும் தற்கால இளையோர்கள் மாறிய மனப்பான்மையைக் கொண்டிருக்கின்றனர். இது சிறுவர்களும், சிறுமியர்களும் ஆரோக்கியமான நட்புறவைக் கொள்ள வழிவகுத்திருக்கின்றது என்பதில் ஐயமில்லை. தழுவுதலைப் பெரும்பாலும் அதிகமாகத் தூய்மையுடையதாகப் பயன்படுத்துகின்றனர்.

தழுவுதல் எனும் பிரச்சினை, பால் வழிகாட்டலுக்கும், சிறுவர் சிறுமியர்கள் மனித வாழ்வில் பால் வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதற்கு அது ஒரு முக்கியமான கூறு என்ற இசைவான மனப்பான்மையை உண்டாக்குவதற்கும் பயன்படுகிறது. இவ்வாறு பெற்ருேர்களும், ஆசிரியர்களும், மற்றவர்களும் பால் என்னும் பொருளைச் சுற்றியுள்ள சந்தேகம் எனும் மேகத்தை நீக்க மேலும்மேலும் முயற்சி எடுத்துவருகின்றனர்.

பால் எனும் பிரச்சினை இளையோனது வாழ்க்கையில் ஒரு கூறுதான் என்ருலும், அதை நேர்மையுடனும் ஒளிவுமறைவின்றியும் அணுகுதல் வேண்டும். இளையோர்கள் விக்டோரியா காலத்தில் வாழவில்லை என்பதைப் பெற்ருேர்கள் உணரவேண்டும். வழிகாட்டலில் குறிக்கோள்கள் யாவும், சிறுவர்களும் சிறுமியர்களும் சாதாரண நன்மை பயக்கும் மனப்பான்மைகளைப் பால்பற்றிக் கைக்கொள்ள வேண்டும் என்றே இருக்கவேண்டும். வழிகாட்டலின்மூலம் இல்ல, திருமணத் தொடர்புகளில் இளையோர்கள் சிறந்த திருப்திகரமான உறவுகளைப் பெற வழிவகுக்கவேண்டும்.

1929-ல் டேவிஸ் (Davis) அவர்கள் கல்லூரிப் பெண்களின் பால் வாழ்க்கைகளைப்பற்றிக் குறிப்பிட்டவற்றையும், 15 ஆண்டுகளுக்குப் பின்னுல் புரோம்லி என்பவராலும் பிரிட்டன் என்பவராலும்

(Bromley and Britten) அறிவிக்கப்பட்ட முடிவுகளையும்[24] ஒப்பிட்டுப் பார்த்தால், நமது சமூகத்தில் உள்ள பால் பழக்கவழக்கங்களில் மாறிய மனப்பான்மையும் பழக்கமும் செயலுறுகின்றன என்பதை அறியலாம். 1938-ல் டெர்மன் (Terman) என்பவர் திருமண இன்பத்தைப்பற்றி நடத்திய ஆய்வு, இக் கருத்துக்கு மேலும் ஆதரவினை அளிக்கின்றது.[25] அவருடைய ஆய்வில், திருமணமான 792 வயதானவர்கள், இளவயதினர் ஆகியோருடைய பால் வரலாறுகளைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. வயதான குழுவின் திருமணத்திற்கு, முன்னைய பால்-உறவு 49·4 சதவீதமாக ஆண்களுக்கும், 13·5 சதவீதமாகப் பெண்களுக்கும் இருந்தது. இளங்குழுவினரில், திருமணத்திற்கு முன்பு பால்-உறவு கொண்ட ஆண்கள் 86·4 சதவீதமாகவும், பெண்கள் 68·3 சதவீதமாகவும் இருந்தனர்.

இவ்வாய்வுகளும், மற்ற ஆய்வுகளிலிருந்து பெற்ற உண்மைகளும், போர்டர் பீல்டு, சேலி என்பவர்கள் (Porterfield, Salley) 618-ஆட்படுவோர்களைக்கொண்டு நடத்திய ஆய்வில் கண்ட உண்மையும் ஒன்று சேர்ந்து அவர்களைக் கீழ்க்கண்ட கற்பிதத்தைக் கொள்ள வழிவகுத்தது:

'முதலில், பால் பழக்கநெறிகளில் பழைய விதிகள் மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக இன்று பல்வேறு புதிய பால் பழக்க நெறிகள் கைக்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாகப் பால் நடத்தையின் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது. இரண்டாவதாக, இந்த மாறுதலின் காரணமாகப் பால் குற்ற நடத்தை என்று வரையறுப்பது மிகவும் கடினமாகிவிட்டது. அவ்வாறு செய்ய முயலுவதும் பொருளற்று இருக்கின்றது.'[26]

பல முதியோர்களைப்போன்று இளையோர்களும் பால் நெறிகளைப் பற்றி மிகவும் குழப்பமான நிலையில் இருக்கின்றனர்கள். இலக்கியத்திலும், தொலைக்காட்சியிலும், வானொலியிலும், திரைப்படங்களிலும், வகுப்பறையிலும், இல்லத்திலும், கோயிலிலும் பழக்கநெறிகளைப்பற்றி மாறுபட்ட முறையில் பேசப்படுவதால், அவர்கள் குழப்பமான நிலையினை அடைகிறார்கள். மேலும், ஒரு தனித்த குழுவின் சிறுவர்களும், சிறுமியர்களும் வெவ்வேறு பழக்கநெறிகளைக் கொண்டிருப்பார்கள். இவ்வாறு நமது ஜனநாயக அமைப்பில், ஒவ்வோர் இளையோனும்

[24] D. B. Bromley and F. Britten, 'Youth and Sex.' New York: Harper & Bros., 1938.

[25] L. M. Terman, 'Psychological Factors in Marital Happiness', New York: McGraw Hill Book Co., 1938, p. 323.

[26] A. L. Porterfield and E. Salley, 'Current Folkways of Sexual Behavior.' The American Journal of Sociology, 1946, Vol. 52, p. 209.

தன்னுடைய நெறிகளைத் தன்னுடைய ஒப்பார்களின் நெறிகளுக்கு அதிக மாறுபாடு இல்லாமல் அமைத்துக்கொள்ள வேண்டும். ஜேன், தழுவல்களின் தொடர்பில் பல பிரச்சினைகளைக் காண்கிறாள். அவள் அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய உதவியை எங்கிருந்து பெறுவது? அவள் யாரிடம் வழிகாட்டலையும் பிரச்சினையைப் புரிந்துகொள்ள உதவியையும் பெறுவாள்? அவள் எவ்வாறு தரங்களை நிலைநிறுத்தி மாற்றுப் பால் நண்பர்களைப் பெற முடியும்?

கின்சே (Kinsey) அறிக்கைகளின்படி 'அமெரிக்கப் பால் நடத்தை வகை' என்று ஒரு தனித்த இயல்பினைக் குறிப்பிட முடியாது. ஆதலின், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறி என்று ஒன்று இல்லாததால், ஜேனின் பிரச்சினைகளுக்குப் பதிலளிக்க இயலாது. சராசரிக் குழந்தையின் பால் மனப்பான்மைகளும் அமைப்புகளும் அதனுடைய உடன் விளையாடுபவர்கள் நண்பர்கள் ஆகியவர்களிடமிருந்து உருவானதே ஆகும். இவைகள் உருவாவதில் இல்லம், பல நிலைகளில் நேரடித் தொடர்பு கொள்ளாது மறைமுகத் தொடர்பு கொள்கிறது. பல உளவியலார்கள் பள்ளிக்கு முன்னுள்ள பருவத்தில் பால்பற்றிய மனப்பான்மைகள் உருவாவதில் இல்லத்தினுடைய முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றனர். இக்காலத்தில் பால் அமைப்பு வகைகள் உருவாவதுபற்றியும், நிலைத்து நிற்பதுபற்றியும் கின்சே குறிப்பிடுவதாவது:

'அமெரிக்க சமுதாயத்தில், தனியன்களுடைய பதின் ஆண்டுகளின் மத்தியப் பகுதிக்குப் பின்னர் பால் நடத்தையில் முழுமையான புதிய அமைப்பு வகைகள் தோன்றுவதில்லை. மாறுதல்கள் ஏற்படுவதாகத் தோன்றுவதெல்லாம் பெற்றோர்களுடைய பழக்க வகைகளிலிருந்து முன்னிளையோரும், இளையோரும் மாறுபட்டிருப்பதேயாகும். சமூக சக்திகளைப் புரிந்துகொள்வதில் நமது முன்னேற்றம், இத்துவக்க ஆண்டுகள் தனியனது பால் நடத்தையின் தனித்த வகைகளும், சமுதாய வகைகளும் வளர்ச்சியுறுவதற்கு ஏற்ற காலம் என்று உணர்கின்ற அளவிலேயே இருக்கின்றது.'[27]

இருப்பினும், ஜேனுக்கு இரண்டாந்தரப் பால் நடத்தையினை வளர்க்க வழிகாட்டுதல் தேவையாயிருக்கிறது. அவ்வாறான நடத்தை, அவளுடைய தேவைகளைத் திருப்திப்படுத்துவதோடு, பால்முனைப்பினைக் குறைத்து அவளுடைய நடத்தையைத் திருப்திகரமாகவும், சமூகம் ஏற்றுக்கொள்ளுமாறும் செய்கிறது.

[27] A. C. Kinsey, W. B. Pomeray, and C. E. Martin, 'Sexual Behavior in the Human Male', Philadelphia: W. B. Saunders Co., 1948.

பால்பற்றிய சில தவறான கருத்துகள்

பல தவறான கருத்துகள் பால் வளர்ச்சிபற்றியும், பால் - உந்து விளைப்பற்றியும் பல்வேறு குழுக்களிடம் தோன்றுகின்றன. இவற்றில் சிலவற்றைப்பற்றி முன்னைய அதிகாரங்களில் விவாதித்துள்ளோம். வாழ்க்கையின் துவக்க ஆண்டுகளில் பால்-உந்துவானது மிகவும் தெளிவுற்று மறைமுகமாகச் செயலுறுகின்றது. ஆதலின், பால்-உந்து வானது பூப்படைவதற்கு முன்னால் தோன்றுவதில்லை அல்லது உறங்கிக் கிடக்கின்றது என்று தவறாக முடிவு செய்யக்கூடாது. வாழ்க்கையின் துவக்க ஆண்டுகளின் நடத்தைக்கும், பிற்காலப் பால்வாழ்க்கை நடத்தைக்குமிடையே உள்ள உறவுபற்றித் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், இளங்குழந்தையின் அன்பு நடத்தைக்குப் பால் ஓரளவு தொடர்பு கொண்டுள்ளது என்று கூறுவதற்குச் சான்றுள்ளது. பால் சுரப்பிகள் வளர்ச்சியுறுவதனாலும், தனியன் சமூக உலகில் உடலிலும் சமூக இயல்பிலும் முதிர்ச்சியடைவதனாலும் சில உந்துகள் வெளியாகி, அதனால் சாதாரண அல்லது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் வழியினின்று அவன் நடத்தை மாறுபடுமளவுக்குச் சில ஏதுக்கள் செயலுறுகின்றன. இவ்வாறான ஏதுக்கள் சில நசுக்குதல், அறியாமை, பால்பற்றிய காரண மற்ற அச்சங்கள், வெறுப்பு, அறிவார்வம் அல்லது சில எழுச்சியினால் தூண்டப்பட்ட நிலைகள் ஆகியவைகளாகும். இவ்வாறான ஏதுக்கள் செயலுறுவதனால்தான் முயன்று தவறுகின்ற நடத்தை முறை தோன்றுகின்றது. ஆட்படுவோன் தன்னைப் பால் அடிப்படையில் பொருத்தியமைக்கப் பல்வேறு முறைகளைக் கடைப்பிடிப்பான். அவனது முயற்சிகளில் சில நெறிமாறிய நிலைகளையும் விளைவிக்கலாம். சில பழக்கங்கள் தனியனுக்குத் திருப்தியின்மையை அளிப்பதால் அல்லது சாதாரணச் சமூகத் தொடர்புகளில் தலையிடுவதால், இசைவில்லாதவையாகலாம்.

கைமுட்டிப் பழக்கம் (masturbation) பற்றியும், மற்றத் தவறான பால் செய்கைகளின் நிகழ்விரைவுகளைப்பற்றியும் பல ஆய்வுகள் நடந்திருக்கின்றன. இவ்வாறான தவறான பால் நிகழ்ச்சிகளின் நிகழ் விரைவு, குழுவிற்குக் குழு மாறுபட்டு இருக்கும். அவைகளைப்பற்றி இவ்வாய்வுகளிலிருந்து பொதுமைகளைக் கொள்ளுதல் பயனுடையதன்று. முன்னிளையோர்களும் இளையோர்களும் பால் நிகழ்ச்சிகளைப்பற்றிக் கொண்டுள்ள தவறான கருத்துகளில் பரவலாக இருக்கின்ற ஒரு கருத்து, கைமுட்டிப் பழக்கத்தால் மிகவும் தீவிரமான உடல், மனக்குறைகள் தோன்றும் என்பதாகும்.

கைமுட்டிப் பழக்கம் இளையோர்களுக்குத் தீங்கையே விளைவிக்கும் என்று கூறுவதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. ஆனால், இதற்காக அதனை ஆதரிக்கவேண்டுமென்பது பொருளன்று. உண்மையில் கைமுட்டி இயற்றுதலானது மிகவும் சாதாரணமாக நிகழ்கின்றது. ஆதலின், அதனால் தீய விளைவுகள் ஏற்படுமாயின், அவை தெளிவாகக் காணப்படும். ராம்சே (Ramsey) என்பவரால் நடத்தப்பட்ட ஆய்வு, சிறுவர்களிடம் கைமுட்டி இயற்றுதல் பள்ளிக்கு முன்னுள்ள பருவத்திலேயே சில சமயங்களில் துவங்குவதாகக் காட்டியது. பன்னிரண்டு வயதில் 73 சதவீதத்தினர் அதில் ஈடுபட்டதாகக் கூறினர். பதினைந்து வயதில் 98 சதவீதத்தினருக்கு அந்த அனுபவம் இருந்தது.[28]

சிறுமியர்களைப்பற்றி நடந்த ஆய்வில், அவர்கள் இந்த அளவு அதிகமான சதவீதத்தினர் தற்புணர்ச்சியில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. ஆனால், கவலைப்படுகின்ற அளவுக்கு இப்பழக்கம் தீவிரமாகக் கொண்டவர்களின் எண்ணிக்கை இருந்தது.

தற்பாலுணர்ச்சி அல்லது ஒரேபால் புணர்ச்சியுணர்வு (Homosexuality)

ஒருவர் அவருடைய பால் அக்கறைகளை மாற்றுப் பாலாரிடம் கொள்ளாது அவருடைய பாலாரிடத்தேயே கொண்டிருந்தாராயின், அதனைத் தற்பாலுணர்ச்சி என்று குறிப்பிடுகிறோம். ஒரேபால் இளையோர்கள் உடல் அமைப்புகளிலும் பால் சுரப்பிகளிலும் மாறுதல்கள் இருப்பதனாலும், சூழ்நிலை ஏதுக்களினாலும் தற்புணர்ச்சி உணர்வினைக் கொள்கின்றனர்.

கிளைன் (Cline) என்பவர் சீவாவைச் (Siwah) சார்ந்த அராபியர்களில் சிறுவன், குடும்பத்திலுள்ள வயதான ஒருவனுக்குத் தற்பாலுணர்ச்சித் தோழனாகத் தன் இளமையைக் கழிப்பான் எனக் குறிப்பிட்டுள்ளார்.[29] முதிர்ச்சியடைந்தவுடன் பையன், திருமணத்துடன் மற்றோர் இளஞ்சிறுவனுக்குத் தற்பாலுணர்ச்சித் தோழனாகவும் செயலுறுவான். மேற்கத்திய நாகரிகத்தின் சூழ்நிலை காரணமாக இளையோர்கள் பால் இயல்புகளில் தவறான நடத்தையைக் கைக்கொள்

[28] G. V. Ramsey, 'The Sex Information of Younger Boys,' American Journal of Orthopsychiatry, 1943, Vol. 13, pp. 347-352.

[29] W. Cline, 'Notes on the People of Siwah and El Garah in the Libyan Desert'. Menosha: General Series in Anthropology, 1936, No. 4.

ளும் நிலை ஏற்பட்டபோதிலும், சுரப்பி மாறுதல்களினால் ஒரேபால் இளையோர்கள் எல்லோரும் இவ்வாறான அழுத்தங்களுக்கு ஒரே அளவில் பாதிக்கப்படுவதில்லை. சில சிறுவர்கள் அவர்களுடைய தாயார்கள் அவர்களைப் பெண்களை நடத்துவதுபோன்று நடத்துவதனால், அவர்கள் தம் நடத்தையில் பெண்மைப் பண்பைக் கைக்கொள்கின்றனர். மிக அதிகமான காவல் அளிக்கப்பட்டு மிகவும் கடுமையான விதிகள் கொண்ட பெண்கள் பள்ளியில் ஒரு சிறுமி வளர்ந்தால், அவளுக்குப் பெண்களுடன்மட்டுமே தொடர்புகொள்ள முடிகிறது. அவள் தனது பால் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்குப் பெண்களிடம் தொடர்புகொள்ள வேண்டியதாயிருக்கிறது. இவ்வாறான அனுபவங்கள் இளையோர் சிறுவன் அல்லது சிறுமியைத் தற்பாலுணர்ச்சிக்கும், தற்பாலுணர்ச்சிமூலமாக மனநிறைவுகொள்ளவும் தூண்டும். ராம்சே அளித்த குறிப்புகள், இளையோர் சிறுவர்களில் நான்கில் ஒரு பங்கினர் தற்பாலுணர்ச்சி விளையாட்டில் ஈடுபடுவதாக ஒத்துக்கொண்டுள்ளதைக் காட்டுகின்றது.[30] பலரிடம் இது சோதனையளவிலேயே நின்றுவிட்டது. அவர்களில் பலர் வாய்ப்பு இருக்குமாயின், மீண்டும் மாற்றுப் பால் புணர்ச்சி நடத்தையைக் கைக்கொள்வார்கள். இது முதியோர்களிடம் தற்பாலுணர்ச்சி நடத்தையின் அளவும், விசித அமைப்பும் குறைவாக இருப்பதிலிருந்து தெரிகிறது. கல்லூரி மாணவர்களைக்கொண்டு நடத்தப்பட்ட ஆய்வில், பத்திலொரு பங்கினர்மட்டுமே தற்பாலுணர்ச்சியைப்பற்றிய அச்சங்களைக் கொண்டிருந்ததாகவும் அல்லது அதில் உண்மையாக ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரியவந்தது.[31] இளையோர் பின்னிளையோர் குழுவில் தற்பாலுணர்ச்சி இருக்கின்ற அளவு, பண்பாட்டு விதிகள், துவக்கப் பால் அனுபவங்கள், மாற்றுப் பால் உறுப்பினர்களுடன் பழகுவதற்குரிய வாய்ப்புகள், பொதுவான பொழுதுபோக்கு வாய்ப்புகள், அவர்களுக்கு அளிக்கப்படும் வழிகாட்டலின் தன்மை ஆகியவைகளைப் பெரிதும் பொறுத்திருக்கின்றது.

வழிகாட்டலின் தேவை

இளையோர் உளவியலின் மாணவர்களில் பலர், பால் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்கும் கையாள்வதற்கும் சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் வழிகாட்டல் தேவையென வலியுறுத்தியிருக்கின்றனர். அதிகாரம் 7-ல் சிறுவர் சிறுமியர்களில் பெருஞ் சதவீதத்தினர், பால்பற்றிய முதல் செய்தியினை இல்லம், ஆசிரியர்கள், திருச்சபை, பாதிரிமார்கள் போன்றவர்களிடம் பெறுவதோடு, மற்ற ஏதுக்

[30] G. V. Ramsey, 'The Sexual Development of Boys,' American Journal of Psychology, 1945, Vol. 56, p. 230.

[31] C. C. Fry, 'Mental Health in College'. New York : The Commonwealth Fund, 1942.

களிலிருந்தும் பெறுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இம் முடிவுகள், திருச்சபைத் தலைவர்கள், கல்விப் பணியாளர்கள், சமூகப் பணியாளர்கள் ஆகியவர்களை இதனைப்பற்றிக் கவலைப்பட வைத்தன. இதன் காரணமாகக் கோயில்கள், பள்ளிகள், மற்ற நிறுவனங்கள் ஆகியவை இப்பிரச்சினையைத் தவிர்ப்பதற்குப் பல நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டிருக்கின்றன.

சிறுவர் சிறுமியர்களது வாழ்க்கையில் பொழுதுபோக்கு வேறு எந்தக் காலத்தையும்விட இப்பொழுது அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. சங்கவேலையில் அதிகமான முக்கியத்துவம் கொண்டுள்ள சமூகச் செயல்களும், இளையோர்களது பள்ளிக்குப் புறத்தேயுள்ள வாழ்க்கையும் இசைவான சிறுவன் சிறுமி உறவை வளர்த்துக்கொள்வதற்கு ஏற்றவைகளாகும். சமூகச் செயல்களில் சிறுவர்களும் சிறுமியர்களும் ஒன்றாக இணைந்து வேலை செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. பாலின் அடிப்படையில் பொறுப்புகள் வளர்வதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. சிறுமியர்கள் இல்லப் பொருளாதார வகுப்புகளில் (Home Economic Classes) சமைப்பதற்கும், மேசை அலங்காரங்கள் செய்வதற்கும் கற்றுக்கொள்கிறார்கள். சிறுவர்கள் கடையிலிருந்து சாமான்கள் வாங்கிவந்து இவர்களுக்கு உதவிசெய்கிறார்கள். பல சமுதாயங்கள் இளையோர்களது தேவைகளுக்கும் அக்கறைகளுக்கும் ஆவன செய்கின்றன. பொழுதுபோக்கு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு அதில் குறைந்த அளவு மேற்பார்வை அளிக்கப்படுகிறது. இதைப்பற்றிய செய்திகள் அதிகாரம் 15-ல் அளிக்கப்படும்.

இயற்கை விஞ்ஞானத்தின் ஆய்வு, உயிர்வாழ்வனவற்றின் பிறப்புப்பற்றியும் வளர்ச்சிபற்றியும் பயனுள்ள செய்திகளைத் தருகின்றது. இதே வழியில் சமூக விஞ்ஞானங்களும் மனிதனது நிறுவனங்கள், பழக்க வழக்கங்கள், வாழும் வழிகள் ஆகியவைகளைப் பற்றிக் கருத்துகளைத் தெரிவிக்கின்றன. சாதாரண வகுப்பறை நிகழ்ச்சிகளிலும், பள்ளித் திட்டங்களிலும் செய்திகளைத் தந்து, பிரச்சினைகளை விளக்கி, நல்ல கல்வியறிவினைப் புகட்டலாம். ஆனால், ஆசிரியர் பால் கல்வியின் தொடர்பிலுள்ள பிரச்சினைகளைப் பற்றிய விவாதங்களின்மீது 'தீட்டு' (taboo) மனப்பான்மை கொள்ளக்கூடாது. சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கு மிடையே ஏற்படக்கூடிய சமூக உறவுகளுக்கு நேரடித் தொடர்பு கொண்டுள்ள பிரச்சினைகளைப் பற்றி மாணவர்கள் நெருங்கிய தொடர்பு கொள்ளுமாறு செய்வதற்குச் செய்தியும் இலக்கியமும் போதிய அளவு இருக்கின்றன. பல குடும்பப் பிரச்சினைகள் உண்ட்செட்டின் 'கிரிஸ்டின் லாவரான்ஸ்டேட்டர்' (Undset's Kristin Lavrans datter) என்னும் நூலிலும், சாமர்செட்மாமின் 'ஆஃப் ஹியூமன்

பாண்டேஜ்' (Somerset Maugham's Of Human Bondage) என்னும் நூலிலும், 'கால்ஸ் ஓர்த்தியின் ஃபார்ஸ்டி சகா' (Galsworthys Forsyte Saga) என்னும் நூலிலும் நன்றாக விளக்கப்பட்டுள்ளன.

பல பால் பிரச்சினைகளின் ஏதுக்கள் தவறான செய்திகளினாலும், போதிய அளவு இல்லாத செய்தியினாலும் தோன்றுகின்றன. அவ்வாறான நிலை இருக்கும்பொழுதும், குழந்தை இளையோர் பருவத்தை அடையும் பொழுதும், மாற்றுப் பால் உறுப்பினர்களுடன் நன்மை பயக்கின்ற தன்மையுடைய தொடர்புகளிலிருந்து மறைக்கப்படும் பொழுதும், அவன் பால் பற்றிய நேர்மாறான எண்ணங்களும், மனப்பான்மைகளும் கொள்கிறான். இன்றைய வளர்கின்ற சிறுவர்களிடத்திருக்கின்ற பால் பிரச்சினைகளில் பல துவக்க காலத்திலேயே தவிர்க்கப்பட வேண்டுமாயின், அவர்களுடைய பால் உணர்ச்சிகளைப் பால் புணர்ச்சிமூலம் தீர்ப்பதற்குப் பழக்கவழக்கங்களும் நிலைகளும் அனுமதியளிக்கவேண்டும். ஆனால், இது பழக்கவழக்கங்கள், அறவொழுக்கங்கள், மெய்யுணர்வு, நமது நிறுவனங்களின் பண்பாடு ஆகியவற்றிற்குப் புறம்பாக இருக்கின்றது.

இவ்வாய்வு முழுவதிலும் அளிக்கப்பட்டுள்ள பிரச்சினைகள் யாவும், இளையோர் சிறுவர் சிறுமியரது இன்றைய சமூக, பால் பொருத்தப்பாடுகளின் தொடர்பில் மட்டுமே முக்கியமானவை அல்ல. அவை வரவிருக்கின்ற ஆண்டுகளில் அவர்கள் கொள்ள வேண்டிய குடும்ப வாழ்க்கைப் பொருத்தப்பாடுகளின் தொடர்பிலும் மிக முக்கியமானவையாகும். இளைஞர்கள் நன்றாகப் பொருந்தி அமைந்த இன்பமான குடும்ப வாழ்வினைப் பெறுவதற்கு வழிகாட்டலையும் பயிற்சியையும் தற்செயலாகப் பெறும்படி விட்டுவிடப்படுகின்றனர். இது இல்லத்திலும் குடும்ப வாழ்க்கையிலும் காணப்படுகின்ற தவறான பொருத்தப்பாடுகளின் அளவினைப் பாதிக்கின்ற முக்கியமான ஏது என்பதில் ஐயமில்லை. ஆரம்பக் குழந்தைப் பருவ அனுபவங்களும் பயிற்சியும் குடும்ப வாழ்க்கையில் கொள்கின்ற முக்கியத்துவத்தைப் பற்றிக் காக்ரேன் (Cochrane) குறிப்பிடுகையில்:

குடும்ப வாழ்க்கையில் திருமணம்மூலம் பொருளுள்ள உறவுகளை ஏற்படுத்திக்கொள்கின்ற திறனைப் பெறுவதற்கும், அதில் திருப்தியடைவதற்கும் குழந்தைப் பருவ அனுபவங்கள் பெருமளவு உதவுகின்றன என்பதும், தனியன் ஆண்தன்மையையோ அல்லது பெண்தன்மையையோ ஏற்றுக்கொண்டு பால் மாறுபாடுகளை ஏற்றுக்கொள்வதும் இதற்கு உதவுகின்றன என்பதும் உண்மையேயாகும்.[32]

[32] H. S. Cochrane, 'Emotional Aspects of Social Adjustment for the Child,' Mental Hygiene, 1948, Vol. 32, pp. 586-595.

அதிகாரச் சுருக்கமும் கருத்துரைகளும்

இளையோர் பருவத்தில் இளையோர் ஒப்பார் அனுமதிக்காக மிகுந்த ஆசை கொண்டிருக்கின்றனர் என்று இவ்வதிகாரம் முழுவதும் விளக்கப்பட்டுள்ளது. இப்பருவத்தில்தான் நண்பர்களும் தோழர்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இக்காலத்தில்தான் நட்புறவுகள் மிகவும் உறுதியான தன்மையினை அடைகின்றன. இவ்வயதில் தன்னல உட்குழுக்கள் தோன்றுகின்றன. இவைகள் சமூகப் பொருளாதார வகுப்புகளுக்கேற்ற துணைப்பண்பாடு செயலுறுவதைக் காட்டுகின்றன.

முன்னைய அதிகாரங்களில் இளையோர்கள் பல முக்கிய வளர்ச்சிப் பணிகளைக் கொண்டிருக்கின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் தங்களது பெற்றோர்கள் எப்போதும் அவர்களது பிரச்சினைகளையும் தேவைகளையும் உணர்வதில்லை என நினைக்கின்றனர். இதேபோன்று அவர்களுடைய ஆசிரியர்கள் பலரும் அவர்களுடைய பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதில்லை என்றும், அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுப்பதற்கும் பரிவு காட்டுவதில்லை என்றும் எண்ணுகின்றனர். ஆசிரியர்களும் பொதுவாக இளையோர் சந்திக்கின்ற பல பிரச்சினைகளைப் பொதுவாகப் புரிந்துகொள்வதில்லை என்பதற்குப் போதிய அளவு சான்றுள்ளது. ஆசிரியர் தம்முடைய வளர்ச்சியில் இப்பிரச்சினைகளை முன்னரே சந்தித்திருப்பதாலும் அல்லது அறிந்திருப்பதாலும், இப் பிரச்சினைகளைத் தனியனது வாழ்க்கையில் மிகச் சிறிய நிகழ்ச்சிகள் என்று ஒதுக்கி விடலாம். சமூக அனுமதி, நண்பர்களைப் பெறுதல், புகழ்பெறுதல், ஏற்றுக்கொள்ளப்படுதல் போன்றவற்றில் உள்ள பிரச்சினைகள், வளர்கின்ற சிறுவர் சிறுமியர்களுக்கு மிகவும் உண்மையான பிரச்சினைகளாகும். இளையோர்கள், அவர்களுடைய பெற்றோர்கள் அவர்களைப் புரிந்துகொண்டு ஆதரிப்பதில்லை என்று உணர்வதனாலும், பெற்றோர்கள் அவர்களுடைய செயல்களைப்பற்றி அதிகமாகக் குற்றங்காண்பதனாலும், அவர்களுடைய ஆசிரியர்களிடமிருந்து அவர்களுக்குத் தேவையான உதவியையும் வழிகாட்டலையும் பெற முடியாததாலும், அவர்கள் தங்களின் ஒப்பாரிடமிருந்து உதவியையும் பரிவையும் நாடுகின்றனர்.

இப்பருவகாலத்துப் பழுக்கின்ற பால் உணர்வுகள், மாற்றுப் பால் உறுப்பினர்களுடன் கொள்கின்ற மாறுபட்ட மனப்பான்மையுடன் சேர்ந்து வருகின்றன. இப்பொழுதெல்லாம் ஒரு சிறுவன் அவனுடைய ஒத்த வயதினையுடைய சிறுமியைக் கண்டதும், அவள் தவிர்க்கப்பட வேண்டியவள் என்று எண்ணுவதில்லை. அவன் அப்பெண் தன்னை விரும்பவேண்டும் என்றே ஆசைப்படுகிறான். பால்-உந்து பழுத்த

நிலையை அடைவதனால், இந்த மாறுபட்ட மனப்பான்மை ஏற்பட்டுள்ளது.

இளையோர்கள் வளர்ச்சியுறுவதனால் சிந்திக்கின்ற முக்கியப் பிரச்சினைகளில் ஒன்று, அவர்களுடைய பால் பங்குடன் ஒன்றியிருத்தலே ஆகும். ஆண்தன்மை அல்லது பெண்தன்மை என்பது குழந்தைப் பருவத்திலேயே இருந்தாலும், பெற்றோரும் நண்பர்களும் சிறுவர் சிறுமியர்களுக்கிடையே அதிகமான மாறுபாடுகளை வெளிப்படுத்தவில்லை. தனியன் தன்னுடைய பால் பங்கினைக் கைக்கொள்வதற்குக் கற்றுக்கொள்வது அவசியமாகும். மாற்றுப் பால் உறுப்பினர்கள் அவனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அவன் எதிர்பார்ப்பானேயானால், தன்னுடைய பால் பங்கைக் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டும். குழந்தை, பால் உணர்வின்றி அல்லது தனது பாலின் செயல்தன்மைகள் பற்றிய அறிவு ஏதுமின்றிப் பிறக்கின்றது. வாழ்க்கையின் ஆரம்பத்தில் சிறுவர்கள் சிறுமியர்களினின்றும் வேறாக நடத்தப்படுவதை அவன் காண்கிறான். அவனது உடலின் பால் இயல்புகளைப் பற்றி அவன் அறிந்துகொள்கின்றான். தன்னுடைய இயல்புகளை அவ்வியல்புகளுடன் ஒத்துணர்கின்றான். ஆண்தன்மை, பெண்தன்மை என்னும் இயல்புகளைப்பற்றி மற்றவர்களது மனப்பான்மைகளை அவன் ஏற்றுக்கொள்கின்றான். அவனுடைய பால் வாழ்க்கையும், சமூகத் தொடர்புகளும் சாதாரணமாக இருந்தால், அவன் முடிவில் தன்னைத் தன் பாலாருடன் சிறப்பாகப் பொருத்திக்கொள்ளவும், மாற்றுப் பாலாருடன் திருப்திகரமாகப் பொருத்திக்கொள்ளவும் முடிகின்றது. இசைவான மாற்றுப் பால் உணர்வுகளை ஏற்படுத்திக்கொள்ளுதல் சமூக முதிர்ச்சியடைவதில் முக்கியப் பங்கு கொண்டுள்ளது.

இளையோர்களுடன் பணிபுரிவோர் அவர்களை அவர்களுடைய குரலினாலோ, உடலமைப்பினாலோ, தனித்த பழக்க நிலையினாலோ மதிப்பிடக்கூடாது. ஆனால், சிறுவர்களும் சிறுமியர்களும் அவர்களுடைய பால் பங்கினை அடைவதற்கு வழிகாட்டப்படவேண்டும். மாற்றுப் பால் உறுப்பினர்களின் முன்னிலையில் கவர்ச்சிகரமாக இருக்க அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். மாற்றுப் பாலார் கலந்துகொள்கின்ற செயல்களில் கலந்துகொள்ளுமாறு தூண்டப்படல் வேண்டும். மாற்றுப் பால் அக்கறைகளிலிருந்து மாறுபட்டு இருப்பவர்களைச் சமூகம் பிறழ்வுநிலையில் உள்ளவர்கள் என்று கருதுகிறது என்பதை உணருமாறு செய்தல் வேண்டும்.

சிந்தனைக்குரிய பிரச்சினைகள்

1. இளையோர்களது நட்புறவுகள் நிலைபெறுவதைப்பற்றி இவ்வதிகாரத்தில் அளிக்கப்பட்டுள்ள முடிவின் பொது

வான முக்கியத்துவம் என்ன? கூறப்பட்டுள்ள பால் மாறுதல்களுக்குரிய காரணங்கள் என்ன?

2. உன்னுடைய உற்றுநோக்கல்களும், அனுபவங்களும், தனித்த வகுப்புக் குழுக்களிலுள்ள நாளிடல் பழக்கங்களையும், செயல்களையும்பற்றி இவ்வதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள முடிவுகளுக்கு ஏற்றவாறு இருக்கின்றனவா? வகுப்பமைப்பு நிலைபெறுவதிலும், தொடர்ந்திருப்பதிலும் இவை என்ன முக்கியத்துவம் கொண்டுள்ளன?

3. இளையோர்கள் தங்களுடைய ஒப்பார்களிடம் அதிகமான அளவு பற்றுறுதி கொண்டிருப்பதை எவ்வாறு விளக்குவாய்?

4. இளையோர்கள் தங்களுடைய செயல்களில் முதியோர்களைத் தவிர்ப்பதற்கு என்னென்ன தடைகளை விதிக்கின்றனர்?

5. இளையோர்கள் நல்ல ஒப்பார் உறவுகளினால் பெறக்கூடிய முக்கியப் பயன் மதிப்புகள் என நீ கருதுபவை எவை? முதியோர்களுடைய வாழ்க்கையில் இப்பயன் மதிப்புகள் எந்த அளவு இடம் பெறுகின்றன? இதில் காணப்படும் மாறுதல்களுக்கு நீ கூறும் காரணங்களென்ன?

6. துணைப்பண்பாடு என்றால் அதன் பொருள் என்ன? இளையோர் சிறுவர் சிறுமியரிடத்து இது எவ்வாறு செயலுறுகின்றது என்று காட்டவும்.

7. பெருந்திணைகள் தோன்றுவதற்குரிய காரணமும், அதன் தன்மையும், அதன் ஆபத்துகளும்பற்றி ஆய்வுகள் குறிப்பிடுவதென்ன? இது இளையோர் சிறுவர்களிடத்து அதிகமாகக் காணப்படுகிறதா? அல்லது இளையோர் சிறுமியரிடத்து அதிகமாகக் காணப்படுகிறதா? அதற்குரிய காரணங்கள் யாவை?

8. தழுவுதல் எனும் பிரச்சினை ஐம்பதாண்டுகட்கு முன்னால் இருந்த நிலையைக் காட்டிலும் இன்று செறிவாக இருப்பதன் காரணங்கள் என்ன? பால் பற்றிய செய்திகளில் மாறிய மனப்பான்மைகள் இருப்பதற்குச் சான்று தரவும்.

9. நீ அறிந்தவர்களுள் மாற்றுப் பாலாருடன் அக்கறையின்றியும், எதிர்ப்புத்தன்மையுடனும் இருக்கின்றவர்களை ஆய்வு

செய்க. அவனுடைய அல்லது அவளுடைய வெளிப்புற நடத்தைக்குப் பின்னணியிலுள்ள காரணங்கள் என்ன?

10. நமது சமுதாயத்தில் உள்ள தற்பாலுணர்ச்சிக்குரிய முக்கியக் காரணங்கள் எவை? இளையோர்களிடத்துள்ள தற்பாலுணர்ச்சி உணர்வின் தீவிரத்தன்மையை விவாதிக்கவும். முதியோர்களிடத்து இத்தன்மை எவ்வாறு உள்ளது என்பதையும் விவாதிக்கவும்.

தெரிவுசெய் நூற்பட்டியல்

1. Bromley, D. D., and F. H. Britten, 'Youth and Sex.' New York : Harper & Brothers, 1938.

2. Butterfield, O. M., 'Love Problems of Adolescence.' New York : Emerson Books, Inc., 1939.

3. Campbell, E. H., 'The Social-Sex Development of Children,' Genetic Psychology Monograph, 1939, Vol. 21, pp. 461-552. A complete review of the devoloping sex drive and its socialization during the years covered by the study, 5 to 18.

4. Cole, L., 'Psychology of Adolescence' (Fourth Edition). New York : Rinehart and Co., Inc, 1954, Chap. 9.

5. Fields, M. R., T. A. Goldberg, and H. S. Kilander, 'Youth Grows into Adulthood.' New York : Chartwell House, 1950, Chaps. 4 and 6.

6. Fleege. U. H., 'Self-Revelation of the Adolescent Boy.' Milwaukee : Bruce Publishing Co., 1944.

7. Fleming, C. M., 'Adolescence.' New York : International Universities Press, 1949, Chaps. 11 and 12.

8. Hollingshead, A. B., 'Elmtown's Youth.' New York: John Wiley and Sons, 1949, Chap. 9.

9. Horrocks, J. E., 'The Psychology of Adolescence.' Boston: Houghton Mifflin Co., 1951, Chaps. 4, 5 & 6.

10. Hurlock, E. B., 'Adolescent Development.' New York: McGraw-Hill Book Co., 1949, Chaps. 12 and 13.

11. Knoebber, Sister M., 'Self-Revelation of the Adolescent Girl.' Milwaukee: Bruce Publishing Co., 1936.

12. Malm, M., and O. G. Jamison, 'Adolescence.' New York: McGraw-Hill Book Co., 1952, Chap. 6.

13. Seidman, J. M., 'The Adolescent: A Book of Readings.' New York: The Dryden Press, 1953, chaps. 13, 14 and 15.

14. Terman, L. M., 'Sex and Personality.' New York: McGraw-Hill Book Co., 1936.

15. Tryon, C. M., 'The Adolescent Peer Culture', Forty-third Yearbook of the National Society for the Study of Education, Part I. Chicago: Department of Education, University of Chicago, 1944, Chap. 12.

16. Wattenberg, W. W., 'The Adolescent Years.' New York: Harcourt, Brace and Co., 1955, Chaps. 11 and 14.

14. சமுதாயத்தில் இளையோன்

வளரும் குழந்தை அவனது முழுச் சூழ்நிலையில் வாழ்ந்து கற்கிறான். அவனுடைய நடத்தை வகைகளையும், ஆளுமை வளர்ச்சியையும் அவன் வாழ்ந்து கற்று வளர்கின்ற பண்பாட்டின் பின்னணியிலேதான் அறிந்துகொள்ள முடியுமேயன்றி, அப்பின்னணியைத் தவிர்த்து அவனைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. வரைபடம் 14-1 குழந்தையின் சமூகத் தொலைநோக்கினை விரிவாக்கி ஒரு பரந்த நோக்கினை அளிக்கின்றது.[1] இளையோர் பருவத்திலும், அதன் மூலமாகவும் ஏற்படுகின்ற வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் துணைகொண்டே இப் பரந்த நோக்கு பெறப்படுகின்றது. இளவயதில் குடும்பக் குழு, சூழ்நிலையின் தூண்டல்களில் பெரும்பான்மையான பங்கினை வகுக்கின்றது. முன்னிளையோர் ஆண்டுகளில் விளையாட்டுக் குழுவும், கூட்டாளிக் குழுவும் குறிப்பிடும்படியான தூண்டல்களை அளிக்கின்றன. மேலும், வளர்ச்சியடைவதனால் சமூகத் தொடர்பு விரிவடைந்து, பல இரண்டாந்தர முக்கியத்துவமுள்ள குழுக்களைத் தன்னுடன் சேர்த்துக்கொள்கிறது. சமுதாயப் பண்பாட்டில் பெரிய அளவில் இருப்பவை என்றும் அதிகமாகின்ற செல்வாக்கினைக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான பெரிய சமுதாய அமைப்பின் முக்கியத்துவத்தை முன்னைய அதிகாரங்களில் நெறிபிறழ்வு, உளநலம், சொந்த சமூகப் பொருத்தப்பாடுகள், ஒழுக்க வழிகாட்டல் ஆகியவற்றின் தொடர்பில் ஆராய்ந்தோம். தொழில்முறைப் பொருத்தப்பாடு, கல்விப் பொருத்தப்பாடு, குடிமைப் பயிற்சி ஆகியவைபற்றிப் பின்னர் வருகின்ற அதிகாரங்களில் விவாதிக்கப்படும்.

இவ்வதிகாரம் கீழ்க்கண்ட பொதுத் தலைப்புகளைப்பற்றி விவாதிக்கின்றது: (1) சமுதாயத்தின் அமைப்பும், இளையோர் வாழ்க்கையில் அது கொள்ளும் செல்வாக்கும், (2) இளையோர்களது சமூகப் பொழுதுபோக்குச் செயல்கள், (3) இளையோர்களுக்குச் சமுதாய நிகழ்ச்சிகள்.

[1] F. J. Brown, 'The Sociology of Childhood,' New York: Prentice-Hall, Inc., 1939.

சமுதாயம்: அதன் அமைப்பு, அதனுடைய நிறுவனம், அது இளையோன்மீது கொள்ளும் செல்வாக்கு

மாறுபடும் சமுதாய நிறுவனங்கள்

அமெரிக்க சமுதாயங்கள், பொறிநுட்பத்துறையின் வளர்ச்சி காரணமாகச் சமூக அமைப்பில் குறிப்பிடத்தக்க மாறுதல்களை அடைந்திருக்கின்றன. இரண்டு நூற்றாண்டுகளாக அமெரிக்காவில் சிறு கிராமங்கள்தாம் அதிகமாக இருந்தன. இங்குமங்கும் சில நகரங்கள் வாணிக நிலையங்களாக இருந்தன. 1890-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சென்சஸ் கணக்கெடுப்பு, மக்கள்தொகையில் 72 சதவீதம் கிராமங்களில் வாழ்வதாகக் காட்டியது. 1950ஆவது ஆண்டில் சென்சஸ் கணக்கெடுப்பு, தென்கிழக்கு, தென்மேற்கு நாடுகளைத் தவிர மற்றப் பகுதிகளில் நகரத்தில் வாழ்பவர், கிராமத்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தோர், ஈடுபடாதோர் ஆகியோரைக் காட்டிலும் அதிகமான எண்ணிக்கையில் இருந்ததாகக் காட்டியது. மக்கள்தொகையில் இந்த மாற்றம், நியூயார்க்கு, சிக்காகோ, டெட்ராய்டு, பிலடெல்பியா, லாஸ் ஏஞ்சல்ஸ், ஹவுஸ்டன், மற்றும் பல நகரங்களின் வளர்ச்சியில் காணப்பட்டது.

இந்நூற்றாண்டின் முதல் பதிகத்தில் தோன்றிய மக்கள் இடப்பெயர்ச்சி, இரண்டு உலகப் போர்களினால் விரைவுபடுத்தப்பட்டது. இதன் விளைவாக நகரின் அடுத்த பகுதிகளில் மக்கள்தொகை பெருகியது. நகரிலும், நகரையடுத்த பகுதிகளிலும் மேலும் பலவகைப்பட்ட சமுதாயங்கள் வளர்ந்தன. நமது மக்கள்தொகையில் மிகக் குறிப்பிடும்படியான அளவு மக்கள் நகர்ப்புறத்தில் வாழும் செய்தி, 1950ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பில் 150,697,000-ல் 55·7 சதவீதம் நகரைச் சேர்ந்த 168 பகுதிகளில் வசித்தார்கள் என்பதிலிருந்து தெரியவருகின்றது. மேலும், நகர்ப்புறங்களில் வசிப்பவர்களில் பாதிக்குமேல் (52·6 சதவீதம்) பதினான்கு முக்கிய நகரங்களில் வசிக்கின்றனர். இந்த ஒரு நகர இயக்கம், மிக விரைவான வேகத்துடன் ஏற்பட்டு, மக்கள்தொகையில் அதிகமான சதவிகிதத்தினரது வாழ்க்கையில் உருமாற்றத்தை ஏற்படுத்திப் பண்பாட்டு அக்கறைகளிலும் பயன் மதிப்புகளிலும் பல மாற்றங்களை விளைவித்திருக்கின்றது. பல முந்தைய ஒழுக்கப் பயன் மதிப்புகள் விவாதத்திற்குரியனவாக எடுத்துக்கொள்ளப்பட்டன. முந்தைய தலைமுறையில் வாழ்ந்தவர்களிடையே காணப்படாத அல்லது குறிப்பிடக்கூடியவாறு இல்லாத பல பிரச்சினைகள் இப்போது தோன்றியுள்ளன.

சமூக அடுக்காதலின் விளைவு

ஒவ்வொரு சமுதாயத்திலும் தொழில், சமயம், அமைப்புகள் ஆகியவற்றின் பல வகைகளை ஒருவன் காணலாம். மிகச் சிக்கலான

வாழ்க்கை வழியினால் ஏற்பட்ட தேவைகளை நிறைவு செய்பவே இவைகள் வளர்ந்துள்ளன. மேலும், இவ்வேறுபாடுகள் அமெரிக்க சமுதாயத்தின் சிறப்பியல்புகளைக் குறிக்கின்றன. இவ்வேறுபாடுகளை மனிதர்களின் தொழில்களிலும், பண்பாட்டுச் செய்கைகளிலும் சமய வாழ்விலும், பொருளாதார வரையளவிலும், கல்வித்தரத்திலும் காண லாம். சமுதாயத்தின் சமூக அமைப்பினால் இளையோன் பல விதங் களில் பாதிக்கப்படுகின்றான். அவர்களுடைய குடும்பம் எவ்விதமாக இவ்வமைப்பில் பொருந்தியிருக்கின்றது என்பதைப் பொறுத்தே இம்மாற்றங்கள் ஏற்படுகின்றன. நாளிடல்கள், அடைவுகள், சமூக வாழ்க்கை, இளையோர் பருவத்திய சிறுவர் சிறுமியர்களின் நடத்தை ஆகியவைகளில் சமூக வகுப்பு குறிப்பிடத்தக்க மாறுதல்களை ஏற் படுத்தவல்லது என்பது முந்தைய அதிகாரங்களிலேயே குறிப்பிடப் பட்டுள்ளது. தொழில், வருமானம், கல்வி ஆகிய மூன்று மாறும் இயல்புகள் ரெயிஸ்மான் (Reissman) என்பவரால் வகுப்பின் நிலையை அளக்கப் பயன்படுத்தப்பட்டுவந்தன.[2] அதிகச் சிக்கலான வாழ்க்கைமுறையின் தேவைகளை நிறைவேற்ற இவை வளர்ச்சிபெற் றிருக்கின்றன. அதாவது, இந்தக் குழுவைச் சேர்ந்த தனியன்கள் அதிக அளவில் படித்தவர்களாகவும், ஒழுங்காகக் கோயில்களுக்குச் செல்பவர்களாகவும், பல சங்கங்களைச் சேர்ந்தவர்களாகவும், இச்சங் கங்களில் அதிகமாகப் பதவி வகிப்பவர்களாகவும் இருந்தார்கள். இதற்கு மாறாகக் கீழ்வகுப்பைச் சார்ந்தவர்கள் அவர்களைவிட சமு தாய நிகழ்ச்சிகளில் குறைவாகச் செயலாற்றுபவர்களாக இருந் தார்கள். மேலும், குறிக்கோளற்றவர்களாகவும், இந்நிகழ்ச்சிகளைப் பற்றிய அறிவும், சமுதாயத்தின் சமூக இயக்கத்தைப்பற்றிய அறிவு மற்றவர்களாகவும் காணப்பட்டனர்.

முந்தைய அதிகாரங்களில், இளையோனின் சமூக வகுப்பின் விளைவுகள், நோக்கம், நடத்தை, பேரார்வம், ஒப்பாரின் சமூக அனு மதி ஆகியவைகளைக் காணலாம். இந்த விளைவுகள் கல்விப் பிரச்சினை, விருப்பம், தொழில்முறை ஆர்வங்கள் முதலியவற்றிலும் காணப்படு வதைப் பின்வரும் அதிகாரங்களில் குறிப்பிட்டுக் காட்டப்படும்.

சமுதாயத்தின் பங்கு

சமுதாயத்தில் வலிமையின் முக்கியத்துவத்தையும், பதின் வயது சிறுவர் சிறுமியர்களின் வளர்ச்சிக்கான நிபந்தனைகளையும் அறிவது மிகக் கடினமாகும். குடும்பம் தன் அளவிலும் செயல்களிலும் குறை யும்பொழுது, சமுதாயத்தின் உள்ளடங்கிய மற்றைய வலிமைகள் முக்கியமான பங்கினைப் பெற்றிருக்கின்றன என்பதை அறிய மிகுதி

[2] L. Reissman, 'Class, Leisure and Social Participation, American Sociological Review, 1954, Vol. 19, pp. 76-84.

யான சான்றுகள் உள்ளன. வளரும் தனியன், குடும்பத்தில் தோன்றும் பிரச்சினைகளை உரிமையின் மூலமாகவோ அல்லது பற்றினாலோ தீர்ப்பதுபோல் தீர்க்க முடியாத பிரச்சினைகளைச் சில சமயத்தில் நேருக்கு நேர் காண்கிறான். ஜான் டூவி (John Dewey) பல வருடங்களுக்கு முன்னால் எழுதும்பொழுது, குடும்பம், சமுதாயங்கள் ஆகியவை ஒழுக்கத்தை வளர்ப்பதில் முக்கியத்துவம் கொண்டிருப்பதை நன்கு குறிப்பிட்டார்.



படம் 14-1

'சமுதாயம் அதன் ஆழ்ந்த பொருளில் நேருக்கு நேர் காணும் செயல்தொடர்பாக அமையவேண்டும். இதனால்தான் குடும்பமும், சுற்றுப்புறமும் குறைகள் உள்ளனவாக இருப்பினும், வளர்ப்பின் முக்கியச் செயல்நிலையமாக அமைகின்றன. இவைகளின் வழியாகவே மனநிலை உறுதியானதாக அமைகின்றது. ஒழுக்கத்தின் ஆணிவேராக அமையும் எண்ணங்கள் சேர்க்கப்படுகின்றன. இப் பெரிய சமுதாயம் கட்டுப்பாடில்லாத, நிறைவான செய்திப் பரிமாற்றம் என்ற பொரு

37

ளில் கருதப்படல் வேண்டும். ஆயினும், அது உள்ளூர்ச் சமுதாயத்தின் எல்லா இனங்களையும் பெறமுடியாது"[8]

வெற்றிடத்தில் இசைவான சொந்த சமூக வளர்ச்சி ஏற்படாது. மிகச் சிறிய அனுபவத்தினாலும் இது விளையாது. இளையோன் குடும்பத்தின் வெளிப்புறத்திலும், நெருங்கிய சுற்றுப்புறங்களிலும் சமூகத் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ள அவனுக்கு வாய்ப்பளித்தல் வேண்டும். சொந்த சமூக வளர்ச்சியை அடைவதற்குப் போதிய அளவு தானாகச் செயலாற்றவும், பொறுப்பேற்றுக்கொள்ளவும் இளையோனுக்கு வாய்ப்பளித்தல் வேண்டும். இளையோர்களின் நடத்தையையும், வளர்ச்சியையும் சமுதாயம் பலவிதங்களில் பாதித்துச் செயலுறுகின்றது. முதலாவதாக, இளையோர்களிடம் கற்பிக்கப்பட்டும், கட்டாயப்படுத்தப்பட்டும் வருகின்ற நடத்தை வகைகளால் இது சிறப்பாகக் குறிக்கப்படுகிறது. இரண்டாவதாக, சமுதாயம் இளையோர்களுக்கு நடத்தை ஒழுக்கம், வாழ்க்கையின் நோக்கங்கள் ஆகிய வகைகளைப் பற்றி எழும் வினாக்களின் விடைகளை அளிக்கின்றது. சமுதாயத்தின் செயல்களினாலும் பல்வேறுசக்திகளினாலும் இப் பதில்கள் அளிக்கப்படுகின்றன என்றாலும், அவைகள் அப் பதில்களை ஏற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்துகின்றன. சுற்றுப்புறங்களைவிடச் சமுதாயம் குறைந்த நெருக்கமுடையதாக இருப்பினும், இப் பிரச்சினைகளின் விடைகள் பலவகைப்பட்ட தன்மையுடையனவாக இருக்கின்றன. இவ்வாறாகச் சமுதாயத்தில் குறிப்பிட்ட நடத்தை வகையினைப் பின்பற்றவோ அல்லது ஒருவிதமான வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளவோ சிறிது வாய்ப்புகள் இளையோனுக்கு அளிக்கப்படுகின்றன. சமுதாயம் எவ்வளவு அதிகமாக ஒரே சீராக இருக்கின்றதோ, அவ்வளவு குறைவாக இளையோனுக்குத் தேர்ந்தெடுப்புரிமை இருக்கும்.

இளையோனைப் பாதிக்கும் மூன்றாவது சமுதாய முறை, அதனுடைய பண்பாட்டு அமைப்புகள் மூலமாக வருகின்றது. சமுதாயத்தில் பேசப்படும் மொழி, இளையோனின் சிறிய வயதினில் ஆழ்ந்த பிணைப்பினை ஏற்படுத்துகின்றது. இளையோனின் விருப்பு வெறுப்புகள், சார்பெண்ணங்கள், சுவைகள், பாராட்டுகள் ஆகியவைகள் குறிப்பிடக்கூடிய அளவில் சமுதாயத்தின் செல்வாக்கினால் விளைகின்றன. குடும்பம், சமுதாயம் இவைகளின் செல்வாக்குகளுக்கிடையே குறைவான அளவிலேயே சிக்கல்கள் இருக்கின்றன. ஏனெனில், பெருவாரியான குடும்பங்கள், ஒரு சமுதாயம் அல்லது அதையொத்த சமுதாயத்திலிருந்து தோன்றியவைகளாக இருக்

[8] J. Dewey, 'The Public and Its Problems,' New York: Henry Holt, 1927, pp. 211-212.

கின்றன. சில சமுதாயங்கள் மற்றவைகளைவிடச் சிறந்த பண்பாட்டு உள்ளடக்கத்தை அளிக்கின்றன. இவைகள் நூல்நிலையங்கள், கோயில்கள், பொழுதுபோக்கு வசதிகள், பள்ளி ஆகியவற்றில் பிரதிபலிக்கின்றன. பொதுவாகக் கல்வியை நகரவாசிகள் மதிக்கும் அளவு கிராமவாசிகள் மதிப்பதில்லை. இது அட்டவணை 14-1-ல் காட்டப்பட்டுள்ளது. அட்டவணை, விவசாயம் செய்வோர், கிராமத்தில் விவசாயம் செய்யாது மற்றத் தொழில் செய்வோர் ஆகியோர் இல்லங்களிலிருந்தும், நகரப் பகுதிகளிலிருந்தும் பள்ளிக்குவரும் இளைஞர்கள் சதவீதத்தினைக் குறிப்பிடுகின்றது.[4]

நுண்ணறிவுச் சோதனைகளைப் பள்ளி வயதுக் குழுக்களுக்கு அளித்துப் பெறப்பெற்ற மதிப்பெண்களின் சராசரி, நகர மாணவர்கள் கிராம மாணவர்களைவிட உயர்வாக இருப்பதைக் காட்டுகின்றது. படம் 14-2-ல் 3,652 முன்னாள் கல்லூரி மாணவர்களின் ஓஹியோ சோதனைமூலம் பெற்ற சராசரி மதிப்பெண்கள், சமுதாய அளவின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.[5] இம் முடிவுகள், இவ்வறிக்கை அளிக்கப்பட்ட பொழுது முன்னாள் மாணவர்கள் சமுதாயத்தில் தங்கியிருந்த அளவிற்கு ஏற்றவாறு சராசரி மதிப்பெண்கள் கூடுதலைப் பெறுகின்ற மாறாத போக்கைக் காட்டுகின்றன. மேலும், இவ்வாய்வின் முடிவுகள், தோற்றப் பகுதியிலிருந்து குடியேற்றப் பகுதியின் தூரம் அதிகரிக்க அதிகரிக்க இடைமதிப்பெண்கள் அதிகரிக்கின்ற போக்கினைக் காட்டின. இவ்வாறு அதிகமான மக்கள்தொகையுள்ள பகுதிகளில் அதிகமான நுண்ணறிவுள்ள இளைஞர்கள் அதிகமாகக் குடியேறுவதற்குரிய காரணமாகக் குறிப்பிடக்கூடியவை யாவை? பொதுவாக உயர்ந்த அறிவு நாட்டமுடைய இளைஞர்கள், பல்வேறு தொழில்கள், வியாபாரம் முதலிய துறைகளால் கவரப்படுகின்றார்கள் (அறிவுத்திறன்களை அறிவதற்குப் பேனா, பென்சில் வகை நுண்ணறிவுச் சோதனைகள் பயன்படுத்தப்பட்டன). இவ்வாறான துறைகளுக்குரிய வாய்ப்புகள் நகரங்களிலும் பேரூர்களிலும் மிக அதிகமாக இருக்கின்றன. ஆதலின், அறிவு நாட்டம் அதிகமாக உள்ள இளைஞர்கள், மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளுக்குக் குடியேறச் செல்வது சாத்தியமேயாகும். வரவிருக்கின்ற அதிகாரங்களில் இத் தன்மையில் கல்வி, சமூகவியல் முக்கியத்துவங்களைப்பற்றிக் கவனிக்கலாம்.

[4] The materials for Table 14-1 are taken from Current Population Reports, Series P-20, No. 32 and Series PC-7, No. 1.

[5] C. T. Philblad, and C. L. Gregory, 'Selective Aspects of Migration among Missouri High School Graduates,' American Sociological Review, 1954, Vol. 19, pp. 314-324.

அட்டவணை 14—1

195 -ல் வயதுக் குழுக்களின்படி கிராமத்தில் விவசாயம், விவசாயத்தைத் தவிர மற்றத் தொழில்கள் நடக்கும் பகுதிகள், நகரப் பகுதிகள் ஆகியவற்றிலிருந்து பள்ளிக்குச் சென்ற இளைஞர்களின் சதவீதம்.

வயதுக் குழு	அமெரிக்க நாட்டின் மொத்தம்	கிராமவிவசாயத் துறை	கிராம விவசாயத்தைத் தவிரமற்றத் துறை	நகரப் பகுதி
10—13	96·1	95.2	95·4	96·8
14—17	84·4	78.7	82·4	87·5
18—20	28·7	19.2	19·8	34·2
21—24	11·5	8.7	6·5	14·1



படம் 14-2

1952-ல் பழைய மாணவர்கள் வாழ்கின்ற சமுதாயத்தினை வகைப்படுத்திய ஓஹியோ சோதனை மதிப்பெண்களின் சராசரி அளவீடுகள்.

இளையோனின் ஓய்வுநேரச் செயல்கள்

பொறிநுட்பத்துறையின் வளர்ச்சி, தொழில் உலகத்தினின்று இளையோனின் உழைப்பினை உண்மையாகவே அகற்றியுள்ளது. மேலும், பண்ணையிலும் குடும்பத்தின் சுற்றுப்புறங்களிலும் இளையோனின் உழைப்புக்கான கோரிக்கைகள், இயந்திரங்களின் உப

யோகத்தினால் குறைந்துள்ளன. இளையோனின் வாழ்க்கையில் பொறிநுட்பத்துறையினால் தோன்றியுள்ள சில முக்கிய விளைவுகள்: (1) கல்வியின் அளவு அதிகரிக்கப்பட்டதோடு நீட்டப்பட்டும் உள்ளது. (2) ஓய்வுநேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. (3) பணம் செலவிடுவதற்கு அதிகமான தேவைகள் ஏற்பட்டுள்ளன. (4) தொழிலுக்குப் போகவேண்டிய வயது பின்னால் ஏற்படுவதனால், பொருளாதாரச் சுதந்திரம் பெறுகின்றனர். 'எனக்கு அதற்கான நேரம் இல்லை' என்று இளையோர்கள் அடிக்கடி கூறினாலும், இளையோன் முந்தைய நாட்களில் காணாத அளவு ஓய்வுநேரத்தை எப்படிச் செலவிடுவது என்ற பிரச்சினையை நேருக்குநேர் காண்கிறான். நவீனப் பள்ளிகளில் ஓய்வு நேரத்தினைப்பற்றிய கல்வியளிப்பது முக்கியமான நோக்கங்களில் ஒன்றாக அமைந்துள்ளது

அட்டவணை 14—2

இளையோர் பருவத்திய சிறுவர்களின் வயதுக்கு ஏற்ற வழக்கிலுள்ள ஓய்வுநேரச் செயல்கள்

செயல்கள்	விவரத்தைக் கூறும் சிறுவர்களின் வயது			
	14	15	16	17
பந்தயத்தில் பங்கு கொள்ளுதல்	1	1	1	1
திரைப்படம் காணச் செல்லுதல்	2	2	3	2
சமூக நிகழ்ச்சிகளைக் காணச் செல்லுதல்	4	5	...	3
பந்தயங்களைக் காணச் செல்லுதல்	3	3	4	4
விருந்துகளில் கலந்துகொள்ளுதல்	5	10	10	7
பேசுவதற்குச் செல்லல்	6	3	2	8
விளையாட்டினில் பங்கு கொள்ளுதல்	7	7	5	...
வீட்டுப் பாடங்களைச் செய்தல்	8	9	9	6
உலாவுதல்	9	...	7	...
பொருள்களைத் தகுந்த இடங்களில் வைத்தல்.	10	4	6	...
கோயில் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதல்.	...	8	...	9
குதிரைச் சவாரி	...	6	8	10

அட்டவணை 14—3

இளையோர் பருவத்துச் சிறுமியர்களின், மிகவும் பரவலாக உள்ள ஓய்வுநேரச் செயல்கள் என்று இளையோர் பருவச் சிறுமியர்களால் வயதிற்கேற்றபடி தரப்படுத்தப்பட்டவை.

செயல்கள்	விவரத்தைத் தரும் சிறுமியர்களின் வயது			
	14	15	16	17
பேசுதல்	1	1	1	1
திரைப்படம் காணச் செல்லுதல் ...	2	2	2	2
பந்தயங்களில் பங்கு கொள்ளுதல் ...	3	6	5	7
பள்ளியின் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுதல்.	4	3	3	3
ஒலிப்பதிவுகளைக் கேட்டல் ...	5	...	8	...
கோயில் நிகழ்ச்சிகளைக் காணச் செல்லல்.	6	10	7	...
வீட்டுப் பாடத்தைச் செய்தல் ...	7	5	9	5
விருந்துகளுக்குச் செல்லுதல் ...	8	4	4	6
உலாவுதல்	9	...	...	...
நடனம்	10	8	6	10
குதிரைச் சவாரி செய்தல்	...	9	10	...
நடத்தல்	...	7	...	8
விளையாட்டுகளில் பங்கு பெறுதல் ...	...	...	...	4

அதிகமாக வழக்கிலுள்ள ஓய்வுநேரச் செயல்களைப் பின்பற்றுதல்

சிறுவர் சிறுமியர் தங்களது ஓய்வுநேரத்தை எவ்வாறு பயன் படுத்துகிறார்கள் என்பது அவர்களின் அக்கறையின் இயல்பையும், போக்கையும் குறிப்பிடுவதாக அமைகின்றது. இல்லினாய்ஸ் (Illinois) பகுதியிலுள்ள ஈவான்ஸ்டன் நகர்ப்புற உயர்நிலைப் பள்ளி (Evanston Township High School) 10ஆம், 11ஆம் படிவ மாணவர்களைச் சோதித்ததில், அவர்கள் இருபத்துநான்குமணி நேரத்தில் 2·75 மணியைத் தொலைக்காட்சி (TV) காண்பதில் செலவிடுவதாகக் கண்டறியப்பட்டது.[6]

[6] P. Witty, 'Television and the High School Student,' Education, 1951, Vol. 72, pp. 242-251.

இதைப்போன்ற பல மதிப்பீடுகள் இதையொத்த முடிவுகளையே தருகின்றன. புதுமை குறைய ஆரம்பித்தவுடன் தொலைக்காட்சிக் கருவியின் கவர்ச்சியும் குன்றிவிடுகின்றது என்பதனைக் காட்டப் பல சான்றுகள் உள்ளன. விட்டி (Witty) என்பவர் இல்லினுய்ஸ் பகுதியைச் சார்ந்த கிளென்கோ(Glencoe) எனும் ஊரில் நடத்திய வெளியிடப்படாத ஓர் ஆராய்ச்சியில், முதலில் 7ஆம் படிவத்தைச் சேர்ந்த மாணவர்கள் செலவழித்த நேரம் மூன்று மணியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 18 மாதங்கட்குப்பின், இச்சராசரி 1·8 மணியாகக் குறைந்துவிட்டது. பல ஆராய்ச்சிகள், பெரும்பான்மையான சிறுவர்கள் சிறுமியர்களைவிடத் தொலைக்காட்சியில் (TV) அதிக அக்கறை செலுத்துவதாகக் காட்டுகின்றது. தொலைக்காட்சியில் விளையாட்டுகள் அதிகமாகக் காட்டப்படுவதாலும், அவர்கள் விளையாட்டுகளில் அதிக அக்கறை கொண்டிருப்பதாலும், தொலைக்காட்சியில் அதிக அக்கறையினைச் சிறுவர்கள் கொள்கின்றனர்.

பிப் (Bibb) என்பவர் ராக்ஃபோர்டு, இல்லினுய்ஸ் (Rockford, Illinois) மாணவர்களை ஆட்படுவோர்களாகக் கொண்டு, இளையோர் பருவத்திய சிறுவர்சிறுமியர்களின் அதிகமான வழக்கிலுள்ள ஓய்வுநேரச் செயல்கள பற்றிய பிரச்சினையை ஆய்வு செய்தார்.[7] விளையாட்டுகளில் பங்கு கொள்ளுதல், ஆய்வு செய்யப்பட்ட எல்லாப் படிவங்களைச் சிறுவர்களாலும் உயர்ந்த தரம் அளிக்கப் பெற்றது.

சிறுவர்கள் விளையாட்டில் பங்குகொள்ளும் செயலுக்கு அடுத்ததாகத் திரைப்படங்களைக் காணச் செல்லுதலையும், சமூக நிகழ்ச்சிகளைக் காணச் செல்லுதலையும் விரும்புகிறார்கள் என்பதைப் படம் 14–2-ன் முடிவுகளில் காணலாம். சிறுமியர்களிடத்து அதிகமாகக் காணப்படும் ஓய்வு நேரச் செயல்கள், பேசுவது, திரைப்படம் காண்பது, விளையாட்டுகளில் பங்குகொள்வது என்பதைப் படம் 14-3-ல் காணலாம்.

சிறுவர்களும் சிறுமியர்களும் பூப்படைவதனுல், நிலையாக வளரும் ஓர் அக்கறையை மாற்றுப் பால் உணர்ச்சிச் செய்கைகளில் காட்டுகிறார்கள். 15, 16, 17, 18 வயதினர்கள் மாற்றுப் பாலாருடன் நடனம் ஆடுவதையே முதன்மையான வழக்கிலுள்ள ஓய்வுநேரச் செயலாகக் கொள்கின்றனர் (அட்டவணை 14-4-ஐப் பார்க்கவும்). வானொலியைக் கேட்பதும், தொலைக்காட்சியைக் (TV) காணுவதும் இளையோர் பருவத்திய சிறுவர் சிறுமியர்களுக்கான செயலாகும்.

[7] F. G. Bibb, 'A Study of the Associates and Leisure-Time Activities of 1,042 Rockford, Illinois Adolescents,' Master's Thesis, Indiana State Teachers College, 1950.

ஓய்வுநேரச் செயல்களும் சமூகப் பொருளாதார அந்தஸ்தும்

அமெரிக்காவின் மாறுபட்ட சமூகப் பொருளாதாரக் குழுக்கள் மாறுபட்ட பண்பாட்டைப் பெற்றுள்ளன என்பதைப் பல ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. ஆனால், இப் பண்பாடுகளிலுள்ள மொழி, அரசியல் மனப்பான்மைகள், விளையாட்டுகளில் அக்கறை, உணவுப் பழக்கம்போன்றவைகளைப் பிரதிசெய்கின்ற ஓர் அமெரிக்கப் பண்பாடு உருவாகியுள்ளது. ஆதலின், சில வழிகளினால் பண்பாட்டு நிலையில் ஒத்திருக்கின்ற இளையோர் குழுக்களையும், வேறு வழிகளினால் பண்பாட்டு நிலையில் மாறியுள்ள இளையோர் குழுக்களையும் காணலாம். இளையோர்களின் அக்கறைகளைப்பற்றிய சுவையான கேள்வி: இளையோன் பின்தொடரும் ஓய்வுநேரச் செயல்களுக்கும், அவனுடைய சமூக அந்தஸ்துநிலைக்கும் எந்தவிதமான தொடர்பு உள்ளது?

அட்டவணை 14—4

பலவகைப்பட்ட மாற்றுப் பாலுணர்ச்சி கொண்ட குழுக்களில் அதிகமாக வழக்கிலுள்ள ஓய்வுநேரச் செயல்கள் என்று வயதிற்கேற்றவாறு இளையோர் பருவத்திய சிறுவர் சிறுமியர்களால் கூறப்பட்டவை.

செயல்கள்	விவரத்தைக் கூறிய சிறுவர் சிறுமியரது வயது				
	14	15	16	17	18
விளையாடுதல்	1	3	2	4	3
நடனம் ஆடுதல்	2	1	1	1	1
ஒலிப்பதிவுகளைக் கேட்டல் ...	3	2	3	2	...
பந்தயங்களில் பங்கு கொள்ளல் ...	4	6	4	10	2
திரைப்படம் காணச் செல்லல் ...	5	4	6	5	...
பேசுதல்	5	5	5	3	5
பள்ளி நிகழ்ச்சியில் பங்கு பெறுதல்	7	10	10	9	...
விருந்துகளுக்குச் செல்லுதல் ...	8	9	9	7	...
பந்தயங்களைக் காணச் செல்லல் ...	9	8	7	6	...
குதிரைச் சவாரி செய்தல் ...	10	7	8	8	4

இந்தப் பிரச்சினையை ஆராய ஓர் ஆராய்ச்சி செய்யப்பட்டது. பல வகைப்பட்ட பண்பாட்டுப் பின்னணிகளிலிருந்து பெற்ற 5, 6, 7 படிவங்களில் படிக்கும் குழந்தைகளின் ஓய்வுநேரச் செயல்

களைப்பற்றி இவ்வாய்வு ஆராய்ந்தது.[8] அவர்கள் ஒவ்வொருவரும் நாட்குறிப்புப் புத்தகத்தில் தங்களுடைய இரண்டு வாரச் செயல்களைக் குறிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். பிறகு கீழ்க் கண்ட நான்கு வகுப்புகளைச் சார்ந்த குழந்தைகளின் செயல்கள் ஒப்பிடப்பட்டன. சில மேல்வகுப்பினரோடு சேர்ந்த மேல்-நடுத்தர வகுப்பினர், கீழ்-நடுத்தர வகுப்பினர், மேல்-கீழ்வகுப்பினர், கீழ்வகுப்பினர். இந் நான்கு சமூகப் பொருளியல் குழுவிலுள்ள சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்குமுள்ள விகிதம் ஏறக்குறைய ஒன்றாகத்தான் இருந்தது. அட்டவணை 14—5-ல், பல செயல்களில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு வகுப்பினைச் சேர்ந்த குழந்தைகளின் பெயர்களும் தரவரிசையில் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட செயலை ஒரு வாரத்தில் ஒரு முறை அல்லது பல முறை செய்த சராசரி விகிதம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. கீழ்வகுப்பினைச் சேர்ந்த சிறுவர்சிறுமியர்கள் சிறுபான்மையிலேயே திட்டமிடப்பட்ட செயல்களைச் செய்வதில் பங்கு கொள்கின்றனர்கள் என்பதை இம் முடிவுகளிலிருந்து அறிந்துகொள்ளலாம். ஒவ்வொரு செயலின் தரங்களையும் நான்கு வகுப்புகளில் ஒவ்வொரு வகுப்பின் சதவீதத்தோடு ஒப்பிட்டால், குழுக்கள் ஒன்றுடனொன்று பல விதங்களில் ஒத்தும் வேறுபட்டுமிருப்பதைக் காணலாம். இவ்வேறுபாடுகளின் முழுக் கதையை இக் குறிப்புகள் கூறுவதில்லை. குடும்பத்தின் இயல்பு, கோயில் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுதல்—இவைகள் பண்பாட்டைப் பொறுத்து வேறுபடுகின்றன என்பதாகப் பல ஆராய்ச்சியாளர்கள் காட்டியுள்ளார்கள். திட்டமிடப்பட்ட ஓய்வு நேரச் செய்கைகளில் பங்குகொள்ளுதலிலும், சங்கீதம் படித்தல் போன்ற தனிப்பட்ட செயல்களில் பங்குபெறுதலிலும் முறையான பல வேறுபாடுகளைக் காணலாம். பொதுவாக நடுத்தர வகுப்புப் பிள்ளைகள் சாரணப் படையிலும், ஒய்.எம்.சி.ஏ. (Y.M.C.A.)யின் நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ளும் வாய்ப்பினைத் தவறாது மேற்கொள்கின்றனர்கள். நகரத்தைச் சேர்ந்த சங்கத்தினால் தோற்றுவிக்கப்பட்ட சங்கத்திலோ, கீழ்வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் நடுத்தர வகுப்புப் பிள்ளைகளுக்கான நடுத்தர சங்கங்களில் பங்கு கொள்வதை மிகக் குறைந்த அளவில் காணலாம். இந்த ஒருவழியில் இந்தக் குழந்தைகள் நடுத்தர வகுப்பின் மனப்பான்மைகளைக் கற்றுக்கொண்டு சமூக இயக்கத்தில் மேல்நோக்கிச் செல்ல முனைகின்றனர்.

[8] M. Macdonald, C. McGuire, and R. J. Havighurst, 'Leisure Activities and the Socio-economic Status of Children,' The American Journal of Sociology, 1948-49, Vol. 54, pp. 505-519. University of Chicago Press (Copyright 1948-49 by the University of Chicago).

மேல்வகுப்புகளைச் சேர்ந்த குழந்தைகளும், இளையோர்களும் தனியாக மற்றவர்களுடன் பழகாது இருக்கின்ற தன்மையை மிகவும் குறிப்பாகக் காணலாம். பெரும்பான்மையான குழந்தை

அட்டவணை 14—5

ஒவ்வொரு சமூகப் பொருளாதாரக் குழுவிலும் பங்குகொண்ட குழந்தைகளுடைய செயல்களின் தரவாரியான முறை (சதவீதத்தில்.)

தரம்	குழந்தைகளின் சமூகத் தரம் D செயல்	D சத வீதம்	C செயல்	C சத வீதம்	B செயல்	B சத வீதம்	A செயல்	A சத வீதம்
1.	திரைப்படங்கள்	84	திரைப்படங்கள்	82	வானொலி	84	வானொலி	79
2.	மாலை விளையாட்டு	72	வானொலி	80	திரைப்படங்கள்	78	கோயில்	61
3.	வானொலி	67	மாலை விளையாட்டு	65	கோயில்	59	திரைப்படங்கள்	57
4.	கோயில்	59	கோயில்	57	மாலை விளையாட்டு	58	குடும்பம்	57
5.	குடும்பம்	35	குடும்பம்	30	குடும்பம்	49	மாலை விளையாட்டு	52
6.	சுற்றுப்புற சங்கம்	33	வீட்டுப் பாடம்	28	நூல்களைப் படித்தல்	36	சாரணர் படை	46
7.	நூல்களைப் படித்தல்	30	நூல்களைப் படித்தல்	25	சாரணர் படை	22	நூல்களைப் படித்தல்	44
8.	வீட்டுப் பாடம்	16	சாரணர் படை	23	வீட்டுப் பாடம்	20	வீட்டுப் பாடம்	39
9.	சாரணர் படை	15	சுற்றுப்புற சங்கம்	22	இசை	16	இசை	22
10.	Y.M.C.A.	9	இசை	14	Y.M.C.A.	14	Y.M.C.A.	15
11.	இளைஞர் கூடுமிடம்	7	Y.M.C.A.	13	சுற்றுப்புற சங்கம்	9	சுற்றுப்புற சங்கம்	3
12.	இசை	4	இளைஞர் கூடுமிடம்	10	இளைஞர் கூடுமிடம்	3	இளைஞர் கூடுமிடம்	0

A. *உயர்தர வகுப்பினையும்,* B. *அதற்கடுத்த வகுப்பினையும், இவ்வாறு* C. D. *அதற்கடுத்த வகுப்புகளையும் குறிக்கின்றன.*

கள் பங்கெடுத்துக்கொள்ள முடியாத அதிகச் செலவுள்ள கோடை முகாம்களுக்கு அவர்கள் செல்கின்றார்கள். அவர்கள் பொழுது போக்கு இடங்களுக்குச் சென்று, ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினால் ஆதரவு அளிக்கப்படும் ஓட்டல்களில் தங்குகின்றார்கள். அவர்களைப்போன்ற இல்லங்களிலிருந்து வருகின்ற சிறுவர் சிறுமியர்கள் படிக்கும் பள்ளிக்குத்தான் அவர்கள் படிக்கச் செல்கின்றார்கள். கீழ்வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள், இடைவிடாது அனுபவிக்கும் வாழ்க்கையின் கரடுமுரடான பாதையினின்று பல வழிகளில் காக்கப்படுகின்றார்கள்.

உயர்தர வகுப்பு இளையோர்களின் செயல்கள் தனித்த இயல்பினைக் கொண்டுள்ளபோது, நடுத்தரவகுப்பு தேர்ந்தெடுக்கப்படுகின்ற பண்பினைக் கொண்டதாக உள்ளது. பணவசதியின்மையால் நடுத்தர வகுப்புப் பிள்ளைகள் பொதுமக்களுக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதாகிறது. பொதுப் பள்ளிகளிலும், பூங்கா போன்ற மற்றப் பொதுவிடங்களிலும் அவர்களைக் காணலாம். ஆயினும், நடுத்தர வகுப்புக் குழந்தைகளிடத்தும், அவர்களுடைய பெற்றோர்களிடத்தும் தேர்ந்தெடுக்கும் மனப்பான்மை இடைவிடாது வேலை செய்வதைக் காணலாம். நடுத்தர வகுப்புப் பண்பாட்டின் அடிப்படையிலும், நடுத்தர வகுப்புப் பயனடிப்படையிலும் மத்தியதர வகுப்புப் பெற்றோர்கள், தங்கள் சிறுவர்களுக்கான பூங்கா, விளையாட்டு மைதான இடம், பொழுதுபோக்கு ஆகியவைகளைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். மத்தியதர வகுப்பினைச் சேர்ந்த பெற்றோர்கள் தேர்வு மனப்பான்மை மிக்கவர்களாக உள்ளார்கள் என்பது முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் குழந்தைகள் சமூகத்தில் முன்னேறவும், பேறுகள் அடையவும் கீழ்வகுப்புப் பெற்றோர்களைவிட அதிகமாகக் குழந்தைகளை வற்புறுத்துகிறார்கள். இது அவர்கள் உயர்நிலைப் பள்ளியில் தேர்ந்தெடுக்கின்ற வகுப்புப் பாடங்களிலும், ஓய்வுநேரச் செயல்களிலும் வெளிப்படையாகப் புலனாகின்றது.

கீழ்வகுப்புக் குழந்தைகள், இளையோர்கள் ஆகியோருடைய செயல்கள் எஞ்சியிருக்கின்ற தன்மையுடையனவாக இருக்கின்றன என்று வருணிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு எளிதில் கிடைக்கக் கூடிய செயல்களையே அவர்கள் பின்பற்றுகிறார்கள். அவர்கள் அருகிலிருக்கும் விளையாட்டு மைதானத்தையே நாடுகிறார்கள். பொதுநலத் தொண்டு அவர்களால் வரவேற்கப்படுகிறது.

வாழ்க்கையின் துன்பங்களிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுவதில்லை. உடற் பயிற்சித்துறை, உடல்வலிவு, பொறுதியாற்றல் இவைகளில் தனித்த போட்டிகளை அடிக்கடி காணலாம். இங்கு பெற்றோர்களின் மேற்பார்வையைக் குறைவாகவே காணலாம். மேலும், அவர்கள் பொறுப்புணர்ச்சியின் வளர்ச்சியில் பெற்றோர்கள் அதிகத் தலை

போடுவதில்லை. அவர்களுடைய செயல்களில் வழிகாட்டலும், தூண்டுதலும் குறைவாகவே உள்ளன.

விளையாட்டுத் தோழர்கள்

இளையோர் பருவத்தை அடையுமுன் சிறுவர் சிறுமியர் ஒரு குறிப்பிட்ட ஒருவனைத் தோழனாக அல்லது நண்பனாக ஏற்றுக்கொள்வதற்குக் காரணம்பற்றியும், அவனது வாழ்க்கையின் குணவியல்பு அமைவதில் அந்நண்பனுடைய பங்குபற்றியும் ஃபர்ஃபீ (Furfey) என்பவர் கவனத்துடன் ஆராய்ந்துள்ளார்.[9] 296 சிறுவர்களடங்கிய குழுவில் 62 ஜோடி சிறுவர்களின் நட்பினைப்பற்றி ஆராயும்பொழுது, அவர்களில் 45 சதவீதம் ஒரே சுற்றுப்புறத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதை அவர் கண்டார். மேலும், 89 சதவீதம் பள்ளியின் ஒரே அறையைச் சேர்ந்தவர்களாகவும் காணப்பட்டார்கள். நண்பர்களுக்கும் சில மாறிகளுக்குமிடையே உள்ள உடன்தொடர்புகள் பெறப்பட்டன. முக்கியமாக இந்த மாறிகள் உடல் அளவீடுகளைப் பொறுத்தே பெறப்பட்டன.

அட்டவணை 14—6

சில மாறுந்தன்மைகளைப் பொறுத்துத் தோழர்கள் ஒருவருக்கொருவர் கொள்ளும் தொடர்பு

காலக்கிரமப்படியுள்ள வயது	·39 ± ·07
வளர்ச்சி சார்ந்த வயது (பருவநிறைவு) ...	·37 ± ·07
உயரம்	·34 ± ·08
மனநோய் வயது	·24 ± ·08
எடை	·22 ± ·08

அட்டவணை 14-6, பல்வேறு உடல் அளவீடுகளின் உடன்தொடர்புகளை அளிக்கின்றது. இவ்வாய்வு, எடுத்துக்கொள்ளப்பட்ட மாறிகளைக்காட்டிலும் சில சமயங்களில் முக்கியமான ஏதுக்களான சுவைகள், அக்கறைகள், ஒழுக்கத்தரங்கள், மனப்பாங்கு, சமூகத்தரம், பொருளாதார நிலைகள் ஆகியவைகளைப்பற்றிக் கவலைகொள்ளவில்லை.

நியூகார்ட்டன் (Neugarten) என்பவரின் ஆய்வு கீழ்க்கண்ட பொதுவான கேள்வியினைப்பற்றிக் கவலைகொண்டது: பள்ளிக் குழந்தை

[9] P. H. Furfey, "Some Factors Influencing the Selection of Boys' Chums," Journal of Applied Psychology, 1927, Vol. 11, pp. 47-51.

களிடத்தேயுள்ள நட்பினை, சமூக அந்தஸ்து எனும் ஏது எங்கெங்த வகைகளில் எந்த அளவில் பாதிக்கின்றது?[10] பொதுப் பள்ளியில் உள்ள 5, 6, 10, 11-ஆம் படிவ மாணவர்களே ஆராய்ச்சியில் ஆட்படுவோர்களாக இருந்தனர். இளைய குழுவின் சராசரி வயது 11 வயது 3 மாதங்களாகவும், மூத்த குழுவின் சராசரி வயது 16 வயது 3 மாதங்களாகவும் இருந்தன. சமூக அளவியலும், 'யாரென ஊகித்துக் கூறும்' சோதனையும் இவ்வாட்படுவோர் களுக்கு அளிக்கப்பட்டன. வெவ்வேறு குழந்தைகளின் சமூக அந் தஸ்தின் அடிப்படையில் முடிவுகள் ஆய்வு செய்யப்பட்டன. மிகக் கீழான அந்தஸ்தினைச் சார்ந்த குழந்தைகளைத் தவிர மற்றவர்கள் தங்களைவிட உயர்ந்தவர்களை நண்பனாகத் தேர்ந்தெடுக்க முதலில் விரும்புவதாகவும், அதற்குப்பின்னர் தங்கள் அந்தஸ்து நிலையி லுள்ளவர்களையே தேர்ந்தெடுப்பதாகவும் அவர் கண்டார். உயர்ந்த அந்தஸ்துள்ள குடும்பத்தின் குழந்தைகள் இசைவான வாக்குகளை யும், கீழ்த்தர வகுப்பினரின் குழந்தைகள் இசைவில்லாத வாக்கு களையும் பெற்றனர்.

மேல்வகுப்பைச் சார்ந்த ஒரு குழந்தை பொருமைப்படும் நிலையை அடைகின்ருன். அவனுடன் படிக்கும் மாணவர்களில் பலர் அவனைத் தம் நண்பனாகக் கருதுவார்கள். இதற்கு மாருன நிலை யைக் கீழ்வகுப்பைச் சார்ந்த குழந்தை பெறுகின்ருன். பொதுவாக அவனை ஒரு நண்பனாக யாரும் கருதுவதில்லை. மேலும், அவன் மற்றவர்களால் விரும்பப்படாத ஒருவனாகக் கருதப்படுகிருன். தெரிந்தோ தெரியாமலோ தனது நண்பர்களைத் தேர்ந்தெடுக்கின்ற குழந்தை, அவனுடைய வகுப்பிலுள்ள உடன் படிப்போர்களைப் போன்றே தேர்ந்தெடுக்கிருன். அவைகளைப்பற்றி அவன் தன்னு டைய பெற்ருேர்களிடமிருந்து அறிந்துகொள்கிருன். உயர்நிலைப் பள்ளி நிலையில் உயர்ந்த அந்தஸ்துள்ள இளையோன், தன்னுடைய மதிப்பு இசைவானதாய் இருந்தாலும் இசைவில்லாத நிலையில் இருந்தாலும், அவன் தனது குழுவின் கவனத்தைக் கவர்பவனாகவே இருப்பான்.

உடலைச் சேர்ந்த செயல்கள் இளையோர் பருவத்திய சிறுவர்களை ஒன்றுசேர்ப்பதில் மிக முக்கியமாகும். ஆயினும், சிறுமிகளிடத்து இந்த அளவிற்கு அது முதன்மையாகச் செயலுறுவதில்லை. பொது வாக உடலைச் சேர்ந்த செயலும் திறமையும் ஆண்மைத்தனமான பண்புக்கூறுகளாகக் கருதப்படுவதால், அவைகள் சிறுமியர்களைவிடச்

[10] B. Neugarten, 'Social Class and Friendship among School Children,' American Journal of Sociology, 1946, Vol. 51, pp. 305-313.

சிறுவர்களுக்கு முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன; ஆதலால், இவை நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் முக்கிய இடம்பெறு கின்றன. இளையோர் சிறுமியர் தங்களது நண்பர்களைத் தேர்ந் தெடுப்பதில், சமூக நிலையினைப்பற்றி இல்லம் வலியுறுத்துவது மிகவும் முக்கியச் செல்வாக்கினைக் கொண்டுள்ளது.

'ஒரேவிதமான இறகுகளைக் கொண்ட பறவைகள் ஒன்றுகூடு கின்றன', 'இனம் இனத்தோடு சேரும்' என்பவைகளை நாம் நீண்ட நாட்களாக அறிவோம். உளவியல் கல்விப் பகுதிகளில் இது சான்று கள்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. குழந்தைப் பருவத்தையும், இளை யோர் பருவத்துக்குப் பின்னர் வரும் நாட்களையும் காட்டிலும், இளை யோர் பருவத்தில் நண்பர்கள் அல்லது உடன் விளையாடுபவர்களைத் தேர்ந்தெடுப்பது பொதுவாக அவர்கள் விருப்பத்தை யொட்டியே நிகழ்கிறது. இளையோர்கள் பொருத்தமற்ற நண்பர்களைத் தேர்ந் தெடுக்கும்போது, எச்சரிக்கை செய்வதாலும், கடிந்து கூறுவதாலும் எவ்விதப் பயனும் விளையாது. இளவயதில் பெற்ற பயிற்சியினாலும், சுற் றுப்புறச் சூழ்நிலைகளினாலுமே பல தொல்லைகள் விளைகின்றன. பொது வாக இளையோன் அதிகமாகக் கண்டிக்கப்பட்டால்,பொதுவாக நிலைமை மிகவும் சீர்கேடடையும். இதன் விளைவாக அத்தனியன் இதற்கு நேர்மாறான போக்கைக் கொள்ளுவான். வாழ்க்கையின் ஆரம்ப ஆண்டுகளிலேயே அவர்கள் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும் பண்பினைப் பெறவேண்டும். எல்லோராலும் விரும்பப்படும் வாழ்க் கையின் குறிக்கோள்களை அடைய பின்பற்றப்படும் உயர்குறிக் கொண்ட நடத்தை படிப்படியாகத்தான் தோன்றும். இளையோர் களைப்பற்றிய இவ்வாய்வு முழுவதிலும் வளர்ச்சிபற்றிய இக்கருத்தே வலியுறுத்தப்பட்டுள்ளது. இளையோனுக்குப் புதுச்சூழ்நிலை அமைத் தல் அல்லது சில அக்கறைகள், ஆசைகள் ஆகியவற்றின் தொடர் பில் வாழ்க்கையின் பயன் மதிப்பிற்கு ஒரு புதிய விளக்கப் பொருளைக் கூறல் அல்லது பொதுவான தொழிற் செயல்களில் மாற்றம் ஆகியவை இசைவில்லாத நண்பனைத் தேர்ந்தெடுப்பதைப் போக்க உதவிசெய்யும்.

தனிக் குழுக்கள், குழு ஆகியவற்றின் தோற்றம்

இளையோர் பருவத்திய சிறுவர் சிறுமியர்கள் தனிக் குழுக்கள், சமூகம், குழு, சங்கம் இவைகளைத் தோற்றுவிப்பதில் அதிக அக் கறை காட்டுகின்றனர். இவைகள் உண்மையில் 'குழு' வாழ்க்கை நிலையினை மாதிரியாக அமைக்கின்றன. பொதுவாக ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் ஒத்த நுண்ணறிவு பெற்றவர்களாக இருப்பார்கள் என்று விஞ்ஞான ஆராய்ச்சி காட்டுகின்றது. இளையோர் பருவத்தில் சிறுவர் தங்கள் நெருங்கிய நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதைப்

போன்று, இவ்வங்கத்தினர்களும் ஒரு குறிப்பிட்ட சிறிய நிலப்பகுதியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். குழு என்பது பொதுவாகச் சுற்றுப்புறத்தினைப்பற்றிய ஒரு நிகழ்ச்சியாகவே இருக்கும். மற்றவர்களது நடத்தை வகைகள் அவர்களுடைய தனியன்கள்மூலம் பாதிக்கப்படலாம். அவர்களின் செயல்கள் மற்றவர்களது நடத்தை வகைகள் உருவாவதில் செல்வாக்குக் கொள்ளலாம். பொதுவாகக் குழு தனது விருப்பு, வெறுப்பு, ஆர்வம் இவைகளில் ஒரே தன்மையுடையதாகவே இருக்கின்றது. மனப்பான்மைகளிலும், குறிக்கோள்களிலும் சமூகம் ஒழுங்கான தன்மையினையே தனது பொதுச்செயல்களின் அடிப்படையில் வளர்க்க முனைகின்றது. குழுவின் மற்ற அங்கத்தினர்களின் மேலுள்ள பற்றுறுதி மிகத் தீவிரமாக அமைந்து, இதற்கு முன்னர் நேர்மை உண்மை ஆகிய குறிக்கோள்கள்மீது கொண்டிருந்த பற்றுறுதிகளையும் அது கடந்து செல்லலாம். குழுவின் நடத்தையும் அமைப்பும் வாழ்க்கை நிலைமைகளுக்கு அவை இணங்கிப்போவதைப் பொறுத்து உருவாகின்றன. சேரிகளில் உள்ள குழுக்கள், நகர வெளிப்புறங்களிலுள்ள குழுக்கள், வணிகத் தெருவிலுள்ள குழுக்கள், மக்கள் வாழும் பகுதியிலுள்ள குழுக்கள், நடுமேற்கு மாகாணத்திலுள்ள குழுக்கள், குப்பைகள் கொண்ட சமுதாயப் பகுதியிலுள்ள குழுக்கள் ஆகியவைகள் சுற்றுப்புறத்தின் சமூக அமைப்பினைப் பொறுத்து அவைகளுடைய அக்கறைகளிலும் செயல்களிலும் மாறுபட்டிருப்பதோடு, கட்டடங்கள், தெருக்கள், சந்துகள், பொது வேலைகள், அவைகளுடைய சூழ்நிலை, அமைப்பு ஆகியவைகளைப் பொறுத்தும் மாறுபடுகின்றன. இவ்வாறு பல ஏதுக்களில் குழு வாழ்ந்து, இருந்து, வளருவதை 'நிலைமைச் சிக்கல்' என்று கருதலாம். இதற்குள் மனிதத்தன்மை கொண்ட கூறுகள் இடைவினை கொண்டு குழுக்கோட்பாட்டினை உண்டாக்குகின்றன. குழுச்செயல்கள் நடக்கும் இடம், அவற்றின் குணவியல்பு ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் நீர்நிலைகள், மலைகள், பள்ளத்தாக்கு ஆகிய ஏதுக்களின் செல்வாக்கு மிகவும் அதிகமாக இருப்பதனால், கிளீவ்லாந்தில் (Cleveland) இளமையில் குற்ற நடத்தை கொள்பவர்களை இந்த அடிப்படையிலேயே வகைப்படுத்தினார்கள்.

சிறுவர்கள் தங்கள் தேவைக்கேற்ற சமுதாயம் அமையாத பொழுது தங்களுக்கான ஒரு சமூகத்தை அமைப்பதில் காட்டும் தீவிரமான முயற்சியினைக் குழுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. முதியோர் சமூகம் அவர்கள்மேல் சுமத்தும் நிலைமையினால், மற்ற ஏதுக்களினால் அடையமுடியாத ஓர் அனுபவத்தை இவ்விதமான குழுத் தொடர்பின்மூலம் பெறுகின்றனர். பொதுவான அக்கறைகளில், குறிப்பாக ஆர்வம் மிக்க கூட்டுச் செயல்களில், வேட்டையாடுவதில், எதனையாவது அடைவதில், சிக்கலில், ஓடுதலில், தப்ப முனைவதில்,

பங்கு பெறுதலில் உடல் சிலிர்க்கும் அனுபவமும் ஆர்வமும் ஏற்படு கின்றன. மற்றக் குழுக்களுடனும், அவர்களைச் சுற்றியுள்ள உலகத்துட னும் சிக்கல்கள் கொள்வது, அவர்களுடைய குழு நடவடிக்கை களுக்கு வாய்ப்பினை அளிக்கின்றது.

இந் நிலைகளைப் பொறுத்து, குழு இரண்டு வழிகளில் செயற்படு கின்றது. சமூகம் எதைத் தரவில்லையோ அதற்குப் பதிலாக ஒன்றைக் குழு தருகின்றது. அடக்குமுறையிலிருந்தும், சுவையற்ற நடத்தை களிலிருந்தும் தப்ப அது உதவுகிறது. அது இடைவெளியை நிரப்ப வும், தப்பியோடவும் ஒரு வழியை ஏற்படுத்துகின்றது. இவ்வாறு குழு என்பது ஒரு சிக்கலினால் தானாக, இயற்கையாக உருவாகின்ற வகையினைச் சார்ந்த அமைப்பாகும். அகன்ற சமூக அமைப்பு சரியாக உருவாகாததை இது குறிக்கின்றது.

தனியன்கள் பள்ளி, கோயில், பொதுவான சமுதாயம் ஆகியவற் றில் வெவ்வேறான குழுக்களுடன் தொடர்புகொள்ளும்போது, வேறு பாடுகள் கொண்ட பற்றுறுதிகளைக் கொள்ளலாம். குறிப்பாக, இது சிறுபான்மைக் குழுவின் உறுப்பினர்களின் தொடர்பில் கட்டாயமான உண்மையாகும். ஏனெனில், பரந்த எல்லாவற்றையும் கொண்டிருக் கின்ற சமுதாய நிறுவனங்களும், பதிலாண்மைகளும் பெரும்பான்மை யான பகுதியின் மனப்பான்மைகளையும் குறிக்கோள்களையுமே வலி யுறுத்தும். பொருந்தியமைகின்ற பிரச்சினை சிறுபான்மைக் குழுவி னர்க்கு மிகக் கடினமானதேயாகும். ஏனெனில், அவர்கள் பெரும் பான்மையான குழுக்களைச் சேர்ந்தவர்களைக் காட்டிலும் போராடக் கூடிய வாய்ப்புகளை அதிகமாகப் பெற்றிருக்கின்றனர்.

சான்றாகக் கிரேக்கப் பெற்றோர்களுக்குப் பிறந்த ஒரு குழந்தை கிரேக்கப் பண்பாடுள்ள குடும்பத்தில் வளரும். ஆனால், அக்குழந்தை இரண்டாவது அல்லது மூன்றாவது தலைமுறைக்குமுன் போலந்து அல்லது ஜெர்மனியிலிருந்து வந்தவர்களைக்கொண்ட சுற்றுப்புறத்தில் வாழ்ந்தால், அச்சமுதாயத்தில் வாழ்கின்ற குழந்தைகளுடன் சிக்க லினையே கொள்ளும். இளையோர் பருவத்திய மாணவர்கள் பற் றுறுதிகளைப்பற்றி நன்றாக அறிந்திருக்கின்றனர். முக்கியமாக அவர் கள் குழுக்களைச் சேர்ந்த மாணவர்களிடம் கொள்ளவேண்டிய பற் றுறுதிகளைப்பற்றி நன்கு அறிந்தவர்களாக இருக்கிறார்கள். இந்த வகையில் எழும் பிரச்சினைகள் சில நேரங்களில் மிகத் துன்பமானவை யாகவும் அமைந்துவிடுகின்றன. இதைப்பற்றி மீக் (Meek) என்பவர் கூறுவதாவது:

'ஒருவன் தன்னுடையகுடும்பத்திற்கும், நண்பர்களுக்கும், ஒழுங் காக அமைக்கப்பட்ட சிறு குழுவிற்கும், பள்ளிக்கும் பற்றுறுதி கொண் டவனாக எவ்வாறு இருக்க இயலும் என்பது முக்கியமான கேள்வி

யாகிறது. சிறுவர் சிறுமியர் இப்பற்றுறுதியினை ஆராய்வதற்கும், மேலும் எந்தக் குழுவிற்கு எந்த அளவு பற்றுறுதியினை அளிக்க வேண்டும் என்ற விவாதத்திற்கும் உதவிபெற வேண்டியது முக்கியத் தேவையாகிறது. அவர்களுடைய நடத்தையைப் பயனுள்ள வகையில் வழிகாட்டவும் அமைக்கவும் அவர்களுக்கு உதவி தேவையாயுள்ளது.'[11]

இளையோர்களுக்கான சமுதாயத் திட்டம்

குழந்தைகளின் சமூக நடத்தை வளர்ச்சிகளுக்கு மாநகரம், சிறிய நகரம் அல்லது கிராமச் சூழ்நிலை ஆகியவற்றில் எது அதிக நற்பயனைத் தருவதாக அமைகின்றது என்பதைப்பற்றி மாறுபட்ட கருத்துகள் இருந்தன. மாநகரங்களின் செயற்கையான கட்டுப்பாடுகளிலிருந்து மிகத் தூரத்திலிருக்கும் திறந்தவெளி விவசாயப் பண்ணை மிகச் சிறப்பான ஓரிடம் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால், கல்விக்கான வசதிகள், சமூகச் செயலில் பங்குகொள்வதற்கு வாய்ப்புகள், தற்கால நவீனத் துப்புரவு, உழைப்பைத் தவிர்க்கும் பல பொறியமைப்பு ஆகியவை இல்லாததால், விவசாயப் பண்ணை பயனற்றது எனக்கூறப்பட்டது. ஆயினும், நவீனப் போக்குவரத்து வசதிகளாலும், நன்கு அறியப்பட்ட உழைப்பைத் தவிர்க்கும் பொறியமைப்புகளின் உதவியாலும் இவ்வேறுபாடுகள் முன்போல அதிகமாகக் காணப்படுவதில்லை. பண்ணைகளில் வாழும் சிறுவர் சிறுமியர்கள் நகர மனப்பான்மை, குறிக்கோள், பயன் மதிப்புகள் இவைகளைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளை உருவாக்கும் பல வெவ்வேறான சமுதாயங்களிலுள்ள சிறுவர் சிறுமியர்களின் தேவைகளும் பிரச்சினைகளும் ஒப்புமை உள்ளனவாகவே காணப்பெற்றன.

இளையோருக்கு உதவும் நிலையங்கள்

இளையோனின் தேவைகளுக்குக் குடும்ப சமுதாய நிலையங்கள் அளிக்கும் உதவிகளைப் பழித்துக் கூறுபவர்கள் சிலர் உள்ளனர். பிரச்சினைக் குழந்தைகள் பற்றியும், இளையோர்கள் பற்றியும் முன்பு அளிக்கப்பட்ட குறிப்புகள் நமது தலையைச் சுற்றவைக்கின்றன. ஆயினும், நாம் அதன் மறுபக்கத்தினைப் பார்க்காதிருந்தால், இளையோனைப்பற்றிக் கொள்ளும் கருத்து குழப்பமானதாயிருக்கும். எட்டு மில்லியனுக்குமேல் உள்ள PTA உறுப்பினர்கள், பொதுப் பள்ளிக்

[11] L. H. Meek (Chairman, Committee on Workshop), 'The Personal Social Development of Boys and Girls with Implications for Secondary Education. New York: Progressive Education Association, 1940, p. 128.

காக தேசிய மக்கள் கழகம் அமைத்துள்ள நூற்றுக்கணக்கான சமுதாயக் குழுக்கள், ஆயிரக்கணக்கான, இன்னும் மில்லியன் கணக்கிலுள்ள இளைஞர் குழுக்களின் முதியோர் தலைவர்கள், மற்றவர்கள், ஆகியோர் பள்ளிகளுடன் ஒன்றுசேர்ந்து இளைஞர்களின் நன்மைக்காகப் பாடுபடுகின்றனர்.[12]

அமெரிக்காவில் 2,500,000-க்குமேல் சாரணச் சிறுவர்கள் இருக்கின்றனர். இவர்கள் தங்களுடைய பதவிக்குரிய சீருடைகளை அணிந்து, வீரம் தொண்டு இவைகளின் சின்னமாகப் பெருமையுடன் தோன்றுகின்றனர். மற்ற எல்லா நிலையங்களைவிட ஆசிரியர், பெற்றோர் குழு, பள்ளி ஆகியவை சாரணர் படையைப் பள்ளிகளில் அதிகமாக அமைக்கின்றன. இவ்வாறான படைகளை அமைப்பதில் பல கோயில்களும் அதிக அக்கறை காட்டியுள்ளன. ஆயிரக்கணக்கான ஆசிரியர்களும், மற்றப் பொதுமக்களும் தங்கள் நேரத்தைச் சாரணர் செயற்பாடுகளுக்குத் தருவதற்குத் தாமாக முன்வந்து பங்கு பெறுகின்றார்கள்.

மற்ற அமைப்புகளுடன் முக்கியமாக இரண்டு நிறுவனங்கள் அமெரிக்காவின் சிறுமியர்களுக்குத் தொண்டு செய்கின்றன. பெண்கள் சாரணர்படையும், கேம்ப் ஃபயர் சிறுமியரும் (Camp Fire Girls). 1954-ல் 1,500,000 சிறுமியர் சாரணர் படையில் அங்கத்தினர்களாக இருந்தார்கள். மூன்றுயிரத்திற்கு மேற்பட்ட சமுதாயங்கள் கேம்ப் ஃபயர் சிறுமியர் குழுவின் அங்கத்தினர்களாவதற்கான வாய்ப்புகளைப் பெண்களுக்கு அளிக்கின்றன. அமெரிக்காவின் 'வருங்கால விவசாயிகளின் சங்கம்' (Future Farmers of America) பள்ளிகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டு பணிபுரிகின்றது. 8,793 பகுதிகளில் 870,000 இளையோர்கள் இவ்வமைப்பில் அங்கத்தினர்களாக இருந்து 48 மாகாணங்களிலும் சுறுசுறுப்பாகப் பங்கு கொள்கின்றனர். இதனையொத்த பகுதியான 4-H சங்கமும் சிறிய சமுதாயம் அல்லது கிராமங்களில் வசிக்கும் சிறுவர் சிறுமியர்களை அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்கிறது. அமெரிக்காவில் 2,000,000-க்கு மேலான உறுப்பினர்கள் இதில் உள்ளனர். இச்சங்கங்களுக்கு 300,000-க்கு மேற்பட்ட உள்ளூர்த் தலைவர்கள் தங்கள் தொண்டினை விருப்பத்துடன் செய்கிறார்கள்.

அமெரிக்காவின் வருங்கால விவசாயிகளின் சங்கமும், 4-H சங்கமும் சிறு நகரங்களிலும், கிராமப் பகுதியிலுமுள்ள சிறுவர் சிறுமியர்கள் மீது கவனம் செலுத்துவதுபோன்று, அமெரிக்காவின் சிறுவர்களின் சங்கம் நகரத்துச் சிறுவர்களின் (ஒருசில நேரங்களில் சிறுமியர்களின்)

[12] H. C. Hunt, 'Partners with Youth,' Journal of National Educational Association, 1955, Vol. 44, pp. 99-100.

அக்கறைகளுக்காகவும், தேவைகளுக்காகவும் தங்கள் முயற்சியைச் செலவிடுகிறது. 375-க்கு மேற்பட்ட சிறுவர் சங்கம் பெரிய தலைநகரின் நிலப்பகுதியில் தோற்றுவிக்கப்பட்டு, 350,000-க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதாக உள்ளது. பொதுவாக இந்தச் சங்கங்கள் வசதியற்ற இல்லப் பகுதியினைச் சார்ந்த சிறுவர்களுக்குத் தொண்டு செய்ய முயலுகின்றன. எவ்விடங்களில் இவை இப் பணியை நன்கு செய்ய முடியுமோ, அவ்விடங்களில் இவை அமைந்திருக்கின்றன. வருங்காலத்து அமெரிக்க ஆசிரியர்களின் சங்கம் 1,800 உயர்நிலைப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட்டு, அதில் 43,000-க்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவின் பெரும்பான்மையான சமய நிறுவனங்கள் இளையோர் சங்கங்களைத் தோற்றுவித்துள்ளன. அவைகளுடைய செயல்களின் முக்கியத்துவத்தை எளிதாகக் கணக்கிட முடியாது. ஏனெனில், அவைகள் அறியவும் மதிப்பிடவும் முடியாத புதிர்களுடன் தொடர்பு கொண்டுள்ளன. எட்டாவது அதிகாரத்தில் கோயில், சிறுவர் சிறுமியரின் ஒழுக்க வளர்ச்சியிலும் ஆன்மீக வளர்ச்சியிலும் கொண்டுள்ள பங்கு விளக்கப்பட்டது. இப் பலவகையான சங்கங்களின் பரந்த நோக்கங் கொண்ட செயல்கள், குடும்பம், பள்ளி இவைகளின் பணிகளுடன் ஒன்றுசேர்ந்து வருங்காலத்தில் நல்ல குடிமகனைத் தருவதற்குச் சரியான உத்தரவாதத்தினை அளிக்கின்றன

இளையோர்களுக்குத் தொண்டு செய்யும் பதிலாண்மைகள், அதன் அளவு, அமைப்பு, மற்றச் சிறப்புக்கூறுகள் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபட்டு இருக்கும். மேலும், பங்கெடுத்துக்கொள்ளும் அளவும் வெவ்வேறு சமுதாயங்களைப் பொறுத்து மாறுபடுகின்றது. பல சமுதாயங்களின் முக்கியமான குறைபாடு, சமூக ஓய்வுநேர வாய்ப்புகளை அச் சமுதாயத்தைச் சேர்ந்த எல்லாத் தனியன்களுக்கும் தரத் தவறுவதேயாகும். ஒருசிலவற்றில் குறிப்பிட்ட குழுக்கள் பணவசதியின்மையால் பல நிறுவனங்களிலிருந்து விலக்கப்படுகின்றன. ஏனெனில், உறுப்பினராவதற்குச் சந்தாப்பணம் தரவேண்டியுள்ளது. சமுதாயத்தின் சமூகப் பொழுதுபோக்குத் திட்டங்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளவர்களின் தனித்த அக்கறைகளினால், வேறு சில குழுக்கள் கவனிக்கப்படுவதில்லை. இளைஞர்களில் பெருஞ் சதவீதத்தினர் பள்ளியிலும் வேலையிலும் இல்லாத காலமான 1930ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஆய்வின்மூலம், இளைஞர்களில் 74·5 சதவீதத்தினர் எந்தச் சங்கத்தையும் சார்ந்திருக்கவில்லை என்பது அறியப்பெற்றது.[18] அண்மையில் நடந்த ஓர் ஆராய்ச்சியில், 840 உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள மாணவர்களில் 50 சதவீதத்திற்கும் கீழானோர் இளையோர்

[18] H. M. Bell, 'Youth Tell Their Story', Washington: American Council on Education, 1938, p. 168.

சங்கச் செயல்களில் பங்கெடுத்துக்கொள்வதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அட்டவணை 14-7, மாணவர்கள் பங்குகொண்டுள்ள சங்கச் செயல்களை அளிக்கிறது.[14] இவ்வாய்வில் சில சுவையான பால் வேறுபாடுகளைக் காணலாம். இளையோர் பருவத்திய சிறுவர் சிறுமியரின் அக்கறைகளிலுள்ள வேறுபாட்டினையும் இது அறிவிக்கிறது. சிறுவர்கள் விருப்பச் செயல் சங்கங்களிலும், சாரணர்ப் படையிலும், வேட்டையாடும் சங்கங்களிலும் அடிக்கடி ஈடுபடுகிறார்கள். இதற்கு மாறாகச் சிறுமியர்கள் நூல்நிலையக் குழுவிலும், சமயச் செயல்களிலும், பள்ளிச் சங்கங்களிலும், மன்றங்களிலும் பொதுவாகப் பங்கெடுத்துக் கொள்கின்றனர். ஒரு நிறுவனத்தில் ஒரு குறிப்பிட்ட தொகைத் தனியன்கள் பங்கெடுத்துக்கொள்ளும் செய்தியிலிருந்து, அவைகளின் மதிப்பினைப்பற்றிய பொதுமையை அமைத்துக்கூற முடியாது. பங்கெடுத்துக்கொள்ளும் அளவின் தன்மையே மிக முக்கியமானதாகும். ஒரு சமுதாயத்தில் ஒரு நிறுவனம் மிகப் பயனுடையதாகவும், மற்றொரு சமுதாயத்தில் அதே நிறுவனம் மிகப் பயனற்றதாகவும் இருப்பதை நாம் காணலாம்.

சமுதாயச் செயல்களில் இளையோன் பங்கு பெறுதல்

சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் திட்டமிடுவதிலும், சமுதாயச் செயல்திட்டங்களில் இளையோனும் முதியோர்களும் கூட்டுச் சேர்ந்து செயலாற்றுவதே, சமுதாய வாழ்க்கையில் இளையோரின் பங்காகும். பதினெட்டாவது அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நல்ல குடிமகனுக்கான பயிற்சித் திட்டத்தில் இது ஒரு முக்கியமான கூறாகும். இளையோர் பருவத்திய சிறுவர்சிறுமியர் விருப்பத்துடன் பங்குகொள்ள வேண்டுமெனில், திட்டங்கள் அமைக்கப்படும்பொழுது அவர்கள் உடனிருக்க வேண்டுமேயன்றி முதியோர்கள் அமைத்த பணிகளைச் செய்யச் சொல்லலாகாது. இளையோர் பருவத்தினர் சமுதாய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொள்ள வாய்ப்புகள் தரப்பட்டால், பெரிய திட்டங்களைக்கூடச் சாதிக்கவல்ல திறமையும் பொறுப்பும் தம்மிடமுண்டு என்பதை அவர்கள் நிரூபித்துக் காட்டுவர். இளையோர் பங்குகொள்வதற்குத் தடையாக அமைந்துள்ளவை கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன :

1. பெரும்பான்மையான முதியோர்களால் காட்டப்படும் ஆதரவான மனப்பான்மையாலும், முதியோர்களின் நம்பிக்கை இல்லாததும் ஏற்கப்படாததுமான தன்மையாலும், இளையோர் முயன்று தவறிக் கற்பதற்கு வாய்ப்புகள் கிடைப்பதில்லை.

[14] E. B. Olds, 'How do Young People Use Their Leisure Time?' Recreation, 1949, Vol. 42, pp. 458-463.

2. பள்ளிச் செயல்களின் நெருக்கடியினால் நேரம் கிடைப்பதில்லை. இதற்காக இளையோன், அதிக வேலையில் ஈடுபட்டுள்ள முதியோர்கள் செய்வதுபோன்று, பொது நலத்திற்காகச் சில தியாகங்கள் செய்வதற்குத் தயாராக வேண்டும்.

அட்டவணை 14—7

பல்கலைக்கழக, நகர உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் சேர்ந்துள்ள அளவு [ஓல்ட்ஸ் (Olds) அளித்தது].

நிறுவனத்தின் வகை	சிறுவர்	சிறுமியர்	மொத்தம்
நூல்நிலையங்கள்	47	79	126
பள்ளிச் சங்கங்களும், மன்றங்களும்	21	44	65
யூத தேசியத் திட்டக் குழுக்கள் ...	2	20	22
Y.M.C.A.யும், Y.W.C.A.யும் ...	45	48	93
Y.M.H.A.யும், Y.W.H.A.யும் ...	20	13	33
சிறுவர் சிறுமியரது சாரணர் இயக்கங்கள்	62	11	73
மற்றச் சமுதாய நிறுவனங்கள் ...	4	4	8
இசை நிறுவனங்கள்	3	2	5
சமய அமைப்புகள் (இசைக்குழு, ஞாயிற்றுப் பள்ளிகள், இளைஞர் நிறுவனங்கள், கோயில்கள் முதலியன)...	158	202	360
சிறிய மெசானிக் (Masonic) நிறுவனங்கள்	19	16	35
பாபி (Bobby) சங்கங்கள் ...	18	1	19
வேட்டையாடும் சங்கங்கள் ...	11	9	20
பனிக்கட்டியில் சறுக்குதல், குதிரைச் சவாரி	2	4	6
விளையாட்டுச் சங்கங்கள் ...	3	5	8
கிராமச் சங்கங்களும், மிசௌரி விளையாட்டுச் சங்கமும்	4	0	4
பள்ளிக் குழுக்களைத் தவிர மற்றச் சமூகக் குழுக்கள்...	114	165	279
மற்றவை	5	0	5

3. இளையோன் பங்கு கொள்ளுதல் ஒரு பொறுமையான செயல்முறை என்று உணரத் தவறியது; நல்ல ஒரு பகரானாவது எளிதல்ல. இது பெற்றோர், ஆசிரியர்கள், சமுதாயத் தலைவர்கள் இவர்களின் கூட்டுறவினால் வளர்ச்சியடைகின்றது.[15]

சமூகப் பொழுதுபோக்குத் திட்டங்கள்

இளையோர் பருவத்திய குழுக்களின் நடத்தையில் வழிகாட்டுதல் இன்மையால் விளையும் விளைவுகளைப் பலவிதமாக ஆய்வு செய்ததன் பயனாக, இளையோர் பருவத்திய சிறுவர் சிறுமியருக்கு உகந்த பொழுதுபோக்குச் செயல்களின் தேவைகளின்மீது சமுதாயம் தன்னுடைய கவனத்தைச் செலுத்தியுள்ளது. நன்மையை விளைவிக்கின்ற நல்ல நோக்கங்களுள்ள குழுச்செயல்களற்ற பகுதிகளில் குழு வாழ்க்கை செழிப்படைகிறது என்று திராஷர் (Thrasher) என்பவரின் ஆராய்ச்சி நமக்குக் கூறுகின்றது. இங்குச் சிறுவர்களும் சிறுமியர்களும் நிலையான பல சிக்கல்களில் பொருத்தப்பாட்டுத் தொல்லைகளுக்குட்படுகிறார்கள்.[16]

பல நகரங்களில் சிறுவர் சிறுமியர்கள் ஒன்றுகூடிச் சிரித்துப் பேசி நன்மை பயக்கும் செயலில் தங்களை மகிழ்வித்துக்கொள்வதற்கு ஓர் இடம் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்துள்ளனர். சிறுவர் சிறுமியர்கள் தங்களுடைய பொழுதுபோக்குக்கான ஆசையை நிறைவேற்றிக்கொள்ள ஜூக் ஜாயிண்ட் (juke joint) போன்ற இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நகர அதிகாரிகளால் நிர்மாணிக்கப்பட்ட சமுதாயச் செயல்திட்டங்கள் இல்லம் அல்லது பெற்றோர்களின் மேற்பார்வை இடத்தைப் பூர்த்தி செய்யாவிட்டாலும், அவர்கள் ஒன்றுகூடி இருக்கக்கூடிய அறைகளை ஏற்பாடு செய்யலாம். இதில் இளையோர் பருவத்தினர் விரும்பத்தக்க சூழ்நிலையில் நன்மை விளைவிக்கின்ற பொழுதுபோக்குகளில் ஈடுபட்டு மகிழ்ச்சிகொள்ளலாம். இவ்வகையான அறைகளில் ஒரு வானொலிப் பெட்டி, ஒரு பியானோ சங்கீதக் கருவி, ஒரு மேசை டென்னிஸ் பந்தாட்டம், பல சஞ்சிகைகள் போன்றவைகளை வைத்து, மற்றவர்கள் பலவந்தமாக நுழையாமல் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்குமட்டும் அனுமதியளிக்கும் போதுமான மேற்பார்வையை அமைத்துக்கொடுக்கவேண்டும். பழைய உயர்நிலைப்

[15] 'Proceedings of the Midcentury White House Conference on Children and Youth.' Raleigh: Health Publications Institute, 1950, p. 284.

[16] F. M. Thrasher, 'the Gang', Chicago: University of Chicago Press, 1927.

பள்ளிக் குழுவிற்குப் பிடித்தமான திட்டம் முறை அமையாத இயல்பைக்கொண்ட சமூகச் செயல்களை அளிப்பவைகளேயாகும் என்று பொழுதுபோக்குப் பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஃபார்ச்சூன் (Fortune) பத்திரிகையின் மதிப்பீட்டு முடிவுகளினால் இந்த உற்று நோக்கல் உறுதிசெய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட விளையாட்டிற்கு முன்னால் நடனமும், திரைப்படமும் சிறுவர்சிறுமியருக்குமுன் நிற்கின்றன. இதற்குப் பிறகு நண்பர்களுடன் இங்குமங்கும் ஓடுவது, அரட்டையடிக்கும் வேலைகள் போன்றவைகளே விருப்பமான பொழுதுபோக்காக அமைகின்றன.[17]

நிலைமாற்றம் ஏற்படும் காலத்தில் நிலைக்கச் செய்யும் பிணைப்பாகப் பொழுதுபோக்கின் முக்கியத்துவம் இருப்பது ஹென்றி ஸ்மித் (Henry Smith) விஷயத்தில் நன்கு எடுத்துக்காட்டப்படுகின்றது.

ஒன்பதாவது படிவத்தின் இறுதியில் ஹென்றி தன் பள்ளிப் படிப்பை விட்டுவிட்டான். அப்பொழுது அவனுக்குச் சுமார் 16 வயது ஆயிற்று. பள்ளியில் அவன் பின்தங்கிய பையனாக இல்லாவிடினும், படிப்பில் அதிக அக்கறை கொள்ளவில்லை. மேலும், கீழான பொருளாதாரக் குடும்பத்தினின்று அவன் வந்தான். முதலில் ஒரு பகுதியிலுள்ள கடை ஒன்றிலும், பின்பு அண்மையிலுள்ள ஒரு தட்டுமுட்டுப் பொருள் தொழிற்சாலையிலும் வேலை தேடினான். அவனுடைய முயற்சிகள் பலனளிக்கவில்லை. அவனுடைய பெயர் குறிப்பேட்டில் முதன்மையாக வைக்கப்பட்டாலும், அவனுடைய எல்லா முயற்சிகளும் பயனற்றுப்போயின. வீட்டிலும், பிறகு வீதியிலும் கிடைக்கக்கூடிய பல வாய்ப்புகளைப்பற்றிச் சிந்தித்தான். அவன் வேலைக்கான முயற்சியினைத் தொடர்ந்து செய்யலாம். இந்த ஒரு முயற்சியில் அவன் வெற்றி பெறலாம் அல்லது பெறாமலிருக்கலாம். வேலைக்கான முயற்சியை முழுமையாக விட்டுவிட்டு அவன் கீழ்த்தரமான மக்களின் கூட்டத்தில் சேர்ந்துவிடலாம் அல்லது பொறுமையுடன் இருந்து நற்செயலை விளைவிக்கின்ற பொழுதுபோக்கினைப் பெறுவதற்கான முயற்சியைத் தன்னுடைய ஆற்றலை வெளியிடும் ஒரு வழியாகக் கொள்ளலாம். கடைசியாகக் கூறப்பட்ட ஒரு நிலை அவனை ஒரு நற்பயனை விளைவிக்கும் நிலையில் வைக்கும். மேலும், அவனை அது வாழ்க்கையில் நிகழப்போகும் இடையூறுகளைச் சமாளிக்கத் தயார்செய்கின்றது. ஹென்றி இந்த ஒரு நிலையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, மிகுதியான நேரத்தைப் பொது நூல்நிலையங்களில் பொறித்துறை நூல்களையும், வெளியீடுகளையும் படிப்பதில் செலவிட்டான். மேலும், ஞாயிற்றுக் கிழமைப் பள்ளிகளில் தன் கவனத்தைத் தொடர்ந்து செலுத்தினான். கோடைக்காலத்தில் கோயில் விளையாட்டுக் குழுக்

[17] See Fortune, December, 1942.

களுடன் பேஸ் பந்து விளையாடினான். தன்னுடைய தொடர்புகளின் மூலம் வேலை தேடுவதற்கான விழிப்புணர்ச்சியுடன் நல்ல தகுதியான ஒரு வேலையை அடைந்தான். பெட்ரோல் பிடிக்கும் இடத்தில் ஒரு வேலை கிடைத்தது. இவ்வாறான பொருத்தப்பாடு அவனுக்கு விருப்பத்தைத் தரும் ஒன்றாக அமைந்தது.

இது ஓர் ஏழைச் சிறுவன் இளவரசனாகும் கதை அன்று. ஆயினும், நிலை மாறுபடும் காலத்தில் நற்செயலை விளைவிக்கின்றபொழுதுபோக்கு முயற்சியில் நல்ல பொருத்தப்பாடு கொள்வதன் தேவையை இது நன்கு விளக்குகின்றது. இத்தகைய காலத்தில் சிறுவன் அல்லது சிறுமி ஒரு தேர்ந்தெடுத்தலைச் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இந்நிலையில் தவறான ஒன்றினைத் தேர்ந்தெடுக்கும் அபாயமும் இருக்கிறது.

இவ்வாறான நற்செயலை விளைவிக்கின்ற பொழுதுபோக்கு முயற்சியினை நன்கு அனுபவிக்கத் தேவையான வாய்ப்புகளைச் சிறுவர் சிறுமியர்களுக்கு அளிப்பதற்கு ஒரு மூன்று வழியாலான செயல்திட்டம் தேவைப்படுகின்றது என Y.M.C.A. - U.S.O. செயல் இயக்குநரான டோரோத்தி ரிச்சார்ட்சன் (Dorothy Richardson) குறிப்பிட்டார். இத்திட்டம் இளையோர்களின் தேவைகள் பற்றியும், தன்மைபற்றியும் இளைஞர்களைச் சமுதாயத்தில், அதாவது பள்ளியில், நன்மை பயக்கும் சமூக அமைப்புகளில் நிலைத்திருக்கவைக்கத் திட்டமிடப்பட்ட உயர்நிலைப் பள்ளிப் பொழுதுபோக்குத் திட்டங்களையும், இசைவில்லாத இடங்களுக்குச் செல்லாமல் இளைஞர்களைப் போதிய அளவு கவர்வதற்காகவும் அமைக்கப்பட்டது.

4-H சங்கத்தினைச் சேர்ந்த ஓர் அங்கத்தினன் அதன் செயல்முறையினை விளக்கியபோது, அது இளையோனின் பொழுதுபோக்கு, சமூகத் தேவைகளுக்கு எவ்வாறு உதவுகின்றது என்பதை நன்கு அறியலாம். சிறுவர் சிறுமியர்கள் உள்ள 4-H சங்கத்தினர் கூடுமிடம் ஓர் உடற்பயிற்சிக்கூடமான மண்டபமும் கோயிலும் ஆகும். இரண்டு வாரத்திற்கொருமுறை கூட்டமும் கூடியது. இந்த நேரத்தில் சமூக விளையாட்டுகள், நடனம், தொலைக்காட்சி (TV), கைப்பந்தாட்டம், சிற்றுண்டி போன்ற பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் இருந்தன. கோடை மாதங்களில் அருகிலுள்ள குளத்தில் நீராட்டு விருந்துகள், சுவையான உணவுப் பண்டங்களுடன் அமைக்கப்படுகின்றன. ஏற்பாடு செய்வோர்களைப் பதின்வயது உறுப்பினர்களது பெற்றோர்களிலிருந்து தேர்ந்தெடுக்கின்றனர். கோடைக் களியாட்டங்களின் உச்சகட்டம் பள்ளி துவங்குவதற்கு முன்னர் வைக்கப்படுகின்ற சமுதாயம் முழுவதற்குமான பெரிய விருந்தில் அடையப்பெறுகின்றன. உணவு, களியாட்டம், விளையாட்டு (பலவயதிற்கேற்ப மூன்றுகால் போட்டி

போன்றவை) இவைகள் நிகழ்ச்சி நிரலில் இருந்தன. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பரிசுகள் அளிக்கப்படுகின்றன. இவைகள் அதிக விலையற்றவையாயினும், அவைகள் வெற்றிபெற்றோர்களால் நன்கு பாதுகாக்கப்படுகின்றன. 4-H சங்கச் செயல்களுக்கு நிதி திரட்டப் பலதரப்பட்டவையும், திறமை மிகுந்தவையுமான பல வழிகளை அந்தக் குழுவினர் பின்பற்றினர்.

உதாரணமாக 21,000 மக்கள்தொகை கொண்ட நகர் எவ்வாறு தன்னுடைய பொழுதுபோக்குப் பிரச்சினையைத் தீர்த்தது என்பது இன்றைய இளையோர்களின் இயல்பினையும், தேவையினையும் நமக்கு அறிவிக்கின்றது. இந்நகரத்தில் எவ்விதப் பொறுப்பும், தங்களது கவனத்தை ஈர்க்கக்கூடிய அக்கறையளிக்க வல்ல பொருள்களும் அற்றவர்களாக இளையோர்கள் பலர் இருந்தனர். அங்கு திரைப்படங்கள் இருந்தன. ஒருசில குடும்பங்கள் தங்களுடைய நண்பர்களான சில சிறுவர் சிறுமியர்களை வரவேற்க முயன்றனர். அக்கிராமத்திய சங்கம் ஒருசிலருக்கு வாய்ப்பளித்தது. ஆயினும், பொதுவாக நிலைமை மோசமாகவே இருந்தது. பெரும்பான்மையான இச்சிறுவர் சிறுமியர்களுக்கு எவ்விதமான பொழுதுபோக்குச் செயல்களும் கிடைக்கவில்லையாதலின், அவர்கள் முதியோர்களின் உதவி வழிகாட்டலின்றித் தங்களுக்குத் தேவையானதை உண்டாக்கிக்கொண்டார்கள். அவர்கள் '100-சங்கம்' என்ற ஒன்றினை நிறுவினர். இச் சங்கத்தில் அங்கத்தினராவதற்கு ஓர் இளையோன் ஒரு குறிப்பிட்ட சாலையில் ஒரு காரினை ஓட்ட வேண்டும். இச்சாலை ஒரு பயங்கரமான சாலையாகும். இச் சாலையில் ஒரு பெருஞ்சாலையையும், பல கிளைச்சாலைகளையும் கடக்க வேண்டியிருந்தது. காரின் வேகம் மணிக்கு 100 மைலுக்குக் குறையக்கூடாது. அவர்கள் மேலும் புகழ்பெற்ற 'கார் நிறுத்துமிடங்களை'க் கண்டுபிடித்தனர். இதன் முதன்மையான நோக்கம் மற்றவர்களின் கார்களுக்குத் தொந்தரவு விளைவிப்பதும், மற்றவர்களைப் பயமுறுத்துவதும், ஏதாவது ஒரு குறும்பு அல்லது குற்றத்தைச் செய்வதுமாக இருந்தது.

பல விழிப்பான பெற்றோர்களும், சமுதாயத்தில் செயல் புரிவோர்களும் நிலைமையின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்து, தங்கள் கவனத்தைச் செலுத்தி, ஒன்றுசேர்ந்து வேலை செய்தனர். இவர்கள்தாம் 'பதின் வயதினர் கழகம்' தோன்றுவதற்குக் காரணமாயிருந்தனர். ஒரு பழைய ஆலைக் கட்டடத்தை எடுத்துக்கொண்டு, அதில் சிறிது மாற்றங்களை ஏற்படுத்தி, தேவையான திருத்தங்கள் செய்து, புதிதாகச் சாயம் பூசி, அதை ஒரு பொழுதுபோக்கு அறையாக மாற்றியமைத்தார்கள். பெரும்பான்மையான வேலையைப் பதின்வயதினர்களே செய்தனர். இவர்களில் பலர் '100 சங்

கத்'தின் உறுப்பினர்களேயாவர். தேவையான பொருள்கள் நக ரத்தைச் சேர்ந்த ஒரு நிறுவனத்தினால் தரப்பட்டன. பல்வேறு சமு தாயத் தலைவர்கள் சிறப்பான திறமையைத் தேவைப்பட்ட அளவிற்குத் தந்து மேற்பார்வையையும் தந்தனர். சிறுவர் சிறுமியர்கள் பல செயல்களைச் செய்வதற்காக ஒரு குழுவினை ஏற்படுத்தி, பல செயலாளர்களைத் தேர்ந்தெடுத்து, செயல்முறையில் பொறுப்பு வாய்ந்த ஒரு சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். இக்கட்டடத்தில் ஒரு சிற்றுண்டிக் கடை, பந்து உருட்டும் அறை, பல வகைப்பட்ட விளையாட்டுகள் ஆகியவை இருந்தன. அவ்வப்பொழுது நடன நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. பொதுவாகப் 'பதின்வயதுக் கழகம்' ஒரு நற்செயலை விளைவிக்கின்ற பல நண்பர்கள் ஒன்றுசேர்ந்து களிக்குமிடமாகியது. கிராமிய நடனங்களின் பாடம் புகுத்தப்பட்டது. இது பல சிறுவர்களின் கவனத்தை ஈர்த்தது. இளையோர் பருவத்திய சிறுவர் சிறுமியர்களினால் செய்யப்பட்ட எல்லாக் குறும்புகளும் தவிர்க்கப்படாவிடினும், அது குறைந்த அளவிற்குக் குறைக்கப்பட்டது. அதே நேரத்தில் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பிரச்சினைகளைப்பற்றிப் பொதுநோக்கையும், நன்மை பயக்கின்ற மனப் பான்மைகளையும் அது இச் சிறுவர் சிறுமியர்களிடத்தே வளர்த்தது. பல நிலைகளில் சமுதாயத்திலுள்ள ஒரு கோயில் பதின் கழகத்தை அல்லது குழுவினைத் தோற்றுவிக்கின்றது. பதின் வயதுச் சிறுவர்களும், குழுவினர்களும் ஒன்றுசேருமிடமாக அது அமைகின்றது. இவ்வாறான ஒரு கழகத்தின் செயல்முறையைச் சிறிதளவு விவரித்தால், கோயில் செயலுறும் பல வழிகளில் பதிலாண்மையாகச் சமுதாயத்தின் ஒரு நல்லொழுக்கத்தை வளர்ப்பதில் எவ்வாறு இயங்குகிறது என்பது நமக்குத் தெரியவரும். கோயிலைச்சார்ந்த மக்கள், குழந்தைகளுக்கும், இளையோர்களுக்கும், வயதுவந்தோர்களுக்கும் சமூகப் பொழுதுபோக்கு நிலையங்களின் தேவையை உணர்ந்து, ஒரு பெரிய கட்டடத்தைத் தங்கள் கோயிலுக்குச் சொந்தமான இடத்திலேயே கட்டினார்கள். இந்நிலையங்களில் அடுப்புகளுடன் கூடிய பெரிய சமையலறையும், ஒரு பெரிய குளிர்சாதனப் பெட்டியும், சமையலுக்கும் அதைப் பாதுகாப்பதற்கும் தேவையான பொருள்களும் உள்ளன. ஒரு கோயில் அங்கத்தினரின் குடும்பத்தினால் ஒரு பியானோ அதற்குப் பரிசாக அளிக்கப்பட்டது. வயதுவந்தோர்களின் சங்கம் ஒரு தொலைக்காட்சியை (TV) அதற்காக வாங்கியது. வயதுவந்தோர்களாலும் இளையோர்களாலுமான ஒரு குழு இந்த வாய்ப்புகளை உபயோகப் படுத்துவதற்கான நெறிமுறைகளை அளித்து இந்தச் சங்கத்திற்கு வழிகாட்ட அமைக்கப்பட்டது. குழுவினால் சில மாறுதல்கள் செய்யப்பட்டபின்னர், நெறிமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கோயிலைச்சார்ந்த சங்கத்தினர் இக் கட்டடத்தை உபயோகப் படுத்தினால் எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

மற்றக் குழுக்கள் கூட்டங்களைக்கூட்டினால், கூட்டம் முடிந்தபின் இக் கட்டடத்தைச் சுத்தம் செய்வதற்காகக் கட்டணமாக இரண்டு பவுன் வசூலிக்கப்படும். கோடை மாதங்களில் (பதின் வயதுச் சிறுவர்களான) 'ஒன்று சேரும் சங்க'த்தின் அங்கத்தினர்கள் தவறாது ஒவ்வொரு வியாழனன்றும் ஒன்று கூடுவார்கள். மற்ற சமயங்களில் எப்பொழுதாவது கூடுவார்கள். குளிர் மாதங்களில் ஒன்றுவிட்ட வெள்ளிக்கிழமைகளில் கூடுவார்கள். இக் கூட்டத்தில் தொலைக்காட்சி (TV)யைக் காண்பது, உரையாடல், நடனம், விளையாட்டுகள் போன்ற பலவகைச் செயல்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. சமுதாயத்தின் வேறு கோயிலைச்சார்ந்த பதின் வயதுக் குழுவினர்களும் வயது வந்தவர் குழுவும் இக் கட்டடத்தை அடிக்கடி உபயோகிப்பார்கள். ஏனெனில், சமுதாயத்தினைச் சார்ந்ததும் பெறக்கூடியதுமான ஒரே ஒரு கட்டடம் இதுவேயாகும்.

முகாம்

சிறுவர் சிறுமியர்களின் ஆளுமை வளர்ச்சியில் முகாமின் செயல்கள் உதவக்கூடும் என்பது பெருமளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆயினும், எவர் இதில் பங்குகொள்ளலாம் என்று பொதுவான விதியை ஏற்படுத்தவோ வழிகாட்டவோ யாவராலும் இயலாது. எவ்வகையான முகாம் மிகச்சிறந்தது என்று கூறவும் இயலாது. ஏனெனில், இது பொதுவாகத் தலியனது இயல்புகளையும் தேவைகளையும் சார்ந்திருப்பதாகும். முகாமின் பரந்த வளர்ச்சிக்குரிய காரணங்கள்: (1) முகாம் அனுபவங்களின் கல்விப் பயன்மதிப்பு அதிகமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது, (2) முகாம் வாழ்க்கையில் பெறும் மன உடல் நலத்தினாலான பயன்மதிப்பு, (3) பள்ளிகள் வேலை செய்யாத கோடைத் திங்களில் வழிகாட்டலுடன்கூடிய பொழுதுபோக்குத் தேவைகள்.

பொருத்தப்பாடற்ற நடத்தைகொண்ட சார்ந்திருக்கின்ற ஓர் இளையோனின் சமூக வளர்ச்சியில் கோடை முகாம்களின் விளைவுகளைப் பார்பரா என்ற சிறுமியினிடத்தில் காணலாம். பார்பரா என்பவள் மனவெழுச்சியில் முதிராத ஓர் இளையோர் பருவத்தினளாவாள்.[18]

பார்பராமுகாம், அறிவுரையாளரை முதலில் சந்தித்தபொழுது தடித்த, நன்கு வளர்ந்த இளையவளாக இருந்தாள். அவள் நெளிவுகளுள்ள கருத்த முடியையும் கண்களையும் பெற்றிருந்தாள். அவள் எடை 167 பவுண்டாகவும் பார்ப்பதற்கு ஒழுங்கான அமைப்பில்லாதவ

[18] A. D. Lifshitz and J. Sakoda, "Effect of Summer Camp on Adolescents' Maturity", Journal of Child Psychiatry, 1952, Vol. 2, pp. 257-265.

ளாகவும், துயரம் வாய்ந்தவளாகவும் காணப்பட்டாள். துணிச்ச லாக நடந்து உலாவுதல் ஒன்றில் அவள் செங்குத்தான சரிவின் உச்சியில் செல்லும்பொழுது பெருமளவிற்கு மூச்சுத்திணறி தனக்குத் தலைவலி கண்டிருப்பதாகவும் கூறினாள். ஒரு கல்மீது உட்கார்ந்து கொண்டு மேலே செல்ல மறுத்துவிட்டாள். ஆனால், பின்னர் அவள், தான் விழுந்து விடுவோமோவென்று பயப்படுவதாகக் கூறினாள். அவள் தோற்றம் சமூக வாழ்க்கையிலும், செயல்களிலும் ஒரு முக்கியமான பங்கினை வகுத்துத்தந்தது. ஆண் - பெண் சமூக நாளன்று அவளுக்குச் சளி அல்லது சுரப்பிகளின் வீக்கம் ஏற்பட்டு விடும். இதை அவள் கூடி வாழ்வதையும் நடனத்தையும் தவிர்க்க ஒரு சாக்காக உபயோகித்துக்கொள்வாள்.

முதலில் நீந்தத் தெரியாதவளாக இருந்தவள், பின்பு ஒரு நற் சான்று பெறுமளவிற்கு நீந்தக் கற்றுக்கொண்டாள். விளையாட்டு களில் மிகச் சிறந்தவர்களில் ஒருத்தியாக மாறினாள். மேலும், அவள் கைப்பந்தாட்டக் குழுவில் நிலையான அங்கத்தினராகவும் ஆனாள். உடற்பயிற்சி வகுப்புகளிலும் நடன வகுப்புகளிலும் மிக்க ஊக்கத் துடன் ஈடுபட்டுத் தன் எடையில் 25 பவுண்டு வரையில் குறைத்துக் கொண்டாள். இது அவளுக்கு நல்ல உடல் அழகைத் தந்தது. அவள் நடன வகுப்புகளில் எவ்வாறு ரம்பா (rhumba) நடனத் தினையும் சம்பா (samba) நடனத்தினையும் ஆடுவது என்று கற்றுக் கொண்டாள். இப்பொழுது அவள் கவர்ச்சி உள்ளவளாகவும் மற்ற வர்களிடையே எளிதாகப் பழகுபவளாகவும் ஆனாள். சில செயல்களைச் செய்வதிலும் பலவித உடற்பயிற்சிச் செயல்களில் வெற்றிபெற்றதா லும் கூடிவாழும் ஒப்புதலையும் தன்னம்பிக்கையையும் பெற்றாள். குழுவின் சிறப்பான நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொண்டும், முகா மில் பங்குகொண்டும், மற்றவர்களுடன் ஒத்துழைத்தும் அடைவினைப் பெற இயலும் என்பதனை உணர்ந்தாள்.

அமெரிக்கச் சமூகம் நகர்ப்புற சமூகமாக மாறிவருவதால், இவ் வாறான செயல்களுக்குப் புதிய தேவைகள் ஏற்பட்டுள்ளன. முகாமை ஒரு கல்வி, உடல்நலம், பொழுதுபோக்கு இவைகளின் செயல் நிலைய மாக உபயோகப்படுத்துவது, கட்டாயமாக வருங்காலத்தில் அதிக மாக மாறிவிடும். முகாமை அமைப்பவர்களது செயல்தன்மையினை யொட்டியே முகாமின் அமைப்பும் அமைகின்றது. ஆயினும், எல்லா முகாம்களின் பொதுவான நோக்கமும் ஓரளவு ஒரே தன்மையை யுடையதாக இருக்கின்றது. இந்தக் கூற்றுக்கு முக்கியமாக நகரங் களிலும், மாநகரங்களிலும் இயங்கும் சாரணர் படையும் கிராமங் களின் குழுவில் காணப்படும் 4-H சங்கமும் சான்றாக அமைகின்றன. இவ்விரண்டிற்கும் ஒரே குறிக்கோளும் ஏறக்குறைய ஒரேவிதமான செயல்களும் காணப்படுகின்றன. பொது நிதிகளால் ஆதரிக்கப்படும்

தனித்த அக்கறைகொண்ட குழுவினர்க்கு முறையிட்டும் பல முகாம்கள் வளர்ச்சியுறக்கூடும். இது உண்மையாக நிகழக்கூடிய ஒன்றாகும். மேலும், இவைகள் முதற்கண் கல்வி, பொழுதுபோக்கு நிலையங்களாக இயங்கும். பல இடங்களைச் சேர்ந்த வெவ்வேறு குறிப்பிட்ட தனித்த அக்கறைகொண்ட குழுக்களை ஒன்று சேர்ப்பதால், இளையோன் ஒரு புதிய கூட்டுக் குழுவினை அமைக்க முகாம்கள் உதவியளிக்கின்றன. இவ்வாறு கூட்டுக் குழுக்கள் இளையோனை வாழ்க்கையில் பரந்த நோக்கமுடையவனாக மாற்றுகின்றன. மேலும், அவர்களின் எண்ணங்களை முற்போக்குடையதாகவும், அவர்களின் ஆளுமையை மனிதாபிமானம் உள்ளதாகவும் மாற்றுகின்றன.

டிமாக் (Dimock) என்பவர் முகாமிலிருந்து திரும்பி வந்து ஒரு திங்கள் கழிந்த பிறகு சிறுவர்களிடம் காணப்படும் மாறுதல்களைக் குறிப்பிடும்படி முகாம்களுக்குச் சென்றிருந்த சிறுவர்களின் பெற்றோர்களைக் கேட்டுக்கொண்டார்.[19] இத் தரமிடல்களின் விளைவாகச் சில குறிப்பிட்ட நடத்தைப் பண்புகளில் முன்னேற்றம் காணப்பட்டது. அவைகள் கீழ்வருவனவாகும்: தன்னம்பிக்கை, நடத்தை நயம், பெற்றோர்களின் கருத்தேற்றத்திற்கு விடையளிக்கும் தன்மை, இசையை அனுபவித்தல், மற்றவர்களின் நடத்தைக்காக விட்டுக்கொடுப்பது, மற்றவர்களுடன் கவலையற்றுப் பழகுதலும் இணைதலும், சேவைக் கடமைகளில் தானாக மனமுவந்து பங்குகொள்ளுதல் போன்றவைகள்.

டிமாக் அச் சிறுவர்களையே, 'முகாம் வாழ்க்கையில் ஒரு சிறுவன் அடையும் பெரிய பொருள்கள்' என்பதைப்பற்றிக் குறிப்பிடச் சொன்னார். அடிக்கடி கூறப்பட்ட பொருள்கள் 580-ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையில் காண்க.[20]

கேம்ப் ஃபயர் சிறுமியர், சிறுவர் சிறுமியர் சாரணர்கள், Y.W.C.A., Y.M.C.A., மற்றும் பல செயல் நிலையங்கள் நாடு முழுவதும் முகாம் வாழ்க்கையைத் தோற்றுவித்துள்ளன. இந்த முகாம்கள் அதிகமான செலவுத் திட்டத்தின்மீது இயங்குகின்றன. குழந்தையின் உடல்நலம் அக்கறையுடன் கவனிக்கப்படுகின்றது. அவன் சமன் செய்யப்பட்ட உணவுத் திட்டத்தில் வைக்கப்படுகின்றான். மற்றவர்களுடன் சேர்ந்துவாழவும், வேலைசெய்யவும், விளையாடவும் கற்கிறான். குழந்தைகளுக்குக் குறிப்பாக—நகரைச் சேர்ந்த பிரிவுகளின் குழந்தைகளுக்கு—இயற்கை உலகத்தையும் அறிவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அவைகள் நிகழக்கூடியவைகளை ஆராய்ந்தறியும் வாய்ப்பாகின்றன. பொதுப் பள்ளியைப்போன்று முகாமும் குடியாட்சியையுடையதே யாகும். குடியாட்சி வாழ்க்கைக்குப் பள்ளியைவிட

[19] H. S. Dimock and C. E. Hendry, Camping and Character. New York: Association Press, 1929, pp. 284-288.

	குறிப்பிடும் சிறுவரது எண்ணிக்கை
நீந்துதல், படகு ஓட்டுதல், முகாம் செயல்கள் போன்ற செயல்களில் திறமை	39
மற்றவர்களுடன் பழகக் கற்றுக்கொள்ளுதல், கலத்தல், உடன் வேலை செய்தல்	35
சிறந்த ஆரோக்கியம், உடல் தகுதி, வலிவு, உடலமைப்பு	33
மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மை, சுயநலமின்மை	32
தன்னம்பிக்கை, நம்புதல், தானாகக் காரியங்கள் செய்தல், தன்னைப்பற்றிச் சிந்தித்தல் ...	20
துணிவும் அச்சமின்மையும் வளர்ச்சியுற்று, பயந்த தன்மையை இழத்தல்	17
இயற்கையைப் பாராட்டுதல், வெளிப்புறங்கள், திசை ஆகியவற்றைப் பாராட்டுதல் ...	17
நண்பர்களைச் சந்தித்தலும் பெறுதலும், நட்பு ...	16

அதிகமான வாய்ப்பினைத் தருகின்றது. இம் முகாம்களில் பலதரப் பட்ட குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளப்படு கிறார்கள். ஆயினும், அவர்கள் எல்லோரும் ஒரே நெறிமுறையைத் தான் கடைப்பிடித்தல் வேண்டும். மேலும், அவர்களுக்கு ஒரே விதமான உரிமைகள்தான் தரப்படுகின்றன. ஆதலால் அவர்கள் குடியாட்சிமுறையில் வாழ்ந்தும், வளர்ந்தும், விளையாடவும் முற்படு கிறார்கள்.

குடியாட்சித் தலைமையும் வல்லாட்சித் தலைமையும்

வலுத்தாக்குதல் நடத்தையும், நிலையில்லாமையும் சிறு வயதில் அதிகாரத்திற் குட்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டின் ஆதிக்கத்தினால் ஏற்பட்டவை என்பதற்கு இளையோர் பருவத்திய சமூகச் சூழ்நிலையின் ஆராய்ச்சிகளிலிருந்து சான்றுகள் கிடைக்கின்றன. தந்தையாவது, தாயாவது குடும்பத்தில் ஆட்சி வலிமை ஆற்றல் பெற்றவர்களாக இருப்பின், அவர்களுக்குக் குழந்தைகள் அடிபணிகிறார்கள். ஆயினும், அவர்களது வாழ்க்கை மன நெருக்கடியும், மன முறிவுகளும் நிறைந் தவைகளாக இருக்கும். லெவின், லிப்பிட், வைட், (Lewin, Lippitt

[20] Ibid., p. 18.

and White) இவர்கள் இப் பிரச்சினையைப்பற்றிப் பல ஆராய்ச்சிகளைச் செய்துள்ளார்கள்.[21] செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட சமூகச் சூழ்நிலையின் (குடியாட்சி அல்லது வல்லாட்சி முறையினால் கட்டுப்படுத்தப்பட்ட) இயல்பு குழந்தைகளின் நடத்தையைப் பாதிக்கின்றது. இந்த முடிவுக்கு வர அவர்களுடைய ஆராய்ச்சி தேவையான அளவு சான்றுகளை அளித்துள்ளது.

அவர்கள் முதலில் பத்து வயதுச் சிறுவர்களுள்ள இரண்டு சங்கங்களை ஆராய்ந்தனர். இவர்கள் மூன்று மாதமாக நாடகத்தில் மாற்றுரு அணிவதில் ஈடுபட்டிருந்தனர். ஒரு குழுவினை, குழுத் தலைவன் வல்லாட்சி முறையில் நடத்தினார்கள். மற்றொரு குழு முடியாட்சி முறையில் நடத்தப்பட்டது.[22] நான்கு உற்றுநோக்குபவர்களால் நன்கு ஆராயப்பட்டது. குழுக் கூட்டங்களில் வல்லாட்சி முறையிலுள்ள சங்க அங்கத்தினர்கள் அதிகமான வலுத்தாக்குதலுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். ஒருவரையொருவர் அடக்கியாள முற்பட்டார்கள். ஆயினும், தலைவரிடம் பணிந்து போயினர். குடியாட்சி சங்கத்தின் உறுப்பினர்கள் ஒருவர்மீது ஒருவர் தோழமை பூண்டும் உண்மையை அறிபவர்களாகவும் இருந்தனர். இந்தக் குழு இயற்கையாகத் தோன்றுகின்ற செயல் எதிர்ச் செயல்களால் ஆனதாகக் காணப்பட்டது. அவர்கள் தங்களுடைய தலைவர்களுடன் எளிமையுடனும் தோழமையுடனும் பழகினர். 'வெளிப்படையான பகையில்', வல்லாட்சிக்குழு மற்றதைவிட மிக வலுத்தாக்குதல் உள்ளதாக இருந்தது. இதன் விகிதம் 40 : 1 ஆகும். வல்லாட்சிக் குழுவில் ஒருவர்மீது ஒருவர் அதிகப்பகைமை பூண்டவர்களாகக் காணப்பட்டனர். மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கின்ற வழிகளைப் பின்பற்றினர். பகைமையான திறனாய்வுகளைப் பின்பற்றினர். பகைமையான திறனாய்வினைக் காட்டினார்கள். மேலும், அவர்கள் நேர்மையான முறைகளையும் கடைப்பிடிக்கவில்லை.

லெவின், லிப்பிட், வைட் (Lewin, Lippit and White) ஆகியோரின் இரண்டாவது ஆராய்ச்சியில் ஐந்து வல்லாட்சி, ஐந்து குடியாட்சி, இரண்டு தலையிடாமைச் சூழ்நிலைகள் ஆகியவை ஏற்படுத்தப்பட்டன. தலையிடாமைக் குழுவில் தலைவன் நடுவில் அமர்ந்து எல்லாச் செயல்களையும் சங்க அங்கத்தினர்களுக்கே விட்டுவிட்டான். மற்றக் குழுவின் தலைவர்கள் எடுத்துக்கொள்ளும் பங்கில் பாதிக்கும் குறை

[21] K. Lewin, R. Lippitt, R. K. White, 'Patterns of Aggressive Behavior in Experimentally Created Social Climates', Journal of Social Psychology, 1939, Vol. 10, pp. 271-299.

[22] R. Lippitt, 'An Experimental Study of the Effect of Democratic and Authoritarian Group Atmosphere,' University of Iowa Child Welfare, 1940, Vol. 16. No. 3, pp. 43-195.

வான பங்கினையே அவன் ஏற்றுக்கொண்டான். தலைவர்களின் ஆளுமையின் செல்வாக்கினைத் தவிர்க்கத் தலைவர்கள் ஒவ்வொருவரும், வல்லாட்சிக் குடியாட்சிகுழுத் தலைவர்களாக ஒரு முறையாவது இருக்கும்படி செய்யப்பட்டது. வல்லாட்சிக் குழுவில் ஏற்பட்ட நெருக்கடியைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறுவதாவது:

'ஓர் அறிமுகமில்லாத மனிதன் குழுச் செய்கைகளைத் திறனாய்வு செய்யும்பொழுது ஏற்படும் தொல்லைதரும் அனுபவங்களால் மன நெருக்கடியான ஒரு நிலைமை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து உடனே சண்டை ஏற்பட்ட இரு நிகழ்ச்சிகள் இருந்தன.

வல்லாட்சி சூழ்நிலையில் தலைவரின் நடத்தை ஒருவேளை குழந்தைகளுக்கு மிகவும் தொல்லையுள்ளதாக இருந்திருக்கலாம் (நேரடி உரையாடல்களினால் தீர்மானிக்கப்பெற்றது).

வல்லாட்சித் தலைவர் குடியாட்சித் தலைவரைக்காட்டிலும் ஒரு தனியனிடத்து அணுகும்போது ஆறு அணுகு முறைகளை நேரடியாகக் கடைப்பிடித்தார். இவ்வாறு அடிக்கடி ஏறுமுனை அணுகு முறைகளைக் கையாண்டதனால் அதிக அழுத்தம் ஏற்பட்டு அதிக முனைப்பு ஏற்படும் என்று எண்ணுவது சரியே யாகும்'.[23]

செய்ன்ட் லூயிஸ் பொதுப்பள்ளிகளிலுள்ள வகுப்பு ஆசிரியர் ஒருவர் ஒத்துழைப்பின் பயன்மதிப்பினைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்:

'கூட்டுறவில் உள்ள இந்த நம்பிக்கை, அதாவது மக்கள் பலர் ஒன்று சேர்ந்து செயலாற்றுவதே நல்லதொரு கட்டுப்பாட்டைத்தரும் என்ற எண்ணம் அமெரிக்க மரபுரிமையின் சத்தாகவும் குடியாட்சியின் சமூகத் தத்துவத்தில் வேரூன்றியும் இருக்கிறது. ஆயினும், நமது சமுதாயம் இத் தத்துவத்தைச் சொல்லளவில் ஏற்றுக்கொண்டிருந்தாலும் பல நிலையங்களில் 'எல்லோருடைய விருப்பம்' வழிகாட்டும் கொள்கையாக இல்லாமல், வலுத்தாக்குதல் நடத்தையே வழிகாட்டும் நெறியாக அமைந்துள்ளது'.[24]

வயதுவந்தவர்களிடம் உட்காட்சி இருக்க வேண்டிய தேவை

குழந்தைகள், துவக்கக் குழந்தைப் பருவத்திலிருந்து பின் குழந்தைப் பருவத்தின் வழியாக இளையோர் பருவத்தினுகை வளரும்பொழுது, அவர்களுடன் இருக்கின்ற முதியோர்கள் அவனுடைய சமூகக் குழுவிலுள்ள தனிக் குழந்தையின் நிலை அல்லது பங்கினைப் பற்றி மிகக் குறைவான உட்காட்சியினைக் கொண்டிருக்கிறார்கள்.

[23] Op. cit., pp. 291-292.

[24] D. C. Bohn, 'Teachers Share in Administration', Educational Leadership, 1948, Vol. 5, p, 429.

இவைகள் முதியோர்களின் கூற்றுகளில் பிரதிபலிப்பதைக் காணலாம். உதாரணமாக, "மற்றப் பெண்களிடம் 'சூ' (Sue) எதற்காகப் புகழுடன் இல்லை என்பது எனக்குப் புரியவில்லை; அவள் ஓர் அழகிய நல்ல குணம் வாய்ந்த சிறுமியாகத் தோற்றமளிக்கிறாள்." இந்த ஒரு பிரச்சினையை ஆராய்வதற்காக மொரினோ (Moreno) என்பவர் குழந்தைப் பள்ளிகளிலிருந்து எட்டாவது படிவம்வரையிலும் அவர்கள் தங்கள் அருகில் உட்கார வைத்துக்கொள்ள விரும்புகின்ற இரண்டு உடன் படிக்கும் பெண்களைத் தேர்ந்தெடுக்கும்படி கூறினார்.[25] மேலும், அவர் வகுப்பு ஆசிரியர்களை, மிக அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் குழந்தைகளையும், மிகக் குறைவாக அல்லது தேர்ந்தெடுக்கவேபடாத குழந்தைகளையும்பற்றிய ஒரு பட்டியல் தயாரிக்கும்படி கூறினார். குழந்தைப் பள்ளியில் உள்ளோரும் முதல் பருவத்துக் குழந்தைகளும் அளித்த முடிவுகளும், ஆசிரியர்களின் தீர்ப்பும் மூன்றில் இரண்டு அளவுகளில் ஒன்றாக இருந்தன. இதற்கு மாறாக ஏழாவது படிவத்துப் பிள்ளைகளின் முடிவுகளோடு அவை நான்கிலொரு பகுதிதான் ஒத்திருந்தன.

அதிகாரச் சுருக்கம்

சமுதாயத்தின் அமைப்பிலும் செயல்களிலும் சமூகப் பொருளாதார நிபந்தனைகளின் மாற்றங்கள் ஆழமான மாற்றங்களை விளைவிக்கின்றன. சிறுவர் சிறுமியர்களுக்கு ஓய்வு நேரம் அதிகரித்துவிட்டதால், சிறுவர் சிறுமியர்களுக்குக் குறிப்பாக இளையோர் பருவத்தின் ஆண்டுகளில் பொழுதுபோக்கு வாய்ப்பினையும், நல்ல வழிகாட்டுதலையும் அளித்தல் சமுதாயத்திற்கு ஓர் அறைகூவலாக அமைந்துள்ளது.

பிந்தைய அதிகாரங்களில் இப் பிரச்சினைகள் மேலும் ஆராயப்படும். சமுதாயத்தில் இளையோர்களின் செயல்களைக் காட்டும் செய்திகள் இவ்வதிகாரத்தில் அளிக்கப்பட்டுள்ளன. சிறுவர் சிறுமியர் இளையோர் பருவத்திலிருந்து முழு முதிர்ச்சியடையும்வரை கல்வி, பொழுதுபோக்கு வாய்ப்புகளை அளிப்பது சமுதாயத்தின் பல தேவைகளில் ஒன்றாகும்.

சிறு கட்டைத் துண்டுகளும், சிறிது பசையும், சில ஆணிகளும் சேர்ந்து ஒரு மேசை ஆகிறது. இதுபோன்று சிறுவர்களும், சிறுமியர்களும், இளையோர் பருவத்தினரும் சேர்ந்த தொகுதி ஒரு சமுதாயமாகாது. உண்மையாக ஒரு சமுதாயம் இருக்க வேண்டுமாயின், அது பொது அக்கறைகளும் தேவைகளும் கொண்டிருக்க வேண்டும்.

[25] J. L. Moreno, 'Who Shall Survive?' Washington: Nervous and Mental Disease Publishing Company, 1934.

ஒருவர்மீது ஒருவர் நம்பிக்கை வைக்கவும், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும் வேண்டும். பொதுவான ஒன்றைச் சேர்ந்து பகிர்ந்து கொள்ளவேண்டும்.

ஓர் உண்மையான சமுதாயத்தில் பல செயல்களில் அதே மனிதர்கள் பங்கெடுத்துக்கொள்கிறார்கள். இவ்வாறாக அதிகமாக ஒன்றி வாழ்வதனால், ஆழ்ந்த சமூக அடிவேர்களும், அதிகமாக ஒன்றுபட்ட ஆளுமைகளும் விளைகின்றன.[26]

கோடை முகாம்கள் இளையோர்களின் பொழுதுபோக்கு, உடல் நலம், கல்வி இவைகளின் தேவைகளுக்கு ஒரு வழியை அளிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அதிகமான ஓய்வு நேரம் ஒரு பிரச்சினையையும் அறைகூவலையும் தந்துள்ளது. இந்த ஒரு நேரம் முக்கியமாக, வீணாகச் செலவழிக்கப்படாமல் உடல்நலம், திறமை, ஒழுக்கம் இவைகளை அடைவதற்கான ஒரு பாதையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். எவ்விதக் குறிக்கோளும் நோக்கமுமற்ற ஓய்வு நேரம், இளையோனைக் குற்றம், பழிச்செயல், நேர்மையற்ற செயல்கள் இவைகளுக்கு இழுத்துச் செல்லும். இதற்கு மாறாக சமுதாயம், நூல் நிலையம், காட்சிச்சாலை, பள்ளிச் செயல்கள், விளையாட்டை விரும்பும் குழுக்கள், கோயில் குழுக்கள், இல்லங்கள், விளையாட்டு மைதானம், திரைப்படம், பூங்கா இவைகளை அளித்தால், தன்னுடைய ஆற்றலை நெறிக்குப் புறம்பான வழிகளில் செலுத்துவதற்குக் குறைந்த வாய்ப்பினையே இளையோன் காணலாம். மேலும், பதினேழாவது அதிகாரத்தில் இசைவான பொழுதுபோக்கு வசதிகள் குற்ற நடத்தையினைத் தடுப்பதற்கான வழிகளாக இருப்பதுபற்றிய செய்திகள் அளிக்கப்படும்.

சிந்தனைக்குரிய பிரச்சினைகள்

1. சமுதாயத்தின் முக்கியச் சிறப்புகள் யாவை? இச் சிறப்பினைக்கொண்ட நீ அறிந்த ஒரு சமுதாயத்தை விவரி.
2. சமுதாயப் பொருத்தப்பாட்டில் குழந்தையை எதிர்நோக்கும் புதிய பிரச்சினைகளும், கட்டுப்பாடுகளும் யாவை?
3. சமுதாயத்தின் பல குழுக்களுடன் பற்றுறுதி கொண்டவனாயின், ஒரு தனியனிடத்தில் எவ்வாறு முரண்பாடான பற்றுகள் தோன்றுகின்றன என்பதைக் காண்பிக்கவும்.
4. நீங்கள் அறிந்த சமுதாயத்தில் காணப்படும் சில வகுப்பு வேறுபாடுகள் யாவை? தனியன்கள் எவ்வாறு ஒரு

[26] A. E. Morgan, 'The Community', Journal of the National Education Association, 1945, Vol. 34, p. 55.

வகுப்பிலிருந்து மற்றதற்கு மாறமுடியும்? இவ்வாறு செல்வதைத் தடைசெய்வன யாவை?

5. சாதாரணமாக வல்லாட்சியினால் கட்டுப்படுத்தப்பட்ட குழுக்களின் பிள்ளைகளிடம் காணப்படும் தீவிரமான நெருக்கடியை எவ்வாறு விளக்குவாய்?

6. நீ நன்கு அறிந்த ஒரு சமுதாயத்தில் அளிக்கப்படும் பொழுதுபோக்கு வசதிகளை விவரிக்கவும்.

7. 'பொழுதுபோக்கு' என்ற வெளியீட்டின் அண்மைப் பகுதியில் காணப்படும் ஒரு பதின் வயது பொழுதுபோக்கு நிலையத்தின் இயல்பையும் செயலினையும் ஆராயவும்.

8. நீ நன்கு அறிந்த இளையோர்களுக்குப் பணியாற்றும் இளைஞர்களுக்கான நிறுவனங்களை வரிசைப்படுத்திக் கூறு. அண்மையில் வந்த 'உலகச் செய்திகள்' (World Almanac) பத்திரிகையிலிருந்து தேவையான விவரங்களை எடுத்துக்கொள் அல்லது நீ அறிந்த ஓர் அமைப்பின் பதிவு செய்யப்பட்ட பல தனியன்களைப்பற்றிய தேவையான விவரங்களைப் பெற்று வரிசைப்படுத்திக் கூறு.

9. குழந்தைகள், இளையோர் பருவத்தினர், இவர்களின் சமூகப் பொருளாதார நிலைக்கேற்ற பொழுதுபோக்குச் செயல்களைப்பற்றிக் கூறும் அட்டவணை 14—5-லிருந்து நீ என்ன முடிவுகளைப் பெறுவாய்? இக் கண்டுபிடிப்புகளில் இளையோர்களுக்காகத் திட்டமிடப்படும் பொழுதுபோக்குச் செயல் திட்டங்களின் உட்பொருள் யாது?

10. 10-லிருந்து 16 வயது வரையுள்ள சிறுவர் சிறுமியர்களின் பொழுதுபோக்கு அக்கறைகளில் ஏற்படும் பெருமாற்றங்கள் யாவை? (இப் பயிற்சிக்குக் கூடுதலான விவரங்களை அதிகாரம் 8-லிருந்து பெறலாம்).

11. பொழுதுபோக்குச் செயல்களினால் இளையோர் அடையும் மிக முக்கியமான பயன்களைப்பற்றிய பட்டியல் தயார் செய்க.

12. பொழுதுபோக்கு வசதிகளை இளையோர்களுக்கு அளிப்பதில் பள்ளியின் பங்கு என்னவென்று நீ நினைக்கிறாய்? இந்த விதத்தில் கோயில் எவ்வாறு இயங்கக்கூடும்?

தெரிவுசெய் நூற்பட்டியல்

1. Butler, G. D. 'Introduction to Community Recreation.' New York: Macmillan Co., 1940.
2. Centers, R., 'The American Class Structure', in T. M. Newcomb, E. L. Hartley, et al., 'Readings in Social Psychology.' New York: Henry Holt and Co, 1947.
3. Cole, L., 'Psychology of Adolescence', (Fourth Edition). New York: Rinehart and Co., Inc., 1954, Chap. 14.
4. Cruze, W. W., 'Adolescent Psychology and Development'. New York: The Ronald Press Co., 1953, Chap. 13.
5. Hollingshead, A. B., "Elmtown's Youth". New York: John Wiley and Sons, 1949, Chap. 7.
6. Kramer, D., and M. Karri, 'Teen-age Gangs'. New York: Henry Holt and Co., 1953.
7. Landis, P. H., 'Adolescence and Youth' (Second Edition). New York: McGraw-Hill Book Co., 1952, Chap. 4.
8. Malm, M., and O. G. Jamison, 'Adolescence'. New York: McGraw-Hill Book Co., 1952, Chap. 14.
9. Olsen, E. G., 'School and Community Programs'. New Ycrk: Prentice Hall, Inc., 1949.
10. Seidman, J. M., 'The Adolescent: A Book of Readings'. New York: The Dryden Press, 1954, Chap. 19.
11. Watternberg, W. W., 'The Adolescent Years'. New York: Harcourt, Brace and Co., 1955, Chaps. 13 and 27.
12. Whitelaw, J. B., 'The School and Its Community.' (Second Edition). Baltimore: Johns Hopkins University Press, 1951.
13. Wrenn, C. G., and D. L. Harley, 'Time on Their Hands.' Washington: American Council on Education, 1941, Chaps. I, II & VI.
14. Yeager, W. A., 'School-Community Relations'. New York: The Dryden Press, 1951.

15. பள்ளியில் இளையோன்

இளைஞர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிதான் பின்னர்
நாட்டின் வாழ்க்கையாக உருமாறுகின்றது.*

அறிமுகம்: பிரச்சினைகளும் நோக்கங்களும்

எல்லாப் பண்பாடுடைய சமூகங்களிலும் பள்ளி எனும் நிறுவனம் நிலைபெற்றுள்ளது. நம்முடைய சமூகத்தைப்போன்ற ஜனநாயகச் சமூகத்தில், அது மிகவும் சக்திவாய்ந்த ஒப்பற்ற நிறுவனமாகத் திகழ்கின்றது. முடிவற்ற ஜனநாயகமாகத் திகழவேண்டுமாயின், அதனுடைய குடிமக்கள் எல்லோரும் அறிவுள்ளவர்களா யிருக்கவேண்டும். அதாவது, எல்லோருக்கும் கல்வி வாய்ப்புகள் கிட்டவேண்டும். 1950ஆவது ஆண்டின் பள்ளி சென்ஸஸ்படி, 10-லிருந்து 13 வயதிற்குள்ளிருந்தவர்களில் 96·1 சதவீதத்தினரும், 14 வயதிலிருந்து 17 வயதிற்குள்ளிருந்தவர்களில் 84·4 சதவீதத்தினரும் பள்ளியில் சேர்க்கப்பட்டிருந்தனர்.[1] இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப்பின் பிறப்பு விகிதம் அதிகமாயிற்று. இது இந் நூற்றுண்டின் நடுப்பகுதிக்குமேல் நன்றாகத் தொடர்ந்து இருந்தது. இத்துடன் உயர்நிலைப் பள்ளி வயதுடைய சிறுவர்களும் சிறுமியர்களும் அதிகமான சதவீத அளவில் பள்ளியில் தங்கினர். பிறப்பு விகிதத்தின் காரணமாக ஓரளவு பள்ளியில் சேர்ந்தவர்களது எண்ணிக்கை பெருகியிருந்தது. 14-லிலிருந்து 17 வயதுவரை இருக்கின்றவர்கள் 1950ஆவது ஆண்டில் 8 மிலியன்களாக இருந்தாலும், 1965-ல் 13·5 மிலியன்களாக இருப்பார்கள் என்று அளவிடப்பட்டுள்ளது. அட்டவணை 15—1-ல் 1954-லிலிருந்து 1956 வரை எதிர்பார்க்கப்படுகின்ற கூடுதல்கள் காட்டப்பட்டுள்ளன.

* Message of President S. C. Garrison to the graduating class at George Peabody College of Teachers, August 22, 1939.

[1] 'Schools and the 1950 Census,' National Education Association, Research Bulletin, 1951, Vol. 29, No. 4.

இருபதாவது நூற்றாண்டு, ஓய்வுநேரச் செயல்கள் அதிகரித்திருப்பதையும், குழந்தைகள் வேலைக்குச் செல்வது குறைந்திருப்பதையும் கண்டிருக்கிறது. கடந்த நூற்றாண்டில் குழந்தைத் தொழில்பற்றி நமது கருத்து மிகுந்த மாறுதலுக்கு உள்ளாகியிருக்கிறது. ஒரு நூற்றாண்டிற்குமுன் (1842-ல்) மசாசூசட்ஸ் (Massachusetts) எனும் பகுதியில் 12 வயதுக்குக் கீழான குழந்தைகள் நாள் ஒன்றுக்குப் பத்து மணிக்குமேல் வேலை செய்யக்கூடாது எனச் சட்டம் இருந்தது. இருப்பினும், பென்சில்வேனியாவில் 1848-ல் நிறைவேற்றிவைக்கப்பட்ட குறைந்த கூலிச் சட்டம் நூல் ஆலைகளில் வேலை செய்வதற்குரிய குறைந்தபட்ச வயதாகப் பன்னிரண்டை நிர்ணயம் செய்தது. இது சற்று அதிகமான குறைந்தபட்ச வயது என்றே பின்னர் கனெக்டிகட்டிலும் மசாசூசட்ஸிலும் உண்டாக்கப்பட்ட சட்டத்தில் கூறப்பட்டது. இக் காலத்தில் குழந்தைகளினுடைய வேலைநேரங்களைக் கட்டுப்படுத்துவதில் அக்கறை காட்டினார்களே யொழிய, இளையோர்களைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை.

அட்டவணை 15—1

அமெரிக்க நாடுகளில் 14-லிருந்து 17 ஆண்டு வயதில் இருக்கக் ய மக்கள்தொகை என்று கூறப்பட்ட மக்கள்தொகைப் போக்குகள்.

ஆண்டு	மக்கள்தொகை	ஆண்டு	மக்கள்தொகை
1954	85,46,743	1960	1,10,19,678
1955	88,37,614	1961	1,17,38,073
1956	93,27,526	1962	1,24,31,846
1957	99,55,086	1963	1,32,03,333
1958	1,03,61,813	1964	1,34,51,685
1959	1,05,69,299	1965	1,36,89,955

அண்மை நாட்கள்வரை இளையோர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுக்க யாரும் கவலைப்படவில்லை. இவ்வாறு தொழிலுலகத்தில் குழந்தைகள் பணிபுரிதல் 1910ஆம் ஆண்டில் மிக அதிகமாக இருந்தது. இக் காலத்தில், 14-15 வயதுச் சிறுவர் சிறுமியர்களில் 30 சதவீதத்தினர் தொழிலில் இருந்ததாகக் காட்டப்பட்டது. மற்றும் பலர் விவசாயத்திலும் மற்றப் பணிகளிலும் இருந்ததனால், இவ் வயதினர் பள்ளிக்குச் சரிவரச் செல்லவில்லை. மேலும், 14 வயதுக்குக் கீழானவர்களில் ஒரு மில்லியன் பேர் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். 1910ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஒவ்வோர் ஆண்டிலும் குழந்தைகள் தொழிலில் ஈடுபட்டிருந்த எண்ணிக்கை படிப்படி

யாகக் குறையத் துவங்கியது. இதற்கு இணையாகப் பள்ளியில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கையும் 1910ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் படிப்படியாக அதிகரிக்கத் துவங்கியது. இது திறமையான குடிமகனாக இருக்கக் கல்வி அவசியம் என்று மக்கள் உணரத் தொடங்கியதன் விளைவாகும்.

உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தவர்களது எண்ணிக்கை கூடியது

இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்க உயர்நிலைப் பள்ளி பெற்ற வளர்ச்சி தனிச் சிறப்புடையதாகும். படம் 15-1-ஐ ஆய்வுசெய்தால், இவ் வளர்ச்சியின் தன்மையைப்பற்றித் தெளிவாக அறியலாம்.[9]



படம் 15-1 A = சேர்ந்தவர்களின் மொத்த எண்ணிக்கை

1890-லிருந்து 1950 வரையுள்ள சென்ஸஸ் ஆண்டுகளில் பொது, தனி ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கைகள்.

1860ஆம் ஆண்டில் பொது உயர்நிலைப் பள்ளியிலும், தனி உயர்நிலைப் பள்ளியிலும் 3,60,000 மாணவர்கள் சேர்ந்திருந்தனர். 1940ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை 70,00,000 ஆக உயர்ந்திருந்தது. 1930ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டின் கல்வித்துறைக் கணக்குப் படி, 14-லிருந்து 18 வயதுடையவர்களில் 50 சதவீதத்தினர் மட்டுமே உயர்நிலைப் பள்ளிகளில் சேர்ந்திருந்தனர். 1950ஆம் ஆண்டிற்குள் இது 84·4 சதவீதத்திற்கு உயர்ந்தது. அட்டவணை 14-2-ல் அளிக்

[9] Ibid., p. 166.

கப்பட்டுள்ள குறிப்புகளின்படி, பள்ளியில் கிராம இளைஞர்களைக் காட்டிலும் மிக அதிகமான அளவில் நகர இளைஞர்கள் சேர்ந்திருந்தனர் இதற்கு விளக்கமாகப் பல்வேறு காரணங்கள் தரப்படலாம். அவற்றில் ஒன்று நகரத்தில் பள்ளிகள் அருகிலிருக்கின்றன என்பதாகும்.' நகர இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் குறைவான அளவிலேயே இருக்கின்றன என்றும் கூறலாம். மேலும், நகரத்தில் வசிப்பவர்கள் கல்வியினை அதிக முக்கியத்துவம் கொண்டதாகக் கருதுகின்றார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்திருந்தவர்களது எண்ணிக்கை பள்ளி மாணவர்களது மொத்த எண்ணிக்கையில் 5 சதவீதமாகத்தான் இருந்தது. இன்று அது 20-லிருந்து 25 சதவீதத்திற்கு வளர்ந்துள்ளது. ஆரம்பப் பள்ளிகளில் சேருவதுபோலன்றி உயர்நிலைப் பள்ளிகளில் சேருவது என்பது சமூக, பொருளாதாரச் சக்திகளால் பாதிக்கப்படுவதாகும். அது நம்முடைய பொருளாதார, அரசியல் மெய்யுணர்விற்கு நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். எதிர்பாராத இடுக்கண்கள் ஏற்பட்டாலொழிய, பள்ளியில் தங்குகின்ற மாணவர்களது எண்ணிக்கை மேலும் கூடுதல் பெறும் என்பது நிகழக்கூடியதேயாகும்.

பள்ளியின் பிரச்சினை

பள்ளி நிலைத்துநிற்கின்ற அளவுகளைப் பார்க்கும்பொழுது, பள்ளிகளில் சிக்கல் வாய்ந்த பள்ளிப் பொருள்கள் தேவையாய் இருப்பதாலும், காலத்தின் முன்னேற்றத்தாலும் மூடப்படுகின்ற பள்ளிகளின் விகிதம் அதிகமாகவே இருக்கின்றது. நமது உயர்நிலைப் பள்ளிகளின் பாடத்திட்டம் குறைந்த திறன்களுடைய குழந்தைகளுக்கோ அல்லது சராசரித் திறனுடைய குழந்தைகளுக்கோ அமைக்கப்படவில்லை. ஆதலின் பல மாணவர்களுக்கு அது முக்கியத்துவம் கொண்டதாயில்லை. குழந்தை ஒரு செயலுள்ள உயிரி என்றும், முழுத்தன்மையில் செயலாற்றுகின்ற உயிரி என்றும் முன்னரே கூறப்பட்டது. 'செய்முறை மூலம் கற்றல்' எனும் கொள்கை எல்லாக் கற்றல் வளர்ச்சிகளிலும் முக்கியமானதொன்றாக உணரப்பெற்றது. இவ்வாறான செய்முறைக் கற்றல் வாழ்க்கையின் சமூக, மனவெழுச்சி நிலைகளுக்கு ஏற்றதாக இருப்பதோடு மன வளர்ச்சிநிலைக்கும் ஏற்றதாக இருக்கிறது.

உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் அதிகமாகச் சேருகின்ற காரணத்தினால், எல்லா மாணவர்களது தேவைகளுக்கும் ஏற்றவாறு பள்ளி செயலுறுகின்ற பிரச்சினை மிகவும் தீவிரமாகிவருகிறது. உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் அவசியத்தை எல்லோரும் உணர்ந்ததனாலும் இப் பிரச்சினை தீவிரமாகிவருகிறது. இவ்வாறு, நமது பள்ளித்

திட்டத்தில் முக்கியமான மாறுதல்கள் இன்னும் ஏற்படவிருக்கின்றன. நமது உயர்நிலைப் பள்ளிகள் இன்னமும் சிறுவர் சிறுமியர்களைக் கல்லூரிக்கு அனுப்ப வழிசெய்யவோ அல்லது தொழில்களுக்குத் தயார் செய்யவோ முழுவதும் அக்கறைகொள்ளவில்லை. உயர்நிலைப் பள்ளிப் பயிற்சியின் முக்கியமான இயல்புகள், குடிமகனுகப் பயிற்சியளித்தல், நல்ல ஆரோக்கியப் பழக்கங்களைப் பெறுதல், அற சமயப் பயன்மதிப்புகளை அடைதல் ஆகியவைகளேயாகும். இன்றைய உயர்நிலைப் பள்ளியின் திட்டத்தில் இவைகளே வலியுறுத்தப்படுகின்றன.

இளையோர்கள் ஏன் பள்ளியைவிட்டு நின்றுவிடுகின்றுர்கள்?

அமெரிக்கக் கல்விக் கொள்கை உயர்நிலைப் பள்ளிப் படிப்புவரையுள்ள பொதுப்பள்ளித் திட்டத்திஞல் எல்லாச் சிறுவர்களும் சிறுமியர்களும் பயனடைகின்றனர் என்று நம்பிஞலும், 5ஆவது படிவத்தை அடைகின்றவர்களில் பாதிப் பேர் பள்ளியை முடிக்குமுன்னரே நின்றுவிடுகின்றனர். இவ்வாறு பள்ளியைவிட்டு நின்றுவிடுபவர்களின் எண்ணிக்கை, பள்ளியியல் விவரங்களில் சேர்க்கப்படுகின்றதேயொழிய, அவைகளை நினைவில் நிறுத்துவாரில்லை. பள்ளியிலிருந்து பின்வாங்குகின்ற இயல்பு மிகவும் சிக்கல் வாய்ந்ததொன்ருகும். அதனை விளக்குவது என்பது கடினமானதாகும். ஏனெனில், பள்ளியைவிட்டு நின்றுவிடுகின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும் பல நிலைகள் ஒன்ருகச் சேர்ந்து செயலுறுவதனுல் நிகழ்கின்றதொன்ருகும்.

இளைஞர்கள் பள்ளியைவிட்டு நின்றுவிடுவதன் காரணங்களை அமெரிக்க நாட்டு அரசின் தொழில்துறை, 1947ஆம் ஆண்டின் வேனிற் காலத்தில் ஓர் ஆய்வு நடத்தியதன்மூலம் அறிய முற்பட்டது. அவ்வாய்வின் முடிவுகள் இளையோர்கள் பள்ளியைவிட்டு நின்றுவிடுவதன் காரண ஏதுக்களை மதிப்பிடுவதற்கு அடிப்படையாக அமைகின்றன. கென்டகி (Kentucky) பகுதியைச் சார்ந்த லூயிஸ்வில்லி (Louisville) எனும் ஊரிலுள்ள, பள்ளிப் படிப்பை முடிக்காத 524 சிறுவர்களையும், 440 சிறுமிகளையும் நேரடி உரையாடல்மூலம் சந்தித்தனர்.[8] இவ்விளைஞர்களில் 47·7 சதவீதத்தினர் பள்ளியில் திருப்தியின்மையையே முக்கிய காரண ஏதுவாகக் குறித்தனர். பொருளாதாரத் தேவையும், வேலை செய்ய ஆர்வமும் இரண்டாவது மூன்ருவது காரணமாகத் தரப்பட்டன.

நியூயார்க்கு பகுதியைச்சார்ந்த, ஸ்ராக்கியூஸ் (Shracuse) எனும் ஊரில் பள்ளியைவிட்டு நின்றுவிடுபவர்கள்பற்றிய ஆய்வு, முன்

[8] E. S. Johnson and C. Legg, 'Why Young People Leave School'. National Association of Secondary School Principals, 1948.

குறிப்பிட்ட முடிவுகளுக்கு இசைவான முடிவுகளைத் தந்தன.[4] உலக மகாயுத்தத்திற்குப் பின்னர், 7 பருவங்களில் பள்ளியைவிட்டு நின்ற மாதிரிகளை ஆய்வு செய்தனர். அவர்களில் 194 பேர்களிடம் அவர்கள் பள்ளியைவிட்டு நின்ற காரணத்தை நேரடி உரையாடல்மூலம் அறியப்பட்டது. அட்டவணை 15-2-ல் கொடுக்கப்பட்ட காரணங்கள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன. பள்ளியைவிட்டு இடையிலேயே நின்ற இவர்களிடையே நகரத்திலுள்ள எல்லா முக்கியத் தொழில்களுக்கும் பிரதிநிதிகள் இருந்தனர். பல பட்டதாரிகள் பள்ளியில் தரப்பட்ட பாடத்திட்டங்களில் திருப்தியின்மையைத் தெரிவித்தனர். பள்ளிச் சேவைத் திட்டங்களிலும் திருப்தியற்று இருந்தனர். அவர்கள் வேலை வாய்ப்புகள்பற்றியும், எப்படி வேலையைப் பெறுவது என்பது குறித்தும் செய்திகளைப் பெற ஆவலாய் இருந்தனர். அவர்கள் மேலும் தொழிற் பயிற்சிபெறவும், சமூக வாழ்க்கையில் புத்திமதி பெறவும் ஆவலாய் இருந்தனர்.

உயர் கல்வியைப்பற்றிய மின்னசோடா குழு (Minnesota Commission on Higher Education), மின்னசோடாவின் உயர்நிலைப் பள்ளிப் பட்டதாரிகளில் மூன்றில் ஒருவர்மட்டுமே கல்லூரிப் பட்டத்தைப் பெறுவதாக அறிவித்தது.[5] பெர்டி (Berdie) என்பவர் அறிவித்த முடிவுகளும் இதனுடன் நெருங்கிய தொடர்புகள் கொண்டனவாய் இருந்தன.[6] அவருடைய ஆய்வு, மின்னசோடா உயர்நிலைப் பள்ளிப் பட்டதாரிகளில் சிறந்தவர்களில், சரிபாதிப் பேர் கல்லூரிக்குச் செல்லத் திட்டமிடவில்லை என்றும், அதிகமான பணம் அவர்களிடமிருந்தாலும் அவர்களது திட்டத்தினை மாற்றும் எண்ணத்தில் அவர்கள் இல்லை என்றும் குறிப்பிட்டது.

குற்ற நடத்தைபோன்று, பள்ளியைவிட்டு நின்றுவிடுதலையும் தனித்த காரணங்களால் பொதுவாகக் குறிப்பிட இயலாது. இவ்வாறான நடத்தை, பொதுவாக ஒரு முழு நிலைமையின் விளைவாகும் எனத் தனியாள் வரலாறுகள் காட்டுகின்றன. டாமினுடைய வரலாறும் இதனையே வலியுறுத்துகின்றது.

டாம் நான்கு குழந்தைகளில் இளையவனுவான். அவனுடைய பெற்றோர்கள் சிறிய விவசாயப் பண்ணையைச் சொந்தமாக வைத்திருந்தனர். குளிர்காலத்தில் அவனுடைய தந்தை பல வேலைகளில்

[4] 'Syracuse Youth Who Did Not Graduate'. Research Division, Board of Education, Syracuse, New York, 1950.

[5] Minnesota Commission on Higher Education, 'Higher Education in Minnesota'. Minneapolis: University of Minnesota Press, 1950.

[6] R. F. Berdie, 'Why Don't They Go to College?' Personnel and Guidance Journal, 1953, Vol. 31, pp. 352-356.

ஈடுபட்டு வந்தார். அவருடைய சிறிய பண்ணையில் வேலையில்லாத சமயங்களில் அவர் பல வேலைகளுக்குச் சென்றார். டாமின் தாயார் அவளுடைய குழந்தைகளது கல்வியினைப்பற்றிய பற்றார்வம் கொண்டிருந்தாள். இருப்பினும், அவனுடைய தந்தை அதில் ஆர்வமற்று இருந்தார். டாமினுடைய இரண்டு சகோதரர்களோ, அவனுடைய சகோதரியோ உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்கவில்லை. டாம் ஒன்பதாவது படிவத்தில் இருந்தான். அவன் தன்னுடைய வகுப்புப் பாடங்களில் ஆங்கிலத்தைத் தவிர மற்றப் பாடங்களை நன்றாகப் படித்தான். அவன் பள்ளியிலிருந்து பத்து மைல் தூரத்தில் வாழ்ந்துவந்ததாலும், பள்ளியின் பஸ்ஸில் பள்ளிக்கு வந்ததாலும், அவனால் பள்ளியில் அதிக நேரம் தங்கி விளையாட்டுப் பயிற்சிகளிலும், மற்ற ஈடுபாடுகளிலும் பங்குகொள்ள முடியவில்லை. மேலும், டாமினால் பல குழந்தைகள் செலவழித்த அளவு பணம் செலவழிக்க இயலவில்லை. ஆதலின், டாமிற்குப் பள்ளி சிறிய அக்கறையையே தந்தது. அவனுடைய அக்கறைகளுக்கும் திறமைகளுக்கும் ஏற்றவாறு பள்ளி இருக்கவில்லை. ஆங்கில ஆசிரியர் அவனுடைய கட்டுரை ஏட்டில் இருந்த இலக்கணப் பிழைகள்பற்றிப் புண்படுத்தும் சொற்களால் கூறிய கூற்று ஒன்றே டாம் பள்ளியைவிட்டு நின்றுவிடக் கடைசி ஏதுவாக அமைந்தது. முதலில் அவனது பெற்றோர்கள் அவன் பள்ளியை விட்டு நின்றுவிட்டான் என்று அறியவில்லை. பின்னர் அவர்கள், டாம் பள்ளி இருக்கின்ற கிராமத்திற்குப் போய்ப் பள்ளி முடிகின்ற நேரத்தில் பள்ளியைவிட்டுத் திரும்பி பஸ்ஸில் வருகின்றான் என்பதனை உணர்ந்தனர். இதற்குள் டாம் பள்ளி வேலையில் மிகவும் பின்தங்கியிருந்ததனால், அவனது தாயாரால் அவனைப் பள்ளிக்குத் திரும்பிச் செல்லும்படி வற்புறுத்த இயலவில்லை.

கல்வியும் வகுப்பு அந்தஸ்தும்

பள்ளியில் தங்கியிருக்கின்ற இளையோர்களது எண்ணிக்கை தொடர்ந்து அதிகமாகிக்கொண்டே போவதால், ஆசிரியர்களும் பள்ளி அதிகாரிகளும் பல தலைமுறைகளுக்கு முன்னர் இல்லாத பல பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். ஆசிரியர்களும் மற்றவர்களும் பள்ளித் திட்டத்தில் உணரத் தவறுகின்ற முக்கியப் பிரச்சினை என்னவெனில், பள்ளியினுடைய நடுத்தர வகுப்புக் கருத்துகள் பள்ளி மாணவர்களில் பெரும்பாலோர் சார்ந்திருக்கின்ற கீழ்வகுப்புப் பண்பாட்டின் பயன் மதிப்புகளுடன் இணைந்து செல்வதேயாகும்.

இதில் பள்ளிகள் தோல்வியடைந்தால், கீழ்வகுப்பு மாணவன் உயர்நிலைப் பள்ளியைவிட்டுச் செல்கின்ற கட்டாயத்திற்குள்ளாகின்றான். இந் நூலாசிரியர் அறிந்த ஒரு சிறு நகரப் பள்ளி விரிவாக்கப்பட்டு; கிராமியப் பகுதிகளிலுள்ள சிறுவர்சிறுமியர்களில் பலர் பஸ்

மூலம் இந் நகரப் பள்ளிக்குக் கொண்டுவரப்பட்டனர். இம் மாணவர்களில் பலர் நகர, சராசரிக் குழந்தையின் சமூக, கலாச்சார வாய்ப்புகளைப் பெற்றிருக்கவில்லை. ஆதலின், முதலில் கிராமத்திலிருந்து வந்த'

அட்டவணை 15—2

சிராக்கியூஸ் இளையோர்களும் இளைஞர்களும் பள்ளியைவிட்டுச் செல்வதற்குக் குறிப்பிட்ட காரணங்கள்

	ஏற்படுகின்ற அளவு
பள்ளி நிலைமைக்ள் :	
பள்ளியிடம் திருப்தியின்மை	91
பள்ளிப் பாடங்களுக்கும், எதிர்கால வேலைக்குமிடையேயுள்ள தொடர்பு	51
கற்றுக்கொள்ள இயலாமை	48
ஆசிரியர்-மாணவர் உறவு...	46
பொருந்தி அமைகின்ற பாடங்கள் இல்லாமை ...	35
வகுப்பிற்குரிய வயதைக் காட்டிலும் அதிக வயதினைப் பெற்றுள்ள தன்மை	33
பாடங்களை முடித்தல்	22
முதல்வர், துணைமுதல்வர், மாணவர் உறவுகள் ...	13
மற்றவர்கள்	11
மொத்தம் ...	350 (62%)
சொந்த நிலைமைகள் அல்லது பொருளாதார நிலைமைகள் :	
குடும்பத்தேவை அல்லது குடும்ப நிலைமை ...	67
போதிய பணம் இல்லாத தன்மை	60
வேலைக்குப் போகும் ஆர்வம்	59
உடல்நலமின்மை	19
மற்றவர்களுடன் ஒப்பிடும்பொழுது மிகவும் ஏழ்மையான நிலையில் இருத்தல்	9
மொத்தம் ...	214 (38%)

குழந்தைகளால் பள்ளி வாழ்க்கையின் பல சமூக ஈடுபாடுகளில் பங்குபெற இயலவில்லை. ஆசிரியர்களும் அவற்றைக் கவனிக்காது

இருந்துவிட்டனர். நகர மாணவர்கள் தங்களது தந்நல உட்குழுக்கள்மூலம் அவர்களது செயற்பாடுகளில் கிராமச் சிறுவர் சிறுமியர்களை ஒதுக்கிவைக்கின்ற அளவுக்குத் தடைகளை வைத்தனர். வசதியற்ற கிராமக் குழுக் குழந்தைகளில் பலர் பள்ளியைவிட்டு நின்றுவிட்டனர். பின்னர் ஒரு நாள் பள்ளியின் வரம்பு விரிவாக்கப்பட்டதனால், அதிகமான கிராமச் சிறுவர் சிறுமியர்களில் பெரும் பங்கினர் அதில் சேரமுடிந்தது. பள்ளித் திட்டத்தில் விவசாயத் தொழில், தொழிலகக் கலைகள், இல்லப் பொருளாதாரம், வணிகப் பாடங்கள் ஆகியவை சேர்க்கப்பட்டன. மாணவர்களில் பலர் அவர்களுக்கு அக்கறை அளிக்கின்ற பல பாடங்களிலும் நடவடிக்கைகளிலும் பங்கு பெற முடிந்தது.

அட்டவணை 15—3

எல்ம்டௌன் இளைஞர்கள் அவர்களது வகுப்பு அந்தஸ்துக்கு ஏற்றவாறு பள்ளியில் சேர்ந்த அளவு (ஹாலிங்ஸ்ஹெட் அளித்தது).

வகுப்பு	பள்ளியில்		பள்ளிக்கு வெளியே	
	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்
I	4	100·0	0	00·0
II	31	100·0	0	00·0
III	146	92·4	12	7·6
IV	188	58·7	120	41·3
V	26	11·3	204	88·7

ஆசிரியர்களும் தங்களை அறியாமலேயே ஒரு மாறிய மனப்பான்மைகொண்டு நடந்துகொண்டார்கள் போலும்! சில ஆண்டுகளுக்குப் பின்னர் சீனியர் வகுப்பின் செயலாளனும், உதவித் தலைவனும் கிராம மாணவர்களது குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

எல்ம்டௌன் இளைஞர்களில் பள்ளிக்குச் சென்றவர்களது கணக்கினை ஆய்வு செய்தால், கல்வி வாய்ப்பு எல்லோருக்கும் சமமாக

இருக்கவேண்டும் என்று கொள்கின்ற கனவு ஒரு பகற்கனவாகவே இருப்பதுபோல் தோன்றுகிறது.[7] அட்டவணை 15-3-ல் எல்ம்டௌனில் காணப்பட்ட ஐந்து சமூக-பொருளாதாரப் பண்பாட்டு வகுப்புகள் ஒவ்வொன்றிலுமிருந்து பள்ளிக்குச் சென்ற இளையோர்களின் சதவிதத்தினைப் பகுத்தாய்ந்ததில், மேற்சொல்லப்பட்ட முடிவு அறியப்பெற்றது. பள்ளியைவிட்டுச் செல்பவர்கள்பற்றிய பிரச்சினையைப் பற்றிப் பரவலாக உள்ள இரண்டு தவறான கருத்துகள் இருக்கின்றன. முதலில், நகரத்தில் வாழ்கின்ற பல உயர்ந்த வகுப்புக்காரர்கள், பள்ளியைவிட்டு இடையிலேயே நிற்பவர்கள் எல்லோரும் கிராமியப் பகுதிகளிலிருந்து வருவதாகக் கூறி இப் பிரச்சினையைத் தீர்க்க முயல்கின்றனர். எல்ம்டௌனில் நடத்தப்பட்ட ஆய்வும், மற்ற இடங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளும் இது உண்மையன்று எனக் காட்டுகின்றன. பள்ளியைவிட்டு இடையிலேயே நின்று விடுபவர்களில் மிகப் பலர், நகரப் பகுதிகளிலும், சிறு நகரங்களிலும், பெரு நகரங்களிலும் வாழ்கின்ற வசதியற்ற குடும்பங்களிலிருந்து வருபவர்களேயாவர். இரண்டாவதாக உள்ள தவறான கருத்து, பள்ளியைவிட்டு நிற்கின்ற காலத்தைப்பற்றியதாகும். எல்ம்டௌன் ஆய்வு, கட்டாயக் கல்விச் சட்டங்கள் இருந்தாலும், அவை சிறுவர்சிறுமியர்கள் அவர்களது 16ஆவது வயதுவரை பள்ளியில் இருக்கவேண்டும் என்று கூறினாலும், 1942ஆம் ஆண்டின் வேனிற் காலத்தில் பள்ளியைவிட்டு நின்ற 345 பேர்களில் 74 சதவிதத்தினர் அவர்களுடைய 16ஆவது பிறந்த நாளுக்குமுன்னரே பள்ளியைவிட்டு நின்றுவிட்டார்கள் என்று காட்டியுள்ளது. எல்ம்டௌன் மக்களோ, பள்ளி அதிகாரிகளோ இவ்வளவு அதிகமான எண்ணிக்கையினர் பள்ளியை விட்டு நின்றிருக்கின்றார்கள் என்பதை அறிந்திருக்கவில்லை. பெரிய நகரப் பகுதியில் இம்மாதிரியான நிலைமை இன்னும் பெரிய அளவில் இருக்கலாம்.

எச்சரிக்கையுடன் உற்றுநோக்குகின்ற எவருக்குமே கல்வி வாய்ப்பில் இருக்கின்ற மாறுபாடுகள் தெளிவாகத் தெரிந்தபோதிலும், பள்ளியைப்பற்றிய ஊக்கிகள், குறிக்கோள்கள், அவாக்கள், மனப்பான்மைகள் ஆகியவைகளிலுள்ள மாறுதல்களைப்பற்றி அறிதல் ஆசிரியருக்கும், கல்வித் திட்டத்தில் அக்கறை கொண்டுள்ள அனைவருக்கும் மிகவும் முக்கியமான தொன்றாகும். ஹிரோனிமஸ் (Hieronymus) என்பவரால் நடத்தப்பட்ட ஆய்வு, கல்வியின் பற்றார்வத்திற்கும், சில சமூகப் பொருளாதார, அறிவியல் மாறிகளுக்கு

[7] Table 15-3 is reprinted by permission from Elmtown's Youth by A. B. Hollingshead, Published by John Wiley and Sons, Inc., 1949. Elmtown is a fictitious name given to a mid-western town of around 10,000 population.

மிடையே உள்ள தொடர்பினைப்பற்றிக் கவலை கொண்டது.[8] சமூகப் பொருளாதார அந்தஸ்து, கல்வியைப்பற்றிக் கொள்ளும் மனப் பான்மை, சமூகப் பொருளாதார எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை அளப் பதற்குரிய அளவீடுகள் 610 ஒன்பதாம் படிவ மாணவர்களுக்கு அளிக்கப்பட்டன. கல்வி வளர்ச்சிபற்றிய அயோவா சோதனைகளில் (Iowa Tests of Educational Development) பெற்ற மொத்த மதிப் பெண்களும், நுண்ணறிவு ஈவும் பெரும்பான்மையானவர்களின் பள்ளி அறிக்கைகளிலிருந்து பெறப்பட்டன.

இவ் ஆய்வின் முடிவுகள் மிக எச்சரிக்கையாகப் பகுத்தாய்வு செய்யப்பட்டன. பல்வேறு சோதனைகளிலிருந்து பெற்ற அளவுகளுக் கும், மதிப்பிடும் முறைகளுக்குமிடையேயுள்ள உடன் தொடர்புகள் பெறப்பட்டன. அட்டவணை 15-4-ல் வெவ்வேறான மாறிகளுக்கும், கல்வியைச் சார்ந்த மனப்பான்மைகளுக்குமிடையே உள்ள உடன் தொடர்புகள் அளிக்கப்பட்டுள்ளன. சிறுவர்களது உடன்தொடர்பு ·49 ஆகவும், சிறுமியர்களது உடன்தொடர்பு ·47 ஆகவும் இருந்தன. சமூக-பொருளாதார எதிர்பார்ப்புகளுக்கும், கல்வியைச் சார்ந்த மனப் பான்மைக்கும் இடையேயிருந்த உடன்தொடர்புகள்தாம் மேலே குறிப்பிட்டவையாகும். மற்ற மாறிகளுக்கும் கல்வியைச் சார்ந்த மனப்பான்மைக்கும் இடையேயிருந்த உடன்தொடர்பினைக் காட்டி லும், இவ்வுடன்தொடர்பு சற்று அதிகமாக இருப்பது, சமூகமயமான பற்றார்வம்தான், அமெரிக்கக் கல்வியினை ஊக்குவிக்கின்ற முக்கியமான சக்தியாகும் எனும் கற்பிதத்திற்கு மேலும் ஆதரவினை அளிக்கின்றது. இதன் காரணமாகத்தான் கல்லூரியில் சேர்வதும், உயர்நிலைப் பள்ளி யில் சேர்வதும் தேர்ந்தெடுக்கின்ற முறையாக ஆகியுள்ளது. இக் கருத்தினை உயர்நிலைப் பள்ளிச் சிறுவர்சிறுமியர்களது கல்வியினைப் பற்றி அக்கறை கொள்வோர் கவனிக்கவேண்டும். உயர்நிலைப் பள்ளிச் சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் கல்வியினை அளிக்கின்ற பொறுப்பில் இருப்பவர்கள் இன்றும் நாளையும் சந்திக்கின்ற மிகவும் துன்பமான பணி என்னவெனில், கீழான சமூகப் பொருளாதாரக் குழுக் களில் இருக்கின்ற பெரும்பான்மையான சதவீதத்தினரது தேவை களுக்கு ஏற்பக் கல்வித் திட்டத்தினையும் கல்விக் குறிக்கோள்களையும் அமைப்பதுவேயாகும். அவர்களை இன்று பள்ளியில் நிறுத்திவைக்க ஆசிரியர்கள் அளிக்கின்ற ஊக்கிகள் யாவும் உண்மை நிலைகளைப் பிரதிபலிப்பனவாய் இல்லை; அல்லது அவைகள் யாவும் சிறுவர் சிறுமி யர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாக இல்லை.

[8] A. H. Hieronymus, 'A Study of Social Class Motivation: Relationship between Anxiety for Education and Certain Socio-Economic and Intellectual Variables', Journal of Educational Psychology, 1951, Vol. 42, pp. 193-205

அட்டவணை 15—4

கல்வியைச் சார்ந்த மனப்பான்மைக்கும், சில சமூகப் பொருளாதார அறிவியல் மாறிகளுக்குமிடையே உள்ள தொடர்புகள் (ஹிரேனிமஸ் தந்தது).

	கல்வியைச் சார்ந்த மனப்பான்மை சிறுவர்	சிறுமியர்
சமூகப் பொருளாதார அந்தஸ்து	·28	·29
பெற்றோரது கல்வி	·22	·22
தந்தையின் தொழில்	·15	·16
நுண்ணறிவுச் சோதனை	·29	·24
கல்வி வளர்ச்சிபற்றி அயோவா சோதனைகளின் முடிவுகள்	·33	·39
சமூகப் பொருளாதார எதிர்பார்ப்புகள் ...	·49	·47
கல்வி எதிர்பார்ப்புகள்	·49	·41
தொழில் எதிர்பார்ப்புகள்	·34	·36

தேவைகளும் குறிக்கோள்களும்

கடந்த நூற்றாண்டில் உயர்நிலைப் பள்ளிகளில் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. முதியோரது கருத்துப்படி, அவைகள் எல்லாம் நன்மை பயப்பனவாகவே இருந்தன. நவீன உயர்நிலைப் பள்ளிகள் இளைஞர்களுக்கு அவர்கள் கற்கவேண்டிய தேவையினை உணர்கின்றவற்றினைக் கற்க எவ்வாறு உதவுகின்றன என்பது இன்னமும் சந்தேகத்திற்கிடமாகவே இருக்கின்றது. நாம் ஒரு பதின் வயதினனது கூற்றினை மிகவும் கவனமாக ஆராயவேண்டும்.

'என் தந்தை நான் பதினைந்து வயதினை அடைந்த பின்னர் பள்ளியைவிட்டு நின்றுவிடலாம் என்று கூறுகின்றார். நான் பள்ளியை விட்டு நின்றுவிட மிகவும் பற்றார்வம் கொண்டிருக்கின்றேன். ஏனெனில், இன்னமும் நான் உலகில் பலவற்றை எவ்வாறு செய்வது எனக் கற்றுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். எனது மாமன் கூறுவது போல் நான் இன்னும் சிறு பிள்ளை அல்ல.'[9]

[9] S. M. Corey, 'The Poor Scholar's Soliloquy,' Childhood Education, 1944, Vol. 20, pp. 219-220.

கல்வியும் பொறியியலும்

தொழில் உலகத்தினின்று பள்ளி முழுமையான அளவில் பிரிந்து இருப்பதனுல், இளையோன் வெற்றுநிலை அறிவினையே பெற்றுப் பள்ளியி னின்று வெளிவருவான். ஆனுல், வாழ்க்கையைப்பற்றிய உண்மை யான கருத்தின்றி வெளிவருவான். பெரும்பாலும் அவர்களுடைய பள்ளிப் படிப்புகளிலேயே அதிகமான அளவு அழுந்தி இருப்பவர்கள், அன்றாட வாழ்க்கைக்குப் பயனற்றவர்களாய் இருப்பார்கள். மேலும் சில உண்மைகளைக் கற்றுக்கொள்வதற்கும், அவைகளை அம் மாணவன் கடைப்பிடிப்பதற்கும், பல்வேறு வெளிப்புற ஊக்கிகளும் செயற்கை யான ஊக்கிகளும் தேவைப்படும். பள்ளியினை வாழ்க்கையுடன் நெருங்கியவாறு இணைக்க விரும்புகின்ற பலர், பள்ளித் திட்டத்தி லுள்ள உண்மையற்ற தன்மையை எதிர்த்து வந்திருக்கின்றனர். இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பல சீர்திருத்தத் திட்டங்கள் அளிக்கப் பட்டுள்ளன. இதில் உள்ள உண்மையான தொல்லை, பொறியியல் வளர்ச்சியினுல் ஏற்பட்டதாகும். பொறியியல் வளர்ச்சி காரணமாக உற்பத்தியிலும், பொருள்களைப் பகிர்ந்து அளிப்பதிலும் குழந்தைகளது உழைப்பு இனிமேல் தேவைப்படாத பொருளாதார நிலை உருவாகி யுள்ளது.

பொறியியல் காலத்தில், சிறுவர் சிறுமியர்களது தேவைகளுக் கேற்றவாறு பள்ளித் திட்டத்தைப் பொருத்தியமைக்க வேண்டிய முக்கியமான அவசியத்தை இது உண்டாக்கியுள்ளது. இத் தேவை யானது, பெரும்பாலான உயர்நிலைப்பள்ளிகள் இன்னும் கல்லூரிக்கு மாணவர்களைத் தயார் செய்கின்ற நிறுவனங்களாகவே செயலுறுகின்ற தன்மையால், மிகவும் அவசியம் என்று உணரப்படுகின்றது. பெரும் பாலான உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் கல்லூரி நுழைவு வகுப்பினை எடுத்துக்கொள்கின்றுர்களே யொழிய, 20 சதவிதத்தினர்மட்டுமே கல்லூரிக்குப் பெரும்பாலும் செல்கின்றனர். மேலும் 20 சதவீதத் தினர் ஒரு தொழிலினையோ, வணிகத்தினையோ கைக்கொள்கின்றனர். மிகுதியுள்ள 60 சதவீதத்தினர் என்ன செய்கின்றனர்? அவர்களுடைய இன்றைய தேவைகளுக்கும், எதிர்காலத் தேவைகளுக்கும் ஏற்ற வாறு உண்மையான கல்வியளிக்க வேண்டியது அவசியமன்றோ? அவ்வாறுன திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டிய பயிற்சியின் தொகுப்பு கீழே அளிக்கப்பட்டுள்ளது.

1. குடும்ப வாழ்க்கைப் பயிற்சி: இவ்வாறுன கற்றல் திருமணம், குடும்பம், குழந்தை வளர்ப்பு ஆகியவற்றினைப்பற்றிய உண்மைகளை வலியுறுத்துவதோடு ஆங்கில இலக்கியம், கணக்கியல் பற்றிய செய்திகளையும் அளிக்கின்றது.

2. *பயனீட்டாளர் கல்வி* (Consumer Education) : கடையில் எப்படிப் பணத்திற்கேற்ற மதிப்புள்ள பொருள்களைப் பெறுவது என்பது பற்றிக் கற்றல் இக் கல்வியாகும். பணம் ஈட்டுவதனைப்பற்றிக் கற்றல் எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்கு இத்துறைக் கல்வியும் அவசியமாகும்.

3. *தொழிலில் நல்ல பழக்கங்கள்* : எவ்வாறு கற்றுக்கொள்வது, ஒருவருடைய காலத்தை எவ்வாறு பகிர்ந்துகொள்வது, ஒத்துழைக்கும் பணிகளில் எப்படி மற்றவர்களுடன் சிறப்பாகப் பழகுவது ஆகியவை களைப்பற்றிக் கற்றுக்கொள்ளுதல்.

4. *ஓய்வு நேரத்தினைப் பயனுள்ள வகையில் செலவிடுதல்*: பொழுதுபோக்கு என்பது ஓய்வைக் காட்டிலும் அல்லது ஊர்களுக்குப் போவதைக் காட்டிலும் அதிகமான பொருளுடையதாகும். திறமைகள் பெறப்படுகின்றன; அக்கறைகள் வளர்க்கப்படுகின்றன; பல திறப்பட்ட செயல்களும், பயனுள்ள அக்கறைகளும், புதியன உண்டாக்கும் திறன்களும் வளர்க்கப்படுகின்றன.

5. *குடிமகன் பயிற்சி* : ஒரு தனியன் அவனுடைய அருகில் வசிப்பவர்களுக்கு அளிக்கவேண்டிய கடமைகள், அவனுடைய சமுதாயத்திற்குச் செய்யவேண்டிய கடமைகள், பொதுவாக சமூகத்திற்கு அவன் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றிக் கற்றுக்கொள்கின்றான். அவ்வாறான கற்றல், குடிமகனாக அவனைத் தயார் செய்கின்றது. தனியனது தானாக இயங்கும் தன்மை, பொறுப்பு, மற்றவர்களுடன் பல துறைகளில் அளிக்கும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் எழுந்துள்ள கூட்டுறவு ஜனநாயகச் சமூகத்தில், இவ்வாறான கற்றல் மிகவும் அவசியமாகும்.

6. *தொழில் திறமைகள்*: வாழ்க்கையினைக் கடைப்பிடிக்கக் கைக்கொள்ளும் தொழிலில் கொள்ளும் திறமைகளைக் காட்டிலும் கீழ்க்கண்ட கற்றல்கள் மிகவும் அவசியமாகும். புரிந்துகொள்ளுதல், மற்றவர்களுடன் சிறப்பாகப் பழகுதல், வேலையைப்பற்றி இசைவான தொரு மனப்பான்மை ஆகியவைகள்தாம் தனியனைச் சிறந்த தொழிலாளியாக ஆக்கி, நல்ல பொருத்தப்பாடுகள் கொண்ட குடிமகனாக ஆக்குகின்றன.

7. *நல்ல ஆரோக்கியப் பழக்கங்கள்*: நல்ல மன நலமும், உடல் நலமும் அதிகபட்ச இன்பத்தையும் வெற்றியையும் அடைவதற்குரிய அடிப்படைத் தேவைகளாகும். பள்ளிகள் நல்ல ஆரோக்கியப் பழக்கங்களை வளர்ப்பதிலும், பாதுகாப்பினை அளிப்பதிலும், விபத்தைத் தடுக்கும் திட்டத்தினை அளிப்பதிலும் முக்கியக் கடமைகள் கொண்டிருக்கின்றன. கார் ஓட்டும் கல்வித் திட்டங்கள், பொதுக் கல்வித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டால், நல்ல கார் ஓட்டும் பழக்-

கங்கள் ஏற்பட்டு, இளைஞர்கள் கார் ஓட்டும்பொழுது ஏற்படும் விபத்துகளின் விகிதத்தைக் குறைக்கமுடியும்.

8. *ஆன்மீக மனிதனை வளர்த்தல்* : ஒழுக்க வளர்ச்சியும், குண வியல்பு உருவாதலும், நல்ல இசைவான வாழ்க்கை மெய்யுணர்வுடன் இணைந்து செயலுறுவது இதிலடங்கும்.

இளையோர்களின் கல்வித் தேர்ந்தெடுத்தல்கள்

டொனல்ட் டோஆன் (Donald Doane) என்பவரால் நடத்தப் பட்ட ஆய்வில், உயர்நிலைப்பள்ளிச் சிறுவர் சிறுமியர் குழு ஒன்றிடம், முன்னைய ஆய்வுகளில் குறிக்கப்பட்ட, இளையோர்களது தேவை களையும் பிரச்சினைகளையும் கொண்ட, பத்தொன்பது செயல்வினைகள் கொண்ட பட்டியல் தரப்பட்டு, அவற்றிலிருந்து தேர்ந்தெடுத்தல் களைச் செய்யும்படி கூறப்பட்டது.[10] இச் சிறுவர் சிறுமியர்களிடம், அவர்கள் அதிகமாக விரும்புகின்ற ஐந்து பகுதிகளையும் மிகக் குறை வாக விரும்புகின்ற ஐந்து பகுதிகளையும் குறிக்கும்படி கோரப்பட்டது. (அதாவது பள்ளியில் கைக்கொள்ளக்கூடிய பாடங்கள் என விளக் கப்பெற்றன.) 'தொழில் தேர்ந்தெடுத்தலும் வேலையில் அமர்த் தலும்' எனும் பாடம்தான் சிறுவர்களாலும் சிறுமியர்களாலும் மற்றப் பாடங்களைக் காட்டிலும் பெரும்பான்மையான சதவீதத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேலும், உயர்ந்த நுண்ணறிவு ஈவுகொண்ட குழுவினர் செய்த தேர்ந்தெடுத்தல்களுக்கும், கீழான நுண்ணறிவு ஈவுகொண்ட குழுவினர் செய்த தேர்ந்தெடுத்தல்களுக்குமிடையே மிகக் குறைவான மாறுபாடே இருந்தது. (அட்டவணை 15-5-ஐக் காணவும்). வாஷிங்டன் பகுதியில் 5,500 உயர்நிலைப்பள்ளி மாணவர் களைக்கொண்டு நடத்திய மதிப்பீட்டின் முடிவுகள், டோஆன் அவர் கள் கொண்ட முடிவிற்கு ஆதரவினை அளிக்கின்றன. உயர்நிலைப் பள்ளி அவர்களைச் சிறந்தவர்களாக ஆக்க இவற்றையெல்லாம் செய் திருக்கலாம் என்று குறித்த சிறுவர் சிறுமியரது சதவீதம் அட்டவணை 15—6-ல் அளிக்கப்பட்டுள்ளது.[11] அதிகமான பாடங்களின் தேவையைக் குறிப்பாகத் தொழிற் பாடங்களின் தேவையை, இவ் வுயர்நிலைப்பள்ளி மாணவர்களில் பாதிப்பேருக்குமேல் குறிப்பிட்ட னர். மேலும், குறிப்பிடும்படியான அளவினர், தொழில் வழிகாட்டல், தொழில் அனுபவம், உலகப் பிரச்சினைகளைச் சிறப்பாக அறிந்து

[10] D. C. Doane, 'The Needs of Youth : An Evaluation for Curriculum Purposes'. Teachers College, Columbia University, Contributions to Education, No. 848, 1942.

[11] L. J. Elias, 'High School Youth Look At Their Problems,' Pullman, Wash.; The State College of Washington, 1949.

கொள்ளுதல், பட்டப் படிப்புக்குப் பின்னர் பின்நடப்பு ஆய்வு செய்தல் ஆகிய இனங்களைக் குறித்தனர். கானெக்டிகட் (Connecticut) பகுதியினைச்சார்ந்த 1,400 உயர்நிலைப்பள்ளிச் சீனியர்களைக்கொண்டு நடத்தப்பட்ட ஆய்வில், அன்னியமொழிகள், வரலாறு, சமூகப்பாடங்கள், கணக்கியல் ஆகியன மிகக் குறைவான பயனுடைய பாடங்களாகக் குறிப்பிடப்பட்டன.[12] பள்ளிகள், நாளிடல், திருமணம், பெற்

அட்டவணை 15—5

உயர்ந்த, குறைந்த நுண்ணறிவு ஈவு உடைய குழுக்கள் தேர்ந்தெடுத்தவைகளின் ஒப்புமைகள் (டோஆன் அளித்தது).

பாடம்	உயர்ந்த நு.ஈ. (164 பேர்)	குறைந்த நு.ஈ. (164 பேர்)
	சதவீதம்	சதவீதம்
தொழில் தேர்ந்தெடுத்தலும் வேலையில் அமர்த்தலும்	65	68
மற்றவர்களுடன் நன்ருகப்பழகுதல்	52	48
ஆரோக்கியம்	37	49
பால்	22	30
மாற்றுப் பாலாருடன் கொள்ளும் உறவுகள்	29	30
பணம்	22	25
திருமணம், குடும்பம் ஆகியவற்றினைப்பற்றிய திட்டம்	25	24
வாழ்க்கை மெய்யுணர்வு: மனநலம்	18	20
குடும்பத்துடன் கொள்ளும் உறவுகள்	16	19
ஓய்வு நேரமும் பொழுதுபோக்கும்	10	19
ஒழுக்கம்	16	18
சமயம்	11	5
வரலாறு	27	28
அரசு	29	27
இன்றைய பிரச்சினைகள் ...	10	18
இசை, கலை, நாடகம்	42	30
விஞ்ஞானங்கள்	25	24
மொழிகள்	26	16
இலக்கியம்	18	9

[12] K. Wiles, 'Youth Education in Connecticut,' Hartford, Conn.: Governor's Fact Finding Commission on Education, 1950, pp 79-91.

ரோர்-குழந்தை உறவுகள், சொந்தப் பிரச்சினைகள் ஆகியவற்றினைப் பற்றி மிகக் குறைவான உதவியினையே அளிப்பதாக மாணவர்கள குறிப்பிட்டனர்.

அட்டவணை 15—6

உயர்நிலைப்பள்ளி இளைஞர்கள் தாங்கள் சிறப்பாகத் தயார் செய்துகொள்ள, உயர்நிலைப்பள்ளி செய்ய வேண்டியவை என்று எண்ணியவை. (எலியஸ் தந்தது)

	சிறுவர்கள்	சிறுமியர்கள்	மொத்தம்
	சதவீதம்	சதவீதம்	சதவீதம்
அதிகமான பாடங்களைத் தரவேண்டும்	50·2	46·8	48 3
அதிகமான தொழிற்பாடங்களைத் தரல்வேண்டும் ...	45·6	52·4	43·8
ஆசிரியர்கள் இன்னும் நட்புடன் பழகலாம்	16·8	18·6	17·8
அதிகமான வழிகாட்டலும் அறிவுரையும் அளிக்கவேண்டும்	29·2	29·9	29·6
பட்டப்படிப்பு முடிந்தவுடன் என்ன செய்யவேண்டும் என்பதில் அக்கறை காட்டவேண்டும்	13·3	7·1	9·9
என்ன தொழிலினைப் பின்பற்ற வேண்டும் என்று சொல்லித் தரல் வேண்டும் ...	5·2	8·7	4·4
செய்முறை, தொழில் அனுபவத்தினை அவர்களுக்கு அளிக்கவேண்டும் ...	28·8	26·9	27·8
சொந்தப்பிரச்சினைகளுக்கு அதிகமானஉதவி அளிக்கவேண்டும்	11·2	9·9	10·5
உலகப் பிரச்சினைகளைப் பற்றிய புரிந்துகொள்ளுதலை அளிக்கவேண்டும்	11·6	12·8	12·2
பள்ளியும் ஆசிரியர்களும்மிகவும் கடுமையாக இருக்கின்றனர்...	4·6	6 3	5·3

இவ்வாய்வின் முடிவுகள், இளைஞர்களுக்கான பர்டு பல்கலைக் கழகக் கருத்துத் தேர்வில் பெற்ற முடிவுகளை ஒத்திருக்கின்றன.[18] இத் தேர்வில் அமெரிக்க நாட்டின் பல்வேறு பகுதிகளைச்சார்ந்த 15,000 இளையோர்களை நேரடி உரையாடல்மூலம் சந்தித்து, இளைஞர்கள் அவர்களுடைய பாடங்களைப்பற்றி என்ன நினைக்கின்றார்கள் என்றும், அவர்களைத் தொல்லைப்படுத்தும் பிரச்சினைகள்பற்றியும், அவர்கள் எடுத்துக்கொள்ள விரும்பும் பாடங்களைப்பற்றியும் கேட்கப்பட்டது. அட்டவணை 15-7-ல் இவ்வாய்வின் முடிவுகள் சில அளிக்கப்பட்டுள்ளன. மாணவர்களில் பலர் தொழில் தேர்ந்தெடுத்தல்களில் உதவியை நாடினார்கள். அவர்களைப் புரிந்துகொள்வதற்கும், கல்லூரியைத் தேர்ந்தெடுப்பதற்கும், வேலையைப் பெறுவதற்கும் உதவியை நாடினார்கள். மாணவர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் உயர்நிலைப்

அட்டவணை 15—7

உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் அவர்களுடைய உயர்நிலைப் பள்ளிப் பாடங்களைப்பற்றிக் குறிப்பிட்ட மனப்பான்மைகளும் பிரச்சினைகளும் (ரெம்மெர்ஸ் என்பவராலும் சிம்பெர்க் என்பவராலும் அளிக்கப்பட்டது).

மனப்பான்மை அல்லது பிரச்சினை	*சதவீதம்*
அவர்கள் படிக்கின்ற பாடங்களின் பயன்மதிப்பினைப்பற்றி ஐயுறுகின்றனர்	21
அன்றாட வாழ்க்கையிலிருந்து பாடங்கள் மிகத்தூரம் தள்ளி இருந்தன	10
அவர்களது பள்ளியில் அளிக்கப்படாத பாடங்களை எடுத்துக்கொள்ள விரும்புகின்றனர்	35
அதிகமான தொழிற் பாடங்களை எடுத்துக்கொள்ள விரும்புகின்றனர்	33
சில செய்முறை வேலை அனுபவம்பெற விரும்புகின்றனர்	49
பாடங்களைத் தேர்ந்தெடுப்பதில் அறிவுரையினை எதிர்பார்க்கின்றனர்	25
பிற்கால வாழ்க்கையில் அவர்களுக்குப் பயன்மதிப்புடன் இருக்கும் பாடங்கள் எவையென்று திகைக்கின்றனர்...	50

[18] H. H. Remmers and B. Shimberg, 'Problems of High School Youth,' The Purdue Opinion Poll for Young People, Report No. 21, Purdue University, 1949.

பள்ளியில் படிக்கும் பாடங்களில் பயன்மதிப்பினைப்பற்றி ஐயுற்றனர். 50 சதவீதத்தினர் அவர்களுடைய பிற்கால வாழ்க்கையில் பயன்மதிப்புள்ள பாடங்களாக எவற்றைக் கொள்ளலாம் என்று திகைத்தார்கள். மாணவர்களில் மிக அதிகமான சதவீதத்தினர் வேலை அனுபவங்களையும், தொழில் பாடங்களையும்பற்றி அறிய ஆவல் கொண்டிருந்தனர். இது அவர்கள் தொழில் வளர்ச்சியில் ஒரு வேலையைப் பெற்று வாழ்க்கையைத் தொடங்கக் கொண்டிருந்த ஆவலைக் காட்டியது.

பொழுதுபோக்கும் சமூகத் தேவைகளும்

மேற்கத்திய, பென்சில்வேனியா பகுதியைச்சார்ந்த பத்து உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து எடுக்கப்பட்ட, 2,100 மாணவர்கள் ஒரு கேள்வி நிரலுக்கு அளித்த பதில்கள் பகுத்தாய்வு செய்யப்பட்டன. இக்கேள்வி நிரலிலிருந்து அவர்கள் பள்ளிப் பொழுதுபோக்குத் திட்டத்திலும் பல்வேறு சமூக நிகழ்ச்சிகளிலும் எவ்வாறு பங்கு கொள்கின்றனர் என்பதற்குக் கிடைத்த பதில்களிலிருந்து சுவைமிக்க முடிவுகளும் பயன்மிக்க பொதுமைகளும் பெறப்பட்டன.[14] இவ்வாய்வின் முடிவுகள் பள்ளி இளையோர்களது பொழுதுபோக்குத் தேவைகளையும், சமூகத் தேவைகளையும் திருப்தி செய்ய ஏற்ற திட்டத்தினை அளிக்கவேண்டும் என்ற தேவையை உறுதி செய்கின்றன. இவ்வாறான தேவையைச் சிறிய உயர்நிலைப் பள்ளிகளைக் காட்டிலும் பெரும்பாலும் பெரிய உயர்நிலைப்பள்ளிகளில் காணலாம். கேள்வி கேட்கப்பட்ட மாணவர்கள், இத்துடன் ஆண்டின் துவக்கத்தில் அறிமுகமாவதற்குரிய தேநீர் விருந்துகளின் தேவையைக் குறிப்பிட்டனர். வெவ்வேறு ஆரம்பப் பள்ளிகளிலிருந்து உயர்நிலைப்பள்ளிக் குழுவில் வந்து சேருவதனால் ஒருவரை ஒருவர் சிறப்பாக அறிந்துகொள்ள இம்மாதிரியான விருந்துகள் உதவி செய்யுமெனக் கூறினர். பள்ளித் திட்டத்தில் நடன விருந்துகள் பங்குபெற வேண்டுமென்று குறிப்பிட்டாலும், இவைகள்மட்டுமே முழுத்திட்டத்தினை உருவாக்குவதில்லை என்பதனையும் உணர்ந்தனர். எல்லா மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளக்கூடிய நிகழ்ச்சிகளுக்குத் தேவை இருந்தது. இச் சமூகப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கான தேவைகளுடன் ஆசிரியர்கள், சங்கங்கள், இல்லச் சந்திப்புகள், வகுப்புகள்மூலமாக உதவியளிப்பதற்குரிய தேவையும் இருந்தது. இவையெல்லாவற்றுடனும் பள்ளிக்குள் ஜனநாயக உணர்வு இருக்கவேண்டும். ஆசிரியர்களும் இளையோர் சிறுவர்கள் சிறுமியர்களது பிரச்சினைகளையும், அவாக்களையும் உணர்ந்து அதில் அக்கறை காட்டவேண்டும்.

14 D. R. Kovar, 'Student Attitudes Toward the Programme of Social Recreation in Certain High Schools of Western Pennsylvania,' Doctor's Thesis, University of Pittsburgh, 1939.

நல்ல பொருந்தியமைகின்ற ஆளுமை உருவாவதற்கு, ஆளுமையினை உருவாக்குகின்ற எல்லா ஏதுக்களைப் பற்றியும் கருதவேண்டும். ஒவ்வொரு தனியனும் ஒவ்வொரு பண்புக்கூறு வகைக்குப் பிரதிநிதியாக இருக்கிறான். இப் பண்புக்கூறுகள் ஏறத்தாழ, அந்தக் குறிப்பிட்ட தனியனுக்கு மட்டுமே சார்ந்தவையாகும். அவைகள் யாவும் ஒருவகையாக ஒன்று சேர்ந்து நல்ல இணைப்புள்ள ஆளுமையாக ஆகின்றன. இதனை அடைய முயல்வதுதான் கல்வியின் முக்கியக் குறிக்கோளாக இருக்கவேண்டும். சங்க ஈடுபாடுகளும், இல்லச் சந்திப்புத் திட்டமும், சமூகமயமாக்கப்பட்ட வகுப்பறைச் செயல் முறைகளும், மற்ற முறைகளும், நிலைகளும் இன்றைய பள்ளியின் முக்கிய இயல்புகளாகும். இவைகள் யாவும் தனித்த மாணவனது முழுமையான வளர்ச்சிக்காக உண்டாக்கப்பட்டவையாகும். மனித ஆரோக்கியம், இன்பம், வெற்றி ஆகியவை அறிவியல் வளர்ச்சிக்கும் மேலானவற்றினைப் பெரிதும் பொறுத்திருக்கின்றன என்பதை இப்பொழுது நாம் உணரத் துவங்கியுள்ளோம். ஒரு மாணவனால் பௌதீகத் துறையிலும், வேதியல் துறையிலுமுள்ள சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்க இயலும். அல்லது மிகச் சிறந்த கட்டுரை என்று கருதப்படுகின்ற கட்டுரையினை எழுத இயலும். ஆனால், இவ்வளவு இருந்தும் அவன் மனவெழுச்சி நிலையில் மிகவும் மோசமாகப் பொருந்தி அமைந்து, அவனுடைய அன்றாட வாழ்க்கையிலுள்ள எளிதான பிரச்சினையைக்கூட தீர்க்க வியலாமல் துன்புறுவான். இல்லமும், பள்ளியும், மற்றக் கல்விச் சமூகப் பதிலாண்மைகளும், சமூகக் கல்வி, தொழில் பிரச்சினைகளை உணர்ந்து, நன்றாகப் பொருந்தியமைந்து, நல்ல பொருத்தப்பாடுடைய ஆளுமையினை உருவாக்க வழி செய்யவேண்டும். டோவான் என்பவர் குறிப்பிட்டதுபோன்று :

''சமூகத் திறன்களின் வளர்ச்சியில், அதாவது நண்பர்களைப் பெறுதல், புகழுடன் இருத்தல், பழக்க வழக்கங்கள், நன்னடத்தை முறை ஆகியவைகள் வளர்ச்சியுற உதவியளிக்கவேண்டும் என்று சிறுமியர்களில் பாதிப்பேர்களிலிருந்து முக்கால் பங்கினர்வரை குறிப்பிட்டனர். சிறுவர்களில் கால்பங்கினரிலிருந்து அரைப்பங்கினர் வரை இவ்வாசையைத் தெரிவித்தனர். சிறுமியர்களில் 74 சதவீதத்தினரும், சிறுவர்களில் 55 சதவீதத்தினரும், 'எவ்வாறு நண்பர்களைப் பெறுவது' என்ற இனத்தைக் கோடிட்டனர். பழக்க வழக்கங்கள், நடத்தை முறைகள் எனும் இனத்தைச் சிறுமியர்களில் 65 சதவீதத்தினரும் சிறுவர்களில் 43 சதவீதத்தினரும் கோடிட்டனர்.''[15]

கல்லூரியில் சேருவோரின் எண்ணிக்கை அதிகமாவதால் கல்லூரியைப் பற்றிய அறிமுகப் பாடத்தை மாணவர்களுக்கு அளிக்க

[15] Op. cit., p. 116

வேண்டிய பணி அறிவுரையாளர்க்கு முக்கியப் பணியாக இருக்கின்றது. கல்லூரியில் சேருவோர்களின் எண்ணிக்கை 1960ஆம் ஆண்டில், 1950ஆம் ஆண்டிலிருந்ததைக் காட்டிலும் இருமடங்கு அதிகமாக இருக்கும் என்றும், 1970ஆம் ஆண்டில், 1950ஆம்ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக இருக்குமென்றும் வருமுன் கூறப்பட்டது.[16] இருப்பினும், தனித்த கல்லூரி முக்கிய பாடங்களைப் பற்றிய வழிகாட்டல் சீக்கிரமே வரலாம். இது ட்ரெஸ்ஸல் என்பவரும், ஸ்ட்டர்கிஸ் என்பவரும் நடத்திய ஆய்வின் முடிவுகளிலிருந்து பெறப்படுகின்றது.[17] இவ்வாய்வுகள், கல்லூரி மாணவர்களில் சரி பாதிக்குமேல் கல்லூரியில் இருக்கும்பொழுதே முக்கிய பாடத்தினை மாற்றிக்கொண்டார்கள் என்று காட்டுகின்றன. அதிகாரம் 17-ல் அளிக்கப்படவிருக்கும் குறிப்புகளுடன் இது ஒத்திருக்கின்றது. அக்கறைக் கண்டுபிடிப்புகளினால் அளக்கப்படுகின்ற உயர்நிலைப் பள்ளிப் பருவத்திலுள்ள அக்கறைகள், போதிய அளவு நிலைத்த தன்மையுடன் இல்லாததால், அவைகளைத் தொழில் வழிகாட்டுதற்குரிய நல்ல அடிப்படையாகப் பயன்படுத்த இயலவில்லை.

திருமணத்திற்குத் தயார் செய்துகொள்ளல்

கலிஃபோர்னியாவில் பள்ளியில் இடையிலேயே நின்றுவிடுவோர்களைப்பற்றியும் பட்டம் பெறுவோரைப் பற்றியும் நடந்த ஆய்வுகளில், பதினைந்து ஆய்வுகள், பள்ளிகள், மாணவர்களுக்குத் திருமணம் போன்ற வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்குத் தயார் செய்துகொள்ள, எவ்வளவு உதவி அளிக்கின்றன என்று அறிய விரும்பின.[18]

ஆய்வு செய்யப்பட்ட பதினான்கு வாழ்க்கை நிகழ்ச்சிகளில், மாணவர்கள் திருமணத்திற்குத் தயார் செய்துகொள்ள மிகக் குறைந்த அளவு உதவியினைப் பெற்றதாகக் குறிப்பிட்டனர். இது படம் 15-2-ல் காட்டப்பட்டுள்ளது. பதிலைத்தந்த மாணவர்களில் 15 சதவீதத்தினர் மட்டுமே பள்ளிகள் அதிகமான உதவியைத் தருவதாகக் குறிப்பிட்டனர். ஆனால், பாதிப்பேருக்குமேல் மிகக் குறைந்த உதவியைப் பெறுவதாகவும் அல்லது உதவியையே பெறவில்லையென்றும்

[16] R. C. White, 'Estimating Future Demand for Admission to College,' Educational Record, 1953, Vol. 34, pp. 17-24.

[17] P. L. Dressel, 'Role of General Education in Articulation,' Junior College Journal, 1952, Vol. 23, pp. 131-144; H. W. Sturgis, 'Trends and Problems in College Admission,' College and Uuiversity, 1952, Vol. 28, pp. 5-16.

[18] W. H. McCreary and D. E. Kitch, 'Now Hear Youth,' Bulletin of the California State Department of Education, 1953, Vol. 22, No. 9.



படம் 15-2

பள்ளி அவர்களுக்குப் பலவிடங்களில் உதவி செய்திருக்கிறது என்று எண்ணிய முன்னாள் உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் சதவிதம். 'உறுதியாகத் தெரியவில்லை' என்று குறிப்பிட்ட துலங்கல்கள் 3-லிருந்து 10 சதவீதத்திற்குள் இருந்தன. அவை இங்குக் காட்டப்படவில்லை (மெக்ரியரியும் கிட்சும்—McCreary and Kitch).

A மற்றவர்களுடன் நன்றாகப் பழகுதல். B நன்றாக ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறுதல். C கணக்கியல் திறன்களைப் பயன்படுத்துதல். D திறமையுடன் வாசித்தல். E கல்லூரிக்குத் தயார் செய்து கொள்ளல். F தன்னை நன்றாகப் புரிந்துகொள்ளல். G சொந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளுதல். H ஆரோக்கியத்தினைப் பாதுகாத்துக் கொள்ளல். I வணிகப் பிரச்சினைகள். J வேலையினைப் பெறுதல். K சமுதாயப் பிரச்சினைகள். L ஓய்வு நேரச் செயல்கள். M திருமணம். N பணத்தை வைத்துக் கொள்ளுதல்.

குறிப்பிட்டனர். சீனியர் உயர்நிலைப்பள்ளி வகுப்பில் அதிகமானபேர் பள்ளியைவிட்டு நின்றுவிடுவதனுல், பள்ளி 9ஆவது 10ஆவது படிவ நிலைகளில் போதிய அளவுப் பாடங்களைப் பொருத்தமாக அளிக்க வேண்டியது மிக அவசியமான தொன்றும். திருமணம், இல்லம், குடும்ப வரவு செலவுத் திட்டங்கள், குழந்தைகள் ஆகியவைகள்தாம் பள்ளியைவிட்டுச் செல்லுகின்ற இளைஞர்களது கவனத்தைப் பெரிதும் கவர்பவைகளாகும்.

கல்லூரிக்குத் தயார் செய்துகொள்ளுதல்

கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் மாணவர்களது இறப்பு விகிதம் அதிகமாக இருக்கின்றது என்று ஆய்வுகள் காட்டினுலும், ஒரு சிறந்த மாதிரியான உயர்நிலைப்பள்ளித் திட்டம் கல்லூரியில் நன்ருகப் பழகுவதற்காக மிகவும் அதிகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளதேயன்றிப் பல்வேறு வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்காக உண்டாக்கப்பட்டதன்று. உயர்நிலைப்பள்ளித் திட்டத்தினைப்பற்றி கல்லூரி மாணவர்கள் அளித்த துலங்கல்கள் இக் கருத்தினை ஆதரிக்கின்றன. கலிஃபோர்னியா பகுதியைச்சார்ந்த உயர்நிலைப்பள்ளிகளிலிருந்து கல்லூரிக்குச் சென்ற பல பட்டதாரிகளைப்பற்றிய ஆய்வு, அவர்கள் அனைவரும், உயர்நிலைப் பள்ளி அவர்களுக்கு அளித்தவற்றைப்பற்றி மிகவும் திருப்தி அடைந்திருந்தனர் எனக் காட்டியது.[19] பட்டதாரிகளில் மூன்றில் இரண்டு பேர், உயர்நிலைப் பள்ளி அவர்களுக்குக் கல்லூரிக்குத் தயார் செய்து கொள்ள 'மிகவும் உதவியாய்' இருந்ததாயும் குறிப்பிட்டனர். ஆங்கிலம், கணக்கியல், தட்டெழுத்து ஆகிய பாடங்கள் மிகவும் பயனுடையவையாயிருந்ததாகக் குறிப்பிட்டனர்.

கலிஃபோர்னியா ஆய்வில், பட்டதாரிகளில் மூன்றில் ஒரு பங்கினர் கல்லூரிக்கு மாறுகின்ற நிலை மிகவும் கடினமாக இருந்ததாகக் குறிப்பிட்டனர். இப் பட்டதாரிகள் கல்லூரிக்குப் போகும் மாணவர்களுக்கு உதவுமாறு சில கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அவைகள் தனித்த கவனத்தைப் பெறவல்ல நல்ல கருத்துகளாகும்:

நல்ல படிப்புப் பழக்கங்களைப் போதித்தல்

மாணவர்களுக்கு அதிகமான பொறுப்புகளைத் தருதல்

கல்லூரித் திட்டங்களைப் பற்றி அதிகமான செய்தியினை அளித்தல்

கல்லூரி வகையினைச் சார்ந்த பேருரைகளையும் தேர்வுகளையும் அதிகமாகப் பயன்படுத்துதல்

[19] Ibid., pp. 15-18.

குறிப்புகள் எடுக்க வாய்ப்புகள் அளித்தல்

கல்லூரிக்குப் போகின்றவர்களுக்கு உயர்நிலைப் பள்ளி வகுப்பைக் (குறிப்பாக சீனியர் ஆண்டை) கடினமான தாக்குதல்

உயர்நிலைப் பள்ளியில் வழிகாட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தவும், அவற்றிற்கான வாய்ப்பை அதிகரிக்கவும் செய்தல்.

வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்குத் தயார் செய்துகொள்ளுதல்

உயர்நிலைப் பள்ளி இளைஞர்களைக் கல்லூரிக்கும் திருமணத்துக்கும் தயார் செய்வதில் பெற்ற வெற்றியினைப் பற்றி முன்னரே விவாதிக்கப்பெற்றுள்ளது. அதிகாரம் 16-ல் தொழில் உலகிற்கு இளைஞர்களை வழிகாட்டுதல் பற்றியும், தயார் செய்வது பற்றியும் விளக்கப்பெற்றுள்ளது. பள்ளித் திட்டம், மாணவர்களை வாழ்க்கையின் பொதுச் செயற்பாடுகளான படித்தல், பேசுதல், கணக்கியல் திறன்களைப் பயன்படுத்துதல், மற்றவர்களுடன் நன்றாகப் பழகுதல், சொந்தப் பிரச்சினைகளைத் தீர்த்தல், ஓய்வுநேரத்தில் செய்யக்கூடியவை, ஆரோக்கியம், சமுதாய வாழ்க்கை ஆகியவற்றில் சிறப்பான வெற்றிபெற தயார் செய்துள்ளதா என்ற கேள்வி எழலாம்.

படம் 15-2-ல் அளிக்கப்பட்டுள்ள முடிவுகளை ஆய்வுசெய்தால், முன்னாள் மாணவர்கள் மற்றவர்களுடன் சிறப்பாகப் பழகுவதற்குப் பள்ளி சிறந்த உதவி செய்வதாக நம்பினார்கள் என அறியலாம்.[20] பள்ளியின் எந்தத் தனித்த இயல்பு இதற்கு ஆவன செய்தது என்று கூறுவது எளிதானதன்று. ஆனால், சங்கங்கள், விவாதக் குழுக்கள்போன்ற பகுதிகள் பள்ளியின் திட்டத்தில் இருப்பதனால், அவைகளில் மாணவர்கள் திறம்படப் பங்கெடுத்துக் கொள்வார்களேயானால், இத்திறன் வளர்ச்சியுறுவதற்கு மிகவும் உதவியாக இருக்கும் எனலாம். பொதுவாக, மாணவர்கள், அடிப்படைத் திறன்களைப் பள்ளிகள் கற்பிக்கின்றன என்று உணர்ந்தார்கள். சிறுமியர்கள் ஆங்கிலத்தில் பெறும் பயிற்சி உயர்ந்த தரத்தில் இருப்பதாகக் கருதினார்கள். சிறுவர்கள் கணக்கியலில் பெறும் பயிற்சியே உயர்ந்த தரத்தில் இருப்பதாகக் கருதினார்கள்.

படம் 15-2-ல் வரிசைப்படுத்தப்பட்ட வாழ்க்கைச் செயற்பாடுகளில் மாணவர்களைத் தயார் செய்யும் அளவில் பள்ளித் திட்டங்கள் இருக்கவேண்டுமென்றால், அவற்றில் சில குறைபாடுகள் இருப்பதாக முன்னாள் மாணவர்கள் அளித்த தரமிடல்கள் காட்டுகின்றன. முன்

[20] Ibid., p. 21.

னுள் மாணவர்கள் பள்ளியிடமிருந்து பணத்தைச் செலவழித்தல், ஓய்வுநேரச் செயல்கள், சமுதாயப் பிரச்சினைகள், ஒரு வேலையைப் பெறுதல், சொந்தப் பிரச்சினைகளைத் தீர்த்தல் ஆகியவைகளில் மிகச் சிறிய உதவியையே பெற்றதாகக் குறித்தனர். இம் முன்னுள் மாணவர்கள் பள்ளி, தங்கள் வாழ்க்கைச் செயற்பாடுகளைத் தயார்செய்வது குறித்துக் கீழான தரமிடல்களை அளிப்பதற்குப் பல்வேறு காரணங்களைச் சுட்டிக்காட்டலாம். முதற்கண் பாடங்கள், வாழ்க்கைச் செயற்பாடுகளுக்குத் தயார் செய்வதை முக்கியக் குறியாக வைத்து அமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டவை அல்ல. மேலும், ஆசிரியர்கள் இக் குறிகளுக்காகப் பயிற்சி பெற்றவர்கள் அல்லர். காரணம் எதுவாக இருந்தாலும், பள்ளியின் திட்டம் முன்னுள் மாணவர்களுக்கு இப் பகுதிகளில் மிகவும் குறைவான பயனையே அளிப்பதாகத் தோன்றியது.

இளையோர்களின் பள்ளிப் பிரச்சினைகள்

பள்ளியில் தவருன பொருத்தப்பாடுகள்

அதிகாரம் 9-ல் இளையோர்களது வாழ்க்கையில் கல்விப் பிரச்சினைகள் மிகப் பெரிய அளவில் இருப்பதாகக் குறிப்பிடப்பெற்றது. பள்ளியில் தோல்வி, எப்படிப் படிப்பது, ஆசிரியர்-மாணவர் உறவுகள்போன்ற பிரச்சினைகள்தாம் பல உயர்நிலைப் பள்ளிச் சிறுவர் சிறுமியரது வாழ்க்கையில் தோன்றுகின்றன. முன்னர் அளிக்கப்பட்ட கலிஃபோர்னியா வளர்ச்சி ஆய்வுகளின் முடிவுகள், முன்னிளையோர்கள், இளையோர்கள், பின்னிளையோர்கள் ஆகியோர்களில் மிக அதிகமான சதவீதத்தினர் பள்ளி நிகழ்ச்சியில் சிலவற்றை விரும்பவில்லை எனக் கூறினார்கள் எனக் குறிப்பிட்டன. ஆசிரியர்கள் நேர்மையற்ற முறைகளைக் கடைப்பிடித்தல், பகட்டாகவும், அதிகார மனப்பான்மையுடனும், வழக்கத்துடனும் நடந்துகொள்கின்ற உடன்படிப்போர்கள் ஆகியவைகளே அவர்கள் விரும்பாதவைகள். பொதுவாகச் சிறுமியர்களைக் காட்டிலும் சிறுவர்கள் பள்ளித் திட்டத்திலுள்ள பாடத் திட்டத்தின் தொடர்பிலுள்ள இனங்களையே குறியிட்டுக் காட்டினார்கள். பாடங்களில் சுவையின்மையும், அக்கறையின்மையும், பயன்மதிப்பின்மையும் (மாணவரின் கருத்துப்படி) இருப்பதாக 50 சதவீதத்திற்கும் அதிகமான சிறுவர்களும், மிகக் குறைந்த அளவு சிறுமியர்களும் குறித்தனர்.

அதிகாரம் 1-ல் அளிக்கப்பட்டுள்ள மான்டேகு என்பவரது ஆய்வின் முடிவுகள், கீழான சமூக அந்தஸ்திலிருந்துவந்த சிறுவர்சிறுமியர்களில் பெரும் சதவீதத்தினர் பள்ளித் திட்டத்தில் திருப்தியின்மையைக் கொண்டிருந்ததாகக் காட்டுகின்றன. இம் முடிவினை அதிகமான சதவீதத்தினர் பள்ளியினை இடையிலேயே விட்டுவிடுகின்றனர்

என்ற உண்மையுடன் ஒன்று சேர்த்துப் பார்க்கும்பொழுது, இளையோர்களில் பெரும் சதவீதத்தினர் பள்ளியின்மீது திருப்தியின்மையையே கொண்டிருக்கின்றனர் என்ற முடிவுக்கு நாம் உந்தப்படுகின்றோம். கீழான சமூக வகுப்பிலிருந்து வருகின்ற இளையோர்களில் பெரும் சதவீதத்தினர் உயர்நிலைப் பள்ளி உண்மைநிலையை எடுத்துக் காட்டுவதாக இல்லையென்றும், அதனால் சிறிதளவும் பயனில்லை என்றும் கருதுகின்றார்கள் என்று கூறுவதற்குச் சான்றுகள் உள்ளன. ஆசிரியர் சந்திக்கின்ற மாணவர்களது பிரச்சினைகளைப்பற்றி ஆய்வு நடத்திய நார்ட்டன் (Norton) என்பவர், அப் பிரச்சினைகளை மூன்று பெரிய குழுக்களில் வகைப்படுத்தலாம் எனக் குறிப்பிடுகின்றார்.[21] அவைகளாவன:

(1) பள்ளித் தொடர்பிலுள்ள பிரச்சினைகள்

(2) பள்ளித் தொடர்பில்லாத பிரச்சினைகள்

(3) பள்ளிக்குப் பின்னுள்ள வாழ்வின் தொடர்பிலுள்ள பிரச்சினைகள்

அட்டவணை 15—8, ஓர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் குழுவினர் இப் பகுதிகளில் சந்தித்த வழிகாட்டல் பிரச்சினைகளின் சதவீதத்தினையும் எண்ணிக்கையையும் காட்டுகின்றது. பிரச்சினைகள் கீழ்க்கண்டவாறு பிரித்துக்கொள்ளப்பட்டன :

1. பள்ளித் தொடர்பிலுள்ள பிரச்சினைகள்—பள்ளி நிகழ்ச்சிகளிலிருந்து நேரடியாக எழுகின்ற அல்லது அவைகளைச் சார்ந்து எழுகின்ற பிரச்சினைகளான படிக்கத் தேர்ந்தெடுக்கும் பாடங்கள், பாடங்கள் கடினமாய் இருத்தல், பாடத்திட்டத்திற்கு வெளியே உள்ள செயல்கள், பள்ளியில் குடிமைப் பயிற்சி ஆகியவை.

2. பள்ளித் தொடர்பில்லாத பிரச்சினைகள்—இவை பள்ளிக்கு வெளியே மாணவர்களது வாழ்க்கையைப் பற்றியவையாகும். இவை பள்ளி நிகழ்ச்சிகளினால் விளைந்தவையல்ல. இவை இல்லங்கள், குடும்பங்கள், நண்பர்கள், அவர்களது பொருளாதார நிலைகள், அவர்களின் ஆரோக்கியம் பற்றிய பிரச்சினைகளாகும்.

3. பள்ளிக்குப் பின்னுள்ள வாழ்வின் தொடர்பிலுள்ள பிரச்சினைகள்—மாணவர்களது தொழில் தேர்ந்தெடுத்தல்கள் பற்றிய பிரச்சினைகளும் உயர்நிலைப் பள்ளிக்குமேல் இருக்கின்ற கல்வி நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கின்ற பிரச்சினைகளுமாகும்.

[21] S. K. Norton, 'Student Problems met by the Teacher,' School Review, 1948, Vol. 51, p. 404.

அட்டவணை 15—8

1,586 உயர்நிலைப் பள்ளி மாணவர்களால் சந்திக்கப்பெற்ற 4,682 வழிகாட்டல் பிரச்சினைகளை முக்கியப் பிரிவுகளாக வகைபடுத்துதல் (நார்ட்டன் அளித்தது).

பொருள் வகை	எண்ணிக்கை	சதவீதம்
1. பள்ளித் தொடர்பிலுள்ள பிரச்சினைகள்	1,676	35·8
2. பள்ளித் தொடர்பில்லாத பிரச்சினைகள்	1,822	38·9
3. பள்ளிக்குப் பின்னுள்ள வாழ்வின் தொடர்பிலுள்ள பிரச்சினைகள்	1,184	25·3
மொத்தம் ...	4,682	100·00

54 மிச்சிகன் சமுதாயங்களிலுள்ள குழுவினரில் பாதிப்பேருக்கு மேல், பள்ளித் தொடர்பிலுள்ள பிரச்சினைகளில் பாடங்களைத் தேர்ந்தெடுக்கின்ற பிரச்சினை, முதல் தரத்தினைப் பெற்றிருந்தது. ஆசிரியரால் இப்பிரச்சினை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படல் வேண்டும். சாதாரணமாக 'முக்கியம்' என்று கருதப்படுவதைக் காட்டிலும் இதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும். ஏனெனில், பலரது நிலைகளில் அது, ஒரு மாணவன் அவன் தேர்ந்தெடுக்கின்ற கல்லூரிக்குச் செல்லமுடியுமா என்பதைத் தீர்மானிக்கின்றது. இது அவனுடைய வாழ்க்கை முழுவதையும் பாதிக்கின்றதொரு பிரச்சினையாகும். அடுத்த முக்கிய இனம், பாடங்கள் கடினமாய் இருப்பதனால் ஏற்படும் தொல்லைகளாகும். குறைவான அடைவு, மோசமான படிக்கும் பழக்கங்கள், வேலையை ஈடுசெய்கின்ற திறன், வாசிக்கும் தொல்லைகள், அக்கறையின்மைபோன்ற பிரச்சினைகள் இவ்வினத்துடன் சேர்ந்துள்ளன. பள்ளிக் குடிமைப் பயிற்சி, ஆசிரியரின் கருத்துப்படியும், மாணவனது கருத்துப்படியும் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். இவ்வதிகாரத்தின் துவக்கத்தில், இளையோர்களைத் தொல்லைப் படுத்தும் பள்ளி நிகழ்ச்சிகளின் தொடர்பில் பள்ளிக் குடிமைப் பயிற்சியும் ஒன்றாக விவாதிக்கப்பெற்றது. பொதுவாக, பள்ளிக் குடிமைப் பயிற்சிபற்றிய பிரச்சினைகளில் பெரும்பான்மையானவை முழுதும் தள்ளிவிடக்கூடிய வகையினைச் சார்ந்தவை அல்ல. அவைகள் பள்ளியறையின் செயல்களையும் நூல்நிலையத்தின் செயல்களையும் அதிகமாகத் தொந்தரை செய்யா என்றாலும், அவை எங்கு நடந்தாலும் அவற்றிலிருந்து விளைகின்ற தவறான பொருத்தப்பாடுகளின் காரணமாக மனவெழுச்சித் தொல்லைகள் விளைவதைக் காணலாம்.

பள்ளியில் வெற்றியடைகின்ற குழந்தை மாதிரிக் குழந்தையாகக் கருதப்படுகிறது. அவ்வாறான வெற்றி, சக்தி, எளிதில் மறக்காத தன்மை, இசைவான உந்துகள், நல்ல மனப்பழக்கங்கள், மனச்சக்திகள் ஆகிய குணங்களைச் சிறப்பாகப் பெற்றிருப்பதனால் விளைவதாகக் கருதப்படுகின்றது. பல நிலைகளில் இவை உண்மையாக இருக்கலாம் என்பதில் ஐயமில்லை. ஆனால், இவ்வாறான ஒரு வெற்றி நல்ல சமநிலை ஆளுமையினை இழப்பதனால் பெறப்படுகின்றது என்றால், அதனால் அபாயமே விளையும். ஆதலால், இவ்வாறான நிலைகளை ஐயத்துடன் நோக்கவேண்டும். இந்நூலாசிரியரின் கவனத்திற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னால் வந்த ஒரு சிறுமியின் வரலாறு இதனை நன்றாக விளக்குகின்றது.

ஜோசபின் என்று இங்குக் குறிக்கப்படுகின்ற ஒரு சிறுமி, எப்பொழுதுமே நல்ல மாணவியாகத் திகழ்ந்துவந்தாள். பள்ளியில் அவள் வேலைபற்றி மிகவும் மகிழ்ச்சிகொண்டாள். அவள் தன்னுடைய நேரத்தினைப் பெரும்பாலும் கொடுக்கப்பட்ட பாடங்களில் வேலைசெய்வதற்கே செலவிட்டாள். அவளது 6ஆவது படிவ வகுப்பில் இருந்த 30 மாணவர்களில் அவள் மூன்றாவது இடத்தில் இருந்தாள். அவள் ஸ்டோன் போர்டின் திருத்தியமைக்கப்பட்ட பினே சோதனையின்படி 107 நு. ஈவினைப் பெற்றிருந்தாள். சாதாரண நு. ஈவினையே பெற்றிருந்ததால், அவள் அந்நிலையினையுடைய தன்னுடைய நேரத்தின் பெரும் பகுதியைப் பாடங்களைப் படிக்கவே செலவழித்தாள். அப்பொழுதுதான் அவளால் தன்னுடைய 3ஆவது வகுப்பு நிலையைப்பெற முடிந்தது. அவளுடைய கருத்து அந்நிலையினை அடைவதிலேயே இருந்தது. அவளுடைய பெற்றோர்களும், நண்பர்களும், சுற்றத்தாரும் அவளது பள்ளி வேலையினைப் பற்றிச் சிறப்பாகப் புகழ்ந்தது அவளது முயற்சியை மேலும் தூண்டியது. இக்காலத்திலிருந்து 5 ஆண்டுக் காலத்திற்கு அவளை உற்றுநோக்கியதில் அறிந்தது என்னவெனில், அவள் வளர்த்துக்கொள்ளவேண்டிய சமூகக் குணங்களை வளர்த்துக்கொள்ளவில்லை என்பதேயாகும். அவள் மிகக் குறுகிய அளவு அக்கறைகளையே கொண்டிருந்தாள். அவளது பள்ளி வேலையில் அவள் தலைமை தாங்கியிருந்தாலும், அவளுடைய வகுப்பிலிருந்த பெண்கள்குழுவிற்கு அவள் தலைமைதாங்கவில்லை. அவள் தன்னுடைய ஆரோக்கியத்திற்கோ, சொந்தத் தோற்றத்திற்கோ போதிய அளவு கவனிப்பினை அளிக்கவில்லை. அவளால் கல்லூரிக்குப் போக இயலும் என்பது சாத்தியமாக இல்லை (அவள் இந்தக் கடின உழைப்பினைக் கல்வியில் தொடர்ந்து செய்தாலொழியச் சாத்தியமில்லை). அவள் ஒரு பிரச்சினைப் பெண் (problem girl) அல்லவென்றாலும், அவளுடைய பல இயல்புகளை அவள் வளர்த்துக்கொள்ளவில்லை என்பது குறையே ஆகும். அவ்வாறு வளர்த்துக்கொண்டிருந்தால், அவள்

கூடினமான நிலைகளை எளிதில் தீர்த்துக் கொள்ளவும், மற்றவர்களுடன் நன்றாகப் பழகவும், அவள் வாழ்க்கையில் புதிதாகச் சந்திக்க இருக்கின்ற குழுக்களுடன் சிறப்பாகத் தன்னைப் பொருத்திக்கொள்ளவும் சாத்தியமாமாகியிருக்கும்.

பள்ளித் தொடர்பில்லாத பிரச்சினைகள் அண்மை ஆண்டுகளில் அதிகமான முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன. உயர்நிலைப் பள்ளி மாணவனது நடத்தை, பெரும்பாலும் அவன் பள்ளிச் சூழ்நிலைக்கு வெளியே சந்திக்கின்ற சக்திகளாலும் நிலைமைகளாலும் பெருமளவு பாதிக்கப்படுகின்றது. சிறுவன் அல்லது சிறுமி வருகின்ற இல்லத்தின் சமூகச் சூழ்நிலை இன்பமானதாகவோ நன்மை பயக்கத் தக்கதாகவோ இருப்பதும், அவனோ அவளோ வருகின்ற இல்லத்தின் சமூகச் சூழ்நிலை துன்பமானதாகவோ நன்மை பயக்கத்தக்க நிலையிலோ இருப்பதும் அவர்களிடத்தே மிகுந்த மாறுதலை உண்டாக்கக் கூடியவையாகும். பள்ளி அதிகாரிகளுக்கு இல்லத்தினின்றும், சமுதாய நிலைகளினின்றும் எழுகின்ற பிரச்சினைகளை ஆராய்ந்து அறிவது அவ்வளவு எளிதான காரியமல்ல என்றாலும், இந்நிலைமைகளைப் பற்றி அறிந்திருந்தால், அவர்களால் பள்ளிக்கு வெளியே ஏற்படுகின்ற நிகழ்ச்சிகள், நிலைமைகளிலிருந்து எழுகின்ற இளையோர் பிரச்சினைகளைச் சிறப்பாக அறிவதற்கு இயலும்.

பள்ளியைவிட்டுச் செல்கின்ற மாணவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளில் மிக முக்கியமானவை தொழில் தேர்ந்தெடுப்பும் தொழில் வாய்ப்புகளுமேயாகும். தொழில் வழிகாட்டலுக்கும், பின்பற்றிச் செய்யும் ஆய்வுகளுக்கும் உள்ள முக்கியத்துவத்தினை ஆசிரியர்களும் மாணவர்களும் உணர்கின்றனர். அதிகாரம் 16-ல் இதன் தொடர்பிலுள்ள சில முக்கியப் பிரச்சினைகள் விவாதிக்கப்படும்.

வகுப்பில் தேருததனுல் ஏற்படும் விளைவுகள்

பள்ளித் தரங்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற கருத்து படிப்படியாக மாறி, தனித்த மாணவர்களுக்கே முதல் கவனத்தை அளிக்கவேண்டும் என்ற கருத்துத் தோன்றியுள்ளது. உண்மையில், சிலரது நிலைகளில் ஒரு பாடத்தினைத் திரும்பப் படிப்பது இசைவான திட்டமாக இருக்கலாம். பொதுவாக மாணவன் ஒரு சாதாரண நல்ல பொருத்தப்பாட்டினையுடைய மாணவனாக இருந்தும், மிக அதிகமான அளவில் பள்ளிக்கு வராதிருந்தால், விபத்து நிலைகளினால் அல்லது அவனுடைய உடல்நலக் குறைபாடுகளினால் திறமைக்கேற்ற வளர்ச்சிபெற இயலாமலிருந்தால், திரும்பப் படிக்கின்ற திட்டம் இசைவானதேயாகும். ஆனால், பொதுவாக, முதலில் பாடத்தைப் படிக்கும்பொழுது மோசமான கற்றலை விளைவித்த ஏதுக்கள் திரும்பவும் படிக்கும்பொழுது மீண்டும் தோன்றுகின்றன.

ஒரு பாடத்தை மீண்டும் திரும்பப் படிப்பதனைக் குறித்து எழுப்பப் படுகின்ற மற்ருெரு மறுப்பு என்னவெனில், எது தனித்த மாணவனது சொந்த, சமூக விளைவுகளைப் பாதிக்கின்றது என்பதாகும். வகுப்பில் தேருத மாணவர்களுக்குக் குறைந்த அளவு நண்பர்களே இருக்கின்ருர்கள். வகுப்பில் தேறிய மாணவர்களைக் காட்டிலும், குறைந்த புகழினையே உடன்படிப்போரிடமிருந்து பெறுகின்றனர்.[22] பின்தங்கியுள்ள குழந்தைகள் அவர்களது உடன்படிப்போரைக் காட்டிலும் வயதானவர்களாதலின், சராசரியாக அவர்கள் பெரியவர்களாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். இருப்பினும், ஆசிரியர்கள் அவர்களைப் பெரும்பான்மையான பண்புக்கூறுகளில் குறைந்தவர்களாகவே தரமிடுகின்றனர்.[23]

கல்வியறிவுரை வழங்கல், தனித்த மாணவர்களது திறமைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறும், கல்வியில் அவர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்துக்கு ஏற்றவாறும் இருக்கவேண்டும். மாணவர்களுக்கு வழங்குதல் திறம்பட இருக்கவேண்டுமாயின், திறமைகளுக்கு ஏற்றவாறு அடைவினைப் பெருத மாணவர்களது குறைவான அடைவுகளுக்குரிய காரணங்களைப்பற்றி ஆசிரியர்களும், அறிவுரையளிப்பவர்களும் அறிந்திருக்க வேண்டும்.

சிரீன் (Serene) என்பவர் ஓர் உயர்நிலைப் பள்ளி மாணவர் குழுவின் குறைவான அடைவிற்குரிய முக்கியக் காரணங்களை நேரடி உரையாடல்கள் மூலமும், அவர்களது அறிக்கைகளைப் பகுத்தாய்வதன் மூலமும் அறிந்தார்.[24] அட்டவணை 15-9-ல் இக்காரணங்கள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன. காரணங்களின் பட்டியல், உயர்நிலைப் பள்ளிகள், மாணவர்களுக்கு அவர்கள் பெறக்கூடிய அடைவு நிலையினைப் பெறுவதற்கு உதவவேண்டுமென்ருல், சந்திக்க வேண்டிய பிரச்சினைகளையும் அது கொண்டிருக்கவேண்டும். இப்பிரச்சினையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவை வகுப்புத் தரங்கள், வகுப்பில் தேறுதல் எனும் ஆசியர்களுக்கு இடைவிடாத தொல்லையினை அளிக்கின்ற பிரச்சினைகளாகும்.

[22] See R. D. Anfinson, 'School Progress and Pupil Adjustment,' Elementary School Journal, 1941, Vol. 41, pp. 507-514; C. Saunders, 'Promotion or Failure for the Elementary Pupil', Bureau of Publications, Teachers College Columbia University, 1941.

[23] A. R. Mangus, 'Effects of Mental and Educational Retardation on Personality Development of Children,' American Journal of Mental Deficiency, 1950, Vol 55, pp. 208-212.

[24] J. W. M. Rothney, 'The High School Student,' New York: The Dryden Press, 1953, pp. 103-108.

கல்வியில் தவறான பொருத்தப்பாடுகளைக் கொண்ட தனியாள் வரலாறுகள்

இங்கு அளிக்கப்பட்டுள்ள இரு தனியாள் வரலாறுகளை எச்சரிக்கையுடன் ஆய்வுசெய்தால், கல்வியில் தவறான பொருத்தப்பாடுகளை ஏற்படுத்துகின்ற பல ஏதுக்களைப்பற்றி நன்றாகப் புரிந்துகொள்ளலாம்.

அட்டவணை 15-9

உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் குறைவான அடைவினைப் பெற்றிருந்ததன் காரணங்கள் (சிரீன் அளித்தது)

காரணம்	ஏற்படும் அளவு
சரியாகப் படிக்கவில்லை	78
மோசமான திட்டமும் அமைப்பும்	56
தொலைக்காட்சி (TV)	32
அறிவியல் உணர்வு இல்லை	28
பாடங்களில் கொள்ளும் வெறுப்பு	22
ஆரோக்கியமும், மற்ற உடற்காரணங்களும் ...	18
பெற்றோரின் அக்கறையின்மை	18
சமூக ஈடுபாடுகள், நடனம், சறுக்குதல் முதலியன	17
இல்லத்தில் படிக்க இடமில்லை	17
இல்லத்திற்கு வெளியே வேலை இருந்தது ..	16
மோசமான இல்ல நிலைகள், பெற்றோர்கள் விவாகரத்து செய்துகொண்டிருந்தனர் அல்லது பிரிந்திருந்தனர்	15
பாடத்திற்கு வெளியேயுள்ள பள்ளி ஈடுபாடுகளில் அதிக ஈடுபாடு	9
மோசமான பள்ளி அறிக்கைப் பின்னணி... ...	8
மோசமான வாசிக்கும் பழக்கங்கள்	7
ஆசிரியர்கள் மீது வெறுப்பு	6

தனியாள் வரலாறுகள்

சோனியாவின் வரலாறு[25]

சோனியாவை வகுப்பில் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தது. அவளுடைய சீனியர் உயர்நிலைப் பள்ளி ஆண்டுகளில் அரைநாள் வகுப்புகளில் சுமார் 51 நாட்களுக்கும் சமமான அளவு நாட்கள் வீட்டில் தங்கியிருந்தாள். பள்ளியில் இருக்கும்பொழுது பள்ளி விதிகளை ஆசிரியர்கள் அறியாதவகையில் மீறி நடப்பதில் கைதேர்ந்தவளாக இருந்தாள். ஏதாவது ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டு அங்குமிங்கும் சுற்றிக்கொண்டு இருப்பாளேயன்றி அவளுடைய இடத்தில் தங்கியிருக்கமாட்டாள். வெளியே செல்லும் அனுமதித்தாள்களுடன் அவளை எல்லா அறைகளிலும் காணலாம். நூல்நிலையம், தட்டெழுத்து அறை, தாதியின் அலுவலகம், அல்லது கட்டடத்தின் ஏதாவது ஓர் அறையில் அவளைக் காணலாம். அவளுக்கு அளிக்கப்படும் பணிகளைச் செய்யத் தவறுவாள். பணியீட்டு நிறைவு ஏடுகளைத் தர வேண்டிய நாட்களில் வகுப்புகளுக்குச் செல்லமாட்டாள். ஆதலின், வேலை செய்யாதிருக்கும்பொழுது தப்புவதற்கு அவ்வழியைக் கடைப்பிடித்தாள். ஒரே ஓர் ஆசிரியர்மட்டும் அவள் என்ன செய்து வருகின்றாள் என்பதை நன்றாக உணர்ந்து அவளுக்குத் தோல்வித் (F) தரமிடலை அளித்தார். அவள் அடிக்கடி தோல்வியடையும் நிலைக்கு மிக நெருங்கிய நிலைக்கு வந்தாள். அவளுடைய வகுப்பிலிருந்த 353 பேரில் 329ஆவது தரத்தினையே அவள் பெற்றிருந்தாள். படம் 15—3-ல் சோனியா பெற்ற தரங்களைக் கொண்ட பட்டியல் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தரத்திற்கும் அருகிலே அளிக்கப்பட்டுள்ள எண்ணிக்கைகள் முயற்சியின் அளவைக் குறிக்கின்றன. (1) உயர்ந்த, (2) சராசரி, (3) கீழான.

சோனியாவின் முயற்சியில் ஒரு பருவத்தில் மட்டும் ஒரே ஒரு பாடத்தில் சிறந்தவளாகத் தரமிடப்பட்டுள்ளது. அவள் எழுத்தர் பயிற்சிப் பாடங்களைத் துவங்கினாள். ஏனெனில், அவள் அந்த ஆசிரியரை விரும்பியதாலும், அந்தப் பாடம் செய்முறையில் பயனுள்ளதாலும், அதில் வேலைசெய்யத் துவங்கினாள். இரண்டாவது பருவத்தில் அந்த வேலை அவளுக்கு அதிக வேலையைத் தந்ததால், அவளது அக்கறை குறைவடைந்து அவளுடைய பழய பழக்கங்களுக்குத் திரும்பிச் சென்றாள். சோனியா, தன்னுடைய பாடங்களைப்பற்றியும் ஆசிரியர்களைப்பற்றியும் மிகவும் திட்டமான எண்ணங்களைக் கொண்டிருந்தாள். அவள் வணிகக் கணக்குப் பாடத்தினை

[25] J. W. M. Rothnev, 'The High School Student' New York : The Dryden Press, 1953, pp. 103-108.

பாடம்	படிவங்கள் 9		10		11		12	
ஆங்கிலம்	C^2	C^2	D^2	C^2	D^2	F	—	D
அமெரிக்க வரலாறு					D^2	D^2		
குடிமை	C^2	C^2						
அமெரிக்கப் பிரச்சினைகள்							D^2	C
குறிக்கணக்கியல்	D^2	D^2						
வடிவ கணிதம்			C^2	D^2				
உயிரியல்					D^2	D^2		
உடற் கல்வி	தேறினாள்		தேறினாள்		தேறினாள்		தேறினாள்	
இல்லப் பொருளாதாரம்							C^2	
தட்டெழுத்து					C^2	D^2	C^2 கைவிட்டு விட்டாள்	
சுருக்கெழுத்து					D^2	D^2		
சிறு வணிகம்	C^2	C^2						

படம் 15—3

உயர்நிலைப் பள்ளியில் சோனியா தங்கியிருந்த நான்கு ஆண்டுகளில் பெற்ற மதிப்பெண்கள்

விரும்பினாலும் அந்த ஆசிரியரை விரும்பவில்லை. வடிவ கணிதம் பிடிக்காவிட்டாலும், அதனை நடத்தும் ஆசிரியரை அவளுக்குப் பிடித்திருந்தது. அவளுக்கு அளிக்கப்பட்ட அமெரிக்கப் பிரச்சினைகள்' வகுப்பிற்குப் போக ஒரு வாரம் முழுதும் மறுத்தாள். ஏனெனில், அவளுக்கு அதை நடத்திய ஆசிரியரைப் பிடிக்கவில்லை. அவளுக்கு வேறு வகுப்புக்கு மாற அனுமதி கிடைக்கவில்லை என்றால் அவளுடைய வகுப்புடன் பட்டம் பெறுதலைக்கூட இழந்திருப்பாள். அவள் வரலாறுமீது வெறுப்புக்கொண்டிருந்தாள். ஏனெனில், அது மிகக் கடினமாக இருந்ததாலும், அவ்வகுப்பில் அவள் கடினமாக உழைக்காததாலும் வரலாறுமீது வெறுப்புக்கொண்டிருந்தாள். அவள் துரிதச் சோதனைகளின் காரணமாகத் தட்டெழுத்தையும் வெறுத்தாள். ஒரு தவறுகூட, அதில் அவளைப்பற்றித் தவறாகக் கருத இடம் தருமாதலால் அதில் மிக நடுக்கம் கொண்டு மன உரமில்லாத தன்மையைப் பெறுவதாகக் கூறினாள். அவள் சுருக்கெழுத்துப் பயிற்சியைக் கைவிடவேண்டிய அவசியத்திற்குள்ளானதாகக் கூறினாள். ஏனெனில், அவளால் வகுப்பிலுள்ள மற்ற உறுப்பினர்களது வேகத்துடன் இணைந்து செல்ல இயலவில்லை. அவள் ஒரு பாடத்தில் தோல்வி அடைவதையே விரும்புவாளேயன்றி, அதில் ஒரு வாய்மொழியான அறிக்கையினைப் பெற விரும்பவில்லையென்று குறிப்பிட்டாள்.

வகுப்புகளில் அவள் கொண்ட நடத்தைவகை மற்றச் செயல்களுக்கும் கொண்டு செல்லப்பட்டது. தொழில் அனுபவத் திட்டத்தின்கீழ், பள்ளி அறிக்கைக்காக அவளை ஓர் அலுவலகத்தில் பணிபுரிய அனுப்பப்பட்டபொழுது, அவள் அங்கிருந்த செங்கல் தரைகளையும், அறையிலிருந்த பச்சைநிற விளக்குகளையும் விரும்பவில்லை. அங்கு அவளுடன் வேலை செய்பவர்களை அவளுக்குப் பிடிக்கவில்லை' ஏனென்றால், 'அவர்களெல்லோரும் ஒல்லியாக இருந்தனர். நான் ஒல்லியாக இல்லாததால் என்னை அவர்களுக்குப் பிடிக்கவில்லை' என்று குறிப்பிட்டாள். அவளுக்குக் கடையில் எழுத்தராகப் பகுதி நேர வேலைசெய்யப் பிடிக்கவில்லை. ஆதலின், அதனைத் துவங்கிய உடனேயே கைவிட்டுவிட்டாள்.

அவளுடைய நண்பர்கள் அவளை எவ்வாறு வர்ணிப்பார்கள் என்று அவளைக் கேட்டபொழுது, சோனியா, அவர்கள் தன்னைச் சுயநலமுடையவள் என்றும், தன்னுடைய விருப்பப்படியே நடப்பவளென்றும் கூறுவார்கள் என்றும் கூறினாள். அவளுடைய நண்பர்களிடம், அவர்களைப்பற்றி அவள் என்ன நினைக்கிறாள் என்று சொல்வதை நிறுத்திய பின்னர் அவர்களிடம் நன்றாகப் பழக முடிகின்றது என்று கூறினாள். அவள் ஒரு விலையுயர்ந்த காரினைக் கொண்டிருந்த ஒரு சிறுவனது கவனங்களுக்கு ஆதரவு அளித்து வந்தாள். அவ

னுடன் வெளிச்செல்வது எந்த ஒரு தீவிரமான எண்ணமும் இல்லாமல் செய்யப்படுவதாகத் தெரிவித்தாள். அவனிடமிருக்கின்ற ஏராளமான பணத்தைக்கொண்டு சில உரிமைகளைப் பெறுவதற்கே வெளியில் உடன் செல்வதாகவும் தெரிவித்தாள். அவனுக்குத் தெரியாமல் மற்றச் சிறுவர்களுடன் நாளிடல்கள் கொள்வதாகவும் தெரிவித்தாள். அவள், தன்னுடைய பெற்றோர்களுடன் அடிக்கடி சண்டையிட்டாள். இல்லத்தில் அவள்வழியே செல்லுவதற்கு அனுமதி இல்லாததால் மிகவும் துன்பப்பட்டாள். இளம் சிறுமியர்களது உடற்பயிற்சி வகுப்பிற்கு அவள் தலைவியாக இருந்ததைக் குறித்து மிகவும் பெருமைப்பட்டாள். ஏனெனில், அவளால் அதிகாரம் செய்ய முடிந்தது. அவளைப்பற்றிய புனைபெயரான 'சிடுமூஞ்சி' என்பது அவளுக்குப் பொருத்தமாகவே இருந்தது.

அவளுடைய நண்பர்களுடன் அடிக்கடி சண்டையிட்டாலும் அவளுடைய செயல்கள் அனைத்தும் சமூக இயல்பினைக்கொண்டே இருந்தன. அவள் சிறிதளவு தையல் வேலையில் ஈடுபட்டாலும், அந் நிகழ்ச்சியில் மிகவும் பொறுமை இழப்பதாகக் குறிப்பிட்டாள். குறைந்த அளவே படித்தாள். இளைஞர் கழகத்தில் ('என்னுல் அவர்களுடன் சிறப்பாகப் பொருந்தி அமைய இயலவில்லை') நடந்த எல்லா நடனங்களுக்கும் சென்றுள். சமூக விருந்துகளிலெல்லாம் அவள் பள்ளியிலுள்ள அமைப்புகள் அவளுடைய கவனத்தைக் கவரவில்லை. அவள் ஒரே ஒரு குழுவில்மட்டும் சேர்ந்தாள். 'அமெரிக்காவின் எதிர்கால வணிகத் தலைவர்கள்' என்னும் கழகத்தில் உறுப்பினராவது எல்லா வணிக வகுப்பு மாணவர்களுககும் கட்டாயமானதால் அதில் உறுப்பினளாக இருந்தாள். ஒரே ஒரு நெருங்கிய தோழிமட்டும் அவளுடன் எல்லாச் சமூக ஈடுபாடுகளிலும் பங்கெடுத்துக் கொண்டாள். அவளும் சோனியாவைப் போன்றே ஓர் உருக்கொடுப்பவளாகப் (model) பணியாற்ற விரும்பினுள்.

டெட்டியின் வரலாறு[26]

வகுப்பிலுள்ள மாணவர்களில் மிகவும் வலிமையானவனை டெட்டி, குண்டு எறிதல், வளையத்தட்டு எறிதல் ஆகிய விளையாட்டுகளில் காட்டுகின்ற திறமையினுலும், கால்பந்து விளையாட்டில் மிகவும் தீவிரமாகத் தடுக்கின்றவனுக இருந்ததாலும், எல்லோரும் அறிந்தவனுக இருந்தான். கல்விப்பாடங்களில் அக்கறையில்லாதவனுகவும், 'பள்ளியில் அதிக நேரம் உட்கார வைத்திருப்பதில்' மகிழ்ச்சியற்றவனுகவும் டெட்டி இருந்ததனுல் பள்ளியைவிட்டு இடையிலே நின்றுவிடுபவர்களில் ஒருவனுகக்கூட இருந்திருப்பான்.

[26] Ibid., pp. 61-66.

பாடங்கள்	படிவங்கள் 9		10		11		12	
ஆங்கிலம்	D^2	B^2	D^2	C^2.	C^2	C^2	C^2	C
அமெரிக்க வரலாறு					D^2	C^1		
குடிமை	C^2	D^2						
அமெரிக்கப் பிரச்சினைகள்							C^2	D
குறியீட்டுக் கணக்கியல்					C^2	D^2		
உயிரியல்			C^1	C^1				
பௌதீகம்							C^2	C
உடற் கல்வி	தேறினான்		தேறினான்		தேறினான்		தேறினான்	
விவசாயம்	D^1	C^1						
தொழிற்கலைகள்	C^2	D^2						
தச்சுவேலை			D^3	D^3				
இயந்திர வரைபடம்			D^2	D^1	C^2	C^2	D^2	D

படம் 15—4

உயர்நிலைப்பள்ளியில் டெட்டி தங்கியிருந்த நான்கு ஆண்டுகளில் பெற்ற மதிப்பெண்களைக் காட்டும் அறிக்கை

பல சமயங்களில் அவன் தனது நண்பர்களது பேச்சைக் கேட்டுப் பள்ளியைவிட்டு நின்று, மேற்குப் பகுதிக்குப் போய்விடுவான் போலிருந்தது. ஆனால், அவன் தன்னுடைய பட்டத்திற்காகக் கஷ்டப்படுவதெனத் தீர்மானித்தான். அவன் பள்ளியில் நான்கு ஆண்டுகள் தங்கிவிட்டுத் திரும்பிச் செல்லும்பொழுது, தான் தங்கியிருந்த

ளுல் பெற்ற அறிவினைப்பற்றி ஐயமுற்ருன். தன்னுடைய எதிர்காலத்தைப்பற்றியும் முடிவானதொரு எண்ணம் கொண்டிருக்கவில்லை.

டெட்டி பள்ளியின்மீது அக்கறை குறைவாகக் கொண்டிருந்ததன் காரணத்தை அவனுடைய வாசிப்பிலிருந்தும் வார்த்தைகளைப் பயன்படுத்துவதிலுள்ள தொல்லையிலிருந்தும் காணலாம். அவனுடைய சோதனை மதிப்பெண்களை அவன் பார்த்தபொழுது அவனைப் பற்றி அவன் கொண்டிருந்த எண்ணத்தை அது வலியுறுத்தியது. அவன் ஆங்கிலம் ஒரு பாடமாக இருந்ததைக் கண்டு மிகவும் கவலையுற்ருன். 'நான் கதைகளிலும், கவிதைகளிலும் அக்கறைகொண்டிருக்கவில்லை. கதைகளையும் கவிதைகளையும் படித்து அதைப்பற்றி ஏன் வகுப்பில் பேசவேண்டும் என்று எனக்குப் புரியவில்லை' என்று கூறினுன். அவன் தச்சு வேலை வகுப்புகளையும் வெறுத்தான். ஏனெனில், இங்கும் எழுத்துச் சோதனைகளாலேயே மதிப்பெண்கள் அளிக்கப்பட்டனவேயன்றி, தச்சுவேலையில் அவன் பெற்ற திறனுக்காக மதிப்பெண் அளிக்கப்படவில்லை.

படம் 15-4-ல் டெட்டி பெற்ற மதிப்பெண்களின் பட்டியல் அளிக்கப்பட்டுள்ளது. அவனுடைய பள்ளிச் செயற்பாடுகள் விளையாட்டுகளில்மட்டுமே இருந்தன. அவன் ஓட்டப் பந்தயக் குழுக்களிலும் கால்பந்துக் குழுக்களிலும் மூன்ருண்டுகளாக உறுப்பினனுக இருந்தான். அவன் இசைக்குழுவில் இருக்கப் பெரிதும் விரும்பினுன். ஆனுல், விளையாட்டுகளுக்கு அதிகநேரம் செலவிட வேண்டியிருந்ததால் அதில் அவனுல் சேர இயலவில்லை. ஆனுல், அவன் மற்ற அமைப்புகளின் அழைப்புகளை ஏற்றுக்கொள்ளவில்லை. மற்றப் புதிய பள்ளிச் செயற்பாடுகளில் எவை அவனைக் கவரும் என்று வினவியதற்கு 'கார் ஓட்டுதலுக்கான பாடங்களும் துப்பாக்கியால் சுடுகின்ற பாடங்களும்' என்று பதிலளித்தான்.

டெட்டியினுடைய ஓய்வுநேரமனைத்தும் அவனிடமிருந்த மோட்டார் சைக்கிளை ஓட்டுவதிலேயே கழிந்தது. அதனை அவனுடைய சொந்த சம்பாத்தியத்திலுலேயே வாங்கினுன். மோட்டார் சைக்கிளை ஓட்டுவதும், விளையாட்டுகளில் பங்கு பெறுவதும் அவனுடைய பள்ளிக்குப் பின்னுள்ள நேரத்தினை எடுத்துக்கொண்டன. விளையாட்டுப் பயிற்சிகளும் வாரத்திற்கு 15 மணிநேர வேலையும் அவனுடைய பள்ளிக்குப் பின்னுள்ள நேரத்தில் இடம் பெற்றிருந்தன. அவன் தன்னுடைய ஓய்வு நேரங்களில் கால்பந்து, நீந்துதல், பனிக்கட்டியில் சறுக்குதல் ஆகியவற்றில் அவை அளிக்கப்பட்டுள்ள வரிசைப்படி பங்குபெற விரும்பினுன். நடனமாடுதலும், கால்நடையாக ஊர் சுற்றுதலும் எப்பொழுதாவது அவன் செய்ய விரும்பிய அக்கறைகளாகும்.

அதிகாரச் சுருக்கமும் கல்விக் கருதுகோள்களும்

நாம் வாழ்கின்ற உலகின் நவீனப் பொறியியல் காலம், பள்ளிகளின்மீது அதிகமான பொறுப்பினைச் சுமத்தியுள்ளது. சிலர், நாம் கல்வி, குழப்பம் ஆகிய இரண்டுக்குமிடையே உள்ள ஓட்டப்பந்தயத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ளனர். மற்றவர்கள் சடக் கொள்கையினைப் பற்றி அஞ்சுகின்றார்கள். நவீன உலகில் ஆன்மீகப் பயன் மதிப்புகளுக்குக் குறைவான மதிப்பே இருப்பதைக் கண்டு கவலையுறுகின்றனர். இன்றைய நடப்பு நிலைகளைப் பற்றி எப்படி விளக்கம் அளித்தாலும், காரணம் கூறினாலும், இக் காலம் ஒரு நிலைமாறுகின்ற காலம் என்பதனை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். இன்றைய மனிதத் தேவைகளின் தொடர்பிலிருக்கின்ற பிரச்சினைகள் யாவும் என்றும் இருந்தவைகளேயாகும். எச்.ஜீ. வெல்ஸ் (H. G. Wells) அவர்கள் தம்முடைய அந்திய காலத்தில் தம்முடைய படுக்கையருகே இருந்த நண்பரிடம் கூறியதாகச் சொல்லப்படும் வார்த்தைகளாவன: 'தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். நான் விரைவாகச் செத்துக்கொண்டிருக்கின்றேன் என்று உங்களுக்குத் தெரியவில்லையா?' அவருடைய வாழ்க்கை முழுவதிலும் அவர் 'வரவிருக்கின்ற பொருள்கள்' பற்றி மிகவும் கவலைப்பட்டுக்கொண்டே இருந்தார். இன்றைய நவீன உலகைச் சுருக்கமாக மதிப்பிட்டால், ஒரு நூற்றாண்டிற்கு முன் இருந்த கைத்தொழில், பற்றாக்குறை, தனித்த தன்மை, பிரிந்திருத்தல் ஆகிய வாழ்க்கை வகைகள் யாவும் மாறிவிட்டன என்று கூறலாம். கல்வியின் பழைய வகைகள் பழங்காலத்திற்காக உண்டாக்கப்பட்டவையாகும். அவை உயர்நிலைப்பள்ளிப் படிப்புக்கு வந்த ஒரு சிறு சதவீதத்தினருக்காக உண்டாக்கப்பட்டவையாகும். அது இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றதாக அமையவில்லை. கல்விப் பிரச்சினைகளில் பரிசோதனை செய்யவேண்டிய தேவை முன்பு எப்பொழுதும் இல்லாத அளவு இன்று மிக அவசியமாக உள்ளது. இதற்கு, நல்ல பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், நிர்வாகிகள், கல்விப்பணியில் ஈடுபட்டுள்ள தனியன்கள் ஆகியோர் முதலில் வழிகாட்ட மிகவும் தேவைப்படுகிறார்கள்.

திறன்களிலும், அக்கறைகளிலும், தேவைகளிலும் தனியாள் வேற்றுமைகள் இருப்பதை அதிகமாக இப்பொழுது உணர்கின்றனர். புதிய பாடத்திட்டப் பொருள்களை இப்பொழுது செய்துவருகின்றனர். வாழ்க்கைச் செயல்களைப்பற்றிய திட்டங்களும் மாணவர்களது தேவைக்கான திட்டங்களும் அமைக்கப்படுகின்றன. பழங்காலப் பாடத்திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்காக உருவாக்கப்பட்டதாகும். ஆதலின், அவ்வாறான பாடத்திட்டம் இன்றைய உயர்நிலைப்பள்ளியிலுள்ள மாணவர்களின் தேவைகளுக்காகத் திட்ட

மீடப்பட்ட தொன்றல்ல. பள்ளிகள் சந்திக்கின்ற தற்காலப் பிரச்சினை களில் சில இங்குத் தரப்பட்டுள்ளன :

1. பொறியியல் வளர்ச்சிகளினால் உற்பத்தி பெருகி, அதனால் கல்வித்துறையில் பல விளைவுகள் ஏற்பட்டுள்ளன.
2. ஓய்வு நேரம் அதிகமானதால் பல கல்விப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.
3. விஞ்ஞானம், பொறியியல் ஆகியவைகளைப் பயன்படுத்து வதனால் உலக நிலைகள் மாறுபட்டு அதனால் கல்வித் துறையும் பாதிக்கப்பட்டுள்ளது.
4. முழுமையான கல்வித்திட்டத்தில் தொலைக்காட்சி (TV), வானொலி, திரைப்படங்கள், நவீனச் சுற்றுலா ஆகிய வற்றைக்கொண்டு பயன் பெறுதல்.
5. கருத்துநிலை ஜனநாயக சமூகத்தில் அதிகமான வாய்ப்புகள் எல்லோருக்கும் கிட்டுவதால் ஏற்படும் பிரச்சினைகள்.
6. உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியவற்றில் பல்வேறு இன, சமய, சமூகப் பொருளாதாரக் குழுக்களை ஒன்று சேர்த்து இணைப்பதால் தோன்றுகின்ற பிரச்சினைகள்.
7. இல்லத்தையும், கோயிலையும், மற்றப் பதிலாண்மைகளை யும் குழந்தைகள், இளையோர் ஆகியோரை வழிகாட்டுவ தற்கு எப்படித் திறம்பட வேலை செய்ய வைப்பது என்ற பிரச்சினை.
8. கல்வி, ஒழுக்கம், சமூகம் ஆகியவற்றில் தோன்றும் பிரச் சினைகளும் இளையோர்களது தொழில் வழிகாட்டலினால் தோன்றும் பிரச்சினைகளும்.

சிந்தனைக்குரிய பிரச்சினைகள்

1. பள்ளியில் அதிக மாணவர்கள் சேர்வதற்குக் காரணமாக இருக்கின்ற ஏதுக்கள் என நீ கருதுவதை வரிசைப் படுத்துக.
2. பள்ளியில் வெற்றிபெறுவது மட்டும் போதாது என்பதனை விளக்க நீ அறிந்த ஒருவரது வரலாற்றினை அளிக்கவும்
3. அக்கறைகள் வளர்வதற்குப் பள்ளி எப்படி உதவி செய்ய முடியும்? சான்றுகள் தந்து விளக்குக.

4. கீழ்க்கண்ட வாக்கியத்தின் முக்கியத்தையும் பொருளையும் விளக்குக. 'எதிர்காலத்தில் பள்ளிகள் முன்பு இருந்த அளவினைக் காட்டிலும் அதிகமான அளவில் சமுதாய வாழ்க்கையுடன் மிக நெருங்கியவாறு இணைந்து செயல்படும்.'

5. 'கல்வி எல்லாவகையான அநுபவங்களையும் அளித்து ஒருவருடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் பாதிக்கின்றது' என்று கூறப்பட்டது. இவ்வாருன கருத்தினை ஏற்றுக்கொள்வதால் பள்ளிகளின் வேலையில் ஏற்படும் விளைவு யாது?

6. நீ அறிந்துள்ள சில உயர்நிலைப்பள்ளித் திட்டத்தினை மதிப்பிடுக. இந்நூலில் குறிப்பிட்டவாறு இளையோர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு அவை திட்டமிடப்பட்டுள்ளனவா?

7. சோனியா, டெட்டி ஆகியோரின் வரலாறுகளை எச்சரிக்கையுடன் ஆய்வு செய்க. இத்தனியன்கள் பெற்றவை யாவை? அவர்களின் வரம்புகள் எவை? பள்ளியில் அவர்கள் சந்தித்த முக்கியப் பிரச்சினைகள் எவை? அவர்களுக்கு எந்தச் சில தனித்த தேவைகளை அளிக்கவேண்டும்?

8. இளையோன் பள்ளியில் திருப்தியடையாமல் போவதற்குரிய முக்கிய காரணங்கள் எவை? உயர்நிலைப்பள்ளியிலுள்ள மாணவர்களது எண்ணிக்கையை அதிகப்படுத்துவோருக்கு நீ அளிக்கக்கூடிய யோசனைகள் எவை?

9. அவர்கள் மீது சுமத்தப்படும் கற்றல் அனுபவங்களில் பயன் மதிப்புகள் ஏதும் இல்லையெனக் கருதும் பெருமளவிலுள்ள உயர்நிலைப்பள்ளி மாணவர்களை எவ்வாறு ஊக்குவிப்பது என்பதே உயர்நிலைப்பள்ளியாசிரியர் சந்திக்கின்ற மிகப் பெரிய பிரச்சினையாகும் என்று கூறப்படுகிறது. இவ்வாசிரியர் குறிப்பிடும் கருத்துகள் எவை?

தெரிவுசெய் நூற்பட்டியல்

1. Cole, L., Psychology of Adolescence (Fourth Edition), New York : Rinehart and Co., Inc., 1954, Chaps. 12, 18 and 19.

2. Cruze, W. W., Adolescent Psychology and Devolopment.' New York : The Ronald Press Co., 1953, Chap. 11.

3. Fleming, C. M., 'Adolescence,' New York; International Universities Press, Inc., 1949, Chaps. 9 and 10.

4. Gruber, F. C., and T. B. Beatty, 'Secondary School Activities.' New York: McGraw-Hill Book Co., 1954.

5. Hollingshead, A. B., 'Elmtown's Youth,' New York: John Wiley and Sons, 1949, Chap. 8.

6. Kettelkamp, G. C., 'Teaching Adolescence,' New York: D. C. Health and Co., 1953.

7. Kuhlen, R. G., 'The Psychology of Adolescent Devolopment,' New York: Harper & Bros., 1952, Chap. 10.

8. Landis, P, H., 'Adolescence and Youth', New York: McGraw-Hill Book Co., 1945, Chaps. 17, 18 & 19.

9. Malm, M. and O. G. Jamison, 'Adolescence', New York: McGraw-Hill Book Co., 1952, Chap. 13.

10. Noar, G., 'The Junior High School—Today and Tomorrow'. New York: Prentice Hall, Inc., 1353.

11. Olsen, E. G., 'School and Community Programes' New York: Prenticc Hall, Inc., 1949.

12. Seidman, J. M., The Adolecent: 'A Book of Readings.' New York: The Dryden Press, 1953, Chap. 17.

13. Spears, H., 'The High School for Today.' New York American Book Co., 1950.

14. Wattenberg, W. W., 'The Adolescent Years,' New York: Harcourt, Brace and Co., 1955, Chaps, 12 and 24.

16. கல்வி, தொழில் வழிகாட்டல்

'ஒரு தொழில் உடையோன் சொத்துடையோனுகி ருன்; வாழ்க்கைக்கான ஒரு தொழிலுடையோன் நற்பெய ரும் மதிப்பும் உள்ள ஒரு பதவியை அடைந்தவனுகிருன்'- பெஞ்சமின் ஃப்ராங்க்லின் (Benjamin Franklin).

மனிதனின் சாதாரண வாழ்க்கைச் செயல்களில் விஞ்ஞானச் செய்முறைகள் மிக அதிகமாக உபயோகப்படுத்தப்படுகின்றன. இவ் வதிகமான மாற்றங்கள் வாழ்க்கையில் மாறுபட்ட கோட்பாடுகளையும், தொழில் நிலைமைகளில் மாற்றங்களையும், அதிகரிக்கப்பட்ட ஓய்வு நேரத்தையும், அதிகமான வாழ்க்கை வசதிப்பொருள்களையும், சமூ கப் பொருளாதார அமைப்பில் மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளன. இவை யாவும் குடும்ப உறவுகள், ஒப்பார் செயல்கள், சமுதாய ஈடு பாடுகள், கல்விச் சமுதாயத் திட்டங்கள், வேலைக்கான வாய்ப்புகள், இளையோர், இளையோர்களின் பொருளாதாரத்தேவைகள், நிலைமைகள் ஆகியவைகளில் முக்கியமான செல்வாக்கினைப் பெற்றிருக்கின்றன.

சென்ற அதிகாரம் முழுவதும் அளிக்கப்பட்ட பொருள்கள் இளை யோனின் தேவைகளையும் பிரச்சினைகளையுமே குறிப்பிடுகின்றன. இவ் வதிகாரத்தில் அளிக்கப்பட்டுள்ள செய்திகள் கீழ்க்கண்டவற்றைக் கூறுகின்றன.

1. இளையோனை எதிர்நோக்கிப் பல பிரச்சினைகள் உள்ளன. இப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவியும், வழிகாட்டலும் தேவை யாக இருக்கின்றன.

2. நல்ல முடிவுகளைப் பெறுவதில், குறிப்பாகத் தொழிலைப்பற் றிய முடிவை அடைவதற்காகத் தேவைப்படும் செய்திகள் அவர்களுக்குக் கிடைப்பது அரிதாக உள்ளது.

3. இவ்விளையோர்களுக்கு அறிவுரை அளிப்பதும், உதவுவதும், பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தேவையான உதவிகளை அளிப் பதும், பெரும்பாலும் போதிய அளவு இருப்பதில்லை.

4. ஒரு தொழிலைத் தேர்ந்தெடுப்பதிலுள்ள பிரச்சினைகள் மிகச் சிக்கலானவையாதலால் அவைகளை அதிகார முறையினால் தீர்க்க முடியாது.

5. இளைஞர்கள் பெறும் பயிற்சியில், ஒரு பகுதியாகத் தொழில் அனுபவம் பெறவும், தொழில் பற்றிய அறிவைப் பெறவும் வாய்ப்புகள் இளைஞர்களுக்குத் தேவையாக உள்ளன.

பள்ளி மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் அளவினை அதிகமாக்குதல்

உயர்நிலைப்பள்ளியில் அதிகமான மாணவர்கள் சேரும் நிகழ்ச்சி சிறுவர் சிறுமியரின் கல்வி, வழிகாட்டுதல், ஆகியவற்றில் தொடர்பு கொண்டவர்களுக்கு ஒரு பெரிய பிரச்சினையை அளிக்கிறது. பட்டம் பெறுவதற்கு முன் பல இளையோர்கள் பள்ளியைவிட்டு நின்றுவிடுவதாகச் சென்ற அதிகாரத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. பள்ளியானது இளையோர்களின் தேவைகளுக்கேற்பத் தொண்டுபுரிய வேண்டுமாயின், இளையோர்கள் பள்ளியிலேயே தங்கவேண்டியதற்கான நிலைமையையும், முன்னேற்பாடுகளையும் தேவையான அளவு அளிக்கவேண்டும். இவ்வாறாக அவர்கள் வயது முதிர்ந்தோராகும் பொழுது சந்திக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டியதற்கு முக்கியமாகத் தேவைப்படும் திறனை வளர்க்கவும், திறமையை அடைந்த பின்பு புரிந்துகொள்ளும் திறனை வளர்க்கவும் வேண்டும். பள்ளிகள் சிறுவர் சிறுமியர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமாயின், அவைகள் முதற்கண் பள்ளியினின்று நின்றுவிடுபவர்களைத் தடுக்கக்கூடிய திட்டங்களை ஏற்படுத்தவேண்டும். தற்கால உயர்நிலைப் பள்ளியில் இடையிலே நின்றுவிடுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்று கூறச் சான்றுகள் உள்ளன. உயர்நிலைப் பள்ளி எல்லா மாணவர்களுக்கும் உதவ வேண்டுமென்பதே பள்ளி ஆசிரியர்களின் திடமான கொள்கையாக இருக்கவேண்டும் என்பது முக்கிய ஏதுவாகும். இத்திட நம்பிக்கை பள்ளியிலுள்ளோருக்கு வழி காட்டவேண்டும். இல்லையெனில், உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள அளவு தங்கும் நிறுவனமாகத்தான் பள்ளிகள் செயலுறும்.

பள்ளியின் இயக்கத்தில் அக்கறைகொள்ளும் ஆசிரியர்களும் மற்றவர்களும் கொள்கின்ற மனப்பான்மைக்கு நெருங்கிய தொடர்பு கொண்ட மற்றோர் இன்றியமையாத இயல்பு என்னவெனில், போதிய அளவு அறிவுரை அளிக்கும் பணியாகும். அறிவுரை கூறும் தொண்டினை விரிவுபடுத்தியும் சீர்திருத்தியும் தனிப்பட்ட உதவி தேவைப்படும் மாணவர் குழுக்களின் தேவையைச் சற்றேறக்குறைய பூர்த்தி செய்யலாம். ஒவ்வொரு மாணவனும் ஓர் ஆசிரியரையாவது

அல்லது அறிவுரை கூறுபவரையாவது நன்கு அறிந்திருக்கவேண்டும். அவரிடம் தன் பிரச்சினைகளைப்பற்றி மனம்விட்டுப் பேசத் தயக்கமின்றி அணுகும் நிலைமை ஏற்படவும் வேண்டும். நல்ல அறிவுரை கூறும் திட்டம், பள்ளிப் படிப்பின் இடையிலேயே நின்றுவிடுவோரின் எண்ணிக்கையைக் குறைப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. சென்ற அதிகாரத்தில் சிறுவர் சிறுமியரின் உயர்நிலைப்பள்ளி வாழ்க்கையில் கல்விப் பிரச்சினைகள் மிகுதியான பங்கினை வகிக்கின்றன என்பதைப் பார்த்தோம். சிறப்பாக அறிவுரை தருதல், சிறுவர் சிறுமியர்கள் இந்தப் பிரச்சினையையும் மற்றப் பிரச்சினைகளையும் நன்ருகப் புரிந்து கொண்டு நுண்ணிய அறிவுடன் தீர்ப்பதற்கு நல்ல பயனை விளைவிக்கின்றது. ஒரு நல்ல அறிவுரைத் திட்டம் மாறுதலுக்குட்படுகின்ற கல்வித் திட்டத்தினைக் கொண்டதாக இருக்கவேண்டும். சென்ற அதிகாரத்தில் டெட்டி (Teddy) என்பவரின் வரலாற்றில் காணப்பட்ட பிரச்சினைகள் கல்வித் திட்டம் மாறுதலுக்குட்படக்கூடியதாக இருந்திருந்தால் மிக எளிதில் தீர்க்கப்பட்டிருக்கும். அதாவது, குறிப்பாக மதிப்பிடுதல், தரப்படுத்துதல் ஆகிய நிலைகளில் மிக எளிதாகத் தீர்க்கப்பட்டிருக்கலாம். தொழில் அல்லது கல்விப் பிரிவுகளுக்குத் தகுதியில்லாதவர்கள் பொதுவான பிரிவுகளை எடுத்துக்கொள்ளலாம். 3,250 மாணவர்கள் பள்ளியைவிட்டு நின்று வேலைக்குச் சென்றிருக்கக்கூடிய சமயத்தில் ஒரு கவர்ச்சியான போதனைத் திட்டத்தால் நிறுத்திவைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியை மில்லர் (Miller) என்பவர் குறிப்பிடுகின்ருர்.[1] பள்ளிச் சிறுவர்கள் பள்ளியினின்று நின்றுவிடுவதைத் தடுத்து நிறுத்தி வைத்துக்கொள்ள உதவும் நான்காவதுமுறை பள்ளித்திட்டத்தில் வேலைத் திட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதேயாகும். இதனுல் பாதி நேரம் பள்ளியிலும் பாதி நேரம் பயிற்சி அளிக்கப்பட்ட ஒத்துழைப்பவரின் மேற்பார்வையின்கீழ் வேலை செய்வதிலும் செலவாகின்றது. இவ்வாருன வேலைத் திட்டம் மாணவர்களுக்குக் கல்வி அனுபவத்தையும் பலருக்குத் தேவைப்படும் பண உதவியையும் அளிக்கிறது.

உயர்நிலைப்பள்ளி தன் மாணவர்களை பள்ளியிலேயே நிறுத்தி வைத்துக்கொள்ளும் சக்தியை அதிகரிக்க ஐந்தாவது வழி, தனிப்பட்ட தேவையுள்ள மாணவருக்கு அறிவுரையையும் கல்வித் திட்டத்தையும் அளிப்பதுடன், ஒவ்வொருவரது தன்மையை ஆய்ந்துணர்கின்ற வாய்ப்பினையும் அளிக்கவேண்டும். கல்வியிலும் மனநலத்திலும் பின்தங்கிய மாணவர்கள் அவர்களுக்கு அளிக்கப்படும் செயல்

[1] L. M. Miller, 'How Can a High School Increase Its Holding Power of Youth?' Bulletin of the National Association of Secondary School Principals, 1952, Vol. 36, No. 185, pp. 117-125.

களைச் செய்யும் திறனற்றவர்களாக இருப்பதால், 'தோல்வியுற்ற வர்கள்' என்று குறிப்பிடப்படுகிறார்கள். எல்லா உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குமுரிய முழுமையான கல்வித் திட்டம், தன்மையை ஆய்ந்துணர்கின்ற முறையின் மூலமாகத் தனித்த மாணவர்களது திறன்களையும் தேவைகளையும் தீர்மானிக்கும். ஆய்ந்துணர்கின்ற சோதனை, அறிவுரை கூறல், பாடம் கற்பித்தல் ஆகியவற்றில் கூட்டு முயற்சி மாணவர்களை அதிக காலத்திற்குப் பள்ளியில் நிறுத்திக் கொள்வதில் நல்ல பலனைத் தரும். பள்ளியில் இடையிலேயே நின்று விடுவோர்களின் தன்மைபற்றியதும், அதற்குரிய காரணங்கள்பற்றியது மான ஆராய்ச்சி, ஆய்ந்துணரும் பணியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாகும். பள்ளியில் இடையிலேயே நின்றுவிடுவோரும், படித்துப் பட்டம் பெறுவோரும் நம்முடைய மனிதக் கையிருப்பைக் (human resource) குறிப்பவர்களாவார்கள். அவர்கள் நமது பள்ளி களின் விளைபொருள்களாவர். மாணவர்கள் பற்றி அறியும் திட்டம், அதன் பொறுப்புகளில் ஒன்றாக இம் மாணவர்கள் பள்ளிக்குப் பின் என்ன செய்கின்றனர் என்பதுபற்றி ஆய்வுகள் நடத்தவேண்டும். இதனைக் கேள்வி நிரல்கள்மூலமாகவும், நேரடி உரையாடல்கள்மூல மாகவும் நடத்தலாம். ஆனால், இவ் வாய்வுகளின் நோக்கங்களைப் பொறுத்தும், அவற்றை நடத்துவதற்கு உதவியாய் இருக்கின்றவர் களைப் பொறுத்தும் இம்முறைகள் பெரும்பாலும் செயற்படுகின்றன. இவ்வாறான பிற்கால வாழ்க்கையைப்பற்றிய ஆய்வுகள் இரண்டு முக் கியப் பலன்களை அளிக்கின்றன: (1) தனியனுக்கு வழிகாட்டல்மூலம் மேலும் பயிற்சியளிக்க உதவுகின்றன. (2) பள்ளித் திட்டத்தைத் திருத்தியமைக்க ஓர் அடிப்படையாக உதவுகின்றன.

கல்வியில் வழிகாட்டுதல்

உயர்நிலைப் பள்ளி மாணவர்களில் பெரும்பான்மையான சதவீதத் தினர் பட்டம் பெறுவதற்குமுன்னரே பள்ளியைவிட்டு நின்றுவிடு கின்றார்கள் என்று இவ்வதிகாரத்தின் துவக்கத்திலேயே குறிப்பிடப் பெற்றது. இவ்வாறு இடையிலேயே நின்றுவிடுவதற்குப் பல காரணங் கள் தரப்பெற்றன. இவர்களில் பலர் தவறான பொருத்தப்பாடுடைய வராய் இருந்தனர் என்று ஆய்வுகள் காட்டுகின்றன. நல்ல பொருத்தப் பாடு இல்லாதவர்களாய் இருந்தும், பட்டம் பெறும்வரை பள்ளியில் தங்கியிருக்கின்ற மாணவர்களும் பலர் இருக்கின்றனர். இந் நிலைகள் சிறுவர் சிறுமியர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கும், சிறப் பான சொந்த, சமூக, கல்வி, தொழில் பொருத்தப்பாடுகளை உண் டாக்குவதற்கும் அதிகமான அக்கறையைத் தோற்றுவித்துள்ளது.

வழிகாட்டுதலின் முக்கியத்துவம்

நவீன உயர்நிலைப் பள்ளியின் திட்டத்தில் வழிகாட்டுதற்கான வசதிகளை அதிகமாக்குவதே முக்கியக் குணவியல்புகளில் ஒன்றாக

இருக்கின்றது. வழிகாட்டல் சிறப்பாக அளிக்கக்கூடிய பதிலாண்மை களாவன பள்ளி அறிவுரையாளர்கள், வகுப்பு ஆசிரியர்கள், ஒன்றுகூடும் திட்டங்கள், தனித்த புகுமுக வகுப்புகள், தொழில் நாட்கள், வெளியூரிலிருந்து வந்துள்ள ஆசிரியர்கள், பள்ளிக்கு வெளியேயுள்ள தனித்த நிறுவனங்கள் ஆகியவைகளாகும். அறிவுரை கூறுவதை முழுமையாகவோ பெரும்பகுதியாகவோ செய்யக்கூடியவ ரென்று எவரையுமே குறிப்பிட முடியாது. மேலும், அறிவுரை அளிப்ப தற்கு மிக நல்ல நெறிமுறை ஒன்றுமில்லை. ஆயினும், அறிவுரைகள் கூறும் செயல்களை அளிப்பதிலும் ஏற்படுத்துவதிலும் சில விதிகள் உள்ளன. இவ் விதிகள் மாணவனின் வேலையை விரிவுபடுத்தவும், அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கவும் உதவி செய்கின்றன.

அறிவுரையாளர்கள் அல்லது ஆசிரியர்களின் கவனத்தைக் கவரும் பிரச்சினைகளில் பல அவர்களுக்கு ஓர் உண்மையான சவாலை அளிக்கின்றன. இப் பிரச்சினைகள், தன்னகத்தே பொருள்களைச் சேக ரித்து வைக்கவேண்டிய தேவையையும், ஆசிரியர்களுக்கும் மற்றவர் களுக்கும் அவர்களது ஆலோசனை வேலையில் உதவியாகவும் இளை யோர்கள் தங்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவியாகவும் இருப் பதற்கு ஆட்கள் தேவைப்படுகிறார்கள் என்பதையும் உணர்த்து கின்றன. அமெரிக்க நாட்டினை முழுதும் பிரதிபலிக்கின்ற 1,255 பள்ளி களிலுள்ள 1,282 அறிவுரையாளர்களிடமிருந்து பள்ளி அறிவுரை யாளர்களின் செயல்களையும் கடமையையும் நிர்ணயிக்க ஹிச்காக் (Hitchcock) என்பவர் விவரங்களைச் சேகரித்தார். [2]அட்டவணை 16-1 இவ்வறிவுரையாளர்கள் செய்துகொண்டிருக்கின்ற கடமை களைப்பற்றிச் செய்திகளை அறிவிக்கின்றது. பெரும்பான்மையான அறிவுரையாளர்கள் தங்களது வேலையில் இப்பொழுது பொதுமக்க ளிடம் கொள்கின்ற தொடர்பு எனும் மூலத்தைத் தங்களது செயல் களில் உபயோகப்படுத்திவருகின்றார்கள் என்று ஹிச்காக் (Hitch-cock) கண்டார். அறிவுரையாளர்கள் ஆசிரியர்களுடனும், அதிகாரி களுடனும், இளைஞர்களுக்காகச் சேவை செய்கின்ற தனியன்களுடனும், பதிலாண்மைகளுடனும் இணைந்து பணிபுரிகின்றனர். ஆனால், பலர் இவ் வேலை அவர்களுடைய பொறுப்புகளில் ஒரு பகுதியாக இருத்த லாகாது என்று எண்ணினார்கள்.

இவ்வாய்விலிருந்து கிடைக்கப்பெறுகின்ற மூன்று முக்கிய ஏதுக்களைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கூறலாம்: (1) அறிவுரை யாளர்களில் அதிகச் சதவீதத்தினர் மாணவர்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டியவர்களாகின்றனர். (2) அறிவுரை

[2] W. L. Hitchcock, 'Secondary School Counselors and Their Job in the United States,' Ed. D. Thesis, Oregon State College, 1953.

அட்டவணை 16—1

1,282 அறிவுரையாளர்கள் சில அலுவல்களைப் புரியும் சதவிதம்.

அலுவல்	சதவீதம்
பள்ளியில் பொருந்தியமைய மாணவர்களுக்கு உதவி செய்தல்	95
பள்ளி வேலையில் தவறுகின்ற மாணவர்கட்கு உதவியளித்தல்	91
பள்ளி வேலையினைத் திட்டமிடுவதில் உதவி செய்தல்	94
தனிப்பட்ட உதவி தேவைப்படும்பொழுது, மாணவர்களுக்கு உதவுதல்	89
தொழில் திட்டத்தில் மாணவர்களுக்கு உதவியளித்தல்	96
மாணவர்களைப்பற்றிய செய்திகளைச் சேகரித்தல் ...	94
நேரடி உரையாடலைப்பற்றிக் குறிப்பெடுத்தல் ...	90
மாணவர்களுக்கு, அவர்களது கல்வியிலும் தொழிலிலும் உள்ள வலிவினையும் குறைபாடுகளையும் உணர்த்தியுதவுதல்	92
பள்ளியினுள் மாணவர்களைச் சேர்ப்பதில் உதவுதல் ...	87
மாணவர்களுக்குப் பகுதிநேர வேலைகளைத் தேர்ந்தெடுத்தல்	81
கல்லூரியினைவிட்டுச் செல்லும் மாணவர்களுக்கு உதவுதல் (அதாவது கல்லூரி, வணிகப் பள்ளி வேலை முதலியன)	84
ஓய்வுநேரத்தில் மாணவர்களை அமர்த்துவதில் உதவுதல்	62
குழுச் சோதனைகளை நடத்துதல்	94
தனியன்களுக்கான சோதனைகளை நடத்துதல் ...	89
சமூக அளவைச் சோதனைகளை நடத்துதல் ...	40
சோதனையின் முடிவுகளை மாணவர்களுக்குத் தனித்தனியாக விளக்கிப் பொருள் கூறல்... ...	92
மனவெழுச்சியில் பொருந்தி அமையாத மாணவர்களுக்கு உதவுதல்	91
சமூகத்தில் பொருந்தி அமையாத மாணவர்களுக்கு உதவுதல்	90
ஒழுக்க, சமயப் பிரச்சினைகள் கொண்ட மாணவர்களுக்கு உதவுதல்	85
இளமையில் நெறிபிறழ்ந்த மாணவர்களுக்கு உதவுதல்	82

யாளர்கள் பல்வேறு தரப்பட்ட பணிகளைச் செய்ய நாடப்படுகின்றனர்; ஆசிரியர்கள், அதிகாரிகள், பெற்றோர்கள் ஆகியோருடன் நெருங்கிப், பணியாற்ற வேண்டியவர்களாகின்றனர். (3) அறிவுரையாளர் மாண வர்களுக்கு வேலை கிடைக்க உதவுவது, மனவெழுச்சி-சமூக-சமயப் பொருத்தப்பாடுகளைப் பெற உதவுவது, பள்ளியைவிட்டு நின்று விடுபவர்களுக்கு உதவுவது ஆகிய பணிகளைச் செய்வதால், அவருடைய கடமைகள் பள்ளிக்கு வெளியேயும் செல்கின்றன.

ஜனநாயகமுறைக் கல்வித் திட்டத்தில் ஒவ்வொரு குழந்தைக் கும் தன் திறமை, உள்ள இயல்பு இவைகளைப் பெருக்க வாய்ப்புகள் தரப்படவேண்டும். இந்த ஓர் இலக்கை அடையவேண்டுமாயின், ஆசிரியர் மாணவர்களைத் தனித்தனியாக நெறிப்படுத்துதல் வேண்டும். மந்தமான குழந்தை, நரம்பு நோயுள்ள குழந்தை, குறையுடைய குழந்தை, திறன்மிக்க குழந்தை இவ்வகையான குழந்தைகள் பள்ளித் திட்டத்தில் அனுசரணையான நடத்தை பெறல் வேண்டும். தனியாள் வேறுபாடுகளை முழுமையாக உணர்தல் என்பது நுண்ணறிவில் உள்ள மாறுதல்களையும், அவாக்கள், மனப் பாங்கு, குறிக்கோள்கள் ஆகியவற்றில் உள்ள மாறுதல்களையும் உணர்வதை உடன்கொண்டுள்ளது.

தனித்த மாணவனுக்கு அறிவுரை அளித்தல்

ஒழுங்கான கல்வித் திட்டம் ஏற்பட்ட காலந்தொட்டே அறிவுரை யளித்தல் என்பது இருந்துவந்துள்ளது. ஒருவேளை, கல்வித் திட்டத் தின் காலத்தைக்காட்டிலும் அறிவுரையளித்தல் பழமையானதாய் இருக்கலாம். அதனைக் கீழ்க்கண்டவாறு அண்மையில் விவரித் துள்ளனர்: 'சொந்த உறவையும் செயல்தன்மையையும் கொண்ட உறவினைக் கைக்கொண்ட இருவர், வரையறை செய்யப்பட்ட பிரச்சினையை ஒருவருக்கொருவர் அனுசரணைகொண்டு அணுகு கின்றனர். அவ்விருவரில் இளமையாயும், முதிர்ச்சியடையாமலும், அதிகமான சிக்கலுக்கு உள்ளாகியும் இருப்பவர் பிரச்சினைக்கான தீர்வினைப் பெறுகின்றார்.'[3] அறிவுரையளிப்பது என்பது தனித்த செய்தியேயாகும். ஆதலின், அவ்வாறு தனித்துக் கையாளப்படு மானால், மிகுந்த வெற்றியினை அளிக்கும். பள்ளிச் சூழ்நிலையின் தொடர்பில் ஆசிரியர் அல்லது முதியோன் அதிகமான முதிர்ச்சியையும் புரிந்துகொள்ளுதலையும் கொண்டிருக்க வேண்டும். டெட்ராய்ட் டைச் சேர்ந்த 15 வயதுள்ள 1,500 மாணவர்களைக்கொண்டு ஆய்வு

[3] C. G. Wrenn, 'Counseling with Students,' Thirty-seventh Yearbook of the National Society for the Study of Education, Part I. Bloomington, Ill.: Public School Publishing Company, 1938, p. 121.

நடத்தியதில், அவர்களில் 82 சதவீதத்தினர் முதியோர்களின் கூட்டுறவையும் அறிவுரையையும் விரும்பியதாகக் கூறினர்.[4] 'குறைவான கூட்டுறவையும், மேலான குடும்பப் பொருத்தப்பாட்டையும் கொண்ட மாணவர்கள் இவ்வாறான முதியோர்களின் அறிவுரையை மிகவும் ஆர்வத்துடன் விரும்பினர். பேட்டி காணுதலும், அறிவுரை கூறுதலும் ஒன்றே ஆகாது. ஏனெனில், பேட்டி காண்பது என்பது ஒரு தனித்த நோக்கங்கொண்ட வினாமுறையாகும். ரென் (Wrenn) என்பவர் கீழ்க்கண்ட விளக்கப் படத்தையும், விளக்கத்தையும் அளிக்கின்றார் :

பொதுவாகக் காணப்படும் பேட்டியில் செய்தியும் கருத்தும் இவ்வாறாகத் தரப்படுகின்றன :

அறிவுரையாளர் ————→ மாணவன்.

அதிகமாகக் காணப்படாத சில சமயங்களில், சரியாக இருக்கும் பேட்டியில் செய்தி அறியும் சூழ்நிலை இவ்வாறிருக்கும் :

அறிவுரையாளர் ←———— மாணவன்.

அறிவுரையில் இருக்க வேண்டிய பேட்டியை இவ்வாறாகக் குறிப்பிடலாம் :

அறிவுரையாளர் ←————→ மாணவன்.

கல்வி, தொழில், சொந்த-சமூகப் பிரச்சினைகள் இளையோர் பருவத்திய வாழ்வில் பெரிதும் அதிகமாக இருக்கின்றன. பல நேரங்களில் சமூகம் சொந்தப் பிரச்சினைகளுக்குத் தேவையான அளவு கவனமும் சலுகையும் தருவதில்லை. அதிகாரிகள் அல்லது ஆசிரியர்களை அடையும்போதுதான் இவைகள் அறியப்படுகின்றன. சாதாரணமாக இவைகள் நடத்தைச் செயல்களாகக் கருதப்படுகின்றனவேயன்றி இவற்றினைத் தூண்டுபவைகளின் பின்னணியில் கருதப்படுவதில்லை.

'சார்புடைமையின்' தேவை அல்லது ஏற்றுக்கொள்ளப்படுவதன் அவசியம் சாதாரணமாக இளையோர் ஆண்டுகளில் முக்கியமானதாக உள்ளது. இத் தேவையை ஆசிரியர்கள் உணர்ந்து, அப் பிரச்சினைகள் அவர்களுக்கு வெகு சாதாரணமாகக் காணப்பட்டாலும், அவைகளை உண்மையென்று உணரவேண்டும். இவ்வாறாக மற்றவர்களது பிரச்சினைகளின் இயல்பை அறியும் திறன், அறிவுரை அளிப்பதில் முதல் தேவையாகும். ஒருவனது வாழ்க்கையில் இப் பிரச்சினைகள்

[4] K. W. Layton, 'Guidance Needs of Detroit's 15-Year Old Pupils', Occupations, The Vocational Guidance Magazine, 1936, Vol. 15, pp. 215-220.

நீக்கப்பட்டுவிட்டால், இவ்வாருன பிரச்சினைகளை அறியும் திறனைப் பெறுவது கடினமாகின்றது. இளையோரின் பிரச்சினைகள் வேலையி லிருக்கும் ஆசிரியரின் பிரச்சினையைப் போன்றதன்று. ஆசிரியர்' நெறிப்படுத்துதலும், இளையோர்களை இயக்குவதும் பயன்தரக் கூடியனவாக இருக்கவேண்டுமாயின், அதுவே ஆசிரியருக்கு ஒரு சவாலாக அமைகின்றது.

'வகுப்பிலுள்ள ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் தாங்கள் இணையற்ற தனியன்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென விரும்புகின்ருர்கள். அவன் தன்னை ஒரு தனியனுக ஏற்றுக்கொள்ள விரும்புவானே அன்றி, தான் அடையக்கூடியவைகளுக்காக ஒருவனுக ஏற்றுக்கொள்ள விரும்பமாட்டான். மாணவர்கள் ஆசிரியரைத் தாம் நம்பக்கூடிய ஒருவராக எண்ண விரும்புகின்ருர்கள். இந் நிலைமை எதிர்க்கப்பட்டால், உடனடியாக மனித உறவுபற்றிய பாதை இறுக்கப் பட்டுவிடும். ஆசிரியர்களுக்கு முக்கியமற்றுக் காணப்படுபவை குழந்தைகளுக்கு மிக முக்கியமானவையாக இருக்கலாம்.'[5]

குறிப்பேட்டின் முக்கியத்துவம்

தனியனின் தேவைகளைப் பூர்த்திசெய்யத் திட்டமிடுவதற்குமுன், நாம் அவனைப்பற்றிய உண்மையான செய்திகளைச் சேர்க்கவேண்டும். இதுதான் அறிவுரை வழங்குதலின் அடிப்படையான உண்மையாகும். பாடம் சொல்லுபவருக்கும் வழிப்படுத்துபவருக்கும் உதவுகின்ற திறன் அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய செய்திகளை டியூகன் (Dugan) என்பவர் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தியுள்ளார்:[6]

செய்தியின் பரப்புகள்	மதிப்பிடும் வழிகள்
1. அறிவுத் திறன் ஆர்வம் ...	முன்னைய மதிப்பெண்கள், திறன், அடைவு பற்றிய உளவியல் சோதனைகள்
2. அறிவுத் திறன் அடைவும், அடிப்படைத் திறன்களும்	முன்னைய மதிப்பெண்கள் தரப்படுத் தப்பட்ட ஆசிரியர் உண்டாக்கிய அடைவுச் சோதனைகள், அடிப் படைத் திறன்கள்பற்றிய மதிப்பீடு ஆய்ந்துணர் சோதனைகள், பள்ளிச் செயல்கள், வேலை அநுபவங்கள்

[5] E. C. Morgenroth, 'Relationships between Teachers and Students in Secondary Schools', Progressive Education, April, 1939, pp. 248-249.

[6] W. E. Dugan, 'Counseling in the Modern Secondary-School Program,' Bulletin of the National Association of Secondary School Principals, 1951, Vol. 35, p. 15.

3. தனித்த திறன்கள் : ... எழுத்தர் துறை, கணிதம், கலைபோன்றவற்றில் திறன்கள்	தனித்த ஆர்வச் சோதனைகள், நேரடி உரையாடல்கள், முன்னைய அடைவு அல்லது வினைமுறைகளின் மதிப்பீடு (வேலை அனுபவங்கள், விருப்பத் தொழில்கள், பாடத் திட்டத்திற்குப் புறம்பான செயல்குள்)
4. அக்கறையும் திட்டங்களும்	சொந்த வாழ்க்கைக் குறிப்புகள், அக்கறைக் கண்டுபிடிப்புகள் அல்லது சோதனைகள், குறிக்கப்படும் அக்கறைகள், நேரடி உரையாடல்கள், முன்னைய அடைவுகள், வேலை, ஓய்வுநேரச் செயல்கள்
5. ஆரோக்கியம், உடல் அந்தஸ்து	உடல்தேர்வு, ஆரோக்கிய வரலாறு, உற்றுநோக்கல், பள்ளிக்குவருகை, கணக்கெடுத்தலும் குடும்பத்தில் அறிவுரை பெறுதலும்
6. இல்ல, குடும்ப உறவுகள்...	உற்றுநோக்கல், சிறு நிகழ்ச்சிகள், தரமிடும் அளவுகள், நேரடி உரையாடல்கள், சொந்த வாழ்க்கைக் குறிப்புகள், கதைத் தலைப்புகள், கோடிட்டுச் சரிபார்க்கும் பட்டியல்கள், பொருத்தப்பாட்டுக் கண்டுபிடிப்புகள்
7. மனவெழுச்சி நிலைத்து இருத்தலும், சமூகப் பொருத்தப்பாடும்	வேலை தருபவர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகள், குழுவாகத் தொழில் செய்பவர்கள் அல்லது குழுத் தலைவர்கள், பெற்றோருடன் கலந்து ஆலோசித்தல்
8. மனப்பான்மைகள் ...	மாணவர்கள் கேள்வி நிரல்கள், இல்லப் போட்டிகள், நேரடி உரையாடல்கள், கதைத் தலைப்புகள், சொந்த வாழ்க்கைக் குறிப்புகள், மற்ற விளக்கச் செய்திகள், தர நிர்ணயம் செய்யப்பட்ட தரமிடும் அளவுகள்
9. தொழில் அனுபவங்கள் ...	வேலை தருபவரின் அறிக்கை, தொழில் ஆலோசகரின் அறிக்கைகள், நேரடி உரையாடல்கள், மாணவர் கேள்வி நிரல்கள்

பள்ளியின் முன்னைய அனுபவங்கள் வருங்காலத்தின் வளர்ச்சியை வருமுன் கூறுவதற்கான திட்டவட்டமான அடிப்படையாக அமையாது.

ஆயினும், சில வகையான நடத்தைகளுக்கு மாணவன் தரும் துலங்கலும், அவனுடைய உயர்ந்த தாழ்ந்த அடைவுப் பரப்புகள், அவன் பாடத் திட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுதல் ஆகியவை யாவும் தனித்த போக்குகளைக் காட்டுகின்றன. இவை யாவும் அறிவுரை அளிப்பவருக்கு உதவியளிக்கும் ஏதுவாக அமைகின்றன. மன வளர்ச்சியைப்பற்றியும், கல்வி வளர்ச்சியைப்பற்றியும் அவ்வப்பொழுது குறிப்புகள் எடுத்துவைக்கவேண்டும். கல்வி அடைவுச் சோதனைகள் பள்ளிப் பாடங்களில் வளர்ச்சியின் குறிப்புகளைத் தருகின்றன.

நாட்டம், திறன் ஆகியவைகளைப்பற்றிய விவரங்களைச் சேகரிப்பதற்குப் பயன்படுத்தும் வினைமுறைகள் பலதிறப்பட்டனவாகும். ஆனால், இச் சோதனைகள் பயிற்சி இல்லாதவர்கள் கையில் இருக்குமாயின், தீங்கினையே விளைவிக்கும். சில தொழில்களுக்குச் சிறப்பான நுண்ணறிவும், மற்றச் சில தொழில்களுக்குத் தனித்த திறமையும்தாம் தேவைப்படும். பழைய செயல்களைப்பற்றிய உண்மைகள், அக்கறைகள், ஆரோக்கியம், கல்வி வளர்ச்சி ஆகியவை திரள் அறிக்கையில் (cumulative record) பயனுள்ள செய்திகளை அளிக்கும் வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும். நேரடி உரையாடல்கள், கேள்வி நிரல்கள், சோதனைகள், தரப்படுத்தும் முறைகள், உற்றுநோக்கல்கள் ஆகியவைமூலம் செய்தியினை அறிதல் வேண்டும். அச் செய்தி அறிந்து கொள்ளும் வகையிலும் பயனுள்ள வகையிலும் அமைக்கப்பட்டால், இளையோர் சிறுவர்சிறுமியர்களுக்குச் சீரிய முறையில் வழிகாட்டல் அளிக்கவும் அறிவுரை அளிக்கவும் இயலும்.

திரள் அறிக்கையினால் பெறப்படும் முக்கிய நன்மை என்னவெனில், அதனுள் உள்ள தனித்த இனங்களை இணைத்துத் தனியனைப் பற்றிய முழு உருவத்தினை அறிய இயலும். அக்கறை அறிக்கைகளின் வெவ்வேறு வகைகளின் பொருளும், திறன்கள், செயல்கள் ஆகியவைகளின் வகைகளும், இவைகளை மிகத் திறம்பட இணைப்பதும்தாம் மேலும் ஆய்வதற்குரிய பொருள்களாகும். கல்விப் பிரச்சினையில் மாணவர்களுக்கு உதவுதற்காக அச் செய்தியினைப் பெறவேண்டிய அவசியம்பற்றி ஸ்டிராங் (Strang) குறிப்பிடுகின்றார் :

'மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவி மேலெழுந்தவாறு இல்லாது ஆழமானதாக இருக்கவேண்டும். ஒருவர் ஒரு மாணவனைப் பற்றி மிக அதிகமான செய்தியைக் கொண்டிருக்கவியலாது. ஆனால், ஒருவரால் மிக அதிகமான புத்திமதியைத் தரவியலும். அவனுடைய இன்றைய முதிர்ச்சிநிலையை அறிதல் வேண்டும் ; அவனுடைய பயன் மதிப்புகள், குறிக்கோள்கள், நோக்கங்கள் ஆகியவற்றை உணர்ந்து மதிக்க வேண்டும். அறிவுரை வழங்குதல் என்பது ஓரளவு தானாகக்

காரியங்களைச் செய்வதற்கு அறிவுரை வழங்குதலாகும். அது ஒரு வழியே அன்றி, முடிவன்று.'[7]

இளையோர்களுக்கிடையே பொதுவாகக் காணப்படும் பிரச்சினைகளை நன்கு புரிந்துகொண்டு, ஆசிரியருக்கும் மற்றவர்களுக்கும் உதவும் ஐந்து கோட்பாடுகளை ரென், டியூகன் என்போர் (Wrenn and Dugan) அளித்துள்ளனர். அவையாவன:

1. *நடத்தை தோற்றுவிக்கப்படுகின்றது*: தங்கள் மாணவர்களை நன்கு அறிந்த ஆசிரியர்கள் அவர்களின் இன்றைய நடத்தையை அத்தனியன்களின் கடந்தகால அனுபவங்கள், குடும்பம், வீடு இவைகளின் செல்வாக்கு, உடல்நலம், தனித்த தேவைகள், அக்கறைகள், குறிக்கோள்கள் ஆகியவைகளின் அடிப்படையில் விளக்குவார்கள். தற்போதைய நடத்தை எந்த அளவு விரும்பத்தகுந்ததாகவும் தொந்தரவு தராததாகவுமிருந்தாலும், அது அறிகுறியேயாகும். இவ்வறிகுறிகளுக்காகத் தண்டிக்காமல் அல்லது கவனிக்காமல் இருப்பதைவிட இந்த நடத்தைகளைத் தோற்றுவிக்கும் காரணங்கள், நிலைகள் அல்லது நிறைவேருத தேவைகள் ஆகியவற்றை ஆசிரியர்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

2. *காரணங்கள் சிக்கலானவை*: ஒரு தனித்த தொல்லைக்குச் சாதாரணமாக ஒரு காரணமோ அல்லது நிலையோ பொறுப்பாக இருப்பதில்லை. ஒரு தனித்த நடத்தைப் பிரச்சினைக்குச் சாதாரணமாகப் பல அடிப்படையான காரணங்கள் அல்லது நிலைகள் துணைபுரிகின்றன.

3. *குறிப்புகள் தேவைப்படுகின்றன*: ஒரு மாணவனை நன்கு புரிந்துகொள்ள அவனைப்பற்றிய பலதிறப்பட்ட குறிப்புகளைப் பெறுதல் வேண்டும். அவனுடைய இன்றைய தேவைகள், திறன்கள், அக்கறைகள் ஆகியவற்றைப்பற்றிய குறுக்குவெட்டுப் பகுப்பாய்வுமூலம் பெறப்படும் செய்தியோடு அவனுடைய தனித்த வளர்ச்சிபற்றிய அறிக்கையும் சேர்க்கப்படவேண்டும்.

4. *கையாளுமுறை ஒரு கூட்டுறவு முறையாகும்*: தனியாள் வரலாறுபற்றிய ஆய்வு ஒரு கூட்டுறவு முயற்சியாகும். அறிக்கைகள், சிறு நிகழ்ச்சிகள், ஆசிரியர்களது அனுபவங்கள், தனித்த மாணவனைப்பற்றித் திறமை மிக்க ஆசிரியர்களால் மிகவும் சிறப்பாகப் பகுத்தாய்வு செய்யப்பட்டவை ஆகியவைகளின் துணைகொண்டு இம்முயற்சி கூட்டுறவு முறையினுல் கையாளப்படுவதாகும்.

[7] R. Strang, 'Counseling Technics in College and Secondary School'. New York: Harper and Brothers, 1937, P. 130.

5. *நோய் தீர்க்கும் முறையானது தொடர்ச்சியான நிகழ்ச்சியாகும்:* ஒவ்வொரு மாணவனும் மிக அதிகமான பொருத்தப்பாட்டினைப் பெறுவதற்கு உதவி செய்தல் அல்லது குறையினைப் போக்கக் கைக்கொள்ளவேண்டிய முறைபற்றி ஆலோசனை தருதல் என்பது ஒரு துவக்க முனையையே குறிக்கின்றது. அவ்வாறான செயல்களின் விளைவுகளைப்பற்றிய பின்நடப்பினைப்பற்றி ஆய்வு நடத்தல்வேண்டும். ஏனெனில், இதனால் புதிய உண்மைகள் வெளிவரலாம். நடத்தை முறைகளில் மாறுதல்களும், வேறுவிதமாகச் செயலாற்றுதலும் இசைவானவையாய்க் காணப்படலாம். தனித்த மாணவனுக்கு அளிக்கப்படும் வெற்றிகரமான வழிகாட்டுதல் அவனுடைய பின்நடப்பினைப்பற்றி ஆய்வு செய்தல்வேண்டும் என்றும், அவனுடைய வாழ்க்கை வகை மாறுகின்ற வகையினைப்பற்றித் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்தவேண்டும் என்றும் உணர்த்துகின்றது.[8]

தொழில் அவாக்களும், வாய்ப்புகளும்

இன்றைய இளையோர்கள் வாழ்க்கைநிலைத் தரங்கள் உயர்ந்ததாலும், பணம் எளிதாக அவர்களுக்குக் கிடைப்பதாலும் கெட்டுவிட்டார்கள் என்ற கூற்றைச் சில சமயங்களில் கேட்கலாம். மேலும், இளையோர்கள் 'வேலை'யின் பயன்மதிப்பினை இழந்துவிட்டார்கள் என்றும், எளிதான வழியில் காரியங்களைச் செய்ய முனைகின்றார்கள் என்றும் கூறுகின்றார்கள். உயர்நிலைப் பள்ளிச் சிறுவர் சிறுமியர்கள் பணவெகுமதிக்காக வேலை செய்வதைப்பற்றி என்ன நினைக்கின்றார்கள் என்று கண்டுபிடிப்பதற்காக மிச்சிகன் (Michigan) ஆய்வில் 10,12ஆவது படிவ மாணவர்களிடம் கீழ்க்கண்ட கூற்றினை முடிக்குமாறு கேட்கப்பட்டது:

'நான் வேலை செய்யாமலேயே, நானும் என் குடும்பத்தாரும் விரும்பும் பொருளைப் பெறுமளவில், ஒரு நிரந்தரமான வருமானத்தினைப் பெற்றிருந்தால், நான்..................'

படம் 16—1-ல் மாணவர்களது துலங்கல்கள் அளிக்கப்பட்டுள்ளன.[9] இம் முடிவுகள், மாணவர்களிடம் சோம்பல்மட்டுமே சிறிய அளவு ஆதரவினைக் கொண்டிருந்தது என்பதைக் காட்டுகின்றன. பத்தில் ஏழு பேர் முழுமையான பொருளாதாரத் தற்காப்பு இருப்பினும், முழுநேர அல்லது பகுதிநேர வேலையை எடுத்துக்கொள்ளவே விரும்பினர். மற்றவர்கள் ஏதாகிலும் விருப்பத் தொழிலினையே தம்

[8] C. G. Wrenn and W. E. Dugan, 'Guidance Procedures in High School,' Minneapolis: University of Minnesota Press, 1950, pp. 17-18.

[9] 'Youth and the World of Work'. Social Research Service, Michigan State College, 1949, p. 10.

முடைய ஓய்வுநேரத்தில் கைக்கொள்ள விரும்பினர். இளையோர்களது பண்பாட்டில் வேலையினைப்பற்றிய கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்ருகவே இருந்தது.



படம் 16-1

உயர்நிலைப் பள்ளிச் சிறுவர்களும் சிறுமியர்களும் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றிருந்தால் என்ன செய்வார்கள் என்பதைக் குறிக்கின்றது (இளைஞர்களும் தொழில் உலகமும்).

தொழில் அவாக்கள்

உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் தங்களது தொழில் திட்டத்தில் மிக அதிகமான குறியின்மீது அவாக்கொண்டிருக்கின்ற போக்கினைக் காணலாம். மிச்சிகன் ஆய்வின் முடிவுகள், மாணவர்கள் 12ஆவது படிவத்தை அடையும்பொழுது, அவர்கள் புக இருக்கின்ற தொழிலினைப்பற்றித் திட்டவட்டமான எண்ணங்கள் கொண்டிருப்பதாகக் காட்டுகின்றன. இவ் வாய்வில் மாணவர்கள் தாங்கள் விரும்புகின்ற தொழில் வகையைப்பற்றி முதலில் கூறும்படி கேட்கப்பட்டார்கள். பின்னர் அவர்கள் தாம் எதிர்பார்க்கின்ற தொழிலினைக் குறிக்குமாறு கேட்கப்பட்டனர். (சிறுமியரிடம், பணம் கிடைக்கும் வேலையைச் செய்ய விரும்புவது திருமணத்திற்கு முன்னரா அல்லது பின்னரா என்று கேட்கப்பட்டது).

படங்கள் 16-2, 16-3-ல் அளிக்கப்பட்டுள்ள மிச்சிகன் ஆய்வின் முடிவுகள், சிறுவர்களில் 34 சதவீதத்தினரும் சிறுமியர்களில் 30 சதவிதத்தினரும் தாங்கள் அதிகமாக விரும்புகின்ற வாழ்க்கைத் தொழில் என்று ஊதியப் பணியாளர் (professionals) வேலையினையே குறிப்பிட்டனர் என்று காட்டின. இவற்றை மேலும் ஆய்ந்ததில், ஆண்களில் 22 சதவீதத்தினரும் பெண்களில் 23 சதவீதத்தினரும்மட்டுமே ஊதியப் பணியாளர் வேலைக்குப் போக எதிர்பார்ப்பதாகத் தெரியவந்தது. அட்டவணை 16-6-ல் காண்பிக்கப்பட்டுள்ளதுபோன்று உண்மையில் ஊதியப் பணியாளர் துறையில் இருப்பவர்களைக் கணக்கெடுத்தில், இத் துறையில் புக விரும்பியவர்களின் தொகை எதிர்பார்த்த எண்ணிக்கைக்கு மாறுன விகிதத் தொடர்பே கொண்டுள்ளது. படம் 16-3-ல் குறிப்பிட்டுள்ள 10ஆவது, 12ஆவது படிவச் சிறுமியர்களது தேர்ந்தெடுத்தல்கள்பற்றிய ஆய்வு, சிறுமியர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் ஊதியப் பணியாளர், எழுத்தர், விற்பனை வேலை ஆகிய வேலைகளில் அவாக்கள் கொண்டிருப்பதாயும், எட்டு சதவீதத்தினர்மட்டுமே இல்லக் காப்பாள் வேலையைத் தவிர மற்ற எல்லாத் தொழில்களுக்கும் செல்லத் தயாராக இருப்பதாகவும் காட்டுகின்றது. சிறுமியர்களது உண்மைநிலை உணர்வு, அவர்களில் பெரும்பாலானோர் இல்லக் காப்பாளர்களாக இருக்க விரும்பியதிலிருந்து தெரியவருகின்றது. உண்மையில் அவர்களுக்கு இருக்கின்ற வேலைகளை ஏற்றுக்கொள்ளும்போது அவர்கள் மிகவும் ஏமாற்றமடைவார்கள் என்று கூறலாம்.[10] இருப்பினும், குறைவான தொழில் நுணுக்கம் கொண்ட தொழில்கள், கணக்குத் தொழில், விற்பனைத் தொழில்கள் ஆகியவை மிகவும் கவர்ச்சிகரமாக இருப்பதாலும், நல்ல வருமானத்தை அளிப்பதாலும், அதிகமான உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இத் தொழில்களைத் தேர்ந்தெடுப்பார்கள். மிச்சிகன் உயர்நிலைப் பள்ளி மாணவர்களைத் தொழில் ஆடைகளுடன் தொடர்புபடுத்தி, அவர்களுடைய விருப்பத்தைப்பற்றிக் கேட்ட கேள்விக்குக் கிடைத்த பதில்களிலிருந்து இப் பிரச்சினைக்குரிய பதிலினைக் காணலாம். அட்டவணை 16-2-ல் அளிக்கப்பட்டுள்ள பதில்கள் பத்தாவது படிவத்தினரிலிருந்து 12ஆவது படிவத்தினர்வரை சாதாரண ஆடை உடுத்தித் தொழில் செய்யவே முன்னுரிமை அளித்தனர் என்பது புலனுகின்றது. சிறுமியர்கள் தொழில் ஆடைகளைவிடச் சாதாரண ஆடைகளையே விரும்பினுர்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. அமெரிக்கப் பண்பாட்டில், எல்லா வயது நிலைகளிலுமுள்ள இளையோர்களில், சிறுவர்களைக் காட்டிலும் சிறுமியர்கள் நல்ல ஆடைகளுக்கும் சொந்தத் தோற்றத்திற்கும் அதிகமான முக்கியத்துவம் அளிக்கின்றனர் என்பது உண்மையேயாகும்.

[10] Op. cit., p. 20.



படம் 16-2

[சிறுவர்கள் விரும்புகின்ற வேலை வகைகளுக்கும் எதிர்பார்க்கின்ற வேலை வகைகளுக்குமிடையேயுள்ள ஒப்புமை.

A ஊதியப் பணியாளர்களான விளையாட்டுக்காரர்கள். B விவசாயிகள் (சொந்தமாகவும் குத்தகைக்கும்). C முதலாளிகள், மேலாளர்கள், அதிகாரிகள். D எழுத்தர், தொடர்புடைய தொழிலாளர்கள். E ஊதியப் பணியாளர்கள். F தொழில்நுணுக்க உழைப்பாளிகள், மேஸ்திரிகள். G குறைவான தொழில் நுணுக்கமுடைய உழைப்பாளிகள். H வரையறையில்லாத, தெளிவற்ற அறிமுகமில்லாத தொழில்கள்—பதில் இல்லை—தெரியாது. I துலங்கல் இல்லை.

ஸ்டெஃப்பர் (Steffre) என்பார் அறிவித்த ஓர் ஆய்வு, குழந்தைகள் வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலேயே தங்களுக்கு முன்னே உள்ள சமூக நிலையின் இயல்புகளை ஏற்றுக்கொள்கின்றனர் என்ற கற்பிதத்திற்கு ஆதரவு அளிக்கின்றது.[11] கடினமான வேலைகள் உள்ள தொழில்களை விரும்புகின்ற இளையோர்கள் எல்லோரும், அவர்

[11] B. Steffre, 'Psychological Factors Associated with Aspirations for Socio-Economic Mobility,' California Journal of Educational Research, 1955, Vol. 6, pp. 55—60.



படம் 16-3

சிறுமியர்கள் விரும்புகின்ற வேலை வகைகளுக்கும் எதிர்பார்க்கின்ற வேலை வகைகளுக்கும் இடையேயுள்ள ஒப்புமை.

களுடைய பெற்றோர்களது சமூக நிலை எவ்வாறு இருந்தாலும், ஒரே மாதிரியாகவே இருக்கின்றனர். லாஸ் ஏன்ஜல்ஸ் (Los Angeles) நகரப் பள்ளிகளில் தொழில் வழிகாட்டல்-அறிவுரை பெற்ற சீனியர் உயர் நிலைப் பள்ளி மாணவர்களது அறிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டன. இம் மாணவர்கள் அவர்களது பெற்றோர்களது தொழில்களின் அடிப்படையிலும், அவர்கள் விரும்புகின்ற தொழில்களின் அடிப்படையிலும் வரிசைப்படுத்தப்பட்டனர். தொழில்கள் பின்னர் கீழ்க்கண்டவாறு இரு பிரிவுகளாக வகைபடுத்தப்பட்டன :

எளிதான வேலை: ஊதியப் பணியாளர், மேற்பார்வை அதிகாரி, எழுத்தர்.

கடினமான வேலை : தொழில்நுணுக்கம் தெரிந்தவர், தொழில் நுணுக்கம் தெரியாதவர்.

எளிதான வேலை இல்லங்களிலிருந்து வருகின்ற சிறுவர்களில் பெரும்பான்மையோர் எளிதான தொழிலினைத்தான் குறியாகக்கொண்டிருந்தனர். எளிதான வேலையுள்ள இல்லப் பின்னணியிலிருந்து வருபவர்கள் கடினமான வேலையில் ஆர்வங் கொண்டிருந்தால், தொழில் நுணுக்கம் உள்ள வேலையினைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களுடைய நுண்ணறிவுச் சோதனை அளவுகள், கல்வி அறிக்கைகள் ஆகியவை எளிதான வேலைத் தொழில்களில் நாட்டம் கொண்டிருந்தவர்களைக்காட்டிலும் குறைந்தனவாகவே இருந்தன. அவர்கள் குறிப்பிடும்படியான அளவு எளிதில் மனவுணர்ச்சி கொள்பவர்களாகவும்,

அட்டவணை 16—2

'மற்ற நிலைகள் சமமாக இருக்கும்பொழுது, எந்த விதமான வேலையைக் கொள்ள நீ விரும்புகின்ருய்?' என்ற கேள்விக்கு வெவ்வேறு பதில்களைக் கோடிட்டுச் சரிபார்த்த உயர்நிலைப் பள்ளிச் சிறுவர்சிறுமியர்களது சதவீதம்.

பதில்கள்	சிறுவர் படிவம் 10	சிறுவர் படிவம் 12	சிறுமியர் படிவம் 10	சிறுமியர் படிவம் 12	மொத்தம்
சாதாரண ஆடைகளை அணிகின்ற வேலையினையே விரும்புவேன்...	32	46	69	73	54
தொழில் ஆடைகள் — அதாவது மேலங்கியுடைய வேலையினையே விரும்புவேன்	30	22	4	4	15
அதைப்பற்றிக் கவலைப்படவில்லை...	32	28	22	20	26
துலங்கல் இல்லை	6	4	5	3	5
மொத்தம் ...	100	100	100	100	100

எளிதில் ஏற்றுக்கொள்பவர்களாகவும், அவர்களுடைய இல்லப் பின்னணிக்குச் சமமான பின்னணியிலிருந்து வருபவர்களைக்காட்டிலும் அதிகமான செயல்தன்மை கொண்டவர்களாகவும் இருந்தனர்.

கடினமான வேலைத் தொழில் பின்னணிகொண்ட இல்லத்திலிருந்து வருபவர்களில் பெரும்பான்மையான சீனியர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் எளிதான வேலைத் தொழில் அவாக்களைக் கொண்டிருந்தனர். இச் சிறுவர்கள், கடினமான வேலையினை அவாக்களாகக் கொண்டிருந்தவர்களுக்கும், எளிதான வேலைப் பின்னணியிலிருந்து வந்து எளிதான வேலையை நாடுபவர்களுக்குமிடையே இருந்தார்கள். அவர்களது நுண்ணறிவுச் சோதனை அளவுகள் கடினமான வேலைகளை நாடுபவர்களைக்காட்டிலும் அதிகமாக இருந்தன; ஆனால், நிலையாக இருக்கின்ற, எளிதான வேலைக் குழுவினரைக்காட்டிலும் குறைவானவையாகவே இருந்தது. அவர்கள் அமைதியானவர்களாகவும், சிந்தனை உடையவர்களாகவும் இருந்தனர். அவர்கள் வெளிப்படைச் செயல்களில் மிகவும் கவனமாய் இருந்தார்கள். கடினமான வேலைத்தொழிலில் நிலையாக இருக்கின்ற சிறுவன் அல்லது கீழ்நோக்கிச் செல்கின்ற சிறுவன் மிக எளிதாக மனவுணர்ச்சி கொள்பவனுகவும், அதிகமாகச் செயலில் ஈடுபடுபவனுகவும் இருக்கின்ருன். மேல்நோக்கிச்

செல்கின்ற தன்மை மோசமான பொருத்தப்பாட்டினால் விளைகின்றது என்ற கொள்கை இவ்வாய்வினால் ஆதரிக்கப்படவில்லை. ஆனால், இவ்வாறான சிறுவர்கள் பள்ளியில் சிறப்பாகப் பொருந்தியமைகின்றார்கள் என்று தோன்றுகின்றது. அவர்கள் எளிதான வேலைக் குழுவில் உள்ள பயன்மதிப்புகளைச் சிறப்பாக ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள் என்றும் தோன்றுகின்றது.

தொழில் தேர்ந்தெடுத்தல்களைப் பாதிக்கும் ஏதுக்களும் நிலைகளும்

இதுபற்றிக் கீழ்க்கண்ட கேள்வி கேட்கப்பட்டது: ஒருவருடைய தொழிலினைத் தேர்ந்தெடுப்பதற்குரிய காரணங்களாய் இருப்பவை எவை? 700 சீனியர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களைக் கொண்டு நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள், கீழ்க்கண்ட ஏதுக்களை அவைகளின் முக்கியத்துவத்திற்கு ஏற்றவாறு வரிசைப்படுத்திக் கூறியது: பெற்றோர், நண்பர், தொழில் நட்பு, பெற்றோரல்லாத மற்ற உறவினர்.[12] வரிசைப்படுத்தப்பட்ட மற்ற ஏதுக்கள்: முன்னேறுவதற்குரிய வாய்ப்பும், உடனடியாக வேலை கிடைப்பதற்குரிய வாய்ப்புமேயாகும். இம்முடிவுகள், இளையோர்களும் இளைஞர்களும் தொழிலினைத் தேர்ந்தெடுப்பதனைத் தீர்மானிப்பதில் இல்லம் தனித்த முக்கியத்துவம் கொண்ட பதிலான்மையாகும் எனும் பொதுவான கொள்கையினை ஆதரிக்கின்றன. இது தந்தையர்களது தொழில் அல்லது அதனை ஒட்டியுள்ள தொழிலில் இருக்கின்ற மகன்மாரது சதவீதம் பற்றிய ஆய்வின் முடிவுகளால் மேலும் தெளிவாகியுள்ளது.[13] அட்டவணை 16-3-ல் அளிக்கப்பட்டுள்ள இவ்வாய்வின் முடிவுகள், மகன்மாரில் 60·1-லிருந்து 71·9 சதவிதத்தினர் அவர்களுடைய தந்தையரது தொழில் அல்லது அதனை ஒட்டியுள்ள தொழிலில் இருக்கின்றார்கள் என்று காட்டுகின்றது. சிறுவனது சூழ்நிலையிலுள்ள பல ஏதுக்கள் இதனை உண்டாக்குகின்றன. அவனுடைய அவாக்கள், பயன்மதிப்புகள், ஒப்பார் தொடர்புகள், தொழில் அக்கறைகள், இல்லத்திலிருந்தும் சுற்றுப்புறச் சூழ்நிலையிலிருந்தும் அவன் பெற்ற அவாக்கள் ஆகியவை இவனுடைய இம் முடிவிற்குக் காரணமாகின்றன.

நார்ட்டன் (Norton) என்பவரது ஆய்வில், அவருடைய ஆட்படுவோர்கள் எந்த வயதில் தொழில் அக்கறைகளை முதன்முதல் கொண்டார்கள் என்று ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வு தொழிற்சாலைத்

[12] E. F. Peters, 'Factors Which Contribute to Youth's Vocational Choice,' Journal of Applied Psychology, 1941, Vol. 25, pp. 428-430.

[13] Reprinted from 'Occupational Mobility in an American Community,' by P. E. Davidson and H. Devey Anderson with the publishers, Stanford University Press. Copyright 1937, by the Board of Trustees of Leland Stanford Junior University.



படம் 16-4

ஒவ்வொரு வயதிலும் தொழில் அக்கறைகொண்ட சதவீதத்தினர் (கார்ட்டன்).

தொழிலாளர்கள் அக்கறைகளைப் பின்னர்தான் வளர்த்துக்கொள்கின்றனர் என்றும், ஆசிரியர்களைக்காட்டிலும் அவர்கள் குறைவான அக்கறைகளையே வளர்த்துக்கொண்டனர் என்றும் காட்டியது.[14] அவர்களுடைய முதல் தொழில் அக்கறையின் சராசரி வயது 12·9 ஆக இருந்தது. ஆனால், இதற்கு மாறாக ஆண் - ஆசிரியர்களது தொழில் அக்கறை 9·7 ஆண்டுகளிலும், பெண் - ஆசிரியர்களது தொழில் அக்கறை 8·8 ஆண்டுகளிலும் துவங்கியது.

படம் 16-4-ல் வெவ்வேறு வயது நிலைகளில் ஒவ்வொரு குழுவினரும்கொண்ட தொழில் அக்கறைகள் குறிக்கப்பட்டுள்ளன. எல்லாக் குழுவினரும் பதினேழாவது வயதிற்குள் தொழில் அக்கறையின் உச்சநிலையை அடைகின்றனர். ஆனால், ஆசிரியர்கள் அதிகமான அக்கறைகளின் நிலையினைக் கொண்டிருந்தனர். ஆனால், இதற்கு மாறாகத் தொழிற்சாலைத் தொழிலாளர்களது அக்கறைகள் குறைந்துகொண்டே வந்தன. பெண்ணினது அக்கறையின் தன்மை ஆணினது அக்கறையைக்காட்டிலும் அதிகமான அளவில் மாறுந்தன்மை கொண்டிருந்தது. அவர்களில் 49 சதவீதத்தினர் ஆசிரியரது தொழிலினையே முதல் அக்கறையாகக்கொண்டிருந்தனர். ஆண் - ஆசிரியர்கள் அவர்களுடைய குழந்தைப் பருவ அக்கறைகளில் மிகவும் அதிகமாக நிலையற்று இருந்தனர். இது சிறுவர்களுக்கு மிக அதிகமான செயல்கள் தேர்ந்தெடுக்க இருக்கின்றன என்பதனைக் குறிக்கின்றது

அட்டவணை 16—3

தந்தையர்களது தொழிலிலோ அதனை ஒட்டியுள்ள தொழிலிலோ இருந்த மகன்மாரது சதவீதம். (டேவிட்சன் ஆன்டர்சன் அளித்தது.)

தந்தையின் தொழில்	அத்தொழிலில் அல்லது அதனை ஒட்டியிருந்த தொழிலிலிருந்த மகன்மாரின் சதவீதம்
ஊதியப் பணியாளர்	61·6
முதலாளிகள்	60·1
எழுத்தர்	61·5
தொழில்நுணுக்கம்	73·5
குறைவான தொழில்நுணுக்கம்	68·1
தொழில்நுணுக்கமில்லாதவை	71·9

[14] J. L. Norton, 'Patterns of Vocational Interest Development and Actual Job Choice,' Journal of Genetic Psychology, 1953, Vol. 82, pp. 235-262.

என்பதில் ஐயமில்லை. தொழிற்சாலைத் தொழிலாளருக்கு ஊதியப் பணியாளனுன பந்து விளையாட்டுக்காரனே ஆண்களின் கவனத்தை மிகவும் கவர்ந்தவனுக இருந்தான். மற்றத் தொழில் அக்கறைகள் மிகவும் அதிகமான அளவில் பரவியிருந்தன.

மனத்திறனும் தொழில் அவாக்களும்

இளையோர்களது தொழில் அவாக்களைப் பல ஏதுக்கள் பாதிக்கின்றன. பிராட்லி (Bradley) என்பவரால் ஃபிலெடெல்ஃபியா (Philadelphia) பகுதிக்கு அருகிலுள்ள பள்ளிகள் சிலவற்றில் படித்த ஜூனியர், சீனியர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களில் 1500 பேருடைய தொழில் தேர்ந்தெடுத்தல்களைப்பற்றிய ஆய்வு நடத்தப் பட்டது.[15] இம் மாணவர்களது சராசரி நுண்ணறிவு ஈவு 104·3 ஆக இருந்தது. இவர்கள் நுண்ணறிவு ஈவு பெற்றிருந்த அளவு, உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் ஒரு தேர்ந்தெடுக்காத குழு பெற்றிருந்த வண்ணமே இருந்தது. இம் மாணவர்களது தொழில் தேர்ந்தெடுத்தல்கள் ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டன. அவைகளாவன: ஊதியப் பணியாளர், வியாபாரமும் எழுத்தர்துறையும், தொழில் நுணுக்கம், இராணுவம், குறைவான தொழில்நுணுக்கமும் தொழில்நுணுக்கமற்றவையும். அட்டவணை 16—4-ல் பல்வேறு நுண்ணறிவு நிலைகளிலுள்ளோர் தொழிற் குழுக்களில் தொழில் தேர்ந்தெடுத்தலைக்கொண்ட சதவீதம் காட்டப்பட்டுள்ளது. ஊதியப் பணியாளர் துறையினைத் தேர்ந்தெடுத்தவர்களது நுண்ணறிவு 108·25 ஆகவும், தொழில்நுணுக்கம் அற்ற வேலை வகைகளைத் தேர்ந்தெடுத்தவர்களது நுண்ணறிவு 99·50 ஆகவும் இருந்தது என்றுலும், பல்வேறு நுண்ணறிவு நிலைகளில் இருந்த தனியன்களை வெவ்வேருன தொழிற் குழுக்களினின்று தேர்ந்தெடுத்தார்கள். இக் குறிப்புகள், மனத்திறன் தொழில் தேர்ந்தெடுத்தலுக்கு மிகவும் நெருங்கிய தொடர்புகொண்டிருக்கின்றது என்பதை நிரூபித்தாலும், அது பல ஏதுக்களில் ஒன்றேயாகும்.

வகுப்பு அந்தஸ்தும் தொழில் அவாக்களும்

பிராட்லி நடத்திய ஆய்வும், மற்ற ஆய்வுகள் இதற்கு அளித்த ஆதரவும், இளையோர்களது தொழில் தேர்ந்தெடுத்தலினைப் பாதிக்கின்ற முக்கிய ஏதுக்களில் குடும்பத்தின் சமூகப் பொருளாதார அந்தஸ்தும் ஒன்றுகும் எனக் காட்டுகின்றன. எல்மடௌன் இளைஞர்களது அவாக்கள்பற்றிய ஆய்வு, வேலைவாய்ப்புகள் வேலையினை நாடுகின்ற சிறுவன் அல்லது சிறுமியின் வகுப்புநிலைக்கு மிகவும்

[15] W. A. Bradley, 'Correlates of Vocational Preferences,' Genetic Psychology Monographs, 1943, Vol. 28, pp. 99-169.



படம் 16-5

எல்ம்டௌன் இளைஞர் வகுப்புவாரியாகவும், தொழிற் குழுக்கள் அடிப்படையிலும் தேர்ந்தெடுத்த தொழில்கள்.

(ஹோலிங்ஸ் ஹெட் அளித்தது).

நெருங்கிய தொடர்புகள் கொண்டிருப்பதாகக் காட்டுகின்றது.[16] வகுப்பு IIஐச் சார்ந்த சிறுவர்களும் சிறுமியர்களும் அவர்களது குடும்பச் செல்வாக்கின் காரணமாக அவர்கள் வேலைக்குச் சென்றால், மிகவும் விரும்பத்தக்க வேலையினையே பெறுகின்றனர். வகுப்பு Vஐச் சார்ந்தவர்களும், அதனைக்காட்டிலும் குறைவான அளவில் வகுப்பு IVஐச் சார்ந்தவர்களுமான சிறுவர்களும் சிறுமியர்களும் அவர்களுக்குக் கிடைக்கின்ற முழுநேர வேலையினையோ பகுதிநேர வேலையினையோ ஏற்றுக்கொள்ள வேண்டியதாயுள்ளது. இதன் முடிவு என்னவெனில், பொதுவான அலுவலக, எழுத்தர் வேலைகள் வகுப்பு II, வகுப்பு III

அட்டவணை 16—4

உயர்நிலைப் பள்ளி மாணவர்களது மனத்திறனும், தொழில் தேர்ந்தெடுத்தலும். (பிராட்லி அளித்தது)

நுண்ணறிவு ஈவு	தேர்ந்தெடுத்த சதவீதம்* ஊழியப் பணியாளர்	வியாபாரம் எழுத்தர்கள்	தொழில் நுட்பம்	இராணுவம்	குறைவான தொழில் நுட்பம்	தொழில் நுட்ப மற்றவை	மொத்தம்
140–149	·2	·0	·0	·0	·0	·0	·2
130—139	·6	·3	·1	·3	·0	·0	1·3
120—129	1·5	3·6	·7	1·7	·0	·0	7·5
110—119	5·5	7·2	3·2	5·3	·3	1·0	22·5
100—109	6·3	12·8	3·3	5·7	1·9	2·5	32·5
90— 99	3·0	9·0	2·7	8·3	·3	2·0	25·3
80— 89	·7	1·3	2·3	3·4	1·0	1·0	9·7
70— 79	·0	·3	·0	·0	·0	·7	1·0
மொத்தம்	17·8	34·5	12·3	24·7	3·5	7·2	100·0
சராசரி நுண்ணறிவு ஈவு	108·25	105·19	103·48	101·14	102·37	99·50	104·31

* இராணுவத்தைப்பற்றிய தேர்ந்தெடுத்தல்கொண்ட அதிக எண்ணிக்கை அங்கு நிலவிய தற்கால நிலையினையே குறிக்கின்றது.

[16] Figure 16-5 is based on data reprinted by permission from Elmtown's Youth by A. B. Hollingshead, published by John Wiley & Sons, Inc., 1949.

சிறுவர் சிறுமியர்களுக்குக் கிடைத்தன. சிறு வேலைகள், கடைகள் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் உள்ள வேலைகள் ஆகியவை வகுப்பு IV, வகுப்பு IIIஐச் சார்ந்த சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் கிடைத்தன.

எல்ம்டௌன் ஆய்வில், ஒவ்வோர் இளையோனிடமும் அவன் முதிர்ச்சியடைந்த பின்னர் அவன் பின்பற்ற விரும்புகின்ற வேலை அல்லது தொழிலினைக் குறிக்கும்படி கேட்கப்பட்டது. படம் 16—4-ல் அளிக்கப்பட்டுள்ள முடிவுகள், வெவ்வேறு தொழிற் குழுக்களுக்காக வகுப்புகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களைக் காட்டுகின்றன. வகுப்பு I, II ஐச் சார்ந்த இளையோர் சிறுவர்களில் 77 சதவீதத்தினர் முதலில் வியாபாரம் அல்லது ஊதியப் பணியாளர்களாக இருக்க விரும்பினர். இவர்களது இரண்டாவது விருப்பமாக விவசாயத்தை அளித்தனர். சிறுமியர்கள் திருமணம் செய்துகொள்ள விரும்பினர். வகுப்பு III ஐச் சார்ந்தவர்களும் இதுபோன்றே தேர்ந்தெடுத்தனர். ஆனால், இவர்களில் 36 சதவீதத்தினர்மட்டுமே வியாபாரம் அல்லது ஊதியப் பணியாளராக இருக்க விரும்பினர். எழுத்தர் பகுதியினைத் தேர்ந்தெடுப்பதில் இக்குழுவினர் அதிக அக்கறை காட்டினர். இது இவ் வகுப்பினரது முதியோரில் பெரும்பகுதியினர் இத் தொழிலினையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருப்பதன் காரணமாய் விளைந்தது என்பதில் ஐயமில்லை. வகுப்பு IIஐச் சார்ந்தவர்களும் வகுப்பு IIIஐச் சார்ந்தவர்களும் எத்தொழிலினையும் தேர்ந்தெடுக்காதவர் நிலையில் அதிகமாக இருப்பதிலிருந்து, இவ் விளைஞர்களில் பலர் அவர்களது அவாக்களையும் திறன்களையும் வாய்ப்புகளையும் சரிவர இணைத்து ஒன்றுபடுத்த இயலவில்லை என்பது தெளிவாகிறது. வகுப்பு III-ல் இருந்த பல இளையோர்கள் அவர்களது பெற்றோர்கள் கொண்ட தொழிலினைக் காட்டிலும் சிறந்த தொழிலினைக் கைக்கொள்ள விரும்பினாலும், அவர்கள் அவ்வாறு செய்யவுறமுடியாமல் பொருளாதார நிலையும் மற்ற நிலைகளும் அவ்வாறான தொழிலுக்குரிய பயிற்சியைப் பெறமுடியாமல் தடுக்கின்றன. எத்தொழிலினையும் தேர்ந்தெடுக்கமுடியாத நிலையிலிருப்பவர்களது எண்ணிக்கையில் தொடர்ச்சியான கூடுதல் வகுப்பு III-லும், வகுப்பு IV-லும், வகுப்பு V-லும் இருப்பதைக் காணலாம்.

வகுப்பு V கொள்ளும் தொழில் தேர்ந்தெடுத்தல் வகை வகுப்பு I அல்லது வகுப்பு II கொள்வதற்கு அநேகமாக நேர் எதிராக உள்ளது. இக் குழுவில் 41 சதவீதத்தினருக்குத் தீர்மானமான தேர்ந்தெடுத்தல் இல்லாத நிலை மிகவும் குறிப்பாகக் காணப்படுகின்றது. பலவகைப்பட்ட தொழில்களும், அதாவது மிருகங்களைப் பழக்குதல், கழைக்கூத்து ஆகியவைகளும் இக் குழுவினரால் வகைப்படுத்தப்பட்டன. நுண்ணிய திறன் உள்ள தொழில்களைக் குறிப்பிட்ட 14 சதவீதத்தினர் எதிர்காலத்திற்கான முறையான திட்டங்களைக் கொண்

டிருந்தவர்களைச் சேர்ந்தவர்களாவர். இக் குழுவினருக்கு விவசாயம் அதிகமான ஆர்வத்தைத் தரவில்லை. ஆனால், இக் குழுவினரது பிற்கால வாழ்க்கைபற்றிய ஆய்வு, இவ் வகுப்பு அந்தஸ்தினருக்கும், விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டோரின் எண்ணிக்கைக்கும் முன்னைய நிலையைக் காட்டிலும் நெருங்கிய உறவினைக் கொண்டிருப்பதைக் காணலாம். சிறுமியர்களில் பெரும்பாலானோர் குடும்பப் பெண்களாக ஆவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், இவ் வாய்வில் சிறுமியர்களில் ஒரு பகுதிப் பேர்மட்டுமே குடும்பப் பெண்களாகவும், மறுபகுதியினர் ஊதியப் பணியாளராகவும், எழுத்தராகவும், வியாபாரம் செய்பவராகவும் ஆக விருப்பம் தெரிவித்தனர். சிறுமியர்களில் பலர் விஞ்ஞான, பொறியியல் பயிற்சி தேவையாயுள்ள பல தொழில்களில் நாட்டம் தெரிவித்தனர். ஆனால், அவர்களில் பெரும்பான்மையான சதவீதத்தினர் அவ்வாறான பயிற்சியை எப்பொழுதும் பெறவியலாது.

நமது ஜனநாயக எண்ணங்களின் தொடர்பில் நாம் பல கொள்கைகளைக் கொண்டிருந்தாலும், மனிதவியல் — சமூகவியல் ஆராய்ச்சி, தனியன்கள் பல பற்றார்வங்களையும் தனித்த பங்குகளையும் அவர்கள் வகுப்பு உறுப்பினர் என்ற அடிப்படையிலேயே பெறுகின்றார்கள் என்று காட்டுகின்றது. மேலும், இவ்வாய்வுகள் நமது வகுப்பு அமைப்பு மாறுந்தன்மையுடையது என்றும் காட்டியுள்ளன. ஆனால், பலர் கூறுவதுபோன்று இத்தன்மை மிக அதிகமாக இல்லை. இதைத் தவிர, தொழில்கள் வகுப்பு அந்தஸ்தினைத் தீர்மானிப்பதில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஏனெனில், சில தொழில்களுடன் பல்வேறு இயல்புகள் சேர்ந்துள்ளன. அவைகளாவன: வேலையின் தன்மை, சக்தியின் அளவு, நண்பர்களின் தன்மை, பயிற்சி, கல்வித் தேவைகள், வருமானம், தற்காப்பு போன்றவைகளாகும். தொழில் நாட்டங்களும் பற்றார்வங்களும் வளர்ச்சியுற வகுப்பு அந்தஸ்தின் பங்கினைப்பற்றி லெவின் (Levin) கூறுகிறார்:

‘ஆதலால், தொழில்களுக்கும் அவைகளின் பொதுவான வகுப்பு அந்தஸ்திற்குமிடையே உள்ள உறவுகளைக் காணும்போது, சில மனப்பான்மைகளும் நம்பிக்கைகளும் பல்வேறு தொழில்களுடன் தொடர்புகொண்டிருக்கின்றன என்று அறியலாம். பல்வேறு தொழில்களுக்குத் தேவையான மனவெழுச்சி, ஆளுமைத் தேவைகளில் பெரும் பகுதி அடிப்படையில் வகுப்பு அந்தஸ்து சக்திகளைச் சார்ந்திருக்கின்றனவேயன்றி வேலைத்தேவைகளைச் சார்ந்திருக்கவில்லை என்று கூறுவது தவறன்று. ஆதலின், ஊதியப் பணியாளன் தொழில் நுணுக்கம் கொண்ட தொழிலாளியிடமிருந்து மாறுபட்ட தோற்றத்தையும், நடத்தையையும், எண்ணத்தையும், உணர்வினையும் கொண்டிருப்பான் என்று எதிர்பார்க்கப்படுகின்றான். குறைந்த தொழில் நுணுக்கம்கொண்ட தொழிலாளியிடமிருந்து அல்லது

தொழில் நுணுக்கமற்ற தொழிலாளியிடமிருந்து மேலும் மாறுபட்டிருப்பான் என்று எதிர்பார்க்கப்படுகின்றான். தொழில்கள், ஒரே மாதிரியாகப் படிப்படியாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அவைகளின் வகுப்பு அந்தஸ்து இயல்புகளின் அடிப்படையிலேயே ஆகும்.

ஒப்பீட்டடிப்படையில் மாறுதலுக்குள்ளாகின்ற வகுப்புச் சமூகத்தில், மேலும் தொழில்கள் வகுப்புகளை நிர்ணயம் செய்கின்ற சமூகத்தில், பலர் தொழில் அடைவின் காரணமாக ஆத்மதிருப்தி கொள்வது சாத்தியமே ஆகும். தொழில்கள் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். அவர்களுடைய தற்பொழுதைய வகுப்பினைக் காப்பாற்றிக்கொள்ளும் தன்மையில் தொழில்கள் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். மேலும், தனியன் விரும்புகின்ற தொழில் அவனுடைய வகுப்பு நிலை எதிர்பார்க்கும் அளவில் இருக்கவேண்டும் அல்லது அவனை ஊக்குவிக்கும் பொழுது உயர்ந்த வகுப்பு அந்தஸ்திற்குச் செல்லத் தனியனுக்கு வழி வகுக்கின்ற தொழிலாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.[17]

தொழில் தேர்ந்தெடுத்தல்களும் வாய்ப்புகளும்

தொழில் தேர்ந்தெடுத்தல்கள் சமூக ஏதுக்களால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. ஆதலின், தொழில் தேவைகளுக்கு ஏற்ப அமைவதில்லை. உயர்நிலைப் பள்ளிச் சிறுவர் சிறுமியர்களைக்கொண்டு தொழில் தேர்ந்தெடுத்தல்களைப்பற்றிச் செய்த ஆய்வினின்று இது தெளிவாகத் தெரிகின்றது. பல பொதுவான ஆய்வுகளிலிருந்து, குழந்தைகள் தொழில்களைத் தேர்ந்தெடுப்பதில் பெற்றோர் கொள்ளும் செல்வாக்குப்பற்றி அறிந்துகொள்ளப்பெற்றது. நான்கு பொறியியல், கலை உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள 4543 சிறுவர்களைக் கொண்டு நடத்திய கேள்வி நிரல் ஆய்விலிருந்து கிரோகர், லூடிட் (Kroger and Louttit) என்போர் முடிவுகளை அளித்துள்ளனர்.[18] சிறுவர்களில் தொண்ணூறு சதவீதத்தினர் தொழில் தேர்ந்தெடுத்தல்களைப்பற்றிக் குறிப்பிட்டனர். பெரும்பான்மையோர் தங்கள் தந்தையர்களது தொழில்களைக் காட்டிலும் உயர்ந்த தொழில்களைக் குறிப்பிட்டனர். சென்சஸ் கணக்குகளுடன் இதனை ஒப்பிடும்பொழுது, சிறுவர்களில் 70 சதவீதத்தினர், குறிப்பிட்ட தொழில்களில் 35 சதவீதத்தினர்மட்டுமே அவ்வேலைகளைப் பெற்றிருந்தவர்களாய் இருந்தனர்.

[17] M. M. Levin, 'Status Anxiety and Occupational Choice,' Educational and Psychological Measurement, 1949, Vol. 9, pp 29-38.

[18] R. Kroger, and C. M. Louttit, 'The Influence of Fathers' Occupations on Vocational Choices of High School Boys', *Journal of Applied Psychology*, 1935, Vol. 9, pp. 203-212.

மாணவர்களுக்கு அவர்களது தொழில் அவாக்கள்பற்றி அறிவுரை வழங்கும் பணியிலுள்ள ஒவ்வோர் ஆசிரியரும் தொழில் தேவைகள், போக்குகள் பற்றிய செய்திகளை அறிந்திருக்கவேண்டும். 1870ஆம் ஆண்டிலேயே அமெரிக்கத் தொழிலாளர்களில் பாதிப்பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். 1950ஆவது ஆண்டு சென்ஸஸ் கணக்குப்படி தொழிலாளர்களில் 10 சதவீதத்தினர் விவசாயிகள், விவசாய மேற்பார்வையாளர், மேஸ்திரிகள், விவசாயத் தொழிலாளிகளாக இருந்தனர். கடந்த பதினைந்து ஆண்டுகளில் மிக அதிகமான அளவில் விவசாயத்துறையில் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டதால், விவசாயத்துறையில் ஈடுபடுவோரின் சதவீதம் குறைந்துவிட்டது. ஆனால், அதே சமயம் எழுத்தர், நுண்ணிய வேலைக்காரர், வேலைக்காரர்கள், இயந்திரம் இயக்குவோர் ஆகியோர் துறைகளில் அதிகமான எண்ணிக்கைக் கூடுதல் ஏற்பட்டுள்ளது. அட்டவணை 16-5-ல் முக்கியத் தொழிற் குழுக்களில் தொழிலாளிகள் எவ்வாறு இருக்கின்றனர் என்ற குறிப்புகள் தரப்பட்டுள்ளன. இக்குறிப்புகள் இளையோர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கும் வழிகாட்டுவதற்கும் மிகவும் பயனுள்ளவையாய் இருக்கும். ஆனால், சமுதாய நிலைகளும் சமுதாயத் தேவைகளும் தொழில் அவாக்களிலும் இளையோர்களுக்குரிய வாய்ப்புகளிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பள்ளியில் அறிவுரை வழங்குவோர், இளையோர் சிறுவர்சிறுமியர்களிடத்துக் கொள்ளும் தொடர்புகளில் நேர்மையானவராகவும், உண்மை நிலையை உணர்பவராகவும் இருக்கவேண்டும். தொழில் தேர்ந்தெடுத்தல்கள், முடிவில் தனியன்களது திறமைகளுடன் ஒன்றியிருக்கவேண்டும்; அவர்கள் முன்னிருக்கும் தொழில் தேவைகளைப் பொறுத்தும் அவை இருக்கவேண்டும்.

தொழில் தேவைகளும், மனப்பான்மைகளும்

கல்வித் தேவைகள்

உயர்நிலைப் பள்ளியில் பொதுக் கல்வி பெற அதிகமான தேவை ஏற்பட்டது பல்வேறு தொழில்களுக்கும் வேலைகளுக்குமுள்ள தேவைகளின் விளைவால் அல்ல என்று கூறுவதற்குப் போதிய சான்று உள்ளது.

ஆனால், உயர்நிலைப் பள்ளி நிலைவரை எல்லோரும் கல்வி பெறுதற்குத் தேவையில்லை என்று இதற்குப் பொருள் கொள்ளக்கூடாது; இன்றைய சமூக நிலையின் அதிகமான சிக்கல் வாய்ந்த தன்மையின் காரணமாகவே இக்கல்வித் தேவை ஏற்பட்டுள்ளது என்றே நாம் பொருள் கொள்ளவேண்டும். ஆனால், இக்கல்வித் தேவை தொழில் தன்மையினால் ஏற்பட்ட தேவையன்று. இருப்பினும், தொழில் உலகில்

அட்டவணை 16—5

1940,1950 சென்ஸஸ் கணக்குப்படி, முக்கியத் தொழிற் குழுக்களில், வேலைபார்த்த தொழிலாளர் சதவீதம்.

	1950			1940
	ஆண்	பெண்	மொத்தம்	மொத்தம்
ஊதியப் பணியாளர், பொறியியல், அதன் தொடர்பிலுள்ள தொழிலாளர்கள்	7·3	12·3	8·7	7·5
மேற்பார்வையாளர்கள், அதிகாரிகள், முதலாளிகள், (விவசாயத்தைத் தவிர மற்றவைகளில்) ...	10·7	4·3	8·9	8·3
விவசாயிகள், விவசாய மேற்பார்வையாளர்கள், விவசாயத் தொழிலாளிகள் (ஊதியம் பெறும் தொழிலாளிகள் அனைவரும்)	15·2	3·5	9·9	18·6
எழுத்தர்போன்ற தொழிலாளிகள்	6·4	27·3	12·3	10·4
விற்பனைத் தொழிலாளர்கள் ...	6·4	8·5	7·0	6·5
நுண்ணிய திறமைகொண்டவேலைக்காரர், மேஸ்திரி போன்ற வேலைக்காரர்கள்	18·6	1·5	13·8	11·2
இயந்திரத்தை இயக்கும் தொழிலாளர்கள், அதனைப் போன்ற தொழிலாளர்கள்	20·0	19·2	19·8	18·5
வீடுகளில் வேலைபார்ப்போர் ...	0·2	8·5	2·5	4·9
தனி வீடுகள் தவிர மற்ற இடங்களில் வேலைபார்ப்போர் ...	5·9	12·2	7·6	7·3
விவசாய, சுரங்கத் தொழிலாளர்களைத் தவிர மற்றத் தொழிலாளர்கள்	8·2	0·8	6·1	6·8
இதில் கூறப்படாத மற்றத் தொழில்கள்	1·1	1·8	1·3	...

புகுகின்ற இளைஞர்களது சராசரிக் கல்வி நிலை உயர்ந்திருக்கிறது. பட்டம் பெறுது உயர்நிலைப் பள்ளியினின்று வெளியேறும் இளைஞர்கள், அவர்களைக் காட்டிலும் அதிகமான கல்வி பெற்றிருக்கின்ற தனியன்களுடன் வேலைக்காகப் போட்டியிடவேண்டிய நிலையிலுள்ளார்கள். வேலை தருபவர்கள் இவ்வாறு பட்டம்பெறுது பள்ளியிலிருந்து நின்று விடுபவர்களை முதிர்ச்சியடையாதவர்கள், நம்பிக்கைக்குகந்தவர்களல்லாதவர்கள், அனுபவமற்றவர்கள் என்றே கருதுகின்றார்கள். பல பெட்ரோல் பிடிக்கும் நிலையங்களை மேற்பார்வை செய்பவர் ஒருவர், இந்நூலாசிரியரிடம் உயர்நிலைப் பள்ளியில் பட்டம் பெற்றவர்களைமட்டுமே வேலைக்கு அமர்த்திக்கொள்வதற்குரிய காரணங்களை விளக்கும்போது குறிப்பிட்டதாவது :

'உயர்நிலைப் பள்ளியில் பட்டம் பெற்றவர்கள் திறமை வாய்ந்தவர்களாக இருக்க மிகவும் ஆசைப்படுகிறார்கள். குறிப்பிட்ட நேரத்தில் வேலையில் இருக்கவேண்டும் என்று அறிவித்தால், அந்நேரத்தில் வேலையில் இருப்பார்கள் என்று நம்பலாம். அவர்கள் அதிகமான நுண்ணறிவு பெற்றிருக்கிறார்கள்; தேவைப்படும்பொழுது பொறுப்பினை ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் பெட்ரோல் பிடிக்க வருபவர்களிடம் மரியாதையாக நடந்துகொள்வதனுல், வியாபாரம் பெருகுகின்றது.'

உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்கும் சிறுவர்சிறுமியருடன் முடிக்காதவர்களை ஒப்பிடும்பொழுது, சில சுவை மிக்க முக்கிய மாறுபாடுகளைக் காணலாம். பொதுமைகளைக் கொள்ளும்பொழுது ஒருவர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்றுலும், அதிகமான அளவு பள்ளியில் படிக்கும்பொழுது அவர்களது குணவியல்பிலும், ஆளுமையிலும், அவர்களது அறிவிலும், திறனிலும், புரிந்துகொள்வதிலும் இசைவான விளைவுகள் ஏற்படுகின்றன என்று கூறுவதற்குத் தனியாள் வரலாறுகளும், குழுவினர்களது ஒப்புமை ஆய்வுகளும் சான்றுகள் அளிக்கின்றன. ஓர் ஆய்வில், 'யார் கூறவும்' சோதனையை 6ஆவது 9ஆவது படிவத்தாரிடம் தந்து, அதன் முடிவுகள் மூலம், பள்ளிப் படிப்பினை முடித்தவர்கள் பள்ளிப் படிப்பினை முடிக்காதவர் ஆகியோரிடையேயுள்ள மாறுபாடுகள் உணர்த்தப்பெற்றன.[19] பள்ளியைவிட்டு நின்றுவிட்ட 6ஆவது படிவத்தினர், ஆறுவது படிவத்தினரைக்காட்டிலும் வயதானவர்களாக நடந்துகொண்டார்கள். அவர்கள் பட்டப் படிப்பு முடித்தவர்களைக் காட்டிலும் அமைதியானவர்களாகவும், புகழற்றவர்களாகவும், கவலை கொண்டவர்களாகவும், நட்

[19] R. G. Kuhlen and E. Gordon, 'Sociometric Status of Sixth and Ninth -graders Who Fail to Finish School,' Educational and Psychological Measurement, 1952, Vol. 12, pp. 632-637.

பில்லாதவர்களாகவும், மகிழ்ச்சியற்றவர்களாகவும், சுறுசுறுப்பற்ற வர்களாகவும் இருந்தனர்.

இளைஞர்களது தொழில் தேவைகள்

முன்னைய அதிகாரங்களில் ஒரு தலைமுறை அல்லது அதற்கு முன்னுள்ள இளைஞர்கள் வாழ்க்கையினைக் கடைபிடிப்பதற்கு அனுபவித்த பிரச்சினைகளைக் காட்டிலும் இன்றைய இளைஞர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள் அடிப்படையான மாறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன என்று கண்டோம். இவ்வாறான மாறிய நிலைகள், அவைகளுடன் மாறிய தொழில் தேவைகளைக் கொண்டுவந்துள்ளன. ஓரளவு தொழிலாளியின் வேலை வேகம் அவனுடைய சமூகச் சக்திகளினால் ஆளப்படுகின்றது அல்லது அவனுடைய தொழிற்சாலையிலுள்ள இயந்திரத்தினால் ஆளப்படுகின்றது. தொழிலாளி, பொறியியல் சமூகத்தினால் அளிக்கப்படும் பல்வேறு சக்திகளினாலும் நிலைகளினாலும் கொடுக்கப்படுகின்ற தேவைகளைச் சந்தித்து, அதனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யத் தயாராக இருக்கவேண்டும். வேலையின்போது சில தனித்த வேலைகள் செய்யும்படி அவன் கோரப்படலாம். அதற்கு மிகச் சிறிய அளவு தனித்த பயிற்சியும் தேவையுள்ளதாய் இருக்கலாம். இவ்வாறு ஒரு தொழிலாளியின் தொழில் தேவைகளை அவன் கொண்டிருக்கின்ற தனித்த திறமைகளின் அடிப்படையில்மட்டுமே சிந்திக்க முயல்வது தவறாகும். புதிய தொழிலாளி தன்னுடன் வேலை மனப்பான்மைகள், பழக்கங்கள், நோக்குகள், ஒழுக்க நெறிகள், ஆரோக்கியம், குடிமைக் குணங்கள் ஆகியவற்றை உடன் கொண்டுவருகின்றான். இவைகள் அவ்வேலையில் அவன் வெற்றிபெறுவதற்கு முக்கியக் காரணங்களாக அமைகின்றன. உழைப்பு, நம்பிக்கை, கட்டளையினைப் பின்பற்றுதற்குரிய திறன், நல்ல சொந்த சமூகப்-பொருத்தப்பாடுகள், பொதுப்பணியில் கூட்டாகப் பணிபுரிய விருப்பமும் திறனும் ஆகிய குணவியல்புகளைப் பள்ளியிலேயே ஒருவன் பெற்றால்தான், அவனால் வேலையில் வெற்றிபெற இயலும்.

கலிஃபோர்னியா (California) பகுதியைச் சார்ந்த கெர்ன் (Kern) பகுதியில் நடந்த சமுதாயத் தொழில் மதிப்பீடு, அங்கு உள்ள தொழிலாளிகள் அவர்களுக்கு வேலை கொடுப்பவர்களது இசைவான சொந்தக் குணவியல்புகளைப்பற்றி மிகவும் கவலை கொண்டனர் என்று காட்டியது.[20] மேற்பார்வையாளர்களிடமும், சொந்த இயக்குநர்களிடமும் நடந்த நேரடி உரையாடல்களிலிருந்து, சில சொந்தக்

[20] R. Prator, 'The Employer Survey and General Education,' California Journal of Secondary Education, 1950, Vol. 25, pp. 438-440.

குணங்கள் மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டன என்பது தெரிய வந்தது. வணிகத்துறையில் இருந்த ஒரு வேலை தருவோருக்குத் தேவையான, இசைவான குணவியல்புகள் 'இனிமையான தோற்றம், நேர்மை, நம்பிக்கை, மற்றவர்களுடன் சிறப்பாகப் பழகுவதற்குரிய திறமை, வணிகத்துறையினைக் கற்றுக்கொள்வதற்குரிய ஆர்வம்' ஆகியவைகளாகும்.

அட்டவணை 16-6-ல் வேலை கொடுப்போரில் பலர் விரும்பிய இயல்புகள் அளிக்கப்பட்டுள்ளன. இளைஞர்களது கல்வித் திட்டத்தில் அக்கறை கொண்டுள்ளோர், இப்பட்டியலில் சிறப்பாகப் பள்ளியில் தேருவது ஐந்தாவது இடத்தைமட்டுமே பெற்றிருப்பதைக் கவனிக்க வேண்டும். நேர்மை, நம்பிக்கை, சுத்தம், மக்களைச் சந்திக்கும் திறன் ஆகியவைகளையே அதிகமான அளவு வேலை தருவோர் குழுக்கள் வரிசைப்படுத்தியுள்ளதைக் காணலாம். திறமை அல்லது வேலைக்கான பயிற்சியைக் காட்டிலும் மேற்சொன்ன குணங்களே அடிக்கடி வரிசைப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். வெற்றிகரமான சுருக்கெழுத்துக்காரராக இருப்பதற்குக் குறிப்புகள் எடுப்பதிலும், சுத்தமாகத் தட்டெழுத்து அடிப்பதிலும் திறனிருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால், ஆரோக்கியம் கவனிக்கப்படாது விட்டு விடப்பட்டால் அல்லது குறிக்கப்படும் நேரத்தில் கடிதத்தினைத் தயார்செய்யும் அளவு ஆரோக்கியம் இல்லை என்றால், திறமை வாய்ந்த சுருக்கெழுத்துக்காரரின் பயன் மதிப்பு அவருடைய வேலை தருவோருக்கு மிகவும் பழுதாகின்றது அல்லது பயனற்றுவிடுகின்றது.

டோன் (Doane) என்பவரால் நடத்தப்பட்ட ஆய்வில், ஒரு செயலினைத் தேர்ந்தெடுக்கும் செய்கையானது, அதிகமான அளவு துலங்கலை உண்டாக்கக்கூடிய உள - உயிரியல் தேவைகளுடன் இருந்தது என்பது விளக்கப்பட்டது.[21] தொழில் தேர்ந்தெடுத்தல், இடத்தில் அமர்த்தல் ஆகியவை மற்றப் பரப்புகளைக் காட்டிலும் அதிகமான அக்கறையை ஊட்டின. இப்பகுதிகளில் அடிக்கடி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளாவன: எவ்வாறு வேலைக்கு மனுச்செய்வது? வேலையில் எப்படித் தொடர்ந்து இருப்பது? நான் சிறப்பாகப் பொருந்தி அமைகின்ற வேலை எதுவென்று எப்படிக் கண்டுபிடிப்பது? ஒவ்வொரு வயதுக் குழுவிலும் இருந்த சிறுவர்சிறுமியர் தொழில் வழிகாட்டல் இனங்களில் பெரும்பாலானவற்றைக் காட்டிலும் குறைவான அளவே ஒரு வேலைக்கான பயிற்சியின் தொடர்பிலுள்ள தலைப்புகளைத் தேர்ந்தெடுத்தனர். இது இளையோர்கள் தொழிற் பயிற்சியைக் காட்டிலும் தொழில் வழிகாட்டலையே அதிகமான தேவையுள்ள

[21] D. C. Doane, 'The Needs of Youth : An Evaluation for Curriculam Purposes,' Teachers College, Columbia University, Contributions to Education, No. 848, 1942.

தாக உணர்ந்ததைக் காட்டுகின்றது. சிறுமியர்களைக் காட்டிலும் சிறுவர்களிடத்து இவ்வாறான உதவியின் தேவை அதிகமாக உணரப் பட்டது. அவர்கள் பள்ளியைவிட்டுச் செல்லும் காலம் நெருங்கும் பொழுது, இவ்வுணர்வு உச்சநிலையை அடைகின்றது.

அட்டவணை 16—6

பெரும்பான்மையான வேலை தருவோர் விரும்பிய சொந்த-உடல் குணவியல்புகள் முக்கியத் தொழில் உலக மதிப்பீட்டினால் 1949-ல் அளிக்கப்பட்டது (பிரேட்டர் தந்தது).

வேலை தருபவர்களால் கூறப்பட்ட சொந்த அல்லது உடல் குணவியல்புகள்	கூறப்பட்ட எண்ணிக்கையின் அளவு	விவசாயம்	தொழில் உகப், முக்கியப் பொருள்கள்	தயாரித்தல் வியாபாரம் விற்பனை	இன்சூரன்ஸ், சொத்து, அரசு	இராணுவம்
நேர்மை	476	27	43	201	37	168
சுத்தம்	454	13	25	191	57	168
நம்பிக்கை	378	19	59	110	50	140
மக்களைச் சந்தித்தல்...	310	9	17	135	34	115
பள்ளியில் தேர்ச்சி ...	261	14	43	58	45	101
முன்னேற ஆவல் ...	247	15	25	100	29	78
உழைப்பு	215	20	28	83	17	67
பொது அறிவு ...	202	16	19	54	27	86
நட்பு	189	7	20	66	18	78
ஒத்துழைப்பு ...	175	10	19	59	25	62
பற்றுறுதி	171	10	23	51	24	63
ஒழுக்கம்	105	12	21	34	9	29
தானே காரியங்களைச் செய்தல் ...	99	8	21	31	16	23
பலதிறப்பட்ட பயிற்சி	37	...	4	11	6	16
ஆரோக்கியம் ...	22	2	4	7	1	8
திருமணம் ஆனவர் ...	8	...	1	2	...	5

அட்டவணையைக் கீழ்க்கண்டவாறு வாசிக்கவும்: நேர்மை எல்லா வேலை கொடுப்பவர்களாலும் 476 முறை குறிக்கப்பட்டது; விவசாயத்துறையில் இருந்தோர் அதனை 27 முறை குறித்தார்கள்.

இளைஞர்களுடன் கொள்ளும் நேரடி உரையாடல்கள், ஒரு மாணவன் பள்ளியைவிட்டு நின்றுவிட்டுவானாயின், அவன் திரும்பி அங்குச் செல்லமாட்டான் என்ற கருத்தினை உறுதிப்படுத்துகின்றன. நல்ல வேலையிலிருப்பவர்கள் அல்லது வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைமட்டும் தரவல்ல வேலையில் இருப்போர் அல்லது செலவழிக்கச் சிறுபணம் பெறுகின்ற வேலையிலுள்ளோர் அதனைக் கைவிடுவதற்கு மிகவும் தயங்குவார்கள். பள்ளியின் திட்டத்திற்கும் வாழ்க்கையின் தொழில் தேவைகளுக்கும் இடையேயிருக்கும் இடைவெளி மிகவும் அகன்றதாகும். இளைஞர்கள் பெரும்பாலும் மேலே முன்னேற வசதியற்ற வேலைகளில் அமர்ந்துவிடுகின்றனர்; அல்லது பல ஆண்டுகளுக்குப் பள்ளியை விட்டபின்னர் ஒரு வேலை அல்லது மற்றொன்றிற்குத் தாவிக்கொண்டேயிருக்கின்றார்கள். இளையோர்களது தொழில் தேவைகளைக் கீழ்க்கண்டவாறு தொகுத்தளிக்கலாம்: (1) அவர்களுடைய தொழில் நாட்டங்களையும் வரம்புகளையும் பற்றிச் சிறப்பாக அறிந்துகொள்ளுதல் வேண்டும். (2) தொழில் செய்தியினைப் பெற வேண்டும். அதாவது, தொழில் வாய்ப்புகள் பற்றியும், வேலைக்கான தேவைகள் பற்றியும் செய்தியினைப் பெறவேண்டும். (3) பள்ளியிலும் வேலை அனுபவங்களின் மூலமும் தொழிற் பயிற்சி பெறல்வேண்டும். (4) வளர்க்கப்பட்ட திறன்களைப் பயன்படுத்த வாய்ப்பினைப் பெறவேண்டும். அதாவது, வேலை செய்வதற்குரிய வாய்ப்பினைப் பெறல்வேண்டும்.

இத்தேவைகள் பூர்த்தியாக வேண்டுமென்றால், பள்ளிகளில் மேலும் அதிகமான தொழில் வழிகாட்டல் அளிக்கவேண்டும். வழிகாட்டுதல் என்பது தனியாள் வேற்றுமைகள் இருக்கின்றன என்ற உணர்வின் அடிப்படையிலும், தேர்ந்தெடுக்கின்ற சுதந்திரம் இருக்க வேண்டும் என்ற மெய்யுணர்வின் அடிப்படையிலும் விளைந்ததாகும். வழிகாட்டுதல் எனும் துறை ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகளாவன: (1) தொழில் பற்றிய செய்திகள், (2) திரள் அறிக்கைகள், (3) அறிவுரை வழங்குதல், (4) பயிற்சி வாய்ப்புகள் பற்றிய மதிப்பீடு, (5) வேலைக்கு அமர்த்துதல், (6) பிற்காலத்தில் எப்படி இருக்கின்றார்கள் என்று அறிதல்.

பள்ளிகளில் தொழிற் பயிற்சி

தொழில் உலகம் எப்பொழுதும் அதிகமாகின்ற சிக்கலான தன்மையுடன் இருப்பதனால், தொழில் வழிகாட்டுதலும் அறிவுரை வழங்குதலும் மிகவும் அவசியமாகின்றன. சிறுவர்சிறுமியர்களுக்குச் சில மாதிரி வகைகளான தொழிற் பயிற்சியும் இத்துடன் அளிப்பது அவசியமாகின்றது. ஏனெனில், இவர்கள் பிற்காலத்தில் இவர்களது பொருளாதார வாழ்க்கையில் இவ்வாறான செயல்களைச் செய்வார்

கள். மரபுப்படி இளைஞர்கள் இப்பிரச்சினையைத் தாங்களாகவே பள்ளிக்கு வெளியே துவக்குபவர்களாக வேலைக்கு அமர்ந்து, தங்களது தொழில் தேவைகளுக்கு ஏற்றவாறு தங்களைப் பொருத்தி அமைத்துக் கொண்டு, இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்கிறார்கள். பள்ளி அனுபவங்களும் பள்ளிக்குப்பின் பெறும் அனுபவங்களும் இணைந்து ஒரு திட்டமாக அமையாதபொழுது, காரணமில்லாத நிலை மாறுதல்கள், அவற்றைத் தொடர்ந்து மனவெழுச்சி மாற்றங்கள், கடினமான தொழிற்சாலை நிலைகள், சுயநலத்திற்காகப் பயன்படுத்திக்கொள்கின்றனர் எனும் அச்சம் ஆகியவைகள் விளைகின்றன. முன்னேற்றப் பாதையில் செல்லும் பள்ளிகள், சமுதாய வாழ்க்கைக்கும் பள்ளியின் செயல்களுக்கும் இடையேயிருக்கின்ற இடைவெளியைச் சமப்படுத்தப் பெரிதும் முயல்கின்றன.

*சில திறன்கள் அகன்ற வேலைப்பரப்புகளுக்கு மிகவும் அடிப்படை*யானவையாகும்; தொழில்தன்மையின் அறிவு மிக அதிகமான குழு அல்லது தொழில்களின் வகுப்பிற்கு அல்லது தொழில்களுக்கு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாகும். சான்றாக, விவசாயம் என்ற சொல் பல தொழில்களின் தொடர்பில் பயன்படுத்தப்படுகின்றது. நகரத்தில் காய்கறிக் கடை வைத்திருப்பவரை அல்லது விவசாயப் பொருள்கள் விற்பவரை அல்லது விவசாய இயந்திரங்கள் விற்பவரை விவசாயத் தொழிலில் ஈடுபட்டவராகவே கருதுகின்றோம். மோட்டார் காரைப்பற்றிய அறிவும், அது எவ்வாறு நகர்கிறது, அது நகர என்ஜின் எவ்வாறு இயங்குகின்றது என்ற அறிவும் காரைச் செய்பவருக்குமட்டுமல்லாது பழுதுபார்ப்பவர், ஓட்டுபவர், மற்றும் அதன் தொடர்பிலுள்ள பல தொழில்களுக்கும் அவசியமாகின்றது. இவ்வாறு விவசாயத்தில் பயிற்சி, இல்லப் பொருளாதாரம், தொழிலகக் கலைகள், வியாபாரக் கல்வி ஆகியவைகளில் பயிற்சி பரந்த அளவில் செயலுற்று, தனித்த மாணவனது முழு வளர்ச்சிக்கு இவை தேவையானவை என்று உணர்த்துகின்றன. பென்டு என்பவரும், கிரோனென்பெர்க் என்பவரும் (Bent and Kronenberg) கூறியதுபோல், 'மேலும், இத்துறைகள் அல்லது இல்லப் பொருளாதாரம், தொழிலகக் கலைகள், வியாபாரக் கல்வி, விவசாயம் ஆகியவை சொந்தச் சமூகப் பயன்மதிப்புப் பெற்றிருப்பதோடு தொழிற் பயன் மதிப்பும் பெற்றிருப்பது அவை பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியதற்கு மற்றொரு காரணமாகும்.'[22]

இருப்பினும், உயர்நிலைப் பள்ளிப் பாடத்திட்டத்தின் கல்வியிலேயே முழு நேரமும் முழு மனத்துடன் செலவிடும் இளையோர்களின்

[22] R. K. Bent and H. H. Kronenberg, 'Principles of Secondary Education.' New York: Mcgraw-Hill Book Co., 1941, P. 359.

கல்வி, பொது உயர்நிலைப் பள்ளியில் குறைவான முக்கியத்துவம் கொண்ட ஒன்ருக இருக்கின்றது. அறிவுடைய குழந்தைகளுக்குப் பாடத்திட்ட அறிவுக் கல்வியினையும், குறைவான அறிவுடைய குழந்தைகளுக்குத் தொழிற்கல்வியையும் தரும் பள்ளித் திட்டம் ஜனநாயகமற்ற ஒரு வகுப்பு அமைப்பாகச் சிலருக்குத் தோன்றுகின்றது. அண்மை ஆண்டுகளில் இம்மனப்பான்மை மாறி வருகிறது. இம்மாற்றம் 1917ஆவது ஆண்டின் ஸ்மித் ஹியூஸ் சட்டத்தின் (Smith - Hughes Law) காலத்திலிருந்தே துவங்கிவிட்டது. அமெரிக்க மத்திய அரசு தொழிற்கல்வியின் வளர்ச்சியை ஆதரித்தும் தூண்டியும் வந்திருக்கிறது. இப்பணிக்காகப் பணம் (மத்திய அரசின் கீழ் இருக்கும் நாடுகள் ஒரு டாலர் இதற்காகச் செலவு செய்யுமாறுல் மத்திய அரசு ஒரு டாலர் தருகின்றது) மத்திய அரசிடம் மிக அதிகமான அளவில் இருப்பதனுல், பல்வேறு விதமான திட்டங்கள் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு, அவர்களில் பெரும்பாலானேர் அதில் சேர்ந்தும் இருக்கின்றனர்.

நவீன உளவியல் கண்டுபிடிப்புகளின் அடிப்படையிலும், தொழில்களில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் பொதுவான அனுபவத்திலும், சமூக - தொழில் வளர்ச்சியின் துரித மாற்றங்களின் அடிப்படையிலும் தொழில் திட்டங்கள் உயர்ந்த தனித்த அறிவையும் குறுகிய திறன்களையும் மட்டும் அளிக்காமல், பரந்த திறன்களையும் அறிவையும் அளிப்பதற்காகத் திருத்தியமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவ்வாருன திட்டங்கள் கீழ்க்கண்ட நிலைகளைக் கொண்டிருக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது :

(a) பிரதிசெய்யப்பட்டுள்ள தொழில்களின் செய்முறை, கருப்பொருளான அனுபவங்கள்.

(b) தொழில்கள் சம்பந்தப்பட்ட விஞ்ஞான, பொறியியல் செய்திகள்.

(c) சமூகப் பொருளாதாரப் புரிந்துகொள்ளுதல்களும் சரியான மனப்பான்மைகளும்.[28]

பள்ளித் திட்டம் பெரும்பாலும் இவற்றில் இரண்டாவதை அளிக்கின்றதேயன்றி மூன்ருவதை அளிக்கவில்லை. முதலில் கூறியதற்கு ஏற்றவாறு செய்திகளை அளிக்கக் கல்வித் திட்டத்தினையும், தொழில் திட்டத்தினையும் திருத்தியமைக்க வேண்டியது அவசியமாகும்.

[28] L. V. Koos, J. M. Hughes, P. W. Hutson, and W. R. Reavis, 'Administering the Secondary School,' New York : American Book Co., 1940, Page 75.

தொழிற் பாடங்கள் அமைப்பதன் தொடர்பிலும், திட்டமிடுவதன் தொடர்பிலும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டது : 'உயர்ந்த திறமை வாய்ந்த தொழிற்கல்வி வகைகளை மாணவன் முழுநேரப் பள்ளியினை முடிக்கும் காலம்வரை வைத்திருக்கவேண்டும் என்ற கருத்துக்கு அதிகமான ஆதரவு உள்ளது. பலரது நிலைகளில் அவர்கள் பொருத்தமான தொழிலினைத் துவக்கிய பின்னர் தனித்த தொழிற்கல்வி வகைகளுக்காக வரக்கூடும்.'[24]

திருத்தியமைக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிப் பாடத்திட்டம், இன்றைய உயர்நிலைப் பள்ளி இளைஞர்கள் அனுபவிக்கின்ற தனித்த ஈடுபாடுகளைக் கொண்டிருக்கவேண்டும் என்று கூறப்பட்டது. இவ்வனுபவங்கள் வழிகாட்டலுடனும், ஆளாக்கப்பட்டுப் பள்ளித் திட்டத்தின் பல்வேறு நிலைகளுடன் தொடர்புகொண்டுள்ள பொருள்களுடனும் இணைதல் வேண்டும். பல சமுதாயங்களில் இவ்வாறுன செயல்கள் இரண்டு வகையில் இருப்பதனைக் காணலாம். அவற்றை இந்நோக்கத்திற்குப் பயன்படுத்தவும் இயலும். இவற்றில் ஒன்று பலனுள்ள தொழிலினுல் ஆக்கப்பட்டதாகும். மற்ருென்று குடிமை சமூகப் பங்குகள் பெறுதலில் உள்ளது. மரியம் (Meriam) என்பவரின் கருத்துப்படி உயர்நிலைப் பள்ளி மாணவர்களில் 12% பகுதிநேர வேலை அடிப்படையில் கூலிபெறுபவராக இருந்தனர்.[25]

ம்மாணவர்களில் பலர் பொருளாதாரக் கட்டாயத் தேவையினுல் வேலைக்குச் செல்கின்றனர் ; மற்றவர்கள் தனித்த அக்கறைகளினுல் உந்தப்பட்டுப் பயனுள்ள வகையிலும் சுறுசுறுப்பாயும் தொழிலில் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுவதனுல் வேலைக்குச் செல்கின்றனர்.

அநேகமாக எந்தச் சமுதாயத்திலுமுள்ள வேலை வாய்ப்புகளைப் பற்றிய மதிப்பீடு, உயர்நிலைப் பள்ளி இளைஞர்களது திறன்களுக்குள்ளடங்கிய வேலைகள் பல இருப்பதாகக் காட்டுகின்றது. அதே சமயத்தில் அவை சரியான பள்ளி அதிகாரிகளினுல் வழிகாட்டப்பட்டும் மேற்பார்வை செய்யப்பட்டும் வந்தால், கல்வி அடிப்படையில் பயனுள்ளவையாய் இருக்கும். இதன் தொடர்பில் செய்யக்கூடியவைக்கு வரம்பே இல்லை என்று ஓரளவு கூறலாம். இருப்பினும், குழந்தைத் தொழிற்சட்டத்தினுலோ அல்லது தொழில் நிறுவனங்களுடன் கொள்கின்ற சிக்கல்களினுலோ தொல்லைகள் ஏற்படுவது சாத்தியமேயாகும். ஆனுல், இவ்வேலையானது கல்விப் பணியில்

[24] F. W. Reeves, 'Youth and the Future'. Washington : American Council on Education, 1942, p. 139.

[25] J. L. Meriam, 'The High School Curriculum', Phi Detal Kappan, 1942, Vol. 25, pp. 13-16,

சேர்ந்ததாகக் கருதப்பட்டு, மாணவர்களைப் பயன்படுத்திக்கொள்ளாத வாறு பாதுகாக்கப்பட்டால், இது தொல்லைகளின் ஒரு பங்கினின்று விடுபடலாம். மேலும், பள்ளித் திட்டத்தின் ஒரு பகுதியாக இவ்வேலை செய்யப்படுகின்றது என்று பொதுமக்கள் உணர்ந்தாலும், இவ்வேலை எளிதாக வேலையாட்களை அளிப்பதற்காகக் கைக்கொள்ளப்படவில்லை என்று உணர்ந்தாலும், தொல்லைகளின் மறுபங்கினின்றும் இது விடுபடலாம்.

கூட்டுறவுக் கல்வித் திட்டத்தில் சிறுவர்களும் சிறுமியரும் அதாவது, சீனியர் உயர்நிலைப் பள்ளி வயதினர், ஒரு பகுதி நேரம் வேலை செய்வதிலும் மறுபகுதி நேரம் பள்ளியிலும் செலவிடுவதால் பல நன்மைகள் இருக்கின்றன. இவ்வாறான திட்டங்கள் பல்வேறு பள்ளித் திட்டங்களில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பல கல்வி நிறுவனங்கள் இவ்வெற்றியைக் கண்டு அனுமதியும் அளித் திருக்கின்றன. ஆனால், இத்திட்டத்தினைக் கைக்கொள்ளும்பொழுது மிகவும் எச்சரிக்கையாக இருந்து, பகுதிநேர வேலையில் இருக்கும் அபாயங்களைக் கூடியவரை தவிர்க்க வேண்டும். சில வகையான வேலைகளில் அனுபவம் பெரும்பாலும் இல்லத்திலேயே பெறலாம். ஸ்போஃபார்டு குறிப்பிடுகின்றார்:

'இளைஞர்கள், தாங்கள் விரும்பினால், இல்ல வேலையினைப் பெறலாம். அவர்கள் திறமை பெற்றிருக்கும் எந்த வேலையையும், அவர்கள் வேலையில் இருக்க விரும்புகின்ற அளவிற்குப் பெறலாம். இவ்வேலையினைக் கைக்கொள்கின்றவர்கள் இவ்வேலையை ஒரு கல்வி அனுபவமாகக் கொள்ளச் செய்வதில் இல்லப் பொருளாதார ஆசிரியர்கள் பெரும் பொறுப்புக்கு ஆளாகின்றார்கள்.'[26]

வேலை அனுபவத்தின் பயன்மதிப்புகள்

இளைஞர்களில் பெரும்பான்மையோருக்கு வேலை அனுபவம் பெற வேண்டிய தேவை, தனித்த வேலைக்கான பயிற்சி பெறுவதைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. இப்பிரச்சினையைப் பற்றிய ஆய்வுகளின் முடிவாக ஜேகப்சன் (Jacobson) என்பவர் குறிப்பிடுகையில், 'அவர்களுக்குத் தேவையானவையெல்லாம் வேலை அனுபவம், தொழில் வழிகாட்டல், வேலையில் அமர்த்தல், தொழில்களையும் அவைகளின் வாய்ப்புகளையும் பற்றிப் புரிந்துகொள்ளுதலேயாகும்.' என்று கூறுகிறார்.[27], இவ்வாய்வில் அளிக்கப்பட்ட இக்கருத்திற்கு பெல் (Bell)

[26] Q. Spafford, 'Adjusting Home Economics to Wartime Needs', The School Review, 1943, Vol. 51, p. 36.

[27] North Central Association of Colleges and Secondary Schools: General Education in the American High School. New York: Scott, Foresman and Co., 1942, p. 272.

என்பவர் நடத்திய ஆய்வின் முடிவுகள் ஆதரவளிக்கின்றன.[28] பல தொழில்களில் வேலை தருபவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், எல்லாத் தொழிலாளிகளிலும் 70 சதவீதத்தினரை வேலைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும், அவர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு முழுமையான உற்பத்தி அளவிற்கு வருமாறு ஒரு வாரத்திற்குள் பயிற்சி அளித்துவிடலாம் என்றும், அவர்களில் பத்து சதவீதத்தினருக்கு மட்டுமே 6 மாதங்களுக்குமேல் பயிற்சி அளிக்க வேண்டியதாயிருக்கும் என்றும் கூறினர்.

இளைஞர்களுக்கு அளிக்கவல்ல வேலை அனுபவங்களில் சில என்னவெனில், சமுதாயத்தை அழகாக்குவதும் சிறந்ததாக்குவதுமேயாகும். காட்டு மிருகங்களைக் காப்பது, இயற்கை அழகையும் இயற்கைக் கருவளங்களையும் (resources) காப்பது, நகரத்தில் இருக்கின்ற குப்பைகூளங்களை அகற்றுவது ஆகியவை சமுதாயம் சிறப்பாவதற்கும் அழகாவதற்கும் வழிகோலுபவையாகும். இவ்வாறான செயல்கள் கைக்கொள்ளப்படுகின்ற அளவு, பெரிய அளவில் அத்திட்டத்தினைக் கைக்கொள்கின்றவர்களைப் பொறுத்திருக்கின்றது. வாழ்க்கை நல ஏற்பாடுகள் (satation) பொழுதுபோக்குத் திட்டங்கள், சமூகத் தேவைகள் ஆகியவற்றின் தொடர்பிலுள்ள பிரச்சினைகளை உதவி, ஆதரவு, தலைமை ஆகியவைகளை அளித்துப் பள்ளிகளும் குடிமைக் குழுக்களும் தீர்க்கலாம். சில சமுதாயங்கள், சமுதாய மதிப்பீடுகள், சமுதாய நிலைமைகள், தேவைகள், பிரச்சினைகள் பற்றிய ஆராய்ச்சி ஈடுபாடுகள் ஆகியவற்றினைத் தந்து வேலை அனுபவங்களுக்கு வழிவகுக்கின்றன. இவைகளும், இவைகளின் தொடர்பிலுள்ள பல்வேறு வகையான வேலைகளும் இளைஞர் குழுக்களால் செய்யக்கூடியவையாகும். இவ்வாறான வேலை அனுபவங்கள் சமுதாய முன்னேற்றத்தின் தொடர்பில் பயனுள்ளனவாய் இருப்பதோடு, கல்வித் தன்மையான அனுபவங்களையும் அதில் ஈடுபடுவோருக்கு அளிக்கின்றன.

சிக்காகோ பல்கலைக்கழக உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த சார்லஸ் பி. ஸ்கிவார்ட்ஸ், (Charles P. Schwartz, Jr.) என்பவர் 1942ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில் விஸ்கான்ஸினில் (Wisconsin) உள்ள ஒரு விவசாயப் பண்ணையில் 11 வாரங்கள் செலவிட்டார். அங்கு நடக்கின்ற சில செயல்களைப்பற்றிய விளக்கம், ஒரு நகரச் சிறுவனுக்கு இவ்வாறான வேலை அனுபவங்களின் பயன் மதிப்புகளைப் பற்றிக் கூறுகின்றது:

[28] H. M. Bell, 'Matching Youth and Jobs.' Washington: American Council on Education, 1940, p. 58.

'நாங்கள் அங்குச் செல்வதற்குமுன் பள்ளியில் விவசாயப் பண்ணை வாழ்க்கைபற்றிச் சில கூட்டங்களில் கற்றுக்கொண்டோம். அரசாங்க விவசாயத்துறையும் சில விளக்கக் காகிதங்களை அனுப்பியது. ஆனால், நாங்கள் நேரடி அனுபவம் பெற விரும்பினோம்; அதுதான் நன்மை பயக்கும் என்றும் எண்ணினோம்.

கடைசியில் அந் நாள் வந்தது. அதாவது, ஜூன் 20ஆம் நாளாகும் அது. அன்று சனிக்கிழமை. நாங்கள் நகரத்தைவிட்டுப் பகல் 12 மணிக்குப் புறப்பட்டுப் பண்ணையை 2 மணிக்கு வந்தடைந்தோம்.

அன்று மாலை நான் எனது முதல் வேலைகளான குதிரைகளுக்கு உணவு அளித்தல், பன்றிக்கு உணவு அளித்தல், சாணத்தை எடுத்தல் ஆகியவற்றைச் செய்து, மற்றும் சில வேலைகளையும் செய்தேன். இவ் வேலைகள் நாட்கள் செல்லச்செல்ல அதிகரிக்கும். ஆனால், இவைதாம் என்னால் செய்ய முடிந்தவை. பண்ணையில் முன்பு எப்பொழுதும் இருந்ததில்லையாதலால், நான் என்னுடைய முதல் நாளிலேயே சில உண்மைகளை அறிந்தேன். அவையாவன: பசுவினிடமிருந்து வருகின்ற பால் சூடாக இருக்கும்; பன்றிக்கு உண்மையில் மிகவும் அசுத்தமானது என்ற பெயரே பொருத்தமாயிருக்கும்; சாணம் முதலில் சூடாக இருக்கும் ஆகியவைகளேயாகும்.

நான் என்னுடைய முதல் சில நாட்களில் ஆச்சரியத்துடன் அறிந்தவைகளில் சில: குதிரைகள் எப்படி இவ்வளவு உலர்ந்த புல்லை உண்கின்றன? குதிரைகளையும் பசுக்களையும் காப்பாற்றுவதற்கு எவ்வளவு வேலை தேவையாய் உள்ளது? களஞ்சியத்தை எவ்வளவு துப்புரவாகத் துடைக்கவேண்டியதாய் இருந்தது ஆகியவைகளாகும்.

கோடைக்காலத்தில் மிகப் பெரிய வேலைகளாக இருந்தவற்றில் ஒன்று என்னவெனில், மண்வெட்டியினால் தானியங்களை ஒன்றுசேர்த்துக் குவிப்பதேயாகும். ஒன்றுசேர்க்கும் வேலை முடிந்தவுடன், நான் எவ்வளவு தானியத்தை மண்வெட்டிமூலம் குவித்துள்ளேன் என்று ஆச்சரியப்பட்டேன்.

நான் செப்டம்பர் மாதம் 5ஆம் நாள் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டியதாய் இருந்தது. என்னுடைய இந்தக் கோடைக்காலத்தை எண்ணிப்பார்க்கும்பொழுது, இந்தக் கோடைநாட்கள்தாம் என்னுடைய சிறந்த கோடைநாட்கள் என்று கூறலாம். இன்னமும் தேவைப்பட்டால், நான் அங்கு போகவே விரும்புவேன். நான் புதிய திறன்களைப் பெற்றேன்; கிராமிய வாழ்க்கை வகையைப் பற்றியும் அவர்கள் வாழ்க்கை நோக்கைப்பற்றியும் உணர்ந்தேன்."[29]

[29] C. P. Schwartz, 'Eleven Weeks on a Farm,' Progressive Education, December, 1942, pp. 432-433.

பல கல்வி நெறியாளர்கள், இன்று வேலை அனுபவங்கள் உயர் நிலைப் பள்ளி மாணவனது கல்வியில் நல்ல பலன்களை விளைவிப்பதாகக் கருதுகின்றனர்கள். பயன்மதிப்புகள், திறன்கள், புரிந்துகொள்ளுதல் கள் ஆகியவைகளை இவ்வனுபவங்களின் மூலமாகப் பெறலாமேயன்றி வேறு விதமாகப்பெற முடியாது. இவ்வனுபவங்கள் முக்கியக் கல்விப் பயன்மதிப்புகளைக் கொண்டிருக்கின்றன என்றால், ஓர் அடிப் படைக் கேள்வி எழுகின்றது. பள்ளி இந் நன்மைகளை உயர்நிலைப் பள்ளியிலுள்ள அதிகமான மாணவர்களுக்குக் கிடைக்கும்படி செய் வது அதன் கடமையல்லவா? இப் பிரச்சினையின் தொடர்பில் எழு கின்ற மற்றோர் அடிப்படையான கேள்வி என்னவெனில், ஆசிரியர் களும் அறிவுரை அளிப்பவர்களும் எவ்வாறு சிறுவர்களுக்கும் சிறுமியர் களுக்கும் தங்களுடைய வேலை அனுபவங்களிலிருந்து அதிகமான கல்வி நன்மைகளைப் பெறுமாறு செய்ய இயலும் என்பதேயாகும்.

தொழில் வழிகாட்டுதல்

இன்றைய தொழில் உலகம் மிகவும் திறமை வாய்ந்ததாகவும், அதிகமான அளவு சிக்கல் வாய்ந்ததாகவும் ஆகிவிட்டது என்று முன் னரே குறிப்பிட்டோம். நமது தொழில் உலகப் பொருளாதாரத்தில் 30,000-க்குமேல் வெவ்வேறான தொழில்கள் இருக்கின்றன. இதன் காரணமாக இளையோனுக்கு அவன் விரும்புகின்ற வேலையைத் தேர்ந் தெடுப்பது மிக அதிகமான தொல்லையையே அளிக்கின்றது. நம் முடைய பொருளாதாரம் விவசாயப் பொருளாதாரமாக இருந்த போது இருந்ததைக் காட்டிலும் அதிகமான தொல்லையினைத் தொழி லைத் தேர்ந்தெடுப்பதில் இன்றைய இளையோன் அனுபவிக்கின்றான். மேலும், வெவ்வேறான தொழில்கள், வெவ்வேறான அளவுகளும் வகைகளும் கொண்ட பயிற்சியை வேண்டுகின்றன. இது பள்ளி களிடத்து வெவ்வேறான வேலைகளுக்கேற்ற பயிற்சியை அளிக்க வேண்டிய சுமையினை உண்டாக்கியுள்ளது. பள்ளிகள் மாணவர் களுக்கு அவர்களுடைய திறமைகளையும் இயல்புகளையும் புரிந்து கொள்ளுமாறு செய்வதும், தொழில் உலகத்தைப்பற்றிய செய்தியை யும் அனுபவங்களையும் அளித்து நல்ல தொழில் முடிவுகளை அவர்கள் கொள்ளுமாறு செய்வதும் முக்கியப் பிரச்சினைகளாக இருந்தன. இவ்வாறு இன்றைய இளைஞர்களின் தேவைகளுக்காகத் திட்டமிடப் பட்டுள்ள நவீனப் பள்ளித் திட்டத்தில் தொழில் வழிகாட்டும் பிரச் சினை அதிகமான முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தொழிலில் வெற்றியடைவதற்குரிய தேவைகள்

தொழிலில் வெற்றியடைவதும் கல்வியின் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தால், நாம் அச் சொல்லுக்குரிய பொருள் என்ன வென்று தீர்மானிக்கவேண்டும். இந்நூற்றாண்டின் துவக்கப் பகுதியில்,

வருவாயும் வேலையளவுமே தொழில் வெற்றியை அளவிடுவதற்குரிய அடிப்படையாகப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டுவந்தன.[80] இருப்பினும், 1925-லிருந்து 1935-வரை வேறுவிதமாக அளவுக் குறிகள் பயன்படுத்தப்பட்டன. முன்னேறுதல்—சிறந்த பதவிக்கு முன்னேறுகின்ற விகித அளவு—முக்கிய அளவு கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. இது வருவாய், வேலை அளவு ஆகியவற்றினின்று முற்றிலும் மாறுபட்டதாகும். இப்பொழுது உயர்ந்த அல்லது முன்னேற்றமுள்ள வேலையினைப் பெறுவதே வலியுறுத்தப்படுகின்றது. 1930ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதாரச் சோர்வின் காரணமாக ஒரு வேலை நிலைத்திருக்குமாயின், அதுவே தொழில் வெற்றியாகக் கருதப்பட்டது.

இக்காலத்தில் தரமிடும் அளவுகளும் பயன்படுத்தப்பட்டன. தனியனின் வெற்றி ஒரு மேற்பார்வையாளர் அல்லது அவ்விதமான வேலையில் பணியாற்றுவோர் அளிக்கும் தரமிடல்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது. இத்தரமிடல்கள் பெரும்பாலும் நம்பத்தகுந்தவை அல்ல என்பது உண்மையானாலும், அவை வெற்றியினை அளவிடுவதற்குரிய அடிப்படையாக விளங்கின. அப்பொழுதும் வருவாய், வேலையின் அளவு, வேலை செய்பவர் அடையும் நன்மை ஆகியவற்றிலிருந்து வலியுறுத்தல் மாற்றமடைந்தது. அடைவு அதிகமாக முன்னர் வலியுறுத்தப்பட்டது. கல்வியின் குறிக்கோள்களிலும் அது பிரதிபலித்தது. இக்காலத்தில் கொள்ளப்பட்ட தொழில் வழிகாட்டுதலின் நோக்கங்களிலும் அடைவின் வலியுறுத்தல்களைக் காணலாம். பெரும்பான்மையான சதவீதத்தினரின் நிலைகளில், முக்கியத்துவம் அடைவில்தான் காட்டப்படுகின்றதேயன்றித் தனியனது பொருத்தப்பாட்டிலோ, திருப்தியிலோ காட்டப்படுவதில்லை.

பள்ளி உளவியலார்களும், மனநலவியலார்களும் வலியுறுத்தியதன் பயனாக வெற்றி என்பது பற்றிய பொருளின் புதிய உணர்வு தோன்றலாயிற்று. அவர்கள் வெற்றி என்பதை முழுமையான புறவய உணர்வில்மட்டுமே உணராது, அகவயமாகவும் சொந்த நிலையிலும் உணரவேண்டுமென்று கூறினர். வருவாயின் அடிப்படையில் வெற்றி என்பது காந்தி அடிகளுக்குப் பொருளற்றதாகும். நம்முடைய சிறந்த அறிவாளிகளுக்குச் சமூக அந்தஸ்து என்பது பொருளுடையதாகத் தோன்றவில்லை. அந்தஸ்து என்பது துறவிக்கு முக்கியமற்றதொன்றாகும். தனிப்பட்டவர்களது குறிக்கோள்களும் பயன்பதிப்புகளும் வெற்றியை நிர்ணயம் செய்வதற்கு அகவய நிலையை மேற்கொள்ளவேண்டும். சூப்பர் (Super) என்பவர் அமெரிக்கப் பண்பாட்டில் வெற்றியினை அளவிடுவதில் நாம் வேறு ஓர்

[80] D. E. Super, 'The Criteria of Vocational Success', Occupations, 1951-52, Vol. 30, pp. 5-9

அளவினைப் பயன்படுத்தவேண்டும் என்று குறிப்பிடுகின்றார். அவர் ஆசிரியர்கள் கற்பித்தலின் முடிவுகளையும் வழிகாட்டலின் முடிவுகளையும் அளவிடுவதற்குப் பொருத்தப்பாட்டினை அளவு கருவியாகப் பயன்படுத்தவேண்டும் என்று கூறியது கவனித்தற்குரியதாகும். இதன் தொடர்பில் தொழில் பொருத்தப்பாட்டினைக் குறித்து அவர் கீழ்க்கண்ட வரையறையினைத் தருகின்றார் :

'தொழில் பொருத்தப்பாடு எனும் சொல் அதனுடைய முழுப் பொருளில், தனியன் தன்னுடைய அக்கறைகளைக் குறிப்பிடுவதற்கும், தன்னுடைய திறன்களைப் பயன்படுத்துவதற்கும், தன்னுடைய பயன்மதிப்புகளை அடைவதற்கும், தன்னுடைய மனவெழுச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வாய்ப்புகள் பெறவேண்டும் என்பதையே குறிக்கும்.' [81]

ஆசிரியர்களும் அறிவுரையளிப்பவர்களும் மரபுவழியில் நின்று, வெற்றியினை அடைவின் அடைப்படையில் அளவிடாமல், தொழில் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் அளவிட்டால், தனித்த மாணவன் உண்மையான பயன் மதிப்புகளையும், பள்ளிவேலையில் அதிகமான திருப்தியையும், பள்ளியைவிட்டுச் சென்றபின்பு சிறந்த தொழில் பொருத்தப்பாட்டினையும் பெறுவான்.

தொழில் வழிகாட்டுதலுக்குரிய தேவை

இளையோர்களுடைய தொழில் அவாக்களுக்கும், அவர்களுடைய தொழில் தேவைகளுக்குமிடையே இசைவில்லை என்பது முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. தனியன் பதின்ஞராவது படிவத்தை அடையும் பொழுது, அவனுடைய தொழில் அக்கறை வகைகள் நிலைத்த தன்மையை அடைந்துவிடுகின்றன என்று கூறுவதற்குரிய சான்றுகள் இருக்கின்றன. ஆனால், சூழ்நிலையாலும் வாய்ப்புகளாலும் தொழில் தேர்ந்தெடுத்தல்கள் இப்பருவத்திற்குப் பின்னரும் மாறுதல்களுக்குள்ளாகலாம். டெய்லர் (Taylor) என்பவரும், கார்ட்டர் (Carter) என்பவரும் 58 சிறுமியர்களுக்கு ஸ்டிராங் தொழில் அக்கறைத் தாளை (Strong Vocational Interest Blank) முதல் பதின்ஞராவது படிவத்திலும், பின்னர் ஓராண்டுக்குப்பின் அவர்களுடைய சீனியர் உயர்நிலைப் பள்ளி ஆண்டிலும் தந்தனர்.[82] இவ்விரு சோதனைகளிலிருந்து பெற்ற முடிவுகள் அக்கறைகளின் தன்மைகளைப் பற்றிக் குறிப்பிட்டன. அவை, ஓராண்டு இடைவெளிக்குப் பின்னரும், தனித்த அக்கறை வகைகள் போதிய அளவு நிலைத்த தன்மையுடன் இருப்பதாகக் குறிப்பிடுகின்றன.

[81] Ibid., p. 8.

[82] K. V. F. Taylor and H. D. Carter, 'Retes Consistency of Vocational Interest - Patterns of High-School Girls,' Journal of Consulting Psychology, 1942, Vol. 6. pp. 95-101.

துவக்க உயர்நிலைப்பள்ளி ஆண்டுகளிலுள்ள இளையோரான சிறுவர் சிறுமியர்களது வழிகாட்டலில் அக்கறை கொண்டுள்ளோர்க்கு இது ஒரு சவாலை அளிக்கிறது. ரோபர் (Roeber) என்பவரும், கார்பீல்டு (Garfield) என்பவரும் இப்பிரச்சினையின் தொடர்பாகக் குறிப்பிடுகையில் தெரிவித்ததாவது :

'பதினொன்றும் பன்னிரண்டாம் படிவ மாணவர்கள் தங்களுடைய தந்தையர்களது தொழில்களுக்கு வெளியே தொழில்களைத் தேர்ந்தெடுக்கின்ற அளவு தாங்கள் உண்மை நிலையை உணர்கின்றார்கள் என்று சான்றுகள் காட்டுகின்றன. அவ்வாறான போக்குகள் மிகவும் குறைவான அளவில் இருப்பதிலிருந்து உயர் நிலைப்பள்ளி, மாணவர்களுக்குத் தொழில்பற்றிய உண்மை நிலையை உணர்த்தவேண்டிய பொறுப்பை அதிகமாய்க் கொண்டுள்ளது என்று தெரிகிறது. கல்லூரிகளிலுள்ள நான்காவது ஆண்டு மாணவர்களின் தேர்ந்தெடுத்தல்கள் முதலாண்டு மாணவர்களின் தேர்ந்தெடுத்தல்களிலிருந்து சிறிதளவே மாறுபட்டிருப்பதனால், இரண்டு குழுக்களின் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றமாகவே இருப்பதனால், பள்ளி மாணவர்களுக்கு அளிக்கின்ற தொழில் வழிகாட்டுதல் சிறிதளவும் பயனற்றதாய் இருக்கின்றது என்று அறிகின்றோம்'.[33]

நாம் முன்னரே குறிப்பிட்டபடி 15 அல்லது 16 வயதுடைய சிறுவர்கள் வக்கீல், டாக்டர், சமயத்துறையினர் ஆக விருப்பங் கொண்டவர்களாக இருக்கும்பொழுது, அவர்களை உடலுழைப்பு வகையைச் சார்ந்த வேலையைச் செய்யும்படி கூறினால், அவ்வாறான புத்திமதியை பெரும்பாலும் வெறுப்பார்கள். மேலும். உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பெருமளவு ஊதியப் பணியாளர் வேலையை விரும்புவதால், முன்னணியிலுள்ள சில தனியன்களது வாழ்க்கையை மாதிரியாகக் கொண்டு எளிதான வேலையை விரும்புகின்றனர். ஒருவேளை அவர்களுடைய மாமன்மாரில் ஒருவர் சட்டம் பயின்று உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருக்கலாம்; அல்லது அவர்கள் அறிந்த ஒருவர் வாழ்க்கை இன்சூரன்ஸ் பணியிலிருந்து நிறையப் பொருளீட்டியிருக்கலாம். இவர்களின் செல்வாக்கும் இளையோரிடையே பெரிய அளவில் இருக்கின்றது. இந்நிலையில்தான் தொழில் அறிவுரை தோல்வியுறுகின்றது. தனியன், தேர்ந்தெடுக்கின்ற வேலை, அவ்வேலையில் அதிக வெற்றி பெற்றவர்களது கருத்துப்படியே தேர்ந்தெடுக்கப்பட்டதாகும். அவன் அவ்வேலையிலுள்ள தோல்விகளையோ, கடின நிலைகளையோ காண்பதில்லை. ஊதியப் பணியாளர் துறைகள் சுத்தமானவையாகவும், மதிப்புள்ளவையாகவும், நல்ல ஊதியமளிக்கும் எளிமையான தொழில்

[33] E. Roeber and L. Garfield, 'A study of the Occupational Interests of High School Students in Terms of Grade Placement' Journal cf Educational Psychology, 1943, Vol. 34, pp. 361-362.

களாகவும், சமூக அந்தஸ்தினை அளிப்பவையாகவும் கருதப்படுகின்றன. உடலுழைப்பை அதிகமாக அளிக்கவேண்டிய கடினமான வேலைகள் அசுத்தமானவையாகவும், அதிக உடலுழைப்பைத் தர வேண்டியன வாகவும், திறமை தேவையற்றனவாகவும், சமூக அந்தஸ்தில் கீழான நிலையைக் கொண்டவையாகவும், குறைந்த ஊதியத்தைக் கொண்ட வையாகவும் கருதப்படுகின்றன. இந்த மாறுபாடு, பயிற்சி பெற்ற பொறியியலாரும், விவசாயியும் தோன்றுவதற்குமுன் ஏற்பட்டதாகும். ஆனால், இம்மாறுபாடு இன்று உண்மை நிலையைப் பிரதிபலிப்பதாய் இல்லை. ஆனால், இந்த மாறுபாட்டு உணர்ச்சி இன்னமும் பெரும் பான்மையான சிறுவர் சிறுமியரிடத்து அகலாமல் இருக்கின்றது. அண்மை ஆண்டுகளில் ஏற்பட்ட முக்கிய வளர்ச்சிகளில் ஒன்று கல்வி பெற்ற அகன்ற வளர்ச்சியின் தொடர்பாகத் தொழில்களிடையே இருக்கின்ற மாறுபாடுகளை அகற்ற முயல்வதேயாகும்.

இங்கு அளிக்கப்பட்டுள்ள செய்திகள் யாவும் இளஞ்சிறுவர் களுக்குமட்டும் பொருத்தமல்ல; உயர்நிலைப் பள்ளிச் சிறுமியர்களுக் கும் இவை பொருத்தமானவையாகும். முன்னர் நடந்த தொழில் வழிகாட்டுதல் மிகக் குறைவானதாகவும், ஆண்களுக்குமட்டுமே பொருத்தமானதாகவும் இருந்தது. ஆனால், இன்று உயர்நிலைப் பள்ளிச் சிறுமியர்களது வாழ்க்கைக்கும் அவை செல்லுகின்றன. பல் வேறு தொழில்களில் இன்று பெரிய அளவில் சிறுமியர்கள் இருப்பதை உற்றுநோக்கவும். பெண்கள் ஈடுபட்டுள்ள பல்வேறு வேலைகளைக் கவனிக்கவும்; பெண்கள் சேர்ந்திருக்கின்ற பல்வேறு செயல்கள் யாவும் இசைவான சமூக அந்தஸ்துகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டதனால், இன்று இளம்பெண்கள் அவ்வேலைகளை நாடிச்செல்கின்றனர். எனவே, தொழில் வழிகாட்டல் நாளைய இளம்பெண்களுக்கு மிகவும் அக் கறையை ஊட்டவல்லதொன்றாகத் திகழும்.

கடந்த நூற்றாண்டில் வாழ்க்கைச் செயல்கள், குறிப்பாகப் பெண் களது தொழில் ஈடுபாடுகள், இளையோர் சிறுமிக்கு எண்ணிலடங் காப் பிரச்சினைகளை அளித்திருக்கின்றன. பெண்ணினது பங்கின் தொடர்பில் பண்பாட்டுத் தரங்கள் உருவாக்கப்பட்டன. இப் பண்பாட் டுத் தரங்கள் ஓரளவு நமது சமூக மரபுவழியினால் பெறப்பட்டவை யாகும். குறிப்பாக ஆண், பெண்கள் இப் பெண்தன்மையான பங் கினைச் செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறான்.

பெண்கள் பல்வேறு தொழில்களைச் சார்ந்தவர்களாக ஆனபின் னர், பால் ஏதுவையும் பால் பங்கினையும் ஒதுக்கிவைக்கும் அளவிற்குப் புதிய பங்கு தோன்றுகின்றது. இதனால் பெண் பள்ளியில் மிகவும் அக்கறையுடன் படிக்க ஆதரிக்கப்பட்டு நர்ஸுகளுக்கான பள்ளியில் சேர ஊக்கமளிக்கப்படுகின்றாள். புகழ் வாய்ந்த மருத்துவ நிலையத் தில் சோதனைநிலையப் பொறியியல் உதவியாளராகப் பணியாற்றும்

தமது மகளைப்பற்றித் தந்தையும் தாயும் பெருமைப்படுகின்றனர். இவ்வாறான மாறுபட்ட பங்குகள் இருப்பதனால் இளையோர் சிறுமிகளுக்கும், பின்னிளையோர் சிறுமிகளுக்கும் பல துன்பமான பிரச்சினைகள் தோன்றுகின்றன. அவர்கள் தங்களுடைய குடும்பத்தின் மூலமாகவும், ஆண் தோழர்கள் மூலமாகவும் இம் மாறுபாடுகளையும் முரண்பாடுகளையும் அறிகின்றார்கள். இந்நூலாசிரியர் அதிகாரம் 9-ல் குறிப்பிட்டுள்ள இளையோர்களது பிரச்சினைகளைப் பற்றிய ஆய்வில் இதனை அறிந்தார். சிறுமியர்கள் மிக அதிகமாகக் குறிப்பிட்ட பிரச்சினைகளில் ஒன்று என்னவெனில், 'எனக்குத் திருமணம் ஆகுமோ ஆகாதோ என்று ஆச்சரியப்படுகிறேன்' என்பதாகும். சிறுமியின் பொருத்தப்பாடுகளில் இருக்கின்ற இம் முரண்பாடுகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் கொம்மரோவஸ்கி (Komarowsky) என்பவர் கூறியதாவது:

"........... பொதுவாகக் கூறுமிடத்து, சிறுமிதான் இன்றைய வரலாற்று நிலையில் சிறப்பாகப் பொருந்தியமைய இயலாது 'பாதை நடுவே உள்ள ஆளுமை'யினைக் கைக்கொள்ளுகின்றாள். அவள் இரு பங்குகளையுமே கொள்ளுகின்ற அளவிற்கு மாறுபடுகின்ற தன்மையைக் கொண்டிருக்கின்றாளேயன்றி எந்த ஒரு பங்கினையும் சிறப்பாகக் கைக்கொண்டிருக்கவில்லை. அவள் பள்ளியில் சிறப்பாக இருக்குமளவு நுண்ணறிவு பெற்றிருக்கின்றாளேயன்றி, எல்லாவற்றிலும் முதல் வகுப்பு (A) பெறுகின்ற அளவு சிறந்திருக்கவில்லை. செய்திகளைத் தெரிந்துகொண்டு சுறுசுறுப்பாக இருக்கிறாள் என்றாலும், அவள் அறிவார்வத்தினால் உந்தப்பட்டவளல்லள். திறமை வாய்ந்தவள்தான்என்றாலும், பெண்களுக்குப் புதியதாக இருக்கின்ற பகுதியில் சிறந்து விளங்கவில்லை. சுதந்திரமாக வாழவும், வாழ்க்கைக்குரிய தொழிலைக் கைக்கொள்ளவும் முடிகின்றது என்றாலும், ஆண்களுடன் போட்டியிடுகின்ற அளவிற்குச் சிறந்து விளங்கவில்லை. சில வேலைகளைச் சிறப்பாகச் செய்ய முடிகிறது என்றாலும் (திருமணம் செய்துகொள்ளாமல் இருந்தால்) ஒரு தனிப்பட்ட தொழிலுடன் அவள் இன்பமாக ஒன்றியிருக்க முடியவில்லை.[34]

அறிவுரையாளரின் பணி

இளையோன் தொழிலைத் தேர்ந்தெடுப்பதையும், தனியன் தன் தந்தையின் தொழிலைக் காட்டிலும் உயர்ந்த தொழிலைத் தேர்ந்தெடுப்பதன் தொடர்பில் அறிவுரையாளரின் பணியையும் எச்சரிக்கையுடன் ஆய்வு செய்தல் வேண்டும். பல அறிவுரையாளர்களுக்கும், பல உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் சமூகத்தில் எளிதில் இயங்குகின்ற

[34] M. Komarowsky, 'Cultural Contradictions and Sex Roles', The American Journal of Sociology, 1946, Vol. 52, p. 189.

தன்மை கொண்டிருப்பது மிகவும் அருமையான குணமாகும். அதனை நாம் ஆதரிக்க வேண்டும். அமெரிக்கனுடைய குழந்தை கடினமாக உழைக்குமானால், அவனால் பண்பாட்டு ஏணியில் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்குச் செல்லவியலும் என்று அவன் கனவு காண்கிறான். பெரும்பாலும் சிறுவர் சிறுமியர்கள் சமூகப் பொருளாதார ஏணியில் முன்னேற்றத்திறனும் அவாவும் கொண்டு முன்னேறும்பொழுது, அவர்களுடைய சக்திக்கப்பாற்பட்ட சூழ்நிலைகளினால் தடை செய்யப்பட்டு அவர்களுடைய முயற்சிகள் பலனளிக்காவிடில், மனமுறிவடைகின்றனர். மேலும், பல சிறுவர்சிறுமியர்கள் நல்ல திறமையுடன் இருந்தாலும், உடனடியாக உள்ள தேவைகளையும் திருப்திகளையும் ஒத்தி வைக்க மனமும் உந்துவும் இருக்குமாயின், அவர்களுடைய திறமைக்கும், பயிற்சிக்கும், தொழில் நாட்டத்திற்கும் ஏற்ற தொழிலினைப்பெறலாம். ஆனால், அவர்கள் அத் தியாகங்களைச் செய்யாததாலும் பயிற்சிக்குரிய முயற்சிகளைச் செய்யாததாலும் தொழில் அவாக்களில் குறைந்தவர்களாகின்றனர்கள். ஜேம்ஸின் வரலாறு இவ்வாறான நிலைமையை விளக்குகின்றது.

ஜேம்ஸின் தந்தை இறந்துவிட்டார். அவனுடைய தாயார் ஓர் ஆலைக் கிராமத்தில் முதல் வகுப்பிற்கு ஆசிரியையாய் இருந்தார். அவள் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கு உதவியாக இருந்ததனால் அவளுக்கு ஒரு வசதியான வீடு தரப்பட்டு, அதற்கு வாடகையும் இல்லாமல் இருந்தது. ஜேம்ஸ், அவளுடைய இரண்டு குழந்தைகளில் மூத்தவனாவான். அவன் குடும்பக் காரை ஓட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டான். அவன் ஒரு சிறுவனின் பங்கைக் கைக்கொள்ளவும், சமுதாய உறுப்பினனின் பங்கைக் கைக்கொள்ளவும் கற்றுக் கொண்டான். அவனது தாயார் அவன் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தபின்னர் கல்லூரிக்குச் செல்லவேண்டும் என்று எண்ணியிருந்தாள். ஆனால், ஜேம்ஸினுடைய நெருங்கிய நண்பர்கள் யாரும் பள்ளிப் படிப்பிற்குமேல் படிக்கத் திட்டமிடவில்லை. ஜேம்ஸ் உயர்நிலைப்பள்ளியில் சராசரி மாணவனுக்கும் உயர்ந்த நிலையில் இருந்தான். அவனுடைய குறியெல்லாம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து விட்டு ஓர் எழுத்தர் வேலையைப் பெற்று, ஓட்டப் பந்தயத்தில் பங்கு பெறும் கார் ஒன்றை வாங்கவேண்டும் என்பதாகவே இருந்தது. சிறிதளவு தியாகமும், உந்துவும் ஜேம்ஸிடம் இருந்திருந்தால், அவனால் கல்லூரிக்குச் செல்ல முடிந்திருக்கும். அதனால் பெறுகின்ற அதிகமான பயிற்சியின் காரணமாக உயர்ந்த தொழிலைப் பெற்றிருக்கலாம். ஜேம்ஸிடம் அதிகக் கல்வி பெறுவதற்குரிய அவாக்கள் குறைந்திருந்ததனால், அவன் அதிகமான பயிற்சி பெற முடியவில்லை.

அறிவுரையாளரின் பணி ஜேம்ஸும் மற்றவர்களும் எவ்வாறு செயலுறுகின்றனர் என்று தீர்மானிப்பது மட்டுமன்று. இளை

ரியார்கள் நல்ல முடிவுகளை எடுக்கவும், அவர்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க நல்ல முயற்சிகளை எடுக்கவும் உதவவேண்டும். அன்னோருடைய பணிகளாகக் கீழ்க்கண்டவற்றைத் தொகுத்துக் கூறலாம் :

(1) உயர்ந்த தொழில்நிலைக்கு முயற்சி எடுக்கலாமா அல்லது கூடாதா என்று இளையோன் தீர்மானிக்க உதவவேண்டும்.

(2) சில தனியன்களுக்கு அவர்களுடைய அவாக்களை ஊக்குவிக்கவும், சிலருடைய அவாக்களுக்கு ஆதரவு தராமல் ஊக்கத்தைக் குறைக்கவும் வேண்டும்.

(3) நல்ல பயன்மதிப்புகளைப் பெறுவதற்கு மாணவர்களுக்கு உதவவும், அப்பயன் மதிப்புகளைக்கொண்டு அவர்கள் தங்களுடைய தொழில் முடிவுகளைக்கொள்ள உதவவும் வேண்டும்.

(4) பெரும்பான்மையான மாணவர்கள் தொழில் பொருத்தப்பாடுகளின்மூலம் தங்களுடைய தொழில் நிலைகளில் திருப்தியடைய உதவ வேண்டும்.

(5) ஆசிரியர்கள், மாணவர்கள் நல்ல தொழில் பொருத்தப்பாடுகளைப் பெறுவதற்காக நல்ல முடிவுகளை எடுப்பதற்கு உதவ வேண்டும்.

குறையுடைய மாணவர்களது தொழில் வழிகாட்டல் தனித்த பிரச்சினைகளைக் கொண்டுள்ளது. குறையுடைய இளையோன்தான் தன்னுடைய திறமைகளைப்பற்றியும், வரம்புகளைப்பற்றியும் புரிந்துகொள்ளுதல் வேண்டும். மேலும், அவன் பல்வேறு தொழில்களைப் பற்றிய செய்திகளையும் தேவைகளையும் அறிதல்வேண்டும்.[85] டெக்சாஸ் பகுதியிலுள்ள சான் அந்தோனியா (San Antonio) எனும் ஊரிலுள்ள ஹாத்தோன் ஜூனியர் உயர்நிலைப் பள்ளியிலுள்ள ஆயிரம் மாணவர்களைக் கொண்டு நடத்திய ஆய்வு, 144 பேர் எண்பதுக்குங் கீழ் நுண்ணறிவு ஈவு கொண்டிருந்ததாகக் காட்டியது. இருப்பினும், அவர்களில் 33 சதவீதத்தினர் குறைவான நுணுக்கமுடைய வேலையையே தேர்ந்தெடுத்தனர். ஆனால், ஒருவரும் தொழில் நுணுக்கமற்ற வேலையைத் தேர்ந்தெடுக்கவில்லை. அவர்கள் தொழில்களைப்பற்றிய ஓர் அறிவினை ஒரு திட்டத்தின்மூலம் பெற்றபின்னர், 144 பேரில் 48 சதவீதத்தினர் தங்களுடைய உண்மையான திறமைகளுக்கு ஏற்ற தொழிலுக்குக் குறைத்துக்கொண்டனர்.

புனரமைப்புத் திட்டங்களும், மனித சக்திக்குரிய தேவைகளும் உடற்குறைபாடுடையவர்களுக்குப் பல்வேறு தொழில்களை அளித்திருக்கின்றன. வேலை தருபவர்கள், உடற்குறைவுடையவர்கள் சில

[85] A. T. Allen, 'Cogs in the Occupational Wheel,' Occupations, 1941, Vol. 20, pp. 15-18.

வகையான வேலைகளில் தங்களின் உடற்குறைவின் காரணமாக உடற்குறையற்றவர்களைக் காட்டிலும் நம்பத்தகுந்தவர்களாக இருப்பதாகக் கண்டுள்ளனர். ஆதலின், இன்றைய பள்ளியில் தொழிற் பயிற்சி என்பது உடல்திறமிக்க இளையோர்க்குமட்டும் உரியதன்று. இருப்பினும், நல்ல தொழிற் பயிற்சித் திட்டங்களைத் தொழில் அறிவுரையுடன் சேர்த்து அளிக்கவேண்டும். இது முழுத் தனியனைத் தனித்த தொழில் அவாக்களின் அடிப்படையில் அணுகச்செய்யும்.

நுண்ணறிவுச் சோதனைகள், தொழில் நாட்டச் சோதனைகள் ஆகியவற்றின் பயன்கள்

இன்றையப் பள்ளிகள் பயன்படுத்துகின்ற நுண்ணறிவுச் சோதனைகள், தொழில் நாட்டச் சோதனைகள் ஆகியவைகளிலுல் பெறுகின்ற இரண்டு முக்கியப் பயன்களாவன: (1) தனியனுக்குச் சிறப்பாக அமைகின்ற பள்ளிவேலைநிலை எப்படி இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கவேண்டும். (2) தொழில் வழிகாட்டுதல்: இந்நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் சோதனைகளில் பெரும்பான்மையான சோதனைகள் குழு நுண்ணறிவுச் சோதனைகளாகும். இச் சோதனைகளைச் சில சமயங்களில் சொற்சோதனைகள் என்றும், சொல்லில்லாச் சோதனைகள் என்றும் வகைப்படுத்துவதுண்டு. சில சமயங்களில், குறிப்பாக மனமுதிர்ச்சியை அறியும் கலிபோர்னியா சோதனையில், சொல் (மொழி) சோதனையும் சொல்லில்லாச் சோதனையும் (மொழியற்ற) சேர்க்கப்பட்டுள்ளன. இதனுல் சொற்சோதனையின் மூலம் ஒரு நுண்ணறிவு ஈவையும், சொல்லில்லாச் சோதனையின் மூலம் மற்ருெரு நுண்ணறிவு ஈவையும் பெறலாம். அதிகாரம் 4-ல் குழு நுண்ணறிவுச் சோதனைகளுக்கும் அறிவியல் தரங்களுக்குமிடையே இருக்கின்ற உடன்தொடர்புகள், ·30-லிருந்து ·70 வரை இருப்பதாகக் காணப்பெற்றன. இவ்வுறவானது போதிய அளவு நெருங்கிய தன்மைகொண்டிருப்பதனுல், சோதனை உளவியல் மாணவர்கள் நுண்ணறிவுக் குழுச் சொற்சோதனைகளை அறிவியல் நாட்டச் சோதனைகள் என்று அழைப்பதுண்டு. கல்வி வழிகாட்டுதலும், தொழில் வழிகாட்டுதலும் மிக நெருங்கிய இடைத்தொடர்பு கொண்டிருப்பதனுல், அறிவியல் நாட்ட மதிப்பீடுகள் தற்காலத் தொழில் வழிகாட்டுதல் திட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகத் திகழ்கின்றது.

நாட்டச் சோதனைகள் என்பவை ஒருவரது உள்ளார்ந்த திறமைகளை மதிப்பிடுவதற்காக வளர்க்கப்பட்டவையாகும்.[86] இச்சோதனை

[86] For a more complete presentation of materials bearing on intelligence and aptitude testing the student is referred to recent text-books on the subject such as: L. J. Cronbach, 'Essentials of Psychological Testing.' New York: Harper & Bros.,

கள் ஒருவரது சில தனித்த திறமைகளையும் புரிந்துகொள்ளுதலையும் வளர்க்கத் தயாராக இருக்கும் உள்ளார்ந்த திறமைகளை அளவிடுகின் றன. இவை நுண்ணறிவுச் சோதனைகள், அறிவியல் தரங்கள், மனப் பாங்கு, குணங்கள், மாணவனைப்பற்றிய மற்றச் செய்திகள் ஆகியவைக ளுடன் இணைந்து வழிகாட்டுதலில் மிகவும் பயனுள்ளவையாய் விளங்கு கின்றன. இருப்பினும், சோதனைகள் என்பவை முடிவானவைகள் அல்ல. அவைகள் அறிவுரையாளர் தனியனது வளர்ச்சிக்குரிய உள்ளார்ந்த திறன்களை அறிவதற்கு உதவி செய்யும் கருவிகள் அல்லது வழியேயாகும். அவைகளைச் சிறப்பாகப் பயன்படுத்துவது அறிவுரையாளர், அறிவுரை பெறுவோர் ஆகியோர்களின் திறமையை யும் புரிந்துகொள்ளுதலையும் பொறுத்திருக்கிறது.

நுண்ணறிவுச் சோதனை அளவுகளுக்கும், தொழில் தேர்ந்தெடுத் தலுக்குமிடையே கீழான உறவே இருப்பதாகப் பல்வேறு ஆய்வுகள் காட்டுகின்றன. நல்ல தொழில் பொருத்தப்பாட்டிற்கு நுண்ணறிவு என்பது பல இடைத்தொடர்புகள் கொண்ட ஏதுக்களில் ஒன்றே யாதலின், இது எதிர்பார்க்கக்கூடியதாகும். பல இளையோர்கள் தங்களுடைய அறிவியல் திறன்களுக்கு அதிகமான தொழில்களுக்கு ஆசைப்படுவதும், மற்றும் பல இளையோர்கள், தாங்கள் பெற்றிருக் கின்ற நுண்ணறிவைக் காட்டிலும் குறைவான தேவையையுடைய தொழில்களைக்கொண்டு திருப்தியடைவதும் சாத்தியமானவை களாகும். அட்டவணை 16—7-ல் 1,500 சீனியர் உயர்நிலைப்பள்ளி மாணவர்களது மனத்திறன் இருந்த விதமும், அவர்களது தொழில் தேர்ந்தெடுத்தல்களும் அளிக்கப்பட்டுள்ளன.[87] பல்வேறு தொழில் தேர்ந்தெடுத்தல்களில் பலவிதமான நுண்ணறிவு ஈவு காணப்பட்டா லும், இருபது சதவீதத்தினர்க்குமேல் 100 நுண்ணறிவு ஈவுக்கும் குறை வான நுண்ணறிவே தேவையாய் இருக்கும் தொழில்களைத் தேர்ந் தெடுத்தனர் என்பதை அறியமுடிகின்றது. ஊதியப் பணியாளர் துறை யைத் தேர்ந்தெடுப்பவர்களில் பெருஞ் சதவீதத்தினர் ஊதியப் பணி யாளர் பயிற்சிக்குத் தேவையான மனத்திறனோ, அறிவியல் நாட் டமோ கொண்டிருக்கவில்லை. மற்றத் தொழில் பகுதிகளைத் தேர்ந் தெடுத்தவர்கள் செய்த முடிவினைப்பற்றிச் சரியா, தவறு என்று கூறுகின்ற பிரச்சினை மிகவும் கடினமானதாகும். நுண்ணறிவுச் சோதனை அளவுகளையும் நாட்டச் சோதனை அளவுகளையும், தொழில்

1949; D. E. Super, 'Appraising Vocational Fitness'. New York: Harper & Bros., 1949; and F. S. Freeman, 'Theory and Practice', of Psychological Testing' (Rev. Edition); New York: Henry Holt & Co., 1956.

[87] W. A. Bradley. 'Correlates of Vocational Preferences' Genetic Psychology Monographs, 1943, Vol. 28, pp. 99-169.

தேர்ந்தெடுத்தல்களுடனும் தொழில் வழிகாட்டலுடனும் கட்டாய மாகக் கருதவேண்டும்.

அக்கறை கண்டுபிடிப்பின் பயன்கள்

சோதனை செய்யும் முயற்சி, மாணவர்களது திறன்களை அறிய முயன்றதோடு, அவர்களுடைய அக்கறைகளையும் ஆளுமையினையும் அறியப் பயன்படுத்தப்படுகின்றது.

அட்டவணை 16—7

1,500 ஜுனியர், சீனியர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களது மனத்திறனும் தொழில் தேர்ந்தெடுத்தல்களும் (பிராட்லி அளித்தது.)

நுண்ணறிவு ஈவு	ஊதியப் பணியாளர்	வியாபாரம், எழுத்தர் துறை	தொழில் நுணுக்கம்	இராணுவப்	குறைவான தொழில் நுணுக்கம்	தொழில் நுணுக்க மற்ற	மொத்தம் சதவீதம்
140—149	·2	·0	·0	·0	·0	·0	·2
130—139	·6	·3	·1	·3	·0	·0	1·3
120—129	1·5		·7	1·7	·0	·0	7·5
110—119	5·5	7·2	3·2	5·3	·3	1·0	22·5
100—109	6·3	12·8	3·3	5 7	1·9	2·5	32 5
90— 99	3·0	9·0	2·7	8·3	·3	2·0	25·3
80— 89	·7	1·3	2·3	3·4	1·0	1·0	9·7
70— 79	·0	·3	·0	·0	·0	·7	1·0

தொழில் அறிவுரை கூறல் என்பது முழு மனிதனைப் பற்றியதாக இருக்கவேண்டுமேயொழிய, அவனுடைய நாட்டங்களையும் திறன் களையும் பற்றியதாகமட்டும் இருக்கக்கூடாது என்று முன்னரே குறிப் பிடப்பட்டுள்ளது. அக்கறை கண்டுபிடிப்புகள் வளர்ச்சியடைந் திருக்கின்றன. அவை அறிவுரையாளருக்கு, மாணவர்களது உயர்ந்த அக்கறைகளையும் குறைந்த அக்கறைகளையும் மிகவும் சரியான முறையில் அறிவதற்கு உதவும்.

மூன்று உயர்நிலைப்பள்ளி மாணவர் குழுக்கள் ஓர் ஆய்வில் பயன் படுத்தப்பட்டு, அவர்களுடைய தொழில் அக்கறைகள் கண்டுபிடிக்கப் பட்டு, அவை தொழில் தேர்ந்தெடுத்தல்களுடன் ஒப்பிடப்

பட்டன.[38] கியூடர் முன்னுரிமை மதிப்பீடு (Kuder Preference Record) பத்தாவது படிவச் சிறுவர்கள் 115 பேரிடமும், பத்தாவது படிவச் சிறுமியர் 117 பேரிடமும் தரப்பட்டு அளவுகள் எடுக்கப் பட்டன. கியூடர் சோதனையின்மூலம் அளக்கப்பட்ட அவர்களது தொழில் முன்னுரிமைகளான ஒன்பது தொழிற் பகுதிகளை வரிசைப் படுத்தித்தரும்படி இம் மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இத் தரமிடல்களுக்கும் சோதனைமூலம் பெறப்பட்ட தரமிடல்களுக்கு மிடையேயுள்ள உடன்தொடர்புகள் பெறப்பட்டன. சிறுவர்களது உடன்தொடர்பு ·59 ஆகவும், சிறுமியர்களது உடன்தொடர்பு ·50 ஆகவும் இருந்தன. மாணவர்களது முதல் மூன்று தேர்ந்தெடுத்தல் களுடன், கியூடர் முன்னுரிமை மதிப்பீட்டின்மூலம் பெறப்பட்ட முதல் மூன்று தேர்ந்தெடுத்தல்கள் ஒப்பிடப்பட்டன. ஒப்பிடப்பட்ட நிலை களில் 90 சதவீதத்தினரது முதல் மூன்று தேர்ந்தெடுத்தல்கள் சோதனையின்மூலம் பெறப்பட்ட மூன்று தேர்ந்தெடுத்தல்களுக்குள் இருந்தன. அட்டவணை 16—8-ல் அளிக்கப்பட்டுள்ள முடிவுகள் இத்தொடர்பு சிறுமியர்களிடத்து அவ்வளவு நெருங்கியதாக இல்லை எனக் காட்டுகின்றன. சிறுமியர்களின் முதல் மூன்று தேர்ந்தெடுத் தல்கள் 70 சதவீதத்தினரது நிலைகளில்மட்டுமே கியூடர் சோதனையின் உயர்ந்த அளவீடுகள் பெற்றவையாக இருந்தன.

இப் பிரச்சினையைப்பற்றி நடந்த மற்ற ஆய்வுகளும் இம்முடிவை ஆதரிக்கின்றன. அதிகாரம் 6-ல் அளிக்கப்பட்டுள்ள குறிப்புகள், அக்கறைக் கண்டுபிடிப்புகளினால் அளக்கப்படுகின்ற தொழில் அக் கறைகள், ஒன்பதாவது படிவத்திலிருந்து பன்னிரண்டாம் படிவத்திற் குள் அதிகமான மாறுதல்கள் கொண்டிருந்ததாகக் காட்டுகின்றன. உண்மையில் வெவ்வேறான தொழில் கண்டுபிடிப்புகளுக்கிடையே உள்ள அளவுகளிடையே உள்ள உடன்தொடர்பு ·50 ஆகும். இது தனித்த பகுதிகளிடையே ஒப்புமை இல்லை என்பதைக் காட்டுகின்றது. தொழில் அக்கறைக் கண்டுபிடிப்புகள், அக்கறை கொண்டுள்ள பல பகுதிகளைத்தாம் சிறப்பாகக் காட்டமுடியுமேயன்றித் தனித்த ஓர் அக்கறைப் பகுதியைக் காட்டவியலாது. இது உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் விஞ்ஞானத்திலும் கணிதத்திலும் கொண்டிருக்கின்ற அக்கறைகளின் நிலைத்த தன்மையை உணர நடத்தப்பட்ட ஆய்வி லிருந்து தெரியவருகின்றது.[39] 9ஆவது படிவ நிலையில் கியூடர் முன் னுரிமை மதிப்பீட்டினை அளித்துக் குறிப்புகள் பெறப்பட்டன. பின்னர்

[38] T. Kopp, and L. Tussing, 'The Vocational Choices of High School Students as Related to Scores on Vocational Interest Inventories,' Occupations, 1947, Vol. 25, pp. 334-342.

[39] G. G. Mallinson and H. V. Dragt, "Stability of High School Students' Interest in Science and Mathematics," School Review, 1952, Vol. 60, pp. 362-367.

அட்டவணை 16—8

பத்தாவது படிவ மாணவர்கள் குறிப்பிட்ட தொழில் தேர்ந்தெடுத்தல்களுக்கும் அவர்கள் கியூடர் முன்னுரிமை மதிப்பீட்டில் பெற்ற அளவீடுகளுக்குமிடையே உள்ள உறவு.

தேர்ந்தெடுத்தல்	கியூடர் முன்னுரிமை மதிப்பீட்டில் பெற்ற அளவீடுகளின் தரங்கள்			
	1	2	3	மொத்தம்
சிறுவர்கள் :				
முதல்	67	15	8	90
இரண்டாவது	17	44	12	73
மூன்றாவது	10	16	17	43
சிறுமியர்கள் :				
முதல்	40	22	11	73
இரண்டாவது	17	22	14	53
மூன்றாவது	13	15	17	45

இரண்டு மூன்று ஆண்டு உயர்நிலைப் பள்ளிப் பயிற்சிக்குப்பின், இதே சோதனைகள் அளிக்கப்பட்டுக் குறிப்புகள் பெறப்பட்டன. இதன் முடிவுகள் குறிப்பிடுவது என்னவெனில், 9ஆவது படிவ நிலையில் விஞ்ஞானத்திலோ கணிதத்திலோ அக்கறை உயர்ந்திருக்குமாயின், அதே அக்கறை 12ஆவது படிவ நிலையிலும் உயர்ந்திருக்கும் என்பதேயாகும். இருப்பினும், ஒரு தனித்த தரமிடலைப்பற்றி வருமுன் கூறுதல் 12ஆவது படிவத்திலும் சிறப்பாகக் காணப்படவில்லை. 9ஆவது படிவத்தில் விஞ்ஞானத்தை உயர்ந்த அக்கறையாகத் தரமிட்ட 29 மாணவர்களில் 13 பேர்மட்டுமே 12ஆவது படிவத்தில் விஞ்ஞானத்தை உயர்ந்த அக்கறையாகக் கொண்டிருந்தனர். இவ்வாய்வும் மற்ற ஆய்வுகளும் அக்கறை அளவுகள் தனியனது திறமை வருமுன் கூறுகின்ற அளவு நம்பிக்கை வாய்ந்த அடிப்படையாகத் திகழவில்லை என்று காட்டினலும், அவ்வாறான அளவுகள் எச்சரிக்கையுடன் பயன்படுத்தப்பட்டால் ஆசிரியருக்கும், தொழில் அறிவுரையாளருக்கும், உயர்நிலைப் பள்ளிச் சிறுவர் சிறுமியருக்கும் கல்வி வழிகாட்டலையும், தொழில் வழிகாட்டலையும் அளிக்கப் பயனுள்ளவையாய் இருக்கும். இருப்பினும், அக்கறை அளவுகள் நல்ல தொழில் தேர்ந்தெடுத்தல்களை உண்டாக்குதற்குரிய திட்டவட்டமான உண்மை வடிவங்களைக் கொண்டிருக்கவில்லை. அறிவுரை பெறுபவர்கள் இன்னமும் மனிதற்குரிய குற்றங்குறைகளைச் செய்பவர்களாகவே இருக்கின்றனர்.

முழு ஆளுமைக்கு எதிராகத் தனித்த பண்புக்கூறுகள் பற்றிய கருத்து

அதிகாரம் 7-ல் ஆளுமையினைத் தனித்த பல பண்புக் கூறுகள் தனிப்பட்ட வகையில் செயலுறுகின்ற ஒன்று என்று கருதக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில் வழிகாட்டல் என்பது தனிப் பட்ட மாறிகளைப்பற்றிக் கவனிப்பதிலிருந்து அறிவுரை பெறுபவரை, முழு ஆளுமை கொண்ட ஒருவர் தொழில் பற்றிய அல்லது அதன் தொடர்பிலுள்ள பிரச்சினையைத் தீர்க்க வந்துள்ளவர் என்று அறிவுரை யாளர் கருதுகின்றனர். இவ்வாறு முன்னைய இயக்கமற்ற அறிவுரை பெறுபவர் இப்பொழுது மனவெழுச்சிகள், அவாக்கள், நாட்டங்கள், மனப்பான்மைகள், அக்கறைகள், பயன்மதிப்புகள் கொண்ட இயக்க முள்ள மனிதராகக் கருதப்படுகின்றார். அவர் சில பயன்மதிப்புகள், வழக்கங்கள், பண்பாட்டு வகைகள் இருக்கின்ற சமூகத்தில் இயங்கு கிறார். இவை அவர்மீது மோதி, அவருடைய அவாக்களையும், அவ ருடைய கருதுகோள்களையும், மற்றவர்களது கருதுகோள்களையும், சமூகக் குழுவில் ஓர் உறுப்பினராக அவரது பங்கினையும் தீர்மானிக் கின்ற அளவு செயலுறுகின்றன.

சில சமயங்களில் வெவ்வேறான தொழில்கள் வெவ்வேறான தனித்த தொழில் வகைகளைக் கொண்டிருக்கின்றன என்று கருதப்படு கின்றன. வெற்றிகரமான தொழிலாளர்களைப்பற்றிய ஆய்வுகள் இவை உண்மையல்ல எனக் காட்டியுள்ளன. வெற்றிகரமான இயந்திரப் பொறியியலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், நர்சுகள் போன்றவர்கள் மாறுபட்ட ஆளுமை வகைகளைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

தொழில் வழிகாட்டலின் புதிய பணி

தொழில் வழிகாட்டலின் குறி இப்பொழுது புதிய பொருளுடன் திகழ்கின்றது. தொழில் வெற்றிக்குப் பதிலாகத் தொழில் பொருத்தப் பாடு எனும் சொல் பயன்படுத்தப்படுவதனாலேயே இப்புதிய பொருள் தோன்றியுள்ளது. வேலைக்கான திட்டம், அறிவுரை வழங்குதல், நாட்டச் சோதனை, வேலையில் அமர்த்தல், பிற்கால வேலையைப்பற்றி ஆய்வு செய்தல் ஆகியவைகள் தனியன் நல்ல தொழில் பொருத்தப் பாடுகளை ஏற்படுத்துவதற்கு உதவி செய்தற்குரிய இடை வழி களாகும். கெல்மென் (Gellman) என்பவர் இதுபற்றிக் குறிப்பிடுவதா வது: 'தொழில் அறிவுரை வெற்றியடைவதனை அல்லது தோல்வி யடைவதனை அளப்பதற்குரிய கருவி என்னவெனில், அது எந்த அளவு தனியனது பொருத்தப்பாடு, சமூகப் பொருளாதார ஏதுக்களா லும் தொழில் வகையினாலும் சுமத்தப்படுகின்ற வரம்பிற்குட்பட்டு

வேலை செய்கின்றது என்பதேயாகும்.'[40] குறிக்கோள் மாறுதலுக் குட்பட்டுத் தொழில் பொருத்தப்பாட்டிற்கு வந்திருப்பதன் பொருள் என்னவெனில், அறிவுரை கூறுபவர் தனியன் வேலைக்குப் பொருந்தி யிருக்கின்றனா என்று பார்ப்பதோடு, அவனுடைய தொழில் நிலைமை களையும் அவனுடைய தொழில் பொருத்தப்பாட்டினையும் பாதிக்கின்ற சொந்தப் பிரச்சினைகளையும் அறிதலாகும். தொழில் பொருத்தப் பாட்டிற்குச் சொந்தப் பொருத்தப்பாடு எப்பொழுதுமே அவசியமாய் இருக்காது. ஆனால், சொந்தப் பொருத்தப்பாடு தொழில் பொருத்தப் பாட்டினை அடைவதற்கு உதவியிருக்கும்.

தொழில் வழிகாட்டுதல் முறைகள் மாறிக்கொண்டே வரு கின்றன. அவை இப்பொழுது தனியன்களை உண்மையான வேலை நிகழ்ச்சிகளில் அல்லது அவைபோன்ற உண்மையான தூண்டல்கள் உள்ள நிகழ்ச்சிகளில், உற்றுநோக்குதல்களில் அல்லது ஆய்வுகளில் தாம் வலியுறுத்தப்படுகின்றன. 'நேரடி உரையாடல் தனியனது வேலையின் பொருளினை உணர்வதாகவும், அவன் வேலைபற்றிக் கொண்டிருக்கின்ற மனப்பான்மையை அறிவதாகவும், வேலை நிகழ்ச்சி களில் அவன் கொண்டிருக்கின்ற பயன் மதிப்புகளைத் தெரிந்துகொள்வ தாகவும், தனியன் செயலுறுகின்ற உளவியல் வரம்புகளை அறிவதாக வும் இருக்கவேண்டும்'.[41] வேலைகளில் பெறுகின்ற உண்மை வேலை அனுபவங்களுக்குப் பதிலாக வேறொன்றைக் கொள்ள இயலாது. பள்ளியில் வேலையைப்பற்றி விளக்கப்படுகின்ற வகுப்புகள் அல்லது பகுதிநேர வேலைப் பள்ளிக்குப் பதிலாக வேறொன்றைக் கொள்ள இயலாது. இவ் வனுபவங்கள் மாணவனுக்குத் தொழில்பற்றிய செய்தி யையும், பள்ளித் திட்டத்தில் இருக்கின்ற தொழில் அறிவைப் புகட்டு தலையும் சிறப்பாக அறிந்துகொள்ளுதற்குரிய அடிப்படையை அளிக் கின்றன. இது அறிவுரை புகட்டுவோருக்கு மாறுகின்ற நடத்தையை மதிப்பிடுவதற்குரிய அதிகமான, உண்மையான அடிப்படையை அளிக்கின்றது.

அதிகாரச் சுருக்கம்

தொழிற்பயிற்சி என்பது பொறியியல் வளர்ச்சியினாலும், பொரு ளாதார மாறுதல்களினாலும், சமூக சக்திகளினாலும் விளைந்த ஓர் இயக்கமாகும். இது சமூகக் குழுவின் உறுப்பினனாகத் தனியனது மதிப்பை உணர்ந்ததன் அடிப்படையில் எழுந்ததாகும். சமூகக் குழுவிற்குள் பல்வேறுபட்டவர்கள் இருக்கின்றனர். இது தொழில் திறம்பட ஆக்கப்பட்டதனால் விளைந்ததாகும். வேலை உலகத்தில்

[40] W. Gellman, 'The Role of Vocational Guidance in Counseling Youth', The School Review, 1954, Vol. 62, p. 159,
[41] Ibid., p. 159,

ஒவ்வொரு தனியனும் வெற்றி அடைவதற்கும், பொருந்தி அமைவதற்கும் தொழில் வழிகாட்டல், பயிற்சி ஆகியவை அவசியமாகின்றன.

பள்ளி செயலுறுகின்ற தன்மையில் பொறியியல் வளர்ச்சிகள் ஏற்படுத்திய மாறுதல்கள்பற்றி ஒருமைப்பட்ட கருத்து இல்லை. பல நிலைகளில், சான்றாக ஒன்றுசேர்த்து இணைக்கின்ற துறையில் இருக்கின்ற தனித்த வளர்ச்சி, தனித்த தொழில் திறமைகளினால் பயிற்சிபெறவேண்டிய தேவைகளைக் குறைத்துவிட்டன. இப்பொழுது தொழிற்பயிற்சிபற்றி அகன்றதொரு கருத்தே, அதாவது குணவியல்பும், ஆளுமை வளர்ச்சியுங்கொண்ட பயிற்சியே வேண்டுமெனத் தோன்றுகின்றது. மேலும், நமது சமூகப் பொருளாதாரச் சிக்கல் வாய்ந்த தன்மை, குடிமகனது பங்கினைப் பயிற்சிமூலம் தொழிற் பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகப் பெறுவதற்குரிய தேவையை அதிகமாக்கியுள்ளது.

வழிகாட்டுதல் திட்டத்தில் சில முக்கியப் போக்குகளைப் பார்க்கலாம். முதலில் இளையோர்கள் ஒரு முழுப் பகுதியாகச் செயலுறுகின்றார்கள். ஒருவரது வழிகாட்டலின் ஒரு நோக்கை மற்ற எல்லா நோக்குகளிலிருந்தும் பிரிக்கவியலாது. தொழில் வழிகாட்டலின் குறிக்கோள் தொழில் பொருத்தப்பாட்டினைப் பெறுவதற்குரிய வழியென வரையறுக்கப்பட்டுள்ளது. இவ் வதிகாரத்தில் கூறப்பட்டுள்ள நவீனப் போக்குகளின் அடிப்படையில் வளர்க்கப்பட்டுள்ள இத் தொழில் வழிகாட்டல் திட்டம், பள்ளியிலும் தொழில் உலகிலுமுள்ள இளையோர்-இளைஞர்களுக்கும் கீழ்க்கண்டவற்றை அளிக்கும்: 'அறிவுரையளித்தல், வேலையில் அமர்த்தல், தொழில் பொருத்தப்பாடு, வழிகாட்டப்பட்ட தொழிலனுபவம்'.[42]

சிந்தனைக்குரிய பிரச்சினைகள்

1. நல்ல தொழில் வழிகாட்டுதல் திட்டத்தில் கவனிக்கப்பட வேண்டிய சில அடிப்படை ஏதுக்களை வரிசைப்படுத்தவும்.
2. பொறியியல் வளர்ச்சி எவ்வாறு தொழிற் பயிற்சியின் தன்மையைப் பாதித்துள்ளது? உன்னுடைய பதிலை நீ அறிந்துள்ள சில தொழில்களின் அடிப்படையில் சான்றாக விளக்கிக் கூறவும்.
3. அட்டவணை 16—5-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்போக்குகள் யாவை? கல்வியில் இப் போக்குகளினால் ஏற்படும் விளைவுகள் யாவை? தொழில் வழிகாட்டலில் ஏற்படும் விளைவுகள் யாவை?

[42] Ibid., p. 161.

4. மிக அதிகமான அளவு உயர்நிலைப் பள்ளிச் சிறுவர்களும் சிறுமியர்களும் தொழிலினைத் தேர்ந்தெடுப்பதில் முடிவு எடுக்காமல் இருப்பதற்கு நீ கூறும் காரணங்களென்ன? அட்டவணை 16—8-ல் அளிக்கப்பட்டுள்ள முடிவுகளி லிருந்து நீ கொள்ளும் பொதுமைகள் என்ன?

5. தொழில் அறிவுரையாளரின் புதிய பணி என்ன? இது எந்த வழிகளில் பழைய பணியினின்று மாறுபட்டிருக் கிறது?

6. எல்ம்டௌன் இளைஞர்களில் வெவ்வேறு வகுப்பைச் சார்ந்த வர்கள் கொண்ட தொழில் தேர்ந்தெடுத்தல்கள்பற்றிய ஆய்வின் முடிவுகள் குறிப்பிடுவதென்ன? இம் முடிவு களுக்கு நீ குறிப்பிடும் காரணங்களென்ன?

7. நமது பண்பாட்டிலுள்ள இளையோர்களது பிரச்சினைகளில் ஒன்ருக ஏற்ற தொழிலினைத் தேர்ந்தெடுப்பது குறிப்பிடப் படுகிறது. இந்நிலைமையினுல் பெறப்படும் நன்மைகள் என்ன? இதனுல் விளைகின்ற பிரச்சினைகள் யாவை?

8. இளைஞர்கள் தொழிலைத் தேர்ந்தெடுப்பதில் செல்வாக்குக் கொண்டுள்ள முக்கிய ஏதுக்கள் யாவை? இதன் தொடர் பில் ஆசிரியர் அறிவுரையாளர் ஆகியோரது பங்குகள் என்ன?

9. இளைஞர்களது முக்கியத் தொழில் தேவைகள் எவை? பள் ளித் திட்டத்தில் அவை கொள்ளும் பங்கு என்ன?

10. தொழில் வழிகாட்டுதலில் நுண்ணறிவுச் சோதனைகளும், நாட்டச் சோதனைகளும் கொள்கின்ற இடம் யாது? நுண் ணறிவுச் சோதனைகளை ஏன் அறிவியல் நாட்டச் சோதனை களாகக் குறிப்பிட்டனர்?

தெரிவுசெய் நூற்பட்டியல்

1. Chisholm, L. L., 'Guiding Youth in the Secondary School'. New York : American Book Co., 1950.

2. Cruze, W. W., 'Adolescent Psychology and Development'. New York : The Ronald Press Co., 1953, Chap. 12.

3. Ginsberg, E., et al., 'Occupational Choice : An Approach to a General Theory', New York : Columbia University Press, 1951.

4. Hamrin, S. A., and B. B. Paulson, 'Counseling Adolescents'. Chicago: Science Research Associates, 1950.

5. Hollingshead, A. B., "Elmtown's Youth," New York: John Wiley & Sons., Inc., 1949, Chap. 11.

6. Hoppock, R., 'Group Guidance: Principles, Techniques, and Evaluation'. New York: McGraw-Hill Book Co., 1949.

7. Horrocks, J. E., The 'Psychology of Adolescence.' Boston: Houghton Mifflin Co., 1951, Chap. 13.

8. Kuhlen, R. G., 'The Psychology of Adolescent Development.' New York: Harper & Bros., 1952, Chap. 11.

9. Landis, P. H., 'Adolescence and Youth.' New York: McGraw-Hill Book Co., 1945, Chaps. 15, 16 and 17.

10. Myers, G. E., 'Principles and Techniques of Vocational Guidance'. New York: McGraw-Hill Book Co., 1941.

11. Sanderson, H., 'Basic Concepts in Vocational Guidance.' New York: McGraw-Hill Book Co., 1953.

12. Seidman, J. M., 'The Adolescent: A Book of Readings,' New York: The Dryden Press, 1953, Chap. 18.

13. Warters, J., 'Techniques of Counseling,' New York: McGraw-Hill Book Co., 1954.

14. Wattenberg, W. W., 'The Adolescent Years.' New York: Harcourt, Brace and Co., 1955, Chap. 19.

15. Williamson, E. G., 'Counseling Adolescents.' New York: McGraw-Hill Book Co., 1950.

17. இளமையில் குற்ற நடத்தை

கண்டுபிடிக்காத குற்ற நடத்தையினைப்பற்றிச் சிறிதளவே நாம் அறிய முடிந்தாலும், அது மிகவும் பரவலாக இருக்கின்றது என்று கூறச் சான்றுகள் உள்ளன. குற்ற நடத்தையில் பெருமளவு நீதி மன்றங்களில் கவனத்திற்கு வருவதே இல்லை. மேலும், குற்ற நடத்தை ஏற்படும் அளவு, ஓரளவு குற்ற நடத்தை என்பதற்கு நாம் கொள்ளும் பொருளினைப் பொறுத்து இருக்கின்றது. கேம்பிரிட்ஜ்-சம்மர்வில்லில் இளைஞர் ஆய்வில், 5 ஆண்டுக் காலத்திற்கு 114 சிறுவர்கள் உற்றுநோக்கப்பெற்றனர்.[1] இவர்களில் 13 சிறுவர்கள் மட்டுமே ஆய்வாளர்களின் கவனத்திற்கு வந்த எந்தக் குற்றத்தையும் செய்யாமல் இருந்தார்கள். எஞ்சியிருந்த 101 சிறுவர்கள் சட்டத்தினால் குற்றம் என்று வரையறுக்கப்பட்ட 6,416 குற்றங்கள் செய்திருந்தாலும் 95 குற்றங்கள்மட்டுமே சட்டத்தின் கவனத்திற்கு வந்தன. 4,403 சிறு குற்றங்கள் செய்யப்பட்டன. அவைகளாவன: பள்ளிக்குச் செல்லாமல் ஊர்சுற்றுதல், சிறு திருட்டு, தனி வழியில் செல்லுதல், திரைப்படங்களுக்கு அனுமதிச்சீட்டு வாங்காமல் செல்லுதல், வீட்டைவிட்டு ஓடுதல் ஆகியவைகளாகும். இவைகளில் 27 குற்றங்கள்மட்டுமே சட்டத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இவ்வாய்வு, சிறு சிறு தனித்தனியான சான்றுகளினால் பெரும்பாலும் நடத்தப்பட்டதாகும். கண்டுபிடிக்காத குற்றநடத்தை மிகப் பெரிய அளவில் இருப்பதாகவும், காவல் துறையும் நீதிமன்றங்களும் தீவிரமான குற்றங்களில்தான் தங்கள் கவனத்தைச் செலுத்துவதாகவும் இவ்வாய்வு குறிப்பிட்டது.

வரையறைகளும் விளக்கங்களும்

சமூகக் கருத்துப்படி, சமுதாயத்தின் நலனுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய நடத்தை எந்த வகையில் இருந்தாலும் அது குற்ற

[1] F. J. Murphy, M. M. Shirley and H. L. Witmer, 'The Incidence of Hidden Delinquency', American Journal of Orthopsychiatry, 1946, Vol. 16, pp. 686-696.

நடத்தையாகின்றது. அவ்வாறான வரையறை, நடப்புமுறை வரம்பு களுக்கு ஒவ்வாததாக இருக்கிறது. பல நாடுகளில் இளம் குற்ற வாளி என்பவன் சட்டத்தினை மீறியவன் என்று தண்டிக்கப்பட்ட பதி னெட்டு வயதுக்குக் கீழான தனியன் என்றே வரையறுக்கப்படுகிறது. ஆதலின், பிரச்சினை அளிக்கும் இளையோர்களில் பெரும் பகுதியினர் இளங் குற்றவாளிகள் என்று அழைக்கப்பட மாட்டார்கள் என்பதனை இதிலிருந்து அறியலாம். ஆனால், நமது பள்ளிகளும் மற்றச் சமூக நிறுவனங்களும் எல்லா வகையான பிரச்சினை நடத்தையையும்பற்றிக் கவலைகொள்கின்றன.

நீதிமன்றங்களில் குழந்தைகள்

1951ஆம் ஆண்டில், இளங்குற்றவாளி நீதிமன்றங்களின் கவ னத்திற்குச் சுமார் 3,50,000 சிறுவர் சிறுமியர்கள் கொண்டுவரப்பட் டனர் என்று கணக்கிடப்பட்டது.[2] சிறுவர்கள், சிறுமியர்களின் எண் ணிக்கையினைவிட நான்கிலொரு அளவு அதிகமாயிருந்தனர். அதே ஆண்டில் இதைக் காட்டிலும் மிகப்பெரிய எண்ணிக்கையான சுமார் 10,00,000 பேர்கள் (இவர்களில் பலர் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்) காவல் துறையின் கவனத்திற்கு வந்தனர். குற்ற நடத்தை கொண்டுள்ள குழந்தைகளில் மிகப் பலர் சட்டத்தின் கவ னத்திலிருந்து தப்பிவிடுகின்றனர். ஆனால் இவர்கள் எத்தனை பேர் என்ற சரியான அளவினைக் கணக்கிட முடியவில்லை. குற்றநடத்தை கொண்டுள்ளவர்களில் 30-லிருந்து 60 சதவீதத்தினரைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களைப் பிடிக்க முடியவில்லை அல்லது அவர்கள் இல்லம், பள்ளி அல்லது மற்றச் சமுதாயப் பதிலாண்மைகளால் கவனித்துக்கொள்ளப்படு கிறார்கள்.

1948ஆம் ஆண்டிலிருந்து 1951ஆம் ஆண்டுவரை, இளங்குற்ற வாளி நீதிமன்றங்கள்முன் கொண்டுவரப்பட்ட குழந்தைகளின் எண் ணிக்கையில் சராசரியாக 17 சதவீதக் கூடுதல் ஏற்பட்டுள்ளது. ஆனால், இந்தக் காலத்தில் நாட்டில் இளங்குற்றவாளி வயதுக் குழந் தைகள் (பொதுவாக 10-லிருந்து 17 வயதுவரை) அதிகமானது 5 சத வீதமேயாகும். படம் 17—1, 1941ஆம் ஆண்டிலிருந்து பல ஆண்டு களில் இளங்குற்றவாளி நீதிமன்றங்களில் வந்த குற்றங்களின் அள வினைக் காட்டுகின்றது. வளைகோடு, இரண்டாம் உலகயுத்த ஆண்டு களில் இளங்குற்றவாளி நீதிமன்றத்தில் வந்த குற்றங்களின் அளவு தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்ததாகக் காட்டுகின்றது. இதற்குப் பல

[2] U. S. Department of Health, Education and Welfare, 'Some Facts about Juvenile Delinquency.' Children's Bureau Publication No. 340, 1953.

காரணங்கள் தரப்படுகின்றன. வெளிநாட்டிலிருந்து இங்குக் குடியேறியவர்கள்; இரு பெற்றோர்களும் இல்லத்தில் மிகக் குறைவான அளவில் மேற்பார்வை செய்தல்; மிக அதிகமான பணம் செலவிட இருப்பது; அதிகமான அளவில் சட்டத்தின் நடைமுறையில் செயல்படுத்துதல் ஆகிய காரணங்கள் தரப்படுகின்றன.

குற்ற நடத்தைக்காக நீதிமன்றங்களின் முன் வந்த சிறுவர் சிறுமியர்களில் பெரும் பகுதியினர் 15-லிருந்து 17 வயதுவரை இருந்தனர். ஆனால், 500 குற்ற நடத்தைச் சிறுவர்களைக்கொண்டு நடத்தப்பட்ட ஓர் ஆய்வில்மட்டும் முதன்முதலில் நீதிமன்றத்தில் தோன்றிய ஆண்டு 12·4 ஆண்டுகளாகக் குறிப்பிடப்பெற்றது.[3] நீதிமன்றங்களுக்கு முன்வந்த இவ்விளங் குற்றவாளிகளில் 35 சதவீதத்தினர் இதற்குமுன் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார்கள். இத் தனியன்களில் பாதிப்பேருக்குமேல் 8 வயதில் அல்லது அதற்கும் குறைவான வயதிலேயே குற்ற நடத்தைக்காரர்களாக ஆகியிருந்தார்கள். பல்வேறு ஆய்வுகள், குற்ற நடத்தை என்று சொல்லக்கூடிய தவறான நடத்தை மிக ஆரம்ப வயதிலேயே தோன்றுவதாகக் காட்டுகின்றன.

குற்ற நடத்தைபற்றிய அடிப்படை விளக்கங்கள்

குற்ற நடத்தைபற்றிய விளக்கங்களின் வளர்ச்சி, மூன்று தனித்த பகுதிகளைக்கொண்ட காலங்களில் ஏற்பட்டுள்ளது. தாப்பன் (Tappan) என்பார் இவைகளைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது 'விஞ்ஞான காலத்திற்கு முந்திய மறைமெய்மைக் காலம், நவீனகால ஆரம்பத்தின் தனித்த கொள்கைகளின் காலம், இன்றைய விஞ்ஞான - பட்டறிவுக்காலம்' என்று குறிப்பிட்டார்.[4] இவைகள் ஒவ்வொன்றிலும் அளிக்கப்பட்டுள்ள விளக்கங்களின் தன்மையில் போதிய அளவு மாறுபாடுகள் இருந்தாலும், இவ்விளக்கங்கள் ஒவ்வொன்றிலுமிருந்த சில தனித்த இயல்புகள் இவ்வாறான வகைபடுத்துதலைச் சாத்தியமாக்கியுள்ளன. இவ்வதிகாரத்தில் குற்ற நடத்தையைப்பற்றி எழுதியுள்ளவை முதல் இரண்டு விளக்கங்களைப்பற்றி அதிகமான கவனத்தினை அளிக்காவிட்டாலும், சுருக்கமான விவரங்களை அளிக்கின்றன.

[3] The materials of Tables 17-3, 17-4, 17-5, 17-7 and Figure 17-2 are reprinted by permission of the Publishers and the Commonwealth Fund, from Sheldon and Eleanor Glueck, Unraveling Juvenile Delinquency. Cambridge, Mass: Harvard University Press, copyright 1950 by The Commonwealth Fund.

[4] P. W. Tappan, 'Juvenile Delinquency,' New York: McGraw-Hill Book Co., 1949, p. 74.



படம் 17-1

1941ஆம் ஆண்டிலிருந்து 1960ஆம் ஆண்டு வரை இளங்குற்றவாளி நீதிமன்றத்திற்கு உண்மையில் வந்தவர்களும் எதிர்பார்ப்புகளும்.

மறைமெய்மைக் கருதுகோள் குற்ற நடத்தையினைத் தனியனுக்கு அப்பாற்பட்டுள்ள சக்திக்குக் காரணமாகக் காட்டினர்; அதாவது கெட்ட ஆவிகளைக் காரணமாகக் குறிப்பிட்டனர். அவ்வாறான ஆவிகள் உடலினைத் தீண்டி ஒருவருடைய செயல்களைப் பாதிப்பதாகக் கூறப்பெற்றது. இக் கருதுகோளில் பல வகைகள் உண்டு. ஆனால், அவைகள் யாவும் ஒன்றிற்கொன்று ஒப்புமை உள்ளனவாக இருந்தன. மறைமெய்மைக் கோட்பாடு பல நூற்றாண்டுகளுக்கு இருந்தது. ஒரு நூற்றாண்டுவரை அதனுடைய செல்வாக்கு மிக அதிகமாக இருந்தது. பத்தொன்பதாவது நூற்றாண்டின் மத்தியப் பகுதியிலிருந்து தீர்மானமான விளக்கங்கள் வரத் துவங்கின. இவைகள் தனித்த கொள்கைகள் என்று விளக்கப்பெற்றுள்ளன. ஏனெனில், அவை நடத்தையினை ஏதோ ஒருசில தனித்த ஏதுவின் அடிப்படையில் விளக்க முயன்றன. தீர்மானமான கருத்துகளை யளித்த பல்வேறு வல்லுநர்கள், புறவயச்சோதனை வினைமுறைகளையும் புள்ளியியல் முறைகளையும் தங்களது விளக்கங்களைத் தருவதற்கு ஆதரவாகக் கொண்டனர். இத் தனித்த கொள்கையினர், மறைமெய்மைக் கொள்கையினரால் குற்ற நடத்தையின் அடிப்படையினை மிக எளிதாக ஆக்கப் பயன்படுத்திய வகையினையே பின்பற்றினர். தனித்த கொள்கையினைக் கடைப்பிடிப்போர் பல வெவ்வேறான காரண விளக்கங்களைக் கொண்டிருந்தனர். அவைகளாவன: மரபுநிலை, சீதோஷ்ண நிலை, என்டோகிரின் அமைப்பு, மனமுறிவு, சமயம்,

அறியாமை, முறிந்த இல்லங்கள், சேரிகள், ஆரோக்கியம் ஆகியவை களாகும். உண்மையில் இவர்களில் சிலர் இவைகளில் சேராத சில ஏதுக்களான திரைப்படங்கள், சித்திரக் கதைநூல்கள், நவீன ஜாஸ் இசை (modern jazz) போன்ற சில நிலைமைகளையே காரணமாகக் காட்ட விழைகின்றனர்.

விஞ்ஞான வினைமுறைகளை அதிகமாகப் பயன்படுத்தத் துவங்கிய பின்னர், பல்வேறு கொள்கைகளைப்பற்றிய திறனாய்வுகள் தோன்றிய பின்னர், இத் தனித்த கொள்கையினர் அவற்றை ஆழ்ந்து சிந்திக்கத் துவங்கினார்கள். அவர்கள் இவ் விளக்கங்கள் மிகவும் எளிமையானவையாக அமைந்துள்ளன என்று உணர்ந்தார்கள். இவ்வாறு, குற்ற நடத்தைபற்றிய மாணவர்களில் பெரும்பாலானோரால் பல காரணிக்கொள்கைகள் படிப்படியாக ஏற்றுக்கொள்ளப்பெற்றன. குற்ற நடத்தையை உண்டாக்கவல்ல பல ஏதுக்களின் முக்கியத்துவத்தைத் தீர்மானிக்க மிக அதிகமான புள்ளியியல் படிப்புகள் நடத்தப்பட்டன. பல காரணிக்கருத்து, குற்றம் பல சிக்கல்வாய்ந்த ஏதுக்களால் உண்டாக்கப்படுகின்றது என்று காட்டியுள்ளது. ஆதலின், அதனைத் தடுப்பது என்பது முன்னர்த் தனித்த கொள்கையினரால் குறிப்பிடப்பட்டதுபோல் மிக எளிதான காரியமன்று என்பதனையும் உணர்ந்தார்கள். இருப்பினும், இக் கொள்கையினை இயந்திரத் தன்மையில் அணுகுதல் கூடாது. இப் பல்வேறு ஏதுக்கள் தனித்துச் செயல்படுவதில்லை. அதிகச் செயலுள்ள தைராயிட் சுரப்பியினைப் பெற்றுள்ள இளையோன் இல்லத்திலும் சுற்றுப்புறத்திலும் வாழ்கின்றான். அவனுடைய அதிகமான செயலுறும் தன்மை அவனுடைய இல்லம், அவனது உருவ அமைப்பு, அவனது பொருளாதாரச் சூழ்நிலைகள், அவனது நுண்ணறிவு, அவனுடைய சுற்றுப்புற நிலைகள் ஆகிய ஏதுக்களால் பாதிக்கப்படும். வறுமையுள்ள இல்லத்தில் பிறக்கின்ற சிறுமி, ஒரு தனித்த வகையான சுற்றுப்புறத்தினையும் கொண்டிருக்கின்றாள். அவள் தன்னுடைய இல்லச் சூழ்நிலைகளுக்கு எவ்வாறு எதிர்வினை அளிக்கின்றாள் என்பது, தன்னுடைய மனவெழுச்சி இயல்புகளினால், நுண்ணறிவினால், உடல் அமைப்பினால், தன்னுடைய சுற்றுப்புறத்தின் தன்மையினால், பெற்றோர்களது மனப்பான்மையினால் இங்கு வரிசைப்படுத்தவியலாத அளவு எண்ணிக்கையினைக் கொண்டுள்ள பல ஏதுக்களினால் பாதிக்கப்படுவாள். குற்ற நடத்தை வளர்ச்சியினை ஏற்படுத்துகின்ற பல்வேறு ஏதுக்களின் செல்வாக்குகளைப்பற்றிக் கருதும்பொழுது, இவைகள் வளர்கின்ற தனியன்மீது தனித்தனியாகச் செயல்படுவதில்லை என்பதனை உணர்தல் வேண்டும். ஆனால், தனியனது நடத்தையினைப் பாதிக்கின்ற நிலைமைகள் அல்லது சக்திகளிடையே எல்லாச் சமயங்களிலும் இடைத் தொடர்புகள் இருக்கின்றன.

குற்ற நடத்தையின் உளவியல் வகைகள்

இளங் குற்றவாளிகள்மீது தனித்த குணவியல்புகளைச் சுமத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. அண்மையில் இளைஞர்களில் குற்றநடத்தைபற்றிய உளமருத்துவ இயல்புகளை அறிவதற்கு டோனட் (Donet) என்பவர் ஓர் ஆய்வினை நடத்தினர்.[5] அவர் குற்ற நடத்தையின் ஒரு பகுதி சமூக இயல்பினால் ஆக்கப்பட்டது என்றும், அவற்றிலெல்லாம் காணப்படுகின்ற பொதுவான உளவியல் இயல்பு 'தற்காப்பின்மை' உணர்வே என்ற முடிவினைக் கொண்டார். குற்ற நடத்தைக்காரர்களைப்பற்றிய தனியாள் வரலாறுகள், சிறுவர் சிறுமியர் இருபாலாருமே ஓர் அடிப்படைத் தேவையினைக் கொண்டிருக்கிறார்கள் என்றும் பொதுவாகக் குற்றநடத்தை யில்லாதவர்கள் சந்திக்கின்ற அதே பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர் என்றும் கூறுகின்றன. குற்றநடத்தை யுள்ளவர்கள், குற்றநடத்தை யில்லாதவர்கள் ஆகியோருக்கிடையே தெளிவான பிரிவினை உணர்த்த முயல்பவர்கள் பல்வேறு தொல்லைகளைச் சந்திப்பார்கள்.

அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகள் பல குற்ற நடத்தையினை ஆய்வதற்குரிய பயனுள்ள அடிப்படையினை அளிக்கின்றன. குக் கவுன்டி இளங்குற்றவாளி நீதிமன்றத்திற்குக் (Cook County Juvenile Court) கொண்டுவரப்பட்ட 1,110 வெள்ளைக்கார ஆண் இளங் குற்றவாளிகளின் வரலாறுகளிலிருந்து பெற்ற குறிப்புகளின் அடிப்படையில் ரெயிஸ் (Reiss) என்பவரால் மூன்று உளவியல் வகைகளைச் சார்ந்த குற்ற நடத்தைக்காரர்களைப் பிரித்துணர முடிந்தது.[6] அவர்கள், (1) ஒப்பீட்டடிப்படையில் இணைப்புள்ள குற்ற நடத்தைக்காரன்; (2) தன்னைக் கட்டுப்படுத்தும் திறனை மிகவும் குறைவான அளவில் உடையவன்; (3) ஒப்பீட்டடிப்படையில் மேன்மையான ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் திறனைக் குறைவான அளவில் பெற்றுள்ளவன். ஹிவிட் என்பவரும் ஜென்கின்ஸ் என்பவரும் (Hewitt and Jenkins) குற்ற நடத்தைக்காரர்களைக் கீழ்க்கண்டவாறு வகைபடுத்தினார்கள்.[7] (1) சமூக இயல்பானவன், (2) சமூக இயல்பில்லாதவன், (3) தவறான் பொருத்தப்பாடுடைய அல்லது பின்வாங்குகின்ற

[5] L. Donet, 'Psychiatric Aspects of Juvenile Delinquency,' World Health Organization Monograph Series No. 2. Geneva: World Health Organization, 1951.

[6] A. J. Reiss, 'Social Correlates of Psychological Types of Delinquency', American Journal of Sociology, 1952, Vol. 17, pp. 710-718.

[7] E. Hewitt and R. L. Jenkins 'Case Studies of Aggressive Delinquents', American Journal of Orthopsychiatry, 1941, Vol. 11, pp. 485-492.

தன்மையுடைய தனியன். இவ் வகைபடுத்தல் ரெயிஸ் தந்த வகை படுத்தலுக்கு எதிரானதன்று. உண்மையில் அவர் தந்த வகை படுத்தல் குற்ற நடத்தைக்காரர்களின் இயல்புகளை அறிவதற்குரிய அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இணைப்புள்ள குற்ற நடத்தைக்காரன் ஒப்பீட்டடிப்படையில் நல்ல பொருத்தப்பாட்டை உடையவனுவான். அநேகமாக அவன் மனவெழுச்சியில் முதிர்ந்த முதியோனுக ஆவான். இவர்கள் சமூக இயல்புடைய குற்ற நடத்தைக்காரர்களாவர். குற்ற நடத்தைச் செயலினைத் தவிர வேறு எந்தத் தவருன பொருத்தப்பாட்டின் அறிகுறி களையும் இவர்கள் காட்டுவதில்லை. சில உள மருத்துவ இயலார்கள், இக்குழுவைச் சார்ந்த தனியன்கள் அடிக்கடி குற்ற நடத்தையில் ஈடுபட்டாலும், இவர்களைச் 'சாதாரணமானவர்கள்' என்றே வகை படுத்துகின்றனர்.[8] இக் குழுவினரது நடத்தைப் பரப்பு மிக அகன்ற தாகும். காரில் உல்லாசச் சவாரி செய்வதற்காக ஒரு காரைத் திருடு வதிலிருந்து, இளங்குழந்தைகளது பொருள்களை விற்பதுவரை அல் லது குண்டுகள் நிரப்பப்பட்டுள்ள துப்பாக்கியினை வைத்துக்கொண்டு வழிப்பறி செய்வதுவரை குற்றநடத்தை கொண்டிருக்கிருர்கள். வால்டர், எச். (Walter, H.) என்பவனது வரலாறு ஒரு சாதாரண மாணவனின் அல்லது இணைப்புள்ள குற்றநடத்தைக்காரனது நிலையினை விளக்குகின்றது.

'இரண்டு சகோதரர்களில் இளையவனுன வால்டர், எச். என் பவன் 13 வயதினையே அடைந்திருந்தான். பள்ளியைவிட்டு அடிக் கடி ஓடிவிடும் குணத்தைக் கொண்டவனுன இவன் கடைகளிலுள்ள பொருள்களைத் திருடுகின்ற குழுவில் சேர்ந்திருந்தான். இவன் அடிக் கடி வீட்டிற்கு இரவு நெடுநேரங்கழித்துத் திரும்பி வருவான். வால்டர் பிறந்தபின்னர் அவனது தாயார் கணவனைப் பிரிந்து வாழ்ந்து வந்தாள்.

உளவியல் சோதனைகள் வெவ்வேறு காலத்தில் அளிக்கப்பட்ட தில் அவனுடைய நுண்ணறிவு ஈவு 74-லிலிருந்து 88-வரை காட்டியது. மொழிவகை நுண்ணறிவுச் சோதனையில் அவன் கீழான நுண்ணறிவினைப் பெற்றுன். மொழியில்லாத நுண்ணறிவுச் சோதனையில் அதிகமான நுண்ணறிவு ஈவினைப் பெற்றுன். வால்டரின் பள்ளி அறிக்கை மிகவும் மோசமாக இருந்தது. அவனுடைய மூத்த சகோதரன் பத்தாவது படி வத்தில் படித்துவந்தான். அவன் பள்ளி வேலையில் திருப்திகரமான நிலையில் இருந்தான். மூத்தவன் அவனுடைய சொந்தத் தேவைகளுக்

[8] F. Schmidl, 'The Rorschach Test in Juvenile Delinquency Research,' American Journal of Orthopsychiatry, 1947, Vol. 17, pp. 151-160.

கும், சில குடும்பத் தேவைகளுக்கும் போதிய அளவு பொறுப்பினை ஏற்றுக்கொண்டான்.

வால்டரின் வாழ்க்கைச் செயற்பாடுகளும் அக்கறைகளும் பெருமளவு அவன் பள்ளிக்குள்ளும் வெளியேயும் சார்ந்திருந்த பையன்களது குழுவைப் பொறுத்தே இருந்தன. அவனுடைய இல்லம் அவனுக்கு மிகக் குறைவான அக்கறையினையே அளித்தது. அவனது தாயார் ஒரு நூல் மில்லில் வேலை செய்து குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயன்றாள். அவளுடைய வேலையும் அவளது சுற்றுப்புறத்திலிருந்தவர்களைச் சென்று பார்க்கின்ற சமூக வாழ்க்கையுமே அவளுடைய நேரம் முழுவதையும் எடுத்துக்கொண்டன. வால்டருக்குக் கல்விக் குறிக்கோள்கள் எதுவும் இருக்கவில்லை. பள்ளியை அவன் அனுபவிக்கவேண்டிய துன்பமான அனுபவம் என்றே கருதி வந்தான். அவனுடைய மூத்த சகோதரனுடன் நட்புறவினையே கொண்டிருந்தான். வால்டரின் மூத்த சகோதரன் வால்டரை சிறு பையன் என்றும், குடும்பப் பொறுப்பு தெரியாத குடும்ப உறுப்பினன் என்றுமே கருதிவந்தான். வால்டர் தன்னுடைய ஆசிரியரிடமும், பள்ளி அறிவுரையாளரிடமும் நட்புறவுடனேயே இருந்தான். அவர்கள் அவனுடைய பள்ளி வேலைகளைப்பற்றியும், ஈடுபாடுகள் குறித்தும் அதிகத் தொந்தரை செய்யாதவரை இந் நட்புறவு நீடித்து வந்தது.'

தன்னைக் கட்டுப்படுத்தும் திறனைக் குறைவாகக்கொண்ட குற்ற நடத்தைக்காரன், பொதுவாகக் குறைந்த மதிப்பினை உடைய தற்காப்பற்ற தனியனாகவும் அல்லது அதிகமான வலுத்தாக்குதலுடைய பகையைக் கொண்டவனாகவும் கருதப்படுகின்றான். ஹிவிட், ஜென்கின்ஸ் ஆகியோரால் தவறான பொருத்தப்பாடுடைய குழு என்று கூறப்பட்ட நடத்தைக்காரர்களைக்கொண்ட குழு இதுவேயாகும். அவர்கள் சமூகத்தில் பங்கு பெறுதலில் பின்வாங்கிக்கொண்டு, அடிக்கடி 'தனித்த நரிபோன்ற குற்ற நடத்தைக்காரர்களாகச்' செயல்படலாம். டாப்பிங் (Topping) என்பவரால் விளக்கப்பட்ட ஒரு குழப்பம் வாய்ந்த குற்றநடத்தைக்காரனது வரலாறு இங்குத் தரப்படுகின்றது.

''வெள்ளைக்கார சிறுவனை ஹெரால்டு என்பவன் 14½ வயதினையே அடைந்திருந்தான். ஏழு குழந்தைகள் கொண்ட குடும்பத்தில் ஒருபால் இரட்டையர்களில் ஒருவனாக ஹெரால்ட் இருந்தான். அவன் நான்கு வயதினை அடைந்தபொழுது அவனது தாயார் இறந்து விட்டாள். அவனது தந்தை எல்லோரையும் விட்டுப் போய்விட்டார். இரட்டையர்களும், இரு சகோதரர்களும், ஒரு சகோதரியும் ஓர் அனாதை இல்லத்தில் வளர்க்கப்பட்டனர். அங்கு அவர்கள் நான்கு ஆண்டுகள் இருந்தபொழுது சகோதரி இறந்துவிட்டாள். இரட்டையர்களில் ஒருவன் குற்றநடத்தைக்காரனாக ஆகிவிட்டான்.

ஹெரால்டு தான் பெற்ற குற்றநடத்தையெல்லாம், அவன் தன்னுடைய சகோதரனுடன் இருக்க விரும்பியதனுல் விளைந்தவை என்று குறிப்பிட்டான். இளையோர் பருவத்தில் தோன்றுகின்ற குற்ற நடத்தையைப் போக்குவது எவ்வாறு என்று நூல்கள் வாயிலாகக் கற்க முனைந்தான். அவன் முறுக்கேறிய துன்ப வடுக்கொண்ட ஆளுமையினைப் பெற்றிருந்ததால் மிகவும் அபாயகரமான தாக்குதலையும் அளிக்கவல்ல சக்தியினைப் பெற்றிருந்தான். கடுமையான வெறுப்பும், வாழ்க்கையில் பயனில்லை எனும் மெய்யுணர்வும் அவனது ஆளுமையின் பகுதிகளாக இருந்தன. பெற்றோர்களை இழந்திருந்ததனுல் தோன்றியிருந்த வெறுப்பும் ஏமாற்றமும், அவனை அவனுடைய இரட்டையர்-சகோதரன் 'பயந்தாங்கொள்ளி' என்று எண்ணிவிடுவானே எனும் அச்சமும், அவனுடைய சகோதரர்களிலிருந்து பிரிந்திருப்பதனுல் ஏற்பட்ட மனவெழுச்சித் தற்காப்பின்மையும், அவன் குற்ற நடத்தைக்காரனுக இருப்பதன்மூலம் தனது இரட்டையர்-சகோதரனுடன் இருக்கலாம் என்ற தீர்மானமும், அவனுடைய எதிர்வினைகளில் முன்னணியில் இருந்தன."[9]

மேன்மையான ஆன்மாவினைக் கட்டுப்படுத்துவதில் குறைபாடு உடைய வகை என்று இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள குற்றநடத்தை வகையில், நமது நடுத்தர வகுப்பு சமூகத்தின், சமூகத்திற்கேற்ற நடத்தை வளர்ந்து இருக்கவில்லை. இக் குற்றநடத்தைக்காரர்கள் மனவெழுச்சி நிலையில் முதிர்ச்சியடையாதவர்களாய் இருந்தனர். ஹிவிட்டும் ஜென்கின்னும் இவர்களைச் 'சமூக வியல்பில்லாத குற்ற நடத்தைக்காரர்கள்' என்று குறிப்பிடுகின்றுர்கள். இருப்பினும், அவர்களுடைய ஒப்பார் குழுவினைப் பொறுத்த அளவில் சமூக வியல்பினராக அவர்கள் இருப்பார்கள். முதிர்ச்சியை நோக்கி இளையோர்கள் வளரும்பொழுது, சந்திக்கின்ற முக்கிய பணி என்னவெனில், சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு அவர்களுடைய தனித்த ஆசைகளையும் இயல்புகளையும் அமைப்பதேயாகும். நாம் தீரமாயுள்ள இளைஞனை மதிக்கின்றோம். சக்தியினையும் வேகத்தினையும் அதிகமாக்கி, இயந்திரம் செய்யக்கூடிய அளவினையும் அதிகமாக்குகின்றோம். இருப்பினும், இளையோனிடம் குறைவான வேகத்தில் காரினை ஓட்டும்படி எச்சரிக்கின்றோம். மற்றக் கார்களைத் துரத்த வேண்டாம் என்றும், வளைவுகளில் முந்தவேண்டாம் என்றும், மலையில் போகும்பொழுது மற்றக் கார்களை முந்தவேண்டாம் என்றும் எச்சரிக்கின்றோம். மனவெழுச்சி முதிர்ச்சியினைப் பெற இளையோனுல் இத் தேவைகளையும் நிலைகளையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதனை

[9] R. Topping, 'Case Studies of Aggressive Delinquents', American Journal of Orthopsychiatry, 1941, Vol. 11, pp. 485-492.

பல இளைஞர்கள் கவலையின்றி வேகமாக ஓட்டுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஹர்ஸ்பெர்க் (Hirschberg) என்பவரால் பி. எஸ். என்று குறிக்கப்பெற்ற 15 வயது சிறுவனது வரலாற்றில் குற்ற நடத்தையை உண்டாக்குவதில் மனவெழுச்சி முதிர்ச்சியின்மை எவ்வாறு செயலுறுகின்றது என்பதனை அறிந்துகொள்ளலாம்.

"பி. எஸ். என்ற ஒரு ஒல்லியான சிறிய வடிவமுடைய 15 வயது சிறுவன் மந்தமான சாதாரண நுண்ணறிவினையே பெற்றிருந்தான். அவனது குடும்பத்திலிருந்த ஐந்து குழந்தைகளில் அவன் நான்காவது குழந்தையாக இருந்தான். அவனுடைய உடன்பிறந்தார்களில் இருவர் குற்ற நடத்தையினைக் கொண்டிருந்தனர். நகரச் சூழ்நிலையில் அதிகமான குற்ற நடத்தையுள்ள பகுதியில் வாழ்ந்துவந்தான். இசைவில்லாத தோழர்களுடன் நட்புறவு கொண்டுவந்தான். அவனுடைய நேரத்தினைப் பெரும்பாலும் தெருவிலேயே கழித்தான். வாரத்தில் நான்கு தடவைகள் திரைப்படத்திற்குச் செல்வான். அவனுடைய தாயார் அவனுக்குத் திரைப்படங்களிலும் விளையாட்டுகளிலும் அக்கறை இருப்பதாகக் கூறினாள். ஊர் சுற்றினாலும், பள்ளி வேலையில் சுமாராகவும், தேர்வதற்குரிய வேலையினையும் செய்து வந்தான். ஆங்கிலத்திலும் கணிதத்திலும் தொல்லைகள் பல அனுபவித்தான். கோயிலுக்கு ஒழுங்காகச் செல்வான். ஆனால், ஒரு நாள் கோயிலில் இருக்கும்பொழுதே திருடிவிட்டான். நீதிமன்றத்திற்கு இருமுறை திருடியதற்காகவும், சிறு திருட்டில் பங்குகொண்டதற்காகவும் கொண்டுவரப்பட்டான். இல்லத்திலிருந்து ஓடியிருக்கின்றான். கீழ்ப்படிதலேயில்லாத—காப்பாற்றுவது கடினமாயிருந்த—ஒரு சிறுவனாக இருந்தான். நீதிமன்றத்தில் இணங்காத மனப்பான்மையினைக் கொண்டிருந்தான்.

உளமருத்துவர் அவனைப் பரீட்சித்துப் பார்த்த பின்பு எழுதினார்: 'அறிவியல் தன்மையில் அவன் இன்னமும் சிறப்பான அறிவினையும், பயன்மதிப்புகளைப்பற்றி இன்னமும் சிறப்பான உணர்வினையும் கொள்ளலாம் என்று இந்நிகழ்ச்சி காட்டியதற்கு மாறாகக் கூறலாம். இருப்பினும், அவன் தன்னுடைய மனப்பான்மைகளையும் சிந்தனையையும் அறிவியல் அடிப்படையில் அமைக்கவில்லை. ஆதலின், அவன் தன்னுடைய நெறி மாறுதல்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் 'நான் முட்டாளாக இருப்பதனால் இவற்றை எல்லாம் செய்கிறேன்' என்று கூறுகின்றான். இருப்பினும், அவனை நாம் முட்டாள் என்ற அடிப்படையில் சிந்திக்கக்கூடாது என்று விரும்புகின்றான். உண்மையில் அவன் தன்னுடைய கருத்துகளுக்கும் வேண்டுகோள்களுக்கும் போதிய அளவு தீவிரமான கருதுதல்களை அளிக்கவேண்டும் என்று வற்புறுத்துகின்றான். இவையெல்லாம் சிறுவனது மனவெழுச்சியின் முதிர்ச்சியற்ற தன்மையினால் ஏற்படும் விளைவாகும். அவனிடம் பகையுணர்ச்சி

எப்பொழுதும் இருக்கின்றது. அவனுடைய மனவெழுச்சித் தூண்டல்களின் வேண்டுகோள்கள் நிறைவேருதபொழுது பகையுணர்வு வெளிவருகின்றது. அவன் பதினறு வயதினை அடைந்திருந்தான். ஆனல், அவனுடைய முடிவுகள், பயன் மதிப்புகளைப்பற்றிய உணர்வு ஆகியவை எல்லாம் 13 வயது சிறுவனுகத்தான் அவனைக் காட்டியது.'[10]

பாலும் இளமையில் குற்ற நடத்தையும்

ஒரு பாலாரால் கைக்கொள்ளப்படுகின்ற சமூகத்திற்கு எதிரான நடத்தை யாவும் மறு பாலாராலும் கைக்கொள்ளப்படுகின்றன என்பது உண்மையாறுலும், இரு பாலாரிடையே, அவர்கள் கைக்கொள்ளும் குற்ற நடத்தையில் குறிப்பிடும்படியான பால் மாறுபாடுகள் இருக்கின்றன. இங்கும் இவ்வாருன மாறுதல்கள் உள்ளார்ந்த தன்மையினுல் விளைந்தவையன்று. ஆனல், அவை ஒவ்வொரு பாலாரது தனித்த ஆளுமைக் கூறுகளின் இடைவினையினுலும் விளைவதாகும்.

சிறுமியர்கள் சிறுவர்களைக் காட்டிலும் நன்ருக நடந்துகொள்கின்ருர்கள் என்று பொதுவாகக் கூறப்படுகின்றது. அமெரிக்க நாடுகளின் குழந்தைகள் கழகம் (U. S. Children's Bureau) நீதிமன்றங்களுக்குக் கொண்டுவந்த குற்றங்களில் சிறுவர் சிறுமியர் பங்கு கொண்ட விகிதம் 4 : 1 ஆகவோ, 5 : 1 ஆகவோ இருந்தது எனக் கூறப்படுகின்றது. ஆனல், 1952-ல் இந்த விகிதம் 3 : 1 ஆக இருந்தது. இவ்வாண்டில் 11-லிருந்து 15 வயது குழுவில் இருந்தவர்களில் 68 சதவீதத்தினர் குற்றநடத்தைக்காரர்களாக இருந்தனர். ப்ரோன்னர் (Bronner) என்பவர் 650 குழந்தைகளை மூன்று வகையாக வகைப்படுத்தும்பொழுது, ஆளுமை நடத்தைத் தொல்லைகளில் சிறுவர் சிறுமியர்கள் விகிதம் 3 : 1 ஆகவும், நீதிமன்றத்திற்கு வந்த குற்றநடத்தைக்காரர்களில் 6 : 1 ஆகவும், நீதிமன்றத்திற்கு வராத குற்றநடத்தைக்காரர்களில் 4 : 1 ஆகவும் இருந்ததாகக் குறிப்பிட்டார்.[11] 1945ஆம் ஆண்டில் நீதிமன்றங்களுக்கு வந்த சிறுவர்கள் செய்த இரண்டு பொதுவான குற்ற வகைகள்: (1) திருடுதல் அல்லது திருட முயற்சித்தல், (2) பொறுப்பின்மை அல்லது குறும்பு. 1938-லிருந்து இளங் குற்றவாளி நீதிமன்றங்களுக்குச் சிறுவர்களை அனுப்பிய காரணத்தினுல் இவ்விரு செயல்களும் செய்யப்பட்ட சதவீதம் மெதுவாகவும் தொடர்ச்சியாகவும் 71 சதவீதத்திலிருந்து 61 சதவீதமாகக்

[10] R. Hirschberg, 'The Socialized Delinguent', The Nervous Child, 1949, Vol. 6, pp. 461.

[11] A. F. Bronner, 'Treatment and What Happened Afterward', American Journal of Orthopsychiatry, 1944, Vol. 14, p. 31.

குறைந்துள்ளது. ஆனால், இக்காலத்தில் போக்குவரத்துக் குற்றங்களும் வீட்டைவிட்டு ஓடிப்போவதும் படிப்படியாகவும் தொடர்ச்சியாகவும் அதிகமாகி உள்ளன. மிகவும் வேகமாக காரை ஓட்டுகின்ற கார் ஓட்டிகளினாலும் சில போக்குவரத்துத் தொல்லைகளும் போக்குவரத்துப் பிரச்சினைகளும் சில பெரிய நகரங்களில் ஏற்பட்டுள்ளன. இளையோர்கள் கார் ஓட்டுவதற்கு அனுமதிக்கப்படவேண்டுமென்றால், அவர்கள் அதிகமான பொறுப்புணர்ச்சியைக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

பால் குற்றங்களினால் நீதிமன்றத்திற்கு வருபவர்களில் சிறுவர்களைக் காட்டிலும் சிறுமியர்கள் அதிகமாக இருந்தனர். அதிகாரம் 6-ல், வளர்கின்ற சிறுவர் சிறுமியர்கள் பால் வாழ்க்கைகளில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன என்றும், அம்மாறுதல்கள் பல்வேறு நடத்தை வகைகளையும், பால் நடத்தையையுமே பாதித்துள்ளன என்றும் குறிப்பிடப்பெற்றன. ஆதலின், எவ்வகையான பால் நடத்தைகளைக் குற்ற நடத்தை வகைகளாகக் கொள்ளலாம் என்று தீர்மானிப்பது மிகவும் கடினமானதாகிவிட்டது. சிறுமியர்களால் செய்யப்பட்ட குற்றங்களைப் பகுத்தாய்ந்ததில் அறிக்கைகள் காட்டுவதைக் காட்டிலும் அதிகமான அளவில் பால் இயல்பு முக்கியப் பங்கினைக் கொண்டிருப்பதாகத் தெரியவந்தது. பல குடும்பங்கள் 'அடக்க முடியவில்லை' என்று கூறும் குற்ற நடத்தைகள் எல்லாம் அநேகமாக பால் குற்றங்களாகவே இருக்கும். மேலும், அடக்க முடியாத நிலைகள் அல்லது ஓடிவிடுதல் போன்ற நிலைகள் பெரும்பாலும் பால் முக்கியத்துவம் கொண்டவைகளாகவே இருக்கின்றன. இதில் மிக அதிகமான அளவில் சிறுமியர்கள் பாதிக்கப்பட்டாலும், சில ஆய்வுகளின்படி அதிகமான சதவீதத்தினரால் கெட்ட ஒழுக்கம் இருந்தது என்று ஒத்துக்கொள்ளப்பட்டாலும், குற்ற நடத்தையுடைய சிறுமியர்களில் மிக மிகக் குறைவானவர்களே விபசார நடத்தை அளவிற்கு வீழ்ந்திருந்தார்கள். பல காரணங்களினால் இளையோர் வயது சிறுவர்கள் பால் அனுபவங்களுக்காகக் குறிப்பாக மாற்றுப்பால் அனுபவங்களுக்காகக் குற்ற நடத்தை நிறுவனங்களில் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், அவர்கள், தங்களது சொந்த ஆதரவினால் செய்கின்ற குற்றங்களுக்கே தண்டிக்கப்படுகின்றார்கள். ஒருவேளை அவர்களது இல்லத்தில் சிறுமியர்களைக் காட்டிலும் குறைவான அளவில் காப்பாற்றப்பட்டிருக்கலாம். இளையோர்கள் திருப்தியடையவேண்டிய சில தேவைகளைச் சந்திக்கின்றனர். ஆதலின், அவர்கள் திருடுதலைப் பெண்களைக் காட்டிலும் அதிகமாகக் கைக்கொள்கின்றனர்.

திருடுதல் சிறுமியரிடத்துச் சிறுவர்களைக் காட்டிலும் மிகக் குறைவான அளவிலேயே கைக்கொள்ளப்படுகின்றது என்றாலும், தனித்த ஆய்வும் கவனிப்பும் அளிக்கவேண்டிய அளவிற்கு இக்குற்ற நடத்தை

உள்ளது. காரணங்கள் பலவாக இருப்பினும், அவை அடிக்கடி சொந்த ஆபரணங்கள் வைத்துக்கொள்ள ஏற்படும் தேவையாலும், நன்ருக உடை உடுத்த ஏற்படும் ஆவலாலுமே ஏற்படுகின்றன என்று கூறலாம். ஆதலின், இளையோர்கள் கடையில் சாமான்களை எடுத்துக்கொள்ளுதல், அல்லது கடைகளிலும், கல்லூரிகளிலும், மாணவர் இல்லங்களிலும் சிறு திருட்டுக் குற்றங்கள் செய்தல் ஆகிய ஆசைகாட்டல்களுக்கு அடிமையாகின்றனர். திருடுதல் என்பது சிறுவர்களிடத்து அதிகமாகக் காணப்படாத தூண்டுகையினுல் விளைவது என்று முதலில் விளக்கப்பட்டது. கெரால்டின் என்பவளின் வரலாறு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

"கெரால்டின் எனும் சிறு பெண் நேர்மையானவள் என்ற பெயர் பெற்றதோடு, மற்றவர்களது சொத்துரிமைகளை எப்பொழுதும் மதித்துவந்தாள். ஒரு நாள் ஒரு பெரிய கடைக்குச் சென்றபொழுது அவள் தூண்டுகையினுல் உந்தப்பட்டு, வந்து பார்ப்பவர்களுக்காக ஒரு தட்டில் வைக்கப்பட்டிருந்த மோதிரத்தை எடுத்துக்கொண்டாள். இது கண்டுபிடிக்கப்பட்டபொழுது குற்றத்தை ஒப்புக்கொண்டாள். ஆனுல், அவளது மோசமான நடத்தையின் விளைவாகச் சில சிக்கல்கள் மனத்தில் தோன்றின. அவை பல வாரங்கள்வரை அவளது நெஞ்சைவிட்டு அகலவே இல்லை. இந்தத் தனித்த சமூகத்திற்கு எதிரான நடத்தை அவளுடைய சொந்தக் கருத்து நிலை எண்ணங்களுக்கு மாருக இருந்ததோடன்றி, அவள் எப்பொழுதுமே வாழ்க்கையினைப் பற்றிக்கொண்டிருந்த அடிப்படை அற மனப்பான்மைகளுக்கும் மாருக இருந்தது."[12]

நுண்ணறிவும் குற்ற நடத்தையும்

குற்ற வகையைச் சாராதவர்கள்

பெரும்பான்மையான குற்ற நடத்தைக்காரர்கள் குறைவான நுண்ணறிவினை உடையவர்கள் என்று கருதப்படுகின்றது. அல்லது குற்ற நடத்தையும் குறைவான நுண்ணறிவும் ஒன்றுக்கொன்று இணையானது என்று பொதுவாக நம்பப்படுகின்றது. ஆனுல், இக்கருத்து மிகவும் துரதிருஷ்ட வசமானதாகும். ஏனெனில், புறவயமாகப் பெறப்பட்டதும், எச்சரிக்கையுடன் விளக்கிப் பொருள் கூறப்பட்டதுமான குறிப்புகள் இக்கருத்தினை ஆதரிக்கவில்லை. இக்கருத்து நவீன நுண்ணறிவுச் சோதனைகள் வளர்ச்சியுறுவதற்கு முன்னர்த் தோன்றிய

[12] 'Guiding the Adolescent' Children's Bureau, Federal Security Agency, Publication 225, 1946, p. 60.

தாகும், அல்லது இச்சோதனைகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு, அதனை பயன்படுத்துபவர்கள் அச்சோதனைகளிலிருந்து பெறுகின்ற குறிப்புகளின் உண்மையான பொருள் தெரிவதற்கு முன் தோன்றிய கருத்தாகும். இப்பொழுது முழுமையாக உண்மையன்று என்று நிரூபிக்கப்பட்ட லாம்ப்ரோசாவின் (Lombroso) எண்ணமான குற்றவாளிகள் என்பவர்கள் தனித்த வகையைச் சார்ந்தவர்கள் என்ற கருத்தினால் பொதுமக்கள் குற்ற நடத்தையுள்ளவர்களும் குற்றவாளிகளும் அவ்வாறு இல்லாதவர்களினின்று குண அடிப்படையில் மாறுபட்டிருந்தார்கள் என்று நம்பினார்கள். அவர் குற்றவாளி வகையைச் சார்ந்தவர்களைப்பற்றி விவாதிக்கும்பொழுது, அவர்கள் 'ஆதிகால வாசிகளின் குணவியல்பினையும், கீழான மிருகங்களின் குணவியல்பினையும்'[13] பெற்றிருப்பதாக விளக்கியதால், பொது மக்கள் குற்ற நடத்தையுள்ளவர்களையும் குற்றவாளிகளையும், தனித்த வகையினர் ஆதலின், தனியாகப் பிரித்து வைக்கவேண்டும் என்று எண்ணினார்கள்.

கோரிங் (Goring) என்பவர் லாம்பரோசாவின் கொள்கையான தனித்த உடற்குறிக் கொள்கையின் தவற்றைச் சுட்டிக்காட்டினார் என்றாலும், அவரும் பொதுமக்கள் இதனைப் பற்றிக்கொண்ட கருத்திற்கு ஓரளவு பொறுப்பாவார். உண்மையில் லாம்பரோசாவின் கருத்தினை மறுத்தாலும் அவர் 'குறையுடைய உடலமைப்பு' என்ற சொல்லிற்குப் பதிலாக, 'குறையுடைய நுண்ணறிவு' என்ற சொல்லினைப் பயன்படுத்துகின்றார். லாம்பரோசா, தாம் விளக்கிய குண இயல்புகள் அடாவிஸ்டிக் (Atavistic) வகையினைச் சார்ந்தவையாக நம்பியதால் அவை யாவும் மரபு வழியில் பெற்றவையாகும். கோரிங் முன்னர்க் குறிப்பிட்டது போன்று, மரபுநிலையும் நுண்ணறிவும் குற்றவாளியை குற்றவாளி அல்லாதவர்களிடமிருந்து பிரிக்கின்ற இரண்டு முக்கிய ஏதுகளாகும் என்று குறிப்பிடுகின்றார்.

கோடார்டின் துவக்கப் பணி (Goddard's early Work)

அமெரிக்காவில் குற்ற நடத்தையுள்ளவன் குறைபாடுடையவன் என்று சில இடங்களில் மிகவும் பரவலாக உள்ள கருத்திற்கு கோடார்டு (Goddard) என்பவர்தாம் வேறு யாரைக் காட்டிலும் பொறுப்பானவராவார். அவருடைய எண்ணத்திற்கு மாறாக, ஆளுமையின் ஒரு கூறு குற்றத்துடன் தொடர்புகொண்டிருப்பதனால், அவ்வாறான கூறு குற்றத்திற்குப் பொறுப்பான தனித்த கூறு என்று

[13] C. Goring, 'The English Convict', London: His Majesty's Stationery Office, p. 13. (Quoted from an address delivered by Lombroso in 1906, before the Congress of Criminal Anthropology at Turin.)

கொள்ளலாகாது. மனத்திறனில் குறையுள்ள நிலை கீழான சமூகச் சூழ்நிலை அந்தஸ்திற்குத் தொடர்புடையது என்றாலும், நமது நகரங்களிலுள்ள கீழான சமூகச் சூழ்நிலை அந்தஸ்துக்காரர்கள் வாழ்கின்ற பகுதியில் அதிகமான அளவு குற்றங்கள் நடக்கின்றன என்றாலும், மனத்திறனில் குறையுள்ளவர்கள் அதிகமான அளவு குற்றத்தினைச் செய்கின்றார்கள் என்றாலும், இவ்வேதுகள் ஒன்றாகத் தோன்றுவதனாலேயே குற்றத்திற்கு மனத்திறனில் குறைபாடுடைய நிலையே காரணமாகும் என்று கூறலாகாது.

முன்னர் நடந்த சில ஆய்வுகளைக்கொண்டு கோடார்டு கூறுவது என்னவெனில்:

"குற்றவாளிகள், தவறான நடத்தையுள்ளவர்கள், குற்றநடத்தை உள்ளவர்கள், மற்ற சமூகத்திற்கு எதிரான குழுக்கள் ஆகியவர்களைப் பற்றிய ஒவ்வோர் ஆய்வும் மறுதளிப்பதற்கு இயலாத அளவில், இவ்வகுப்புகளிலுள்ளவர்களில் அநேகமாக எல்லோரும், சில நிலைகளில் எல்லோரும், கீழான மனத்திறனுடையவர்களாய் இருந்தனர் என்று காட்டுகின்றது. குற்றத்திற்கும் குற்ற நடத்தைக்கும் உள்ள தனித்த முக்கிய காரணம் என்னவெனில், கீழான மனத்திறன் நிலையேயாகும்."[14]

மாதிரிகள் தேர்ந்தெடுப்பதில் தவறுகள்

இளங்குற்றவாளிகள் நீதிமன்றங்களுக்கு முன்னர்க் கொண்டு வரப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற குற்ற நடத்தையுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குச் செயல்படுகின்ற முக்கிய ஏதுகள் நுண்ணறிவும், சமூகப் பொருளாதார அந்தஸ்துமே யாகும் எனப் பல ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். நாம் எப்பொழுதாவது 'இளங்குற்றவாளிகள்' என்று குறிப்பிடப்படுகின்ற குழுவில், அவர்கள் உண்மையாக மாதிரி செய்கின்ற குழுவினைப் பெற்றிருந்தோமோ என்பது ஐயத்திற்குரியதேயாகும். இது உண்மையாக இருக்கலாமென்றிருக்கும்பொழுது, நாம் குற்ற நடத்தையுள்ளவர்களது சராசரி நுண்ணறிவு ஈவு 80-லிருந்து 90-வரை என்று ஏற்றுக்கொள்ளும் பொழுது எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இளமையில் குற்ற நடத்தை உள்ளவர்களது சராசரி நுண்ணறிவு ஈவினைப்பற்றிப் பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் குறிப்புகளை அளித்திருக்கின்றனர். இவ்வாய்வுகளின் முடிவுகளுக்கிடையே காணப்படுகின்ற தவறுகள், மாதிரிகள் தேர்ந்தெடுப்பதில் ஏற்படுகின்ற தவறுகள் என்று கூறலாம். ஆனால், கீழான நுண்ணறிவுடைய சிறுவர் சிறுமியர்களில் அதிகமான

[14] H. H. Goddard, 'Human Efficiency and Levels of Intelligence', Princeton. N. J. Princeton University Press, 1920; pp. 72-73.

சதவீதத்தினர் இளங்குற்றவாளிகள் நீதிமன்றங்களுக்கு வருவதாக இவ்வாய்வுகளிலிருந்து தெரியவருகிறது. இது எதேச்சையாக நடக்கின்ற நிகழ்ச்சியன்று. C. W. மேன் என்பவரும், H. P. மேன் என்பரும் இதைப்பற்றிக் குறிப்பிடுகையில்:

''குற்ற நடத்தை உடையவர்களில் 90 நுண்ணறிவு ஈவினைக் கொண்டவர்கள், அவர்களுடைய கீழான நுண்ணறிவினால், அவர்கள் சார்ந்திருக்கின்ற பகுதியினால் அல்லது வேறு காரணத்தினால், அல்லது காரணங்களினால் அவர்கள் அதிக நுண்ணறிவு ஈவினை உடையவர்களைக் காட்டிலும் குற்ற நடத்தை உடையவர்களாக ஆவதற்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது என்ற பொது விதியினைக் கொள்ளலாம்''[15] என்று கூறுகிறார்கள்.

நிறுவனங்களில் தங்கியிருக்கின்ற குழந்தைகளின் அடிப்படையில் ஒருவர் அவரது முடிவினைக் கொள்வாரானால், குற்ற நடத்தையுள்ளவர்களிடம் சிறந்த நுண்ணறிவு உடையவர்கள் இல்லை என்று கொள்வது உண்மையேயாகும். (நிறுவனங்களில் இருக்கும் குழுமட்டும் ஒரு நாட்டிலுள்ள குற்ற நடத்தையுள்ளவர்களாக ஆகமாட்டார்கள். குற்ற நடத்தை உள்ள குழுவென்று எல்லாக் குற்ற நடத்தையாளர்களையும் கணக்கிலெடுத்தால், அது மக்கள்தொகைக்கு வெகு அருகில் வந்துவிடும்.) நிறுவனங்களில் இருப்பவர்களில் 100-க்கு மேல் நுண்ணறிவு ஈவு பெற்றிருப்பவர்கள், 100-க்குக் கீழ் நுண்ணறிவு ஈவு பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருக்கின்றார்கள். இருப்பினும், 70 நுண்ணறிவு ஈவுகொண்ட ஒருவனை நாம் சீர்திருத்தும் நிறுவனங்களில் கண்டால், 12 பேர்கள் அல்லது அதற்கதிகமான அளவில் 70-ஐக் காட்டிலும் குறைவான நுண்ணறிவு ஈவினை உடையவர்களை வெளியில் காணலாம். நடத்தைச் செயல்களில், நிறுவனங்களில் இருப்பவர்களைக் காட்டிலும் மோசமான நடத்தையுடையவர்களை மக்கட் பரப்பில் காணலாம். இளங்குற்றவாளி நீதிமன்றங்களின் நீதிபதிகள் தங்களுடைய நீதிமன்றங்களுக்குக் கொண்டுவரப்படுகின்ற மனிதத் தள்ளுபடிகளிலிருந்து எவ்வளவு தூரம் பொறுக்கி எடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் சமூகத்திற்கு எதிரான நடத்தை விளைவுகளின் தன்மையை

[15] C. W. Mann and H. P. Mann, 'Age and Intelligence of a group of Juvenile Delinquents,' Journal of Abnormal and Social Psychology, 1939, Vol. 34, pp. 351-360. *இவ்வாய்வில் பல் வேறு ஆய்வாளர்கள் தந்த சராசரி நுண்ணறிவு ஈவினைப்பற்றிய மதிப்புரை அளிக்கப்பட்டுள்ளது.* C. W. *மேன் என்பவரும்,* H. P. *மேன் என்பவரும், 1061 குற்றநடத்தையுள்ள சிறுவர்களது சராசரி நுண்ணறிவு ஈவு 84·88 ஆக இருந்ததாகவும், 670 குற்ற நடத்தையுள்ள சிறுமியரது நுண்ணறிவு ஈவு 83·77 ஆக இருந்ததாகவும் கண்டார்கள்.*

உணர்கின்ற சக்தியைப் பெற்றுள்ளோரைத் தவிர மற்றவர்களைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். ஏனெனில், அவர்களால்தான் நிறுவனங்களுக்கு வெளியே ஒருவகையான மேற்பார்வையின்கீழ் சரியான பொருத்தப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளவும், அவர்களது தவறுகளிலிருந்து திருந்தவும் இயலும். இவ்வகையாகப் பொறுக்கி எடுத்து மோசமானவர்களை மட்டும் நிறுவனங்களுக்கு அனுப்புதல் சரியான முறையேயாகும். ஆனால், இத்தனியன்கள் பல நிலைகளில் மனத்தால் மட்டும் பின்தங்கியவர்கள் அல்லராதலின், நிறுவனங்களுக்கு அனுப்பவேண்டியவர்களாகமாட்டார்கள். ஆதலின், இவ்வாறு பொறுக்கி அனுப்புவதனால் நிறுவனங்களில் இருக்கின்றவர்களின் சராசரி மனத்திறன் குறைவாகவே இருக்கின்றது.

இளங்குற்றவாளிகளின் நுண்ணறிவினைப்பற்றிப் பல்வேறு ஆய்வாளர்கள் கண்ட முடிவுகளை மதிப்பிடுவதற்குமுன் கீழ்க்கண்ட கேள்விகளுக்கு முதலில் பதிலைப் பெறவேண்டும் :

1. இவ்விளங் குற்றவாளிகளின் நுண்ணறிவின் நிலையைத் தீர்மானிப்பதற்கு எந்த மதிப்பீடும் முறை பயன்படுத்தப்பட்டது?

2. ஆய்வாளர் சோதித்த குற்றவாளிகள் யார்? அவர்கள் இளங் குற்றவாளி நீதிமன்றங்களுக்கு வந்தவர்களா? சீர்திருத்த நிறுவனங்களில் இருந்தவர்களா? உளவியல் அல்லது வழிகாட்டல் மருத்துவ நிலையத்திற்கு அனுப்பப்பட்டவர்களா?

இளமையில் குற்ற நடத்தை கொள்வதற்குரிய அறிகுறி முதலில் பள்ளியில் பின்தங்கி இருத்தலில் துவங்கிப் பின்னர்ப் பள்ளியில் திருப்தியின்மையைப்பெற்று, முடிவில் பள்ளிக்குச் செல்லாமல் ஊர் சுற்றுகின்ற தன்மையை அடைவதே ஆகும் என்று பல ஏதுகளிலிருந்து குறிப்பிடுவதற்குச் சான்றுகள் இருக்கின்றன.

இளமையில் குற்ற நடத்தை கொண்டதற்காக ஒரு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட 345 சிறுவர்களின் அறிவியல் அடைவினைப்பற்றிய ஆய்வு, ஐந்து ஆண்டுகள் வாசித்தலில் பின்தங்கியிருப்பதாகக் காட்டியது. கணிதத்தில் பின்தங்கியிருந்த அளவு இன்னமும் அதிகமாக இருந்தது. அதாவது, ஆறு ஆண்டுகள் பின்தங்கியிருந்தது.[16] அக் குழுவில் இருந்தவர்களில் 90 சதவீதத்திற்குமேல் பள்ளியின் மீது தனித்த வெறுப்பினைக் கொண்டிருந்தார்கள். அமெரிக்க நாடுகளின் பொது சுகாதார அமைப்பின் வகைப்படுத்தல் சோதனை இச் சிறுவர்களது நுண்ணறிவினை அளப்பதற்குரிய அடிப்படையாகப்

[16] C. J. Eckenrode, "Their Achievement is Delinquency" Journal of Educational Reserch, 1949-50, Vol. 43, pp. 554-558.

பயன்படுத்தப்பட்டது. அட்டவணை 17-1-ல் இந்த 345 சிறுவர்கள் பெற்ற நுண்ணறிவு ஈவுகளின் பகிர்வும் பரப்பும் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 17—1

குற்ற நடத்தைச் சிறுவர்களின் நுண்ணறிவு ஈவுகளின் பகிர்வு
(எக்கன் ரோட் அளித்தது)

நுண்ணறிவுக் குழு			IQ பரப்பு	சதவீதம்
உயர்வானது	...	...	120-134·9	4·35
உயர்ந்த சராசரி	...	...	110-119·9	11·89
சராசரி	...	...	90-109 9	51·69
கீழான சராசரி	...	...	80-89·9	17·68
கீழான நிலை	...	...	50·79·9	14·40

ஓர் ஆய்வில் வெஸ்லர்-பெல்லிவியூ அளவிடல்கள் (Wechsler-Bellevue Scale) குற்றநடத்தை உள்ளவர்களுக்கும் குற்றநடத்தை இல்லாதவர்களுக்கும் அளிக்கப்பட்டு, அவர்கள் சொற்சோதனைகளிலும் செயற் சோதனைகளிலும் பெற்ற மதிப்பெண்களிலிருந்து அவர்களுடைய நுண்ணறிவுகளிலே இருந்த மாறுதல்கள்பற்றி அறியப் பெற்றது.[17] குற்ற நடத்தையுள்ளவர்கள், குற்ற நடத்தையில்லாத கட்டுப்படுத்தப்பட்ட குழுவினரைவிட வார்த்தைச் சோதனையில் கீழான நிலையில் இருந்தார்கள். ஆனால், வினை முறைச் சோதனைகளில் இரு குழுக்களும் ஒன்றையொன்று ஒத்திருந்தன. படம் 17—2-ல் 500 குற்ற நடத்தையர்களுடைய வார்த்தைச் சோதனை மூலம் அளக்கப்பட்ட நுண்ணறிவு ஈவிற்கும், வினைமுறைச் சோதனையின்மூலம் அளக்கப்பட்ட நுண்ணறிவு ஈவிற்கும் இடையேயுள்ள தொடர்பு காட்டப்பட்டுள்ளது. குற்றநடத்தையுள்ளவர்கள் சோதனையின் பொருள் குறிகளின்மூலம் இல்லாமல் நேரடியாக இருந்தால் சிறப்பாகச் செய்கின்றனர். அவர்கள் பொதுவாகச் சொல் தொகுதியிலும், செய்தியிலும் தாழ்வான நிலையில் இருக்கின்றார்கள். பள்ளித் திட்டம் மரபு வழியில் நின்று சொல் தொகுதிக்கும் செய்திக்கும் அதிக முக்கியத்துவம் அளிப்பதால், இவைகள் குற்றநடத்தை கொண்டுள்ளவர்களுக்குத் தொல்லை தரும் ஏதுவாக இருக்கின்றன. இவ்வாறு பயன்படுத்தப்படுகின்ற சோதனையின் தன்மை பெறப்படுகின்ற நுண்ணறிவு ஈவினைப் பாதிக்கின்றது. குற்ற நடத்தை உள்ளவன் தன்னுடைய பள்ளி வேலையில் அடிக்கடி பின்தங்கியிருப்பதனால் மொழிச் செயல்கள் கொண்ட சோதனைகளிலும், வாசிக்கும் பொருள்கள்

[17] S. S. Glueck and E. T. Glueck, op. cit., pp. 198-201.

கொண்ட சோதனைகளிலும் மிகவும் பின்தங்கி யிருக்கின்றான். குற்ற நடத்தையுள்ளவர்களின் நுண்ணறிவினை மதிப்பிடுவதற்குப் பல்வேறு ஆய்வாளர்களால் வெவ்வேறு வினை முறைகள் பயன்படுத்தப்பட்டன என்பது உண்மையென்றாலும், பல நிலைகளில் சோதிக்கப்பட்ட ஆட்படுவோர்களைக் குற்ற நடத்தையுள்ளவர்கள் என்று வகைப்படுத்த வெவ்வேறு நிலைகள் பயன்படுத்தப்பட்டன என்றாலும், அவைகளுடைய குறிப்புகள் கீழ்க்கண்ட வகைகளில் ஒத்திருந்தன :



படம் 17.2

500 குற்றநடத்தையுள்ள சிறுவர்களது வார்த்தைச் சோதனைகள் மூலம் பெற்ற நுண்ணறிவு ஈவு, முறைச்சோதனைகள் மூலம் பெற்ற நுண்ணறிவு ஈவு ஆகியவற்றின் பங்கீடு. (குளுய்க்கும் குளுய்க்கும்)

1. சோதிக்கப்பட்ட குற்ற நடத்தையுள்ளவர்களிடையே மற்றத் தேர்ந்தெடுக்கப்படாத குழந்தைகளைக் காட்டிலும் அதிகமான அளவில் மனக்குறைபாடுடையவர்கள் இருந்தார்கள்.

2. நீதிமன்றங்களுக்கு முன்வந்த குழந்தைகளது சராசரி நுண்ணறிவுச் சோதனை அளவுகளைவிட, அல்லது நிறுவனங்களில் இருக்கின்ற குழந்தைகளது நுண்ணறிவினைவிட, அதே வயது நிலையிலிருந்த, தேர்ந்தெடுக்கப்படாத பள்ளிக் குழந்தைகளின் நுண்ணறிவு அதிகமாக இருந்தது.

3. குழந்தைகளிடத்தே குற்ற நடத்தையுள்ள குழந்தை என்று கருதப்படுகின்ற குழந்தை கொண்டிருக்கின்ற சராசரி பின்வாங்குதல், பொதுவாகப் பொதுப் பள்ளிக் குழந்தைகளின் பின்வாங்குதலைக் காட்டிலும் அதிகமாக இருந்தது.

4. அதிக நுண்ணறிவு நிலைகள் கொண்ட குற்ற நடத்தைக்காரர்களும், குறைவான நுண்ணறிவு நிலைகள் கொண்ட குற்ற நடத்தைக்காரர்களும் இருக்கின்றனர்.

5. நான்காவது இனம் போன்று இளங் குற்றவாளி நீதிமன்றங்களுக்கு வருபவர்களது நுண்ணறிவு ஈவுகளின் பங்கீடு சாதாரண நிகழ்வு வளைவினைப் பின்பற்றியிருக்கும் (படம் 17-2-ஐப் பார்க்கவும்).

தவறான பொருத்தப்பாடுகளும் குற்ற நடத்தையும்[18]

இவ்வதிகாரத்தின் துவக்கத்தில் குற்ற நடத்தைச் செயல்கள், பல ஏதுகள் ஒன்று சேர்ந்து ஒன்றாக செயலாற்றுவதனால் விளைகின்றன என்று முன்னரே வலியுறுத்தப்பெற்றது. குற்ற நடத்தை ஒரு நிறுவனத்தின்மீது அல்லது சமூகத்தின்மீது அல்லது ஒரு தனி மனிதன்மீது கொண்ட பகையுணர்வை வெளிப்படுத்துவதற்காகத் தோன்றலாம். பள்ளிக் கட்டடத்திலுள்ள ஜன்னல்களை உடைக்கின்ற சிறுவன், அதன் மூலம் அவன் ஆசிரியரிடமிருந்தோ, உடன் படிப்பவர்களிடமிருந்தோ பெற்ற மனக்கசப்பான நடத்தைவகைக்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கவே அவ்வாறான நடத்தையைக் கொள்வான். மனத்திலுள்ள சில சிக்கல்களின் காரணமாக இளங் குற்றவாளி நடத்தையினைச் சிலர் கைக்கொள்வார்கள். ஏனெனில், வலுத்தாக்குதல் வினைகள் முனைப்பினைத் தணிக்க உதவுகின்றன. பள்ளிக்கட்டடத்தின் ஜன்னல்களை உடைக்

[18] K. F. Schuessler and D. R. Cressey, 'Personality Characteristics of Criminals', The American Journal of Sociology, 1950, Vol. 45. pp. 476-484. *இப்பிரச்சினையைப்பற்றி நடத்தப்பட்ட ஆய்வுகளின் திறனாய்வு இந் நூலில் தரப்பெற்றது. ஆளுமைச் சோதனைகள் பயன்படுத்தப்பெற்ற 113 ஆய்வுகளின் முடிவுகள் தொகுத்து அளிக்கப்பெற்றன. அவைகளில் 42 ஆய்வுகள் குற்ற நடத்தையுள்ளவர்கள், குற்ற நடத்தை இல்லாதவர்கள் ஆகியோரைப் பிரித்தறியும் சோதனைகளைக் கொண்டனவாய் இருந்தன.*

கின்றவன், அவனுடைய பள்ளி வேலைகளில் கொண்ட தோல்விகளுக்கும், ஆசிரியர்கள், பெற்றோர், உடன்படிப்போர் ஆகியோரிடமிருந்து அனுமதி பெறுவதற்குரிய ஆவலுக்குமிடையே ஏற்படுகின்ற சிக்கலின் காரணமாகத் தோன்றுகின்ற முனைப்பினைத் தணிப்பதற்குரிய வழியாக அச்செய்கையினைப் பயன்படுத்துகின்றான். இளங் குற்ற நடத்தை மன முறிவுகளிலிருந்தும் தோன்றலாம். பள்ளி நடனத்தில் பங்குபெற இயலாத சிறுவன், அதனால் ஏற்பட்ட முனைப்பினைத் தணிப்பதற்காக அதில் பங்கு பெறும் தனியன்களுக்கு தீங்கினை விளைவிக்க முயல்வான் அல்லது நடன நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலுள்ள பொருள்களை உடைப்பான். பால் செயல்களில் ஈடுபடத் துடிக்கின்ற சிறுமி, அவளுடைய சாதாரண வாழ்க்கை நிலைகளில் அந்தஸ்தும் பரிவும் பெறுமலிருந்து, அத்தேவையினைத் திருப்திப்படுத்திக்கொள்ளவே அவ்வாறான நடத்தையைக் கைக்கொள்வாள்.

குற்ற நடத்தையுள்ளவர்களின் தவறான பொருத்தப்பாடுகள்

ஹீலி என்பவரும் புரோன்னர் என்பவரும் 105 குற்ற நடத்தையுள்ள குழந்தைகளை ஏறத்தாழ அவர்களுடைய வயது நிலையிலுள்ள 105 குற்ற நடத்தையில்லாத சகோதரர்களுடன் இணைந்து பழக விட்டனர். இவ்விரு குழுக்கள் சொந்த இல்லப் பொருத்தப்பாடுகள், மனவெழுச்சித் தொல்லைகள் ஆகியவற்றில் கொண்டுள்ள ஒப்புமையின் விகிதம் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது. இவ்வொப்புமை, குற்ற நடத்தை உள்ளவர்களிடம் மிக அதிகமான அளவில் தவறான பொருத்தப்பாடுகள் இருப்பதாகக் காட்டுகின்றது. அவர்களில் 90 சதவீதத்தினருக்கு மேல் மிகவும் அதிகமான அளவில் தவறான பொருத்தப்பாடு கொண்டிருந்ததாகக் காட்டியது. கண்டுபிடிக்கப்பட்ட தவறான பொருத்தப்பாடுகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டன.

1. விலக்கப்பட்ட, இழந்துவிட்ட, தற்காப்பற்ற, அன்பு உறவுகளில் புரிந்துகொள்ளப்படாத, விரும்பப்படாத அல்லது அன்பு செலுத்துவது நிறுத்தப்பட்ட உணர்வுகளை அதிகமாக அநுபவித்தல்.

2. அன்பு வழியல்லாது மற்ற வழிகளைக்கொண்டு அவர்களைக் கீழ்க்கண்டவற்றில் குலைத்ததாக உணர்ந்தனர். (a) சாதாரணத் தூண்டுகைகளில் அல்லது தன்னுடைய மன உணர்ச்சிகளைக் கூறுவதற்குள்ள ஆவலில் அல்லது தன்னுடைய மற்ற ஆசைகள் திருப்தியடைவதில் (b) முன்னரே கெடுக்கப்பட்டதனால் அசாதாரணமான ஆசைகளில் அல்லது (c) இளையோர் ஆசைகள், தூண்டுதல்களில்—

தனியனது குழந்தையாகவே இருக்கவேண்டும் எனும் ஆசையினால் வெளிச்செல்லும் ஆவல் தடுக்கப்பட்ட பொழுதும்.

3. இல்ல வாழ்க்கையில், பள்ளியில், நட்புறவுத் தொடர்பில் அல்லது விளையாட்டுகளில் போதிய அளவு இல்லாமை அல்லது தாழ்ந்த மனப்பான்மைகள் ஆகியவற்றினால் உண்மையான அல்லது கற்பனை செய்யப்பட்ட தீவிரமான உணர்ச்சிகள்.

4. பெற்றோர்களது தவறான நடத்தை, குடும்ப வாழ்க்கை நிலைகள், மேற்பார்வை செய்வதிலும் கட்டுப்பாட்டிலும் பெற்றோர் செய்யும் தவறுகள் ஆகியவற்றில் குடும்பத்தின் இசைவில்லாத தன்மையினால் அமைதியின்மை கொள்வதனால் ஏற்படும் செறிவான உணர்ச்சிகள்.

5. சகோதரர் ஒருவர் அல்லது அதிகமான பேர்களுடன் கொள்கின்ற பொறாமை உணர்ச்சிகள் அல்லது குடும்பத்தில் உள்ள வேறொருவர் மீது அதிகமான பரிவு காட்டப்படுவதனால் தன்னைப் பாரபட்சமாக நடத்துகின்றனர் என்ற உணர்வினை அதிகமாகக் கொண்டிருத்தல்.

6 ஆழமாகவுள்ள, அமுக்கிவைக்கப்பட்டுள்ள உள்ளார்ந்த மனச்சிக்கல் துன்ப உணர்வுகளினால் ஏற்படுகின்றது.

7. முன்னையக் குற்ற நடத்தைகளைப்பற்றிய நனவு நிலையில் உள்ள அல்லது நனவிலி நிலையில் உள்ள குற்ற உணர்வு அல்லது குற்ற நடத்தை என்று சட்டப்படி சொல்லுவதற்கியலாத நடத்தை; குற்ற உணர்வு நேரடியாக அல்லது மறைமுகமாகத் தனியனது உணர்வுகள் தண்டனை பெறவேண்டிய தேவையினைக் குற்றநடத்தை மூலம் உணர்த்துகின்றது. (ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இது முன்னைய இனத்துடன் சேர்ந்தே நிகழ்கின்றது)[19].

மனவெழுச்சி முதிர்ச்சியின்மையும் குற்ற நடத்தையும்

இவ்வதிகாரத்தின் துவக்கத்தில் குறைபாடுடைய—மேன்மையான ஆன்மாக்களைக்கொண்ட குற்ற நடத்தையுள்ளவர்களைப்பற்றிக் குறிப்பிடப்பெற்றது. அவர்களைக் கீழான நிலையில் சமூக வியல்பினராக ஆக்கவியலும். அவர்களைத் தனித்த குழுவுடனோ கூட்டத்

[19] W. Healy and A. F. Bronner, 'New Light on Delinquency and its Treatment' New Haven: Yale University Press, 1936.

துடனே சமூக இயல்பினராக ஆக்க முடியுமேயன்றிப் பொதுவாக சமூகம் முழுமைக்கும் ஆக்க இயலாது. அவர்களுடைய பெரும் பாலான எதிர்வினைகளில் குழந்தைகள் போன்று நடந்துகொள்வதனால் அவர்கள் மனவெழுச்சி நிலையில் முதிர்ச்சியடையவில்லை என்றே கொள்ளவேண்டும். இவ்வாறு அவர்களுடைய நடத்தை, அவர்களுடைய உடனடியான தேவைகளையும் ஆசைகளையும் திருப்திப் படுத்துவதற்கான வழியாகவும், அவர்களுடைய சுற்றுப்புறங்களில் உள்ள துன்பமான நிலைகளைத் தவிர்ப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. ஃபெர்ட்மேன் (Fertman) என்பவரால் நடத்தப்பட்ட ஆய்வில், ஓஹியோ (Ohio) பகுதியைச் சார்ந்த டெலாவேர் (Delaware) என்னும் நகரத்திற்கு அருகிலுள்ள சிறுமியரது தொழிற்பள்ளியிலிருந்து வந்த 180 குற்ற நடத்தைச் சிறுமியர்கள் (14 வயதிலிருந்து 17 வயது 11 மாதங்கள்வரை), அவர்களுக்கு இணையான குற்றநடத்தையில்லாத சிறுமியர் குழுவுடன் பெரஸ்ஸி அக்கறை-மனப்பான்மைச் சோதனைகளுக்குத் தந்த துலங்கல்களின் அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்க்கப்பெற்றனர்.[20] 'ஒவ்வொரு குற்ற நடத்தையுள்ள சிறுமியும் அவளுக்கு இணையான வயதினையுடைய குற்ற நடத்தையில்லாத சிறுமியைக்காட்டிலும் மனவெழுச்சி நிலையில் குறைந்தது 2·5 ஆண்டுகள் பின்தங்கியிருந்ததாக அவளுடைய அக்கறை - மனப்பான்மைச் சோதனைகளில் பெற்ற அளவுகள் காட்டின' சோதனை 1-ல் அதிகமான சராசரி பின்வாங்குதல் இருந்தது (அவைகள் தவறானவை என்று கருதப்படுகின்றது).

குற்ற நடத்தை உள்ளவர்களின் சில ஆளுமைக்குணவியல்புகள்

குற்ற நடத்தை உள்ளவர்களின் பொதுவான ஆளுமைக்குணவியல்புகள், அவர்களுடைய வழிகாட்டலிலும் குறைதீர்ப்பதிலும் அக்கறை கொண்டுள்ளோர்களுக்குப் பயனுள்ள செய்தியினை அளிக்கின்றது. இவ்வியல்புகளை இல்லம், சுற்றுப்புறம், பள்ளி ஆகியவைகளின் செல்வாக்குகளிலிருந்து பிரித்துணர்வதற்கு ஹீலியும் புரூன்னரும் குற்ற நடத்தை உள்ளவர்களை அவர்களுடைய குற்ற நடத்தையில்லாத சகோதரர்கள் அல்லது சகோதரிகளுடன் சில ஆளுமை இயல்புகளில் ஒப்பிட்டுப்பார்த்தார்கள். அவ்வாறான நிலைகளில் 150 ஜோடிகளின் சில எதிரெதிரான குணங்கள் அட்டவணை 17-2-ல் அளிக்கப்பெற்றுள்ளன.[21] இவ்வாய்வில் கருதப்பட்ட குற்ற நடத்தையுள்ளவன், அவனுடைய குற்ற நடத்தையற்ற சகோதர

[20] M. H. Fertman, 'Differentiating Personality Characteristics of Delinquent Girls', Master's Thesis, Ohio State University, 1939, p. 26.

[21] Op. cit., pp. 73-78,

னிடமிருந்து குறிப்பிடும்படியான தாழ்வு உணர்ச்சியுள்ளவனுகவும், ஏற்றமான நடத்தையுடனும், அமைதியின்மையுடனும், அதிகமான செயலுள்ளவனுகவும், அதிக அளவில் மன உரமில்லாத பழக்கங்களைக் கொண்டவனுகவும் மாறுபட்டிருந்தான். அவன் பள்ளியிடத்தும் ஆசிரியர்களிடத்தும் கொண்டிருந்த வெறுப்புத் தெளிவாகக் காணப்பட்டது. அவன், தற்காப்பில்லாத தனியன் ஒருவன் தன்னுடைய நிறைவேருத தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்காக வலுத் தாக்குதலிலுள்ள செய்கைகள், சண்டையிடுதல், பகட்டு நடத்தை, மிக அதிகமான அளவில் திரைப்படங்களுக்குச் செல்லுதல் போன்ற செய்கைகளைக் கைக்கொள்வதைப் போன்று காட்சியளித்தான்.

டூரியா (Durea) என்பவரும் ஆசம் (Assum) என்பவரும் 276 குற்றநடத்தையுள்ள சிறுமியரைக் கட்டுப்படுத்தப்பட்ட குழுவினரான



படம் 17-3

குற்ற நடத்தையுள்ள, குற்ற நடத்தையற்ற இளையோர் சிறுமியர்கள் அக்கறை-மனப்பான்மைச் சோதனைகளில் பெற்ற அளவுகளின் ஒப்பீட்டுப் பங்கீடு,

151 குற்ற நடத்தையில்லாதவருடன் ஒப்பிட்டுப்பார்த்தனர்.[22] பிரஸ்சி என்பவரால் அளிக்கப்பட்ட சோதனையான 'அக்கறை மனப் பான்மைச் சோதனை இவ்விரு குழுவினருக்கும் அளிக்கப்பெற்றது. இச்சிறுமியர்களது குழு அளவுகளின் ஒப்பீட்டுப் பங்கீடு படம் 17-3-ல் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் முடிவுகளை எச்சரிக்கையுடன் பகுத்தாய்ந்தால், குற்ற நடத்தையுள்ள சிறுமியர்கள், கவலைகள், பற்றுர்வங்கள், குற்ற உணர்வுகள் போன்றவற்றைக் கொண்டிருந்ததாக அறியலாம். குற்ற நடத்தையற்ற சிறுமியரில் 85 சதவிதத்தினருக்குமேல் குற்றநடத்தை உள்ளவர்கள் என்று காட்டுவதற்குரிய சராசரி அளவுகளைக் காட்டிலும் குறைந்த அளவுகளையே பெற்றிருந்தனர்.

இவ்வதிகாரத்தின் துவக்கத்தில் குறிப்பிட்ட எஸ். ஏஸ். குளுக் என்பவராலும், இ. டி. குளுக் என்பவராலும் நடத்தப்பட்ட ஆய்வில், 500 குற்ற நடத்தையுள்ளவர்களை 500 குற்ற நடத்தையற்றவர் களுடன் சில தீரச்செயல்களான கார்களை ஓட்டிச் செல்வதற்காகத் திருடுதல், அனுமதிச் சீட்டின்றித் திரைப்படக் கொட்டகைக்குள் செல்லுதல், மற்றவர் பொருள்களை அழித்தல், சூதாட்டம், குடித்தல், சிறுவயதிலேயே புகைபிடித்தல், தீவைத்தல் ஆகிய செயல்களில் ஒப்பிட்டுப் பார்க்கப்பெற்றது. அட்டவணை 17—3-ல் இவ்வொப் பிடுதல்கள் அளிக்கப்பட்டுள்ளன.[23] இவ்வாறுன வெவ்வேறு செயல் களில் குற்ற நடத்தையில்லாதவர்களைக் காட்டிலும் மிக அதிகமான அளவில் ஈடுபாடு கொண்டுள்ள குற்ற நடத்தையுள்ளவர்கள் குற்ற நடத்தையை அவர்களுடைய வாழ்க்கையில் மிக ஆரம்ப காலத்தி லேயே கொண்டிருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இது குற்ற நடத்தை யுள்ள சிறுவர்களின் வாழ்க்கையில் துவக்கத்திலேயே ஏற்பட்டு விடுகின்றது என்பதனைக் காட்டுகின்றது. இவ்வாறுன குறியீடுகளை உள்ளார்ந்த குற்ற நடத்தையின் அறிகுறிகளாகக் கருதவேண்டும்.

இல்லமும் இளங் குற்றநடத்தையும்

தனித்த, சமூக ஏதுக்களின் எதிர்வினை

வாழ்க்கையின் எந்தப் பருவத்திலுமுள்ள வளர்ச்சியையும் முதிர்ச்சி யையும் தனியனுடைய உயிரியின் தன்மையின் அடிப்படையிலும், உயிரியிலும், வளர்ச்சியின் தன்மையிலும், செயல்கொண்ட பல்வேறு

[22] M. A. Durea and A. L. Assum, 'The Reliability of Personality Traits Differentiating Delinquent and Non-Delinquent Girls,' Journal of Genetic Psychology, 1948, Vol. 72, pp. 307-311.

[23] Op. cit., p. 161.

அட்டவணை 17—2

குற்ற நடத்தையுள்ளவர்களுக்கும் குற்ற நடத்தையில்லாத அவர்களது சகோதரர்களுக்கும் இடையே அவர்கள் கொண்டிருந்த பல்வேறு பண்புக் கூறுகளின் எண்ணிக்கையினால் உணரப்பட்ட ஆளுமை மாறுதல்கள் (ஹீலி-புரூன்னர் அளித்தது).

	குற்றநடத்தை யுள்ளவர்கள்	குற்றநடத்தை யில்லாதவர்கள்
மனவுரமற்ற வழக்கங்களைக் காட்டுகின்ற தனியன்கள்: உணவு, தூக்கம் ஆகியவைகளைப்பற்றிய தனித்த கருத்துகள், அதிகமான அளவில் நகத்தினைக் கடித்தல், பெருவிரல் சூப்புதல் போன்றவை	14	24
ஆளுமை நிலை மாறியுள்ளதாகத் திட்டவட்டமாகக் கருதப்பட்டவை: நரம்புநோய், துவக்க உளப் பிணி, பிறழ்வு ஆளுமை	25	2
எட்டு ஆண்டுகளுக்குப் பின்னும்	22	4
அதிகமான செயல் தன்மை: அதிகமான அமைதியின்மை, அதிகமான அளவில் உடலில் வலுத்தாக்குதல் கொள்ளும் தன்மை, அதிகமான அளவில் தூண்டுகைகளினால் செயலுறுதல் ...	46	0
கூட்டத்துடன் ஒன்றியிருக்க அதிகமான தூண்டுதல் பெற்றிருத்தல்	31	11
நட்பினைத் தவிர்க்க முயல்கின்ற மனப்போக்கு ...	16	28
ஏற்றுக்கொள்ளும் மனப்போக்குகளைக் கொண்டிருத்தல்	2	15
தாழ்வு உணர்வுகள் அதிகமாகக் கொண்டிருத்தல்	38	4
விளையாட்டுகளில் அதிகமான அக்கறையும் செயற்படுதலும்	73	57
வாரத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை திரைப்படத்திற்குச் செல்லுதல்	88	42
மிக அதிகமாகத் திரைப்படத்திற்குச் செல்லுதல் ...	33	10
ஆய்வுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ...	105	105

சக்திகளின் அடிப்படையிலும் மதிப்பிடல் வேண்டும். ஹீலி என்பவராலும் புருன்னர் என்பவராலும் நடத்தப்பட்ட ஆய்வு, தனித்த ஏதுக்களும் சமூக ஏதுக்களும் இளமையில் குற்ற நடத்தை உள்ளவர்களை உண்டாக்க எவ்வாறு செயற்படுகின்றன என்று காட்டுகின்றது. பாஸ்டன், நியூஹேவன், டெட்ராய்ட் பகுதிகளில் குற்ற நடத்தையுள்ளவர்களைப்பற்றி விரிவான ஆய்வுகள் நடத்தப்பெற்றன. குற்ற நடத்தையில்லாத சகோதரர்களைக் கொண்டிருந்தவர்கள் தனித்த ஆய்விற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஏனெனில், குற்ற நடத்தை உள்ளவர்களது சமூகப் பின்னணிக்கு ஒப்பானதொரு கட்டுப்பாட்டுக் குழு இருக்குமானால், ஆய்வதற்கும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் அது பயனுள்ளதாயிருக்கும். ஆய்வு செய்யப்பட்ட 153 குற்ற நடத்தையுள்ளவர்களில் 22 பேர்கள்மட்டுமே இசைவானதொரு சூழ்நிலையில் வாழ்ந்துவந்த குற்ற நடத்தைக்காரர்கள் என்று கருதலாம். இல்லச் சமுதாயப் பின்னணிகள் குற்ற நடத்தையினை உருவாக்குவதில் கொள்கின்ற முக்கியத்துவம் இதன்மூலம் உணரப்படுகின்றது. குற்ற நடத்தையுள்ளவர்களில் சிலர் வாழ்ந்த இசைவான நிலைகள் என்று கருதப்பட்டவை கீழ்க்கண்ட காரணங்களினுலாகும்:

1. நிலையான தன்மை, சாதாரண பொழுதுபோக்குத் தேவைகள், சாதாரண உடல் தேவைகளும் வசதிகளும் கொண்ட நல்ல இல்லச் சூழ்நிலைகள்.

2. குடும்ப நெரிசல்களிலிருந்து சுதந்திரம் பெறுதல், குழந்தைகளைக் காப்பாற்றுவதிலும் நடத்துவதிலும் சாதாரண மனப்பான்மை கொண்டிருத்தல், சட்டத்தை மதித்தல் போன்றவைகளினுலான பெற்றேர்களது நல்ல மனப்பான்மைகள்.

3. இளமையில் குற்ற நடத்தைகொள்ள நேரடிச் செல்வாக்குகளை அளிக்காத சுற்றுப்புறம்.

பெற்றேர்களின் மனப்பான்மைகள்

அதிகாரம் 9-ல் பல இளையோர்களுக்கு மனமுறிவினை உண்டாக்குகின்ற முக்கிய ஏது, பெற்றேர்கள், அவர்களை 'அவர்கள் வழியில்' விட மறுப்பதுவே ஆகும் எனக் குறிப்பிடப்பெற்றது. பலர் இளமையில் குற்ற நடத்தை கொள்வதற்குரிய வளர்ச்சி, சுதந்திரம் கொள்ள இருக்கின்ற ஆவலைக் குலைத்தலினுல் ஏற்படுவதாகும். 10 அல்லது 11 வயதுகளில் உள்ள சிறுமியர்களில் 70 சதவீதத்தினரும் சிறுவர்களில் 60 சதவீதத்தினரும் இல்லத்திலேயே அதிக இன்பம் காண்பதாகவும், அவர்களுடைய ஓய்வு நேரத்தில் பெரும்பகுதியை இல்லத்திலேயே செலவிட விரும்புவதாகவும் அறியப்பட்டது.

அட்டவணை 17—3

குற்ற நடத்தையுள்ளவர்களும் குற்ற நடத்தையற்றவர்களும் சில தீரச்செயல்களைக் கைக்கொள்ளுகின்ற தன்மைகளைப் பற்றிய ஒப்புமை (குளுக், குளுக் தந்தது).

தீரச்செயல்கள்	குற்றநடத்தையுள்ளவர்கள் — எண்ணிக்கை	குற்றநடத்தையுள்ளவர்கள் — சதவீதம்	குற்றநடத்தையற்றவர்கள் — எண்ணிக்கை	குற்றநடத்தையற்றவர்கள் — சதவீதம்	வேறுபாடு சத வீதம்
கார்களை ஓட்டிச் செல்லுவதற்காக அவற்றைத் திருடுதல் அல்லது ஓடிக்கொண்டிருக்கின்ற லாரிக்குள் குதித்தல்	457	91·4	119	23·8	67·6
இரவில் அதிக நேரம் வெளியிலிருத்தல்	455	91·0	34	6·8	84·2
சிறுவயதிலேயே புகைபிடித்தல்	450	90·0	114	22·8	67·2
அனுமதிச் சீட்டின்றி சினிமாக் கொட்டகைகளில் புகுதல்...	334	66·8	50	10·0	56·8
மற்றவர்களது பொருள்களை அழித்தல்	309	61·8	19	3·8	58·0
வீட்டைவிட்டு ஓடுதல் ...	295	59·0	6	1·2	57·8
பித்தலாட்டம் செய்தல் ...	294	58·8	8	1·6	57·2
சூதாடுதல் ...	265	53·0	45	9 0	44·0
சிறுவயதிலேயே குடித்தல் ...	146	29·2	2	0·4	28·8
தீவைத்தல் ...	66	13·2	2	0·4	12 8

பூப்படைந்தபின்னர் இளையோர்கள் அதிகமான அக்கறைகளைப் பெறுவதாலும், விரிவடைந்த சமூகச் செயல்களைக் கொள்வதாலும் இல்லத்திற்கு வெளியே இன்பங்களைக் காண விழைகின்றனர். பெற்றோர்கள் இவ்வுண்மையை மறைக்க முயலுதல் தவறாகும். இளையோர்களது ஆசைகளைக் குலைக்க முயலாது வளர்கின்ற சிறுவர் சிறுமியருடைய குழந்தைப் பருவம் சார்ந்திருக்கின்ற தன்மையினின்று

வெளிச்செல்லும் தன்மையினைக் கைக்கொள்வதற்கு உதவி அளிக்கவேண்டும். பெற்றோர்களது மனப்பான்மைகள் இளமையில் குற்ற நடத்தை கொள்ளுதற்கு மிக நெருங்கிய தொடர்புகொண்டிருக்கின்றது என்ற கற்பிதத்தைச் சோதிக்கக் குற்றநடத்தையுள்ளவர்கள், குற்ற நடத்தையற்றவர்கள் ஆகியோர்களது இல்லங்களில் கைக்கொள்ளப்படுகின்ற பெற்றோர் கட்டுப்பாடுகளின் வகைகளை குளுக்குகள் ஆய்வு செய்தனர். குற்ற நடத்தையுள்ளவர்களது பெற்றோர் குற்ற நடத்தையற்றவர்களின் பெற்றோரைக் காட்டிலும் அதிகமான அளவில் அறிவுரை அளிப்பதனைத் தவிர்த்துத் தண்டனையளிப்பதையே கைக்கொண்டனர். அட்டவணை 17—4-ல் அளிக்கப்பட்டுள்ள முடிவுகள், குற்ற நடத்தையுள்ளோர்களின் தாயர்கள் அவர்களுடைய கட்டுப்பாட்டில் கண்டிப்பில்லாதவர்களாகவும், ஒழுங்கற்றும் இருந்ததால், தந்தையர்கள் கண்டிப்பில்லாதவர்களாகவும், ஒழுங்கற்றும், அதிகமான கடுமையைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருப்பதைக் காட்டுகின்றன.[24] குற்ற நடத்தையில்லாதவர்களின் தாயர்களும் தந்தைகளும் நிலையான அன்புள்ள கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தனர்.

பெற்றோர்களுடைய மனப்பான்மைகளுக்கு நெருங்கிய தொடர்புள்ள ஏது பெற்றோர்களது குணவியல்பாகும். குழந்தை பின்பற்றலைக் கைக்கொள்கிறது என்று குறிப்பிடப்பெற்றது. குறிப்பாக அவன் தன்னுடைய அதிகாரிகள் என்று கருதுபவர்களைப் பின்பற்ற முயல்கின்றான்.

அவன் அவ்வாறான நடத்தை வகைகளை அவ்வாறுதான் செய்ய வேண்டும் என எண்ணுகிறான். குடித்தல், ஒழுக்கமற்ற நடத்தை, சட்டத்தை மதியாமை ஆகியவற்றின் தொடர்பில் பின்பற்றுதலும் கருத்தேற்றமும் இளையோர் சிறுவர் சிறுமியர்களிடத்துக் குற்ற நடத்தைப் போக்குகள் ஏற்படுவதற்கு உதவுகின்றன. லம்ப்கின் (Lumpkin) என்பவர் நடத்திய ஆய்வில், குற்ற நடத்தையுள்ள சிறுமிகளின் பெற்றோரது பின்னணி இசைவற்று இருப்பதாய்க் கண்டார்.[25] 189 குடும்பங்களில் 443 தடவைகள் குற்றம், குடிப்பழக்கம், குறையற்ற பால்தொடர்பு ஆகிய சமூகக் குறைபாடுடைய போக்குகள் தோன்றின. எஸ். எஸ். குளுக், இ. டி. குளுக் ஆகியோர் நடத்திய ஆய்வில், குற்ற நடத்தையுள்ளவர்களது பெற்றோர்களையும், குற்ற நடத்தையற்றவர்களது பெற்றோர்களையும், அவர்களுடைய உடல்,

[24] Op. cit., p. 131.

[25] K. D. Lumpkin, 'Factors in The Commitment of Correctional School Girls in Wisconsin', American Journal of Sociology, 1931, Vol. 37, pp. 222-230.

அட்டவணை 17—4

குற்ற நடத்தையுள்ளவர்கள், குற்ற நடத்தையற்றவர்கள் ஆகியோரது பெற்றோர்களின் கட்டுப்பாடுகளினுடைய இயல்புகளைப் பற்றிய ஒப்புமை (குளுக்-குளுக் தந்தவை).

தாய்

கட்டுப்பாடு	குற்ற நடத்தையுள்ளவர்கள்		குற்ற நடத்தையில்லாதவர்கள்		வேறுபாடு சதவீதம்
	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்	
கண்டிப்பற்ற தன்மை	282	56·8	58	11·7	45·1
அதிகமான கடுமை	22	4·4	8	—1·6	2·8
ஒழுங்கற்ற தன்மை	172	34·6	104	21·1	13·5
நிலையான ஆனால் அன்புடன்	21	4·2	324	65·6	61·4
மொத்தம்	497	100·0	494	100·0	

தந்தை

கட்டுப்பாடு	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்	வேறுபாடு சதவீதம்
கண்டிப்பற்ற தன்மை	122	26·6	82	17·9	8·7
அதிகமான கடுமை	120	26·1	40	8·7	17·4
ஒழுங்கற்ற தன்மை	191	41·6	82	17·9	23·7
நிலையான ஆனால் அன்புடன்	26	5·7	255	55·5	--49·8
மொத்தம்	459	100·0	459	100·0	

மன எழுச்சிக் குறைபாடுகளின் தொடர்பில் ஒப்பிட்டுப்பார்க்கப் பட்டது.

அட்டவணை 17-5, குற்ற நடத்தையுள்ளவர்களது பெற்றோர்கள் தீவிரமான உடல்நோய்களினாலும், மனப்பின்வாங்குதலினாலும், மனவெழுச்சித் தொல்லைகள், குடிப்பழக்கம், குற்ற நடத்தை ஆகியவற்றிலும் குற்ற நடத்தை இல்லாதவர்களின் பெற்றோர்களைக் காட்டிலும் அதிகமாக அவதியுறுவதாகக் காட்டுகின்றது.[26] குற்ற நடத்தையுள்ளவர்களின் தந்தையர்களில் 39·6 சதவீதத்தினரும், தாயர்களில் 48·6 சதவீதத்தினரும் தீவிரமான உடல் நோய்களினால் அவதியுற்றனர். ஆனால், குற்ற நடத்தையில்லாதவர்களின் தந்தையர்களில்

[26] Op. cit., p. 100.

28·6 சதவீதத்தினரும், தாயர்களில் 28·6 சதவீதத்தினரும் மட்டுமே தீவிர உடல் நோய்களினுல் அவதியுற்றனர். குற்ற நடத்தையுள்ளவர்களின் தந்தையர்களில் 60 சதவீதத்தினர் குடிகாரர்களாய் இருந்தனர். குற்ற நடத்தையில்லாதவர்களின் தந்தையர்களில் 39 சதவீதத்தினர்மட்டுமே குடிகாரர் நிலையை அடைந்திருந்தனர். குற்ற நடத்தையில்லாதவர்களின் தாயர்களைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமான குற்ற நடத்தையுள்ளவர்களின் தாயர்கள் மிக அதிகமாகக் குடித்தார்கள். குற்ற நடத்தையுள்ளவர்களுடைய பெற்றோர்களின் வாழ்க்கையிலும் குற்ற நடத்தையும் குற்றமும் இருந்தன.

குடும்பத்தில் பிளவும் குற்ற நடத்தையும்

பல ஆண்டுகளாகப் பிளவு கொண்ட இல்லம், இளமையில் குற்ற நடத்தை ஏற்படுவதற்குரிய முக்கியக் காரணங்களில் ஒன்ருகக் கருதப்பட்டுவந்துள்ளது. இந்தக் கூற்றினை ஆதரிக்க இல்லப் பின்னணிகளைப்பற்றிப் பல ஆய்வுகள் நடந்துள்ளன. இவ்வாய்வுகள் எந்தவிதமான விதிவிலக்குமின்றிக் குற்ற நடத்தையுள்ள குழந்தைகளின் பெருஞ் சதவீதத்தினரது பின்னணி பிளவுபட்ட இல்லமாக இருந்தது என்று காட்டுகின்றது. இவ்வாய்வுகளை விளக்கிப் பொருள் கூறும்பொழுது நாம் மிக எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். பல நிலைகளில் முறிந்த இல்லமானது, பல நிகழ்ச்சிகளின் உணர்ச்சி முகடாக (climax) இருந்து, அது குடும்பத்திலுள்ள எல்லா உறுப்பினர்களையும் பாதிக்கின்ற உள்ளடங்கிய பொருத்தப்பாடுகளைக் காட்டுகின்றது.

கீழான பொருளாதாரக் குழுக்களில், முறிந்த இல்லம் மட்டும் குற்ற நடத்தையை உண்டாக்குகின்ற ஏதுவாக இல்லை என்று குறிப்பிடுவதற்குச் சான்றுகள் உள்ளன. மேலும், கேம்பெல் (Campbell) என்பவர் முறிந்த இல்லத்துடன் தோன்றுகின்ற முனைப்பு, கவனிப்பின்மை, ஏழ்மை ஆகிய ஏதுக்களே இக்குழுக்களில் கூடுதலான குற்ற நடத்தை ஏற்படுவதற்குரிய காரணமாக இருப்பதாகக் கூறி, அதற்குரிய சான்றுகளையும் அளிக்கின்ருர்.[27] இருபாலாரையும் சேர்ந்த 604 குற்ற நடத்தை உள்ளவர்களுடைய வரலாறுகளின் அடிப்படையில், ஹிர்ச் (Hirsch) என்பவர் கிடைக்கப்பெற்ற முடிவுகளை விளக்கிப் பொருள் கூறும்பொழுது, முறிந்த இல்லங்கள் குடும்பத்தின் அமைப்பிலுள்ள பிறழ்வான நிலைகளினுலும், பெற்ருேர்களது மனப்போக்குகளிலுள்ள நிலையற்ற தன்மைகளினுலும் ஏற்படுகின்றதே

[27] M. W. Campbell, 'The Effect of the Broken Home upon the Child in School', Journal of Educational Sociology, 1932, Vol. 5, pp. 274-281.

அட்டவணை 17—5

தந்தை தாயின் தீவிரமான உடல்நோய்கள், மனத்திறனில் பின் வாங்கியிருத்தல், மனவெழுச்சித் தொல்லைகள், குடிப்பழக்கம், குற்ற நடத்தை ஆகியவைகளின் வரலாறு (குளுக்-குளுக் தந்தவை).

தாய்

நிலை	குற்ற நடத்தையுள்ளவர்கள் எண்ணிக்கை	குற்ற நடத்தையுள்ளவர்கள் சதவீதம்	குற்ற நடத்தையில்லாதவர்கள் எண்ணிக்கை	குற்ற நடத்தையில்லாதவர்கள் சதவீதம்	வேறுபாடு சதவீதம்
தீவிரமான உடல்நோய்கள்	243	48·6	165	33·0	15·6
மனத்திறனில் பின்தங்கியிருத்தல்	164	32·8	45	9·0	23 8
மனவெழுச்சித் தொல்லைகள்	201	40·2	88	17·6	22·6
குடிப்பழக்கம் ...	115	23·0	35	7·0	16·0
குற்றம் செய்தல் ...	224	44·8	75	15·0	29·8

தந்தை

நிலை	குற்ற நடத்தையுள்ளவர்கள் எண்ணிக்கை	குற்ற நடத்தையுள்ளவர்கள் சதவீதம்	குற்ற நடத்தையில்லாதவர்கள் எண்ணிக்கை	குற்ற நடத்தையில்லாதவர்கள் சதவீதம்	வேறுபாடு சதவீதம்
தீவிரமான உடல்நோய்கள்	198	39 6	143	28 6	11·0
மனத்திறனில் பின்தங்கியிருத்தல்	92	18·4	28	5·6	12·8
மனவெழுச்சித் தொல்லைகள்	220	44·0	90	18·0	26·0
குடிப்பழக்கம் ...	314	62·8	195	39·0	23·8
குற்றம் செய்தல் ...	331	66·2	160	32 0	34·2

யன்றிக் குற்ற நடத்தையினால் நேரடியாக விளைவதில்லை என்று கூறினார்.[28] முறிந்த இல்லங்களிலிருந்து வந்த குற்ற நடத்தையுள்ளவர்களின் சகோதரர்களில் பலர் இவ்வேதுவினால் பாதிக்கப்படவில்லை.

பொருளாதார ஏதுக்கள்

இளமையில் குற்ற நடத்தை கொள்கின்ற அளவு, சில பொருளாதார நிலைகளுக்கு மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாக அறியப்பெற்றது. அதிகமான அளவில் சுபீட்சம் இருக்கின்ற பொழு

[28] N. D. M. Hirsch, 'Dynamic Causes of Juvenile Crimes', Cambridge, Mass.: Sci-Art Publishers, 1937.

தும், பொருளாதாரச் சோர்வு ஏற்படும்பொழுதும் குற்ற நடத்தை அதிகரிக்கின்றது. சாதாரணப் பொருளாதார நிலைகளில் குற்ற நடத்தை மிகக் குறைந்த விகிதத்தில் இருக்கின்றது. பர்கஸ் (Burgess) என்பவர் இளமையில் குற்ற நடத்தை ஏற்படுவதற்கும், கீழான குடும்ப வருவாய் இருப்பதற்கும் உயர்ந்த உடன்தொடர்பு இருப்பதாகக் கண்டார்.[29] அவர் சிக்காகோ, கிளீவ்லாந்து, கொலம்பஸ், ரிச்மண்டு, பாஸ்டன் ஆகிய நகரங்களில் (Chicago, Cleveland, Columbus, Richmond and Boston) இருந்த இளமைக் குற்ற நடத்தை விகிதங்கள், குடும்பம் துயர் உதவியில் இருத்தல், சார்ந்திருத்தல், ஆதரவின்மை, தந்தை வேலையில்லாதிருத்தல், வீட்டு வாடகையளிக்கும் நிலை ஆகிய பொருளாதார ஏதுக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகின்றார். ஏழ்மை தன்னுடன் குற்ற நடத்தையைக் கொண்டுவருகின்றது அல்லது குற்ற நடத்தையுடன் நெருங்கிய தொடர்புள்ள ஏதுக்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. குற்றம், நோய், அறியாமை, கெட்ட நடத்தை ஆகியவைகள் ஏழ்மையுடன் நெருங்கிய தொடர்புகொண்டுள்ளதாக நாம் காண்கிறோம்.

பெற்றோரில் ஒருவர் இறப்பதனால் இல்லங்கள் முறிவதனைப் பற்றி எச்சரிக்கையுடன் ஆய்வு செய்தால், அவ்வாறான சூழ்நிலை குழந்தைகளிடத்தே நடத்தைத் தொல்லைகளை விளைவிக்கலாம் என்று அறிவோம். பொருளாதார நிலையில் இசைவற்ற நிலையில் இருக்கும் குடும்பங்களிலிருந்து வருகின்ற குழந்தைகள் இசைவான பொருளாதாரச் சூழ்நிலையிலிருந்துவரும் குழந்தைகளைக் காட்டிலும் அதிகமான நடத்தைத் தொல்லைகளை அனுபவிப்பது சாத்தியமேயாகும். ஒரு தொழிலாளியின் குடும்பத்தில் தந்தை இறந்துவிட்டால், குடும்பத்தினைக் காப்பாற்றத் தாயும் வயதான குழந்தைகளும் அதிகமான பொறுப்புகளுக்குள்ளாகிக் கடும் பொருளாதாரச் சுமையினைத் தாங்க வேண்டியவர்களாகின்றார்கள். பெரும்பாலும் ஆயுள் இன்சூரன்ஸ் அல்லது வேறு வகையான தற்காப்பு இருப்பதில்லை. தாய் ஒரு நாளில் பல மணி நேரங்கள் இல்லத்தினைவிட்டு வெளியே தங்கவேண்டியிருப்பதனால், குழந்தைகளுக்குப் போதிய அளவு மேற்பார்வை இருப்பதில்லை. அவ்வாறான நிலையில் இசைவான குடும்ப வாழ்க்கைக்கு மிகவும் கட்டாயத் தேவையான குழந்தைகளுடன் கொள்ள வேண்டிய நெருங்கிய, நம்பகமான உறவினை பெற்றோரால் ஏற்படுத்த முடிவதில்லை.

[29] E. W. Burgess, 'The Economic Factor in Juvenile Delinquency', Journal of Criminal Law, Criminology and Political Science, 1952, Vol. 43, p. 35.

இரண்டு பெற்றோர்களும் உயிருடன் இருந்தாலும், ஏழ்மை நிலையிலுள்ள இல்லம் குழந்தைகளை நல்ல பொருத்தப்பாடுடைய தனியன்களாக வளர்ப்பதில் மிகவும் அதிகமான அளவில் பின்தங்கியிருக்கின்றது. பெரும்பாலும் தந்தை போதிய அளவு ஊட்டமின்றி, பொழுதுபோக்குமின்றி அதிக நேரம் உழைக்க வேண்டியதாய் இருக்கின்றது. அவருடைய மனப்போக்கும், பயிற்சியும் கட்டுப்பாட்டுச் சூழ்நிலைகளைக் கவனத்துடன் கையாள வழிவகுப்பதில்லை. இதன் காரணமாக இடைவிடாது முனைப்பு தோன்றுகிறது. இவ்வாறான குடும்பத்திலுள்ள குழந்தைகள் தங்கள் பள்ளியிலுள்ள மற்றக் குழந்தைகள் அனுபவிக்கின்ற சில வசதிகளையும், சுகவாழ்க்கையையும் அனுபவிக்க முடிவதில்லை. இதனால் சில குழந்தைகள் இவ்வசதிகளைப் பெறுவதற்காக நேர்மையற்ற முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். அவ்வாறான நிலைகளில் தந்தை இறந்துவிட்டால் அல்லது விட்டுவிட்டுச் சென்றுவிட்டால், மோசமான நிலைகளை உருவாக்கும் கடைசி ஏதுவாக அந்நிலை செயலுறுகின்றது.

மிகையாகக் கூடியிருத்தல் (Overcrowding)

முன்பு கூறியிருந்த பல ஏதுக்களுடன் ஓரளவு நெருங்கிய தொடர்புகொண்ட இல்லச் சூழ்நிலை இல்லத்தில் மிகையாகக் கூடியிருத்தலாகும். ஏழ்மைச் சூழ்நிலைகளில் இது ஏற்படச் சாத்தியமாகின்றது. இது திருட்டுக்குக் கொண்டுசெல்கின்றது. நெருக்கமான வாழ்க்கை நிலைகள் கொண்ட இல்லம் அல்லது சுற்றுப்புறத்தில் வாழ்கின்ற குழந்தைகள், அதிகமான பால் தூண்டலுக்குள்ளாகி, அதன் காரணமாக ஒழுக்கக்கேடுள்ளவர்களாகவும் ஆகலாம். 207 சிறுவர்களது பின்னடப்பு ஆய்விலிருந்து, 1948-ல் 10 வயது சிறுவர்களாக இருந்தபோது டெட்ராய்ட் (Detroit) காவல் நிலையத்திற்கு இவர்களைப்பற்றிக் குற்றச்சாட்டுகள் வந்தன என்றும், 1950-ல் இவர்களில் 43 சதவீதத்தினரைப் பற்றிய குற்றச்சாட்டுகள் வந்தன என்றும் அறிகின்றோம்.[30] காவல் நிலையத்தாருடன் முதல் தொடர்பு கொண்டபொழுது, குறிப்பிடப்பட்ட இனங்களில் திரும்பவும் செய்தவர்களும், செய்யாதவர்களும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டனர். இரண்டு அல்லது அதிகமான சகோதரர்களைப் பெற்றிருத்தல், பகுதி அறையில் வாழ்தல், ஓர் அறையில் உள்ள குடும்பத்தில் வாழ்தல், கெட்ட சிறுவன் என்ற புகழைப் பெற்றிருத்தல் ஆகியவைகள்

[30] W. W. Wattenberg and F. Quiroz, 'A Follow-up Study of Ten-Year-Old Boys with Police Records', Journal of Consulting Psychology, 1953, Vol. 17, pp. 309-313. (by permission of the Journal of the American Psychological Association.)

திரும்பச் செய்பவர்களைச் செய்யாதவர்களிடமிருந்து பிரித்து உணர்த்தின. இவை அட்டவணை 17-6-ல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 17—6

திரும்பச் செய்தவர்கள், திரும்பச் செய்யாதவர்கள் ஆகியோர்களுக்கிடையே சில ஒப்புமைகள் [வேட்டன்பெர்க், க்ரோஸ் (Wattenberg, Quiroz) அளித்தது].

இனம்	திரும்பச் செய்பவர்கள்		திரும்பச் செய்யாதவர்கள்	
	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்
மோசமான மதிப்பெண்கள் அல்லது பள்ளியில் தேருமை ...	16	37	45	27
இரண்டு அல்லது அதற்கு அதிகமான சகோதரர்கள் ...	27	63	53	32
அறை வாழ்க்கை அல்லது ஒரு சிறு அறையில் குடும்பம் முழுவதும் வாழ்தல்	11	26	19	12
சாதாரணமானவன் என்று புகழ் பெற்றிருத்தல்	21	49	122	74
கெட்ட சிறுவன் என்ற புகழைப் பெற்றிருத்தல்	20	47	32	20

இங்கு மற்றக் காரண இல்லச் சூழ்நிலைகள் கருதப்படவில்லை; அல்லது அவைகளைப்பற்றிக் கருதிய முக்கிய ஆய்வுகளைப்பற்றிக் கருதுவதற்கும் இங்கு இடமில்லை. ஒதுக்குதல், தாயார் வேலைக்குச் செல்லவேண்டிய கட்டாயம், கல்வி வாய்ப்புகள் போதிய அளவு இல்லாமை, பொழுதுபோக்கு வசதிகள் போதிய அளவு இல்லாமை, முறிந்த இல்லங்கள், இல்லத் தொடர்பிலுள்ள இசைவில்லாத நண்பர்கள் ஆகியவைகளே முக்கிய ஏதுக்களாகும். இருப்பினும், வளர்கின்ற சிறுவர் சிறுமியர்களிடம் செல்வாக்குக் கொள்கின்ற முக்கிய இல்ல ஏது என்று பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்குமிடையேயுள்ள உறவினையும், குழந்தைகளுக்கிடையே ஏற்படுகின்ற உற

வினையும் குறிப்பிடலாம் என்று பல்வேறு ஆய்வுகளிலிருந்து போதிய அளவு சான்றுகள் பெறுகிறோம். பெற்றோர்கள், இளையோர் பிரச்சினைகளைப்பற்றிக் கொள்கின்ற இசைவான, நிலையான மனப்பான்மைகளின் முக்கியத்துவத்தை அதிகமாக வலியுறுத்தக் கூடாது.

சுற்றுப்புற நிலைகள்

நெருக்கமான சுற்றுப்புறங்கள்

மோசமான இல்லச் சூழ்நிலைகள், தீய விளைவுகள் ஏற்படும்போது இசைவில்லாத சுற்றுப்புறச் செல்வாக்குகளுடன் பொதுவாக உடன் நிகழ்கின்றன. முதலாவதாக, நெருக்கமான இல்லச் சூழ்நிலைகள் நெருக்கமான சுற்றுப்புற நிலைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. பல்வேறு ஆய்வுகளிலிருந்து அதிகமான மக்கள் வாழும் பகுதியில் குற்றம் அதிகமாய் இருப்பதாய் அறிகிறோம்.

நியூயார்க்கு நகரத்தில் இளமைக் குற்ற நடத்தைபற்றி மேல்லர் (Maller) என்பவர் நடத்திய ஆய்விலிருந்து, குற்ற நடத்தை சில வசதியற்ற பகுதிகளில் இருப்பதாக அறியப்பெற்றது.[31] உயர்ந்த குற்ற நடத்தையுள்ள பகுதிகள் என்பது கீழ்க்கண்ட இயல்புகளினால் அறியப்படுகின்றன: (1) குறைந்த வாடகையில். (2) முதியோர்களின் கீழான கல்விநிலை. (3) மிக அதிகமாக மாணவர்கள் பள்ளியில் பின்தங்கியிருத்தல். (4) மோசமான பொழுதுபோக்கு வசதிகள். (5) மிகையாகக் கூடிவாழும் நிலைகள். (6) உயர்ந்த முதியோர் குற்ற விகிதம். (7) இளையோர்களுக்காகச் செயல்கள் அமைக்கப்படாமை. இந்நிலைகள் மற்ற நகரங்களில் நடத்தப்பட்ட மதிப்பீடுகளிலிருந்து பெற்ற முடிவுகளின் தன்மைகளுக்கு ஒத்திருக்கின்றன. இவ்வாய்வுகள், குற்ற நடத்தைப் பகுதிகள் கீழ்க்கண்ட பொது வகைகளைச் சார்ந்திருப்பதாகக் காட்டுகின்றன:

(1) வணிக நிறுவனங்கள் அமைக்கப்படுகின்ற இடங்களில் கீழான வாழ்க்கை நிலைகள். (2) பொருள்கள் செய்யப்படுகின்ற பகுதிகள். (3) நிலையில்லாது மக்கள் வாழும் பகுதிகள்.

அட்டவணை 17-3-ல் அளிக்கப்பெற்றுள்ள குறிப்புகளின்படி குற்ற நடத்தையுள்ளவர்கள் காரில் சவாரி செய்வதற்காகக் கார்களைத் திருடுகின்றார்கள்; ஓடுகின்ற கார்களுக்குள் குதிக்கின்றார்கள்; குற்ற நடத்தையில்லாதவர்களைக் காட்டிலும் மிக அதிகமான அளவு இருட்டிய பின்னர் தெருக்களில் சுற்றுகின்றார்கள். கீழான வகுப்புக் குழுக்களில் குற்ற நடத்தையுள்ளவர்கள் மிக அதிகமாகச்

[31] J. B. Maller, 'Juvenile Delinquency in New York City', Journal of Psychology, 1936, Vol. 39, pp. 314-328.

காணப்படுகின்றுர்கள். நீதிமன்றங்களுக்குமுன் கொண்டுவரப்படுகின்ற தனியன் பெரும்பாலும் சமுதாயத்தினுலும், பெற்றேர்களினுலும் ஒதுக்கப்பட்டவனுக அல்லது கவனிக்கப்படாதவனுக இருக்கின்றுன். பல நிலைகளில் பல்வேறு சமுதாய நிறுவனங்கள் இளங் குற்றவாளியிடம் செல்லத் தவறுகின்றன. 1943-ல் ஆரம்பிக்கப் பட்ட லாஸ் ஏஞ்ஜல்ஸ் இளைஞர் பணி, அடைவது கடினமாக இருக்கின்ற குழுக்களுடன் தொடர்புகொள்ள இயலும் என்றும், அவர்களை நன்றுக அமைக்கப்பட்டுள்ள பொழுதுபோக்குத் திட்டங்களுக்குக் கொண்டுவர இயலும் என்றும் காட்டியுள்ளது.[32] குளுக்ஸ் நடத்திய ஆய்வில் இவ்வாறுன திட்டங்களின் தேவைகள் உணர்த்தப்பட்டுள்ளன. அட்டவணை 17-7-ல் குற்றநடத்தையுள்ளவர்களுடையதும் குற்ற நடத்தையில்லாதவர்களுடையதுமான விளையாடும் இடங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.[33] குற்ற நடத்தையுள்ளவர்களில் அநேகமாக எல்லோரும் (95·2 சதவீதம்), குற்ற நடத்தையற்றவர்களில் 58·4 சதவீதத்தினரும் தெரு முனைகளில் விளையாடுகின்றனர். குற்ற நடத்தையுள்ளவர்களில் 86·8 சதவீதத்தினரும், குற்றநடத்தையில்லாதவர்களில் 14·2 சதவீதத்தினரும் தூரத்திலுள்ள சுற்றுப்புறங்களில் பொழுதைப் போக்கினர். குற்ற நடத்தையற்றவர்களைக் காட்டிலும் குற்ற நடத்தையுள்ளவர்களில் அதிகமான சதவீதத்தினர் திறந்த வெளிகளிலும், நீர்க்கரைகளிலும், இருப்புப்பாதைக் காலியிடங்களிலும் விளையாடினுர்கள். இதற்கு மாறுகக் குற்ற நடத்தையுள்ளவர்களில் மிகக் குறைந்த சதவீதத்தினரே இல்லத்திலும் விளையாட்டு மைதானங்களிலும் தங்களது ஓய்வு நேரத்தைச் செலவிட்டனர்.

பள்ளியும் குற்ற நடத்தையும்

அதனுடைய பரவலான பணி

தனித்த சிறுவர் சிறுமியர்களைப் பயனுள்ள குடிமக்களாக்குகின்ற பணியில் வழிகாட்டவும் வளர்ச்சியுறச் செய்யவும் பள்ளி முக்கிய சக்தியாக உருவாகிக்கொண்டு வருகின்றது. இதனைச் சில சமயங்களில் வாழ்க்கை இன்சூரன்ஸ் திட்டத்திற்கு ஒப்பாகவும் கூறலாம். ஆனுல், இதில் அரசாங்கம் பிரீமியங்களைக் கட்டிச் சிறந்த, பயனுள்ள குடிமக்களைப் பயனுக எதிர்பார்க்கிறது. ஒரு தொழிலைப் பெறப் பயிற்சிபெறுகின்ற குடிமகன் சிறந்த குடிமகனுக இருப்பான் என்று எதிர்பார்க்கப் படுகிறுன். மேலும், ஜனநாயக நாடு தன்னுடைய அறியாமை

[32] R. Duane, 'Chance to Belong;, Story of the Los Angeles Youth Project, 1943-49'. New York: Woman's Press, 1949.

[33] Op. cit., p. 162.

கொண்டுள்ள குடிமக்களின் விருப்பங்களினால் கட்டுப்படுத்தப்படுவது ஆபத்தாகும்.

அட்டவணை 17—7

குற்ற நடத்தையுள்ளவர்களுடையவும், குற்ற நடத்தையற்றவர்களுடையவுமான விளையாடுமிடங்களை ஒப்பிடுதல்.

விளக்கம்	குற்றநடத்தையுள்ளவர்கள்		குற்றநடத்தையற்றவர்கள்		வேறுபாடு
	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்	
தெருமுனைகள் ...	476	95·2	292	58·4	36·8
தூரத்திலுள்ள சுற்றுப்புறங்கள்	434	86·8	71	14·2	72·6
திறந்த வெளிகள் ...	232	46·4	135	27·0	19·4
நீர்க்கரைகள் ...	152	30·4	79	15·8	14·6
இருப்புப் பாதைத் திறந்த வெளியிடங்கள் ...	102	20·4	5	1·0	19·4
கீழான நடன அரங்குகள் போன்றவை ...	76	15·2	4	0·8	14·4
இல்லம்	208	41·6	466	93·2	—51·6
விளையாட்டு மைதானங்கள்	147	29·4	305	61·0	—31·6

பள்ளிகள் எதிர்கால குடிமக்களுக்குப் பயிற்சியளிப்பதில் முக்கியப் பங்கினைக் கொள்கின்றனவென்றாலும், அவைகளும் பல நிலைகளில் இளமையில் குற்ற நடத்தைக்கு வழிவகுக்கின்றன. இளையோர்கள் சந்திக்கின்ற சில முக்கியப் பிரச்சினைகளைப் பள்ளிப் பிரச்சினைகள் என்று முன்னைய அதிகாரங்களில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. பல இளையோர்கள் தோல்வியையே அடைவது பொருத்தமில்லாத பள்ளித்திட்டத்தினாலாகும் என்று குறிப்பிடப்பெற்றது. மற்றொரு பெருங்குழு ஆசிரியர்களிடமும் பள்ளி நிர்வாகத்திடமும் மாறுபட்ட நிலையினைக் கொண்டிருந்தது. ஏனெனில், அவர்கள் பள்ளியில் புங்

கெடுத்துக்கொள்ளவேண்டிய திட்டத்தில் அக்கறையின்றியும், சில நிலைகளில் வெறுப்பினையும் கொண்டிருந்தார்கள். இளங்குற்றவாளிகள் முதற் பணியாகப் பள்ளிக்குச் செல்லாமல் ஊர் சுற்றுதலைக் கைக்கொள்கின்றார்கள். ஆசிரியர்களும் பள்ளி நிர்வாகிகளும் ஊர்சுற்றுதலுக்கான காரணங்களை அறிதல்வேண்டும். ஏனெனில், ஊர்சுற்றுதல் திருட்டுக்கும் பால்குற்றங்களுக்கும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. வில்லியம்ஸ் என்பார் நடத்திய ஆய்வு இளமையில் குற்ற நடத்தைக்கும் ஊர்சுற்றுதலுக்கும் உள்ள தொடர்பின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. அவரது ஆய்வு 1944-45 பள்ளி ஆண்டில் உளவியல் மருத்துவ நிலையத்திற்கு அனுப்பப்பட்ட 98 பேர்களின் முடிவுகளை ஆதாரமாகக் கொண்டிருந்தது. இவர்கள் மருத்துவ நிலையத்திற்கு அனுப்பப்படுவதற்கான காரணங்களாக இருந்தவை: ஊர்சுற்றுதல், திருடுதல், மோசமான நடத்தை, பால்தவறுகள் ஆகியனவாகும். சில நிலைகளில் ஒரு தனித்த ஏது மட்டுமே காணப்பட்டது. 21 பேர்களிடம் ஊர்சுற்றுதல் மட்டுமே முக்கியக் குற்றச்சாட்டாகவும், 33 பேர்களிடம் ஊர்சுற்றிய வரலாறு முக்கியக் குற்றச்சாட்டாகவும் இருந்தன. 98 பேர்களைப்பற்றி மேலும் ஆய்வு நடத்தியதில் சில ஏதுக்கள் ஊர்சுற்றுதலை உண்டாக்கியதாகத் தோன்றியது. அவைகளை, அவற்றின் நிகழ் வரிசையில் வரிசைப்படுத்தினால்: (1) மோசமான பெற்றோர் கட்டுப்பாடு; (2) குறிக்கோள் இல்லை; (3) குழுக்கள்; (4) கீழான நுண்ணறிவு ஈவினைக்கொண்டிருத்தல்; (5) கீழான பொருளாதார அந்தஸ்து; ஆனால், மற்றவர்கள் போன்று நேர்த்தியாக உடை உடுத்த ஆவல்; (6) தீவிரமான நோயின் காரணமாக வகுப்பின் முன்னேற்றத்துடன் இருக்க முடியாமை; (7) தண்டனையளிக்கும் பெற்றோர்கள்; (8) ஆசிரியரை வெறுத்தல்.[84]

சமுதாயத்தின் வாழ்க்கையுடன் பள்ளித் திட்டம் நன்றாக இணைந்தால், ஆசிரியர்களின் பயன் மதிப்புகள் சமுதாயத்தின் பயன் மதிப்புகளுடன் இணைந்தால், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே ஜனநாயக இசைவான உறவு இருந்தால், பள்ளி இளமையில் குற்ற நடத்தையைத் தடுப்பதற்குச் சக்திவாய்ந்த பதிலாண்மையாகவும், இசைவான நன்மை பயக்கும் ஆளுமைகளை வளர்க்குமிடமாகவும் செயல்படும்.

தோல்வியின் விளைவுகள்

நடத்தை வளர்ச்சியின் தொடர்பில் காரண காரிய உறவுகளைச் சிறப்பாக விளக்கிப் பொருள் கூற எடுத்துக்கொள்ளும் முயற்சியின் தொடர்பில் தனியாள் வேறுபாட்டுப் பிரச்சினை மேலும் மேலும் அதிக

[84] E. Y. Williams, 'Truancy in Children Referred to a Clinic,' Mental Hygiene, 1947, Vol. 31, p. 405.

மான கவனத்தைப் பெறுகின்றது. நியூயார்க்கு நகரச் சீர்திருத்தப் பள்ளியிலும், அந்நகரைச் சார்ந்த ரேன்டல் தீவிலுள்ள அநாதை இல்லத்திலும் நடத்தப்பட்ட மதிப்பீடுகளின் முடிவுகளில் இம்முக்கியத்துவம் உணர்த்தப்படுகின்றது. பெய்சர் (Peyser) என்பவர் கூறுகின்றார்:

'பள்ளியில் தோல்வி பெறுதல் மற்ற எந்த நிலையைக் காட்டிலும், அதாவது, ஏழ்மை, முறிந்த இல்லம், சமயத் தொடர்பின்மை, உடல் குறை, மனக்குறை, உளவியல் குறைபாடு, ஊர்சுற்றுதல் ஆகிய வைகளைக் காட்டிலும் அதிகமான அளவு உடன் தொடர்புகொண்டுள்ளது. சிறுவர்களில் மிகப் பெரும்பான்மையானவர்களின் வரலாற்றில் பள்ளியில் தோல்வி என்பது ஏற்படுகின்றது'[35].

நியூயார்க்கு நகர ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளில் 29 சதவீதத்தினர் பின்தங்கியிருந்ததாகவும், அவர்களில் 84·4 சதவீதத்தினரிலிருந்து 92·8 சதவீதத்தினர், அவர் ஆய்வு செய்த குற்ற நடத்தைக் குழுக்களில் இருந்ததாகவும் அவரது குறிப்புகள் குறிப்பிடுகின்றன. சபாஸ்கி (Zabolski) என்பவர் நடத்திய ஆய்வின் முடிவுகளும் இவ்வாய்வின் முடிவுகளுக்கு ஆதரவினை அளிக்கின்றன.[36] அவருடைய ஆய்வில் 15·5 சராசரி வயதினை உடைய 50 குற்ற நடத்தையுள்ள சிறுவர்கள் அதே சராசரி வயதையுடைய கட்டுப்படுத்தப்பட்ட குழுவின் 50 குற்ற நடத்தையில்லாத சிறுவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டனர். குற்ற நடத்தையுள்ள சிறுவன் உளவியல் குறையினைக் கொண்டவனாய் இருக்கின்றான். அவனுடைய நடத்தை பல போதிய அளவு இன்மைகளால் அல்லது தோல்விகளால் ஏற்படுகின்றது. அது சில தீர்க்க முடியாத பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுத்துக் கொண்ட, சமூகம் ஏற்றுக்கொள்ளாத நடத்தையேயாகும்.

அதிகாரம் 10-ல் வகுப்பு அமைப்புகளின் தொடர்புகளிலுள்ள நிலைகள் மனமுறிவுகளை உண்டாக்கச் செயலுறுகின்றன என்றும், அவை இளமையில் குற்ற நடத்தைக்குக் கொண்டுசெல்கின்றன என்றும் குறிப்பிடப்பெற்றன. உயர்நிலைப்பள்ளியிலுள்ள சிறுவர் சிறுமியர்களில் கீழ் வகுப்புக்காரர்கள் பல செயல்களுக்கு 'வெளியே' இருப்பதாகக் குறிப்பிடப்பட்டது. ஹோலிங்ஸ் ஹெட் என்பவர் (Hollingshead) உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் மாலை விளையாட்டுகளிலும் விருந்துகளிலும் பங்கு பெற்ற அளவினைப்பற்றிக் குறிப்பிட்ட

[35] N. Peyser, 'Character Building and Prevention of Crime', Unpublished Manuscript, 1933, p. 70.

[36] F. C. Zabolski, 'Studies in Delinquency: Personality Structure of Delinquent Boys', Journal of Genetic Psychology, 1949, Vol. 74, pp. 109-117.

அட்டவணை 17—8

16 வயது சிறுவர்கள் மாலை விளையாட்டுகளிலும் விருந்துகளிலும் பங்கு பெற்ற அளவு (ஹாலிங்ஸ்ஹெட் அளித்தது)

பங்கு பெறும் அளவு	வகுப்பு I & II	III	IV
எங்கும் செல்லவில்லை	0	39	110
சிலவற்றிற்குச் சென்றனர்கள்	4	25	51
பெருமளவில் சென்றனர்கள்	8	41	16
எதையும் தவற விட்டுவிடவில்லை ...	23	41	6
மொத்தம்	35	146	183

குறிப்புகள் அட்டவணை 17-8-ல் அளிக்கப்பட்டுள்ளன.[87] ஐந்தாவது வகுப்பு உறுப்பினர்கள் எதிலும் பங்கு கொள்ளவில்லை. அட்டவணை 17-8-லிருந்து கீழான வகுப்புநிலை குறைந்த அளவு பங்குபெறுதலையே கொண்டிருந்ததாக அறிகிறோம். 23 பள்ளித்திட்டத்திற்கு வெளியே உள்ள செயல்களில் பங்குபெறுதலைப்பற்றிய ஆய்வில் அவைகள் வகுப்பு நிலைகளுடன் மிக நெருங்கிய தொடர்புகொண்டிருந்ததாகக் குறிப்பிட்டார். உயர்ந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் அதிகமான அளவு பங்குபெறுதலைக் கொண்டிருந்ததாகவும் குறிப்பிட்டார். இவ்வாறு ஏதாவது ஒரு காரணத்தினால் இத்தொடர்புகளிலிருந்து பிரிந்திருக்கின்ற கீழ் வகுப்பு இளையோன் அவனுடைய சார்ந்திருக்கின்ற தன்மையைத் திருப்திப்படுத்தவும், சமூக அனுமதியைப் பெறவும், மற்ற வழிகளின்மூலம் அடைவினைப் பெறவும் முயற்சிகள் செய்து குற்ற நடத்தை என்று கூறப்படுகின்ற நடத்தையை அடைகின்றான். குற்ற நடத்தை ஏற்படுமளவு இல்லம், கோயில், பள்ளி ஆகிய சமுதாயப் பதிலாண்மைகள் இளையோர் சிறுவர் சிறுமியர்களது தேவைகளுக்கேற்ற நன்மை பயக்கும் செயல்களை அளிக்கத் தவறிவிட்ட அளவினையே காட்டுகின்றன.

அதிகாரச் சுருக்கவுரை

இந்நூல் முழுவதிலும், நடத்தை வகைகளின் வளர்ச்சி, தனியனுக்கு உள்ளும் வெளியேயும் உள்ள சக்திகள், நிலைகள் ஆகியவற்றின் விளைவாகத் தோன்றுகின்றது என்ற பொதுக் கருத்து வலியுறுத்

[87] A. B. Hollingshead, Elmtown's Youth. New York: John Wiley and Sons, Inc., 1949.

தப்பட்டுள்ளது. இளேயோன், குழந்தைப் பருவத்திலிருந்து முதி யோர் பருவத்திற்கு நிலை மாறுகின்ற செயல்மிக்க தனியன் என்று விளக்கப்பட்டுள்ளது. எந்தக் குறிப்பிட்ட நேரத்திலும் அவனுடைய நடத்தை பல காரணங்களினாலும் நிலைகளினாலும் விளைகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குற்ற நடத்தை என்பது இக் கருத் தின்படி பல்வேறு நிலைகளால் விளைவதாகும். அவைகளில் உடற் காரணங்கள், மனவெழுச்சி நிலைகள், இல்லத்தின் சமூகப் பொருளா தார அந்தஸ்து, பொழுதுபோக்குத் தேவைகளும் வாய்ப்புகளும், கல்வி அடைவுகள், ஒப்பாருடன் கொள்ளும் உறவுகள், சமூக சொந் தப் பொருத்தப்பாடுகள், வழிகாட்டல் ஆகியவைகள் முக்கியமான காரணங்களாகும். குற்ற நடத்தையுள்ள சிறுவர்களின் ஆளுமை யமைப்புப் பெரும்பாலும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் வழிகளின் மூலம் அவர்களது தேவைகளைத் திருப்திபடுத்துவதில் அடைந்த தோல்வியினைச் சரியாகப் பொருத்தியமைக்க இயலாததனால் தோன் றியதாகும். இவ்வதிகாரத்தின் துவக்கத்தில் குற்ற நடத்தைக்காரர் களின் வகைகளைப்பற்றி அவர்கள் குற்ற நடத்தைக்காரர்களாக ஆவ தற்குக் காரணமாயிருந்த ஏதுக்களின் தொடர்பில் கருதியதால், சில நடத்தை வகைகள் அல்லது ஏதுக்களின் வகைகள் எவ்வாறு ஒரு தனித்த வகையான குற்ற நடத்தைக்காரனை உண்டாக்கச் செயற் படுகின்றன என்று சிறப்பாக அறியமுடிகின்றது.

பால்மட்டுமே குற்ற நடத்தையை உண்டாக்குவதில்லை; உள, நரம்புப் பிணிப்போக்குகள்மட்டும் குற்ற நடத்தையை உண்டாக்குவ தில்லை; தாழ்ந்த நுண்ணறிவுமட்டும் குற்ற நடத்தையை உண்டாக் குவதில்லை. அவை மரபுநிலையில் பெறப்படுவதில்லை; சூழ்நிலையினை மட்டுமே தனித்த ஏதுவாகக் கருதினாலும், குற்ற நடத்தையினைப்பற் றிய முழுக் கருத்தினை அளிக்கவில்லை. குற்ற நடத்தையுள்ளவர்கள் குற்ற நடத்தையில்லாதவர்களிடமிருந்து பல குறிப்பிடும்படியான வழிகளில் மாறுபட்டிருக்கின்றனர். இருப்பினும், தனித்த நிலைகளி லிருந்து பொதுமைகளை உண்டாக்கும்பொழுது மிகவும் எச்சரிக்கை யுடனிருக்கவேண்டும். அவர்களின் இயல்புகளின் முக்கியமானது பள்ளியில் தோல்வி அடைதலாகும். அவர்கள் பெரும்பாலும் பள்ளி யில் பின்தங்கியவர்களாகவும், உடன்படிப்பவர்களால் ஏற்றுக்கொள் ளப்படாதவர்களாகவும், சமுதாயத்தில் வசதியற்றவர்களாகவும் இருக்கின்றனர்கள். குற்ற நடத்தையுள்ளவர்களின் தேவைகள் குற்ற நடத்தையில்லாதவர்களின் தேவைகளிலிருந்து மாறுபட்டிருப்ப தில்லை. இல்லம், பள்ளி, கோயில்போன்ற இளைஞர்களுக்குப் பணி புரியும் நிறுவனங்கள் தடுப்புத் திட்டத்தினையும், புனரமைப்புத் திட் டத்தினையும் அமைக்கும்பொழுது, இளையோர்களது தேவைகளையும் பிரச்சினைகளையும் கருதுதல் வேண்டும்.

சிந்தனைக்குரிய பிரச்சினைகள்

1. இளமையில் குற்ற நடத்தையுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாக நீ நம்புகின்ற பத்து ஏதுக்களின் முக்கியத்துவத்தினை வரிசைப்படுத்துக.
2. நீ அறிந்த இளங்குற்றவாளியின் வரலாற்றை விளக்குக. அவனுடைய நடத்தைக்குப் பொறுப்பாயுள்ள ஏதுக்கள் என்று அவன் வாழ்க்கையில் உள்ள நிலைகளை உன்னால் குறிப்பிட இயலுமா?
3. கெட்ட நடத்தை தனியனைப் பாதிக்கின்ற பல்வேறு நிலைகளைக் குறிக்கும் அறிகுறிகளை விளக்குக.
4. பொதுக் கல்வியின் வளர்ச்சிக்குப் பின்னும் குற்றம் அதிகமாய் இருப்பதற்குரிய காரணத்தைத் தருக.
5. மூன்று சிறுவர்கள், ஒவ்வொருவரும் பேஸ்பந்து கையுறையைத் திருடினார்கள். இவர்கள் இச் செய்கையைச் செய்வதற்குத் தூண்டிய சக்திகளையும் நிலைகளையும் குறிப்பிடுக. இம்மூன்று சிறுவர்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதனைக் கூறுக.
6. இளங் குற்றவாளியின் தன்மை, இயல்புகள், பிரச்சினைகள் ஆகியவைகளைப்பற்றிய சில தவறான கருத்துகளை வரிசைப்படுத்துக.
7. குற்ற நடத்தைக்கான அறிகுறிகள் என்று கருதக்கூடிய நடத்தை வகைகளின் பட்டியலை அளிக்கவும். ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் அவ்வறிகுறிகளைப் புரிந்துகொள்வதனால் ஏற்படும் பயன்மதிப்புகள் யாவை?
8. படம் 17-2-ல் குற்ற நடத்தைச் சிறுவர்களது சொற்சோதனைத் திறன்களைப்பற்றியும், வினைமுறைத் திறன்களைப்பற்றியும் முடிவுகள் குறிப்பிடுவன யாவை? இம்முடிவுகளின் கல்வி முக்கியத்துவங்கள் யாவை?
9. அட்டவணை 17-7-ல் உள்ள குற்ற நடத்தைக்காரர்கள், குற்ற நடத்தையில்லாதவர்கள் விளையாடுமிடங்களைப் பற்றி அளிக்கின்ற குறிப்புகளை ஆய்வு செய்யவும். இவ் அட்டவணையில் விளையாடுமிடங்களைப்பற்றிக் குறிப்பிடுகின்ற வேறுபாடுகள் எவை? குற்ற நடத்தையைத் தடுப்பதற்காக அமைக்கப்படுகின்ற சமுதாயத்திட்ட முடிவுகளின் முக்கியத்துவம் யாது?
10. குற்ற நடத்தையுள்ளவர்களது பெற்றோர்களின் கட்டுப்பாட்டுப் பழக்கங்களைக் குற்ற நடத்தையில்லாதவர்களுடைய பெற்றோர்களின் பழக்கங்களுடன் ஒப்பிடுக.

தெரிவுசெய் நூற்பட்டியல்

1. Cole, L., 'Psychology of Adolescence' (Fourth Edition). New York: Rinehart and Co., Inc., 1954, Chap. 11.
2. Cruze, W. W., 'Adolescent Psychology and Development.' New York: The Ronald Press Co., 1953, Chap. 14.
3. Deutsche, A., 'Our Neglected Children.' Boston: Little, Brown and Co., 1950.
4. Fenton, N., 'The Delinquent in the Classroom', 'Juvenile Delinquency and the Schools.' Forty-seventh Yearbook of the National Society for the Study of Education, Part 1, 1948, Chap. 3.
5. Glueck, S., and E. Glueck, 'Delinquents in the Making.' 'Paths to Prevention.' New York: Harper & Bros., 1952.
6. Hurlock, E. B., 'Adolescent Development.' New York: McGraw-Hill Book Co., 1949, Chap. 11.
7. Kvaraceus, W. C., 'The Community and the Delinquent.' Yonkers-on-Hudson: World Book Co., 1954.
8. Kuhlen, R. G., 'The Psychology of Adolescent Development.' New York: Harper & Bros., 1952, Chap. 8.
9. Porterfield, A., 'Youth in Trouble: Studies in Delinquency and Despair.' Fort Worth: Leo Potishan Foundation, 1946.
10. 'Schools Help Prevent Delinquency.' Research Bulletin, National Education Association, 1953, Vol. 31, No. 3.
11. Shaw, C. R., 'Juvenile Delinquency and Urban Areas.' Chicago: University of Chicago Press, 1942.
12. Sheldon, W. H., 'Varieties of Delinquent Youth'. New York: Harper & Bros., 1949.
13. Sullenger, T. E., 'Social Determinants in Juvenile Delinquency.' New York: John Wiley and Sons, 1936.
14. Tappan, P. W., 'Juvenile Delinquency.' New York: McGraw-Hill Book Co., 1948.
15. Veeder, C. B., 'The Juvenile Offender.' Garden City Doubleday, 1954.

பகுதி—V

18. இளையோர் பருவத்திலிருந்து முதிர்ச்சியடைதல்

'உயர்ந்த மனிதன் மற்றவர்களது கருத்துகளுக்கு மதிப்புக் கொடுப்பான். ஆனால், முழுமையாக அக்கருத்துகளை அவன் ஏற்றுக்கொள்ள மாட்டான். தாழ்ந்த மனிதன் மற்றவர்களது கருத்துகளை ஏற்றுக்கொண்டாலும் அவைகளுக்கு அவன் மதிப்பு அளிப்பதில்லை.'

—*கன்பூசியஸ்*

வளர்ச்சிக் காலத்திலும், முதிர்ச்சி அடையும்பொழுதும் தனியனது வாழ்க்கையில் புதிய தேவைகள் தொடர்ச்சியாகத் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. துவக்க காலத்தில் ஏற்பட்ட சில தேவைகள் மாறுதலுக்குள்ளாகின்றன அல்லது அவைகள் முக்கியத்துவத்தை இழக்கின்றன. இளையோர் பருவத்திற்கு வளர்ச்சியடைவதனால் மாறிய தனியனாகவும், தன்னைப்பற்றி மாறிய கருத்துகளைக் கொண்டவனாகவும் தனியன் ஆகின்றான். பழைய குறிக்கோள்கள் திருத்தியமைக்கப்படுகின்றன; புதிய குறிக்கோள்கள் புகுத்தப்படுகின்றன. முதிர்ச்சியடைவதற்கான வளர்ச்சி அதிகமான திறன்களையும் சுதந்திரத்தினையும் உடன்கொண்டுவருவதோடு, அதிகமான தேவைகளையும் பொறுப்புகளையும் உண்டாக்குகின்றது. இளையோர் பருவம் துவங்கியபொழுது தோன்றிய சில வளர்ச்சிக்கான பணிகள் தொடர்ந்து செயலுறுகின்றன. இதே சமயத்தில் முதிர்ச்சியடைகின்ற தனியன் வளர்ச்சிக்கான மற்றப் பணிகளையும் சந்திக்கின்றான். இவ்வதிகாரத்தில் அளிக்கப்பட்டுள்ள பின்னிளையோர் பருவத்திலும் முன்னிளையோர் பருவத்திலும் தோன்றுகின்ற வளர்ச்சிக்கான பணிகள், தொழில் பொருத்தப்பாடு, திருமணப் பொருத்தப்

பாடு, திருமணத்துக்குரிய பொருத்தப்பாடு, ஜனநாயக சமூகத்தில் ஒரு குடிமகனுதல், முழுமையான வாழ்க்கை மெய்யுணர்வைப் பெறுதல் ஆகியவற்றின் தொடர்பிலுள்ள பணிகளாகும்.

பொறியியல் வளர்ச்சியினுல் ஏற்பட்ட சில சமூக விளைவுகள்

இன்றைய இளையோன் மாறுதலுக்குள்ளாகின்ற பண்பாட்டிற்குத் தன்னைப் பொருத்திக்கொள்கின்ற கட்டாயத்திற்குள்ளாகின்றுன். அதனுல் அவன் குழப்பத்திற்கும் சிக்கலுக்கும் உள்ளாகின்றுன். இம் மாறுதல் விஞ்ஞானம், புதிய கண்டுபிடிப்பு, புதியன தோன்றல் ஆகியவைகளின் விளைவேயாகும். இதனைத்தான் அண்மை ஆண்டுகளில் பொறியியல் வளர்ச்சி என்று குறிப்பிடுகின்றனர். படிப்படியாக உலகம் முழுவதும் இப்பொறியியற் புரட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தொழில் மிகவும் பயிற்சி வாய்ந்த தனித் தன்மையுடையதாக மாறியுள்ளது. மக்கள் ஒருவரையொருவர் அதிகமாகச் சார்ந்திருக்கலாயினர். இயற்கையின் எல்லைகள் பெருமளவில் மறைந்துவிட்டன. வாரங்களின் அடிப்படையிலும், மாதங்களின் அடிப்படையிலும் கணக்கிடப்பட்ட தொலைவு, இன்று மணி நேரங்களின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன. இதனுல் நாடுகள் மிகவும் அருகில் கொண்டுவரப்பட்டுள்ளன. இப்புரட்சியின் காரணமாகச் சமூகத்தின் அடிப்படை அமைப்பும், உலக நாடுகளும் மாறுதலுக்குட்படுவதோடு தனியன்கள், சமூகம் ஆகியவைகளின் சொந்த வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் அதிகமான விளைவுகள் உண்டாகியுள்ளன. இதனை இந்நூற்றுண்டின் துவக்கத்தில் இளையோர்கள் கொண்டிருந்த பழக்கங்கள், மனப்பான்மைகள், பயன் மதிப்புகள் ஆகியவற்றிற்கு மாறுபட்ட தன்மைகள்கொண்ட பழக்கங்கள், மனப்பான்மைகள், பயன் மதிப்புகள் ஆகியவற்றை இன்றைய இளையோர்கள் கொண்டிருப்பதனின்றும் அறிந்துகொள்ளலாம்.

பொருளாதாரப் போக்குகளின் தொடர்பில் அளிக்கப்பட்டுள்ள உண்மைகள், எல்லா இளையோர்களது குறிக்கோள்களும் ஊதியப் பணியாளர், அதிகார, பொறியியல் தொழில்களைப் பெறுவது மட்டுமே அன்று என்று முடிவுகொள்ளவே நம்மைத் தூண்டுகின்றன. அமெரிக்கப் பொருளாதார அமைப்புப் பல வழிகளில் சமூகத்தின் தோற்றம் மாறுவதனை வரம்புக்குட்பட்டதாக ஆக்குகின்றது. சமூகத்தின் தோற்றம் மாறுவது என்பது பொருளாதாரச் சமூக ஏணிகளில் முன்னேற வாய்ப்பினைப் பெறுவதனையே குறிக்கின்றது. இது மற்ற நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு வருகின்றவர்களது கனவாகவே இருந்துவருகின்றது. இனிமேலும் இளைஞர்கள் தங்களுடைய சக்திக்கு மீறிய நிலையினை அடைவதற்கான விருப்பக் கற்பனையில் மயங்கக்கூடாது. ஒரு சிறுவன் அல்லது சிறுமி தன்னுடைய வாழ்க்கை

வேலையாக ஊதியப் பணியாளர் துறையினையோ அல்லது சில முன்னேற்றங்கொண்ட பொறியியல் துறையினையோ தேர்ந்தெடுக்காத தனால்மட்டுமே அவருடைய வாழ்க்கையில் தோல்வியினை அடைந்து விட்டார் என்று கொள்ளலாகாது. ஒவ்வொரு தனியனையும் அவனுடைய சொந்தப் பொறுப்பினையும், சமூகத்திற்குள்ள பொறுப்பினையும் உணருமாறு செய்து, அவன் வாழ்கின்ற சமூகப் பொருளாதார அமைப்பில் தன்னைப் பொருத்தி அமைகின்ற செயல் தன்மையையும் கொள்ளுமாறு செய்தல் வேண்டும்.

இளையோர் சிறுவர் சிறுமியர்களுக்கு முன்னைய பல தலைமுறைகளில் கற்றுத்தராதவற்றைக் கற்றுத்தரல் வேண்டும். சான்ருக, பொறியியல் முன்னேற்றங்கள் புதிய பிரச்சினைகளையும் அதிகமான பொறுப்புகளையும் ஏற்படுத்தியிருக்கின்றன என்பதனை உணருமாறு செய்கின்றவாறு கற்றுத்தரல் வேண்டும். அச்சுயந்திரம், வாஞெலி, திரைப்படம், ஆகாய விமானம் ஆகியவைகளும் பொறியியல் முன்னேற்றங்களும் தீய சக்திகளாகவும் அழிவு சக்திகளாகவும் பயன்படலாம் என்றும், நன்மை பயக்கும் சக்திகளாகவும் செயற்படலாம் என்றும் காட்டியுள்ளன. இதுகாறும் விஞ்ஞானத்தின் நன்மைகளுக்காக நாம் கொடுத்த விலை சமூகத்தில் அதன் விளைவுகளே என்பதுபற்றிக் கருதாமல் விஞ்ஞானத்தின் நன்மைகளை நாம் பாராட்டிவந்துள்ளோம். ஷாப்பிரோ (Shapiro) என்பவர் நாம் கொடுத்த விலைபற்றிக் கீழ் வருமாறு குறிப்பிடுகின்ருர் :

'சிக்கல் வாய்ந்த தொழிற் சமுதாயத்தின் உறுப்பினர்கள் என்ற அடிப்படையிலும், தற்கால உலகிலுள்ள ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்கள் என்ற அடிப்படையிலும் நமது வாழ்க்கையிலுள்ள எந்த ஓர் இயல்பைக் காட்டிலும் நமது சமுதாயத்தை உருவாக்குகின்ற பல்வேறு குழுக்கள்மீது கொள்கின்ற நமது மனப்பான்மைகள்மீதும் அல்லது மனித சமுதாயத்தை உருவாக்குகின்ற மக்கள்மீது கொள்கின்ற மனப்பான்மைகள்மீதும் அதிகமான பொறுப்புகளைத் தொழில் நுட்பம் உண்டாக்கியுள்ளது. உலகம் மிக அதிகமாக ஒருவரையொருவர் சார்ந்திருக்கின்ற தன்மையில் வளர்கின்றது என்பதும், நமது சமுதாயம் அதனுடைய இயங்கும் தன்மை முன்னேறும்பொழுது அதனுடைய எல்லா உறுப்பினர்களிடமிருந்தும் அதிகமான கூட்டுறவைத் தேவையாகக்கொண்டுள்ளது என்பதும் நாம் சாதாரணமாகக் காண்கின்ற உண்மைகளேயாகும்.'[1]

நமது சமூகம்போன்ற பொறியியல் முன்னேற்றங்களினுல் மிக விரைவில் நிலைமாறுகின்ற சமூகத்தில் பொருந்தியமைகின்ற திறனும்,

[1] H. L. Shapiro, 'Anthropology's Contribution to Interracial Understanding', Science, May, 12, 1944, p. 373.

மாற்றி அமைத்துக்கொள்கின்ற திறனும் சிறப்பாக வாழ்வதற்கும், வெற்றிகரமாக வாழ்வதற்குமுரிய முக்கியத் தேவைகளாக இருக்கும். நமது வாழ்க்கையின் எல்லா நிலைகளையும், எல்லா நிறுவனங்களையும் இந்நிலைமாற்றங்கள் கட்டாயம் பாதிக்கும். முக்கிய மாறுதல்கள் தோன்றியுள்ளன என்றாலும், பொறியியலுடைய முழு விளைவுகள் இன்னமும் வரவிருக்கின்றன. இளைஞர்களது நிலையில் இவை கற்றலுக்குரிய திறனையும், கற்றலுக்குரிய ஊக்கியையும், தன்வயப்படுத்தற்குரிய விருப்பத்தினையும், செயல்தன்மையுள்ள ஜனநாயகச் சமூகத்திற்குத் தேவையான பொருத்தப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளுவதற்குரிய விருப்பத்தினையும் கொள்ளவேண்டிய தேவைகளைக் கொண்டுள்ளன. பழைய அனுபவங்கள் இளைஞர்களுக்குத் தடையாக இருப்பதில்லை என்றாலும், வகுப்பு அமைப்பின் மூலமாகவும் குடும்பத்தின் மூலமாகவும் தலைமுறைதலைமுறையாக வந்துள்ள காலத்திற்கு ஒவ்வாத கருதுகோள்களாலும், பயனற்ற கருதுகோள்களாலும் பலர் தடங்கல்களைச் சந்திக்கின்றனர். இதுபற்றி ராக்வெல் (Rockwell) என்பவர் குறிப்பிடுகின்றார்:

'உயிரியல் பொருத்தப்பாட்டில் கற்றலின் பங்கு நடைமுறைத் திறம்கொண்டதாய் இருக்கின்றது. பல்வேறு கட்டுப்படுத்துகின்ற காரணிகளுக்கு எதிராக இப்பொருத்தப்பாடு செயலுறுவதன் செறிவு, உயிரியின் மாறுகின்ற தன்மையின் திறத்தினாலும், இடைவிடாது மாறுகின்ற சூழ்நிலையின் தேவைகளுக்கு ஏற்றவாறு தன்னைப் பொருத்தி அமைத்துக்கொள்கின்ற தன்மையினாலும் அறியப்பெறுகின்றது.'[2]

முதிர்ச்சியை நோக்கி வளர்ச்சி

உளவியல் அடிப்படையிலும் சமூகவியல் அடிப்படையிலும் தனியன் தன்னுடைய உந்துகளிலும் அக்கறைகளிலும் நடத்தை வகைகளிலும் ஓரளவு தொடர்ச்சியான பரவலான முதிர்ச்சி நிலையைப் பெற்றால், அவன் இளையோர் பருவத்தினைக் கடந்தவனாகின்றான். அவ்வாறான முதிர்ச்சிக்குரிய வளர்ச்சி படிப்படியாக ஏற்படுகின்றது. ஆதலின், தனிப்பட்ட ஒருவன் எந்தக் காலத்தில் இதனை அடைவான் என்று நிர்ணயிக்க இயலாது. பொதுவாகப் பல தனியன்கள் இம் முதிர்ச்சி நிலையினை அவர்களுடைய பதின் ஆண்டுகளில் அடைகின்றனர். இருப்பினும், பலர் இக்காலத்தில் முதிர்ச்சியினை அடைவ

[2] J. G. Rockwell, 'How We Learn—Some Physiological Factors', 'Mental Health in the Class-room'. Thirteenth Year-book of the Department of Supervisors and Directors of Instruction, National Education Association, Washington, D. C., 1941, p. 88.

தில்லை. மேலும், பலர் சமூக, அற முதிர்ச்சிகளின் உயர்ந்த நிலையினை எப்பொழுதுமே அடைவதில்லை.

முதிர்ச்சியை அடைகின்ற இளையோன்

முன்னைய அதிகாரங்களிலெல்லாம் குழந்தை, குழந்தைப் பருவத்திலிருந்து இளையோர் பருவத்திற்கு வளர்ச்சியடையும்பொழுது, புதிய செயல்கள்கொண்ட உலகிற்குள் புகுகின்றான் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அவன் புதிய சமூகச் சூழ்நிலையினை அடைகின்றான்; அவனுடைய முதிர்ச்சியடைந்துள்ள உயிரியல் தன்மை புதிய வழிகளில் தன்னை உறுதிப்படுத்துகின்றது; புதிய தூண்டுகைகள் தோன்றுகின்றன. நடத்தையைத் தூண்டல் - துலங்கல் கொள்கையின் அடிப்படையின்மூலம் முழுமையாக விளக்கிவிட முடியாது என்று மேலும் குறிப்பிடப்பெற்றது. ஆனால், தனியனை ஒரு முழுமையான இணைப்பு என்ற அடிப்படையில்மட்டுமே விளக்க இயலும் என்று குறிப்பிடப்பெற்றது. இது இளையோனுடைய நிலையில் அவனுடைய உயிரியல் - சமூகவியல் பழமையைச் சேர்ந்திருப்பதோடு இன்றைய நிலையையும் சேர்த்துள்ளது.

இளையோன் தன்னுடைய அடிக்கடி மாறுகின்ற உடலியல் மாறுதல்களுடனும், தன்னுடைய புதிய வகையான உடற் சக்தியுடனும், தன்னுடைய அதிகமான உடல்வலிவின் சக்தியுடனும், தன்னுடைய மற்றவர்களின் தொடர்பினால் வளர்கின்ற தூண்டுகைகளுடனும் கைக் குழந்தைப் பருவத்திலும், குழந்தைப் பருவத்திலும் வெவ்வேறு தூண்டுதல்களுக்குத் தக்கவாறு இயங்கிய அதே உயிரியினைக்கொண்டவன் அல்ல. அவனிடம் ஏற்பட்ட உயிரியல் மாறுதல்களினால் பல்வேறு தூண்டல்களுக்கு அவன் அளித்த துலங்கல்கள், சில ஆண்டுகளுக்கு முன் இருந்தவற்றைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டனவாக உள்ளன. டாம் நான்கு ஆண்டுச் சிறுவனாக இருந்தபொழுது, பக்கத்து வீட்டுக் குழந்தையான மேரியை வேலிமீது ஏறி வந்து தன்னுடன் மணல்மேட்டில் விளையாட வரும்படி அழைப்பான். பதினேழு வயதில், டாம் அவளுடன் தொலைபேசியில் பேச விரும்புவானேயன்றி, வேலிமீது ஏறி நின்று பேசமாட்டான். ஆனால், இப்பொழுது அவளைத் தன்னுடன் காரில் சவாரி செய்யவோ அல்லது விருந்துடன் கூடிய நடனத்திற்கோ அல்லது ஏரியில் நீந்தவோ உடன் வரும்படி அழைப்பான். பின்புற வேலிமீது ஏறி நின்று மணல்மேட்டில் விளையாட அழைப்பதற்கு அவனைத் தூண்டியவைகளும், தொலைபேசிமூலம் காரில் சவாரி செய்யவோ அல்லது உலாவச் செல்லவோ அழைக்கத் தூண்டியவைகளும் மாறுபட்டவைகளாகும். முதிர்ச்சியடைந்துள்ள உயிரியின் அக்கறைகள் விளையாட்டுக் குழந்தையின் அக்கறைகளை மாற்றியுள்ளன.

இவ்வாறு நடத்தையில் மாறுதல்கள், அக்காலத்தில் ஏற்படுகின்ற உயிரியல் மாறுதல்களுக்கு ஏற்ப உண்டாகின்றன. மேலும், டாம், மேரி ஆகியோரது நடத்தைச் செயல்களில் ஏற்படுகின்ற மாறுதல்களுடன் அதிகமான பொறுப்புகளையும், அவர்களுடைய சொந்த வாழ்க்கையிலும் சூழ்நிலையிலும் ஏற்படுகின்ற மாறுதல்கள் கொண்ட நிலைகளுக்கு ஏற்றவாறு போதிய அளவு தங்களைப் பொருத்திக் கொள்ளவேண்டிய அதிகமான தேவைகளையும் உணர்கின்றனர். இதனைப் பாகுபாடு செய்து கூறுவோமேயானால், டாமினுடைய உந்துகளும் மேரியினுடைய உந்துகளும் முக்கிய மாறுதல்களுக்குள்ளாகியிருக்கின்றன என்று கூறலாம். இது அதிகாரம் 13-ல் குறிப்பிடப்பட்ட மாற்றுப் பால் உணர்வின் வளர்ச்சிக்கான சிறந்த சான்றாகும்.

சமூக முதிர்ச்சியினை அடைதல்

முதிர்ச்சி என்பது முழு உடலியல் வளர்ச்சியாகவே கருதப்படுகின்றது. நமது பண்பாட்டில் எங்கும் பரவியுள்ள இளையோர்பற்றிய கருதுகோள், சமூக முதிர்ச்சியினை அடிப்படையாகக்கொண்டதாகும். சமூகத் தொடர்புகளில் முதிர்ந்த நிலையினை அடைந்துள்ள சிறுவன் அல்லது சிறுமியைக் குழந்தைப் பருவத்திற்குமேல் முன்னேற்றமடைந்துள்ளதாகக் கருதலாம். ஒருவன் தன்னுடைய சொந்தத் திறனைக் காட்டிலும் அதிகமான அளவு திறனைக் குழுவினுடைய செயல்களில் கூட்டுறவுடன் செய்கின்ற வளர்ச்சியினைக்கொண்ட அளவே, சமூக வளர்ச்சியினை அளக்கவல்ல நல்ல அளவாகும் என்று கூறப்பட்டுள்ளது. சமூக இயல்பில் முதிர்ச்சியடைகின்ற தனியனைக் குறிக்கின்ற சில நடத்தைச் செயல்கள் இருக்கின்றன. ஆனால், எல்லா முதியோர்களும் இவ்வியல்புகளைக் கொண்டிருப்பதில்லை. ஆதலின், சமூக முதிர்ச்சி என்பது ஒப்பீட்டடிப்படையில் உள்ள ஒரு சொல்லாகும். இளையோன் என்று மாதிரியாகச் சொல்லக்கூடிய ஒருவன், பின்னிளையோர் பருவத்திற்குச் செல்லும்பொழுது, அதிகமான அளவில் இவ்வியல்புகளைக் கொண்டிருப்பான். சமூக இயல்பில் முதிர்ச்சியடைந்தவனுடைய சில இயல்புகள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன :

1. சிக்கலான பிரச்சினைகளிலும் ஆய்வுகளிலும் முதிர்ச்சியடைந்தவனின் முடிவினையே கைக்கொள்வான்.

2. கூட்டுறவுச் செயல்களை நல்ல அடிப்படையிலும், நேர்மையான அடிப்படையிலும் செயற்படுத்த அவனால் முடிகின்றது.

3. அவனுடைய செயல்களுக்காகச் சொந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொள்வான்.

4. நன்ருகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பல நிலைகளில் உள்ள நண்பர்களைக்கொண்டிருப்பான்.

5. அவனுடைய செயல்களிலும் முடிவிலும் சுதந்திரத்தினைக் கடைப்பிடிப்பான். ஆனால், மற்றவர்களது உரிமைகளுக்கும் கருத்துகளுக்கும் மதிப்பு அளிப்பான்.

6. தன்னைப்பற்றிய புறவயமான மனப்பான்மையினைக்கொள்ள அவனால் இயலும்.

7. வெவ்வேருன நிலைகளில் தன்னைப் பொருத்திக்கொள்ள அவனால் இயலும். மாறுதலுக்குட்படுகின்ற பங்கினை அவனால் கைக்கொள்ள முடிகின்றது.

8. நீண்ட காலக் குறிக்கோள்களின் அடிப்படைக்கே உடனடியான குறிக்கோள்களைக் காட்டிலும் அதிக முக்கியத்துவத்தினைத் தந்து சிந்தித்துத் திட்டமிட்டுச் செயலுறுவான்.

9. தன்னுடைய உரையாடலிலும், தன்னுடைய செயல்களிலும் தன்னை மையமாகக்கொண்டவன் அல்ல.

10. தன்னை எவ்வாறு பாதிக்கப்போகின்றது என்ற அடிப்படையில் ஆய்வுகளையும் பிரச்சினைகளையும் எண்ணுமல், குழு நலத்தின் அடிப்படையிலேயே எண்ணுவான்.

அதிகமான பேரவாவினைக்கொண்ட பெற்ருேர், இளையோர்கள் முதிர்ச்சியை நோக்கிச் செல்லும்பொழுது, அவர்களுடைய சமூக முதிர்ச்சியையும் மனவெழுச்சி முதிர்ச்சியையும் பாதிக்கின்ற முக்கிய ஏதுவாக விளங்கலாம். ஆன்டிரு என்பவரின் வரலாறு, எவ்வாறு ஆதிக்கங்கொள்ள விரும்புகின்ற கருத்துகளைக்கொண்டவரும், பேரவாவினைக்கொண்டவருமான ஒரு தந்தை, தன்னுடைய பதினாறு வயது சிறுவனது மனவெழுச்சி வளர்ச்சியையும் சமூக வளர்ச்சியையும் தடை செய்தார் என்பதனை விளக்குவதற்கு ஒரு சான்ருக உள்ளது.

ஆன்டிரு தன்னுடைய வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலேயே தன்னுடைய தாயாரை இழந்துவிட்டான். அவனிடம் அன்பும் பரிவும் காட்டுகின்ற அவனது உறவினர் ஒருவர் அவனை வளர்த்தார். அவர் அவனுடைய ஆரோக்கியம், பழக்கவழக்கங்கள், சொந்தத் தோற்றம் ஆகியவற்றில் அதிகமான அக்கறையினைக் காட்டினர். அவன் மிகவும் திருப்திகரமாக வளர்ந்துவந்தான். அவன் தன்னுடைய பள்ளி வேலையில் சராசரி நிலைக்கு அதிகமாகவே இருந்தான். விளையாட்டுகளில் சிறந்து விளங்கினன். நல்ல நூல்களைப் படித்து மகிழ்ந்தான். கவிதை எழுதுவதை ஒரு விருப்பச் செயலாக வளர்த்துக் கொண்டான்.

ஆன்டிருவின் தந்தை அவனுடைய விளையாட்டுத் திறன்களில் மிகவும் அக்கறை காட்டினார்; இத்துறையில் அதிகமான ஈடுபாடு கொள்ளுமாறு அவனை மிகவும் தூண்டினார். ஆனால், அவனுடைய இலக்கிய அக்கறைகளை அவர் பொறுத்துக்கொள்ளவில்லை. அவன் அதில் ஈடுபடும்பொழுதெல்லாம் அவனைக் கிண்டல் செய்தார். அவர் அவனை விளையாட்டுத் திறனுக்கு அதிக முக்கியத்துவத்தினை அளிக்கின்ற பள்ளிக்கு மாற்றினார். ஆனால், அவனோ பேஸ்பந்திலும் கால்பந்திலும் அதிக முயற்சியினைக்கொள்ளத் தூண்டுதல் பெறாது, வாசித்தலிலும் கவிதையிலும் அதிகமான அக்கறையினைக் காட்டத் துவங்கினான்.

எதிர்பார்த்தபடியே அவனுடைய நடத்தை அவனுடைய தந்தைக்குக் கோபத்தை மூட்டியது; இருவரிடையே பிளவும் ஏற்பட்டது. சிறுவன், தன்னுடைய தந்தை தன்னிடம் அளவுக்கு மீறிய ஆதிக்கம் செலுத்துவதாக எண்ணியதால், வாதிடுபவனாகவும் மறுப்பவனாகவும் எதிர்ப்பவனாகவும் ஆனான். அவனைத் தன்னுடைய தந்தை புரிந்துகொள்ளவில்லை என்றும் குற்றம் சாட்டினான். தன்னுடைய தந்தையிடம்கொண்ட வெறுப்பின் காரணமாக ஏற்பட்ட மன வெழுச்சி நிலையினால், பள்ளி வேலையிலும், விளையாட்டுச் செயல்களிலும், தன்னுடைய விருப்பச் செயல்களிலும் ஆர்வம் குன்றியிருந்தான். அவன் மிக அதிகமான அளவு ஆர்வம் குறைந்தவனாக இருந்ததால், பள்ளியைவிட்டு நின்றுவிடவே எண்ணினான். தந்தையிடமும் மகனிடமும் அதிகமான நேரடி உரையாடல்கள் பல வாரங்கள் நடந்தபின்னர்தான் தந்தை மகனது தேவைகளை உணரத் துவங்கினார். அதன் பின்னர் அவனது தந்தை, தம்முடைய சொந்தப் பேரவாவினைச் சுற்றி மகன் தனது ஆளுமையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கட்டாயப்படுத்தாமல், அவனுடைய சொந்த விருப்பு வெறுப்புகளின் அடிப்படையிலேயே அமைக்கச் சுதந்திரம் அளித்தார்.[8]

அறிவு முதிர்ச்சி

முன்னைய அதிகாரங்கள் எல்லாவற்றிலும் இளையோன் முழுமையாக, ஓர் இணைப்புள்ள ஆளுமையாக வளர்ச்சியடைகின்றான் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அறிவு முதிர்ச்சியினை முதிர்ச்சியின் மற்ற இயல்புகளிலிருந்து பிரிக்க இயலாது. குழந்தைக்கும் முதிர்ச்சியடைந்துள்ள தனியனுக்கும் இடையேயுள்ள முக்கிய வேறுபாடுகளில் ஒன்று, முதிர்ச்சியடைந்தோர்கள் தொலைவில் உள்ள குறிக்

[8] 'Guiding the Adolescent'. Children's Bureau, Federal Security Agency, Publication 22, 1946, pp. 39-40.

கோள்களுக்கும் அல்லது நீண்ட காலக் குறிக்கோள்களுக்கும் எதிர் வினை அளிக்கின்ற வகையேயாகும். முதிர்ச்சியடையாத தனியன், தன்னுடைய குறைந்த கால அளவில் இருக்கின்ற குறிக்கோள் களுக்கும், சுலபமாக அடையக்கூடிய குறிக்கோள்களுக்குமே துலங்குகின்றான். நீண்ட காலப் பயன்களுக்காக அமைக்கப்படுகின்ற எந்தத் திட்டமும் அதனுடைய வேகத்தினை விரைவிலேயே இழந்து குறுகிய காலத்திற்கே இருக்கின்றது. அதிகமாக முதிர்ச்சியடைந் துள்ள தனியனால் நீண்ட காலத்திற்குத் தேவையான நிலையான செயலில் ஈடுபடமுடிகின்றது. மனநிலையில் உயர்ந்திருந்த ஒரு பதி னேழு வயது சிறுவனது தொழில் திட்டம்பற்றிய கீழ்க்கண்ட குறிப்புகள் அறிவு முதிர்ச்சியையும் மனவெழுச்சி முதிர்ச்சியையும்பற்றிச் சிறப் பாக விவரிக்கின்றன:

'நான் பத்து வயதாக இருந்தபொழுது, என் தந்தை இறந்துவிட் டார். ஆனால், நான் கல்லூரிக் கல்வி பெறுகின்ற அளவு பணம் வைத் துச் சென்றிருந்தார். என் தாயார் கடந்த பல ஆண்டுகளாக நான் பல்கலைக்கழகத்தில் மருந்துகள்பற்றிய கலையினைக் கற்கவேண்டும் என்று என்னை உற்சாகப்படுத்திவந்தார்கள்.

இவ்வாண்டு நான் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிப்பேனாத லின், விரைவில் நான் கல்லூரியில் என்ன பாடம் எடுப்பது என்பது பற்றி முடிவுசெய்யவேண்டும். சென்ற வாரம் எங்களுடைய தொழில் அறிவுரையாளரிடம் நீண்ட நேரம் பேசினேன். அவ்வமயம் என் னுடைய தொழில் எதிர்காலம்பற்றி என் தாயார்கொண்டுள்ள பல விருப்பங்களை அவரிடம் குறிப்பிட்டேன். அவர் என்னுடைய அக் கறைகள்பற்றிச் சில கேள்விகள் கேட்டார். நான் இன்னும் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகள் கழிந்தபின்னர் என்ன செய்ய விரும்பு கிறேன் என்றும் வினவினார். இவ்வாறு அப்பொழுது நான் என்ன செய்ய விருப்பங்கொள்கின்றேன் என்பதுபற்றி அதிகமாகச் சிந்திக் கத் துவங்கினேன். நான் சிலவற்றைச் செய்ய விருப்பங்கொண் டிருக்கவில்லை என்பதை அறிந்திருந்ததால், வணிகம், மருத்துவக்கலை, கற்பித்தல் ஆகிய துறைகளுக்குள் தேர்ந்தெடுக்க முற்பட்டேன்.

என்னிடம் வெவ்வேறான பல வேலைகளைப்பற்றிய செய்திகள் கொண்ட நூல்கள் இருந்ததால், அவற்றில் சிலவற்றைப் படிக்க முற் பட்டேன். இவ் வெவ்வேறு தொழில்களுக்குத் தேவையானவை களைப்பற்றி அதிகமாகப் படித்தபின்னர், என்னால் இதனைப்பற்றி முடிவு கொள்ள இயலும் என நினைக்கின்றேன். இருப்பினும், நான் இந்த இலையுதிர் காலத்தில் பல்கலைக்கழகத்திற்குப் போகத் திட்டமிட்டுள் ளேன். அங்குள்ள முற்போக்குக் கலைப் பள்ளியில் சேர எண்ணி யுள்ளேன். என்னுடைய அறிவுரையாளர், என்னுடைய முதலாண்டுப் படிப்பு அடிப்படையானதாதலின், என்னுடைய தேர்ந்தெடுத்தலை முத

லாண்டுக்குப் பின்னர் செய்து கொள்ளலாம் என்று கூறினர். ஆனால், நான் அதனை அதுவரை தள்ளிப்போட விரும்பவில்லை. ஏனெனில், கல்லூரிக்குப் போகின்ற ஒருவன் தான் படிக்கவிருக்கும் துறையினைப்பற்றிய முடிவான எண்ணத்தைக் கொண்டிருக்கவேண்டும் என்று நான் நினைக்கின்றேன்.'[4]

அறிவு முதிர்ச்சியினை உருவாக்குபவை எவை என்பதுபற்றிய பிரச்சினையைக் குறித்து 56 கல்லூரி ஆசிரியர்கள் ஓர் ஆய்வில், அவர்கள் கருதும் அறிவு முதிர்ச்சியில் உள்ள பண்புக் கூறுகள் என்று சிலவற்றை வரிசைப்படுத்தித் தந்தனர்.[5] அளிக்கப்பட்ட பண்புக் கூறுகள் அட்டவணை 18-1-ல் தரப்பட்டுள்ளன. இப்பண்புக் கூறுகளை ஆய்வு செய்தால், கல்லூரி ஆசிரியர்கள், பகுத்தறிவினைக்கொண்ட முடிவு, திறனாய்வு மனப்பான்மைகள், சுதந்திரச் சிந்தனை, அறிவினைப் பயன்படுத்தும் திறன், அறிவில் முதிர்ச்சியடைந்த தனியன் என்று ஒருவரைப்பற்றிக் கூறக்கூடிய இயல்புகளையே வலியுறுத்தியதாக அறிகின்றோம்.

அட்டவணை—18-1

அறிவு முதிர்ச்சியை உருவாக்குவதாக வரிசைப்படுத்தப்பட்ட பண்புக்கூறுகள் (எக்கெர்ட் அளித்தது).

மனவெழுச்சி நிலையின் அடிப்படையில்லாது பகுத்தறிவுகொண்ட முடிவுகளைக் கொள்கிறான்.

தொடர்புகளைக் காண்பதற்கும், பொருள்களின் உடன்தொடர்பினை அறியவும் முடிகின்றது.

பிரச்சினைகளைப்பற்றித் திறனாய்வு மனப்பான்மையினையும், மதிப்பிடுகின்ற மனப்பான்மையினையும் கொள்கின்றான்.

தன்னுடைய சிந்தனையிலும் வேலையிலும் சுதந்திரம் கொண்டுள்ளான்.

மற்ற மாணவர்களைக் காட்டிலும் அதிகமாகத் துறையில் அனுபவத்தினையும் அறிவினையும்கொண்டுள்ளான்.

அறிவு வேலையில் முன்னிற்கின்றான். பிரச்சினைகளை அளிக்கவும், நுண்ணறிவுடைய கேள்விகளைக் கேட்கவும் முற்படுகிறான்.

[4] K. C. Garrison, 'Growth and Development'. New York: Longmans, Green and Co., 1952, p 506.

[5] R. E. Eckert, 'Intellectual Maturity', Journal of Higher Education, 1934, Vol. 5, pp. 478-484.

அவனுடைய அறிவைப் பயன்படுத்தவும், தனித்த நிகழ்ச்சிகளில் பொதுக் கருத்துகளைப் பயன்படுத்தவும் திறன்கொண்டிருக்கிறான்.

பரந்த மனங்கொண்டவனாய்ப் புதிய கருத்துகளைக்கொள்ள விருப்பமும் திறனும்கொள்கிறான்.

புதிய உண்மைகளையும் கருத்துகளையும் கொள்வதற்குத் தயாராய் இருக்கின்றான்.

பயன் மதிப்புகளைப்பற்றிய உணர்வினையும், மெய்யுணர்வுக் கருத்தினையும்கொண்டிருக்கிறான்.

உட்காட்சியினைக் கொண்டிருக்கிறான். அடிப்படைப் பிரச்சினைகளை முக்கியமற்ற பிரச்சினைகளிலிருந்து பிரித்துணர்கின்றான். பிரச்சினைகளின் முக்கியத்துவத்தையும் உணர்கின்றான்.

மற்றவர்களது வேலைபற்றியும், கருத்துகள்பற்றியும் பொறுத்துக் கொள்ளும் மனப்பான்மையினைக்கொண்டிருக்கின்றான்.

அதிகமான சான்றுகள் கிடைக்காதவரை முடிவுசெய்வதைத் தள்ளிப் போடுவான்.

இளையோர்களும் தொழில் உலகமும்

பள்ளியிலிருந்து தொழிலுக்கு நிலைமாறுதல்

ஒவ்வோர் ஆண்டும் ஏறத்தாழ ஒரு மில்லியன் சிறுவர்களும் சிறுமியர்களும் முழுநேர வேலையில் புகுகின்றனர். ஆனால், அவர்களில் பலருக்குப் பள்ளி, இல்ல உறவுகளிலிருந்து தொழிற்சாலை, அலுவலகம், கடை முதலிய இடங்களில் தொழிலுக்குச் செல்லும் திடீர் மாற்றமாக இருக்கின்றது. ஒரு நாள் அவர்கள் தங்களுடைய ஒப்பார்களுடைய சூழ்நிலையில் அல்லது இல்லத்திலுள்ள பெற்றோர்களால் காப்பாற்றப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கின்றார்கள். ஆனால், மறுநாள் அவர்கள் சொந்தமாக இருக்கவேண்டிய சூழ்நிலையும், பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவேண்டிய சூழ்நிலையும், அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சில பணிகளைச் செய்யவேண்டிய சூழ்நிலையும் உள்ள தொழிலில் இருப்பதை உணர்கிறார்கள். அவர்களுடைய பணி, நாம் பொறியியல் என்று அழைக்கின்ற வணிகப் பேருலகிலும், இயந்திரத் தொழிலுலகிலும் தங்களைப் பொருத்தி அமைத்துக்கொள்வதாக இருக்கின்றது.

ஒரு தனியனது வாழ்க்கையில் முதல் வேலை என்பது ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். அது அவனுடைய அடைவிற்கு வாய்ப்பினை அளிப்பதோடு, அவனுடைய சுதந்திரத்தினை விரிவுபடுத்திக்கொள்ளவும் வாய்ப்பினை அளிக்கின்றது. தவறான துறையில் துவங்குதல்;

வேலையிலிருந்து நீக்கப்படுதல், வேலை மிகக் கடினமாயிருத்தல், முதலாளியிடம் அல்லது மேற்பார்வையாளரிடம் தகராறு உண்டாதல் ஆகியவைகளெல்லாம் வேலைக்குச் செல்லும் இளைஞனுக்கு ஏற்படக்கூடிய மனமுறிவு அனுபவங்களாகும். இவை அவனுடைய தொழில் வாழ்க்கையைப் பாதிக்கும் நிலைகளாகவும் செயற்படக் கூடும். தொழில் உலகம் அவனுடைய வாழ்க்கைச் செயல்களில் முக்கியப் பங்கினை வகிக்குமாதலின், வேலைக்குப் போகும் இளைஞன் திருப்திகரமான தொழில் பொருத்தப்பாடுகளைக்கொள்வது மிக அவசியமாகும். பள்ளியிலிருந்து வேலைக்கு நிலைமாறுதல் திருப்திகரமாக இருக்கவேண்டுமானால், இளைஞர்களது தொழில் தேவைகளை உண்மையான நிலையில் அணுகுதல் மிக முக்கியமானதொன்றாகும். ஜீன் என்பவளது வரலாறு உயர்நிலைப் பள்ளியிலிருந்து பட்டம் பெறுதல், ஒருவருக்கு வேலை கிடைக்கும் என்பதற்கான கட்டாய உறுதிப்பாட்டையோ, திருப்திகரமான தொழில் பொருத்தப்பாட்டினைப் பெறுவாள் என்ற உறுதிப்பாட்டையோ கொண்டிருக்கவில்லை என்று காட்டுகின்றது.

'ஜீன் எனும் பதினெட்டு வயதான கவர்ச்சியான சிறுமி, நுண்ணறிவும், அழகும், இசைத்திறனும்கொண்டவளாக இருந்தாள். அவள் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்ததோடு, கல்லூரியிலும் ஆறு மாதங்கள் கற்றிருந்தாள். கல்லூரிக்குச் செல்லுமுன் அவளுக்கு விற்பனை வேலையில் இரண்டு மாத அனுபவம் இருந்தது. அவளுடைய பெற்றோர்கள் அவளுடைய கல்விக்கு அனுமதியும், பொருளாதார உதவியும் அளித்தனர்.

இருப்பினும், ஜீன் எத்துறைக்குச் செல்வது என்பதைப்பற்றி முடிவுசெய்யமுடியாத இக்கட்டான நிலையில் இருந்தாள். அவள் விற்பனை வேலையில் பெற்றிருந்த சிறிய அனுபவத்தினால் அத்துறையை விரும்பவில்லை. அவள் கல்லூரியில் பாடமாக எடுத்திருந்த இசையைப்பற்றியும் திருப்தியின்றி யிருந்தாள். ஏனெனில், அதனை வைத்துக்கொண்டு ஒரு தொழிலினை அமைத்துக்கொள்ள இயலாது என எண்ணினாள். அவள் கல்லூரிக்குத் திரும்பிச் சென்று வணிகப் பாடத்தைப் படிக்கவும் விரும்பவில்லை. அவள் ஒரு கடையில் சனிக்கிழமை வேலைக்குமட்டும் சென்று நேரத்தைக் கழித்துவந்தாள். அவள் எந்தப் பாதையில் செல்லவேண்டும் என்று யாராவது அவளுக்கு அறிவுரை அளித்திருந்தால், அதனை மிகவும் வரவேற்றிருப்பாள்'[6].

[6] 'Hunting A Career : A Study of Out-of-School Youth in Louisville, Kentucky,' United States Department of Labor Bulletin, No. 115, 1949, p. 90.

தொழிலில் இளையோர்கள்

அமெரிக்க நாடுகளிலும், மற்ற வெவ்வேறான சமூகப் பொருளாதாரக் குழுக்களிலும் இளையோர்களது வாழ்க்கையில் தொழில் கொள்கின்ற பங்கு துறைக்குத் துறை பெருத்த அளவில் வேறுபாடுகள் கொண்டுள்ளது. மேலும், இளைஞர்களது தொழில் அந்தஸ்தும் பல பொதுவான பொருளாதார நிலைகளினால் பாதிக்கப்படுகின்றது. இரண்டாவது உலகப் போருக்கு முன்னர் இருந்த பணவீக்க ஆண்டுகளில் 14-லிருந்து 17 ஆண்டுகள்வரையுள்ள இளையோர்கள் வேலைக்குச் சென்ற அளவு மிகக் குறைவாக இருந்தது. போர் நடந்த ஆண்டுகளிலும், போருக்குப் பின்னைய ஆண்டுகளிலும் இருந்த வேலை வாய்ப்புகள் இந்நிலையினை முழுமையாக மாற்றிவிட்டன. போருக்கு முன்னிருந்த ஆண்டுகளில் இருந்ததைக்காட்டிலும் வேலைத்தேவைகள் போருக்குப் பின்னிருந்த ஆண்டுகளில் மூன்று மடங்காகப் பெருகியுள்ளன. 1950ஆம் ஆண்டில் வேலையில்லாதவர்களில் மிகச் சிறிய அளவு இளையோர்களையே காணலாம். இதனைப் படம் 18—1-ல் காணலாம்.[7]



1950-ல் 14-லிருந்து 19 ஆண்டுகள்வரை வயது உள்ள சிறுவர் சிறுமியர்களின் தொழில் அந்தஸ்து.

இளையோர்களின் தொழில்களும், அவர்கள் செய்கின்ற பல்வேறு விதமான வேலைகளும் பல ஏதுக்களின் காரணமாகத் தோன்றியவைகளாகும். நகரங்களில் வேலை என்பது சில வீட்டு வேலைகளில் ஒத்துழைப்பதைமட்டுமே குறிக்கலாம். அல்லது சில வயது நிலைகளில் தனியன்கள் கைக்கொள்கின்ற முழுநேர வேலையினையோ அல்லது பகுதிநேர வேலையினையோ குறிக்கலாம். விவசாயத்தில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை குறைந்ததாலும், இல்லங்களில் மனித உழைப்பின்றி வேலைசெய்யும் இயந்திரங்களைப் பயன்படுத்தியதாலும் இளை

[7] 'Schools and the 1950 Census', National Education Association Research Bulletin, 1951, Vol. 29, No. 4, p. 156,

யோர்கள் வேலைசெய்வதற்குரிய வாய்ப்புகள் வெகுவாகக் குறைந்துள்ளன. இளையோர்களுக்கு நீண்ட நேரத்திற்கான கடின உழைப்பைத் தருதல் இசைவானது அன்று எனப் பலர் அதிகமாக உணர்கின்ற அதே நேரத்தில், பல இளையோர்களது பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும், தனியன் வாழ்க்கைக்குத் தயார் செய்துகொள்வதில் ஒரு பகுதியாக வேலை அனுபவத்தைக் கொள்ளவேண்டிய அவசியத்தையும் உணர்கின்றனர். பகுதிநேர வேலை அல்லது முழுநேர வேலையினைத் தேடுகின்ற பல இளையோர்களைத் தூண்டிவிடுகின்ற முக்கிய ஊக்கி பொருளாதாரத் தேவையேயாகும். ஒரு குடும்பத்தினுடைய வருவாய் மிகக் குறைவாக இருப்பதாலும், அக்குடும்பம் ஒரு வீட்டினை வாங்குவதற்கும், பல குழந்தைகளை வளர்ப்பதற்கும் பொறுப்புகள் அதிகமாகப் பெற்றிருப்பதாலும், அக்குடும்பத்திலுள்ள சிறுவர்களும் சிறுமியர்களும் தாங்கள் செலவிடுவதற்கான பணத்தைத் தாங்களே சம்பாதிக்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகின்றனர். இதற்கு மாறாகப் பொருளாதாரத் தேவை என்பதையே உணராத ஒரு குடும்பம், அவர்களுடைய மகன் ஒரு பகுதி நேர வேலையினைக் கைக்கொள்வதைக்கூட ஆதரிக்காது. ஆனால், இவன் ஒரு கடையில் எழுத்தர் வேலையினை ஏற்றுக்கொள்வதன்மூலம் அப்பொருளாதாரத் தேவையினை மிக அவசியமாகப் பெறவேண்டிய ஒரு சிறுவனது வாய்ப்பினைக் கவர்ந்துகொள்கிறான் என்பது உண்மையேயாகும். ஆனால், ஒரு சிறுவனது கல்வித் தேவையும், உளவியல் தேவையும் மற்றவனது பொருளாதாரத் தேவையினைக் காட்டிலும் அதிகமானது என்பதை மறக்கலாகாது. இளையோர் சிறுவர் சிறுமியர்களின் கல்வியிலும் நல்வாழ்விலும் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கு இது ஓர் உண்மையான பிரச்சினையாக உள்ளது.

வேலையினைப்பற்றியும் தொழிலினைப்பற்றியும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் கொள்கின்ற மனப்பான்மைகள்

உயர்நிலைப் பள்ளி மாணவர்களைப்பற்றிய ஆய்வுகள், அவர்கள் செய்ய விரும்புகின்ற வேலைவகைகளைப்பற்றிய அவாக்களைமட்டும் கொண்டிருப்பதோடு, வேலை நிலையினைப்பற்றிய வெவ்வேறான நிலைகளைக் குறித்தும் தெளிவான மனப்பான்மைகள் கொண்டிருப்பதாகக் காட்டுகின்றன. இதனை பெய்ன் (Payne) என்பவர் ஜியார்ஜியா பகுதியைச் சார்ந்த கிராம, நகர, உயர்நிலைப் பள்ளி மாணவர்களைப்பற்றி அண்மையில் நடத்திய ஆய்விலிருந்து அறிகின்றோம்.[8] கிராமப் பகுதிகளிலிருந்து வந்த மாணவர்கள் நகரப் பகுதி மாணவர்களைக் காட்டிலும் அதிகமாகத் திருமணத்திற்குப் பின்னர் அவர்களது மனைவியர்

[8] R. Payne, Unpublished data on file in the Department of Sociology, University of Georgia, 1955.



படம் 18·2

உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் கீழ்க்கண்ட கூற்றிற்கு அளித்த துலங்கல்கள்: 'இங்கு மூன்று விதமான வேலைகள் இருக்கின்றன. நான் இவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது என் கையில் இருந்தால், நான் தேர்ந்தெடுக்கும் வேலை..................'

A. மிகச் சிறிய வருவாய் என்றாலும், வேலை நிச்சயமாய்த் தொடர்ந்து இருக்கும்.

B. நல்ல வருவாயுள்ள வேலை என்றாலும், என்னை வேலையில் தொடர்ந்து வைத்திருப்பதும் வைக்காதிருப்பதும் 50-50 விகிதத்தில் உள்ளன.

C. மிக உயர்ந்த வருவாயுள்ள வேலை என்றாலும், நான் என்னுடைய திறமையை நிரூபித்தால்தான் வேலைதொடர்ந்து இருக்கும். நான் எனது திறமையை நிரூபிக்க இயலவில்லையெனில், வேலை முழுவதையும் இழக்க நேரிடும்.

D. துலங்கல் இல்லை.

வேலைக்குச் செல்லுவதை விரும்பவில்லை. மிச்சிகனில் (Michigan) நடந்த ஓர் ஆய்வின் முடிவுகள் உயர்நிலைப் பள்ளி மாணவர்களில் 15 சதவீதத்தினர் மிக உயர்ந்த வருவாயுடைய வேலைகள்மீது அவாக் கொண்டிருப்பதாகவும், அவர்கள் தங்களுடைய திறமையை நிரூபிக்க இயலாவிடில் வேலை முழுவதையும் இழந்துவிடுவதாக இருப்பினும், அம்மிக உயர்ந்த வருவாயுடைய வேலைகளையே நாடுவதாகவும் காட்டுகின்றன.[9] கீழான வருவாயாக இருப்பினும், நிலையாக இருக்கின்ற வேலையினையே நாடுவதாக மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் குறிப்பிட்டனர். படம் 18—2-ல் காட்டப்படுகின்ற முடிவுகள், சிறுமியர்களைக் காட்டிலும் அதிகமாகச் சிறுவர்கள் அதிக வருவாயுள்ள வேலையை மிகத் துணிச்சலுடன் எடுத்துக்கொள்கின்ற தன்மையினைக் காட்டுகின்றன. இதிலிருந்து சிறுமியர்கள் தங்களுடைய வேலைகள் பற்றியும், பொருளாதாரம் பற்றியும் மாறுதல்கள் விரும்பாத போக்கினைக் கொண்டிருப்பதை அறிகின்றோம்.

மாணவர்கள் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருப்பதுபற்றிக் கொள்கின்ற மனப்பான்மைகள் அவர்களுடைய இல்ல, சமுதாயப் பின்னணிகளைப் பொறுத்து மாறுபடுகின்றன. இருப்பினும், இம் மனப்பான்மைகள் அவர்களுடைய தொழில் பொருத்தப்பாடுகளின் அடிப்படைகளில் விளைவதாகும். மிச்சிகன் ஆய்வில், டெட்ராய்ட்டில் உள்ள மாணவர்களின் மனப்பான்மைகள் பெறப்பட்டு, மற்றப் பகுதிகளிலுள்ள மாணவர்களின் மனப்பான்மைகளுடன் ஒப்பிடப்பட்டதில், சில சுவையான ஒப்புமைகள் பெறப்பட்டன. படம் 18-3-ல் அளிக்கப்பட்டுள்ள முடிவுகளை விளக்கிப் பொருள் கூறுமுன், டெட்ராய்ட் கார் தயாரிக்கின்ற நகரம் என்றும், அங்குத் தொழிற்சங்கங்கள் வாழ்க்கையின் முக்கியப் பகுதிகள் அனைத்திலும் முக்கியப் பங்கு கொண்டுள்ளன என்றும் உணர்தல் வேண்டும். எல்லாச் சமுதாயங்களிலிருந்தும் வந்த சிறுவர் சிறுமியர்களில் 60 சதவீதத்தினருக்குமேல் தாங்கள் விரும்பினால்மட்டுமே தொழிற்சங்கத்தில் சேருகின்ற சுதந்திரம் உள்ள வேலையினையே விரும்புவதாக முடிவுகள் காட்டுகின்றன. சிறுவர்களைக் காட்டிலும் அதிகமான அளவில் சிறுமியர்கள் டெட்ராய்ட் பகுதியில் தொழிற்சங்க உறுப்பினராதலை இசைவானதாகக் கருதினர் என்ற சுவையான செய்தியும் அறிந்துகொள்ளப்பெற்றது.[10] இவைபோன்ற முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு பரந்த பொதுமைகளைக் கொள்ளலாகாது என்று முன்னரே கூறப்பெற்றது. அதிகமான தொழிலாளிகள் தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்ற பெரிய நகரத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிச் சிறுவர்களும் சிறுமியர்

[9] 'Youth and the World of Work'. Social Research Service, Michigan State College, 1949, p. 11.

[10] Ibid., pp. 44-45.

களும் தொழிற் சங்க உறுப்பினராதல் பற்றி இசைவான மனப்பான்மையையே கொண்டிருக்கின்றார்கள் என்று இம் முடிவுகளிலிருந்து தோன்றுகிறது.



படம் 18-3

சங்க உறுப்பினர் ஆதல்பற்றி வெவ்வேறு வகையான சமுதாயங்களிலிருந்து வருகின்ற மாணவர்களது கருத்துகளை ஒப்பிடல்.

ஏன் இளைஞர்கள் வேலையில் தோல்வியடைகின்றார்கள்?

இளைஞர்கள் பள்ளியினைவிட்டு வெளியே வரும்பொழுது, அவர்கள் பொதுவாகச் சந்திக்கின்ற முதல் பணி வேலை தேடுதலேயாகும்.

வேலை கிடைத்தவுடன் அவ்வேலை நிலைத்திருக்கவேண்டிய பிரச்சினையைச் சிந்திக்கின்றார்கள் அல்லது அதைக்காட்டிலும் சிறந்த வேலையைப் பெற முயல்கின்றனர். நியூயார்க்கு அரசாங்கத் தொழில் துறை இவ்விரு பிரச்சினைகளைப்பற்றிய செய்திகளையும் சேகரித்து அளித்துள்ளது.[11] இளைஞர்கள் வேலை கிடைப்பதில் தோல்வியடைவதற்குரிய காரணங்களாகக் கீழ்க்கண்டவை தரப்பட்டன: மனப்பான்மைகளும் நடத்தையும், தோற்றம், நியாயமற்ற சம்பளக் கோரிக்கைகள், போதிய அளவு பயிற்சியின்மை, நண்பர்களிடம் அல்லது உறவினர்களிடம் வேலை தேடுதல், அமைதியற்ற தன்மை, வேலைக்குள் நுழைவதற்குரிய தேவைகளுக்கு ஏற்றவாறு பொருத்திக்கொள்வதற்கு விருப்பமின்மை, பள்ளி நிலைகளிலிருந்து வணிக நிலைகளுக்கு மாற்றிக் கொள்ள விருப்பமின்மை, நம்பிக்கைக்குகந்தவன் அல்ல என்ற பெயரினைப் பெறுதல், ஏதாவது ஓர் உடற்குறையினைப்பற்றிய அதிகமான உணர்வினைக் கொண்டிருத்தல், தொழில்துறைக் குறிப்புகளில் இருந்த சில தனியாள் வரலாறுகள் இந்நிலைகள் அல்லது சில ஏதுக்கள் எவ்வாறு செயலுறுகின்றன என்று காட்டுகின்றன.

'சான்டிரா இஸட்' என்ற பதினாறு வயதுச் சிறுமி முதலில் நியூயார்க்கு நகரத் தொழில் துறையிடம் வேலைக்காக மனுப்போட்டாள். அவளுடைய பெற்றோர்கள் கலிஃபோர்னியாவுக்குச் சென்றுவிட்டதாலும், அவள் தன்னுடைய சகோதரியுடன் வாழ்ந்து வருவதாலும் உடனடியாக வேலை தேவை எனக் குறிப்பிட்டிருந்தாள். பதினெட்டு வயதுக்குக் குறைவான சிறுமியர்களுக்கு வேலை கிடைப்பது மிகவும் கடினமாயிருந்ததால், அவளிடம் பல தொடர்புகள் ஏற்படுத்தியபின்னரே ஒரு தொழிலகத்துக்கு அனுப்பப்பட்டாள்.

அவள் தொழிலகத்திற்குச் சென்று முதலாளியினைக் கண்டு அவளுடைய வருவாய் பற்றி அறிந்தாள். அவ்வாறான குறைவான வருவாய்க்குத் தன்னை வேலைசெய்யாதிருக்கும்படி நண்பர்கள் கூறியதனால், தனக்கு அதில் விருப்பமில்லை என்று அவள் கூறிவிட்டாள்.

முதலாளி அறிவுரையாளரிடம் இந்தச் சிறுமியை எக்காரணம் கொண்டும் இனி வேலைக்கு வைத்துக்கொள்ளமாட்டேன் என்று கூறிவிட்டார். அவளுடைய மனப்பான்மையும் நடத்தையும் மிகவும் திருப்தியற்றுக் காணப்படவே, முதலாளி அவளைத் தன்னுடைய தொழிலகத்திற்கு எப்பொழுதும் அனுப்பவேண்டாம் என்று கூறினார்.

'ஹார்வி, பி. எனும் பதினெட்டு வயதான, உயர்நிலைப் பள்ளியில் பட்டம் பெற்ற சிறுவன் ஒரு பொதுப் பாடத்தைப் படித்திருந்ததோடு

[11] New York State Employment Service, 'Why Young People Fail to Get and Hold Jobs'. New York: Department of Labor, Division of Placement and Unemployment Insurance.

வீட்டுச் சமையல் பாத்திரங்களை இல்லங்களில் விற்பனை செய்வதற் குரிய விற்பனையாளர் அனுபவமும் நான்கு மாதங்களுக்குப் பெற்றிருந் தான். ஃபர் கோட்டு (fur-coat) எனும் குளிர் மேலங்கியை தயாரிக் கின்ற தொழிற்சாலையில் வேலை செய்து சிறு அனுபவத்தையும் பெற் றிருந்தான். அவன் விற்பனை செய்யும் தொழிலில் சிபார்சு செய்யும் விற்பனையைக் காட்டிலும் மொத்த விற்பனையையே விரும்பினுன். ஆனுல், அதில் அனுபவமோ, பொருளைப்பற்றிய அறிவோ இல்லாம லிருந்தான். ஹார்வியிடம், தான் மொத்த விற்பனை செய்ய விரும்பு கின்ற பொருள்பற்றி அறிந்துகொள்வதற்கு அவன் கடையில் விற்பனை செய்கின்ற வேலையைச் செய்யவேண்டும் என்று கூறப்பட்டது. ஹார்வி இந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. அவனுடைய நான்கு மாத விற்பனை அனுபவத்தைக்கொண்டு மொத்த விற்பனை வேலையைச் செய்யலாம் என்று எண்ணினுன். அவன் கடை விற்பனை போன்ற சில்லறை வேலைகளில் ஈடுபட விரும்பவில்லை என்று வற்புறுத்தினுன். ஹார்வி துவக்க வேலையினைச் செய்யக் கட்டாயமாக மறுத்துரைத்ததனுல் அவனை அவ்வேலைக்கு அனுப்ப முடியவில்லை. விற்பனை வேலை செய்ய விரும்புகின்றவர் துவக்கத்தில் செய்ய வேண் டிய வேலைகள் அனைத்தையும் அவன் செய்யத் தயாராக இருக்கும் வரை, அவன் விரும்புகின்ற மொத்த விற்பனை வேலைக்கு அவனை அறிவுரை அளிப்பவரால் அனுப்ப வியலாது.'

நியூயார்க் அரசாங்கத் தொழில் துறையினர் இளைஞர்கள் வேலை யில் நிலைத்திருக்க முடியாத நிலைக்குரிய காரணங்கள் என்று வரிசைப் படுத்தியவை: நியாயமற்ற சம்பளக் கோரிக்கைகள், வேலைக்குச் செல்லுவதற்கான தேவைகளுக்கு ஏற்றவாறு தன்னைப் பொருத்திக் கொள்ள விருப்பமின்மையும் அமைதியின்மையும், வராத நாட்களை முதலாளியிடம் தெரிவிக்கத் தவறுதல், மற்றவர்களுடன் நன்ருகப் பழக இயலாமை, பொறுப்பில்லாத தன்மை, வேலையினைப்பற்றிய மனப்பான்மையும் நடத்தையும், தவருகப் பிரதி செய்தல். அக் குறிப்பு களிலிருந்து சில தனியாள் வரலாறுகள் இவ்வேதுக்களும் நிலைகளும் எவ்வாறு செயலுறுகின்றன என்பதை விளக்குகின்றன.

'எல். என். என்ற 19 வயது சிறுவன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், தன்னுடைய ஜூனியர் ஆண்டிற்குப் பின் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை விட்டுவிட்டான். ஏனெனில், அவனுக்கு பள்ளி வேலையில் விருப்பமில்லை. அவன் சுத்தமானவனுயும் அழகாகப் பேசக் கூடியவனுகவும் இருந்ததால் அவனுல் பல வேலைகளைப்பெற முடிந் தது. ஆனுல், எந்த வேலையிலும் அவன் அதிக நாள் தங்கவில்லை. அவனுடைய முக்கிய அக்கறையெல்லாம் அவனுல் ஊர்சுற்றிப் பார்க்க முடிகின்ற வேலையைப் பெறுவதாகவே இருந்தது. இப்பொழுது அவன் ஃப்ளாரிடாவில் வேலை பெற ஆவலாய் இருந்தான். ஏனெனில்,

தெற்கு நாடுகளுக்கு அவன் சென்றதில்லை. ஆனால், அவன் வேலையைப் பெறுவதில் காட்டுகின்ற அக்கறையை வேலையில் நிலைத்து இருப்பதில் காட்டுவதில்லை. இந்த மனப்பான்மையின் காரணமாக, வேலை பெறுவது மிகவும் கடினமாக இருந்தது என்று ஒத்துக்கொண்டான். அவனுடைய முதலாளியிடம் அவன் வேலை செய்த வரலாற்றினைக் கூறியவுடன், முதலாளி அவனை வைத்துக்கொள்ள விரும்புவதில்லை. ஒரு முதலாளி கூறியது போன்று வேலையில் நிலைத்திருக்காதவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குரிய செலவு வீணாகின்றதேயொழிய நம்புவதற்குகந்தவர்களாக அவர்கள் இல்லை.

எல். என். ஒரு தொழில் துறையினைத் தேர்ந்தெடுத்து அதில் நிலையாக இருக்கவில்லை என்றால், அவனுக்கு இசைவில்லாத சிறு வேலைகள்தாம் கிடைக்கும். அவன் நிலையான வேலையும், இசைவான வேலையும் எப்பொழுதும் கிடைக்காத நிலையினை அடைந்துவிடுவான்.

'பதினெட்டு வயதான டொனால்டு, டி.., என்பவன் ஒத்துழைப்பவனாகவும், சுத்தமானவனாகவும் தீவிர உழைப்பைத் தருபவனாகவும் இருந்தான். அவனுடைய தந்தை கார் பழுதுபார்க்கும் ஒரு தொழிலகத்தினை வைத்திருந்தார். டொனால்ட், எட்டாவது படிவத்தை அடையும்வரை அதில் பகுதி நேரம் வேலை செய்வதன்மூலமும் கோடைக்காலங்களில் பணியாற்றுவதன்மூலமும் அனுபவம் பெற்றிருந்தான். பின்பு அவன் பள்ளியை விட்டுவிட்டுத் தொழிலகத்தில் பணியாற்றுபவருக்கு உதவி செய்பவராக ஓர் ஆண்டு பணியாற்றினான். நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியிருந்ததாலும் குறைந்த வருவாயே இருந்ததாலும் அவ்வேலையினை விட்டுவிட்டான். இம் முதலாளியிடம் பெற்ற ஒரு சிறந்த நற்சான்றிதழ் காரணமாக, மற்றொரு கார் தொழிலகத்தில் நல்ல வருவாயுடன் வேலை கிடைக்கப்பெற்றான். அந்தப் புதிய இடத்தின் முதலாளி சில நாட்களிலேயே தான் விரும்பியவாறே தனக்கு ஒரு தொழிலாளி கிடைத்திருப்பதாகக் கூறினான். அங்கு வருகின்ற வாடிக்கைக்காரர்களும் அவனை மிகவும் விரும்பி, அவனுக்குக் கிடைக்கின்ற வருவாய்க்குமேல் சிறு பணமும் தந்தனர். மூன்று மாதங்கள் அங்கு வேலை செய்த பின்னர் ஒரு நாள் வேலையிலிருந்து நீக்கப்பட்டான்.

ஒரு நாள் அவன் தனியாக இருந்தபொழுது பழுதுபார்க்கும் தொழிலகத்தின் சுவரின்மீது ஒரு மோட்டார் சைக்கிளை மோதி சேதப்படுத்தியதோடு கையையும் காயப்படுத்திக்கொண்டான். மோட்டார் சைக்கிளை ஓட்ட விரும்பிய அவனுடைய ஆவலை நிறைவேற்ற, அதனை எடுத்துக்கொண்டு அருகில் உள்ள பெட்ரோல் பிடிக்கும் நிலையத்திற்குச் சென்றான். இதனாலேயே அவனுடைய வேலையை இழந்தான்.

இளைஞர்களும் திருமணமும்

இப் பருவ காலத்தில் பால் உந்து அதனுடைய உச்ச நிலையை அடைவதாகக் கூறுவதற்குச் சான்றுகள் உள்ளன. இருப்பினும், பொறியியலின் விளைவுகளாலும் அதிகமான அளவில் பள்ளிக்குச் செல்லவேண்டிய தேவைகள் ஏற்பட்டதனாலும் இளையோர் பருவ காலமும் இளமைக் காலமும் நீண்டுள்ளன. இதனால் இளையோரால் முன்னிளையோர் பருவகாலத்தில் குடும்ப வாழ்க்கையின் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நம்முடைய சமூக, அற அமைப்புகளில் சிறப்பான விளைவுகளை இது உண்டாக்கியுள்ளது. இருந்தாலும் பல பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமயப் பணியாளர்கள் ஆகிய மற்றவர்கள் இம் மாறுபட்ட நிலைகளைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. இன்றைய தலைமுறையின் பால் வாழ்க்கையினையும் பழக்கங்களையும் இது வெகுவாகப் பாதித்துள்ளது. சில தலைமுறைகளுக்கு முன்னர் வெகுவாகக் கண்டிக்கப்பட்ட பழக்கங்கள் யாவும் இன்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இதன் தொடர்பில் ஒரு ஜனநாயகச் சமூகம் கீழ்க்கண்ட இரண்டு தேர்ந்தெடுப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகியுள்ளதுபோல் தோன்றுகின்றது. ஒன்று, நாம் இப் பருவ காலத்தில் பால் உந்து மிகவும் சக்தி வாய்ந்ததாக உள்ளது என்பதனையும் இளையோர்களது சமூக நடவடிக்கைகளைத் தடுப்பதற்குப் பதிலாக வழிகாட்டலைக் கைக்கொள்ள வேண்டும் என்பதனையும் இவ்வாறான திட்டம் இல்லாவிடில் அதிகமான பால் நடவடிக்கைகளை இளையோர்கள் கைக்கொள்வார்கள் என்பதனையும் உணர்தல் வேண்டும். அல்லது விரைவில் திருமணங்கள் ஏற்படுவதற்கு உண்டான வழிகளைச் செய்தல் வேண்டும். பின் குறிப்பிடப்பெற்ற நிலை மிகச் சிறந்ததொன்றாகப் பலருக்குத் தோன்றினாலும், இன்றைய சமூக அமைப்பின் அடிப்படையில் அதனைப் பின்பற்றுவது சாத்தியமில்லாததாகும். நம்முடைய மணப்பெண்களில் மூன்றில் ஒரு பங்கினரும் முதல் குழந்தையை ஈன்றெடுக்கின்ற தாய்மார்களில் நான்கில் ஒரு பங்கினரும் இருபது வயதுக்குக் கீழானவர்களாய் இருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். பெற்றோர் நிலைக்குத் தயாராக்குவதில் திருமணம், குடும்ப உறவு ஆகிய பிரச்சினைகளுக்குத் தனித்த கவனம் அளிக்க வேண்டிய தேவையினை இவ்வுண்மை உணர்த்துகின்றது.

காதல்புரிதல்

பெரும்பான்மையான இளைஞர்கள் இரண்டு முக்கிய குறிக்கோள்களைக் கொண்டிருக்கின்றனர்: முதலில் பொருத்தமான வாழ்க்கைத் தொழிலினைக் கண்டுபிடிப்பது; மற்றொன்று திருமணம் செய்துகொண்டு குடும்பத்தை அமைப்பது. ஆனால், இவை இவ்வாறு

வரிசைக் கிரமமாக ஏற்படும் என்பது கட்டாயமன்று. ஏனெனில், நாம் பெரும்பான்மையான பதின் வயதினர் முதலில் காதல்புரிவதைக் காண்கிறோம். இதுவும் இளையோர்களின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சியாகும். இது துணையைக் கைக்கொள்வதும் குடும்பம் அமைப்பதுமான முக்கிய நிகழ்ச்சிக்கு முன்னோடியாக அமைகின்றது. இளைஞர்களுக்குத் தாங்கள் எப்பொழுது காதல்புரிந்து கொண்டிருக்கின்றோம் என்று உணர்வது உண்மையில் அவ்வளவு எளிதானதன்று. காதல்புரிவது என்பது மிகவும் புரிந்துகொள்ள முடியாததொன்றாகும். இவை எல்லாத் தனியன்களையும் ஒரே மாதிரியாகப் பாதிக்கும் என்றும் கூற இயலாது. உடல் வசீகரம் சிலருக்கு மற்றவர்களைக் காட்டிலும் மிக அதிகமாக இருக்கலாம். மேலும், சில தனியன்கள் மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பாகத் தங்கள் பால் பங்கினைக் கையாளக் கற்றுக்கொள்கின்றனர். தற்கால அமெரிக்க உடன்போக்கில் காதல் என்பது வேறு எந்தக் காலத்திலும் இல்லாத அளவில் நன்மதிப்பையும் நட்பையும் பிரதி செய்கின்றது. பொதுவான அனுபவங்களைப் பெறுவதன்மூலமும் துணையைக் கொள்கின்ற தன்மையின்மூலமும் காதல்புரிதல் வளர்கின்றது. நன்மை பயக்கத்தக்க உடன்போக்கு வளர்வதற்கு ஒத்த விருப்பங்கள், குறிக்கோள்கள், அவாக்கள், பொது நோக்குகள் ஆகியவைகள் மிக அவசியமானவைகளாகும்.

திருமணம் செய்துகொள்ள நிச்சயம் செய்தலானது மணமக்கள் திருமணத்தைப்பற்றித் தேர்ந்தெடுப்பதற்குக் கடைசி வாய்ப்பினை அளிக்கின்றது. இருப்பினும் நிச்சயம் செய்துகொள்வதற்கு முன்னர் பல இளையோர்கள் தங்களுடன் நடனத்திற்கோ மற்ற நிகழ்ச்சிக்கோ உடன் வருகின்றவர்களுடன் 'தொடர்ந்து நாளிடலை'யும் கைக்கொள்கின்றனர். 'தொடர்ந்து நாளிடலுக்கு' எதிராக அளிக்கப்படுகின்ற வாதங்களில் முக்கியமான ஒன்று என்னவெனில், அவ்வாறு நாளிடுவதால் பல இளையோர்கள் அதிகமான மாற்றுப்பால் உறுப்பினர்களுடன் சிறப்பாகப் பழகுவதற்குரிய வாய்ப்பினை இழக்கின்றார்கள் என்பதேயாகும். இளையோர்கள் அதிகமான மாற்றுப்பாலாருடன் பழகுதல் மிக முக்கியமான தொன்றாகும். அப்பொழுதுதான் அவர்களால் அதிகமான தனியன்களிலிருந்து தேர்ந்தெடுக்க இயலும்.

சமூகத் தன்மையிலும் மனவெழுச்சி -நிலையிலும் முதிர்ச்சியடைந்துள்ள தனியன் திருமணத்தின்மூலமாகத் தான் என்ன பெறவியலும் என்பதை எச்சரிக்கையுடன் சிந்திப்பான். குறைவான முதிர்ச்சியையே யுடைய தனியன் தனித்த ஏதோ ஒரு ஏதுவினால் பெரும்பாலும் பாதிக்கப்படுவான். ஒரு மதிப்பீட்டில், இளம் ஆண்களிடமும் பெண்களிடமும் திருமணத்தின் மூலமாகப் பெற விரும்பியவை எவை எனக் கேட்கப்பட்டது. அவர்கள் அளித்த

பட்டியல்கள் அட்டவணை 18-2-ல் அளிக்கப்பட்டுள்ளன.[12] சிறுமியர்களில் 60 சதவீதத்தினரால் புதுமை உணர்ச்சி கொண்ட காதலும் தற்காப்புமே முதன்மையானவைகளாக வரிசைப்படுத்தப்பட்டன. தனித்த ஆண்களில் 70 சதவீதத்தினரால் உடன் போக்கும் முனைப் பினைத் தளர்த்தலுமே முதன்மையானவைகளாக வரிசைப்படுத்தப் பட்டன. சிறுமியர்களால் முனைப்பினைத் தளர்த்தல் குறைவாகவே தரமிடப்பட்டது. ஒருவேளை சிறுமியர்கள் புதுமை உணர்வு கொண்ட காதல் என்று கருதுபவைகளை முனைப்பினைத் தளர்த்தலுக்குத் தொடர்புடையதாகக் கூறலாம். அல்லது ஒருவேளை ஆண்கள் முனைப்பினைத் தளர்த்தல் என்று கருதுபவைகளைப் புதுமை உணர்வு கொண்ட காதலுக்குத் தொடர்புடையதாகக் கூறலாம். முனைப்பினைத் தளர்த்தல் என்பது பால் கவர்ச்சியோடும், காதலிப்பதற்கும், காதலிக்கப் பெறுவதற்கும் உள்ளத் திறனோடும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை. உயிரியல் அமைப்பின் காரணத்தினாலும் பண்பாட்டுக் கட்டுப்பாட்டினாலும் மிகவும் அடக்கமானவளாகச் சிறுமி இருப்பதனால், முனைப்பின் தளர்ச்சியைச் சிறுவன் எண்ணுவதுபோல் முக்கியமான தேவையாகக் கருதுவதில்லை. தற்காப்பிற்குச் சிறுமி ஆவல் கொள்வதன் முக்கியத்துவத்தினை நாம் அறிந்துகொள்வது எளிதானதேயாகும். சிறுவர்கள் உடன்போக்கிற்கு அதிகமாகத் தரமிடுவது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். அமெரிக்கக் குடும்பத்தின் இயல்பையும் போக்கையும் மேலும் அது குறிப்பிடுகின்றது.

அட்டவணை 18—2

தனித்த ஆண்களும் தனித்த சிறுமியர்களும் கீழ்க்கண்ட கேள்விக்கு அளித்த பதில்களை ஒப்பிடுதல்: 'நீங்கள் ஒவ்வொருவரும் திருமணத்தினால் பெறவிரும்புவன எவை' (ஆதம்ஸ் அளித்தது).

தனித்த ஆண்கள்	சதவீதம்	தனித்த சிறுமியர்கள்	சதவீதம்
உடன்போக்கு ...	40	காதல் ...	33
முனைப்புத் தளர்ச்சி ...	30	தற்காப்பு ...	27
காதல் ...	15	உடன்போக்கு ...	20
குழந்தைகள் ...	10	குழந்தைகள் ...	11
இல்லம் ...	5	முனைப்புத் தளர்ச்சி ...	9

[12] C. R. Adams, Looking Ahead to Marriage. Life Adjustment Booklet. Chicago: Science Research Associates, 1940, p. 30.

இதைப் போன்றதோர் ஆய்வு வெயில் (Vail) என்பவராலும் ஸ்டாட் (Staudt) என்பவராலும் கல்லூரி மாணவர்களைக் கொண்டு நடத்தப்பெற்றது.[18]

பதினெட்டு வயதிலிருந்து இருபத்தெட்டு வயதுவரையிருந்த 118 ஆண்களைக் கொண்டும், பதினெட்டு வயதிலிருந்து 22 வயது வரையிருந்த 118 பெண்களைக் கொண்டும் இவ்வாய்வு நடத்தப் பெற்றது. இம்மாணவர்களிடம் ஆறு குண வியல்புகள் கொண்ட பட்டியல் தரப்பட்டு அதில் திருமணத்துக்குரிய துணையாகத் தாங்கள் தேர்ந்தெடுப்பதற்கு மிக முக்கியமாகக் கருதுகின்ற குணவியல்பினையும், மிகக் குறைந்த முக்கியம் கொண்ட இயல்பாகக் கருதுகின்ற குணவியல்பினையும் கோடிட்டுச் சரிபார்க்கும்படி கேட்கப்பட்டது. நிகழ்விரைவின் அடிப்படையில் கோடிட்ட இனங்களை வரிசைப்படுத்தினால், அறக்குண இயல்பு, ஒரே மாதிரியான அக்கறை, நுண்ணறிவு ஆகியவைகளே முன்னணியில் இருக்கின்றன. ஆண்களிலும் பெண்களிலும் 50 சதவீதத்தினருக்குமேல் அறக்குண இயல்பைக் கோடிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அழகுக்கும் நல்ல தோற்றத்திற்கும் குறைவான அளவிலேயே பல பெண்கள் கோடிட்டனர். பல ஆண்கள் நன்றாகப் பழகுகின்ற மாமன் மாமியார்களுக்குக் குறைவான அளவிலேயே கோடிட்டனர். கல்வி அதிகமாகக் கோடிடப் படாவிட்டாலும் திருமணத் தேர்ந்தெடுத்தல்களைப்பற்றி மேலும் ஆய்வு செய்ததில் தனியன்கள் ஒரே மாதிரியான கல்வி, பண்பாட்டுப் பின்னணியிலுள்ளவர்களையே திருமணம் செய்துகொள்ள விரும்புவது தெளிவாயிற்று.

திருமணத்தையும் நாளிடலையும் பாதிக்கின்ற ஏதுக்கள்

அதிகாரம் 14-ல், பதினாறு வயதினர்கள் ஒரே சமூகப் பொருளாதார வகுப்பிலேயே நாளிட விரும்புகின்றனர் என்று குறிப்பிடப் பெற்றது. நேற்றைய சிறிய சமுதாயத்தில், இளைஞர்கள் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் சந்தித்து மற்றவர்களது அக்கறைகளையும் இயல்புகளையும் அறிவதற்கு வாய்ப்புகள் இருந்தன. மிச்சிகனிலுள்ள, ஹைலண்ட் பார்க் உயர்நிலைப் பள்ளியிலுள்ள (Highland Park High School) மாணவர்களது நாளிடல் பழக்கங்களைப்பற்றி வோல்ஃபோர்டு (Wolford) என்பவர் இரண்டாவது உலகப் போரின் போது ஓர் ஆய்வு நடாத்தினார். அவ்வாய்வு உயர்நிலைப் பள்ளியில்

[18] J. P. Vail and V. M. Staudt, 'Attitudes of College Students toward Marriage and Related Problems : I. Dating and Mate Selection,' Journal of Psychology, 1950, Vol. 30, pp. 171-182.

சீனியர் ஆண்டில் படிக்கின்ற மாணவர்களில் மிக அதிகமான அளவி லுள்ளோர்கள் மாற்றுப் பாலாருடன் மிகக் குறைந்த தொடர்பினையே கொண்டிருப்பதாகக் காட்டியது.[14] இவ்வாய்வு இளைஞர்களை ஒன்று திரட்டக்கூடிய வாய்ப்பினை அளிக்கின்ற சமூகச் செயல்களைத் தர வேண்டிய தேவையினைக் காட்டியது. இதனால் ஒருவரையொருவர் சிறப்பாக அறிந்துகொள்ளவும் கற்றுக்கொள்ளவும் பொதுவாக மாற்றுப் பாலாரின் குணவியல்புகளை அறிந்துகொள்ளவும் வழி வகுக்கப்படுகிறது.

தனியன்களில் மிக அதிகமான எண்ணிக்கையுடையவர்கள் தங்களுடைய திருமணத் துணையை தாங்கள் வாழ்கின்ற சில வீடு களுக்கு அருகிலேயே தேர்ந்தெடுப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. அருகில் இருப்பதனால் தொடர்புகள் ஏற்படச் சாத்தியமாகின்றது. தனியன்கள் தாங்களாகவே திருமணத் துணையினைத் தேர்ந்தெடுக் கின்ற சமூகத்தில் அருகிலிருத்தல் மிக முக்கிய காரணமாகும். பள்ளிகள், கோயில்கள், மற்ற சமுதாயக் காரணிகள் ஆகியவை இளைஞர்கள் ஒருவரையொருவர் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெரும் பாலும் அளிக்கின்றன. அட்டவணை *18—3*-ல் மூன்று ஆய்வுகளி லிருந்து பெறப்பட்ட முடிவுகளைத் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது.[15] இம் மூன்று ஆய்வுகளில் இரண்டிலிருந்து திருமணங்களில் சரி பாதிக்கு மேல் 20 வீடுகளுக்கு அருகிலுள்ளவர்களிடையே நிகழ்ந்த தாக அறியப்பெறுகின்றது.

அருகில் வாழ்வதற்கும் துணையினைத் தேர்ந்தெடுப்பதற்கும் இடையே தொடர்பு இருக்கின்றது என்றாலும் நாளிடலையும் திருமணத் தையும் உண்டாக்குவதில் செயலுறுகின்ற ஏதுக்களில் அருகிலிருப் பதைத் தவிர மற்றவைகளும் உள்ளன என்பதை வலியுறுத்தல் வேண்டும். டேவி (Davie) என்பவரும் ரீவ்ஸ் (Reeves) என்பவரும் குறிப்பிடுவதாவது: 'பெரும்பான்மையான நிலைகளில் திருமணம் என்பது ஒரே குழுக்குள் நடக்கின்ற நிகழ்ச்சியாகும்; அதில் இரு தரத்தாரும் ஒரே இனம், நாடு, சமயம், சமூகப் பொருளாதார

[14] O. P. Wolford, 'How Early Background Affects Dating Behavior,' Journal of Home Economics, November, 1948, pp. 505-506.

[15] J.R. Marches and G. Turbeville, 'The Effect of Residential Propinquity on Marriage Selection,' The American Journal of Sociology, 1953, Vol. 58, pp. 592-595; M.R. Davie and R.J. Reeves, 'Propinquity of Residence before Marriage,' American Journal of Sociology, 1939, Vol. 44, pp. 510-517. J. H. S. Bossard, 'Propinquity of Residence before Marriage,' American Journal of Sociology, 1933, Vol. 38, pp. 219-224.

அட்டவணை 18-3

• *திருமணத் தேர்ந்தெடுத்தலில் அருகில் வசிக்கின்ற இயல்பின் விளைவினைக் காட்டுகின்ற திரள் குறிப்புகள்.*

	சதவீதம்		
விடுகள் அருகிலுள்ள அளவு	ஃபிலடெல்ஃபியா (Philadelphia	நியூஹேறவன் New Haven	டியூலத் Duluth)
ஒரே வீட்டில் வசிப்பவர்	12·64	6·42	5·67
அடுத்த விட்டில் ...	17·18	9·42	8·00
இரண்டு வீட்டிற்குள் ...	23·26	14·12	11·33
மூன்று வீட்டிற்குள் ...	27·46	17·32	15·33
நான்கு வீட்டிற்குள் ...	30·56	20·84	17·66
ஐந்து வீட்டிற்குள் ...	33·58	23·84	20·66
பத்து வீட்டிற்குள் ...	42·32	36·57	30·99
பதினைந்து வீட்டிற்குள்...	48·00	44·16	37·32
இருபது வீட்டிற்குள் ...	51·94	51·33	42·65

அந்தஸ்தினைச் சார்ந்து இருப்பவர்களாக இருக்க முனைகின்றனர்.'[16] போர்க்காலத்தில் இளைஞர்கள் மிக விரைவில் உடன்போக்கினை முடித்துக்கொண்டு திருமணம் செய்துகொள்ள விழைகின்ற போக்கினைக் காணலாம். இதற்குப் பிறகு அவர்கள் தாங்கள் அறியாத அயலார் ஒருவரைத் திருமணம் செய்துகொண்டதாக உணர்கின்றனர். இவ்வாறான நிலைகளில் விவாக ரத்து விகிதங்கள் மிகவும் உயர்ந்து காணப்பெறுகின்றது. புதுமை உணர்ச்சி கொண்ட காதலின் காரணமாகத் திருமணம் செய்து கொண்டவர்களைக் காட்டிலும் மணமக்கள் அதிகமான கால அளவில் ஒருவரையொருவர் அறிந்திருந்து திருமணம் செய்துகொண்டால், அத் திருமணங்கள் நிலைத்து இருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன.

நிச்சயம் செய்துகொண்ட பின்னர்த் திருமணத்தை அதிகமான பொருளாதாரத் தற்காப்பு பெறும்வரை தள்ளிப் போடுவதா அல்லது வாழ்க்கைத் தொழிலுக்குத் தேவையான அளவு கல்வியும் பயிற்சியும் பெறுகின்றவரை தள்ளிப்போடுவதா என்பது அவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளாகும். மிச்சிகன் ஆய்வில் 12ஆவது படிவ மாணவர்களிடம் அவர்களுடைய திருமணத் திட்டங்களைப்பற்றிக் குறிப்

[16] Ibid., pp. 516-517.

அட்டவணை—18-4

பத்தாவது, பன்னிரண்டாவது படிவ மாணவர்களின் திருமணத் திட்டங்கள்

'நீ திருமணம் செய்து கொள்வதைப்பற்றி என்ன நினைக்கிருய்?'	சிறுவர் படிவம் 10	12	சிறுமியர் படிவம் 10	12	மொத்தம்
நான் திருமணம் செய்துகொள்ள விரும்பவில்லை	7	4	4	8	5
உயர்நிலைப்பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பை முடித்த பின்னர் நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றேன் ...	4	5	8	9	7
பள்ளிப் படிப்பை முடித்துச் சில ஆண்டுகள் கழிந்த பின்னரே நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றேன் ...	40	41	55	58	49
பள்ளியை முடித்த பின்பு 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக நான் பொறுத்திருந்தே திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றேன் ...	28	38	23	23	26
இக் கருத்தினைப்பற்றி எந்தவிதமான உணர்வுகளும் கொண்டிருக்கவில்லை	14	9	5	4	8
துலங்கல்கள் இல்லை	7	3	5	3	5
மொத்தம்	100	100	100	100	100

பிடும்படி கேட்கப்பெற்றது.[17] அட்டவணை 18-4-ல் அளிக்கப்பட்டுள்ள முடிவுகள், பத்தில் ஒருவர் மட்டுமே தாங்கள் திருமணம் செய்துகொள்ளப்போவதில்லை அல்லது திருமணத்திற்கான திட்டங்களைக் கொண்டிருக்கவில்லை என்று காட்டுகின்றன. ஆனல், 7 சதவிதத்தினர் மட்டுமே தாங்கள் உயர்நிலைப் பள்ளியை அல்லது கல்லூரியை முடித்த பின்னர்த் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகக் குறிப்பிட்டனர். சிறுவர்களைக் காட்டிலும் சிறுமியர் விரைவில்

[17] Op. cit., p. 23 A,

திருமணம் செய்துகொள்வதற்கான அதிகமான பற்றுர்வத்தைக் கொண்டிருந்தனர். இது அதிகமான முதிர்ச்சியும் சமூகப் பழக்க வழக்கமும் நடைமுறையில் இருப்பதற்கு இசைவானதாயுள்ளது. இதனுல் சிறுமி திருமணத்தின்போது சிறுவன் அல்லது ஆணுக்குக் குறைந்தது ஒரு ஆண்டாவது இளையவளாக இருக்கின்றுள்.

பொறியியலும் நீடிக்கப்பட்டுள்ள பள்ளிக் காலமும் வயதான பின்னர்த் திருமணங்கள் செய்வதை உண்டாக்குகின்றன என்று அடிக்கடி பலர் குறிப்பிடுவதைக் காணலாம். இது பல தனியன் களைப் பொறுத்தவரை உண்மையேயாகும். இருப்பினும், நவீன காலப் போக்குவரத்தும் தொடர்பும் அதிகமான அளவு ஓய்வு நேரத் தினையும் சமூகச் செயல்களையும் அளித்துள்ளன. விரிவடைந்துள்ள உயர்நிலைப் பள்ளித் திட்டமும் கோயில் திட்டமும் இளைஞர்களை ஒன்று சேர்த்துத் திருமண வயதில் செல்வாக்குக் கொண்டுள்ளன. இவ்வாறுன திருமணத்திற்கான சராசரி வயது, சென்ஸஸ் முதலில் துவங்கிய காலத்திலிருந்து ஒவ்வொரு தலைமுறையிலும் குறைந் துள்ளது. இது படம் 18—4-ல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.[18] இக் குறிப்புகள் மணமகள்களும், மணமகன்களும் 1890ஆம் ஆண் டில் இருந்ததைக் காட்டிலும் இன்று ஒரே வயதுடையவர்களாக இருக்கின்றனர் என்று காட்டுகின்றது. உயர்நிலைப் பள்ளிகளும் கல்லூரிகளும் மாணவர்களைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்ற விதியினை மேலும்மேலும் தளர்த்தி வருகின்றன. கல்லூரிகளில் திருமணமானவர்கள் வருவதற்கு வேண்டிய வசதிகள் அளிக்கப் படுகின்றன. பல கல்வித் துறைப் பணியாளர்கள் இதனை மிகவும் அனுதாபத்துடன் அணுகுகின்றனர்.

இளைஞர்களும் குடும்பமும்

சிறுவர்களும் சிறுமியர்களும் முதிர்ச்சியினை நோக்கி முன்னேறும் பொழுது, அவர்களுடைய பொதுநோக்கு தங்களையும், தங்களது துணையையும் கடந்து குழந்தைகளைப் பெறுவதனை நோக்கி விரிவடை கின்றது. சிக்கலான காலங்களில் எடுக்கப்பட்ட குறிப்புகளிலிருந்து திருமணங்கள், குழந்தைகள்பற்றிய இக் கருத்து பெறப்பட்டது. இரண்டாவது உலகப் போரின்போது அரசாங்கம் போரில் ஈடுபட் டிருந்தவர்களது திருமணங்களுக்கும் குடும்பங்களுக்கும் பண உதவி செய்தது. இது இராணுவத்தில் இருந்தவர்களது திருமணத்தினைப் பற்றிய பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கும், குடும்பத்தினைப் பாதுகாப்பதற்கும் உதவியது. இராணுவத்தில் இல்லாதவர்களது

[18] P. C. Glick, 'The Life Cycle of the Family,' Marriage and Family Living, 1955, Vol. 17, p. 4. Data for 1890, 1940, nd 1950 of Figure 18-4 taken from this source.

இவ்வாறான பல பொருளாதாரப் பிரச்சினைகளும் உயர்ந்த வருவாயின் காரணமாகத் தவிர்க்கப்பெற்றன. இதன் காரணமாகத் திருமணத்திற்கான வயது குறைந்து பிறப்பு விகிதமும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாகப் பயன் மதிப்புகளிலும் சில மாறுதல்கள் ஏற்படுவது சாத்தியமேயாகும். அவர்களுடைய எல்லாப் பிரச்சினைகளுக்கு



படம் 18-4. 1890, 1910, 1940, 1950 ஆகிய ஆண்டுகளில் அமெரிக்க நாடுகளில் திருமணம் செய்துகொண்ட மாப்பிள்ளைகள், மணப்பெண்களின் சராசரி வயதுகள்.

மில்லாவிட்டாலும் முக்கியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விஞ்ஞானம், பொறியியல் ஆகியவற்றை நோக்கிய தலைமுறையாகப் பழைய தலைமுறையைக் கருதலாம். இரண்டு உலகப் போர்களும் தீர்க்கப்படாத உலக நிலைகளும் மக்களில் பலரை இச் சக்திகள் மட்டுமே தங்களுக்கு இன்பம், தற்காப்பு, எல்லோர்க்கும் நல்வாழ்வு ஆகியவற்றினை அளிக்கமுடியாது என்பதை உணரும்படிச் செய்தன.

நமது சமூகத்தில் குழந்தைகளை இன்று எப்பொழுதும் வரவேற்பதில்லை. கேலப் தேர்வு (Gallup Poll) 1941ஆம் ஆண்டிலிருந்து 1945ஆம் ஆண்டுக்குள் சிறப்பான குடும்பத்தின் அளவு கூடுதலை அடைந்துள்ளதாகக் காட்டுகின்றது. இது ஒருவேளை சிறப்பான பொருளாதார நிலைகளைப் பிரதிபலிப்பதாக இருக்கக்கூடும். இளைஞர்களுக்கான பர்டு கருத்துத் தேர்வு சிறப்பான குடும்ப அளவு எது என்பதனை அமெரிக்க நாடுகளிலுள்ள உயர்நிலைப் பள்ளிச் சிறுவர்

சிறுமியர் மாதிரியாகக் கொண்டு நடத்திய ஆய்வுமூலம் அறிவிக்கின்றது.[19] அட்டவணை 18—5-ல் அளிக்கப்பெற்றுள்ள முடிவுகள் சிறுவர் சிறுமியர்களில் 98 சதவீதத்தினர் சில குழந்தைகளைப் பெறுவதைச் சிறப்பானதாகவும் 48 சதவீதத்தினருக்குமேல் மூன்று அல்லது நான்கு குழந்தைகள் பெறுவதையே சிறந்தது எனவும் கருதுகின்றனர் என்பதைக் காட்டுகின்றன.

பொறியியல் வளர்ச்சியினுலும், நகர்ப்புறத்தில் குடியேறுதலினுலும் திருமணம், குழந்தைகள் பெறுதல் ஆகியவற்றின் தொடர்பிலுள்ள பிரச்சினைகள் சிக்கல் வாய்ந்தனவாக ஆகிவிட்டன என்றாலும், முன்னைய முதியோர் குழுக்களைக் காட்டிலும் இன்றைய இளையோர்கள் உயிரியல் அடிப்படையில் சிறப்பாகக் குழந்தைகளைப் பெறுவதற்கும், உளவியல் அடிப்படையில் சிறப்பாகக் குழந்தைகளை வளர்ப்பதற்கும் தயாரிக்கப்பட்டுள்ளனர் என்று கொள்ளலாகாது. இளைஞர்களது திருமணம் பெரும்பாலும் தள்ளிவைக்கப்படுகின்றது; அல்லது திருமணம் தள்ளிவைக்கப்படாவிட்டாலும் குழந்தைகள் பெறுதல் பெற்றோர்கள் பொருளாதார அடிப்படையில் தற்காப்பு உடையவர்களாக ஆகும்வரை தள்ளிப்போடப்படுகின்றது. இவ்வாறு இதற்குக் காரணமாக இருக்கின்ற சமூகப் பொருளாதார நிலைகள் மிகவும் இளைவான ஆண்டுகளில் குழந்தை பெறுதலையும் வளர்த்தலையும் தடை செய்யத் தூண்டும்.

அட்டவணை—18-5

அமெரிக்க நாடுகள் முழுவதிலிருந்தும் மாதிரிகளாக எடுக்கப்பெற்ற உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சிறப்பான அளவு என்று கருதிய குழந்தைகளின் எண்ணிக்கை.

குழந்தைகளின் எண்ணிக்கை	சதவீதம்
ஒன்றும் இல்லை	2
ஒன்று அல்லது இரண்டு	41
மூன்று அல்லது நான்கு	48
ஐந்து அல்லது அதற்குமேல்	9

ஜனநாயக சமூகத்தில் இளைஞர்களும் குடிமையும்

ஜனநாயக சமூகத்தில் இளையோர்களையும் இளைஞர்களையும் குடிமைக்குத் தயார் செய்தலில் கற்றவன் பங்கு மிகவும் முக்கியமானதாகும். சுதந்திரம், வேலை, அரசியல், அரசு, சட்டங்கள், மனித

[19] H. H. Remmers and B. Shimberg, The Purdue Opinion Poll for Young People. Purdue University, 1949, No. 20.

உறவுகள்பற்றிய மனப்பான்மைகள் கற்றுக்கொள்ளப்படுகின்றவைகளாகும். ஒவ்வோர் ஆண்டிலும் ஒரு மில்லியன் அல்லது அதற்கு அதிகமான பதின் வயதினர்கள் காவல் துறையினரது கவனத்திற்கு ஆளாகின்ற செய்தி எலிஸபெத் ஈவான்ஸ் போன்ற சட்டத்துடன் எப்பொழுதுமே தொல்லைகளை அனுபவிக்காத பல மில்லியன் பதின் வயதினர்கள் இருக்கிறார்கள் என்று கருதுவதற்குத் தடையாக இருக்கின்றது. எலிஸபெத் ஈவான்ஸ் எழுதுகின்றார்:

'நான் பதினேழு வயதினை அடைந்தவள். நான் எப்பொழுதும் எதற்கும் தீ வைத்ததில்லை. எந்த ஒரு பெட்ரோல் பிடிக்கும் நிலையத்திலும் திருடியதில்லை. அல்லது தற்காப்பில்லாத வயதான மனிதனை அடித்துத் துன்புறுத்தியதில்லை. உண்மையில் இவ்வாறு செய்கின்ற ஒருவரைக்கூட அறிந்ததில்லை. ஆனால், ஒவ்வோர் ஆண்டும் என்னைப் போன்ற ஒரு மில்லியன் அமெரிக்கப் பதின் வயதினர், என்னைக் காட்டிலும் இளையவர்களும், சிலர் என்னைவிட முதிர்ந்தவர்களும் என்னைக்காட்டிலும் பெரிய குடும்பத்தினைச் சார்ந்தவர்களும் அல்லது என்னைக் காட்டிலும் சிறிய குடும்பத்தினைச் சார்ந்தவர்களுமாக இருக்கும் அடிப்படையில் என்னைப்போன்ற ஒரு மில்லியன் இளையோர்கள் காவல்துறையின் கவனத்திற்கு வருகின்றனர்.

உண்மையில் இது ஒரு பிரச்சினையேயாகும். இன்று அமெரிக்கா சந்திக்கின்ற மிகப் பெரிய பிரச்சினைகளில் இதுவும் ஒன்றாகும். நான் சில சமயங்களில் குற்ற நடத்தைக்காரர்களாக இல்லாத 95 சதவிதத்தினரான எங்களைப்பற்றியும் சிந்திக்கும்படி விரும்புவது உண்டு. ஏனெனில், நாங்களும் இங்கு இருக்கின்றோம். ஏனெனில், இன்னும் இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் நாங்கள் தான் விஞ்ஞானிகளாகவோ, பத்திரிகை ஆசிரியர்களாகவோ, கோயிலில் பணிபுரியும் பாதிரிமார்களாகவோ, ஆட்சி புரிபவர்களாகவோ ஆகப்போகிறோம். நாங்கள்தான் நாட்டினை இயக்கி, அதில் உணவைப் பெருக்கிப் பொருள்களை விற்றுக் கார்கள் போன்ற பொருள்களைத் தயாரிக்கவும் போகின்றோம். நாங்கள்தான் இந்த நாட்டின் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கப்போகின்றோம். கோவில்களில் இருக்கப் போகின்றோம். ஒருவேளை அவசியமானால் போரில் சண்டையிடவும் போகின்றோம்.

எங்களுடைய வேலை நாங்கள் முதிர்ச்சியடையும்வரையில் சரியான பாதையில் இருப்பதுவேயாகும். எந்தக் காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் இது கடினமானதேயாகும். 1955-ல் இது இன்னும் கடினமாக இருக்கும். பத்திரிகையின் தலைப்புச் செய்திகளிலும், வானொலியிலும் தொடர்ச்சியாக அமெரிக்க இளைஞர்கள் கெட்டுவிட்டனர் என்று இடைவிடாது கூறுவதனாலும் இது மேலும் கடினமாக ஆகின்றது.

அடிப்படையில் பார்க்கும்பொழுது நாங்கள் கெட்ட தலைமுறை யினரைச் சார்ந்தவர்களன்று. அவ்வாறு நாங்கள் இருப்பதும் இய லாது. நாங்கள் எல்லோரையும் போலவே குழந்தைகளாகவே துவங்கினோம். ஆனால், வாழ்க்கை என்பது மிகவும் கடினமானதாகவும் தற்காப்பு இல்லாததாகவும் உள்ளது. மிகவும் மோசமான நிலைகளில் அவை குழப்பமடைதலையும் மனமுறிவினையும் கொண்ட கடக்க முடி யாத சுவர்களாக ஆகிவிட்டன.

இதற்கு என்ன பதில்? நாங்கள் எந்த வகையான ஆண் பெண் களாக ஆவோம் என்று தீர்மானிப்பவை எவை? நாங்கள் உண்டாக் கும் உலகம் எவ்வாறு இருக்கும்? எங்கள் தலைமுறைக்கு எல்லா வற்றையும்விடத் தேவைப்படுபவை எவை? இதற்கு நூற்றுக்கணக் கான கொள்கைகள் இருக்கின்றன. அதிகமான தடுப்புமுறை மன நலன், கடுமையாகச் சட்டத்தினைக் கைக்கொள்ளுதல், கடுமையான விவாகரத்துச் சட்டங்கள், சிறப்பான பொழுதுபோக்குத் திட்டங்கள், அதிகமான பள்ளிகள், அதிகமான ஆசிரியர்கள், தொலைக்காட்சி யிலும், திரைப்படங்களிலும், சஞ்சிகைகளிலும் உள்ள குற்றங்களை நீக்குதல், நாகரிகமற்ற தலைவாரும் தூரிகை...நமது தலைமுறைக்குத் தேவையானதை நான் அறிவேன். சட்டங்கள் அல்லது நீதிமன்றங் கள், அல்லது சிறப்பான பள்ளிகள் அல்லது சிறந்த பொழுதுபோக்கு அல்லது சிறந்த கட்டுப்பாடு ஆகியவற்றினைக் காட்டிலும் எங்களுக்கு அதிகமாகத் தேவைப்படுவது இதுவேயாகும்—எங்களை நம்புகின்ற சிலர்தான் எங்களுக்கு மிகவும் தேவையானவர்களாவர்.'[20]

இளைஞர்களும் சமூகப் பொருளாதாரப் பொதுநோக்கும்

பொதுமக்களது கருத்துத் தேர்வுகள் கடந்த பல பதிகங்களாகப் பொதுமக்களது மனப்பான்மைகளில் ஏற்பட்டுள்ள சில சுவையான மாறுதல்களைக் குறிப்பிடுகின்றன. அவைகள் யாவும் நாம் கடந்து சென்று கொண்டிருக்கின்ற சமூக-பொருளாதாரப் புரட்சியினைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இம்மனப்பான்மைகள் அகில உலகப் பிரச்சினைகள், வணிகம், பொருளாதார நிலைகள், சமூக நலம், தற்காப்பு, கல்வி வாய்ப்புகள், ஆரோக்கியம், வேலையின்மை ஆகிய வற்றில் நாம் கொள்கின்ற கொள்கைகளில் பிரதிபலிக்கின்றன. இம் மாறுதல்கள் குறிப்பாகக் கீழான தொழில் நிலையில் உள்ள

[20] Elizabeth Evans, In Defense of My Generation,' NEA Journal, 1955, Vol. 44, pp. 139-140. *எலிஸபெத் ஈவான்ஸ் ஒஹியோ நாட்டினைச் சார்ந்த ஆக்ரோன் பகுதியினைச் சார்ந்த புச்டல் உயர்நிலைப் பள்ளியில்* (Buchtel High School) *சீனியர் வகுப்பு மாணவியாவாள். அவள் 1954-ல் ஜனநாயகக் குரல் போட்டியில் பரிசு பெற்றாள்.*

தனியன்களைப் பாதிக்கின்றவைகளாக இருக்கின்றன. அனைவரும் கல்வி பெறுதல், பத்திரிகை உலகு, வானொலி, தொழிற்சங்கங்களின் காரணமாக இவை அதிகமாகியுள்ளன. அமெரிக்க வரலாற்றில் வேறு எந்தக் காலத்திலும் இல்லாத அளவு இன்றைய சராசரி அமெரிக்கன் சிறப்பாகச் செய்திகளை அறிந்திருக்கிறான். இவை யாவும் அமெரிக்கக் குடிமகன்களில் பெரும்பாலாரது பொதுநோக்கிலும், அவாக்களிலும், பயன்மதிப்புகளிலும் பெருத்த மாறுதலை உண்டாக்கியுள்ளன என்றே பொருள்படுகின்றது. இம் மாற்றங்கள் தொழில் தொடர்பில் இளையோர்கள் கொண்டுள்ள மாறுபட்ட மனப்பான்மைகளில் பிரதிபலிக்கின்றன என்பதில் ஐயமில்லை.

இம்மாறுதல்கள் அமெரிக்கத் தொழிலாளியின் மனப்பான்மைகளில் பிரதிபலிக்கின்றன என்பதை 1940ஆம் ஆண்டில் ஃபார்ச்சூன் (Fortune) சஞ்சிகை நடத்திய மதிப்பீட்டில் பெற்ற முடிவுகளை ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் நடந்த மதிப்பீட்டின் முடிவுகளுடன் ஒப்பிட்டதிலிருந்து அறியலாம்.[21] 1940-ல் ஒன்பதிலிருந்து பத்து மில்லியன் மக்கள் வேலையில்லாது இருந்தனர். ஏழாண்டுகளுக்குப் பின்னர் நாம் போருக்குப்பின் ஏற்பட்ட பணவீக்க நிலையில் இருந்தோம். அவ்வமயம் முன்னைய காலத்தைவிட ஐந்தில் ஒரு பங்கினரே வேலையில்லாது இருந்தனர். போருக்குமுன் இருந்த குடிமகன் போருக்குப் பின்னுள்ள குடிமகனைக் காட்டிலும் குறைவான வருவாய் இருப்பினும், தற்காப்புள்ள நிலையான வேலையைக் கொள்வதற்குரிய பற்றார்வத்தைக் குறைவான அளவிலேயே கொண்டிருந்தான்.

இவ்வதிகாரத்தின் துவக்கத்தில் அளிக்கப்பெற்ற மிச்சிகன் ஆய்வின் முடிவுகள் இதனையே வலியுறுத்துகின்றன. நமது பள்ளிகளிலுள்ள இளையோர்கள் முன்னேற்றத்திற்குரிய வாய்ப்பினைக் கொண்ட தொழிலினையே கைக்கொள்ள விரும்புகின்றனர். ஆனால், ஓரளவு தற்காப்புள்ள வேலையினையே நாடுகின்றனர். அவர்களில் பலர் அந்தஸ்து, சக்தி, அதிர்ஷ்டம் ஆகிய பகற்கனவுகளினால் ஏமாறாது உண்மை நிலையை உணர்பவர்களாகவே இருக்கின்றனர். பல இளையோர்கள் தாங்கள் அடைய முடியாத அளவு பெரிதாக உள்ள அவாக்களை வளர்த்துக்கொண்டுள்ளனர் என்பது உண்மையே யாகும். இருப்பினும், மாறுதலடைகின்ற பொருளாதார நிலைகள் சமூக-பொருளாதாரக் கருத்துகள், சட்டம் ஆகியவைகளைப்பற்றி இளையோர்கள் கொள்கின்ற மனப்பான்மைகளைப் பாதிக்கின்றன.

தனியன்கள் பாதுகாக்கப்பட்ட வாழ்க்கையான குழந்தைப் பருவத்தின் துவக்க ஆண்டுகளிலும் இறுதி ஆண்டுகளிலும் இருந்து

[21] 'The Fortune Survey,' Fortune, January 1947, Vol. 35, p. 10.

பொறுப்புள்ள உலகமான முதியோர் பருவத்தை அடையும்பொழுது, இந் நிலை மாற்றங்கள் மிகவும் உண்மையானதாயும் தெளிவாகவும் தெரிகின்றன. இன்றைய சமூகப் பிரச்சினைகளுக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் பின்னிளையோர்கள் முக்கிய கவனத்தை அளிக்கின்றார்கள் என்பதை அட்டவணை 18—6·ல் வரிசைப்படுத்தப்பட்ட கேள்விகளுக்குக் கல்லூரி மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட பதில்களிலிருந்து அறியலாம்.[22] இம் முடிவுகள், அதிகமான வளர்ச்சியினை அடைந்த கல்லூரி மாணவர்கள் ஐக்கிய நாடுகள் சபையையும், அகில உலக காவல் துறையையும், உலக நீதிமன்றத்தையும் இளம் மாணவர்களைக் காட்டிலும் அதிகமாக விரும்புகின்றனர் என்று காட்டுகின்றன.

பண்பாட்டுக் குழப்பத்தினாலும், பயன் மதிப்புகளில் மாறுபாடுகளினாலும், சமூகப் பொருளாதார மாறுதல்களினாலும், பல இளையோர்கள் சிக்கல்களையும் மனமுறிவுகளையும் சந்திப்பார்கள் என்பது ஆச்சரியத்தை அளிக்கக்கூடியதன்று. ஒரு ஜனநாயக நாட்டில் இளைஞர்களுக்குப் பல சுதந்திரங்கள் அளிப்பதோடு, வேலையில்லாமையைப் பற்றிய அச்சங்களிலிருந்து சுதந்திரம் அளிக்கவேண்டிய தேவையும் உள்ளது.

இந் நூலாசிரியரால் நடத்தப்பெற்ற ஆய்வின் பல இனங்கள் இவ் வாய்விலிருந்து எடுக்கப்பட்டவையாகும். 10,000 உயர்நிலைப் பள்ளி மாணவர்களை தேசீய அடிப்படையில் தேர்ந்தெடுத்து அவர்களிடமிருந்து பெற்ற முடிவுகளிலிருந்து சிம்பர்க்கின் ஆய்வுக் கருத்துகள் பெறப்பட்டன.

இது இன்றைய தலைமுறையும் எதிர்காலத் தலைமுறைகளும் சந்திக்கவேண்டிய அறைகூவலாகும். இது, நமது அடிப்படை நிறுவனங்கள் கட்டாயம் கவனிக்கவேண்டிய பிரச்சினையாகும். இவ் வறைகூவலைப் பள்ளிகள் எவ்வாறு சந்திக்கவேண்டும் என்று எட்வார்ட்ஸ் (Edwards) என்பவர் கூறுகின்றார் :

'இந்தத் தலைமுறையும் அடுத்த தலைமுறையும் அமெரிக்கக் கல்வித் திட்டத்திற்குச் செய்யவேண்டிய மிக முக்கியமான நன்றிக் கடன் என்னவெனில், இளைஞர்களைப் பொது, சமூகக் கொள்கைகளின் அடிப்படை வகைகளைப்பற்றிய நல்ல முடிவுகளைத் தேர்ந்தெடுப்பதற்கும், அவர்களைப் பயன்மதிப்புகள், ஊக்கிகள், நுண்ணறிவு,

[22] K.C. Garrison, 'A Comparative Study of the Attitudes of College Students Toward Certain Domestic and World Problems,' Journal of Social Psychology, 1951, Vol. 34, pp. 47-54. See also B. Shimberg, 'Information and Attitude Toward World Affairs,' Journal of Educational Psychology 1948, Vol. 19, pp. 206-222.

அட்டவணை 18—6

உள்நாட்டுப் பிரச்சினைகள்பற்றியும் அகில உலக உறவுகள பற்றிய பிரச்சினைகள் குறித்தும் கல்லூரி மாணவர்கள் அளித்த துலங்கல்கள். (காரிசன் அளிப்பவை)

வெள்ளத்தினைக் கட்டுப்படுத்துவதற்காகப் பெரிய மின்சாரத் திட்டங்களைத் தனியார்துறை நிறைவேற்ற வேண்டுமா? அல்லது பொதுத்துறையா?	தனியார் துறை	?	பொதுத் துறை
	சதவீதம்		சதவீதம்
நுழைவாண்டினர் ...	17	2	81
இரண்டாம் ஆண்டினர் ...	8	14	78
மூன்றும் ஆண்டினர் ...	12	5	83
கடைசி ஆண்டினர் ...	13	6	81
அகன்ற காட்டுப் பகுதிகளைப் பாதுகாப்பதற்காகக் கட்டுப்படுத்தும் வேலையினைத் தனியார் துறையிடம் விடவேண்டுமா அல்லது பொதுத்துறையிடமா?			
நுழைவாண்டினர் ...	22	5	73
இரண்டாம் ஆண்டினர் ...	7	10	83
மூன்றும் ஆண்டினர் ...	11	2	87
கடைசி ஆண்டினர் ...	13	0	87
இலவசமான மருத்துவ வசதியும் ஆண்டுக்கு ஒருமுறை மருத்துவத் தேர்வும் எல்லாக் குடிமக்களுக்கும் அளிக்க வேண்டுமா?	இல்லை	?	ஆம்
நுழைவாண்டினர் ...	22	5	73
இரண்டாம் ஆண்டினர் ...	24	15	61
மூன்றும் ஆண்டினர் ...	27	17	56
கடைசி ஆண்டினர் ...	37	21	42

ஐக்கிய நாடுகளை வலுப்படுத்தி ஓர் உலக அரசை அமைத்து, அதன் மூலம் அமெரிக்க நாடுகள் உள்பட எல்லா நாடுகளின் படைத் தளங்களையும் கட்டுப்படுத்துதல் வேண்டும் என்று நீ எண்ணுகிருயா? இல்லையா?	ஆம்	?	இல்லை
நுழைவாண்டினர் ...	58	10	32
இரண்டாம் ஆண்டினர் ...	53	10	37
மூன்றும் ஆண்டினர் ...	53	18	29
கடைசி ஆண்டினர் ...	54	25	21

எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து ஓர் உலக அமைப்பினை உண்டாக்கி அதில் ஓர் உலகக் காவல் துறையினை அமைத்து அமெரிக்க நாடுகள் உட்பட எந்த நாடாவது போரைத் துவக்க முயன்ருல் அதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதனை நீ ஏற்றுக்கொள்கிருயா? இல்லையா?	ஆம்	?	இல்லை
நுழைவாண்டினர் ...	73	17	10
இரண்டாம் ஆண்டினர் ...	76	14	10
மூன்றும் ஆண்டினர் ...	77	13	10
கடைசி ஆண்டினர் ...	86	8	6

அறிவு ஆகியவற்றில் சிறந்து விளங்குமாறு செய்து, அவற்றைக் கொண்டு புதிய சமூகத்தை அமைக்க மற்றவர்களது ஒத்துழைப்புடன் திட்டமிட்டு உழைக்கத் தயார்செய்வதே யாகும்.'[28]

அரசியலில் இளைஞர்கள்

1950ஆவது ஆண்டின் சென்ஸஸ் கணக்குப்படி, அவ்வாண்டில் நடந்த தேர்வில் முன்னர் எப்பொழுதும் வாக்களிக்காத எட்டு மில்லியன் மக்கள் ஜனதிபதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையினைப் பெற்ற

[28] N. Edwards, 'The Adolescent in Technological Society,' Forty-third Yearbook of the National Society for the Study of Education, Part 1, 1944, p. 196.

தாக அறிகின்றோம். இளைஞர்கள் பெரும்பாலும் பெற்றோர்கள் சார்ந்திருக்கின்ற அரசியல் கட்சிகளையே பின்பற்றுகின்றனர். இருப்பினும் இன்றைய இளையோர்கள் முன்னையப் பதிகங்களில் இருந்த இளையோர்களிடமிருந்து பிரித்து உணர்வதற்குரிய சில குணவியல்புகளைப் பெற்றுள்ளார்கள். இன்று இளையோர்கள் 40, 50 ஆண்டுகளுக்கு முன்னிருந்தவர்களைக் காட்டிலும் சிறப்பான கல்வியினைப் பெற்றுள்ளார்கள். இரண்டாவதாக, இளைஞர்கள் அவர்களுடைய தந்தையர்கள் கொண்டிருந்ததைப்போன்று கட்சியிடம் அதே அளவு பற்றுறுதி கொண்டிருக்கவில்லை. 'அவர்கள் என்ன கூறினாலும் யாரைத் தேர்ந்தெடுத்தாலும் கட்சியின் பக்கமே இரு' எனும் கொள்கை செல்வாக்கினை இழந்துவிட்டது. மேலும், சோதித்துப் பார்க்க விரும்புகின்ற அமெரிக்கனின் தனித்த குணம் எங்கும் பரவியிருப்பதுபோல் அரசியல் துறையிலும் பரவியுள்ளது. இது இளையோர்களை இப்பொழுது இருக்கின்ற திட்டம் கடந்த கால அனுபவத்தின் காரணமாகச் சிறப்பாக இல்லை என்று உணர்ந்தால் வேறு புதிய திட்டத்தினை அளிக்கும்படித் தூண்டுகின்றது. மேலும், இச் செயல்களில் இளைஞர்களுக்கு வழிகாட்டல் அளிக்கவேண்டும் என்பதனைக் குறிப்பிடவேண்டும். ஜனநாயகக் குறிக்கோள்களும், ஜனநாயக முறையில் நடந்து கொள்வதும் தானாகத் தீர்மானித்தலும் தனியனது பகுதிகளாக ஆவதற்கு ஏற்ப வழிகாட்டல் அமையவேண்டும்.

ஜியார்ஜியாவில் 1943ஆம் ஆண்டில் வாக்களிக்கும் வயது பதினெட்டாகக் குறைக்கப்பெற்றது. இச் சட்டம் வந்த முதல் பத்து ஆண்டுகளில் இளம் வாக்காளர்களது நடவடிக்கைகளைப்பற்றிய ஆய்வு, அவர்கள் முதியோர்கள்போன்றே நடந்து கொண்டார்கள் என்று காட்டியது. கடுமையான போட்டிகள் உள்ள தேர்தல்களின் போது அதிகமான வாக்காளர்கள் வாக்கிடுகின்றனர். அவர்கள் குடும்ப சமுதாய அக்கறைகளின் அடிப்படையில் வாக்களிக்கின்றனர். வாக்களிக்கும் வயதினைக் குறைத்ததால் முதலில் கடலலைபோன்று அதிகமான வாக்காளர்களைக் கொண்டுவந்தது. ஜியார்ஜியாவிலுள்ள கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் உள்ள அரசியல் சங்கங்கள் மற்ற அண்டை நாடுகளைக் காட்டிலும் அதிகமாகச் செயல்படுகின்றன என்று காணப்பெற்றது. சில நிலைகளில் மாணவர்களுக்கு வாக்களிக்கும் முறைபற்றி கல்வியறிவு அளிக்கப்பெறுகின்றது. முன்னாள் கவர்னர் ஆர்னல் (Arnall) என்பவர் ஜியார்ஜியாவில் இச் சட்டத்தினை முதன்முதலில் கொண்டுவந்தார். அவர் குறிப்பிடுவதாவது: 'உண்மையில் இளைஞர்கள் அரசியலில் அதிகமான அக்கறை கொள்கின்றனர்; ஏனெனில், அதனைப்பற்றிப் பள்ளியில் படிக்கின்றனர்; உடனே அவர்கள் செயலில் ஈடுபட விரும்புகின்றனர்.'

இளைஞர்களும் சுதந்திரமும்

சுதந்திரம் என்பது அமெரிக்கனின் மரபாகும். அமெரிக்க வரலாறு முழுவதும் சுதந்திரத்திற்கான குரல் முக்கியப் பங்கினை வகித்து வந்துள்ளது. 1942ஆம் ஆண்டின் ஃபார்ச்சூன் (Fortune) மதிப்பீட்டின் முடிவுகள், அமெரிக்க உயர்நிலைப் பள்ளி இளைஞரது கருத்துகள், நமது ஜனநாயக அரசின் கொள்கைகளை நம்புபவர்களுக்கு மிகவும் ஆதரவாக இருக்கின்றன. அவை இளைஞர்கள் விடுதலை பெறுவதற்கு மிகவும் சிறப்பான மதிப்பினைக் கொண்டிருப்பதாக நமக்கு அறிவிக்கின்றன. அவர்கள் மதிப்பு தருகின்ற விடுதலைக் குறிக்கோள்கள் நமது முன்னோர்கள் போரிட்ட நிலைகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றனவேயன்றி, தொழில், பொறியியல் வளர்ச்சிகளினால் விளைந்த நிலைகளுடன் தொடர்பு கொண்டவைகளாக இருக்கவில்லை. அட்டவணை 18—7-ல் அளிக்கப்படுகின்ற முடிவுகள் 82·5 சதவீதத்தினர் பேச்சுச் சுதந்திரத்தினையோ வணங்குகின்ற சுதந்திரத்தினையோ விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை என்று காட்டுகின்றன.[24]

அட்டவணை 18—7

உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் கீழ்க்கண்ட கேள்விக்கு அளித்த துலங்கல்கள் :

கீழ்க்காணும் சுதந்திரங்களில் ஏதாகிலும் ஒன்றை விட்டுவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் நீ விட்டுக்கொடுக்க மிகவும் குறைவாக விரும்புகின்ற சுதந்திரம் யாது? நீ அதிகமாக விரும்பி அளிக்கின்ற சுதந்திரம் யாது?

	குறைவான விருப்பம் சதவீதம்	அதிகமான விருப்பம் சதவீதம்
பேச்சுச் சுதந்திரம்	46·0	·9
சமயச் சுதந்திரம்	36·5	1·8
வாக்களிக்கும் உரிமை	5·2	6·4
ஜூரிகளைக்கொண்டு வழக்கினைத் தீர்த்தல்	3·8	3·9
நீ விரும்பினால் வேலைகளிலிருந்து மாறுகின்ற சுதந்திரம்	3·0	20·8
நீ முடிந்தால் ஆண்டிற்கு 3,000 டாலருக்குமேல் சம்பாதிக்கும் உரிமை ...	2·8	59·9
தெரியாது	3·2	6·4

[24] 'The Fortune Survey,' Fortune, November, 1942, p. 8.

உலகத்தில் மக்களது கருத்துகளைப்பற்றிய சிக்கல்கள் தோன்றி யுள்ள நமது வரலாற்றுக் காலத்தில் இது மிகவும் குறிப்பிடத்தக்க தாகும்.

இளையோர்களைப்பற்றிய நமது ஆய்வில் பண்பாட்டுத் தேவை களின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மனப் பான்மைகள், குறிக்கோள்கள், பயன்மதிப்புகள் ஆகியவை பெறப் பட்டவைகளாகும். 3,000 உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் மாதிரி கள் "உரிமைச் சட்டம்", "கம்யூனிசத் திட்டம்" ஆகிய சில நாஸிக் கொள்கைச் கருதுகோள்கள் தரப்பட்டு அவைகளை ஏற்றுக்கொள் ளும் அளவினை 60 இனம் கொண்ட கேள்வி நிரல் சோதனைமூலம் சோதிக்கப்பெற்றனர்.[25] ஜனநாயகக் கொள்கைகளை கடைப்பிடிப் பதற்கும், உயர்ந்த பொருளாதார அந்தஸ்து, தாயாரின் கல்வி உயர்ந்த நிலையில் இருத்தல், உண்மைச் செய்திகளை அறிந்திருத்தல், நகரத்தில் வாழ்தல், உயர்ந்த படிவநிலை ஆகியவற்றிற்கிடையே நேர் நிலையான உடன் தொடர்புகள் இருப்பதாகக் காணப்பெற்றது.

இளைஞர்கள் வல்லாட்சி முறையைக்காட்டிலும் ஜனநாயக முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றால் அவர்களுக்குத் தேசியப் பிரச்சினைகள் பற்றியும், அகில உலகப் பிரச்சினைகள் பற்றி யும் கல்வி புகட்டல் வேண்டும். உலகக் குடிமைக்கான கல்வியை அளிக்கவேண்டுமெனில் இன்றைய பள்ளிகளிலுள்ள ஆசிரியர்கள் தனித்த வழிகாட்டல், கல்வி அறிவு முறைகள் ஆகியவைகளைக் கொண்டு எலிஸபெத் ஈவான்ஸ் போன்றோருக்கு அகில உலக பிரச் சினைகளை, நம்பிக்கை, தைரியம், தொலையறிவு ஆகியவற்றின் துணை களைக்கொண்டு தீர்ப்பதற்குரிய திறனை அளிக்கவேண்டும். இதனைச் செய்வதற்கு அகில உலகச் சிக்கல்களைப்பற்றிய அறிவினையும், அகன்ற கருத்துகளையும், மூடப்பழக்கங்களிலிருந்து விடுதலையும், சார்பு எண்ணம் இல்லாத் தன்மையையும் ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டும். வாழ்க்கையைப்பற்றிய பயனுள்ள மெய்யுணர்வினையும், இளைஞர்களிடத்து நம்பிக்கையும், இன்றைய ஆசிரியரும், நாளைய ஆசிரியரும் கொள்ளுதல் அவசியமாகும்.[26]

நமது இளைஞர்கள் ஜனநாயகத்தைப்பற்றி நடுநிலையான அல்லது எதிர்மறையான மனப்பான்மையைக் காட்டிலும் நேர்நிலையான மனப் பான்மையைக் கொள்ளவேண்டுமென்றால், அவர்கள் நிறைவேற்ற

[25] H. H. Remmers, et al., 'Does Youth Believe in the Bill of Rights?' Purdue Opinion Panel, 1951, No. 30.

[26] A good presentation of the period ahead is presented by E. J. Trueblood, The Dawn of a Post Modern Era. New York : Philosophical Library, 1954.

வேண்டிய பொறுப்புகளையும், வினைமுறைகளையும் அளிக்கவேண்டும். இவைகளை அளிப்பதனால் கல்விக்குரிய வாய்ப்பினைப் பெறுவதோடு ஆரோக்கியம், சமூகப் பொழுதுபோக்குத் தேவைகளைத் திருப்திப் படுத்துதல், ஜனநாயக வாழ்க்கையில் பங்குபெறுதல் ஆகிய வாய்ப்பு களையும் பெறுகிறார்கள். இந்நாட்டை உருவாக்கியவர்கள் செயலில் சுதந்திரத்தை நமது மரபு உரிமையாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆனால், இந்தப் பரம்பரைச் சொத்தைக் காப்பதற்குரிய பொறுப்பு எதிர்காலத் தலைமுறைகளிடையே இருக்கின்றது. உண்மையில் ஒவ் வொரு தலைமுறையிலும் உள்ள இளைஞர்களிடத்து அமெரிக்க வாழ்க்கை வகையின் முக்கியத்துவத்தை விரிவாக்கும் பொறுப்பும் அதனைக் காக்கின்ற பொறுப்பும் அளிக்கப்பெறுகின்றன. இதனால் வருங்காலத் தலைமுறைகளின் குறிக்கோள்கள் நிலையான தன்மையில் அமைக்கப்பெறவும், இவைகளை அடையத் தங்களது வாழ்க்கையினை யும் நலங்களையும் தியாகம் செய்தவர்களது தொலைக்காட்சி முழுமை யாக நிறைவேறவும் சாத்தியமாகின்றது.

உலகக் குடிமைக்கான கல்வி

உலகக் குடிமைக்கான கல்வியை, உலகக் குடிமை என்பது சமூகத்தின் குறிக்கோளாக ஆனால்தான் அளிக்கவியலும். குறிப்பாக, ஆசிரியர்கள், பெற்றோர்கள், இளைஞர்களது வழிகாட்டலில் அக்கறை கொண்ட மற்றவர்கள் ஆகியோர்களது குறிக்கோளாக இன்னும் எதிர்காலத்திலும் உலகக் குடிமை இருந்தால்தான் அக் கல்வியை அளிக்கவியலும். உலகக் குடிமைக்கான பயிற்சியை ஜனநாயக முறையில் வாழ்தலுக்கான பயிற்சியளித்தல் போன்று பள்ளியிலுள்ள தனித்த துறையாரிடம் அளிக்க இயலாது. அது ஒவ்வொரு பாடத் தின் ஒவ்வொரு ஆசிரியரும் அளிக்கின்ற கருத்தினையும் கவனத்தினை யும் பொறுத்துள்ளது. இத்துடன் இல்லம், விளையாட்டு மைதானம், கோயில், மற்ற சமுதாய நிகழ்ச்சிகள் ஆகியவைகளின் கருத்து களுடனும் பழக்கங்களுடனும் இணைதலும் வேண்டும்.

அமெரிக்கச் சிறுவர் சிறுமியர்களுக்குப் பொருளாதாரத் தவறு களைக் கண்டுபிடிக்கக்கூடிய பயிற்சியினை அளிக்கவேண்டும். ஏனெனில், இத் தவறுகள்தாம் அமெரிக்காவை ஒரு தலைமுறை பேரரசுக் கொள்கையை நோக்கிச் செல்ல வைத்தது. வணிகத்திற் கான இசைவான நிலைகள் இருப்பதனால் மற்ற நாடுகள் நமது பொருள்களை விலைகொடுத்து வாங்கி அவர்களுடைய பொருள்களைப் பண்டமாற்றில் விற்பார்கள் என்பதனை உணரச் செய்தல் வேண்டும். நமது பொறியியல் எவ்வாறு செயலுறுகின்றது என்ற அறிவினை அவர் களுக்கு அளிப்பதோடு நமது வாழ்க்கை வகையை எவ்வாறு பாதிக்

கின்றது என்றும் உணர்த்தல் வேண்டும். உற்பத்தியை உண்டாக்கு கின்ற பல்வேறு பதிலாண்மைகள் சிக்கல் வாய்ந்தனவாக இருந் தாலும் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும் அவைக ளிடையே திட்டமும், முறைமையும் இல்லாவிடில் பொருளாதாரக் குழப்பங்களே விளையும் என்பதையும் இளையோர்கள் அறியுமாறு செய்தல் வேண்டும். சமூகத்திலுள்ள உறுப்பினர்கள் எல்லோரும் முழு வாழ்க்கையைப் பெறவேண்டிய அவசியத்தையும், கட்டாயத் தினையும் காட்டல் வேண்டும்.

நிலையான வாழ்க்கை மெய்யுணர்வை வளர்த்துக் கொள்ளுதல்

அதிகாரம் 1-ல் இளையோர்களது வளர்ச்சிக்குரிய பணிகளில் முக்கியமானதொரு பணி வாழ்க்கை மெய்யுணர்வை வளர்த்துக் கொள்ளுதலாகும் என்று குறிப்பிடப் பெற்றது. அதிகாரம் 12-ல் குணவியல் வளர்ச்சியிலும் மெய்யுணர்வு வளர்ச்சியிலும் கோயில் கொள்ளும் பங்குபற்றி வலியுறுத்தப் பெற்றது. அண்மை ஆண்டு களில் கல்வித் துறையாளர்கள் விஞ்ஞானம் மட்டுமே மனிதனுக்குத் தேவையான அறக் கருத்துகளை அல்லது அவனுடைய மனித உறவு களை வழிகாட்டுவதற்குரிய சில தரங்களை அளிக்க முடிவதில்லை என்று தெளிவாகக் காட்டியுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்க நாட்டில் இளையோர் பிரச்சினைகள் பெரிய அளவில் விரிவடைந்திருக்கின்றன. இது அமெரிக்கக் காங்கிரஸின் கவனத்தை யும் கவர்ந்துள்ளது. நல்ல பயன் மதிப்புகளையும், பயனுள்ள குறிக் கோள்களையும், நல்ல குணவியல்புகளையும், இயற்கையைப் பற்றிய நல்ல மெய்யுணர்வினையும், மனிதனது நோக்கம், முடிவுபற்றிய அறி வினையும் கொள்ளவேண்டிய முக்கியத்துவத்தை வாழ்க்கையில் எல்லா நிலைகளிலுமுள்ள தலைவர்களும் வலியுறுத்துகின்றனர். மனப் பான்மைகளைச் சிறப்பாக வளர்க்கின்ற வழியே இன்று இல்லம், கோயில், பள்ளி, சமுதாயம் மற்றப் பதிலாண்மைகள் ஆகியவைகளுக் கும், இளையோர்கள் இளைஞர்கள் ஆகியோர்களுடைய வழிகாட்டல் களிலும், பயிற்சியிலும் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கும் அறை கூவல்களாக விளங்குகின்றன.

முன்னைய அதிகாரங்களில் இளையோனின் வளர்ச்சியில் பல் வேறு சக்திகளும் நிலைகளும் கொள்கின்ற செல்வாக்குகள்பற்றிக் குறிப்பிடப்பெற்றது. பல்வேறு சக்திகளிடையே சிறப்பான இணைப் பையும், வெவ்வேறு பதிலாண்மைகளின் இயக்கம் செயல்கள்பற்றி நன்ருகப் புரிந்துகொள்ளுதலையும் பெறுவதனுல் அவைகளுடைய வேலை பொருளுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும்.

வல்லாட்சி, மக்களாட்சி, தலையிடாமைக் கட்டுப்பாடுகள்

இல்லத்திலும், சமுதாய வாழ்க்கையிலும், வல்லாட்சிமுறை, மக்களாட்சிமுறைக் கட்டுப்பாட்டினைக் கொள்வதனால் ஏற்படும் விளைவுகள்பற்றி முன்னைய அதிகாரங்களில் விவாதிக்கப்பெற்றது. மக்களாட்சி வாழ்க்கை முறைகளில் சிறுவர்களும், சிறுமியர்களும் பங்கு பெறுவதற்குத் தயாரிக்கின்ற மிக முக்கியமான வழிகளில் ஒன்று அவர்களுடைய வழிகாட்டலிலும் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டுள்ள பல்வேறு நிறுவனங்களில் பங்கு பெறுவதற்கு வாய்ப்புகள் அளிப்பதாகும். இருப்பினும் வலுத்தாக்குதல் முறை, மக்களாட்சி முறை, முழுமையான தனியாள் சுதந்திரம் ஆகியவைகளுக்கிடையே இருக்கின்ற உறவினைப்பற்றி ஒரு சராசரி அறிவுடையாளரும், ஆசிரியரும், பெற்றோரும் குறைவாகவே அறிந்துள்ளனர். இவைகளுக்கிடையே இருக்கின்ற உறவு ஒரு நேர்கோட்டில் இருப்பதாகக் கருதப்படுகிறது. அந்நேர்கோட்டின் ஒரு கோடியில் வரும்பிய வாறு வணிகரும், மற்றக் கோடியில் வல்லாட்சி முறையும் இருப்பதாக எண்ணப்பெறுகின்றது. ஜனநாயகம் இவ்விரு கோடிகளுக்கிடையே இருக்கின்ற மையப் புள்ளியாக எண்ணப்பெறுகின்றது. அவ்வாறான கருத்து லீவின் (Lewin) என்பவரால் தவறானது என்று காட்டப் பெற்றது.[27]

இக் கருத்தின்படி இக் கட்டுப்பாட்டு உருவத்தினை ஒரு முக்கோணமாகக் கருதவேண்டும். மக்களாட்சியும்,வல்லாட்சியும், கட்டுப்பாடுகளைக் கொண்ட தலைமைகளின் வகைகளாதலின் அவைகள் ஓரளவு ஒத்திருக்கின்றன. ஆதலின், அவைகளிரண்டையும் ஒரே நேர்கோட்டின் மேலுள்ளவை என்று கருதலாம். வல்லாட்சிமுறைத் தலைமையில் கட்டுப்பாடுகள் யாவும் மையத்தினை நோக்கியே இருக்கும். முழுமையான மக்களாட்சியில் இக்கட்டுபாடுகள் மக்களின் குரலிலும் செயலிலும் இருக்கும். வல்லாட்சி முறைக்கும், மக்களாட்சி முறைக்கு மிடையேயுள்ள கோடு ஒரு தொடர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. அது முழுமையான தலைமைப் பொறுப்பையும், கட்டுப்பாட்டினையும் கொண்ட நிலையிலிருந்து குழுப் பொறுப்பு, கட்டுப்பாடு நிலை வரை பல்வேறு விகித நிலைகளைக் குறிக்கின்றது. படம் 18-5-ல் இவ்வுறவு ஒரு முக்கோணம்மூலம் விளக்கப்பட்டுள்ளது.

வல்லாட்சி முறையும் மக்களாட்சி முறையும் குன்றி LF என்னும் முனையில் குவிகின்றது. அம்முனை விரும்பியவாறு தலையிடாமையைக் குறிக்கின்றது. இப்புள்ளியில் மக்களாட்சி முறையும் முழுமையான

[27] K. Lewin, 'The Dynamics of Group Action', *Educational Leadership*, *1944*. vol. 1, pp. 195-200.

வல்லாட்சி முறை(A),மக்களாட்சி முறை (D), (Laissez Faire (LF) ஆகியவற்றிற்கு இடையேயுள்ள தொடர்புகள். [லீவின் (Lewin) என்பவர் அளித்தது]



படம் 18-5

அளவில் மறைகின்றன. இங்கு முழுமையான தனியாள் வல்லாட்சி முறையும் சுதந்திரமும் அநேகமாக குழப்பமும் இருக்கின்றன.

இளையோர் சிறுவர் சிறுமியர்களுக்குக் கருத்துகளின் மூலமும் சான்றுகள் மூலமும் மக்களாட்சி கட்டுப்பாடுகளின் உண்மையான பொருளினைக் கற்றுத் தருதல் அவசியமாகும். நமது தேசிய வாழ்க்கையில் வல்லாட்சி முறைக் கட்டுப்பாடுகள் இடம்பெறுவண்ணம் தடுக்கக்கூடிய சிறந்த வழி, நமது இல்லங்களும் சங்கங்களும், பள்ளிகளும், கோயில்களும், மற்ற நிறுவனங்களும் மக்களாட்சி முறையில் செயலுறுவதேயாகும். இளையோர்கள் சுதந்திரத்துடன் பொறுப்பும் இருக்கின்றது என்பதைக் கற்றுக்கொள்ளல் வேண்டும். இசைவான சமூக நெறி இருக்கவேண்டுமானால் கட்டுப்பாடுகள் அவசியம் என்றும் உணர்தல் வேண்டும். அவர்களுடைய சொந்தத் தேர்ந்தெடுத்தல்களை உண்டாக்க விரும்பினால் அவ்வாறான தேர்ந்தெடுத்தல்களிலுள்ள பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள விருப்பமும் இருக்கவேண்டும். மக்களாட்சியில் மனிதர்களது இதயங்களில் கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும். இவ்வாறு கட்டுப்பாட்டுப் பழக்கங்கள் வாழ்க்கையின் துவக்க ஆண்டுகளிலேயே தொடங்கி, தனியன் முயற்சியை நோக்கி வளரும்போது தனியனது இயல்புப் பகுதியாக ஆகவேண்டும்.

தன்னைக் கட்டுப்படுத்துதலிலும், தன்னை வழிகாட்டுதலிலும் வளர்ச்சி

நமது தற்காலப் பொறியியல் வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள துரதிஷ்ட வசமான நிலைகளில் ஒன்று இளையோர்கள் தாங்களாகவே முடிவுகளைக் கொள்ள வாய்ப்பின்மையும், அவர்களால் முடியக்கூடிய பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள இயலாமையுமாகும். ஆனால், போர்க்காலத்தில் மட்டுமே 18 வயது சிறுவர்கள் இடையூறுகளுள்ள தீரச் செயல்களையும், பொறுப்புள்ள பணிகளையும் செய்யு

மாறு கோரப்பெறுகின்றனர். பெரும்பாலும் இதனை அவர்கள் பள்ளியில் இருப்பதன்மூலம் அதிகமான பொறுப்புகளுக்குத் தயாராகின்றனர் என்று சொல்லி ஒதுக்கிவிடுகின்றனர். இவ்வாறு அவன் விளையாட்டுப் போட்டிகள் அறிவியல் முயற்சிகள் பல்வேறு ஓய்வுநேரப் பணிகள் ஆகியவற்றின்மூலம் தன்னுலேயே ஆக்கப்படுகின்ற உலகில் வளர்ச்சி பெறுமாறு கட்டாயப்படுத்தப் பெறுகிருன். அவனுடைய உலகம் குழந்தையின் பாவனை உலகமாக இல்லாது முதியோனது உண்மை உலகமாகவும் இல்லாமல் இருக்கின்றது.

இளையோர்களைக் கையாளுகின்ற வினைமுறையின் தொடர்பில் இரண்டு தவறுகள் தோன்றுகின்றன. முதலாவதாக' இளையோர்கள் முதிர்ச்சியடைந்தவர்கள் அல்லது முதிர்ச்சியை அடைகின்றவர்கள் நிலைக்கு அருகில் இருக்கின்ருர்கள். ஆதலின் அவர்கள், பெரிய சமூகக் குழுவின் உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்ற தேவையினை மிக அதிகமாக உணர்கின்றனர். அவர்கள் முன்னுள்ள உலகின் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவதற்கு வாய்ப்புகள் அளிக்கப்படாத பொழுது அவர்கள் தங்களுக்குச் சொந்தமான இன்பங்கள், துன்பங்கள், தோல்விகள் ஆகியவைகளைக் கொண்ட சமூகத்தினை உருவாக்குகின்ருர்கள். இரண்டாவதாக ஒருவன் தானுக முன்னின்று செயல்படுகின்ற பழக்கங்களையும் குடிமைப் பொறுப்புகளையும் உயர்நிலைப் பள்ளி அல்லது கல்லூரியில் ஒரு பாடத்தைப் படிப்பதனுல் மட்டுமே வளர்த்துக்கொள்ள முடிவதில்லை. நமது சமூகத்தில் இளங் குடிமக்களாகச் செயலுறுதற்குரிய வாய்ப்புகளை அளிக்கவேண்டிய தேவையினைச் சில பதிலாண்மைகளும், நிறுவனங்களும் உணர்ந்துள்ளன. இவ்வாருன வாய்ப்புகளை அளிக்கும்போது இளைஞர்கள் நல்ல குடிமகன்களாகவும், சிறந்த இல்லங்களைக் கொண்டவர்களாகவும், முன்னேற்றம் கொண்ட சமுதாயத்தில் வாழ்பவர்களாகவும் ஆகின்றனர். அதிகாரம் 15-ல் இதனைப்பற்றிய செய்திகள் அளிக்கப்படுகின்றன.

இல்லம், பள்ளி, கோயில் மற்றப் பதிலாண்மைகள் ஆகியவை சிறுவர், சிறுமியர்களது வழிகாட்டல்களிலும், நெறிப்படுத்தலிலும் அக்கறைகொண்டிருப்பதினுலும், அவைகளின் திட்டங்கள் இளையோர்களின் வாழ்க்கையையும் செயல்களையும் பாதிப்பதனுலும் அவைகள் ஒன்றுக்கொன்று ஒத்துழைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இளையோர் சிறுவர், சிறுமியர்கள் பெற்ருேர் கட்டுப்பாட்டிலிருந்து சுதந்திரம் பெறுவதற்குப் பல்வேறு வழிகளைக் கடைப்பிடிக்கிருர்கள். பெற்ருேர்களும் அவர்களுடைய அதிகாரத்தை விட்டுக் கொடுக்கத் தயங்குகிருர்கள். பள்ளியும், மற்றப் பதிலாண்மைகளும் வல்லாட்சி முறையினைக் கடைப்பிடிப்பதனுல் இளையோர் சுதந்திரம் அடைவதற்கும், முதிர்ச்சி அடைவதற்கும் உரிய தேவைக்கேற்றவாறு

செயலுறுவதில்லை. பொறுப்புள்ள செயல்களிலும், குறிப்பிடும் படியான நிகழ்ச்சிகளிலும், தன் கட்டுப்பாடும், குழுவில் ஒத்துழைத் தலுமான மக்களாட்சிச் சமூகத்தில் சிறப்பான குடிமைத் தேவைக ளான அனுபவத்தினைப் பெறுவது எவ்வாறு என்ற பிரச்சினை மிகவும் சிக்கலானதாக ஆக்கப்பெற்றுள்ளது. இளையோரைப் பாதிக்கின்ற நிறுவப்பட்ட சமூக சக்திகளின் தேவைகளைத் தொகுத்துக் கூறும் பொழுது அவைகள் கீழ்க்கண்டவற்றைக் கொண்டுள்ளன.

(1) குழந்தைப் பருவத்தின் பிற்பகுதியையும் துவக்க இளை யோர் பருவத்தினையும் பொறுப்பினைப் பெறுவதற்கும் தன் கட்டுப்பாட் டினைப் பெறுவதற்குமான பயிற்சியைப் பெறுவதன் அடிப்படையான காலம் என்று புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

(2) இளையோர்களது தேவைகளையும், இயல்புகளையும் அவர்க ளுடைய சுதந்திரத்தினையும் அந்தஸ்தினையும் அடைவதற்கும் முதி யோர் பொறுப்புகளுக்குத் தயாராவதற்கும் அடிப்படையை அளிக்கக் கூடியவை என்று பெற்றோர்கள் உணர்தல் வேண்டும்.

(3) மக்களாட்சித் தன்மையில் செயலுறுகின்ற உயர்நிலைப் பள்ளிகள் பயனுள்ள கல்வி அனுபவங்களை அளிக்க முயலும்பொழுது மாணவர்களுக்கு அத்திட்டத்தினை அமைப்பதில் பொறுப்புள்ள பங்கினை அளிக்கவேண்டும்.

(4) ஒத்துழைக்கின்ற, பொறுப்புள்ள குடிமக்களாக வளர்ப்ப தற்கு உயர்நிலைப் பள்ளிகள் அக்கறை காட்டுவதனால், பள்ளிகள் தனித்த மாணவர்களது வாழ்க்கையினை நேரடியாகப் பாதிக்கின்ற வற்றில் தன்னாட்சி முறைகளையும் உண்மையான அனுபவங்களையும் அளித்தல் வேண்டும்.

(5) சமுதாய நிறுவனங்கள் இளையோர்களுக்கு வாய்ப்புகளை அளிக்க நன்மை பயக்கத்தக்க செய்திகளைத் திட்டமிட்டு அளித்தல் வேண்டும். அதனால் இளையோர்களது அற, சமூக, சொந்த வளர்ச் சிகள் ஏற்பட உதவியாய் இருக்கும். (இங்குக் கோவில், இளையோர் களுக்குப் பொழுதுபோக்கு, சமூக, ஆன்மீக வளர்ச்சியில் வழிகாட்ட லையும் வாய்ப்புகளையும் சிறப்பாக அமைத்துச் செயலுற இயலும்.)

(6) சமுதாயத்தின் வணிகத்துறையும், தொழில் துறையும் இளையோர்கள் தொழில் உலகினை அறிவதற்குரிய அதிகமான பரந்த சிறந்த வாய்ப்புகளை அளித்து ஒத்துழைக்க இயலும். இச் சிறுவர் களுக்கும் சிறுமியர்களுக்கும் அவர்களுடைய தொழிற்கல்வித் திட்டங்களின் தொடர்பிலுள்ள முடிவுகளை உருவாக்குவதற்குரிய அடிப்படையினை அளிக்க உதவும்.

அதிகாரச் சுருக்கமும் கருத்துகளும்

ஒரு மக்களாட்சிச் சமூகத்தில் இசைவான வாழ்க்கையையும் இன்பமான வாழ்வினையும் கொள்வதற்குப் பொது அறிவுச் செய்திகளையும், பள்ளிகளின் பாடப்புத்தக அறிவினையும், அரசியல் சார்புகளையும், சமயச் சார்புகளையும்காட்டிலும் அதிகமாகப் பெறவேண்டிய தேவை என்னவெனில், இளையோர்கள் நல்வாழ்விற்கான அக்கறைகள், மனப்பான்மைகள், குறிக்கோள்கள், பயன்மதிப்புகள் ஆகியவைகளுடன் வளர்ச்சியுறுவதேயாகும். இது அதனைப்பற்றிக் கவலைப்படுகின்றவர்களும் பதிலாண்மைகளும் ஒன்றுசேர்ந்து ஒன்றாக ஒத்துழைப்பதன்மூலமாகவே பெற இயலும். இளையோர்களைப்பற்றிய நம் ஆய்வு முழுவதிலும் இல்லம் என்பது ஒரு துவக்கமுனை என்று வலியுறுத்தப்பெற்றது. துவக்க ஆண்டுகளின் அனுபவங்கள் ஆரம்பப் பள்ளி ஆண்டுகளுக்குத் தயார்செய்வதுபோன்றே, முன்னிளையோர் பருவ அனுபவங்களும், இளையோர் பருவப் பட்டறிவும் இளைஞனுக்கும் முதிர்ச்சியடைகின்ற தனியனுக்கும் வழிவகுக்கின்றன.

இளையோர் ஆண்டுகள் தனியன்கள் பொதுவாக ஓரளவு சுதந்திரம் அடைகின்ற காலமாக விளக்கப்பெறுகின்றது. இக் காலத்தில் அவர்கள் தங்களைப் பல்வேறு வழிகளில் தங்களது மரபு நிலைகளை எதிர்ப்பதன்மூலமும், பெற்றோர்களது புத்திமதியை எதிர்ப்பதன் மூலமும், பள்ளி ஆசிரியர்கள் சமயத் தலைவர்கள் ஆகியவர்கள் இளையோர்கள் புரட்சி மனப்பான்மையையும் அக்கறையின்மையையும் மாற்ற முனைகின்றபோது எதிர்ப்புத் தெரிவிப்பதன்மூலமும் வெளிப்படுத்துகின்றார்கள். பள்ளி அதிகாரிகளும் இவ் வயதினரை வெறுப்புடன் கருதுகின்றனர். விளையாட்டுச் செயல்களில்மட்டும் இவர்களை அக்கறையுடன் கவனிக்கின்றனர். ஆதலின், இவ் வயது பொதுவாகச் சிக்கலான வயதாகக் கருதப்படுகின்றது. இந் நிலையை மிகவும் எச்சரிக்கையுடன் ஆய்வுசெய்தால், இவ் வயது சிறுவர் சிறுமியர்களை வேறுவிதமாக உணர்வோம். இப் பருவகாலத்தில் சமூகம் பொறியியலின் விளைவினால் பெரும்பாலும் அவர்களுக்குரிய இடத்தினை அளிக்கத் தவறுகின்றது. அது பள்ளி நிகழ்ச்சிகளையும் விளையாட்டுகளையும்மட்டும் மிகவும் செயற்கையான தன்மையில் அக்கறையுடன் கவனிக்கின்றது.

விஞ்ஞானம், புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றின் விளைவுகள் உலகிலுள்ள எல்லாப் பகுதியிலும் உணரப்படுகின்றன. அவைகள் தனித்த பிரச்சினைகளை உண்டாக்காது உலகப் பிரச்சினைகளை உண்டாக்குகின்றன. சிறுவர் சிறுமியர்களுக்கான கல்வி, இப் பிரச்சினைகளுக்குக் கவனிப்பினை அளிக்கவேண்டும் என்ற தேவையினை உணர்த்துகின்றது. உலகக் குடிமைக்கான பயிற்சியும் அதனுடைய குறிக்கோள்களில் ஒன்றாக இருக்கவேண்டும் என்று உணர்த்து

கின்றது. மேலும், மக்களாட்சி தழைக்கவேண்டுமென்றாலும், அதனுடைய மக்களின் நல்வாழ்விற்காகச் செயற்படவேண்டுமென்றாலும் பள்ளி அதனுடைய அறைகூவலை ஏற்றுக்கொண்டு, மாணவர்களுக்கு நாளைய பிரச்சினைகளைச் சிந்திப்பதற்கான செய்தி, திறமைகள், மனப்பான்மைகள் ஆகியவற்றினை அளிக்கவேண்டும். இளைஞர்கள் தேசிய, அகில உலகப் பிரச்சினைகளிலும் கொள்கைகளிலும் கருத்துத் தெரிவிக்கப் பயிற்சியளிக்கப்படல் வேண்டும். அது அகில உலக சகோதரத்துவம் எனும் மெய்யுணர்விற்கு ஏற்ற பயன்மதிப்புகளைக்கொண்டிருக்கவேண்டும்.

இவ்வதிகாரத்தில் இளையோர்கள் முதிர்ச்சியை நோக்கி வளர்ச்சியுறும்போது சில பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர் என்று வலியுறுத்தப்பெற்றது. அவற்றில் சில முன்னைய பிரச்சினைகள் விரிவடைந்ததனால் ஏற்பட்டவைகளாகும். முன்னிளையோன் ஒரு வேலையைத் தேர்ந்தெடுப்பதற்கும், தயாராவதற்குமான பிரச்சினையைச் சந்திக்கின்றான்; அவனுடைய பழைய இல்ல உறவுகளிலிருந்து முழுமையாகப் பிரிந்து சென்று தன்னுடைய சொந்த இல்லத்தினை உருவாக்குகின்ற பிரச்சினையையும் சந்திக்கிறான். பின்னைய பிரச்சினை பொதுவாகத் துணையைத் தேர்ந்தெடுப்பதும், அவனுடைய சொந்த இல்லத்தை உருவாக்குவதுமாகும். பல தொழில், திருமணத் தவறான பொருத்தப்பாடுகள் தோன்றுவது உண்மையாதலின், இப் பிரச்சினைகள் தீவிரமானவையாகவும் சிக்கல் வாய்ந்தவையாகவும் இருப்பதனால், வழிகாட்டல் தேவைப்படுகின்றது. மேலும், மாறாத வாழ்க்கை மெய்யுணர்வை வளர்த்துக்கொள்கின்ற பிரச்சினையும் உள்ளது. இது தனியனது வாழ்க்கையின் துவக்கத்தில் தோன்றிய அதே பிரச்சினையின் விரிவே என்று கூறலாம். முதிர்ச்சியடைவதனால், தனியன் வாழ்க்கையில் பல பிரச்சினைகளைச் சந்திக்கின்றான். அவன் தன்னுடைய சொந்த முயற்சியினால்மட்டுமே அவைகளைத் திருப்திகரமாகத் தீர்க்க முடிவதில்லை. பள்ளிகளிலுள்ள பாடப்புத்தகங்களும் பல கேள்விகளுக்குப் போதிய விடைகளை அளிப்பதில்லை என்று அவன் காண்கின்றான்; தன்னுடைய அன்றாடச் செயல்களின் நடத்தையை மதிப்பிடுவதற்கு வழிகாட்டக்கூடிய சில தரங்களின் தேவையினையும் அறிகிறான். இவ்வாறு அவன் ஏதாவதொரு மாறாத வாழ்க்கை மெய்யுணர்வை அடைவதன்மூலம் தனது சொந்த வாழ்க்கையை முழுமையானதாகவும் இசைவானதாகவும் ஆக்க முயல்கிறான்.

சிந்தனைக்குரிய பிரச்சினைகள்

1. ஒரு மக்களாட்சிச் சமூகத்தின் சொத்துகளாக இளையோர்களைக் கொள்ளவேண்டிய முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.

2. இளைஞர்களும், அவர்களுடைய சுதந்திரங்களும்பற்றிய முடிவுகளிலிருந்து நீ பெறும் முக்கியத்துவம் யாது ?

3. 'உலகக் குடிமை' என்ற சொல்லுக்குரிய பொருள் யாது ? இப் பிரச்சினை எவ்வாறு கல்வியுடன் தொடர்பு கொண்டுள்ளது ?

4. பொறியியலினால் ஏற்பட்டுள்ள முக்கிய சமூக மாறுதல்கள் எவை? இம் மாறுதல்களினால் கல்வி எவ்வாறு பாதிக்கப் பெற்றது ?

5. உடன்போக்கு, திருமணம் ஆகியவற்றின் தொடர்பிலுள்ள பிரச்சினைகள்பற்றிப் பள்ளி செய்யக்கூடியவை என்று நீ கருதுபவை யாவை? இச்செயலை முழுமையாக ஆக்குவதற்குப் பள்ளி செய்யக்கூடியவை என்று நீ கருதுகின்ற சில முக்கியச் செயல்களைக் கூறுக.

6. வளர்ந்தவர்களது நடத்தை குழந்தை நடத்தையினின்று மாறுபட்டதாக நமது சமூகத்தில் மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதற்கான சான்றுகளைத் தரவும்.

7. வாக்களிக்கும் உரிமைகளை 18 வயதிற்குக் குறைத்ததனைப் பற்றி ஆதரித்தும் எதிர்த்தும் கூறப்படும் வாதங்களைத் தருக.

8. படம் 18—4-ல் காட்டப்பட்டுள்ள சீக்கிரமே திருமணங்கள் ஏற்படுகின்ற போக்கினை எப்படி விளக்குவாய்? விரைவில் திருமணங்கள் செய்வதன் நன்மை தீமைகள்பற்றிக் குறிப்பிடவும்.

9. திருமணத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் அருகில் வசிப்பவர்களை ஏற்றுக்கொள்வதைப்பற்றி ஆய்வுகள் கூறுபவை யாவை? இளையோர்களுக்கும் இளைஞர்களுக்கும் அளிக்கப்படும் நமது தற்காலக் கல்வித் திட்டத்தினை இது எவ்வாறு பாதிக்கின்றது ?

10. அறிவில் முதிர்ச்சியடைகின்ற தனியனது சிறப்பான இயல்புகள் என்று நீ கருதுபவைகளை வரிசைப்படுத்துக.

11. இளையோர்களையும் இளைஞர்களையும் குடிமைக்குத் தயார் செய்வதற்குச் சமுதாயமும் பள்ளியும் செய்யக்கூடியவை எவை? 50 ஆண்டுகளுக்கு முன்னரைக்காட்டிலும் இன்று இவை ஏன் மிகவும் முக்கியமானவையாக இருக்கின்றன ?

தெரிவுசெய் நூற்பட்டியல்

1. American Youth Commission, General Report, 'Youth and the Future'. Washington; American Council on Education, 1942.

2. Chambers, M. M., and E. Exton, 'Youth—Key to American Future: An Annotated Biography.' Washington: American Council on Education, 1949.

3. Cole, L., 'Attaining Maturity.' New York: Rinehart and Co., Inc., 1944.————, 'Psychology of Adolescence' (Fourth Edition). New York: Rinehart and Co., Inc., 1954, Chap. 20.

4. Cruze, W. W., 'Adolescent Psychology and Development.' New York: The Ronald Press Co., 1953, Chap. 18.

5. Dublin, L. I., and M. Spiegelman, 'The Facts of Life.' New York: McMillan Co., 1951, Chaps 7 & 15.

6. Edwards, N., (Editor), 'Education in a Democracy'. Chicago: University of Chicago, 1941.

7. Hurlock, E. B., 'Adolescent Development' (Second Edition). New York: McGraw-Hill Book Co., 1955, Chap. 15.

8. McClusky, H. V., 'The Changing Needs of Young Adults' in E. G. Williamson (Editor), 'Trends in Student Personnel Work.' Minneapolis: University of Minnesota Press, 1949, pp. 40-51.

9. Overstreet, H. A., 'The Mature Mind.' New York: W. W. Norton and Co., 1949, Chap. 2.

10. Pierce, W. C., 'Youth Comes of Age.' New York: McGraw-Hill Book Co., 1948.

11. Rothney, J. W. M., and B. A., Roens, 'Guidance of American Youth'. Cambridge: Harward University Press, 1950.

12. Warters, T., 'Achieving Maturity'. New York: McGraw-Hill Book Co., 1949.

13. Zachry, C. B., 'Preparing Adolescents to be Adults', Fortythird Yearbook of the National Society for the Study of Education, 1944, Pt. I., pp. 332-346.

கலைச்சொல் அகராதி

(ஆங்கிலம்—தமிழ்)

Achievement	அடைவு
Adjustment	பொருத்தப்பாடு
Adolescence	இளையோர் பருவம்
Adolescent	இளையோன்
Adolescent age	இளையோர் வயது
Adolescent problems	இளையோர் பிரச்சினைகள்
Adolescent personality	இளையோர் ஆளுமை
Anatomical age	உடலமைப்பு வயது
Anxiety	பற்றார்வம்
Appetite	வேட்கை
Aspirations	அவாக்கள்
Attitudes	மனப்பான்மைகள்
Basal metabolism	அடிப்படை உயிர்ப்பொருள் மாறுபாடு
Behaviour	நடத்தை
Beliefs	நம்பிக்கைகள்
Belongingness	சார்புடைமை
Character	குணவியல்பு
Civilization	நாகரிகம்
Cliques	தன்னல உட்குழுக்கள்
Conflicts	சிக்கல்கள்
Compensation	ஈடுசெய்தல்
Counseling	அறிவுரையளித்தல்
Counselor	அறிவுரையாளர்
Courtship	உடன்போக்கு
Crushes	பெருந்திணைகள்
Cumulative record	திரள் அறிக்கை
Dating	நாளிடல்
Delinquency	குற்றநடத்தை
Delinquent	குற்றநடத்தையுள்ளவன்
Dental age	பல்வயது
Drives	உந்துகள்
Dropouts	பள்ளியைவிட்டு இடையிலேயே நின்றுவிடுபவர்கள்
Educational adjustment	பள்ளிப் பொருத்தப்பாடு
Educational counseling	கல்வி அறிவுரையளித்தல்

Educational guidance	...	கல்வி வழிகாட்டுதல்
Ego-centrism	...	தான் எனும் முனைப்புக்கொண்டிருத்தல்
Emancipation	...	வெளிச்செல்லுதல்
Emotional control	...	மனவெழுச்சிக் கட்டுப்பாடு
Emotional development	...	மனவெழுச்சி வளர்ச்சி
Emotional immaturity	...	மனவெழுச்சி முதிர்ச்சியடையாமை
Emotional responses	...	மனவெழுச்சித் துலங்கல்கள்
Endocrines	...	எண்டோக்ரீன்கள்
Environment	...	சூழ்நிலை
Fears	...	அச்சங்கள்
Frustration	...	மனமுறிவு
Games	...	குழு விளையாட்டுகள்
Gangs	...	குழுக்கள்
Glands	...	சுரப்பிகள்
Growth	...	வளர்ச்சி
Habits	...	பழக்கங்கள்
Health adjustment	...	ஆரோக்கியப் பொருத்தப்பாடு
Height-weight chart	...	உயரம் - பருமன் பட்டியல்கள்
Homo-sexuality	...	ஒரே பால் உணர்வு
Harmone	...	சுரப்பிநீர்
Identification	...	ஒன்றியிருத்தல்
Inferiority complex	...	தாழ்வுச் சிக்கல்
Insight	...	உட்காட்சி
Intelligence	...	நுண்ணறிவு
Intelligent quotient	...	நுண்ணறிவு ஈவு
Intelligence tests	...	நுண்ணறிவுச் சோதனைகள்
Interests	...	அக்கறைகள்
Interest inventories	...	அக்கறைக் கண்டுபிடிப்புகள்
Juvenile crime	...	இளமையில் குற்றம்
Juvenile delinquency	...	இளமையில் குற்றநடத்தை
Longitudinal studies	...	நெடுக்குவகை ஆய்வுகள்
Maladjustment	...	தவறான பொருத்தப்பாடு
Masturbation	...	கைமுட்டி அடித்தல்
Maturity	...	முதிர்ச்சியடைதல்
Menarche	...	பூப்புப் போக்கு
Mental growth	...	மனவளர்ச்சி
Mental health	...	மன ஆரோக்கியம், மனநலம்

Mental hygiene	...	மனநலவியல்
Motor performances	...	இயக்க வினைமுறைகள்
Needs	...	தேவைகள்
Peers	...	ஒப்பார்கள்
Personality	...	ஆளுமை
Petting	...	தழுவுதல்
Postadolescents	...	பின்னிளையோர்
Preadolescents	...	முன்னிளையோர்
Problems	...	பிரச்சினைகள்
Problem check list	...	பிரச்சினைகளைக் கோடிட்டுச் சரி பார்க்கும் பட்டியல்கள்
Puberty	...	பூப்படைதல்
Pubic ceremonies	...	பூப்புச் சடங்குகள்
Pubic hair	...	பூப்பு மயிர்
Projection	...	புறத்தோற்றம்
Sex	...	பால்
Social adjustment	...	சமூகப் பொருத்தப்பாடு
Socialization	...	சமூகமயமாதல்
Social sex development	...	சமூகப் பால் வளர்ச்சி
Subcutaneous fat	...	தோலுக்குக் கீழுள்ள கொழுப்பு
Teen-ager	...	பதின் வயதினன்
Televiewing	...	தொலைக்காட்சியைப் பார்த்தல்
Truancy	...	ஊர்சுற்றுதல்
Values	...	பயன்மதிப்புகள்
Vocational adjustment	...	தொழிற் பொருத்தப்பாடு
Voice changes	...	குரல் மாறுதல்கள்.
Withdrawal	...	பின்வாங்குதல்
Worries	...	கவலைகள்
Youth and vocational aspiration	...	இளைஞர்களும் தொழில் அவாக்களும்
Youth-serving agencies	...	இளைஞர்களுக்குப் பணி புரியும் நிறுவனங்கள்

ஆசிரியர் பட்டியல்

அ

அசும், ஏ. எல்., 710

அபெர்நிதி, இ. எம்., 119

அப், ஜே. சி., 38

அர்னால்ட், எம்., 317

அர்னால்ட், எம்., 264

ஆ

ஆடம்ஸ், சி. ஆர்., 752

ஆபல்சன், எச். எச்., 372

ஆலன், ஏ. டி., 675

ஆலன், எல்., 115

ஆல்போர்ட், ஜி. டபிள்யூ., 278, 315

ஆல்சன், டபிள்யூ. சி., 186

ஆண்டர்சன், எச். டி., 646

ஆண்டர்சன், ஜெ. ஈ., 13, 118, 140, 185, 257, 459

ஆன்பின்சன், ஆர். டி., 616

இ

இக்கார்ட், ஆர். ஈ., 789

இக்கன்ரோட், சி. ஜே., 702

இங்கரஹாம், என். ஆர்., 492

இங்கர்஻ால், எச். எல்., 466

இங்கிலீஷ், எச். பி., 506

ஈ

ஈவான்ஸ், இ., 761

எ

எக்ஸ்ட்டன், இ., 778

எட்வர்ட்ஸ், டி. பி., 127

எஸ்டியின், எல். ஜே., 279

எல்லீஸ், ஆர். டபிள்யூ. பி., 42, 80

எவரின், எல். ஏ., 339

எலியஸ், எல். ஜே., 258, 296, 601

எல்லிஸ், டி. பி., 422

எல்ஸ், கே. எஸ்., 178

எஸ்பென்ஸ்ஷேட், ஏ., 86, 87, 88, 92

ஒ

ஓ'கிலி, எல். ஜீ., 411

ஓ'ரிலி, சி. டி., 277

ஓ'ரிலி, இ. ஜே., 277

ஓல்சன், இ. ஜீ., 586, 627

ஓல்சன், டபிள்யூ. சி., 186

ஓல்ஸ், இ. பி., 570, 571

ஓவர்ஸ்டிரீட், எச். ஏ., 778

க

கபோட், ஜீ. ஜே., 201

கார்மைக்கேல், எல்., 18, 109, 141

காக்ரேன், எச். எஸ்., 542

காரி, எம்., 586

காரிசன், கே. சி., 140, 328, 370 395

காரிசன், எஸ். இ., 587

கார்சைட், எச். வி., 81

கார்டர், எச். டி., 670

காட்லூவின்., 369

கார்டன், ஈ., 657

கார்ஃபீல்ட், எல்., 671

கார்மன், பி. ஆர்., 272

கால்ஹான், ஜே., 459, 460

கான்டிராடி, சி., 182, 188

கான்ராட், எச். எஸ்., 188, 142

கரோல், ஆர். ஈ., 346

கார்ல்., 199

கிங்ஸ்லீ, எஸ். வி., 158

கிட்ச், டி. இ., 607

கிப்பி, ஆர். ஜி., 207
கியா, பி. ஆர்., 222
கிரியூலிச், டபிள்யூ. டபிள்யூ., 37, 38, 57, 60, 61, 68, 80, 82, 108
கிரிஸ்டென்சன், எச். டி., 526
கிரூபர், எப், சி., 627
கிரெகரி, சி. எல்., 553
கிரெஸ்ச்மர், இ., 336
கிரெஸ்ஸி, டி. ஆர்., 705
கிரே, ஜே. எஸ்., 140
கிரேமர், டி., 586
கிரேமர், எம்., 81
கிரோன் பேச், எல். ஜே., 676
கிரோனென்பெர்க், எச். எச்., 662
கிலக்ஹோன், சி., 363
கிலான்டர், எச். எஸ்., 546
கிலீன்ஸ்மிட், ஈ. ஈ., 423
கில்லஸ்பை, ஜே. எம்., 315
கிவாரசெயஸ், டபிள்யூ. சி., 729
கிளார்க், ஈ, டி., 262
'கிளார்க், டபிள்யூ. ஆர்., 222, 223
கிளிக், பி. சி., 757
கிளின், எச்., 81
கிளைன், டபிள்யூ., 539
கிளுக்ஸ்பர் சகோதரியார், எம்., 254, 325, 520, 547
கின்ஸே, ஏ. சி., 529, 537
கின்ஸ்பெர்க், ஈ., 684
குட், எச். என்., 41
குட், சி. வி., 19
குட்ஈனப், எப். எல்., 114
குப்கை, ஓ., 260, 261
குயூரோஜ், எஃப்., 719
குரும்பரின், டபிள்யூ. எம்., 231, 232
குரூஸ், டபிள்யூ. டபிள்யூ., 29, 67, 108, 185, 237, 325, 498
குளுக், ஈ. டி., 703
குளுக், எஸ். எஸ்., 703
குளுவர், ஈ. எச்., 85
குஹ்லன், ஆர். ஜி., 29, 68, 109, 141, 284, 317, 396, 498, 513, 627, 657, 685
கூப்பர், எம்., 414
கூமர், ஏ., 197
கூலீ, சி. எச்., 170
கூல், எல்., 237, 285
கூன், சி. எல்., 291
கூஸ், எல். வி., 663
கெட்டர் கேம்ப், ஜி. சி., 627
கெல்மன், டபிள்யூ., 682
கேட்ச்போல், எச். ஆர்., 57, 68
கேட்டல், ஆர். பி., 330, 356
கேம்ப்பெல், ஈ. எச்., 165, 166, 546
கேம்ப்பெல், எம். டபிள்யூ., 716
கோடார்ட், எச். எச்., 112, 700
கோடின்ஸ்கி, ஆர்., 364
கோப், டி., 679
கோம்மா ரோவிஸ்கி, எம்., 673
கோரி, எஸ். எம்., 598
கோரிங், சி., 699
கோல், எல்., 67, 108, 140, 185 237, 325, 498, 546, 586, 626
கோல்ட், எம். ஆர்., 5, 41
கோல்ட், எச். என்., 5, 41
கோல்ட்பார்ப், டபிள்யூ., 355
கோல்ட்பெர்க், டி. ஏ., 546
கோல்ட்வாஸ்ஸர், எம்., 133
கோவர், டி. ஆர்., 605
க்ளார், ஜே., 54
க்ரூஸ், டபிள்யூ. டபிள்யூ., 586, 626, 684
க்ரோகர், ஆர்., 654
க்ளுட்டா, சி. எஸ்., 57, 68

ச

சக்கோடா, ஜே., 577
சலன்ஜர், டி. ஈ., 729

சாப்பன்பில்டு, பி. ஆர்., 412
சால்ட்டர், எம். டி., 151
சால்மன், சி. ஐ., 57, 68
சான்ட், எஸ். என். எப்., 151
சான்டர்ஸ், சி., 616
சிம்ஸன், ஆர். ஜி., 216
சிம்மன்ஸ், கே., 73, 74, 75, 82
சில்வர்மேன், எஸ். எஸ்., 169
சிஸ்ஹோம், எல். எல்., 684
சிடுமென், ஜே. எம்., 30, 68, 141, 186, 237, 499, 547, 586, 627, 685
சூபர், டி. ஈ., 669, 677
செல்கிரிக், டி. கே., 454
செல்பி, டபிள்யூ. எச்., 262
செரீன், எம். எப்., 616
சேகல், டி., 141, 390
சேட்லர், டபிள்யூ, எஸ்., 80, 186
சேபி., 250, 252
சேவே, ஈ., 296, 325
சேன்டர்ஸன், எச்., 685
சைமாண்ட்ஸ், பி. எம்., 191, 225, 441, 499
சோலன்பெர்கர், ஆர். டி., 246

ட

டக்கர், டபிள்யூ. பி., 337
டடன்ஹாம், ஆர். டி., 73, 78
டப்ளின், எல். ஐ., 778
டர்பர்வில்லி, ஜி., 754
டர்னர், சி. இ., 454
டஸ்லிங், எல்., 679
டாட், டி. டபிள்யூ., 75
டாபா, எச்., 172, 285
டாப்பன், பி. டபிள்யூ., 688
டாப்பிங், ஆர். ஆர்., 691
டார், எம்., 307
டார்ப்மேன், ஆர். ஐ., 57, 68
டார்வின், சி., 530
டாஸ், ஆர். ஜே., 201
டிமாக், எச். எஸ்., 485, 486, 498, 579
டியர்பார்ன், டபிள்யூ. எப்., 76, 131
டியூஅன், ஆர்., 722
டியூகன், டபிள்யூ. இ., 636, 640
டியூவி, ஜே., 552
டியூட்ஸ்சி, எச்., 387
டியூட்ஸ்சி, ஏ., 729
டியூட்சே, ஜே. எம்., 126
டியூரா, எம். ஏ., 710
டிரெஸ்ஸல், பி. எல்., 607
டிரையோன், சி. எம்., 310, 390, 501, 506, 547
டெய்லர், கே. டபிள்யூ., 286
டெய்லர், கே. வி. எப்., 670
டெர்மன், எல். எம்., 115, 586, 547
டேல், ஈ., 219
டேவி, எம். ஆர்., 754, 755
டேவிட்சன், பி. ஈ., 646
டேவிஸ், ஏ., 158, 243, 288, 295
டொல்லார்ட், ஜே., 243, 158, 288
டோ ஆன், டி. சி., 601, 659
டோனட், எல்., 691

த

தர்ஸ்டன், எல். எல்., 238
தாம்ஸன், ஜி. ஜி., 506 507,
தாம்ஸன், எச்., 109
தாம்ஸன். சி. ஈ., 360
தாண்டைக், ஆர். எல்., 121 201, 279
தாண்டைக், இ. எல்., 112
திரேஷர், எப். எம்., 572
தோர்ப், எல். பி., 412

ந

நதான்சன், ஐ. டி., 38, 39
நார்ட்டன், எஸ். கே., 612,

நார்ட்டன், ஜே. எல்., 648
நுக்கல்சன், ஏ., 72, 73
நிமாய்டின், பி. ஓ., 202
நியுமேயர், எம். எச்., 325
நியுகார்டன், பி. எல்., 178, 563
நியூகோம், டி. எம்., 239, 280, 238
நெல்சன், இ., 206
நேயர், ஜீ., 627

ப

பங்கி, எச். எச்., 523
பட்டர்பீல்டு, ஓ. எம்., 479, 546
பட்லர், ஜீ. டி., 586
பர்டன், டபிள்யூ. எச்., 342
பர்பீயீ, பி. எச்., 562
பர்ஜிஸ், ஈ. டபிள்யூ., 718
பாக்ராக், ஏ. ஜே., 428
பாசமானிக், பீ., 414
பாட்டி, டபிள்யூ. எல்., 412, 364
பாய்ன்டன், ஜே., 96
பாய்ன்டன், பி., 96,
பாய்ன்டைன், பி. எல்., 229
பாருச், டி. டபிள்யூ., 412
பார்கர், ஆர். ஜீ., 120, 249
பாலஸ்ட்ரா, வி. ஆர்., 354
பால்சன், பி. பி., 685
பால்சன், ஜே. கே., 476
பால்ட்வின், ஏ. எல்., 459, 460
பால்ட்வின், பி. டி., 70, 81
பால்மர், சி. இ., 81
பால்ஸ்டீயின், ஈ. ஐ., 440
பாஸார்ட், ஜே. எச். எஸ்., 498
பாஸ்வெல், எப். பி., 82
பிப், எப். ஜீ., 557
பியர்சன், கே., 132
பியர்சன், ஜீ. எச். ஜே., 412
பியர்ஸ், டபிள்யூ. சி., 499
பிரஸ்கோட், டி. ஏ., 314
பிரஸ்பி, எல். எம்., 81
பிராட்லீ, டபிள்யூ. ஏ., 136, 137, 649, 677
பிராவ்லா, வி. கே., 288
பிரான்க், எஸ். கே., 11, 12, 29, 67, 498
பிராஸ்ட், ஆர்., 489
பிரிஸ், எப். எச்., 459, 460, 498
பிரிக்ஸ், டி. எச்., 237
பிரிட்டின், எப்., 536, 546
பிரிமேன், எப். என்., 113, 138
பிரிமேன், எப். எஸ்., 677
பிரிட்ஜஸ், கே. எம்., 144, 237
பிரிவே, இ. இ., 489
பிரின்க், டபிள்யூ. ஜீ., 194
பிரேட்டர், ஆர்., 658
பிரேஸியர், ஏ., 101, 102, 108
பிரை, சி. சி., 540
பிரௌன், எப். ஜே., 548
பிரௌன், டி., 257
பிலிப், பி. ஆர்., 85
பிப்லிலேடு, சி. டி., 553
பிலென் சகோதரியார், எம்., 322
பிளாக், வி. எல்., 477, 478, 480, 494
பிளாஸ், பி., 432
பிளீஜ், யு. எச்., 220, 225, 252, 320, 353, 377, 226, 237, 252, 254, 289, 325, 529, 546
பிளமிங், ஈ. ஜீ., 174, 175
பிளமிங், சி. எம்., 498, 516, 627
பிளெமிங், வி., 357
பிளேயர், ஏ. டபிள்யூ., 342
பிளேட்ஸ், டபிள்யூ. ஈ., 144, 151, 152
பின்சன், வி. ஈ., 135
பின்டர், ஆர்., 153

பிராவ்லா, வி. கே., 288
பீச், இ. வி., 384
பீட்டி, டி. பி., 627
பீட்டர்ஸ், இ. எப்., 646
பீபில், எச்., 124
பீல்ட்ஸ், எம். ஆர்., 546
புரோம்லி, டி. பி., 536, 546
புரோன்னர், ஏ. எப்., 696, 707
புளூமெல், சி. எஸ்., 494
புரோணர், ஏ. எப்., 350
பூர்மன், டபிள்யூ. ஆர்., 189
பெகலன் சிஸ்டர்., 322
பெட்டில்ஹீய்ம், பி., 285
பெயரி, என்., 73, 78, 84, 247, 248
பெயின், ஆர்., 743
பெர்டி., ஆர். எப்., 592
பெர்ட்மேன், எம். எச்., 708
பெர்ஹுர்ட், டபிள்யூ. எச்., 453
பெல், எச். எம்., 108, 276, 482, 569, 666
பெனடிக்ட், ஆர்., 8
பெனிக், எப். டபிள்யூ., 45
பென்டன், என்., 729
பென்னெட், இ. எம்., 313
பெண்ட், ஆர். கே., 662
பேகர், எச். ஜே., 325
பேயிசர், என்., 725
பேயார்ட், பி., 229, 230
பேயிங்டன், பி. எல்., 435
பேயார்டு, பி., 230
பேஜ், ஜே. டி., 155
பைல், எஸ். ஐ., 108
பையீல், டபிள்யூ. எச்., 128
போஆஸ், எப்., 42
போடர், டி. பி., 384
போப், பி., 516
போம்ரே, டபிள்யூ. பி., 537
போட்டர்பீல்டு, ஏ. எல்., 586
போசார்ட், ஜே., 498
போல், ஈ. எஸ்., 498
போவர், 88
போனி, எம். ஈ., 180, 181
போஹன், பி. சி., 582
ப்லோரி, சி. டி., 113, 133

ம

மக்கயர், சி., 559
மக்கார்டி, பி. எஸ்., 194
மக்கிளஸ்க்கி, எச். வி., 778
மக்கிரீயரி, டபிள்யூ. எச்., 607
மக்கி, டபிள்யூ., 230
மக்பீன், டி., 197
மக்டொனூல்டு, எம்., 559
மக்பர்லான், ஜே. டபிள்யூ., 115
மக்லீன், ஏ. எச்., 265, 268
மர்பி, எப். ஜே., 686
மர்பி, எல். பி., 142
மர்பி, ஜீ., 364, 428
மர்ரே, எச். ஏ., 863
மர்ரே, ஜே. எம்., 456
மாங்கஸ், ஏ. ஆர்., 429, 616
மான்டேகு, ஜே. பி., 390
மாதிஸ், டபிள்யூ. டி., 267, 269
மாம்ன், சி. டபிள்யூ., 701
மாம்ன், எச். ப்., 701
மாரோனி, ஜே. டபிள்யூ., 53
மார்கன், ஏ. ஈ., 584
மார்க்ரெட் மியட்., 6
மார்கன்ராத், ஈ. சி., 636
மார்க்கிஸ், ஜே. ஆர்., 754
மார்ட்டின், சி. இ., 537
மார்ட்டின் சிஸ்டர், எம். ஏ., 398
மார்ஸ், எம். எம்., 43
மாலர், ஜே. பி., 721
மாலிசன், ஜி. ஜி., 679
மால், பி., 122
மால்ம், எம்., 29, 68, 109, 185, 237, 498, 547, 586, 627
மில்லர், எல். எம்., 630
மில்லர், எல். டபிள்யூ., 422

மில்லர், என்., 30
மில்லர், ஜே., 241, 242
மில்லிகம்ப், டி. ஏ., 144
மில்னார், ஈ., 364
மில்ஸ், சி. ஏ., 40
மீக், எல். எச்., 162, 567
மீக்கர், எம்., 178
மீட், எம்., 6, 29
மீட், ஜி. எச்., 239
மீரியன், ஜே. எல்., 664
முல்லன், எப். ஏ., 415
முரிஞே, ஜே. எல்., 583
மூர், எப். டி., 162
மூனி, ஆர். எல்., 369, 371
மெக்கூர்டி, எச். எல்., 89
மெக்கேயி, டி. எல்., 230
மெக்லாய், சி. எச்., 90, 100
மெரிடித், எச். வி., 71
மெர்ரி, ஆர். வி., 325
மெர்ரி, எப். கே., 325
மெல்ட்சர், எச்., 150
மென்னிங்கர், டபிள்யூ. சி., 428
மே, எம். ஏ., 516
மேயன்ஸ், எப். ஜே., 272
மைக்கல்சன், என்., 41
மைமயர்ஸ், எம். எஸ்., 313
மையர்ஸ், சி. ஈ., 484, 499
மையர்ஸ், ஜி. ஈ., 685
மோஹர், ஜி. கே., 388
மௌவர், கே. எம்., 114

ய

யங், என்., 272
யங், ஜே., 315
யீகர், டபிள்யூ. எ., 586

ர

ராக்வெல், ஜே. ஜீ., 733
ராபர்ட்ஸ், கே. இ., 357
ராபின்சன், இ. இ., 307, 400
ராபின்சன், எம். இசட்., 307, 345, 353
ராம்சே, ஜி. வி., 5, 539, 540
ராட்கி, எம்., 241, 242
ரிச்சி. எச். ஜீ., 44, 77
ரிமர்ஸ், எச். எச்., 240, 245 271, 313, 346, 374, 604
ரிவ்லின், எச். என்., 420
ரின்ஹார்ட், 185
ரிஸ்மேன், எல்., 550
ரீடர், என்., 506
ரீவ்ஸ், எப். டபிள்யூ., 664
ரீவ்ஸ், ஆர். ஜே., 754, 755
ரீவ்ஸ், டபிள்யூ. ஆர்., 663
ரீஸ், ஏ. ஜே., 691
ரெய்னால்ட்ஸ், இ. எல்., 55, 56
ரென், சி. ஜீ., 634, 640
ரேட்கே-யாரோ, எம்., 241, 242
ரேட்ல், எப்., 454
ரேமர்ட், எம். எல்., 185
ரையன், சி. டபிள்யூ., 433
ரையன்ஸ், டி. ஜீ., 434
ரோத்னி, ஜே. டபிள்யூ., எம். 76, 131, 616, 618
ரோபர், இ., 671
ரோலண்டு, எம். சி., 430
ரோன்ஸ், பி. ஏ., 779
ரோசன், ஐ. சி., 281
ரோசன்ஹீன், எப்., 457
ரோஸ், எம். ஜீ., 286
ரோஸ், சி., 132

ல

லங்கர், ஆர்., 155
லதாம், ஏ. ஜே., 172
லம்ப்கின், கே. டி., 714
லாய்டன், கே. டபிள்யூ., 685
லாரன், டபிள்யூ., 157
லார்ஜ்ஜி, எல்., 124

லாண்டிஸ், பி. எச்., 109, 286, 469, 470, 471, 586, 627, 685
லிசென்பீ, எல். கே., 101, 102 103
லிண்டன், ஆர்., 363
லிண்ட், எச். ஆர்., 479
லிண்ட், எச்., 479
லிண்ட்கிரென், எச். சி., 454
லிண்ட்சே, டி. பி., 146
லிப்பிட், ஆர்., 581
லியொனுர்ட், ஜே. பி., 237
லிஃப்ஸ்ஷிட், ஏ. டி., 577
லிஸ்கோர்ட், எஸ்., 240
லீ. பி. ஜே., 513
லீவி, டி. எம்., 498
லீவி, ஜே., 153
லீவின், கே., 405, 581, 654
லீவிஸ், ஓ. ஒய்., 365
லீவிஸ், டபிள்யூ. டி., 230
லெக்ச்சி, சி., 591
லெக்லி, பி., 308
லெம்கன், பி. வி., 414
லெய்காக், எஸ். ஆர்., 382
லேட்டி, எம்., 69, 109, 143, 186
லௌடிட், சி. எம்., 439, 654
லேக்மேன், எச். ஸி., 214, 216, 218, 217

வ

(வ்)ரென், சி. ஜீ., 586
வாட்டன்பர்க், டபிள்யூ. டபிள்யூ., 30, 298, 326, 499, 547, 586, 627, 685
வார்ட்ஸ், ஜே., 409, 685
வார்னர், டபிள்யூ. எல்., 178
வான் டாலன், டி. பி., 214, 216
வான் டியுஸ்ஸன், எச். பி., 315
வான்டைக்கி, ஜீ. இ., 76
விட்மர், எச். எல்., 686
விட்டி, பி. ஏ., 197, 222, 214, 215, 218, 222, 556
வில்கர்ஸன், டி. ஏ., 216
வில்மர், எச். எல்., 364
வில்லியம்ஸ், ஆர். எம், 286
வில்லியம்ஸ், இ. ஒய்., 724
வில்லியம்ஸ், எல். எச்., 367
வில்லியம்ஸன், இ. ஜீ., 326, 685
வில்ஸ், கே., 602
விஸ்ஸன் பேக்கர், எம். ஏ., 512
வீஸ், எப். ஏ., 428
விடர், சி. டி., 729
விவர், பி., 286
வுட்ரப், ஏ. டி., 308
வுட்வொர்த், ஆர். எஸ்., 331
வுல்போர்ட், ஓ. பி., 754
வெட்சல், என். சி., 76
வெயில், ஜே. பி., 753
வெர்ணன், எம். டி., 127
வெல்ட்மேன், என்., 271
வெல்மேன், பி. எல்., 132
வெஷ்லர், டி., 141
வைட், ஆர். சி., 607
வைட், ஆர். கே., 581
வைட்டிங், ஜே. டபிள்யூ., 364
வைட்லான், ஜே. பி., 586

ஜ

ஜஸ்ட்மான், ஜே., 237
ஜான்சன், இ. எஸ்., 591
ஜான்ஸ்டன், ஜே. ஏ., 51, 53
ஜெமிஸ்ஸன், ஓ. ஜீ., 29, 68, 109, 185, 237, 498, 547 586, 627
ஜெர்ஷீல்ட், ஏ. டி., 108, 201, 211, 212
ஜென்கின்ஸ், ஆர். எல்., 691
ஜேகோப்ஸ், எல். எச்., 219
ஜேகப்சன், எல்., 41, 78
ஜேம்ஸ், எச். இ. ஓ., 162

ஜேம்ஸ், டபிள்யூ., 160
ஜேஜேவிட்ச், எம்., 285
ஜேன்க், எல். எல்., 134
ஜோக்ல், இ., 85
ஜோன்ஸ், எச். இ., 46, 61, 63, 68, 88, 93, 108, 118, 121, 133, 138, 140, 142, 146, 147, 191, 255, 342, 343
ஜோன்ஸ், எம்.,
ஜோன்ஸ், எம். சி., 247, 342, 247, 252
ஜோஸ்ஸிலேன், ஐ., 383

ஸ்

ஸ்கிமிடில், எப்., 692
ஸ்கிமிட்லர்ஸ், ஏ. ஏ., 325
ஸ்கின்னர், சி. இ., 454
ஸ்கோடாக், எம்., 116, 117
ஸ்கோப்பி, ஏ., 334, 384, 393
ஸ்கௌஸ்லர், கே. எப்., 705
ஸ்க்வாட்ஸ், சி. பி., 667
ஸ்டர்ஜிஸ், எச். டபிள்யூ., 607
ஸ்டிப்ரீ, பி., 643
ஸ்டிரவ்டு, ஜே. பி., 122
ஸ்டீகில், எல். சி., 412, 454
ஸ்டீவன்ஸ், எஸ். எஸ்., 388
ஸ்டெர்னர், ஏ. பி., 197, 237
ஸ்டேன்டிட், ரி. எம்., 753
ஸ்டொடார்டு, ஜி. டி., 112
ஸ்டோட், டி. ஏ., 303, 326
ஸ்டோட்டி, எல். எச்., 474, 482
ஸ்டோல்ஸ், எல். எம்., 68, 109, 250
ஸ்டோல்ஸ், எல். எம்., 68, 109, 252
ஸ்டோன்ஸ், எச். ஆர்., 469, 470, 471
ஸ்டோன், சி. பி., 120, 249
ஸ்ட்ரேங், ஆர்., 639
ஸ்ட்ராஹுட், 122
ஸ்பியர்ஸ், எச்., 627
ஸ்பிரேன்ஜர், ஈ., 307
ஸ்பெரி, டபிள்யூ. எல்., 286, 326,
ஸ்பேபோர்டு, க்யூ., 665
ஸ்லே, ஜே. ஆர்., 429
ஸ்லேட்டரி, ஆர். ஜே., 301
ஸ்வேன்ஸன், ஜி. இ., 243, 295

ஷ

ஷட்டில்வொர்த், எப். கே., 4, 62, 68, 79
ஷபோல்ஸ்கி, எப். சி., 725
ஷலிக்ஸ், ஆர்., 155
ஷாக், என். டபிள்யூ., 43, 47, 48, 133, 165
ஷாக், என். எம்., 68
ஷாப்பர், எல். எப்., 130
ஷாப்பிரோ, எச். எல்., 732
ஷான்டர், ஜே., 197
ஷிம்பர்க், பி., 280, 604
ஷிரிலி, எம். எம்., 686
ஷெசல்டன், டபிள்யூ. எச்., 337, 338
ஷெர்மன், எம்., 446
ஷேக்ரி, சி. பி., 69, 109, 143, 333, 186, 326

ஹ

ஹாப்பிரிச், எப். எல்., 84
ஹர்டு, ஏ. டபிள்யூ., 428
ஹர்லாக், இ. பி., 29, 68, 108, 185, 237, 286, 325, 546
ஹன்ட், எச். சி., 568
ஹஸ்செல், இ. சி., 208
ஹஸ்டன், பி. டபிள்யூ., 663
ஹாக்கெட், சி. சி., 473, 474
ஹார்ட்டன், ஆர். இ., 240
ஹார்ட்லி, இ. எல்., 586
ஹார்ட்லி, டி. எல்., 586
ஹாஸிங்ஸ்வொர்த், எல். எஸ்., 29

ஹாலிங்ஸ் ஹெட், ஏ. பி., 237, 509, 510, 525, 546, 586, 596, 627, 651, 685
ஹால், ஜி. எஸ்., 7, 28, 14, 26, 29, 35, 168, 347
ஹான்சிக், எம். பி., 115
ஹிக்ஸ், ஜே. ஏ., 149
ஹிட்ச்காக், டபிள்யூ. எல்., 632
ஹியூ பெரிக், எப். எல்., 84
ஹியூஜ், ஜே. எம்., 663
ஹரியானிமஸ், ஏ. எச்., 597
ஹிர்ஸ், என். டி. எம்., 717
ஹிர்ஸ் பேர்க், ஆர்., 696
ஹில், டி. எஸ்., 322
ஹிவெட், எல். இ., 418, 691
ஹீலி, டபிள்யூ., 707
ஹீன்ஸ், 388
ஹீன்ஸ், சி. இ.,
ஹீல், டி. எஸ்., 322
ஹென்ரி, சி. இ., 579
ஹேம்ரின், எஸ். ஏ., 685
ஹேய்ஸ், எம்., 149
ஹேவிகர்ஸ்ட், ஆர். ஜே., 20, 28, 134, 272, 285, 292, 307, 345, 353, 553
ஹேன்லி, ஜி., 72, 73
ஹைடு, ஆர். டபிள்யூ., 158
ஹொராக்ஸ், ஜே. இ., 29, 140, 237, 285, 325, 498, 506, 507, 546, 685
ஹோப்பாக், ஆர்., 685.

பொருள் பட்டியல்

அ

அக்கறைகள்—
- அதிகாரம், (6), 187-237
- அக்கறை கண்டுபிடிப்புகள், 678
- அக்கறைகளும் திறனும், 202-207
- அக்கறைகள் நிலைத்து இருத்தல், 230-232
- அக்கறைகளும் நுண்ணறிவும், 228-230
- அக்கறைகளின் பொருள், 187-189
- அக்கறைகளின் வளர்ச்சி, 189-193
- அக்கறைகள் விரிவடைதல், 207-209, 224-225
- சொந்தத் தோற்றத்தில் அக்கறைகள், 165-170, 192-193
- திரைப்படங்களில் அக்கறைகள், 218-220
- தொலைக்காட்சியில் அக்கறைகள், 221-224
- பள்ளிப்பாடங்களில் அக்கறைகள், 199-201
- பள்ளிக்கு வெளியே உள்ளவற்றில் அக்கறைகள், 211-213
- மாற்றுப்பால் அக்கறைகள், 518-522
- வாசிப்பதில் அக்கறைகள், 193-199
- வானொலியில் அக்கறைகள், 221-224
- விளையாட்டில் அக்கறைகள், 213-218

அச்சங்கள், 149-150
அடிப்படை உயிர்ப்பொருள் மாறுபாடு, 47
அடைவு, 390
அதிகமான கட்டுப்பாடுடைய போக்குகள், 420-421
அபோகிரின் வியர்வைச் சுரப்பிகள், 54
அவாக்கள், 344
அறிவு வளர்ச்சி - அதிகாரம், (4), 110-142
அறிவு வளர்ச்சியும் மனப்பான்மைகளும், 279
அறிவு முதிர்ச்சி, 737-740
அறிவுரையாளர், 673, 674

ஆ

ஆசிரியரும் மனநலவியலும், 434-438
ஆரோக்கியம், 424 425, 446-447
ஆரோக்கியப் பிரச்சினைகள், 424-426
ஆரோக்கியப் பொருத்தப்பாடுகள், 373-374
ஆளுமை, 339-355, 680-681
ஆளுமைக் குண இயல்புகள், 330, 339-344
ஆளுமை வகைகள், 336-339
ஆளுமை வகை, 355
ஆளுமையினை வரையறுத்தல் 327-330
ஆன்ட்ரோஜின்ஸ், 38

இ

இடைவினை, 33
இணைக்குழு, 17
இயக்க வளர்ச்சி, 81-93

இயக்க வினைமுறைகள்—
  இயக்க வினைமுறைகளும் வயதும், 84
  இயக்க வினைமுறைகளும் பால் மாறுபாடுகளும், 84-88
  இருதயம், 43, 46
இல்லம்—
  அதிகாரம், (12), 455-499
  இல்ல உறவுகள், 24
  இல்லமும் குற்ற நடத்தையும், 710
  இல்லமும் சிக்கல்களும், 472-481
  இல்லமும் மனப்பான்மைகளும், 271
இளமையில் குற்றம்—
  இளமையில் குற்ற நடத்தை, அதிகாரம், 17, 686-729
  இளமையில் குற்ற நடத்தையும் இல்லமும், 710
  இளமையில் குற்ற நடத்தை கொள்ளும் வகைகள், 691-696
  இளமையில் குற்ற நடத்தையும் சமயமும், 296, 298, 299
  இளமையில் குற்ற நடத்தையும் சுற்றுப்புறமும், 721, 722
  இளமையில் குற்ற நடத்தையும் தவருன பொருத்தப்பாடும், 705-710
  இளமையில் குற்ற நடத்தையும் பள்ளியும், 722-726
இளையோர் பருவம்—
  வரையறை, 1
  இளையோர் பருவ ஆரோக்கியப் பிரச்சினைகள், 424
  இளையோர் பருவத்தினைப்பற்றிய ஆய்வில் பயன்படுத்தும் முறைகள், 13-20
  இளையோர் பருவ ஆளுமை, 339
  இளையோர் பருவத்தில் உடல் வளர்ச்சி, 69-108
  இளையோர் பருவத்தில் உடலியல் வளர்ச்சி, 31-67
  இளையோர் பருவத்தில் ஊட்டத்தேவைகள், 51
  இளையோர் பருவத்தில் ஓய்வு நேரச் செயல்கள், 554-562
  இளையோர் பருவத்தில் சமூக வளர்ச்சி, 161-182
  இளையோர் நட்புகள், 506-518, 562
  இளையோர், மனமுறிவுகள், 382-407
  இளையோரின் ஆளுமை, 339-353
  இளையோரின் தன்னல உட்குழுக்கள், 509
  இளையோரின் தேவைகள், 357-360
  இளையோரின் நட்புகள், 506, 509
  இளையோரின் நாட்குறிப்புகள், 14-15
  இளையோரின் நிலையாமை, 350
  இளையோரின் பிரச்சினைகள், 20-26, 63, 101-104, 136-365, 382
  இளையோரின் வயது, 1-30
இளைஞர்கள்—
  இளைஞர்களும் அரசியலும், 765, 766
  இளைஞர்களும் குடும்பமும், 757-759

இளைஞர்களும், குடிமையும் 759-770
இளைஞர்களும் கோயிலும், 275-279
இளைஞர்களும் சமூகப் பொருளாதார நோக்கும், 761-765
இளைஞர்களும் சுதந்திரமும், 767-769
இளைஞர்களும் திருமணமும், 750-759
இளைஞர்களும் தொழில் நாட்டங்களும், 640-654
இளைஞர்களும் தொழில் தேவைகளும், 655
இளைஞர்கள் பங்கு பெறுதல், 570
இளைஞர்களுக்குப் பணிபுரியும் நிறுவனங்கள், 567-570
இன விருத்தி உறுப்புகள், 38-61

ஈ

ஈடுசெய்தல், 393-402

உ

உட்காட்சி, 128
உடல் வளர்ச்சி—
அதிகாரம், (3), 69-109
உடல் ஆரோக்கியம், 422
உடல் வளர்ச்சியும் என்டோகிரீன் ஏதுக்களும், 36-39
உடற் கல்வி, 34
தனியனின் உடற்கூறு, 21
உடலியல்—
உடலியல் அளவீடுகள், 35-48
உடலியல் மாறுதல்கள், 35
உடலியல் மாறிகள், 46
உடலியல் வயது, 72
உடலியல் வேறுபாடுகள், 34
உடலியல் முதிர்ச்சி, 34
உடலியல் வளர்ச்சி அதிகாரம், (2), 31-68
உடலியல் வளர்ச்சியும் வலிவும், 61-63
உடலில் ஏற்படும் மாறுதல்கள்,
உடலமைப்பு வகைகள், 76
உடல் தோற்றம், 132
உடற் பயிற்சி, 47
உடற் பயிற்சியும் வளர்ச்சியும், 94, 95
உடன் விளையாடுவோர்கள் (விளையாட்டுத் தோழர்கள்), 302, 562-564
உயர்நிலைப் பள்ளி—
உயர்நிலைப் பள்ளியும் கல்லூரியும், 609
உயர்நிலைப் பள்ளியில் சேருதல், 27, 589
உயர்நிலைப் பள்ளிப் பிரச்சினைகள், 590
உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், 348
உயர்நிலைப் பள்ளி வயது, 27
உயர்நிலைப் பள்ளியும் வாழ்க்கைச் செயல்களும், 610
உயரம், 2, 3, 45
உயரமும் பூப்படைதலும், 76-81
உயரம்-பருமன் பட்டியல்கள், 74, 75
உயிர்ப்பொருள் மாறுபாடு விகிதம், 36, 49
உலகக் குடிமை, 769

ஊ

ஊட்டத் தேவைகள், 51
ஊர்சுற்றுதல், 415-416,

எ

எக்ஸ்ரே படங்கள், 61

எலும்புகள், 51-60
எலும்பு வயது, 61, 81
எலும்பு வளர்ச்சியும் பால் வளர்ச்சியும், 60, 81
என்டோகிரின்கள், 36, 60

ஏ

ஏற்றுக் கொள்ளுதல், 513
சமூகம் ஏற்றுக் கொள்ளுதல், 393

ஒ

ஒதுக்குதல், 420, 448
ஒப்பார்கள், 416
ஒப்பார் தொடர்புகள், 500
ஒப்பார் பண்பாடு, 501
ஒப்பார்களும் பொருத்தப்பாடும், 503
ஒருபால் உணர்வு, 539
ஒழுக்கக் கருதுகோள்கள், 295
ஒழுக்க நடத்தை, 290
ஒழுக்கப் பண்புகள், 314
ஒழுக்கமானவைகள், 319
ஒழுக்க வளர்ச்சி, 295
தனியனின் ஒழுக்கக் கூறு, 295-305

க

கருத்து நிலை, 240
கருத்து நிலைத் தனியன், 344
கருப்பை, 35-39
கல்லூரி, 609
கல்வியும், உலகக் குடிமையும், (c), 18
கல்வித் தேர்ந்தெடுத்தல்கள், 601
கல்வியும் பள்ளியில் சேருதலும், 27, 589
கல்விப் பொருத்தப்பாடு, 369, 445
கல்வியும் பொறியியலும், 599
கல்வி வழிகாட்டுதல், 612, 628, 634-664
கவலைகள், 352
கற்பனை, 126

கா

காதல் செயல்கள், 750, 751
காரணங் கற்பித்தல், 403

கீ

கீழ் வகுப்பு, 288, 346, 386, 559, 561

கு

குடிமை, 759-770
உலகக் குடிமை, 769
குடிமக்கள், 27
குடும்பமும் இளைஞர்களும், 773
குடும்ப உறவுகள், 444
குடும்ப வகை, 469
குரல் மாறுதல்கள், 64, 93, 94, 152
குருதியழுத்தம், 16, 36, 43, 47
குற்ற நடத்தை அதிகாரம், (17), 686-729
(குற்ற நடத்தையுள்ளவன்)
குற்றவாளி நடத்தை, 696-697
குற்றவாளி வகை, 691-696

கை

கைமுட்டிப் பழக்கம், 538, 539

கோ

கோயில், 275, 296
கோயிலுக்குச் செல்லுதல், 298
கோயிலின் செல்வாக்கு, 396, 398

ச

சங்கங்கள்; 567 577,
சண்டையிடுதல், 151
சமயம்—
சமய மனப்பான்மைகள், 250
சமயக் கல்வி, 314

சமயத் தேவைகள், 312-314
சமய நம்பிக்கைகள், 259-269, 277
சமயப் பிரச்சினைகள், 26, 397
சமுதாயம், 241, 257, 258, 439
சமுதாய அமைப்பு, 549-550
சமுதாயத் திட்டங்கள், 567-580
சமுதாயத்தின் பங்கு, 550-554
சமூகம்—
சமூக அக்கறைகள், 34
சமூக அனுமதி, 516
சமூக உணர்வு, 170, 449, 517
சமூக உரிமைக் கோரிக்கைகள், 11
சமூகம் ஏற்றுக் கொள்ளுதல், 398
சமூகத்துடன் ஒன்றியிருத்தல், 172
சமூகத் தொடர்புகள், 35
சமூகப் பண்பாடு, 21
சமூகப் பொருத்தப்பாடு, 6
சமூகப் பொருத்தப்பாடும் இல்லமும், 384-388
சமூகப் பொருத்தப்பாடும் குற்ற நடத்தையும், 21
சமூக முதிர்ச்சி, 735
சமூக வகுப்பு, 134
சமூக வகுப்பு அந்தஸ்து, 243
சமூக வகுப்பும் பொருத்தப் பாடும், 177, 178, 179
சமூக வகுப்பும் ஓய்வு நேரச் செயல்களும், 558, 561
சமூக வளர்ச்சி, 157, 161-180
சமூகமயமாதல்—
சமூக மயமாதலில் தோல்வி, 180
சமூக மயமாதலில் பிரச்சினைகள், 174-177
சமூகமயமாதலும் வகுப்பு அமைப்பும், 272
சமூக-பால் வளர்ச்சி, 161, 162
சராசரிகள், 16

சா

சார்பெண்ணங்கள், 241-245

சி

சிக்கல்கள், 21, 476-481

சு

சுதந்திரம், 24, 25, 287, 383, 456, 487-489
சுயநலம், 349
சுரப்பிகள் சுரப்பன, 36
சுற்றுப்புறம், 302
சுற்றுப்புறமும் குற்ற நடத்தையும், 721, 722

சூ

சூழ்நிலை, 33, 85, 302, 345, 393, 548

செ

செபாஷஸ் சுரப்பிகள், 54, 55
செய்தி, 252

சொ

சொந்தத் தோற்றம், 165-171, 192, 193
சொந்தத் தகுதி உணர்வு, 444

சோ

சோதனைகள்—
நாட்டச் சோதனைகள், 676,
திறனாய்வுச் சிந்தனைச் சோதனைகள், 126, 127
நுண்ணறிவுச் சோதனைகள், 117, 676

த

தசைகள், 53
தலைமை, 172, 173, 771
வல்லாட்சித் தலைமை, 580-582
ஜனநாயகத் தலைமை, 580-582

தவறான பொருத்தப்பாடு, 294
சமூகத்தில் தவறான பொருத்தப்பாடு, 19
தழுவுதல், 534-537
தன்னல உட்குழுக்கள், 509
தனித்து இருப்பவைகள், 512

தா

தான்
தன் உணர்வு, 518
தன்னைக் கட்டுப்படுத்துதல், 772
தன் நிலையை உறுதிசெய்தல், 530
தான் எனும் முனைப்புக் கொண்டிருத்தல்

தி

திரள் அறிக்கை, 638
திருமணம், 750-759
திருமணத்திற்கு தயார் செய்து கொள்ளல், 607
திருமணமும் வேலையும், 23
திரைப் படங்கள்—
திரைப் படங்களில் அக்கறை, 218, 219
திரைப் படங்களும் மனப் பான்மைகளும், 281, 557
திறன்களும் அக்கறைகளும், 201

தே

தேவைகள், 357-360
அடைவுத் தேவைகள், 390
சமயத் தேவைகள், 206
சொந்தத் தகுதித் தேவைகள், 444
தற்காப்புத் தேவைகள், 442
தன்னை உயர்ந்தவனுக்கிக் கொள்ளவேண்டிய தேவைகள், 389, 390
வாழ் தொடர்புகொள்ளத் தேவை, 443

தொ

தொலைக்காட்சியைப் பார்த்தல்—
தொலைக்காட்சியும் மனப் பான்மைகளும், 281
தொலைக்காட்சியும் அக்கறைகளும், 221
தொழில் அவாக்கள், 641-654
தொழில் தேவைகள், 655-661
தொழில் பயிற்சி, 661-665
தொழில் பொருத்தப்பாடு, 681
தொழில் வாய்ப்புகள், 654-655, 664, 665
தொழில் வழிகாட்டுதல், 652, 668-682
தொழில் வெற்றி, 668

தோ

தோல் சுரப்பிகள், 54-57
தோல் தொந்தரைகள், 54
தோலுக்குக்கீழுள்ள கொழுப்பு, 55, 56, 73

ந

நட்புகள், 506-513, 563
நடத்தை, 142
ஒழுக்க நடத்தை, 132-136, 290-293
நடத்தைச் சிக்கல்கள், 290-293
பெற்றோர் நடத்தை, 549
நடுத்தர வகுப்பு, 25, 289, 346, 386, 514, 561
நம்பிக்கைகள், 259

நா

நாட்டச் சோதனைகள், 681
நாடிகள், 43
நாடித் துடிப்பு விகிதம், 18, 36, 43, 48

நாளிடல்கள், 500, 544
நாளிடல்களின் துவக்கம், 521
நாளிடல்களின் பிரச்சினைகள், 528
நாளிடல்களின் வகைகள், 524

நி

நிலையாமை, 350
நிறுவனங்கள், 288

நு

நுண்ணறிவு—
நுண்ணறிவும் அக்கறைகளும், 228, 229, 230
நுண்ணறிவு ஈவு, 111, 114-119, 136
நுண்ணறிவும் குற்றமும், 698-705
நுண்ணறிவுச் சோதனைகள், 115, 676, 677
நுண்ணறிவும் பள்ளி அடைவும், 135-138
நுண்ணறிவின் வரையறை, 110
நுண்ணறிவும் விளையாட்டும், 216

நெ

நெடுக்கு வகை ஆய்வுகள், 16

ப

பகற் கனவு காண்டல், 405
பண்பாடு—
பண்பாட்டு எதிர்பார்ப்புகள், 177
பண்பாடும் சமூக மயமாதலும், 243
பண்பாட்டுத் தேவைகள், 383
பண்பாட்டு வகைகள், 22, 368
பண்பாடும் வகுப்பும், 294
பதின்வயதினர்கள், 253, 503
பயன் மதிப்புகள், 26, 27, 288, 305, 307, 811, 320
பரிசோதனை முறை, 17
பருமன், 3, 45, 53, 69-75, 98-104
பல் வயது, 81
பல் வெளிப்படுதல், 81
பழக்கம், 145, 159, 293, 422, 444, 538
பள்ளி அதிகாரம், (15), 587-627
பள்ளி அக்கறைகள், 199-211
பள்ளி அடைவும் நுண்ணறிவும், 135, 136
பள்ளியும் குற்ற நடத்தையும், 722-726
பள்ளியும் சொந்தப் பொருத்தப்பாடும், 298, 299
பள்ளியில் சேர்தல், 27, 588
பள்ளியில் திருப்தியின்மை, 391
பள்ளியின் பங்கு, 310
பள்ளிப் பிரச்சினைகள், 611-617
பள்ளிப் பொருத்தப்பாடுகள், 390
பள்ளியும் மனநலவியலும், 432
பள்ளியினை வெறுத்தல், 259
பள்ளியை விட்டு இடையிலேயே நின்றுவிடுபவர்கள், 589-593, 629
பற்றுர்வம், 244

பா

பாசம், 24
பால் உந்து, 11, 399, 415, 529, 538
பால் சுரப்பிகள், 3, 531
பால் செய்தி, 253, 448
பால் பங்கு, 23, 65, 384, 448
பால் முதிர்ச்சி, 22, 60, 61
பால் தொடர்பில் முரணுன செயல்கள், 538
பால் வகை, 290, 535, 536
பால் வளர்ச்சியும் எலும்பு வளர்ச்சியும், 60, 61

பால் வளர்ச்சியும் வலிவும், 61
பால் வேறுபாடுகள், 2, 34, 38-46, 51, 54, 84-93, 193-201, 216, 217, 259, 310, 353, 365, 366

பி

பிட்யூட்டரி சுரப்பி நீர், 36
பிரச்சினைகள், 6, 20-26, 347, 365-382
உடல் வளர்ச்சிப் பிரச்சினைகள், 63, 101-104
நாளிடல் பிரச்சினைகள், 526, 527
பள்ளி வாழ்க்கைப் பிரச்சினை கள், 363, 611, 618
மன வளர்ச்சிப் பிரச்சினைகள், 114, 115
பிரச்சினைகளைக் கோடிட்டுச் சரிபார்க்கும் பட்டியல்கள், 368
பின்வாங்குதல், 19, 404

பு

புகழுடைதல், 504, 505
புறத்தேற்றம், 404

பூ

பூப்படைதல், 3, 4, 5, 23, 46
பூப்படைதலும் எலும்புவயதும், 82
பூப்படைதலும் மனப்பான்மை களும், 165
பூப்படைதலும் வலிமையும், 61
பூப்புச் சடங்குகள், 7-9, 27
பூப்பு மயிர், 59
பூப்புப் போக்கும் வளர்ச்சியும், 77
சிறுவர்களின் பூப்புப்போக்கு, 5, 6, 42
சிறுமியர்களின் பூப்புப்போக்கு, 5, 6, 39-42
பூப்படைவதற்கு, முன்னுள்ள பருவத்தில் ஏற்படும் மனப் பான்மைகள், 249, 250

பெ

பெண்தன்மை, 65
பெருந்திணைகள், 538
பெற்றோர்கள், 24
பெற்றோர் நடத்தை 459-468,
பெற்றோர் மனப்பான்மைகள், 472, 712

பொ

பொருத்தப்பாடு—414
பொருத்தப்பாடும் அக்கறை களும், 233
பொருத்தப்பாட்டுச்சிக்கல்கள், 6
பொருத்தப்பாடும் திறன்களும், 393
ஆரோக்கியப் பொருத்தப்பாடு, 373
இல்லப் பொருத்தப்பாடு, 371, 481
கல்விப் பொருத்தப்பாடு, 369, 370, 445
பள்ளிப் பொருத்தப்பாடு, 390
பொருளாதாரச் சுதந்திரம், 25
பொழுதுபோக்கு, 541
பொழுதுபோக்கும் குற்ற நடத்தையும், 303
பொழுதுபோக்குத் திட்டங்கள், 572-577
பொழுதுபோக்குத் தேவைகள், 605-607
பொறியியல், 599, 730-733

ம

மயிர்வரி, 57, 58
மயிர் வளர்ச்சி, 57-60
மரபுநிலை, 33

மருத்துவமனை முறை, 19
மனநலவியல்—
மன நலவியலும் ஆசிரியரும், 434-439
மன நலவியலும் குழந்தைப் பருவமும், 430
மன நலவியலும் பள்ளியும், 432
மனப்பான்மைகள்—238-271
மனப்பான்மைகளை அளவிடுதல், 238-263
மனப்பான்மைகளின் பொருள்கள், 238
மனப்பான்மைகள் மாறுதல்கள், 245
மனப்பான்மைகள் வளர்ச்சி, 238-243
சிறுமியர்களைப்பற்றிய மனப்பான்மைகள், 245-247
தொழில்பற்றிய மனப்பான்மைகள், 743
நிறுவனங்களைப்பற்றிய மனப்பான்மைகள், 288
பால்பற்றிய மனப்பான்மைகள், 249-254
பால் மனப்பான்மைகள், 537
மனமுறிவு, 21, 415, 418
மனமுறிவுக்கு அளிக்கும் எதிர்வினைகள், 400-407
மனமுறிவுக்கான காரணங்கள், 382-399
மனமுறிவு—தாக்கும் மனப்பான்மைக் கருதுகோள், 150
மன வளர்ச்சி, 113-115
மன வளர்ச்சியும் உடல் தோற்றமும், 132
மன வளர்ச்சியும் உடன் தொடர்புகளும், 131, 132
மனவளர்ச்சியின் மாருத்தன்மை, 114-118
மனவளர்ச்சிப் பிரச்சினைகள், 136
மனவெழுச்சிகள் அதிகாரம், (5,) 142-186
மனவெழுச்சிகளும் ஆளுமையும், 342, 343
மனவெழுச்சிக் கட்டுப்பாடு, 160, 161
மனவெழுச்சிச் சுதந்திரங்கள், 24
மனவெழுச்சிகளும் நடத்தையும், 142
மனவெழுச்சித் துலங்கல்கள் 146, 148
மனவெழுச்சி மாறுதல்கள், 150-153
மனவெழுச்சி முதிர்ச்சியடையாமை, 707
மனவெழுச்சி வளர்ச்சி, 142-161

மா

மாற்றுப்பால் உணர்வு, 380, 518-529

மு

முகப்பரு, 65
முகமயிர், 58
முகாம், 577-580
முடிவுள்ள மயிர், 58
முதிர்ச்சி அடைதல்—
அறிவு முதிர்ச்சி, 737
சமூக முதிர்ச்சி, 735
முதிர்ச்சியை நோக்கி வளர்ச்சி அடைதல், 485-494
முலைகளின் வளர்ச்சி, 3
முன்னிளையோர்கள் பருவம், 448
மெரோகிரீன் சுரப்பிகள், 54
மேல்வகுப்பு, 563

வ

வகுப்பு அமைப்பு, 272

வகுப்புப் பண்பாடு, 388
வயது—
வயதும் இயக்க வினைமுறைகளும், 84-88
பூப்புப்போக்கு ஏற்படும் வயது, 39, 40, 41
வயதும் பூப்படைதலும், 39-42
வயதும் மனவளர்ச்சியும், 113-122
வல்லாட்சித் தலைமை, 466, 467, 580-583, 771-772
வலிவும் உடலியல் முதிர்ச்சியும், 61
வலிவும் விளையாட்டில் பங்கு பெறுதலும், 215
வலிவும் மற்றப் பண்புக் கூறுகளும், 88
வலுத்தாக்குதல் நடத்தை, 150, 418
வளர்ச்சி—
வளர்ச்சி (உளவியல் அடிப்படையில்) அதிகாரம், 2, 31-68
இடையின் வளர்ச்சி, 73
உடற்பயிற்சியும் வளர்ச்சியும், 84-89
சமமில்லா வளர்ச்சி, 96
சமய வளர்ச்சி, 262
சமூக - பால் வளர்ச்சி, 161
சொல் வளர்ச்சி, 124
தனியனின் வளர்ச்சி, 48
தற்கட்டுப்பாட்டின் வளர்ச்சி, 772
தோள்களின் வளர்ச்சி, 72, 73
நினைவுத்திறன் வளர்ச்சி, 122
மாறுந்தன்மையுள்ள வளர்ச்சி, 76
முண்டப்பகுதியில் வளர்ச்சி, 72
முதிர்ச்சியை நோக்கி வளர்ச்சி, 733-774
வளர்ச்சி வகைகள், 55
வளர்ச்சி வளைவுகள், 38, 48,
வளர்ச்சிபற்றிய கருதுகோள்கள், 125, 126
வளர்ச்சியை விளக்கிப் பொருள் கூறல், 128
வளர்ச்சிக்குரிய பணிகள், 20-26

வா

வாழ்க்கை மெய்யுணர்வு, 26, 382, 398, 399, 449, 450, 770-774
வானொலி—
வானொலியும் அக்கறைகளும், 221
வானொலியும் மனப்பான்மைகளும், 281

வி

விதைகள், 36
விளையாட்டு, 213-218

வே

வேலை, 24, 740-749
வேலை அனுபவம், 665-668

ஜ

ஜனநாயகம், (மக்களாட்சி), 769-772
ஜனநாயகச் சமூகம், 759-769
ஜனநாயகத் தலைமை, 466, 467, 580-583, 771

ஜீ

ஜீரண அமைப்பு, 49

தமிழ் வெளியீட்டுக் கழகப் புதிய வெளியீடுகள், 1965

தமிழாக்கம்பெற்ற நூல்கள்

STATISTICS

1. புள்ளியியல் முறைகள் - I ... F. C. மில்ஸ்

ECONOMICS

2. பொருளாதாரம் - ஓர் அறிமுகம் - II ... கேர்ன் கிராஸ்
3. அமெரிக்கப் பொருளாதார வரலாறு - I ... H. U. ஃபால்க்னர்
4. அரசாங்க நிதியியலின் பொருளாதாரம் - I ... P. E. டெய்லர்
5-6. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி - I & II ... வீரா ஆன்ஸ்டே
7. நமது பொருளாதாரப் பிரச்சினை - II ... P. A. வாடியா & K. T. மர்ச்சென்ட்
8. பணம் - சிறு விளக்கம் ... ஜியோஃப்ரி கிரௌதர்
9. 19ஆம் நூற்றாண்டில் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சிகள் ... L. C. A நோல்ஸ்

POLITICS

10. தற்கால அரசியலமைப்புகள் ... C. F. ஸ்டிராங்
11. பன்னுட்டரசியல் - I ... F. L. ஷூமன்
12-13. பொதுத்துறை ஆட்சியியல்-I & II ... F. மார்க்ஸ்

HISTORY

14-15. இங்கிலாந்து வரலாறு – I & II ... கீத் ஃபீலிங்
16. இங்கிலாந்தின் வரலாறு - I ... G. M. டிரெவெலியன்
17. இந்தியாவின் சிறப்பு வரலாறு - I ... R. C. மஜூம்தாரும் பிறரும்

ETHICS

18. அறவியல் - ஓர் அறிமுகம் ... வில்லியம் லில்லி

LOGIC

19. அளவையியல் தொடக்க நூல் ... A. J. பாம்

PSYCHOLOGY

20. இளையோர் உளவியல் -II ... கார்ல் C. காரிசன்
21. பிறழ்நிலை உளவியல் ... ஜேம்ஸ் D. பேஜ்
22. பித்தரின் உள்ளம் ... ஹார்ட்

GEOGRAPHY

23. காலநிலை இயல் - I ... W. G. கெண்ட்ரூ
24. வளியியலுக்கு ஓர் அறிமுகம் ... S. பீட்டர்ஸன்

PHYSICS

25. ஒளி நூல் ... G. R. நோக்ஸ்

பொது நூல்கள்

1. மகாத்மா காந்தி ... லூயி ஃபிஷர்
2. இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை ... இந்திய அரசாங்க வெளியீடு
3. விவசாயப் புரட்சி ... மர்ரே D. லின்கன்
4. சேமக் கை - நூல் ... தமிழ் நாடு மின்சார போர்டு
5. நீரிழிவு - க்ஷயரோகம் ... G. வேங்கடசாமி & A. கதிரேசன்